JL
Y592m211, v14
N14.5
162057

ஃ

சுபமஸ்து.

ஸ்ரீமத் விராட் விஸ்வகர்மணே நமஃ

12 JUN 1919

# விஸ்வகர்மன்-தொழில்.

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள
சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.
301, தங்கசாலைவீதி, சென்னை.

புடம்-5 ] பிங்களவஸ்ரீ தைமீ 1918வஸ்ரீ ஜனவரிமீ [சஞ்சிகை-1.

## ஒளிவிளர் விளக்கு.

...த்துக்குடியில் விஸ்வகர்ம சன்மார்க்க யென்பதொன்று, நமது குலச்சிறு ...நுடைய கல்வி கைத்தொழிலாதியவற் ...ற விருத்திசெய்வதே நோக்கமாகக்கொண்டு இம்மாதம் ஸ்தாபிக்கப்பட்டதா யறிகிறோம். இச்சபையார் வேண்டிய பொருளைத் திரட்டி வித்தியார்த்திகளுக்கு உபகாரச்சம்பளங்கள் கொடுத்து கல்வி யபிவிருத்தி செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

*
* *

சென்ற 10 மாதங்களாக நடைபெற்று வரும் திருநெல்வேலி விஸ்வகர்ம சன்மார்க்கசபையின் முதலாண்டு நிறைவு விழா விமரிசையாய் நடத்தப்படுதற்கான பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வருகின்றனவென்பதறிந்து மகிழ்கின்றோம். இச்சபையில் பக்ஷமொருமுறை பிரசங்கங்கள் நடைபெறுவதா யறியப்படுகிறது.

*
* *

"விஸ்வகர்ம குலோபகாரி', என்றும் "தொழில்" என்றும் பெயர்கொண்டு நடந்துவந்த மாதப்பத்திரிகை இச்சஞ்சிகை முதல் நம்முட்கலந்து வெளிவரும். அப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கும் இப்பத்திரிகையே இனி அனுப்பப்படும். அவர்கள் சந்தாதொகையை நமது விலாசத்திற்கே அனுப்ப வேண்டுகிறோம்.

நமது பத்திரிகையின் சந்தா இம்மாதமுதல் வருஷமொன்றுக்கு ரூபாமூன்று வீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இனி, இவ்விகிதப்படியே நமது சந்தாதாரர்கள் செலுத்த வேண்டியவர்க ளாகின்றனரென்பதை நன்கு குறித்துக்கொள்ள விரும்புகிறோம். காகிதம் ஒன்றுக்கு ஆறுமடங்காய் விலையேறியதினாலும் முன்னிலு மதிகமான பக்கங்களுடன் நமது பத்திரிகையை வெளியேற்ற உத்தேசித்திருக்கின்றோ மாதலினாலும், அவஸ்யங்கருதி இவ்வாறு நமது பத்திரிகையின்சந்தாவை உயர்த்தலாயிற்று.

விஸ்வகர்ம மகாஜனங்கள் புது சந்தாதாரர்களை விசேஷமாய்ச் சேர்த்தும், விஷயதானஞ் செய்தும், நமது பத்திரிகையின் நோக்கங்களுக்கிசைய சுஜாதியர் நடக்கத் தூண்டியும் உதவிபுரிய வேண்டுகிறோம்.

*
* *

இரும்பு, மரம், லோகம், கல், பொன் முதலிய ஐந்து வேலைகள் செய்யச் சென்னையில் கைத்தொழிற்சாலையொன்று ஸ்தாபிக்கும் நோக்கத்துடன், ஸ்ரீ கொ. கன்னியப்ப ஆச்சாரியார் சென்ற வருஷம் மார்ச் மாதத்தில் ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருந்தார். ஷை கைத்தொழிற் சாலைக்கு மூலதனத்தை ரூ. 10 கொண்ட பங்குகளாகச் சேர்ப்பதே உத்தேசமாக அவ்விளம்பரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கேற்ப, நாளது வரையிலும் 121 பங்குகளுக்குக் கையொப்பங்கள் கிடைத்திருக்கின்றன. அக்கையொப்ப ஜாபிதாவைப் பெயர்த்துக் கீழே அச்சிட்டிருக்கிறோம்.

மேற்குறித்த ஐந்துதொழில்களையும் செய்வதற்கோ அன்றி அவற்றுள்முக்கியமானவும் அவசரமானவுமான சிலவற்றை யாரம்பிப்பதற்கோ விஸ்வகர்மக் கைத்தொழிற்சாலையொன்று சென்னையில் சீக்கிரம் ஸ்தாபிக்கப்படவேண்டியது அத்தியாவஸ்யமாயிருக்கிறது. இவ்விதசாலையொன்றை சில நூற்றுண்டுகளுக்குமுன்னமேயே நாம் ஸ்தாபித்திருக்கவேண்டும். அங்ஙனஞ் செய்திருக்கும் பக்ஷத்தில் அதற்குக் கிளைகள் பல விடங்களில் தோன்றி விஸ்வகர்ம ஜாதியினருக்கு இதுவரையிலும் அளவற்ற செல்வத்தையும், செல்வாக்கையுந் தந்திருக்கும். அவ்விதங் கைத்தொழிற் சாலை ஸ்தாபியாமலும் குலத்தொழில்களை விருத்திசெய்யாமலும் பராமுகமாயிருந்துவந்ததினுல் குலத்தொழில்கள் நமது கைவிட்டு நழுகவும் அவ்[illegible] தேர்ச்சி மழுங்கவும் நம்மவர் வருவாயும் கனமூ வும் நம்மக்களேங்கவும் நம்மைப் னஞ் செய்யவும் ஏற்பட்டிருக்கிறது.

ஆதலால், எவ்வளவு விரைவா விதத் தொழிற்சாலை ஸ்தாபிக்கமுடி அவ்வளவு சீக்கிரமாக ஸ்தாபிப்பத முயற்சியைஒவ்வொருவரும் மனப்பூ ய்ச் செய்யவேண்டும். அங்ஙனஞ்செய் ஒரு மாதகால அளவுக்குள்ளேயே தொழிற்சாலைக்கான மூலதனத்தை ட்டிவிடலாம். பங்குத்தொகையோ குறைவாயிருக்கிறது. ஆதலால், ளெடுக்கக் கூடியவர்கள் பெருந முதல் குக்கிராமங்களீருகவுள்ள பல களிலுங் கிடைப்பார்கள். ரூ. 20,000 முதல் ரூ. 50,000வரையிலுங் கொண்ட மூலதனம் எளிதிற் சேர்ந்துவிடும்.

ஆனுல், எவ்வளவு மூலதனம் தென்றும், என்னென்ன தொழில்கள் ய்வதென்றும், யந்திரங்களுக்கெனவும், ஆயுதங்களுக்கெனவும், சாமான்களுக்கெனவும், மாதச்செலவுக்கெனவும், மற்றவற்றிற்கெனவும் எவ்வளவு தொகைகள் வேண்டியிருக்குமென்றும், இத்தொழிற்சாலைப் பரிபாலனமெவ்வாறு நடைபெறுவதென்றும் இன்னோரன்ன விபரங்களைப்பற்றியும், இவ்விஷய சம்பந்தமா யநுபவமும் ஞானமுமுடையார் நமது பத்திரிகையில் தங்களபிப்பிராயத்தைப் பிரஸ்தாபிப்பார்களாயின், தக்கவாறு வேண்டியாங்கு நடத்துவித்தல் சுலப சாத்தியமாகும்.

162057



தை விளக்கும். நெடுநாள் வரைக்கும் இங்கிலாந்தில் கத்தி, கத்திரி செய்வோர் இந்திய எழுகை அதிக சிலாக்கியமானதாக எண்ணினுர்கள். அதின் உற்பத்தி அதிக ஆச்சரியத்திற்கு இடம் தந்தது. அதின் செய்முறையைப்பற்றிய பலவித எண்ணங்களுக்கு இலக்காக இருந்தது. ஒருவருக்கும் தெரியாத ஓர் இந்திய குக்கிராமத்தில் உண்டாக்கப்பட்ட எழுகினுல் ஆக்கப்பட்டவை என்பது உலகத்திற்குத் தெரிவதற்கு முன்னமே, அந்த எழுகினுல் ஆக்கப்பட்ட பேர்போன டமாஸ்கஸ் கத்திகள் நெடுங்காலம்வரைக்கும்இளகிக்கொடுப்பதற்கும்வளைந்துக் கொடுப்பதற்கும், பலத்திற்கும், அழகிற்கும்புகழ்பெற்றிருந்தன. அந்தஎழுகைப் பெறுவதற்காக பாரசீகத்திலிருந்து வர்த்தகர்கள் அந்த கிராமத்திற்குப்பிரயாணப்பட்டு வந்தார்கள். அந்தக் கிராமத்திற்கு அதைப் பெறுவதற்காகப்போகும் கஷ்டத்திற்குத் தக்க பலனை அடையலாமென்று அவர்களுக்குத் தோன்றிற்று. அதிக பூர்வீககாலத்திலேயே, அதாவது இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னேயே, மேல்நாட்டுக்கு சாமான்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்றுநினைக்க அநேகம் காரணங்கள் உண்டு.

இப்போதிருக்கிறவைகளைக் காட்டிலும் மேலான செய்முறைகள் இந்தியாவில் பூர்வீகத்தில் இருந்தன என்பதைத் தெரிவிக்க இதர விஷயங்களையும் எடுத்துக்காட்டலாம். இதர இந்தியத் தொழில்களைப் போலவே இந்த எழுகு உற்பத்தியாச்கும் (பூர்வ) தொழிலும் பிற்காலத்தில் அநுகுணமான விர்த்தியை அடையவில்லை. இருபது நூற்றுண்டுகள் கழிந்தும் இப்போது காணப்படும் செய்முறை பூர்வத்தி லிருந்ததுபோலவேதான் இருக்கிறது. இந்தத் தொழில் புதிய ஏற்பாடுகளைப் பெறவில்லை. அதைச் செய்கிறவர்கள் பரம ஏழைகளா யிருக்கிறுர்கள். உயிர் வாழ்க்கையில் சாதாரண வேலைகளில் அநேகமாய் சுதேச சாமான்களுக்குப் பதிலாக தாழ்ந்த சமான அதிக சௌகர்யமான மே அதிக விரைவாக ன. இந்தியாவில் இரும்புத்தொழில் பின்னுக்குச் செல்கிறதே தவிர முன்னுக்கு வரவில்லை. இதற்குக் காரணமாகக் காட்டப்படுவன—இப்போது காணக்கிடைக்கும் பூர்வீக கட்டிடங்களில் இரும்பை உபயோகப்படுத்தவில்லை. இந்த கட்டிடங்களெல்லாம் முக்யமாய் கல்லினுல் கட்டப்பட்டிருக்கின்றன. நாம் இப்போது இரும்பை உபயோகப்படுத்தும் கட்டிடங்களில்கூட பூர்வ காலத்தில் கல்லைத்தான் உபயோகித்தார்கள். கதவுகள் செதுக்கு சித்திரவேலைசெய்யப்பட்ட சிலையால் ஆக்கப்பட்டன. சில்பி சட்டம் கீல் முதலியவற்றை உபயோகிக்கவில்லை. சிலைத் தரையில் குழித்திருக்கிற பள்ளங்களில் கதவுகளின் முளைகள் திரும்பும்படி வைக்கிறுர். கோயில்களிலே யல்லாமல் குடியிருக்கும் வீடுகளில்கூட இரும்பைக் கொஞ்சமாய் உபயோகப்படுத்தினுர்கள்.— இக்காரணங்களெல்லாம் எதைக் குறிப்பிக்கின்றனவென்றுல் இரும்பு அகப்படுவது கஷ்டமாயிருந்ததென்பதையும் இரும்பு சரசமாயிருக்கவில்லையென்பதையுமே.

அயத்தொழில் சுதேசத்திற்குரியதே என்று காட்ட அநேகம் திருஷ்டாந்தங்கள் இருக்கின்றன. நாகரீகமடைந்த பாகங்களிலிருந்து ஜனங்கள் இந்தியாவிற் குடியேற வருவதற்குமுன்னர் பூர்வீகக் குடிகளுக்கு அயத்தொழில் சகஜமாயிருந்தது. பூர்வீகக் குடிகளின் சரித்திரங்களைப் பார்த்தால் காண்ட்ஸ்; ஜாதியார் கச்சிகோபலா ஹூகார் என்கிற இடத்தில் வசித்ததாகத் தெரிகிறது. அந்த இடப்பெயரின் அருத்தம் "சிவப்புமலையில் இரும்புப் பள்ளத்தாக்கு" என்பது. அவர்களுடைய பாஷையில் அயஉலோகத்திற்கு மாத்திரந்தான் பெயர்இருக்கிறது. இப்படிப்பட்ட சுவல்ப சமாசாரங்களிலிருந்து ஒரு சரித்திரத்தை உண்டாக்குவது அசாத்தியம். எத்தொழிலில்நவீன விர்த்தி இல்லையோ எத்தொழிலில் செல்வச் சேகர ஏற்பாடும் வேலைவாங்கும் ஏற்பாடும் இல்லையோ அத்தொழிலுக்குச் சரித்திரம் இராது. ஒரேமாதிரியாயும் சுலபமாயும் செய்கிற கீழ் நாட்டுப் பழக்கங்கள், திடீரென்று ஏற்பாடாகவும் நவீனமாகவும் செய்

யும் மேல்நாட்டுத் தொழில் முயற்சியோடு போட்டி போடும்போதுதான் சரித்திரம் என்பது சிறிது தோன்றும். அச்சரித்திரம் கூட விசனிக்கத்தக்க க்ஷீணஸ்திதியின் சரித்திரமாகவே முடிகிறது. இயற்கை உலோகப் பொருள்சேகரம் எவ்விடத்தில் குறைவாக இருக்கிறதோ எவ்விடத்தில் உலோகச் சுரங்கம் சுலபத்தில் அடையக் கூடியதா யிருக்கிறதோ அவ்விடத்தில் சுதேசத் தொழில் வெளிநாட்டுப் போட்டிக்கு ஈடுகொடுக்காமல் சீக்கிரமாகவும் போராட்டமில்லாமலும் அடங்கிப்போகிறது. எவ்விடத்தில் உலோகப் பொருள் சேகரம் பலமாக விருக்கிறதோ எவ்விடத்தில் சுரங்கப்பிரதேசம் அதிக தூரத்திலிருக்கிறதோ அவ்விடத்தில்தொழில்விர்த்தியாயிருக்கும்.

அகேரியர் என்பவர்கள் உலோகப் பிரிவினை செய்கிறவர்கள். லோஹார் என்பவர்கள் லோககாரர்கள். லோகத்தில் வேலை செய்கிறவர்கள். அவர்களுக்கு உலோகப் பிரிவினை தெரியாது. அகேரியர் தாழ்ந்த நிலைமையி லுள்ளவர்கள். அவர்களுக்கு சுயேச்சையா யிருக்கவேண்டுமென்கிற ஆசையேகிடையாது. அவர்கள் பரம ஏழைகள். லோஹார் என்பவர்கள் அவர்களுக்கு யந்திர ஏற்பாட்டிற்கும் உலோகப் பொருள் அதாவது இரும்பு உலோகக் கற்கள் சேகரத்திற்கும் முன்பணம் கொடுத்து உலோகப் பிரிவினைத் தொழிலைச் செய்யச்சொன்னார்கள். அந்தவிதமாக உண்டான இரும்பைக் கொண்டு லோஹார் என்பவர்கள் சாமான்களைத் தயார்செய்தார்கள். இரும்பு அதிகமாய் இறக்குமதி ஆனபோது செல்வவந்தர்களா யிருந்த லோஹார்கள் அன்னியதேசத்து இரும்பு அதிக விலையானபோதிலும் வேலைக்குத் தகுந்ததாயிருக்கக் கண்டார்கள். அதிக குறைந்த தேகப்பிரயாசையோடு சாமான்களை முடிக்கச் சௌகர்யமுள்ளதாக இருக்கக்கண்டார்கள். ஆகையால், அந்தனவந்த லோஹார்கள் அன்னிய தேசத்து இரும்பு சுலபமாகக் கிடைக்கக் கூடிய பெரிய பட்டணங்களுக்குப்போய்க் குடியேறினார்கள். ஏழ்மை ஸ்திதியிலிருந்த லோஹார்கள் கிராமங்களிலேயே இருந்துக் கொண்டு சுதேச நாணயமில்லா இரும்பில் சாமான் செய்துகொண் டிருந்தார்கள். இவர்களுக்கு அகேரியர்களுக்கு முன்பணம் கொடுக்கச் சாத்தியமில்லாதபடியால் உலோகப் பிரிவினை அதிகக் குறைவாக நடந்தது. இப்போது அகேரியர்களுக்கு முன்பணம் கொடுக்கும் பணக்காரர்கள் வேண்டியதா யிருந்தது. இந்தப்பணக்காரனுக்கு அகேரியர்க்கும் லோஹார்க்கும் உள்ள வேலைமுகாந்திர சம்பந்தம் இல்லை. ஆகையால் அவனிடத்தில் ஆயாசம் காணப்பட்டது. பணக்காரன் கூலியைக் குறைத்து வேலையை அதிகம் வாங்கப்பார்த்தான். அகேரியர் கொடுத்த பணத்திற்குத் தகுந்த குறைந்த வேலைசெய்யப் பார்த்தார்கள். கவர்ன்மெண்டார் உலோகப் பிரிவினைக் காரர்களுக்கு நேராக லைசன்ஸ்கொடுக்க ஆரம்பித்தார்கள். கட்டணம் சுலபமாயும் பத்துவருஷ காலத்திற்கு மறுபடியும் புதுப்பித்துக்கொள்ளத் தக்கதாயு மிருந்தது. வேண்டுமானால், இன்னும் நீண்டகாலத்திற்கும் புதுப்பித்துக் கொள்ளலாம். உலோகப் பிரிவினைக்காரர்களுக்குப்போடும் வரிகளைக் குறைத்தார்கள். பஞ்சகாலத்தில் அவர்களுக்கு முன்பணத்தைக் கொடுத்தார்கள். இவ்வளவு செய்தும் உலோகப் பிரிவினைத் தொழிலை முன்போலச் செய்யும்படித் தூண்ட முடியவில்லை. லைசன்ஸ்காரர்கள் இரும்பை உண்டாக்கியும் அது கடைத்தெருவில் விற்பனையாகவில்லை. 1894௵ல் உலோகப்பிரிவினைக்காரர்கள் பணக்காரர்களுடைய நிர்ப்பந்தமான வலையில் சிக்கிக்கொள்வதைத் தடுப்பதற்காக அதிக முக்கியமான சுரங்கங்களையெல்லாம் பாரஸ்டு இலாகாக் காரர்களுக்கு ஒப்புவித்தார்கள். இப்போதும்கூட தொழில்விருத்தி காணப்படவில்லை. ஏனெனில் சுதேச இரும்பின்விலை அதிகமாயிருந்தது. ஆகையால், அதற்கு கிராக்கி கொஞ்சமாயிருந்தது. சரசமான இறக்குமதிஇரும்புக்கு அதிக கிராக்கி இருந்தது. முதல்பணத்தை எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக்குகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு இ[illegible] விலையா காயிருந்தது. உ[illegible]
க்குவேலைநின்ற



## வியாபாரப் பிரயாணிகளின் உபதேச வார்த்தைகள்.

'சத்தியவசனன்' எழுதியது.

நான் விற்கிற சரக்குகளில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நான் விற்கிற சரக்குகளில் எனக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் நான் என் வியாபாரத்தை விட்டுவிட வேண்டும். உனக்கு எதில் நம்பிக்கை இல்லையோ அதை நீ ஜயப்பிரதாபமாய் விற்கமாட்டாய். நான் நீண்ட வாரமுடிவை எடுத்துக்கொள்ளுகிறதில்லை. திங்கட்கிழமை காலை வியாபாரத்துக்கு நல்லகாலம்.

வாங்கினாலும் சரி, வாங்காமற்போனாலும்சரி, நாம் எத்தனைபேர்களை வியாபாரத்திற்கு அழைக்கிறோமோ அச்சங்கியைக்கும் நமக்கும் வரும் சரக்குத் தேவையின் உத்தரவுகளுக்கும் நேர் சம்பந்தமிருக்கிறது என்னும் அபிப்பிராயத்தை உடையனாயிருக்கிறேன். அது லாபகரமாய் வியாபாரத்தை நடத்துகிறது.

கஷ்டமான வருவாய் சாதனங்களை நான் நிக்ரகிக்கிறேன். அவற்றை நான் கடைசியில்தான் பாராட்டுவேன். இப்போது நான் முதலில் அவைகளை ஒன்றாய்ச் சேர்க்கிறேன். அது எனக்கு நம்பிக்கையை உண்டுபண்ணுகிறது. விற்பனையில் சந்துஷ்டியான நம்பிக்கை பெரிய இருப்பு. (அல்லது ஐவேஜு.)

மரியாதை மனுஷத்தனத்தை உண்டாக்குகிறது. மரியாதைதான் சிநேகர்களை உண்டாக்குகிறது. நமது சிநேகிதர்களிடமிருந்து நாம் பணத்தைச் சம்பாதிக்கிறோமென்று யாரோ ஒருவர் சொல்லிருக்கிறார். நமது சத்துருக்கள் நம்முடன் வியாபாரம் செய்யமாட்டார்கள்.

மரியாதை சிறு விஷயங்களைச் சார்ந்திருக்கிறது. உன்னை அறியாத ஒருவருடைய உத்தியோகஸ்தானத்தில் நீட்டியகையோடு பிரவேசித்தால், அது அவரது நியாய உணர்ச்சிக்கு விரோதமாக இருக்கும். அவர்வழக்கமாய் முதலில் கைகுலுக்க விரும்புகிறார்.

சில பிரயாணிகள் முகமறியாத ஜனங்களோடு வியாபாரம் செய்யப்பார்க்கிறார்கள். அது காலப்போக்கை உண்டாக்காதுபோல் தோன்றுகிறது. ஆனால், அது அநேகமாய்க் கோபத்தைத்தான் உண்டாக்கும். அது ஓர் வேலையாக இருக்கிற மனிதனை நம்மோடு பேசும்படி பலாத்காரமாய் வலித்தலேயாம். கட்டாயப்படுத்தினால் மானிட இயற்கை கோபம் கொள்ளுகிறது. எங்கேயாவது அழைத்தால் அவ்விடத்தில் அதிககாலம் இருக்கக்கூடாது என்பது எனது கொள்கை. சில வியாபாரிகள் எப்போதும் பேசிக்கொண்டிருக்க விரும்புகிறார்கள். நான் நின்று கேட்கிறேன். சிலர் உன் காரியத்தை முடித்துக்கொள்ளச் சொல்லுகிறார்கள். பிறகு வெளியேபோகச்சொல்லுகிறார்கள். நான் வெளியேவந்து விடுகிறேன். சிறு விஷயங்களை கவனித்தல் நல்லது.

ஒருவன் எவ்வளவு சலுக்காய் விற்கக் கூடுமோ அதற்கதிகமான சரக்கை அவனுக்கு விற்றுவிட்டோமென்று சில வர்த்தகப் பிரயாணிகள் மமதையை அடைகிறார்கள். அது நல்ல கொள்கையல்லவென்பது எனது அபிப்பிராயம். உபயோகப்படுத்துகிறவனுடைய கைக்குக் கிட்டாதிருக்கிறவரையில் சரக்குகள் வாஸ்தவமாய் விற்கப்படவில்லை என்பது எனதுகொள்கை. எதிர்க்கக்ஷியாக ஏற்பட்ட வர்த்தகசாலைகளின் அழிவை நான் தேடுகிறதில்லை. ஏனென்றால், அப்படிச்செய்தல் நான் போட்டிக்குப் பயந்தேன் என்பதைத் தெரிவிக்கும்.

மேற்கண்ட விஷயங்கள் ஒருபுறமிருக்க, என்னுடைய சரக்கு எப்படிப்பட்டதென்று நான் அறிவேன். அவைகள் எங்கே செய்யப்பட்டனவோ அந்தக் கிடங்குகளில் போக்குவருத்தாயிருந்தேன். அவைகள் எதற்கு உபயோகமென்று எனக்கு நன்றாய்த்தெரியும். ஏன் அவைகள் இருக்கின்றனவென்பதை நான் அறிவேன். அது வியாபார நுட்பங்களை அறிந்து கொண்டிருப்பதிலும் மேலானது.

## இராமாயண ஆராய்ச்சி.

ஸ்ரீ-கா. திருவேங்கிடாச்சாரியார், சென்னை

ஸ்ரீராமாயணத்தில் அனந்தவிதங்கள் வெளிவந்திருக்கின்றன. வான்மீகராமாயணம், ஆனந்தராமாயணம், அத்புதராமாயணம், கூர்மராமாயணம், தூர்வாசரர்மாயணம், வாசிட்டராமாயணம் எனஅவை பல. இராமாயணம் இன்னகாலத்தில் எழுதப்பட்டதென ஸ்திரமாய்ச் சொல்லக்கூடவில்லை. இராமாயணம், பாரதம் என்னு மிரண்டு இதிகாசங்களுள் இராமாயணம் முந்தியதென்றும், பாரதம் பிந்தியதென்றும் பலர் அங்கீகரிக்கிறார்கள். இராமாயணத்திலெந்த சந்தர்ப்பத்திலும் பாரதத்தைப்பற்றிக் கூறவில்லையாதலாலும், பாரதத்திலோ வான்மீக முனிவரைப் பற்றியும் அம்முனிவர் கூறிய இராமாயணத்தைப்பற்றியும் கூறியிருத்தலாலும் இராமாயணம் முந்திய காவிய மென்பது பெறப்படுகிறது.

அன்றியும், இராமாயணத்தின் சுருக்கம் பாரதத்தில் இருக்கின்றமையாலும் பாரதத்தின் சுருக்கம் இராமாயணத்தில் இல்லாமையாலும் இராமாயணமே முற்பட்டதென்பது நிச்சயம். இராமர் இருந்தகாலமும், வான்மீகரிருந்தகாலமும், இராமாயணமெழுதியகாலமும் திரேதாயுக மென்றும் பாரதம் நடந்ததும் பாரத மெழுதியதும் துவாபரயுகமென்னும் வைதிக நூல்களில் பெறப்படுகின்றமையால் இதுவும் அதற்கு ஆதாரமாகும். இத்தகைய நியாயங்களால் அஷ்டாதச புராணங்களும், உபபுராணங்களும், ஸ்தலபுராணங்களும் இராமாயணத்திற்குப் பிந்தியவையென்றே அந்நூல்களின் அத்தாக்ஷிகளால் நிரூபிக்கலாம். ஆயினும், இத்தனை நூல்களினும் இராமாயணம் முந்தியதாதலால் அதனை ஆதிநாலெனக் கூறலாமோவெனின் அவ்வாறு கூறுதல் கூடாதெனத் தெரிகிறது.

வேதமானது மற்றெல்லா நூல்களினும் முந்தியதென்பது நிராட்சேபமானவிஷயம். இராமாயணம் வேதரிஷிகாலத்துக் காவியமன்று. நியாயசாஸ்திரம் தர்மசாஸ்திரம் சிற்பசாஸ்திரம் நாடகசாஸ்திரம் கல்பசாஸ்திரம் முதலிய பல சாஸ்திரங்களில் அநேகர் வல்லவர்களாய் இருந்தனரென்று ஆங்காங்கு வான்மீகர் இராமாயணத்தில் கூறியிருக்கின்றமையால்இவ்விந்துதேசமானது வான்மீக முனிவர்காலத்தில் இச்சாஸ்திரங்களில் மிகத் தேர்ச்சியடைந் திருக்கவேண்டுமென்பது கரதலாகமம்போல் விளங்குகிறது.

ஆகையால், இராமாயணம்எழுதுவதற்கு முன்னே நெடுங்காலமாய் இவ்விந்துதேசத்தவர் பல சாஸ்திரங்களில் பயின்றுவந்தனரென்பதும் பல சாஸ்திரங்களை எழுதினார்கள் என்பதும் கூறாமலே அமையும். இதற்கு உதாரணமாக சாஸ்திரங்களில் தேர்ச்சியடைந்த கபிலர் பாராசரர் முதலிய முனிவர்களின் சரித்திரங்களும் இராமாயணத்தில் கூறப்பட்டிருக்கின்றன. வேதம், வேதாந்தம், ஸ்மிருதி, மீமாம்சம், தர்க்கம், சாங்கேயம், நையாயிகம், வைசேஷிகம் முதலியன இராமாயண மெழுதுவதற்கு முன்னர் இருந்தனவென்பது அக்காவியத்தை வாசித்த ஒவ்வொருவருக்கும் நன்கு விளங்கும்.

வான்மீகமுனிவர் வேதரிஷியன்று. இருஷி என்னும் பதம் ஆதிகாலத்தில் பிரயோகிக்கப்பட்ட பொருளை வேதபாஷ்யங்கள் தெரிவித்திருக்கின்றன. யாதொரு முக்கிய வார்த்தையை எவர் சொல்லுகிறாரோ அவரே ரிஷி என்று பாஷ்யங்களில் பொருள் கூறி யிருக்கின்றது. வேதரிஷிகளாவோர் வேதத்தின் அம்சங்களை இயற்றியவர்களே. வேதத்தை இயற்றியவர் ஒருவரல்ல பலர்.



அந்தந்த வாக்கியத்தின் கிரந்தகர்த்தாக்களுடைய பெயர்கள் அனுக்கிரமணிகையென்னும் வேத அட்டவணையில் காப்பாற்றப்பட்டு வேதத்தோடு வழங்கிவருகின்றன. அந்த அட்டவணையின்பிரகாரம் விஸ்வாமித்திரர் இருக்குவேதத்தின் மூன்றாம் காண்டத்தி லடங்கிய கீதங்களைச் செய்தவர். பரத்துவாசர், ஆறாவது காண்டத்தில் சேர்த்து செய்யப்பட்ட கீதங்களைச் செய்தவர். மற்ற கீதங்களைச்செய்தவர் பலராய் இருக்கின்றார்கள். அவர்கள் வாமதேவர், புதன், அத்திரி, அகஸ்தியர், கசியபர், ஆங்கீரசுபர், ஜமதக்னி, பராசரர் முதலானவர்களே. இம்முனிவர்களின் சரித்திரங்களும் இம்முனிவர்களுக்குப் பிற்காலத்திலிருந்த முனிவர்களின் சரித்திரங்களும் இராமாயணத்தி லெழுதப்பட்டிருக்கின்றன. நாமெடுத்துக்காட்டிய நியாயங்களால் வான்மீக முனிவர் வேதரிஷி காலத்தவரல்லரென்று பெறப்படுகிறது.

புத்தமதமும், சார்வாகமதமும், இவ்விந்து தேசத்திலுள்ள மதங்களென யாவரும்அங்கீகரிப்பினும் இவ்விருமதங்களுக்கும் இராமாயணத்திற்கும் உள்ள காலசம்பந்தங்கள் சாதாரணமாய் உணரக் கூடவில்லை. சார்வாகவும் புத்தம் ஆகிய இவ்விருமதங்களின் உற்பத்தி வான்மீக முனிவாது இராமாயணத்திற்கு முந்தியதென்பதுவிசாரணை செய்த ஒவ்வொருவருக்கும் தெரிந்த விஷயமேயாம்.

வான்மீக ராமாயணத்திலே அயோத்தியா காண்டத்திலே 108 - 109 வது சருக்கங்களில் ஸ்ரீராமருக்கும் ஜாபாலி மகாமுனிவருக்கும் சம்பாஷணை நடந்திருக்கிறது. அதில் ஜாபாலிமுனிவர் பின்வருமாறு கூறுகிறார். (தொடரும்.)



## சிறு தொழில் முறைகள்.

### தேயிலைத் திராவகம்.

தேயிலை 2 அவுன்சு கொதிநீர் 14 அவுன்சு. அரைமணி நேரம் 170 டிக்ரீ பாரின் ஹீட் சூட்டில் தேயிலையின் சாரம் நீரில் இறங்கவேண்டும். வாயுபரவாத இடத்தில் குறைந்த உஷ்ணத்தில் ஆவியாய்ப் பரிணமிக்கச் செய்தால் ஒரு நேர்த்தியான மேலான தேயிலையின் சாரம் உண்டாகும். அது தேயிலையின் குணத்தை யெல்லாம் உடைத்தாயிருக்கிறது. சுடுநீரில் சிலகிரெயின் சத்தை விட்டால் ஒரு கோப்பை மேலான தேயிலைக் கியாழமாகும். ஆவியாகுமிடம் எவ்வளவுக் கெவ்வளவு உஷ்ணக் குறைவாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு குணத்தில் நேர்த்தியானதாகும்.

### சாக்கு சேர்மானத்தில் கிச்சிலி சத்து உண்டாக்கல்.

| | | |
|---|---|---|
| க்ளிஸரைன் | 10 | அவுன்சு |
| க்ளோரோபாரம் | 2 | ,, |
| ஆல்ட்சைட் | 2 | ,, |
| எத்தில் ஆஸிடேட் | 5 | ,, |
| எத்தில் பார்மியேட் | 1 | ,, |
| எத்தில் பூடிரேட் | 1 | ,, |
| எத்தில் பென்சோவேட் | 1 | ,, |
| மேத்தில் சாலிஸிலேட் | 1 | ,, |
| அமில் ஆஸிடேட் | 10 | ,, |
| கிச்சிலி சத்து | 10 | ,, |
| டார்டாரிக் ஆஸிட் | 1 | ,, |
| ஆல்கோஹால் | 100 | ,, |

எல்லாம் ஒன்று சேர்த்துக் கலக்கவேண்டும். ஷர்ப்பத்துகளுக்கு உருசியை உண்டாக்கவும் மிட்டாய்களுக்கு உருசியையும்

வாசனையையும் உண்டாக்கவும் சேர்க்கிறார்கள்.

### கம்பளி செய்யும் உரோமத்தை வெளுக்கும் சேர்மான வஸ்து.

| | |
|---|---|
| உலர்ந்த சோடா | 7 பாகம் |
| தூளாக்கிய சோப்பு | 2 ,, |
| சாலம்மோனியாக் | 2 ,, |

ஒவ்வொன்றையும் தனித்தனியாய்த் தூள் செய்து எடைபோட்டுக் கலக்கவேண்டும். நீர் சேர்த்து உபயோகிக்க வேண்டும்.

### பளபளப்பான கருப்பு பைசிகல் பூச்சு வர்ணம்.

| | |
|---|---|
| எண்ணை தார் | 8 அவுன்சு |
| ஆஸ்பால்டம் | 2 ,, |
| தூள்செய்த ரோசின் | 2 ,, |

சேர்த்து உஷ்ணத்தால் கரையச் செய்யவேண்டும். அக்னிச் சுவாலை அதில் படாதிருக்கும்படி சாக்கிரதை எடுத்துக் கொள்ளவேண்டும்.

### உரோமம் சுருள் ஆவதற்குச் சேர்மானத்திரவ பதார்த்தம்.

| | |
|---|---|
| வெங்காரம் | 6 அவுன்சு |
| கம் அரபிக் | 2 ட்ராம் |
| சுடுநீர் | 4 பைன்டு |
| கர்ப்பூரத் திராவகம் | 5 அவுன்சு |

வெங்காரத்தையும் கம்அரபிக்கையும் வெந்நீரில் கரைத்துக்கொள்ளவேண்டும். குளிர்ந்ததும் குளிராததுமாயிருக்கும் போது கர்ப்பூரத்திராவகத்தைச்சேர்க்கவேண்டும். இராத்திரியில் படுக்கும்போது உரோமத்தைச் சீப்பைக்கொண்டு சுருள் சுருளாகச் செய்து மெதுவான மெல்லிய புருசைக் கொண்டு உரோமத்தை மேற்படி சேர்மான ஜலபதார்த்தத்தால் நனைக்கவேண்டும்.

### சுளுவான பல்பொடி.

| | |
|---|---|
| அடுப்புக் கரித்தூள் | 2 அவுன்சு |
| க்வினைன் சல்பேட் | 4 கிரேயின் |
| மாக்னீஷியா கார்போனேட் | 4 கிரேயின் |

இவைகளைக் கலந்து பன்னீர்த் துளிகள் சில சேர்த்து வாசனை ஏற்றி மிளகுசத்து, லவங்கசத்து, ரோஜா இலைதூள், (Orris) ஆரிஸ் கிழங்குசத்து இவைகளைச் சேர்த்து வாசனை உண்டாக்கவும்.

### பாட்சௌலி சத்து.

| | |
|---|---|
| பாட்சௌலி அத்தர் | 4 டிராம்ஸ் |
| ரோசா அத்தர் | 40 மினிம்ஸ் |
| ஆல்கோஹால் | 30 அவுன்சு |

அத்தர்களை ஆல்கோஹாலில் கரையச் செய்.

### இங்கன்ஸ் வாசனை

| | |
|---|---|
| கிச்சிலி சத்து | 2 கிலோக்ராம் |
| ரோசா சத்து | 2 ,, |
| ஜாஸ்மைன் சத்து | 1 ,, |
| காஸ்ஸியா சத்து | 1 ,, |
| ஆரிஸ்டிங்சர் | 1 ,, |
| கஸ்தூரி டிங்சர் | 40 கிராம்ஸ் |
| ரோசா அத்தர் | 10 ,, |
| எலுமிச்சை எண்ணெய் | 2 ,, |

எல்லாவற்றையும் சேர்த்துப் புட்டியில் நிரப்பினால் உயர்ந்த வாசனை நீராகும்.

---



## தமிழரின் போர் முறைமை.

ஸ்ரீமான் R. ரெங்காச்சாரியார் M. A. L. T. விவேகபோதினியில் பின்வருமாறு எழுதுகிறார்:—

பூர்வீக காலமுதல் இந்தியாவில் பெரும் புகழுடன் பல்கிவாழ்ந்தவர் இரு பெருங் கூட்டத்தாராவர். அவரை ஆரியர் தமிழரெனப் பகுப்பர். வட நாட்டில் ஆரியர் எத்துணைச் சிறப்புடன் விளங்கினரோ, அத்துணைச் சிறப்புடன் தமிழரும் தென்னாட்டில் திகழ்ந்து வந்தனர். வடவாரியர் இந்தியாவைக் கைப்பற்றி யாளுவதற்கு முன்பு, தென் தமிழர் வடநாட்டிலும் குடியேறி வெகு காலம் வரை வாழ்ந்து வந்தனரென்பதும், ஆரியராற் போரிற் புறமிடத்தாக்கப்பட்ட பின், தமிழர் தென்னாட்டையே தமது உறைவிடமாகக் கொண்டாரென்பதும் சரித்ரவாசிரியரது கொள்கைகள்; இதை யொட்டியே பரிமேலழகரும் 'பழங்குடி தொன்று தொட்டு வந்த குடிதொன்று தொட்டு வருதல் சேர சோழபாண்டிய ரென்றாற்போல படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வருதல்' என்றார்.

முன்னாள் முதலே தமிழ்க் குடிகள் பல வாற்றாலும் பெருமை வாய்ந்தவரென யாவராலும் நன்கு மதிக்கப்பட்டனர். நாகரீகத்திலும், கைத்தொழிலிலும், நூலாராய்ச்சியிலும், போர்த் திறத்திலும் அவர் எவரினும் பிந்தியவரல்லர். தமது காலத்தில் வசித்த சகல ஜாதியாருக்கும் ஒருபடி மேலாகவே பாராட்டப்பட்டனர். முற்காலத்தில், அவர்கள் பெரிய நகரங்களையும், துறைமுகப் பட்டினங்களையும் ஸ்தாபித்து, முடியுடை வேந்தர்களாயும் குறுநில மன்னர்களாயும் நாடுகளை ஆட்சி புரிந்துவந்தனர். அவரது தொன்மையும், மேன்மையும், வள்ளன்மையும், போர்த் திறமையும் அளவிடற்பாலவல்ல. ஈங்கு அவருடைய போர்த்திறத்தைப் பற்றிச் சிறிது விரித்துக் கூறுவோம்.

போர் வெல்வதற்குக் கருவியாக உள்ளவை நாற்படைகள் என நம்முன்னோர் கூறுவர். அவைதாம் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, மறப்படை எனப் பேர்பெறும். வட நூலார் இவற்றை ரதகஜதுரகபதாதி என்பர். யானைப் படை இந்தியாவுக்கும் ஆபிரிக்காவுக்கும் சிறப்பாகவுள்ளது. சந்திரகுப்தன் காலத்தில் மகத நாடு செழித்து ஓங்கியதற்குக் காரணம் அவனது நாற்படையே யென்றும், அவனது யானைப்படை மிகவும் வலியுடைத் தென்பதும் அதைத் துணையாகக் கொண்டு, தன் நாட்டில் படையெடுத்து வந்த செலூகஸ் என்ற கிரேக்க வரசனை அவன் முதுகிட்டோடுமாறு முடுக்கினனென்பதும், பின்னர் கிரேக்க வரசன் அவனது நட்புக்காளாகி, தன் பகைவரை மேற்றிசைக் கண் எதிர்ப்பதற்காக 500 பேர் யானைகளைப் பெற்றானென்பதும் சரித்திரம் படித்தோர் செவ்வனே யுணர்ந்தவை. இதுபோலவே, ஆபிரிக்காவின் வடபாலிற் கிளம்பிய கார்த்தேஜ் இராஜாங்கமும் யானைப் படையை மிகுதியாக வைத்திருந்தது. இந்தியாவிலும் ஆபிரிக்காவிலுந்தான் யானைகள் விசேஷம். ஆதலின், இவ்விரு தேசத்திலுமே அவை போரில் உபயோகிக்கப்பட்டன. வேறு தேசங்களில் அவை கிடையா. அதனால் அத்தேசங்களில் யானைப் படையைப் பற்றிப் பேச்சே கிடையாது.

குதிரைப் படையும் காலாட்படையும் மறவரால் ஆக்கப்பட்டனவாகும். 'இவுளி மறவர்' எனக் குதிரை வீரரை யழைப்பதுவழக்கு. அதுபோலவே காலாட்படையை மறப்படை யெனவும், வேற்படை யெனவும், வாட்படை யெனவும், நூல்களில் வழங்குவர். இம்மறவரின் நெஞ்சஞ் சாமையையும், வீரச்செயல்களையும் புகழாத பண்டைத் தமிழ் நூல்களே இல்லை யெனலாம். இச்சாதியார் முன்னாள் தொட்டுத் தமது மெய்வலி மனவலி குன்றாது போர்புரிந்து தமிழ் நாட்டிற்குப் புகழ் விளைத் துள்ளார்கள்.

வடவாரியருடன் போர்புரிந்து கனகவிசயர் முதலியோரைப் பதினெட்டு நாழிகையில் முறியடித்து; சேரன் செங்குட்டுவனுக்கு வெற்றிப்புகழை விளைவித்தவர் இவரே. நெடுஞ்செழியனுக்காக ஆரியப் படை தந்ததும் இவரே. சோழன் கரிகாற் பெருவளத்தான் வச்சிர நாட்டையும் மகதநாட்டையும் அவந்தி நாட்டையும் வென்று, முறையே அந்நாட்டு மன்னரிடம் முத்துப்பந்தரும், வித்தியா மண்டபமும், வாயிற்றோரணமும் பெற்றதும் இவர் மூலமாகத்தான். மூவேந்தரெனச்சேர்த்து எண்ணப்படுகிற சேரசோழ பாண்டியர் தாம் ஒவ்வொரு காலத்தில் கூம்புகோட்டிமயமுதல் குமரியாறு வரையுள்ள நாடுகளைக் கையகப்படுத்தி ஆண்டதற் கறிகுறியாகத் தத்தம் கொடிகளாகிய வில்லையும் புலியையும் கயலையும் இமயத்திற் பொறித்ததும் இம்மறப்படை உதவிகொண்டன்றோ ?

இவர் போருக்குச் செல்லுகையில் தற்காலத்தார்போலவே அணிவகுத்துச் செல்லுதல்மரபு. படைகள் மூன்றுவகைகளாகப்பிரிக்கப்படும். முற்படை முன்னே முடுகிச்சென்று பகைவரைப் பொரும். அது செல்லுகையில் எங்கும்தூசிகிளம்பி வானை மறைக்கும். அதனால் அச்சேனை வெள்ளத்தின் எண்ணிக்கையை ஒருவாறு மதிக்கலாகும். தூசி என்று முற்படை பேர்கொண்டது துகளெழப் புறப்பட்டுந் தாக்குவதாற்போலும் ! இடைப்படை இடையிற் செல்லும். முற்படை போரிற் பொருது வீழ்ந்தோரிடத்தை நிரப்பவும், பொருது தளர்ந்தோரை இளைப்பாறச் செய்யவும், முற்படை வென்ற நாடுகளைக் கை நழுவவிடாது காப்பாற்றவும் இப்படையோர் உதவுவரெனலாம். கடைப்படை கூழெனப்படும். இதுவே அரசனுக்கு மூலபலம். இதில் போரில் கைவந்தவீரர் பலரிருப்பர். ஆயினும் தூசிப்படையை நோக்கினால் தொகையில் இப்படை கூழைதான். கைச்சண்டைசெய்து மாற்றார் வலியைத் தொலைக்கும் அந்நாளில் முற்படையின்தொகை பன்மடங்கதிகமாக விருக்கவேண்டு மென்பது சொல்லாதேயமையும்.

இனிப் பகைவர் தம்நாட்டின்மேற் படையெடுத்துவரின், அவரைத் தடுப்பதற்கு வழிகளென்ன விருந்தன வென்பதை ஆராய்வோம். தமது நாட்டின் நிலைக்கும் தகுதிக்கு மேற்ப அரண்களை அமைத்து, அரசர்கள் பகையை எதிர்த்தனர். அவ்வரண்கள் நீரரண், நிலவரண், காட்டரண், மலையரண் என நான்கு வகைகளாக அமைந்திருந்தன. இவையனைத்தும் ஒருங்கே ஓரிடம் காணப்படினும் படலாம். அன்றி யாதேனும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவை காணப்படினும் படலாம். துறைமுகப் பட்டினத்திற்குக் கடலே நீரரண். உண்ணாட்டு நகர்க்கு அகழ்தான் நீரரண். கடற்றுறைப் பட்டினங்களையும் சேர்த்தாண்டுவந்த முடிமன்னர்கள் கப்பற்படை யமைத்துக்கொண்டு பிறநாடுகளைக் கைப்பற்றியதாகவும் பின்வரும் மேற்கோள்களால் வெளியாகிறது.

"கடற்கடம் பெறிந்த
கடும்போர் வார்த்தையும்"
(சிலப்பதிகாரம்)

"நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வுரவோன் மருக"
(புறநானூறு)

காட்டரண்—சோழர் தலைநகராகிய உறையூரும், வேங்கைமார்பனது திருக்கானப்பே ரெயிலும் சிறந்த காட்டரணைப் பெற்றிராநின்றன. நகர்ப்புறமெங்கும் முட்காடு அடர்ந்தியாய் வளர்க்கப்பட்டு வந்தமையின் இதுபோன்ற நகர்களைப் பிடிப்பதற்கு முக்கியமாய்க் காட்டுவழிகளைக் கைக்கொள்ளவேண்டி யிருந்தது. இம்முயற்சியில் பகைவரது திறனும், ஆண்மையும் பெரும்பாலும் பயன்பெறாதொழியும். தன்னிலத் துறு குறு முயல் தந்தியின் வலிதன்றோ ?

மலையரண்—பாரியது பறம்பு. எழினியது குதிரைமலை, வல்விலோரியின் கொல்லிமலை, மலையமான் திருமுடிக்காரியின் முள்ளூர்மலைமுதலியன பெரிய மலையரணையுடையவை. இவ்வரண் பகைவரால் முடிக்கப்பட்ட காலத்தில் அரசர்க்குப் புகலிடமாக வுள்ளது. நீண்ட முற்றுகையை எளிதில் ஏற்கவல்லது. மலைவளங்களோடு கூடியதனால் தீஞ்சுளைப்பலவின் பழமும், கொழுங்கொடி வள்ளிக்கிழங்கும், சிற்றிலை வெதிரின் நெல்லும், தீஞ்சுவைத்தேனும் மலிந்துகிடக்கும். இவையே மலையரண் காக்கும் மாண்புடையார்க்கு மேதக்க உணவாகும். வேள்பாரிபோன்ற சில குறுநில மன்னர்கள் குருவிகளை வளர்த்து, நெற்கதிர்களைக் கொத்திவரும்படி பயிற்றி, அவற்றால் மலையரண் காப்போரை அருத்தி வந்தாரெனவும் கூறுவர்.

"உரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பி
னிரைபறைக் குரீஇ யினங்காலை போகி
முடங்குபுறச செந்நெல் தரீஇய ரோராங்கு
இரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொண் மாலைப் படர்தந் தாங்கு"

என அகனூற்றில் வருவதைக் காண்க.

நிலவரண்— இது மருதநில நகர்களைக் காக்கும் புறமதில்களையும் ஆழ்ந்த அகழிகளையுமுடைய கோட்டையைக் குறிக்கும். இவ்வரணை முற்றியோரைத்தடுப்பதற்குப் பல பொறிகளைப் பின்னாளில் மதில்களில் அமைத்தாரென சிந்தாமணி முதலிய நூல்களால் தெரிகின்றது. கோட்டை பிடிபட்டால் தப்பியோடி யுய்வதற்கு மயிற்பொறி போன்ற விமானங்களைப் பண்ணினார்கள். அரசன் தப்பி யோடுவது அவன் புகழுக்கிழுக்காதலின், அவன் ஒருபோதும் தப்பியோடான். தான் சாவினும் தன் குலத்தொரு மகன் இருந்தால் தன் குலத்தாழ்வு பின்னொரு காலம் அம்மகனால் நீக்கப்பெறுமென்று நினைத்து, பால்மணங்கமழும் சிறுவனிருப்பின் அவனையாவது, அல்லது கருவுற்றிருந்த மனைவி யிருப்பின் அவளையாவது எந்திரப் பொறிமேலேற்றிப் புறம்பே போக்கித் தான் பகையைப் பொருது மனமொப்பி மாய்வன். இவ்வழக்கம் நம் நாட்டில் இராஜபுத்திரர்க்குள் சிறிதுகால முன்வரைநடைபெற்றுவந்ததை யாவருமறிவர்.





போர்க்குக்காரணங்கள்—முற்காலத்தில் முடிவேந்தர்க்குப் போர்விளைக்கப் பல காரணங்கள் ஏற்பட்டன. அவற்றுள் முதன்மையாக அவரது படைவலியையும், தோளின் தினவையும், மனவாசையையும் செப்பலாம். மெலியோர் மேற்சென்று அவர் நாட்டைக் கவர்ந்துகொள்வது அரசருடைய இயற்கைத் தீக்குணம். பாணர் புகழ்ச்சிக் கிலக்காய் நாடெங்கும் தமது வீரச்செயல்கள் பறை யறையப்படவேண்டு மென்பதே அவரது முக்கியநோக்கம். இவ்வாறு ஒருவரது புகழை மற்றோர் அரசர் அவைக்களத்தில் எடுத்தியம்பினால், தமது வீரத்திற்கு இழுக்கு வந்ததாகப் பாவித்து அவ்வரசர் படைகூட்டிப்போருக்கெழுவர். இங்ஙனமன்றி, மேன்மையாகப்பாராட்டிப் பரிசளிக்கப்பெற்ற பாணர்கள் அப்பார்த்திபனை மதியாது மானபங்கஞ்செய்து தம்மை என்றும் ஆதரிக்கும் பிரபுவையே போற்றுவர். இதனால் இருவேந்தர்க்கும் போர் நிகழ்தலு முண்டு. சில சமயங்களில்,

"வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅ
திடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப"
கடந்தடு தானையொடு போர் விளைப்பர் சில
அடல் வேந்தர்கள்.

போர் தொடங்குவதன் முன்னர் பகைவர் நாட்டிலுள்ள

"ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணி யுடையீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங் கடனிறுக்கும்
பொன் போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின"ப்

பறைசாற்றுவர். இதுவே தருமயுத்தம். இதற்கு விரோதமாகத் தமிழரசர் ஒருபோதும் நடவார்.

இதுபோலவே சண்டையில் புண்பட்டோரையும், முதுகிட்டோரையும், படையிலாதோரையும், பதுங்கி யொளிந்தோ

ரையும், சரண் புகுந்தோரையும் வருத்துவது வீரரது செயலன்றென அவ்வரசர் கொள்கையாதலின், அன்னோரை மறந்தும் அவர் வருத்தார். போர் மூண்டதும் இருதிறத்தாரும் ஒற்றர்களை ஏவி, வழிதுருவிப் பூசலைவிளைத்து ஆநிரை கவர்வர். அவ்வாறு செய்யும்போதும், அதைப் பகைவர் மீட்கும்போதும்,பகைவர்நாட்டின்மேற் படைகொண்டு செல்லும்போதும், நகரின் மதிலை முற்றும்போதும், அதைக் காக்கும்போதும் இவ்வாறாக இருதிறத்தார்க்கும் பெரும்போர் நிகழும்போதும், வெற்றியை யாரேனு மொருவர் பெறும்போதும், வெவ்வேறு மலர்மாலைகளை அவ்வத்தொழிலுக்கு அறிகுறியாக அரசர்களும் அவரது வீரர்களும் அணிந்துகொள்வதுண்டு.

இருபடைகளும் மகாவீராவேசத்துடன் போர்புரியும்; வீரர்கள் முன்னிட்ட காலைப் பின்னிடார். வெட்டுண்டிறந்து வீர சுவர்க்கம் புகுவரேயன்றிப் போர்க்களத்திற் பின்வாங்கார். புலவர் வரைந்துள்ள போர்க்களக் காட்சிகளெல்லாம் அப்பெருமக்கள் கண்கூடாகக் கண்டெழுதியவை யாகும். தற்போது நடக்கும் அகோர யுத்தத்தை நாளும் கேட்கும் நமக்கு, அஞ்சாமையும் வீரமும் யுத்தத்திற் சுவையும், தறுகண்ணமையும் படைத்துள்ள தமிழரின் போர்க்களச் சிறப்பு ஒரு வியப்பாகாது. போர் முடிவில் வெற்றிகொண்ட வரசர்கள் வேள்வியொன்று ' கொற்றவைக்கு இயற்றுவித்துக் கொள்ளைகொண்ட பொற் குவியலைப் புலவோர்க்கும், பாணர்க்கும், வீரர்க்கும், இறந்து பட்டோரது இல்லத்தார்க்கும் பகிர்ந்து கொடுத்துத் தாமும் ஒரு பகுதி கொண்டு, தன்னாட்டில் இரண்டொரு வருஷம் இறைதவர்த்திட்டு, நாட்டாரனைவரு மின்புறக்கண்டு, தாமும் களிப்புடன் வாழ்வர்.

## குலாபிமானக் கொத்து.

### தூத்துக்குடி.

1918-ம் ஸு ஜனவரிமீ 18உ "விஸ்வகர்ம வித்தியாபி விர்த்தி லைபிரரி, ரீடிங் ரூம்" என்று நம் குலாபிமானிகளால் ஸ்தாபிக்கப்பட்டது. அன்றுபகல் 11மணிக்கு பிரம்மஸ்ரீ மாணிக்கம் ஆச்சாரியவர்களின் அக்கிராசனத்தின் கீழ் வக்கீல் ஸ்ரீமான் ஐ. சூரிய மூர்த்தியாபிள்ளை (பி. ஏ. பி. எல்.) அவர்களால் "கல்வி" யைப்பற்றிய பிரசங்கமும், இரவு 7 மணிக்கு ஸ்ரீமான் மே. மு. பழ. திருமூலஞ் செட்டியா ரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஸ்ரீமான் ப. ச. சந்தனஞ் செட்டியா ரவர்களால் "ஒற்றுமை" என்னும் விஷபத்தைப்பற்றியும், பிரம்மஸ்ரீ கதிரேசனாச்சாரி அவர்களாலும், மு. பாப்புராஜு அவர்களாலும் 'கைத்தொழில்' என்னும்விஷயத்தைப் பற்றியும் பிரசங்கங்கள் வெகு தெளிவாய்ச் செய்யப்பட்டன. அக்கிராசனாதிபதியவர்கள் நம் ஜாதியாரின் முன்னேற்றத்திற்காக நம் முன்னோர்களின் அரியபெரிய விஷயங்களை நமக்குப் பயன்படுமாறு உள்ளங்கை நெல்லிக்கனிபோல எடுத்துரைத்து கல்வியை யபிவிர்த்தி செய்தால் மட்டுமே மேனாட்டுக் கைத்தொழிலை சுலபமாய் கற்றுணர்வதற்கு ஓர் ஆஸ்பதமாகு மென்றும் எடுத்துரைத்தார்கள். பிறகு சந்தனம், புஷ்பம், தாம்பூலம், வழங்கப்பட்டு அக்கிராசனாதிபதிக்கும் மற்றும் கனதனவான்களுக்கும் வந்தனம் அளிக்கப்பட்டு சபை கலைந்தது.

கா. சு. சங்கரசுப்பு ஆச்சாரி,
காரியதரிசி.
Visvakarma Library & Reading Room,
No. 36, Kaleyappa Pillai Street,
Tuticorn.

* * *



### திருக்குறுங்குடி.

கீழ்க்கண்ட வாக்கியங்களடங்கியதாய் "திருக்குறுங்குடி 11-1-1918" என்ற விலாசமுந் தேதியுங் கொண்டதாய்க் கையெழுத்தில்லாத தொரு கடிதம் ஸ்ரீ கொ. கன்னியப்ப ஆச்சாரியவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

நம் விஸ்வகர்ம சந்ததியின் விர்த்திக்காகவும் சாபவிமோசனத்துக்காகவும் சென்ற 18 வருஷ காலமாக இல்லறத்திலிருந்தே 3 மைல் தூரத்திலுள்ள மையேந்திர கிரியின் அடிவாரத்தில் பர்னசாலைகட்டி யோகநிஷ்டையி லிருந்துகொண்டு வந்தேன். கார்த்திகை மாதம் 15உ 6 மணிக்கு இல்லறம் திருநெல்வேலியில் திறந்து அவ்விடத்தில் 1 மாசம் நிஷ்டையிலிருந்தேன். நிஷ்டை முடிந்த பிறகு இல்லறத்தில் இருந்துகொண்டு வருகிறேன். இல்லறத்திலிருந்தும் நிஷ்டையிலிருந்து கொண்டு வருகிறேன். தை மாசம் 5உ (18-1-1918-ல்) வெள்ளிக்கிழமை மையேந்திரகிரிக்குச் சென்று பர்னசாலையில் நிஷ்டையிலேயே இருக்கப் போகிறேன். ஆத்ம சொரூப நிலையை அறிந்தவன்தானே பிராமணன்; பரம சொரூப நிலையை அறிந்தவன்தானே பிராமணன் நாம் அறிந்திருந்து ஏன் பிராமணனில்லை?

எனக்கு 17 வயதுள்ள ஒரு பையனும் 3 பெண் குழந்தைகளும் இருக்கிறது. ஒரு பெண்ணுக்கு கலியாணம் ஆய்விட்டது, 2 பெண்கள் சிறுமிகள்.

ஜனனமரணத்தைநீக்கி மோக்ஷம் அடைந்தாலும் கற்புகோடி வருஷம் இல்லறத்திலிருக்கலாம் என்பது சாஸ்திரம். அதின்படி இருக்கிறேன். மையேந்திர கிரியில் 1008 தீர்த்தம் இருக்கிறது. அந்தந்தமீ பௌர்ணமிக்கும், தை பூசத்திற்கும் சாபவிமோசனத்திற்கு வந்து கூட்டம் கூடித் தீர்த்தமாடுகிறார்கள். தைமீ 5உக்கு மேல் 1096ஸுக்குள் விமோசனம் அந்தந்த ஜில்லாவிலிருந்து வந்து தீர்த்தமாடி சாபவிமோசனமாகி நற்கதியடைந்து மோக்ஷம் அடைய வேண்டியது.

* * *

### திருநெல்வேலி

12-12-17ல் விஸ்வப் பிராமணர்கள் திருநெல்வேலி ஸ்ரீ சண்முக விலாசத்தில் ஸ்ரீ தம்பானுச்சாரி அவர்கள் தலைமையின் கீழ் ஓர் கூட்டம் கூடி அதில் இராஜ விசுவாசத்தைப் பற்றி உபந்நியாஸமும் ஸ்ரீ திண்டுக்கல் உபாத்தியாயர் அவர்களால் ஸ்ரீ விஸ்வேசுவர பூஜையுஞ் செய்து நேசக் கக்ஷியார்க்கு இந்த யுத்தத்தில் வெற்றி கிடைக்கவேண்டுமென்றும் நமது அரசர் வெற்றிக்கொடிநாட்டி ஜெகமெங்கும் புகழ்பெற வேண்டுமென்றும் பிரார்த்திக்கப்பட்டது.

14-12-17-ல் ஓர் தந்தி கீழ்க்கண்ட வண்ணம் கொடுக்கப்பட்டது.

To

**The Right Honb'le Mr. Montagu**

SECRETARY OF STATE FOR INDIA

MADRAS.

The Visva brahmins of Tinnevally beg to assure His Imperial Majesty the King Emperor of its unswering loyalty & deep devotion to the Britsh throne and the person of the King Emperor and offer their warmest welcome to Mr. Montagu & H. E. the Viceroy to this Presidency.

This Community prays for your favorable consideration of the memorial submitted by Visva Karma Kulodharana Sabah Madras.

S. SANKARACHARI,
*Chockalinga Street*
Tinnevelly.

Reply.

Viceroy's Camp
21—12—17.

Dear Sir,

Mr. Montagu desires me to thank you for your telegram dated 14—12—17 in which you on behalf of the Visva Brahmins of Tinnevally communicate a message of loyalty to His Imperial Majesty the King Emperor & welcoming His Excellency the Viceroy & the Secretary of state on their arrival in Madras.

Yours faithfully,

* * *

Private Secy to the Secy of State.

To

S. SANKARACHARI Esq.,
*Chockalinga' Street,*
Tinnevelly.

*
* *

### வெள்ளாங் கோவில்.

நம்முன்னோர்கள் வெள்ளாங் கோவில் என்னும் ஊரில் காமாக்ஷியம்மன் கோவில் அதிக திரவியம் செலவு செய்து கோபுரம் ஸ்தூபி முதலானது செய்து அம்மன் திருவிழா முதலானதும் செய்து வந்ததில் கைக்கோளர்கள் நாங்களும் இடங்கைக்குச் சேர்ந்தவர்கள் என்று சரசமாய்ப்பொங்கல் வைத்தல் சாமி தரிசன முதலானது செய்து வந்ததில் இப்போது கைக்கோளர்கள் விபூதிப் பிரசாதம் தங்களுக்கு முந்தியுண்டென்பதாய்ச் சொல்கிறார்கள். தவிர, கோவிலும் தங்களுக்குப் பாத்தியம் என்கிறதாய்ச் சொல்கிறார்கள். நாங்கள் உங்களுக்கு காமாக்ஷியம்மன் கோவில் கிடையாதென்பதாய்ச் சொன்னதின்பேரில்கைக்கோளர்கள்எங்களைக் கோவிலுக்கு வரக்கூடாதென்பதாய்க் கலக முதலானது செய்தார்கள். அதன்பின்பு நாங்கள் மேஜிஸ்ட்ரேட்டில் பிரியாது செய்தோம். மேஜிஸ்ட்ரேட்டார் கலக முதலானதை நிறுத்தி யாருக்குப் பாத்தியா பாத்தியம் இருக்கின்றதோ அவர்கள் கோர்ட் மூலியமாய்த் தீர்ப்புச் செய்து கொள்ளவேண்டுமென்பதாய்க் கோவில் சீல்போட்டுவிட்டபடியால் கோர்ட்டில் பிராது செய்து விட்டோம்.

நா. காளியப்ப ஆச்சாரி.

*
* *

### நமது வாசகர்கள்.

#### பிழை திருத்தம்.

'விஸ்வகர்மரே ஆச்சாரியஜாதியார்' என்னும் புத்தகத்தில் கீழ்க்கண்ட அச்சுத்திருத்தங்கள் செய்துகொள்ள விரும்புகிறேன்.

40-வது பக்கத்தில்

இந்தப்பிரகாரம் இலங்கையிலிருக்கிற பூர்வீக தாம்பிர சிலகாசனங்களில் ஸா வென்னும் அக்ஷரமே உபயோகப்படுத்தப் பாடிருக்கிறது. இந்த வாக்கியத்தின்

| பிழைகள். | திருத்தங்கள். |
|---|---|
| சிலசாசனம் | சிலாசாசனம் |
| ஸா | சா |
| உபயோகப்படுத்தப்பா டிருக்கிறது | உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது |

41-வது பக்கத்தில்

| பிழை | திருத்தம் |
|---|---|
| Vijarajendra Acharyan | Vijayarajendra Acharyan. |

T. தங்கவேலு ஆச்சாரி.

*
* *

### சந்தா நேயர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

கனவான்களே!

எனது நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருக்கையில் நான் அன்னவரால் சொல்லக்கேட்டதைக் கேட்டு நான் கொண்ட வியாகூலத்தாலிதை எழுதத் துணிந்தேன்.



"பத்திரிகை உங்கள் ஜாதியார்க்கு வி. பி. யில் வந்தவுடன், வந்துவிட்டதா என்போர் சிலர், சென்ற மாதப் பத்திரிகை பிரிக்கவேயில்லை என்போர் சிலர், நாளைப் பெற்றுக்கொள்ளுகின்றேன் என்போர் சிலர், இன்டிமேஷனில் கை எழுத்திட்டவர்கள் 15, 20-நாட்களுக்குப் பின் பத்திரிகை இப்போது போய் வாங்கினால் கிடைக்குமோ என்போர் சிலர், கடைசியில் நாங்கள் பத்திரிகையைத் திருப்பி விட நேருகின்றது" என்று கூறினர்.

பத்திரிகையை தினம் 10 நிமிஷம் வாசிக்கலாகாதா? பத்திரிகைவந்த உடன் பெற்றுக்கொள்ள வழிதெரியாதா? இன்டிமேஷனில் (Intimation Form)கைஎழுத்திட்டுவிட்டு காலையில் எழுந்திருப்பதும், ஸ்நானஞ் செய்வதும் வேலை செய்வதும், மற்ற நேரத்தில் வம்புகள் பேசுவதுமாய் இருந்து வந்தால் போஸ்டாபீசில் 10 நாள் எப்போது ஆகும், அப்போது திருப்பிவிடவேண்டியது நமது வேலை என்று அவர்கள் திருப்பிவிட்டால், அப்பத்திரிகைகளின் காயிதச் செலவு, அச்சுக்கூலி, பைண்டிங் சார்ஜ், தபால் செலவு இத்தியாதி நஷ்டங்கள் பிரதிமாதமும் நேர்ந்தால் சபை எவ்விதம் நடைபெறுவது? சந்தாதாரர்கள் தொகை எவ்வளவுக் கெவ்வளவு விருத்தியாகின்றதோ அதற்குத் தக்கவாறே பத்திரிக்கையும் விருத்தியாகி மாத மாதம் வெளிவரும். ஆகையால் இவ்வித நஷ்டமடையாது சபையும் நடைபெற்று பத்திரிகையும் விருத்தியடைய பத்திரிகை வந்தவுடன் பெற்று சந்தாதாரர்களை விருத்தி செய்யப் பிரார்த்திக்கின்றேன்.

டி. தங்கவேல், வி. ச. சபை.

*
* *

### விதவா விவாஹம் ஏன் செய்யக்கூடாது?

விஸ்வகர்மஜாதியார் பால்ய விவாஹம் செய்யக்கூடாதென்று தெரிவித்துக்கொண்டிருந்தும் அதைக் கவனியாமல் அநேகர் சிறுகுழந்தைகளுக்கு விவாஹம் செய்துக்கொண்டு வருகிறார்கள். அவ்விதம் செய்து வருவதால் ஏற்படும் கஷ்டங்கள் அநேகமிருக்கின்றன. இங்ஙனம் விவாஹஞ் செய்யப்படும் பாலிகைகளிற் சிலர் ருதுவாவதற்கு முன்னும் ருதுவாகி கர்ப்பாதான முகூர்த்தம் செய்வதற்கு முன்னும் புருடனையிழந்துவிதவையாகிறார்கள். சாதாரணமாக கர்ப்பாதான முகூர்த்தம்நடந்த ஒருவாரம் முதல் ஒருவருடத்திற்குள் புருடனை யிழந்த விதவைகள் அநேகர் இருக்கிறார்கள்.

புருஷ சுகத்தை ஒருநாளும் அனுபவிக்காத குழந்தைகளுக்கு ஏன் மறுவிவாஹம் செய்யக்கூடாது? அப்படிச்செய்யச் சாஸ்திரமில்லையா? தற்காலம் நடந்துவரும் விவாஹ சடங்குகளில் ஒவ்வோர் பெண் குழந்தைக்கும் விவாஹத்திற்குமுன்னமே ஓர் புருடன் ஏற்பட்டிருப்பதாகவும், விவாஹகாலத்தில் அவனுக்கு ஏதோ சில திருப்திகள்செய்து விவாஹத்தைப் பூர்த்தி செய்வதாகவும், அதுவிஷயமாகத் தான் விவாஹகாலத்தில் காந்தர்வபூஜை முதலியன செய்வதாகவும், நாலாநாள் இரவு சேஷ ஓமமென்னும் சடங்கு செய்தபிறகுதான் நாகபலி போட்டு கட்டுகிறதென்றும், அப்பொழுதுதான் இந்தப்பெண் இவனுக்குச் சுதந்திரமாகிறாளென்றும் தெரிகிறது.

முன்னாளில் துர்க்குணமுடைய அரசர்காலத்தில் இந்துக்கள் வீட்டில் விவாஹமாகாத பெண்கள் ருதுவானால் துராக்கிருதமாக எடுத்துக்கொண்டு போகிற பழக்கமிருந்ததென்றும் விவாஹமான பெண்ணாயிருந்தால் அங்ஙனம் கொண்டுபோவதில்லையென்றும்; ஆகையால் அந்தப்பயத்திற்காகவே சிறுபெண்களாக இருக்கும்பொழுதே புருடனைத்தேடி விவாஹஞ்செய்துக்கொண்டு வந்தார்களென்றும் சொல்லப்படுகிறது.

அவ்விதப்பழக்கத்தை இப்பொழுதுள்ள நீதியான அரசர்கள் காலத்திலும் நடத்திவருகிறார்க

ளென்று கேழ்விப்படுகிறோம். சாதாரணமாக ருதுவான பெண்களைத்தான் விவாஹம் செய்ய வேண்டுமென்றும், விவாஹகாலத்தில் கர்ப்பாதான மந்திரங்களைச் சொல்லி சடங்குகள் செய்கிறார்க ளென்றும், விவாஹம் முடிந்தவுடன் தம்பதிகள் சஹிதம் அக்னிஹோத்ரம் செய்யவேண்டி யிருக்கிறதென்றும், புருடன்கூடவே பத்தினியும் பிரியாம லிருக்கவேண்டு மென்றும் சிறு பெண்ணாயிருந்தால் அங்ஙனமிருக்க முடியாதாதலால், ருதுமதி விவாஹமே சாஸ்திரோக்தமானதென்றும் கேள்விப்படுகிறோம்.

ஏற்கெனவே இவ்வித மிருக்கிறதென்றால் கண்ணுக்குத் தெரிந்து ஒரு பாவமுமறியாத இவ்விதகுழந்தைகளுக்கு ஏன் விதவாவிவாஹம் செய்யக் கூடாது? அப்படிச் செய்வதினால் என்ன கெடுதல் ஏற்படுகிறது? கன்னிகாதானமென்று சொல்வதே தவிர ருதுமதிதானமென்பதாகச் சொல்லுகிறபழக்கம் கிடையாது; சாஸ்திரோக்தமென்றால் கன்னிகைக்குத் தானென்றும், ருதுவானபிறகுசெய்யும் விவாஹத்திற்குச் சாஸ்திரம் கிடையாதென்றும் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். நம்மவர்கள் அநேகமாக ருதுவான பெண்களுக்குத்தான் விவாஹம் செய்கிறார்கள்.

புரோகிதர்கள் கூட சாஸ்திரவிதியை விசிதமாய்ச் சொல்லுகிறதில்லை அவர்களுக்குக் காசுவருவதானால், சாஸ்திரவிரோதமா யிருந்தாலும் சரியென்பார்கள். அவர்களுக்கு வரும்படி குறையுஞ் சமயத்தில் சாஸ்திரவிரோதமாகச் செய்யக்கூடாதென்றும், அதனால் தோஷமேற்படுமென்றும்சொல்ல முன்வருவது பழக்கம். இதற்குத் திருஷ்டாந்திரம் பாருங்கள் பிரியாணமான பிரேதத்தைத் தகனஞ் செய்யவேண்டியிருக்க, சமாதிசெய்துவிட்டு தங்கள்வரும்படிக்காகத் தகனகிரியைகளுக்குச் செய்யவேண்டிய கருமாதி சடங்குகளை யெல்லாம் செய்து பொருளைச் சம்பாதிக்கிறார்கள்

ஏகோதிஷ்டம், சபிண்டீகரணம், மாசிகம் முதலியவைகளும் செய்வதுதவிர ஒவ்வொருவர் வீட்டிலும் திதி கொடுக்கும்போது அன்ன ஸ்ரார்த்தஞ் செய்யவேண்டிய விதி யிருக்க, அதை இவர்கள்தெரிவிக்காமல் ஆமஸ்ரார்த்தஞ் செய்யும்படி பழக்கஞ்செய்து வைத்துவிட்டார்கள். அதன்காரண மென்னவென்றால் அன்ன ஸ்ரார்த்தஞ் செய்தால் இவர்களுக்குத் தக்ஷிணைதவிர சாமக்கிரியைகள் கிடைக்கமாட்டா. அவரவர்கள் பந்துக்களையே ஏற்படுத்திச் செய்துகொள்வார்கள் ஆமஸ்ரார்த்தமானால் இவர்களுக்குச் சாமக்கிரியைகள் வேஷ்டி முதலிய பலவித அனுகூலங்கள் ஏற்படுகின்றனவென்று தங்கள் மனம்போனபடி செய்துவருகிறார்கள். இதுபோல் எத்தனையோ தவறுதல்கள். இருக்கின்றன சாஸ்திரமென்பது ஓர்விதமா யிருப்பதாகத் தெரியவில்லை அவரவர்கள் அபிப்பிராயத்திற்குத் தக்கபடி செய்துகொள்வதாகத் தெரிகிறது. அதையறிந்து செய்துகொள்ளக் கூடியவர்களு மில்லை.

இவற்றை யெல்லாம் யோசித்துப் புருஷசுகத்தை அனுபவிக்காத விதவைகளுக்கு விவாஹம் செய்ய நம்மவர் முன்வந்தால் ரொம்பவும் சுகமாயிருக்கும். இதைப் பலரும் யோசித்து அதற்கென்று ஓர் கமிட்டி ஏற்படுத்தி அக்கமிட்டிக்கு வகுப்புவாரியில் சிலரை மெம்பர்களாகச்சேர்த்து அவர்களுடைய அனுமதியின்பேரில் தீர்மானஞ்செய்து முடித்தால் அதைக்கொண்டு அவரவர்கள் பந்துக்களுக்குத் தக்க சமாதானங்களைச் சொல்லி நடத்த முயலுவார்கள். இது ஓர் பெரிய புண்ணியமாகும். இதற்கென்று ஓர் நிதிஏற்படுத்தி உழைக்கவேண்டியது இக்கமிட்டியார்களின் கடமையாகும்.

இதுபோல் ஒவ்வோர்விவகாரத்திற்கும் தனித்தனி கமிட்டிகளை ஏற்படுத்திவிட்டால் அந்தந்த காரியத்தை அவரவர்களே பாடுபட்டு முன்னுக்குக் கொண்டுவருவார்கள். இவற்றையெல்லாம் மேல்பார்வை பார்ப்பதற்குச் சபையார்களிருக்கவேண்டும். ஊக்கமுள்ள மெம்பர்களைத் தெரிந்தெடுத்து சேர்க்கவேண்டியது சபையார்களின் முக்கிய கடமையாகும்.

விப்ரவகர்ம தலைபிபாலி.
23-2-1918.



* * *

## உத்தம உள்ளம்.

லோகத்தில் மனிதர்கள் பல்வேறு குணங்களை யடைந்திருக்கின்றார்கள். அவர்களிற் சிரேஷ்டமானவர்கள் பால் போன்ற குணமுடையவர்களே. ஜலமானது பாலினுடைய குணத்திற்கு மாறுபட்டதாயினும் அது தன்னுடன் சேர்ந்துள்ளதால் தன்னுடைய மதிப்பையும் கொடுத்து தனக்குக் கொடுக்கப்பட்ட பணத்தில் ஓர் பகுதியும் அதற்குச் சொந்தமாகும்படி செய்கிறது. பாலைப் பாத்திரத்தி லிட்டுக் காச்சுகையில் ஜலம் வற்றினவுடன் பால் (தனது மித்திரனைக்காணவில்லை என்று) சுற்றிவருகிறது. பாத்திரத்திற்கு மேல்புறம் வரை பொங்கி எட்டிப்பார்க்கிறது. அப்போது ஜலந்தெளித்தவுடன் தனது மித்திரன் வந்து சேர்ந்து விட்டான் என்று சாந்தமாகி விடுகிறது. இவ்வாறே பால்போன்ற குணமுள்ள உத்தமர்கள் பிறர் தம்முடன் ஒத்துவராமலும் தமது காரியாதிகளுக்கு இடையூறு செய்து தங்களை அவதூறு செய்தாலும் அவைகளை மனதினிற் கொள்ளாது அவர்களுடன் காலங்கருதிச்சேர்ந்து பாலானது தனது மித்திரனுடன் சேர்ந்து மனிதர்களுக்கு (உட்கொண்டவர்களுக்குச்)சுகத்தைக் கொடுப்பதுபோல் ஜாதியார்க்கு நன்மையான சுகத்தைக் கொடுப்பார்கள்.

சிலர் விளக்கெண்ணெய் குணத்தோடு கூடியவர்களா யிருக்கின்றார்கள். விளக்கெண்ணெய் வழவழப்பா யிருப்பதுபோல் அந்த குணமுடையவர்களும் வழ வழப்பாயிருப்பார்கள். தம்முடன் சேர்ந்து திரியும் அதன் (விளக்கெண்ணெயின்) மிகுதியால் சிறிதுநேரத்தி லில்லாதொழியும்; அவ்வெண்ணெயுடன் ஜலஞ்சேர்ந்தால் அது தன்னுடன்சேர்த்து தன்குணத்தைக் கொடுக்கக்கூடியதன்று; ஜலமும் எண்ணெயும் கலந்திராது, வேறாகத்தானிருக்கும். தன்னினமாகிய எண்ணெயுடன் கலந்து கொள்ளும், அவ்விதங் கலந்தாலுங் குணமில்லை. இதுபோன்ற குணமுள்ளவர்களுடன் யார் சேர்ந்தாலுங் கலந்திரார்கள். எண்ணெயும் ஜலமுஞ் சேர்ந்து எறிவதில் சடசடவென்ற சத்த முண்டாகும்; நன்றாய்ப் பிரகாச முண்டாகாது. இதுபோல் அவர்கள் நிகழ்ச்சியால் அமைதி யிராது. அது பிரகாசத்தையுங் கொடுக்காது, ஜலமும் எண்ணெயும் பிரிக்கப்பட்டகாலத்தில் தான் சுகமுண்டு.

தங்கள் காரியங்களுக்கு ஏற்றவாறு பரிசுத்த குணமுடைய பால்போன்ற உத்தமர்களின் சினேகத்தை அறிவாளிகள் நாடுவது நாட்டின் வழக்கம்-

“ஒல்லுங்கருமம் உடற்றுவர்கேண்மை
சொல்லாது சோரவிடல்”

என்ற திருக்குறள் 'சாரத்தை அனுசரித்து, இதுவரைநடந்த அசம்பாவிதமான காரியங்களை ஒருபொருட்டாய்க்கனவிலுங் கருதாது குல ஈடேற்றத்தில், “மெய்வருத்தம்பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார் எவ்வெவர்தீமையும் மேற்கொள்ளார் செவி அருமையும்பாரார் அவமதிப்புங் கொள்ளார் கருமமே கண்ணாயினார்” எனத்தகும் உத்தமசீலர்களாம் பால்போன்ற குணமுள்ள சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையார்களுடன் ஸ்ரீ கன்னியப்பாச்சாரி ஒத்துழைக்க வந்து சேர்ந்தது குலத்தினர் யாவரும் குதூகலிக்கத் தக்கதேயாகும். விஸ்வகர்ம குல விருத்திக்கு வித்தே யாகுமென்று சந்தோஷங் கொள்ளலாயினார்கள். இவ்விருவர்களும் குலோத்தாரணத்தைக் கருதி:எதையும்பொருட்படுத்தாதுகூடியது போல், இனி எக்காரணத்தாலும் பிரிவினைக்குரிய எவ்விஷயத்திலு மிடங்கொடாது ஒற்றுமையுடன் உழைத்து குலத்தை விருத்திசெய்வதில் ஈசனருள் என்றும் நிலைத்திடுக.

திருநெல்வேலி
**விப்ரவகர்ம சன்மார்க்க சபையார்.**

### சென்னை ஸ்பெஷல் விஸ்வகர்ம மகாஜன கான்பரன்ஸ்,

1918௵ ஜனவரி௴ 6௳ ஆதிவாரம் ஓர்கான்பரன்ஸ்சென்னையில் ஸ்பெஷலாய்க் கூட்டப்பட்டது இது விஸ்வகர்ம சிருஷ்டியே ஆகும்.

இந்த கான்பரன்ஸின் அழைப்புப் பத்திரம் வந்தகாலங்களை (தேதிகளை) கவனிக்கையில், கூப்பிட்டேன் என்று வந்துவிடாதே கூப்பிடவில்லை என்று கோபித்துக் கொள்ளாதே என்ற பழமொழிக்கு உதாரணமென விளங்குகின்றது. இதற்கு ஸ்பெஷல் கான்பரன்ஸ் என்று பெயர்—

(1) கான்பரன்ஸ் வழக்கம்போல் கூடும் காலமாகிய ஈஸ்டர் விடுமுறையில் கூடாததாலா? (2) கனம் இந்திய மந்திரி அவர்களும், இராஜப் பிரதிநிதி அவர்களும் விஜயமாவதற்கு முன்கூடி வேண்டிய நடவடிக்கைகளைச்செய்யாது கமிட்டியார் கடன்என்பதைக் கனவிலும் கவனியாது இப்போது கூடியதாலா? (3) ஜாதியார்களின் கொள்கைகளையும், அவர்கள் முன்னேற்றத்திற்குச் சாதகமானவைகளையும் நன்குணர்ந்த குலாபிமானிகள் ஜாதியார்கள் யாதொரு விகல்பமின்றிக் கூடவேண்டுமென்று கருதி வேண்டிய முயற்சிகள் செய்து கூடுவதற்கு முன் கூடவேண்டுமென்ற கூற்றினால் கூடியதாலா? (5) பிராமணரல்லாத கூட்டத்திற் கூடி அரசாங்கத்தார் அருவருக்கத்தக்க விஷயங்களில் தலையிட்டதைக் கண்டனஞ் செய்யக் கூடுமென்பதாலா? (அது விஷயமாய் ஒருவரியுமில்லையே) பின் எதற்காக 'ஸ்பெஷல்' கான்பரன்ஸோ தெரியவில்லை.

விஸ்வகர்மாக்களின் விருத்திக்குஆங்கில ஆட்சியே அவசியமென்பதை அனைவருக்கும் அறிவிக்கவா? (என்ன கருத்தோ கடவுளே அறிவர்) குறிப்பிட்ட 7 விஷயங்களுமிவைகளுக்குப் பிரத்தியேகமானவை. சுஜாதியர்கள் யாவரும் இக்கான்பரன்ஸில் சேர்ந்துள்ளதாய்த் தெரியவில்லை. ஆலோசனைக்குக் குறிப்பிட்ட முதல் (2) கல்வி, கைத்தொழில் விஷயமாய் சென்ற 3 கான்பரன்சுகளிலும் செய்த தீர்மானங்கள் தற்காலம் பேர்மானமா யிருப்பது ஜாதியார் பலராலும் விசனிக்கத் தக்கது.

சென்ற 3 கான்பரன்சுகளைக் கண்ணுற்ற அறிவாளி, நாடகசீனுக்கும் இதற்கும் யாதொரு வித்தியாஸமில்லை என்று கூறுவது நவீனமன்று. நாடகத்தைக் கண்ணுற்றவர்கள், நடை, வேட்ம், சங்கீதம், வீன் முதலியவைகளின் தன்மைக்கேற்ப புகழ்வதும் இகழ்வதும்போல கான்பரன்சைக் கண்ணுற்றவர்களும், இவர்கள் பேச்சில் தேவலாம், அவர் வார்த்தையில் வல்லவர், அவர்அழகேபோதும்; சாப்பாடு நன்றாய்ச் செய்தார்கள் என்று பலவிதமாய்க் கூறுவது விந்தையாகாது. தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள் சம்பந்தமாய் ஒரு ஏற்பாடுஞ் செய்யவில்லை என்பதற்கு தொழில் பத்திரிகையின் வியாஸங்களே சாட்சியாய் நிற்கும். ஸ்ரீ R. P. கோவிந்தசாமி ஆச்சாரி. அவர்கள் வியாஸமும் போதியசான்றாகும்.

ஜாதியார்க்குப் பாடுபடுகிறவர்கள் என்று பாராட்டப் படவேண்டுமென்ற கருத்துடன் 3 4 5 6 தீர்மானங்கள் அனாவசியமென்பதை நல்ல அநுபவமும், காலதேசப் போக்கைக் கைக்கொண்டுள்ள ஞானவான்கள் யாவரும் ஒப்புக்கொள்ளாது போவார்களா? 7-வது தீர்மானம் "ஆச்சாரி" பட்டவிஷயமாய்ப் பிறந்த உத்திரவைப் பார்வையிட்டதும் வேண்டியமகஜரைத் தயாரித்து கனம் கவர்னரவர்களைக் காண்பதை கவனியாதிருந்ததுமன்றி கனம் இந்தியாமந்திரியும், ராஜபிரதிநிதியும் சென்னைக்கு விஜயஞ் செய்வதற்குமுன் வேண்டியதைச் செய்து பேட்டிகாண்பதை விட்டும், அக்காலத்தில் பிராமணரல்லாத கூட்டத்தில் காலத்தைக் கழித்துவிட்டு இப்போது 3 4 நாட்களில் இவ்வளவு தடபுடலாய் என்ன கருத்துடன் கூடியிருக்கவேண்டுமென்பதை இதை வாசிப்போர்களே அறிந்துகொள்ளுங்கள்.

பிராமணரல்லாதவர்கள் கூட்டத்தில் பேசிய பிராமணரல்லாத ஓர் பகுதியினர்



என்ற வார்த்தைக்குக் காரணமாயிருந்தவர்களும், விஸ்வகர்ம மக்களுக்கு கனம் இந்தியாமந்திரி பேட்டி கொடுக்கவில்லை என்ற பிரஸ்தாபத்திற்குக் (கடைசியில்ஒரு விதமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது.) காரணமாயிருந்தவர்களும், இந்த வகுப்பினருள் பலபிரிவினையிருப்பினும் பொது விஷயங்களில் ஒரே அபிப்பிராயமுடையவர்கள் என்று வெகுநாளாய் கருதப்பட்டிருந்ததற்கு மாறாக இவர்களிலும் அபிப்பிராய பேதமுடையவர்களுளர் என்று கருதுவதற்குக் காரணமாயிருந்தவர்களும் இப்போது நடைபெற்ற ஸ்பெஷல் கான்பரன்சில் கலந்து பேசியிருக்கிறார்கள். இதில் பேசியவர்களைக் கவனிக்கையில்இவர்களும் இவர்களிஷ்டர்களில் சிலருஞ் சேர்ந்து கூடியதேயாகும். தங்களுடைய காரியம் நிறைவேற வேண்டுமென்றும், ஜாதியார்கள் நன்மையடைய வேண்டுமென்றும், நமக்குள் பரஸ்பர அன்னியோன்னியமும் ஏற்படவேண்டு மென்றும், மற்ற விஷயங்களில் நமக்குள் பேதமிருப்பினும், குலஈடேற்றமான பொது விஷயத்தில் யாதொரு பேதமில்லாதிருக்கவேண்டுமென்று கருதி நடப்பதே கண்ணியத்தையும் காருண்ய கவர்ன்மென்டாரின் கருணையையும் அடையக்கூடிய வழியாகும். இவ்வளவு சீக்கிரத்தில் இவ்வித ஏற்பாடு செய்தவர்கள் முன்பே செய்திருந்தால் ஜாதியார்களின் மதிப்பும், கவர்ன்மென்டாரின் கருணையையும் பெற்று ஜாதியார்கள் அனைவரும் சந்தோஷமடையக்கூடிய நிலையிலிருப்போமல்லவா? இனியேனும் குலாபிமான கனவான்களே! உண்மை கண்டு உன்னத வழிக்கிடமான உத்தமர் செய்கை செவ்வனே நடைபெற வேண்டிய வழியில் நின்று துணைபுரியுங்கள்.

**பொதுநலப்பிரியன்.**

6

### விவசாய விளக்கம்.

#### விற்பனைக்கு மஞ்சளைத் தயாராக்கல்.

அறுவிடையானதும் மஞ்சளைச் சாஸ்திரோக்தமாய் விற்பனைக்குத் தயாராக்காததினாலே அதிகபாகம் கெட்டுப்போகிறது. அதினால், பயிரிடும் குடிக்கு சிறிதுலாபம் கூட கிடைக்கிறதில்லை. மஞ்சள் பயிராக்குவது எல்லாருக்குந்தெரியும். ஆகையால், இங்கே இந்தியாவில் அநேக பாகங்களில் மஞ்சள் தோண்டியானதும் விற்பனைக்குத் தயாராக்கும் முறைகளை விவரிக்கிறோம்.

#### எப்போது தோண்டவேண்டியது.

பின்வருவது மஞ்சள் அறுவடைக்குக் காலமாயிற்று என்பதைத் தெரிந்துகொள்ளும்அடையாளங்கள். (1) இலைகள்மஞ்சள் நிறத்தைஅடைதல். (2) மட்டைகள் வணங்குதல்.(3) சிலஅடி இலைகள் உலர்தல். (4) முதிர்ந்த மஞ்சளுக்குரிய ஒருவித வாசனை வீசுதல். இதுவரைக்கும்ஏறக்குறைய சாதாரணமாய் 30 நீர் இறைப்பு ஆகவேண்டும். பயிர் முதிர்ச்சியை அடையும் கால அளவு 8-மாதம் பயிரிடுவோர் இந்தஅடையாளங்களை யெல்லாம் பார்க்கிறபோது நீர் இறைத்தலை நிறுத்திவிடுகிறார்கள். நிலம் உலரப் பார்க்கிறார்கள். இரண்டு வாரம் ஆனதும் நிலம் நன்றாய் உலர்ந்ததும் மஞ்சள் கொத்துகளைத் தரைமட்டமாய்ப் பிடித்து அறுத்துவிடுகிறார்கள். இலையோடு சேர்ந்த மட்டைகளை மஞ்சள் கொதிக்கவைக்கும் இடத்திற்கு எடுத்துக்கொண்டு போகிறார்கள். மஞ்சள் கொதிக்குஞ் சாலை மூடுவதற்கு அந்த இலைகளை உபயோகிக்கிறார்கள். அதிகநஷ்டம் ஒன்றுமில்லாமல இரண்டுவாரம் வரைக்கும் தோண்டப்படாமலே இருக்கலாம்.

#### தோண்டுதல்.

பயிரிடுவோர்களுக்கு மஞ்சள் கிழங்கை தோண்டத் தகுதியான அன்னியதேசத்து ஆயுதமாவது சுதேச ஆயுதமாவது இதுவரையில் இன்னதென்று தெரியவில்லை. மஞ்சள் கிழங்குகள் இந்த வேலைக்கென்றே செய்யப்பட்ட கை மண்வெட்டியால் வெட்டப்படுகின்றன. மனிதர்கள் தோண்டிக்

கொண்டே போகிறார்கள். பெண்பாலார் கிழங்குகளைக் கழுவுகிறார்கள். பலவிதக் கிழங்குகளாக அவைகளைப் பிரிக்கிறார்கள். (1) மறுவருஷத்திற்கு உபயோகப்படும் கிழங்குகள். (2) வேகவைத்து உலர்த்தி மஞ்சளாக்குவதற்கு உபயோகமானவை. (3) போனவருஷத்திய மஞ்சளில் நல்லன வா யிருப்பவை. (4) கோதாவி என்கிற மஞ்சள் கிழங்குகள்.

### இந்த விதங்களை எப்படிப் பிரிப்பது.

வேகவைத்தற்குஉபயோகமான மஞ்சள் கிழங்குகள் நீளமாயும், நிறத்தில் சிவந்த மங்கலாயும், மெதுவாயும், பளபளப் பாயு மிருக்கும். மஞ்சள் விரல்கள் சிதள்களால் மூடப்பட்டும் வெண்ணிற மான பொடியால் மூடப்பட்டு மிருக்கும். இவைகள் அநேகமாய் ரசப்பற்று யிருக்கின்றன. நல்ல மஞ்சள் வாசனையை வீசும். நடுவதற்கு உபயோகமான கிழங்குகள் உருளைக்கிழங்குபோல் திரண்டு உருண்டு மிருக்கும். செடியின் அடியில் ஒட்டிக்கொண்டிருக்கும். இவை மேடு பள்ளமாகவும் சிதள்கள் மூடப்பட்டுள்ளவையாயும் நீண்ட கொடிபோன்ற வேர்களால் நிறைந்தும் இருக்கின்றன. இந்த மஞ்சளின் உள்பாகம் வேகவைப்பதற்குள்ளமஞ்சளைக் காட்டிலும் நார்நிறைந்து இருக்கிறது. நிறம் சிவந்த மங்கல்நிறமாக இருக்கிறது. வேகவைப்பதற்குள்ள மஞ்சளைப்போல் அதிக ரசப்பற்றுள்ளவையல்ல. இவை மறுவருஷத்தில் நடுவதற்கு வைத்துக்கொள்ளப்படுகின்றன. முந்திய வருஷத்துக் கிழங்குகள் அதிக உபயோக மானவையல்ல. அதுவும் கொஞ்சமாய்தான்அகப்படுகின்றன. அவை கருத்த நிறமுள்ளன. வாசனையில் துர்க்கந்தமானவை. வேகவைக்கும்போது இந்தவித மஞ்சள் மற்ற மஞ்சளோடு சேராதிருக்கப் பார்க்கவேண்டும். அவைகள் சேர்ந்திருந்தால் தயாரான மஞ்சளின் விலை மிகக் குறைந்துவிடும். இந்தமஞ்சளை வழக்கமாய்த் தனியாக வேகவைக்கிறார்கள். இந்த மஞ்சளைத்தான் பந்தரா என்கிற பொடிசெய்வதற்கு உபயோகப்படுத்துகிறார்கள். வைதீகச் சடங்குகளுக்கு இந்தப்பொடியை ஏழ்மையான தாழ்ந்த ஜாதியார்கள் உபயோகிக்கிறார்கள். மறுவருஷத்தில் நடுவதற்கு வைத்திருக்கும் மஞ்சளை வேகவைக்கிற ஒருவருஷம் வரையில் பாதுகாப்பது தான் அதிக் முக்கியமான விஷயம். அதற்குள்ளாக மஞ்சள் மிகவும் நஷ்டமாய் விடுகிறது. அதைப் பாதுகாப்பதில் பயிரிடும் குடிகள் திருப்திகரமில்லாத விதங்களை உபயோகிக்கிறார்கள். பாதுகாக்க நல்லதொரு மாதிரியைக் கண்டுபிடித்தால் அதிகமாய் நேரிடும் நஷ்டத்தைத் தடுக்கலாம். இந்த விஷயம் எல்லாராலும் அதிக ஜாக்கிரதையாய்க் கவனிக்கத்தக்கது. வேகவைக்கப்படவேண்டிய கிழங்குகள் முதலில் கழுவப்பட்டு அடுப்பண்டை கொண்டுபோகப்படுகிறது. வேகவைக்கும் சால் அதற்கென்றே செய்யப்பட்டது. உருவத்தில் மிகச்சிறியதாயிருக்கிறது. அடிப்பாகத்தின் குறுக்களவு மூன்றுமுதல் நான்கடி வரையில் இருக்கிறது. அதின் உயரம் 18 அங்குலமுதல் இரண்டு அடிவரையிலிருக்கிறது. இந்த சட்டியில் வாம்பு வரையில் கிழங்கை நிரப்புகிறார்கள். நீர் கொட்டியானதும் எல்லாவற்றையும் மஞ்சள் சரகை மேலே பரப்பி மூடிவிடுகிறார்கள். சாலின் வரம்புவரையில் நீரைவார்க்கிறார்கள். சருகுக்குமேல் மண்பூசிக் காற்று போகாதபடி செய்துவிடுகிறார்கள். பிறகு வேக ஆரம்பிக்கிறது. பிறகு எப்படிபோடுகிறேமோ அதற்குத் தகுந்த மாதிரியாக வேவதற்கு ஒன்றுமுதல் இரண்டுமணி பிடிக்கிறது. மஞ்சள் வாசனை மேலெழுகிறதும், மெதுவாகி வளையத்தகுந்த நிலைமையை அடைதலும், நன்றாய்வெந்ததற்கு அடையாளங்கள்.

### கிழங்குகளை உலரவைத்தல்.

வெந்து ஆனதும் அதற்கெனத் தயாரிக்கப்பட்ட கடினமான தரையில் பரப்பி 4 முதல் 6 நாள்கள்வரையிற் காயவைக்கிறார்கள். அந்நாட்களில் சூரியன் நன்றாய்க் காயவேண்டும்.



### மேல்தோலை உரித்தெடுத்தல்.

தற்காலத்தில் இதற்கு யந்திரத்தை உபயோகிக்கிறார்கள். தற்காலத்திற்கு முந்தியும் தற்காலம்வரைக்கும் மேல்தோலை உரித்தெடுக்கும் தொழில் கூலிக்காரர்களால் ஆனது. அவர்கள் வெந்து உலர்ந்த மஞ்சளை உறுதியான மேடுபள்ளமுள்ள தரையிற் போட்டுத் தேய்த்தார்கள். இப்படித் தேய்ப்பதினால் மேல்தோல் நீங்குகிறது. மஞ்சள்கிழங்குகள் மஞ்சள் நிறத்தை அடைகின்றன. அப்போது விற்பனைக்குத் தயாரா யிருக்கின்றன.

### ஏற்காக மஞ்சள் வகைராக்கள்.

(1) கதாவி மஞ்சள். இது நடுவதற்கும் வேகவைப்பதற்கும் உபயோகப்படாததினால் பயிரிடும் குடிகளுக்கு உபயோகமற்றவை யாகின்றன. வேகவைப்பதற்கு முன்னே மற்ற மஞ்சளைவிட இவை தோற்றத்தில் நல்லவையாகக் காணப்பட்டாலும், அவை வெந்ததும் சுருங்கிப் போகின்றன. இதாமஞ்சள்களின் குணத்தையும் அழகையும் கெடுத்துவிடுகின்றன. நிறமும் நல்லதாயில்லை. ஆகையினால் புலங்களிலேயே இந்தவகை மஞ்சளைப் பிரத்தியேகப்படுத்த ஜாக்கிரதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

(2) யோகண்டி மஞ்சள். இவை தோற்றத்தில் கருப்பாயிருக்கின்றன. வேகவைக்கிறதும் தூளாக்குகிறதும் அதிகக் கஷ்டமாயிருக்கிறது. அவை பின்வருங் காரணங்களால் உண்டாகின்றன.

(a) மஞ்சளை அநேக நாள்வரைக்கும் வேகவைக்காமல் வைத்துக்கொண்டிருப்பதினாலே முளைகிளம்புவதற்கு ஆரம்பமாகிறது. (b) மஞ்சள் கடைசிவரையில் வேகாததினால் உண்டாகின்றது. (c) வெந்தபிறகு நன்றாய் உலர்த்தப்படாததினாலேயும் உண்டாகிறது.

### A. டேபில். முதற் செலவுகள்.

| விவரம்- ... | ஆயுதம். | ஆள்கள். | எருதுகள். | நாள்கள். | செலவுமொத்தம். |
|---|---|---|---|---|---|
| 1. உழுதல். | ஏர் | 2 | 6 | 3 | 10 8 0 |
| 2. முப்பதுமண்டி எரு. | ... | ... | ... | ... | 30 0 0 |
| 3. கொண்டுபோக நாளுக்கு | 3-வண்டி | 3 | 6 | 4 | 13 12 0 |
| 4. நிலத்தில் ஆட்டுக்கடை வைத்தல். | | ... | ... | ... | 5 0 0 |
| 5. புலத்தில் ஏர் பாத்திகோல | ஏர் | 2 | 6 | 1 | 3 8 0 |
| | | | | | 62 12 0 |

### B. டேபில். நடைமுதல் அறுவடை வரையில்.

| விவரம். ... | ஆயுதம். | ஆள்கள். | எருதுகள். | நாள்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| 1. கிழங்கை நடுவதற்கு தயாராக்குதல். | | 5 | | 3 | 4 11 0 |
| 2. 32-நீர் பாய்ச்சல் | கவலை. | 2 | 2 | 75 | 80 0 0 |
| 3. 4-களைபிடுங்கல் | | 8 | | 4 | 10 0 0 |
| 4. கவலை கயிறுமுதலியன | | | | | 10 0 0 |
| | | | | ஆ. ரூபா... | 104 11 0 |

### C. டேபில் அறுவடைமுதல் விற்பனை வரையில்.

| விவரம். ... | ஆயுதம். | ஆள்கள். | எருதுகள். | நாள்கள். | மொத்த செலவு. |
|---|---|---|---|---|---|
| 1. செடிகளைவெட்ட | | 4 | | 1 | 1 4 0 |
| 2. கிழங்குகளைத் தோண்ட | | 16 | | 1 | 5 0 0 |
| 3. கிழங்குகளைச் சுத்தமாக்க | | 20 | | 2 | 10 0 0 |

| | | | |
|---|---|---|---|
| 4. கிழங்குகளை வேகவைக்க (விறகு முதலியன) | 14 | 0 | 0 |
| 5. கடைத்தெருகொண்டுபோக வண்டி-1 4 2 2 | 5 | 0 | 0 |
| 6. சில்லரை செலவு | 5 | 0 | 0 |
| ரூபா... | 40 | 4 | 0 |
| மொத்த செலவுகள் | | | |
| A டேபில் ... ... ... ... ... ... ... | 62 | 12 | 0 |
| B ,, ... ... ... ... ... ... ... | 104 | 11 | 0 |
| C ,, ... ... ... ... ... ... ... | 40 | 4 | 0 |
| | 207 | 11 | 0 |
| மொத்த மரஞூல் 2800 பவுண்டு அல்லது 35 மணங்கு விலை ... ... | 300 | 9 | 0 |
| செலவு ... | 207 | 11 | 0 |
| லாபம் ... | 92 | 5 | 0 |
| சாதாரணமாய் மஞ்சள் அறுவடை ஆவதற்குள் ஒருதடவை சோளம் அறுவடை செய்கிறார்கள் அதின் விலை ... | 10 | 0 | 0 |

## முருகன் பாட்டு.

வீரத் திருவிழிப் பார்வையும்-வெற்றி
வேலு மயிலுமென் முன்னின்றே-எந்த
நேரத்திலு மெனைக் காக்குமே-அன்னை
நீலி பராசத்தி தண்ணருட்-கரை
யோரத்திலே புணை கூடுதே-கந்தன்
ஊக்கத்தை யென்னுள நாடுதே-மலை
வாரத்திலே விளையாடுவான்-என்றும்
வானவர் துன்பத்தைச் சாடுவான்.

வேடர் கனியை விரும்பியே-தவ
வேடம் புனைந்து திரிகுவான்-தமிழ்
நாடு பெரும்புகழ் சேரவே-முனி
நாதனுக் கிம்மொழி கூறுவான்-சூரர்
பாடு விடிந்து மகிழ்ந்திட-இருட்
பார மலைகளைச் சீறுவான்-மறை
யேடுதரித்த முதல்வனும்-குரு
வென்றிட மெய்ப்புக ழேறுவான்.

தேவர் மகளை மணந்திடத்-தெற்குத்
தீவி லசுரனை மாய்த்திட்டான்-மக்கள்
யாவருக்குந் தலையாயினான்-மறை
யர்த்த முணர்த்து நல் வாயினான்-தமிழ்ப்
பாவலர்க் கின்பங்கள் செய்குவான்-இந்தப்
பாரி லறமழை பெய்குவான்-நெஞ்சின்
ஆவ லறிந்தருள் கூட்டுவான்-நித்தம்
ஆண்மையும் வீரமு மூட்டுவான்.

தீ வளர்த்தே பழ வேதியர்-நின்றன்
சேவகத்தின் புகழ் காட்டினார்-ஒளி
மீ வளருஞ் செம்பொ னாட்டினார்-நின்றன்
மேன்மையினை லற நாட்டினார்-ஐய
நீ வளருங் குரு வெற்பிலே-வந்து
நின்று நின் சேவகம் பாடுவேன்-வர
மீவள் பராசக்தி யன்னை தான்-உங்கள்
இன்னருளே யென்று நாடுவேன்.

நின்றன்
வீரத் திருவிழிப் பார்வையும்-வெற்றி
வேலு மயிலு மென் முன்னின்றே.

சி. சுப்பிரமணிய பாரதி.

---

உ

சுபமஸ்து.

ஸ்ரீமத் விராட் விஶ்வகர்மணே நம:

# விஶ்வகர்மன்-தொழில்.

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள
சென்னை விஶ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.
301, தங்கசாலைவீதி, சென்னை.

சம்புடம்-5.] பிங்கள௵ மாசி௴ 1918௵ பிப்ரவரி௴ [சஞ்சிகை-2.

### ஒளிவளர் விளக்கு.

நமது பத்திரிகையின் மேற்பக்கத்தில் புதிதாய் அச்சிடப்பட்டிருக்கும் படம், சென்னைச் சித்திரவேலை வித்தியாசாலையின் உபதலைவரும், சித்திர சிற்ப சாஸ்திர விற்பன்னரும், விஶ்வகர்ம குல சிகாமணியுமாகிய ஸ்ரீ எம். வேலாயுத ஆச்சாரியாரால் வரையப்பட்டதாகும். ஆனால், அது நமது பத்திரிகைக்கென எழுதப்பட்டதன்று. எனினும், பொருத்தங்கருதி நாம் அதைக் கொள்ளவேண்டியதாயிற்று. இவ்வழியில் அவரிடம் நாம் எதிர் பார்க்கக்கூடிய சகாயத்திற்கு வரம்பில்லை. அவ்வளவுந் தருதற்குச் சித்தமான பேருள்ளமும் பெருங் கருணையுங் கொண்டு விளங்கும் பெருந்தகையராவ ரவர். அவருக்கு எமது அன்பார்ந்த வந்தனங்களை அக மகிழ்வுடனளிக்கின்றோம்.

*
* *

மகாராஷ்டிர தேசப் புனா நகரத்துப் பண்டித ஸ்ரீ பாலசாஸ்திரி க்ஷீரசாகர் அவர்களைப்பற்றி நமது சபையின் 17, 19 வது பிரசுரங்களில் 1912 வருஷத்தில் பிரஸ்தாபித்திருக்கிறோம. இம்மகாராஷ்டிரப் பளரோகித சிகாமணி, இக்குல கிரந்தசேகரார்த்தமாகப் புனாவிட்டுப் புறப்பட்டு மைசூர் பெங்களூர் சென்று சென்னைக்கு வந்து சுமார் ஒருவாரகாலந்தங்கிச் சென்றார். பண்டிதநாராயணசாஸ்திரி க்ஷீரசாகர் அவர்களால் மகாராஷ்டிர பாஷையில் எழுதி அச்சிடப்பட்டுள்ளதும், மூன்று பிரதிகள் கண்டதும், கல்கத்தா, ஹைதராபாத், டில்லி, ஆமதாபாத், பம்பாய்முதலிய இடங்களில் மிகவும் பரவிப் பிரக்யாதி பெற்றிருப்பது மாகிய "விஶ்வகர்ம குலோத்ஸாஹ" என்னும் நூலின் நான்காவது பிரதியை யச்சிடுஞ் சம்பந்தமாகச் சில பூர்வ கிரந்தங்களை யாராயும் நோக்கத்துடன் மைசூர் பெங்களூர் சென்னை யென்னும் மூன்றிடங்களிலுள்ள (லைப்ரரி) கிரந்தாலயங்களைப்பரிசோதிக்க இவர் புனாவிட்டுவந்தார். இக்குலமணிக்கு வந்தனோபசாரம் சபையாரால் தக்கவாறு செய்யப்பட்டது.

*
* *

ஜப்பான் தேசத்தில், நெசவு சாயத் தொழில் முதலியவைகளைச் சுமார் நான்கு வருஷங்கள் நன்குபயின்று, பல நெசவுச் சாலைகளைப் பார்வையிட்டும் சிலவற்றில் பழகியும், சென்ற வருஷத்தில் தென்னிந்தியாவுக்குத் திரும்பி வந்த தில்லையாடி ஸ்ரீ T. A. இராமசாமி ஆச்சாரியாரவர்கள்இப்போது ஷோலாபூர் நெசவுச்சாலை

யில் உத்தியோகத்தி லமர்ந்திருக்கின்றாரெ
ன்றறிந்து மகிழ்கின்றோம். இவரைப்
பற்றி எம்மை விசாரித்துவந்தவர்க ளெல்
லாம் ஷை சமாசாரமறிந்து சந்தோஷ
முறுவார்களென்றெண்ணுகிறோம். ஜன்ம
நாடு விட்டு, கைத்தொழில்களிற் பிரக்
யாதி மிக்கடைந்து விளங்கும் ஜப்பான்
தேசத்தில் தங்கி, அவ்வூராருடைய கைத்
தோழில் முறைகளையும் முயற்சிகளையும்
நேரிற்கண்டதனாலாய ஞானவல்லபங் கொ
ண்டு தமது குல ஜனங்களுடைய கவனத்
தைக் கைத்தொழில்களிற் செலுத்தி
அவர்களுக்கு இன்றியமையாத போதனை
தருவதில் ஷை நண்பர் இனிக் கவனஞ்
செலுத்துவாரென்று எதிர்பார்க்கிறோம்.

*
* *

எட்டு வருஷங்களுக்கு முன் நமது
சபைப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டது
முதல் நமக்கு விஷயதானஞ் செய்துவந்த
வித்வசிகாமணிகளும் லோகாநுபவஞான
பண்டிதர்களும் குலாபிமான சீலர்களும்
பழையபடியே விஸ்வகர்ம குலோத்தா
ரண சம்பந்தமானவும் தொழில் சம்பந்த
மானவுமான பல விஷயங்களைப் பற்றியும்
இடையருது வியாசங்களெழுதியளித்து
வரவேண்டுகிறோம். பொதுப்பட்டனவாய
விஷயங்களில் நமது வாசகர்களுடைய
கவனத்திற்குரியன சபையாரேலேயே கூ
டியவரையிலுஞ் சேகரித்துப் பிரசுரிக்கப்
படுமாதலால், வியாசமெழுதுவோர் குலத்
திற்கே உரியனவாகிய விஷயங்களைக் கை
யாளுதல் அவஸ்யமாயிருக்கிறது. நமது
பத்திரிகை மாதமொரு முறையே பிரசுர
மாகின்றதென்பதையும், வியாசங்களுக்
கெனப் பிரத்தியேக முற்றிருக்கும் பக்கங்
கள் ஒரு வரம்புக்குட்பட் டிருப்பதாலும்
மேற்குறித்த விஷயங்களைப்பற்றி எழுது
வதிலும் இயன்றமட்டும் சுருக்கமாயெழுது
தலும் அவஸ்யமாகிறது. பிரசுரம் பெருத
கடிதங்கள் வியாஸங்கள் முதலியவற்றின்
ஆசிரியர் எம்மீது ஆயாஸமுறல் நியாயமா
கத் தோன்றவில்லை. ஏனென்றால், எப்
போதும் விஷய அருமைமையும், அதன்
பிரசுர லாயக்கையும், இடசௌகரியத்தை
யுமன்றி மற்றென்றையாம் கவனிப்பதில்
லை, கவனிக்கமுடிவதுமில்லை. ஆகலால்,
நிருபநேயர்கள் எம்மீது ஆயாசங்கொள்ள
இடமில்லை. யாம் மேற்கொண்டுள்ள குலோ
த்தாரண காரியத்தில் எம்மை ஊக்கி வே
ண்டிய சகாயஞ்செய்து பக்கத்துணையா
யிருப்பதே அவர்கள் கடமையாகும். குலா
பிவிருத்தியைப் பற்றியும், பத்திரிகையின்
உபயோகாபி விருத்தியைப்பற்றியும் இன்
னோரன்ன விஷயங்களைப்பற்றியும் குலாபி
மானிகள் தெரிவிக்கும் நன்மொழிகள் வந்
தனத்துடன் எக்காலத்தும் ஏற்றுக்கொள்ள
ப்படு மென்பதில் எவருக்கும் சந்தேகம்
வேண்டுவதில்லை.

*
* *

திருநெல்வேலி வாசியும் குலாபிமானப்
பெருங் குணவானுமாகிய ஸ்ரீ டி. தங்க
வேலு ஆச்சாரியாரவர்கள் குலநலங் கரு
திச் செய்துவருங் காரியங்கள் பலவற்றுள்
நமது சபைக்கும் பத்திரிகைக்கு மளித்து
வருஞ் சகாயத்தை நாம் மிகவுங் கொண்
டாட வேண்டியவர்களா யிருக்கிறோம்.
இவர் சமீப காலத்தில் சுமார் 25 சந்தா
தாரர்களைச் சேகரித்துக்கொடுத்தனர். இவ்
வித முதவக்கூடிய குலாபிமானிகள் மற்ற
இடங்களிலும் முன் வருவார்களானால்
நாம் மேற் கொள்ளுங் காரிய மொவ்
வொன்றும் தடையூறுதபடி சாதிக்கலாமெ
ன்பதிற் சந்தேகமில்லை. இவர் போன்ற
சகாயிகள் தென்னிந்திய முக்கிய பட்ட



ணங்களிலாயினும் முதலில் முக்கியமாய்த்
தேவையா யிருக்கின்றனர். குல சிரேஷ்
டர்களில் எவரெவர் முன் வருவார்க
ளென்று ஆவலுடன் எதிர் பார்த்துக்
கொண்டிருக்கிறோம். குலோபகாரக் காரி
யங்களைச் செய்வதற்குப் பலர் வேண்டி
யிருக்கின்றனர். பலர் ஏற்பட்டாலன்றி
இவை திருப்திகரமாய் நடைபெற மாட்
டா. பிறஜாதிகளில் குலசகாய வழிகளில்
உழைப்போர் அநேகமா யேற்பட்டிருக்
கின்றனர். நம்மவர்களுள் அங்ஙனமின்னு
மேற்படவில்லை யென்பது மிகவும் விசன
கரமான விஷயம். மற்றையரினும் லௌ
கிக விஷயங்களிலும், தொழில் முயற்சி
களிலும், வித்தியா நிலைமையிலும், மற்ற
வகைகளிலும் நாம் மிகவும் பிற்பட்டிருக்
கின்றபடியால், மற்ற ஜாதிகளி லேற்பட்
டிருப்பதிலு மதிகமாக நம்முள் குல சகா
யிகள் ஏற்படவேண்டும். நவீன நாகரிக
முயற்சிகளை எங்கெங்கும் பரப்பி விஸ்வ
கர்ம ஜனங்கள் சீர்திருத்தத்திற்கான
மார்க்கங்களைக் கைப்பற்றும்படித் தூண்
டவேண்டும். வித்தியாநுகூலம் பெற
வும் நூதன தொழில்களைக் கை
யாளவும் போதிக்கவேண்டும். நமது
பத்திரிகையை நன்குவாசிக்கச் செய்ய
வேண்டும்; வாசிப்போருடைய எண்ணிக்
கையை அதிகப்படுத்தவேண்டும்; அங்
கங்கு காணப்படுங் குறைகளைப் பத்திரி
கைக் கெழுதவேண்டும்; நன்மைகளைப்
பிரகாசப்படுத்த வேண்டும்; தர்ம ஸ்தா
பனங்கள், வித்தியா நிலயங்கள் முதலிய
வற்றை நன்கு பராமரிக்க வேண்டும்.
இன்னோரன்ன பல சற்காரியங்கள் குலோ
பகாரார்த்தமாகச் செய்யவேண்டும். இங்
ஙனஞ் செய்தற்கே சகாயிகள் மிகவும் வே
ண்டப்படுகின்றனர். கல்வி பலம், பொ
ருள் பலம், அபிமானபலம், செல்வாக்கு
பலம், தேகபலம், ஸ்தானபலம் முதலிய
வாய்க் கொண்டாடப்படக்கூடிய பல
முடையாரெல்லாம் அந்தப் பலத்தைக்
குலமேனோக்க முயற்சிகளிற் செலுத்து
வான் சபையார்க்குச் சகாயஞ் செய்ய
மிகவும் வேண்டுகிறோம்.

*
* *

சென்னையில் நடத்த உத்தேசிக்கப்பட்ட
விஸ்வகர்மத் தொழிற்கான்பரன்ஸ் முயற்சி
கைசோரவிடப் படவில்லை யென்றறிய
யாவருஞ் சந்தோஷ முறுவர். இக்கான்
பரன்ஸ் கூடிய சீக்கிரத்தில் நடைபெறுமெ
ன்றே தெரிகின்றது. ஆனால், இது காரிய
சித்தி நோக்கத்துடன் நடைபெற வேண்டி
யதா யிருக்கிறதேதவிர, பேச்சோடு முடிவ
தற்காக நிகழ்த்தப்படத்தக்கதாயில்லை. இக்
கான்பரன்ஸின் முடிவு சென்னையில் கைத்
தொழிற்சாலை வர்த்தகசாலை வித்தியாநிதி
முதலியவற்றின் ஸ்தாபனத்துடன் சம்பந்
தப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய சம்
பந்தம் ஏற்படுவதற்கான வழிகளைநிச்சயித்
துக்கொண்டு அதற்கான முயற்சிகள் செய்
துகொண்டே கான்பரன்ஸை நடத்துவது
அவஸ்யமாகிறது. கைத்தொழிற்சாலையா
தியவற்றைப்பற்றி ஸ்ரீ கொ. கன்னியப்ப
ஆச்சாரியார் வெளியிட்டுள்ள விளம்பரத்
தை முன்னொரு சஞ்சிகையிற் பிரசுரித்
தோம். அதிற் குறிப்பிட்டுள்ள விஷ
யங்களைப்பற்றி தொழிற் பிரவேசமுள்ள
கனவான்கள் தங்க ளபிப்பிராயங்களை வெ
ளியிட்டு காரிய நிகழ்ச்சிக்கான மார்க்கங்
களைக் காட்டி உடனின் றுத்துழைத்
துக் காரிய சாதகஞ் செய்து குலத்தொ
ழில்களையும் குலச் செல்வத்தையும் குல
மதிப்பையும் பெருக்க வேண்டியவர்களா
யிருக்கிறார்கள். கால தாமதம் செய்தல்

நஷ்டத்திற்கும் கஷ்டத்திற்குமே ஹேதுவாகுமாதலால், மேற் கூறிய விஷயங்களைப்பற்றிய வியாசங்களை அடுத்துவருஞ் சஞ்சிகைகளிற் பிரசுரிக்கக்கூடியபடி குலாபிமானிகள் அனுப்பவேண்டுகிறோம்.

* * *

தொழிற் கான்பரன்ஸ் நடைபெறும்போது அதனோடு ஓர் தொழிற் பிரதர்ஸனமும் (எக்ஸிபிஷன்) நடைபெறவேண்டும். தொழில் திறமையை விளக்கக்கூடிய காக்ஷிகளை யமைக்காமல் ஏதோ பேசி முடிப்பதற்காக மட்டும் நாம் கூட்டங் கூடுவது சிலாக்கியமேயல்ல. இந்த அபிப்பிராயத்தைப் பல வருஷங்களாக யாம் வெளியிட்டு வருகின்றோமேனும் இப்போது முன்னிலு மதிகமாக வற்புறுத்திக்கூற விரும்புகிறோம். நமது தொழிற் காக்ஷியில் இருபகுதிக ளேற்பட வேண்டும். ஒரு பகுதியில் நமது குலஜனங்களால் செய்யப்படும் பல வஸ்துக்களும் வைக்கப்படவேண்டும். மற்றொரு பகுதியில் பிறராற் செய்யப்படுவனவும் உலகத்திற்கு வேண்டியிருப்பனவும் வைக்கப்படவேண்டும். இப்பிற்பகுதியே நம்மவர்களுக்கு அதிக உபயோகமா யிருக்குமென்பது எமது கருத்து. தாஞ்செய்யக் கூடியனவும் செய்யவேண்டியவையு மின்னவை யென்றறியாது நம் மக்கள் காலங்கழித்து வருவதனாலேயே விஸ்வகர்மத் தொழில்கள் விருத்தி பெறு தொழிகின்றன. அவற்றைப்பற்றி விஸ்வகர்ம ஜனங்களுக்கு அறிவிக்கத் தக்க சமயம் மேற்கண்ட தொழிற்காக்ஷியே யாகும். ஒவ்வொரு வஸ்துவும் உள்ளூரிலோ வெளியூரிலோ எங்கு செய்யப்படுகின்றதென்றும், என்ன கிரயத்திற்குக் கிடைக்கின்றதென்றும், எவ்வளவு ஏராளமாய் விலையாகின்றதென்றும்? செய்வோர்க்கு எவ்வளவு லாபந்தருகிறதென்றும் நம்மவர்கள் கண்கூடாக் காணும்படித் தெளிவிக்கப்பட வேண்டும். பொதுக் காக்ஷிகளுக்கு நம்மவர்கள் சென்றபோதிலும் அங்குள்ள வஸ்துக்களைக் காக்ஷிமாத்திரமாக அநுபவிக்கிறார்களே யொழிய, அங்கு பிரதர்ஸனஞ் செய்யப்பட்டிருக்கும் வஸ்துக்களைத் தொழிற்காரர்கள் கவனிக்க வேண்டிய முறையிற் கவனித்து அக்கவனத்தா லடையக்கூடிய கற்பனையைப் பெறுவதில்லை, பெறவேண்டுமென்னும் எண்ணம் அவர்களுக் குதிப்பதுமில்லை, உதித்தாலும் பெறுதற்கான சௌகரியங்கள் அவ்வளவாகக் கிடைப்பதில்லை. ஆதலால், நாம் தனித்துப் பொருட்காக்ஷிகள் நடத்த வேண்டும். இவை சிறு கிராமங்கள் முதல் பெரும் பட்டணங்களீறாகச் சகல இடங்களிலும் நடைபெறவேண்டும். இவைகளைக் கர்மகாரர்களெல்லாம் சென்று கண்டு படித்துவரத் தூண்ட வேண்டும். இவற்றாலடையக் கூடிய பிரயோஜன முழுவதுமாவது பெரும் பகுதியாவது உடனே அடையக்கூடியவாறு தொழிற் பொருட்காக்ஷிகளை யமைப்பது ஆரம்பத்திலேயே சாத்திய மாகாதெனினும் அதற்காக அஞ்சிக் காலஹரணஞ் செய்தல் தகாது; பெரும் பிழையுமாகும். ஆதலால், யாதானுமொரு விதமாக விரைவில் இவ்விதக் காக்ஷிகளை அமைத்தே தீரவேண்டும். அப்போது பிரதர்ஸனஞ் செய்தற்கான வஸ்துக்களை ஒவ்வொரு தொழிலாளியும் இதுமுதலே தயார் செய்ய ஆரம்பிக்கவேண்டும். தயார் செய்யப்பட்ட வஸ்து பாழ்போவதில்லை. எந்தப் பொருட் காக்ஷிக்கேனும் அனுப்பப்படலாம். அல்லது தக்க விலைக்கேனுங் கொடுத்துவிடலாம். ஆதலால், என்னென்ன வஸ்துக்களை எவ்வளவு லகுவில் செய்யலாமென்பதை நன்காலோசித்துக் கர்மகாரர்கள் வேலையாரம்பஞ் செய்வார்களாக. இங்ஙனஞ் செய்யப்படும் வஸ்துக்கள் பார்வைக்கு மாத்திரம் உதவுவனவாய் அழகுப் பொருள்களாகவும் விலை மிக்கனவாகவு மிருக்கச் செய்யாமல், தினப்படி உபயோகத்திற்கு யாவராலும் வேண்டப் படுவனவாகவும் சரச விலையுள்ளனவாகவும், பிறநாட்டு வஸ்துக்களிந்நாட்டி விரா தோட்டத் தக்கனவாகவு மிருக்கச் செய்தலே நன்றென்பதை நாமெடுத்துக் காட்டவும் வேண்டுமோ? இவ்வித வஸ்துக்களைச் செய்தலே நங்குலமக்களுடைய ஜீவனாதாரத்திற்கும், செல்வப் பெருக்கிற்கும் ஹேதுவாகும். இம்முயற்சியே குல உபயோகத்தை விருத்திகரிக்கும், குலத்தொழில் நாசத்தைத் தடுக்கும். விஸ்வகர்ம வம்ஸத்தினரை இந்திய நாட்டினரும் பிறரும் கொண்டாடும்படியான பூர்வஸ்திதிக்கு உயர்த்தக் கூடிய முயற்சி இதுவே. இதில் முக்கியமாய் நம்மவர்கள் கவனஞ் செலுத்தவேண்டுகிறோம்.



## ஜோஸ்யர் முத்து ஆச்சாரியார்.

மீனாக்ஷிபுரம் பிரம்மஸ்ரீ ஜோஸியர்முத்து ஆச்சார்யரவர்களின் பிரபாவ விளக்கம்.

பூமகட்கோர் திலகமென விளங்கும் சேர தேசத்தின் கண் மிகுந்த வளத்தையுடைய திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஸ்ரீமீனாக்ஷி யென்னும் அகிலமாதாவின் நாமத்தையே புனையப்பெற்று மங்களகரத்துடனிருக்கும் ஸ்ரீமீனாக்ஷிபுர மென்னும் திவ்விய நகரில் விசுவகர்மாவின் சந்ததியராயும், வடதேசத்தவராயும், ஆரியராயும், வேத வேதாந்த பாரகராயும், சோதிஷ சாஸ்திரத்தில் மிகத்தேர்ந்தவராயும், பரம்பரையாய் ஆதரித்த ஸ்ரீராஜராஜேசுவரியைப் பூஜித்து அத்தேவியின் அனுக்கிரகம் பெற்றவராயும், சத்தியசந்தராயும், நித்திய நைமித்திகாதி கர்மங்களைத் தவறாது செய்யும் ஆசார தற்பராராயும், கனதனவான்களாலும் அரசர்களாலும்பூஜிக்கப்பட்டவராயுமிருந்த பிரம்மஸ்ரீ ஆறுமுகம் ஜோஸியரவர்கள். இவர் தன் முதன்மனைவியிடத்தில் ருதுசாந்தி செய்து பன்னிரண்டுவருஷம்வரை புத்திரப்பேறில்லாது மிகவிசனமடைந்து விசேஷமாக சிவன், விஷ்ணு, அம்பிகை, கணபதி, சுப்பிரமண்யரென்னும் பஞ்ச தேவர்களைப் பூஜித்தும், ஆலயங்களுக்கு தம்பதி சமேதராய் கால்கடுக்க நடந்தும், தீர்த்தம் மூர்த்தி ஸ்தல முதலியவைகளைத் தரிசித்தும் அடியார்களுக்கு அன்னமருத்தியும், தான தர்மங்களைப் புரிந்தும் அநேகமான விரதங்களை யனுஷ்டித்து முடித்தும், சந்ததியில்லாதிருந்தனர். பிறகு பெரியோர்களாஞ்ஞைப் பிரகாரம், த்விதீய விவாஹஞ்செய்து அதிலும் சிறிது காலம் புத்திரப்பேறின்றி வருத்தமடைந்து, புத்திரனுண்டானால் அக்குழந்தையைக்கொண்டு சுப்பிரமண்ய ஸ்வாமிக்குக் காவடி கட்டி வைக்கிறேன், குழந்தை கையினால் பிடிபணக் காணிக்கை யிடுவிக்கிறேன், பிராம்மண போஜனம் செய்விக்கிறேன், என்று அநேகம் பிரார்த்தனைகளைச் செய்தும், தென் கைலாசமென்னும் சுசீந்திர ஸ்தலத்தில் மும்மூர்த்திகளுமோருருவா யெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ தாணுமாலயப் பெருமானை வழிபட்டும், தெருவீதியிலுருண்டு பிரதக்ஷிணம் செய்தும் ஐந்தாம் உத்ஸவம் விருஷபவாஹனத்தில் ஸ்வாமி யெழுந்தருளி யிருக்கின்ற சமயம், மனமுருகிக் கண்ணீர் ததும்ப ஹே ஸ்வாமின்! அடியேனுக்குப் புத்திர வாஞ்சை அதிகரித்திருக் கின்றமையால் இனிமேல் தாமசியாமல் புத்திரனைத்தந்தே தீரவேண்டு மென்று வழக்காடியும் வந்த அருந்தவப்பயனாய்த் தேவிக்கொத்த பொறையுடைய முத்தம்மா ளென்னும் தமது

த்விதீய மனைவியிடத்தில் சாலிவாஹன சகாப்தம் 1780ன் மேல் செல்லாநின்ற கொல்லம் 1345 காளயுக்தி வருஷம் ஐப்பசி மாசம் 11உ சுக்கிரவாரமும் விசாக நக்ஷத்திரமும் கூடின சுபதினத்தில் சிமந்தபுத்திரராக ஸ்ரீமுத்து ஜோஷியரவர்கள் பிறந்தனர்.

உடன் பிதாவானவர் தனக்கு வெகுகாலம் புத்திரப்பேறின்றி வருத்தமடைந்ததற்கும், தன் வமிச மீடேறும்படியாகவும், ஸ்ரீ தாணுமாலயப் பெருமானார் ஓர் ஆண் மகவாகத் தந்ததை நினைத்து நினைத்துப் பரவசமுற்று விதிப்படி ஜாதகர்மம்செய்து ஸுவர்ண தானம் பீஜதான முதலியவைகளைப் பெரியோர்களுக் கீந்தும், பின்னர் தன் மூதாதைகளின் நாமமாகிய முத்தென்னும் நாமத்தைச் சர்மமாகப் புனைந்தும், அன்னப்பிராசனம், சௌளம், வித்தியாப்பியாசம், ஏழாவது வயதில் உபநயனம் முதலிய கர்மங்களை விதிப்படி செய்வித்தும், முன் நியமகம் செய்து கொண்ட பிரார்த்தனைகளைச் சரிவரச்செய்து விவாஹத்தையும் செய்துவைத்தனர். தான் முன்செய்த அருந்தவப் பேற்றினால் ஸ்ரீ முத்து ஜோஷியரவர்களுக்குப் பின்னர் இரண்டு ஆண் மகவும் ஓர் பெண் மகவும் பிறந்தார்கள்.

இவ்வுத்தமர்க்கு ஐந்தாவது வயதில் வித்தியாரம்பம் செய்வித்தபின் முதலே கிரந்தம் தமிழ் முதலிய கல்விகளிற் றேர்ந்தும், வமிச பாரம்பரியமான ஜோதிஷத்தைக் கற்று அதில் பூகோள ககோள கணனங்களிலும், ஸ்புடகணனம், கிரகணகணனம், பஞ்சாங்க கணனம், அகணனம், மூல கணனம், ஆயுர்த்தாய கணனம் முதலிய கணனங்களில் அதி நிபுணராயும், சாதகம் பிரஸ்நம் முகூர்த்த முதலியவைகளிலும், சுருதி ஸ்மிருதி மீமாம்ச இதிகாச புராண முதலானவைகளிலும், மந்திர தந்திர யந்திர சாஸ்திரங்களிலும், சிற்ப சாஸ்திரங்களிலும், தேர்ந்து எந்த சாஸ்திரங்களிலும் அபவாத சித்தாந்த வசனங்களை யறிந்த விதாயக விதிகளைச் சொல்வதில் சாமர்த்தியமும் கூர்மையுமான புத்தியுடையவராயும், சாந்தராயும், சத்திய வசனமுடையவராயும், மாதா பிதா குரு இவர்களிடத்திலும், பந்துக்கள் குலத்தவர் இவர்களிடத்திலும் மற்றும் ஜனங்களிடத்திலும் அதிக அன்புடையவராயும், விவேகியாயும், கனதனவான்களாலும் உத்தியோகஸ்தர்களாலும் புகழ்ப்பெற்று க்யாதியடைந்து வருகின்றதையும், "இவன்றந்தை என்னோற்றான் கொல்," என்னும் வாக்கியப் பிரகாரம், உலகத்திற் சொல்லிக் கொள்வதையும் பார்த்து நாம் செய்த தவப் பயன் நிறைவேறிற்றென அகமகிழ்ந்து ஸ்ரீ. ஆறுமுகம் ஜோஷியரவர்கள் தனது 82-வது வயதில் பரமபதத்தை யடைந்தனர்.

ஸ்ரீ ஜோஷியர் முத்து ஆச்சார்யரவர்கள் பிதாவின் அந்திய கர்மங்களை விதி வழுவாது செய்தும், பின்னர் தன்னைப் பயந்த தாயினும் அதிகம் பாதுகாத்து அன்புடன் வளர்த்து வந்த ஸபத்தி மாதா அவர்களின் அந்திய கர்மங்களை முறைப்படி செய்தும், சகோதரர்களிடத்தில் அதி வாத்ஸல்யமும் அருமையும் பாராட்டி ஒருவர்க் கொருவர் சிநேக பாவமாய் நாளது வரை ஐக்கியமாகவே யிருக்கின்றனர்.

இவை நிற்க-இப்புண்ணிய புருஷோத்தமர் தமக்கு விதித்திருக்கும் நித்திய நைமித்திக கர்மங்களில் சிரத்தையுடன் வழுவின்றி நடத்துவதிலும் பரதேவதையைப் பூஜை செய்வதிலும் அதிக அன்பும் பிரியமுள்ளவர். வமிச பாரம்பரியமா யிருக்



கின்ற ஜோதிஷத்தையே தனக்கு பிரவிர்த்தியாக வைத்துக்கொண்டும், கணனம் முகூர்த்தம் சாதக பலன் பிரஸ்னை முதலியவைகளைக் கற்கும் மாணாக்கர்களுக்குச் சிரமமின்றிச் சொல்லி வைத்துக்கொண்டும் இருப்பதற்கே தினசரி இவர் நேரம் சரியாயிருக்கின்றது.

பிரபுக்களும் ஜட்ஜி கலெக்டர் முதலான உத்தியோகஸ்தர்களும் சமயம் பார்த்து இவரால் சாஸ்திர விதாயகமான விஷயத்திற் கூறும் ஒவ்வொரு வார்த்தைகளையும், இது ஹைகோர்ட்டு விதி யென்றே கேட்டு அதின் பிரகாரம் ஆராதித்தும் அநுஷ்டித்தும் வருகின்றார்கள். அப்பிரபுக்கள் முதலானவர்களாற் பூஜிக்கப் பெற்றும், ஒவ்வொரு கர்மங்களில் ஜோதிஷ விஷயமாய் முதல் தாம்பூலமும் தக்ஷிணையும் பெற்று வருகின்றனர்.

தன் குலத்திற்காக விதித்திருக்கும் நூல்களையும், சிற்ப சாஸ்திரங்களையும் பார்ப்பதிலும் அவைகளைச் சேகரிப்பதிலும், இவர் அதிக ஆவலுடையவர் அவைகளின் சாராம்சங்களை யெடுத்து உபந்யாசம் செய்வதிலும், பத்திரிகை வாயிலாக வெளியிடுவதிலும் அதிக உத்ஸாஹப் பிரியர். ஜோதிஷ விஷயமாயும், குலவிஷயமாயும், சிற்ப சாஸ்திரவிஷயமாயும், வைதீகவிஷயமாயும், மந்திர தந்திர யந்திர சாஸ்திர விஷயமாயும், அநேக கிரந்தங்களைச் செய்திருக்கின்றனர்.

குலத்தின் நன்மைக்காகப் பாடுபடுவதில் இம்மஹானைப் போன்றவர் இவ்வுலகத்தில் வேறு யிருக்கின்றார்களோ வென்று தான் சந்தேகிக்க வேண்டியதா யிருக்கிறது. சதாகாலமும் குல சம்பந்தமான கிரந்தங்களை எழுதிக் கொண்டும், தன்னிடம் குல விஷயமாயும், மற்ற சாஸ்திரங்கள்விஷயமாயும், கேட்பவர்களுக்குத் தனக்குத் தெரிந்த நியாயங்களை யொன்றொழியாது கூறியும், எழுதி யனுப்பியும்தன் குல விஷயமான கிரந்தங்களின் அபிப்பிராயங்களையும், ஆசாரங்களையும், யாவருமறிந்து சீர்திருத்தம் பெறவேண்டு மென்னும் விருப்பத்தால் குண்டூர் விஸ்வப்பிராம்மண மஹாஜன ஸபா, தணுகு மஹாஜன ஸபா, சென்னை மஹாஜன சபா, திருச்சி மஹாஜன சென்ட்ரல் ஸபா, குடந்தை மஹாஜன கான்பரன்ஸ் முதலிய விசுவகர்மஸபைகட்கும், வடதேச தென்தேச விசுவகர்ம வித்வத் மஹா ஜனங்கட்கும், கைசலியாதெழுதி யனுப்பிக் கொண்டும், இந்தப் பிரகாரம் தன் குடும்பாவசியங்களையும் திரவிய வருமானங்களையும், தேக வலிமையையும் பாராது இக்காலத்தில் குலாபிமானத்தாலுழைப்பவர்களைக் காண்பதரிதா யிருக்கின்றமையினால்இவரைப்போல வேறொருவருளரோ வென்னும் சந்தேகத்திற் கிடமாகிறது.

மேலும் இப்பெருந்தகை, தன்குலம் முன்னேற்றமடைய வேண்டுமானால் வித்தியா சம்பத்தை யடைந்தாலன்றி மேன்மைபெறா தென்னும் எண்ணத்தைக் கொண்டும், கல்வியையும், அதினால் சிரேஷ்டத்தையும், அறிவையும், ஆசாரத்தையும், அடைவதற்கு சபையையன்றி வேறொன்றினால் அக்காரியம் முன்னேற்ற மடையாதென மதித்தும், தன்னிருப்பிடத்திற்குச் சமீபமாயும் விசுவகர்ம ஜனப்பெருக்கமுடையதாயிருக்கின்ற வடசேரி யென்னும் ஸ்தலத்தில் பெருமுயற்சியுடன் விசுவகர்ம சங்கமென்ற தோர்சபையை ஸ்தாபித்தனர்.

விசேஷமாக ஜோதிஷர்கள் அபூர்வசாஸ்திரங்களைக் கற்கவும் கேட்கவும் அவைக

ளைப் பிரசங்கம் செய்யவும் ஒருவர்க்கொருவர் சாஸ்திர அபிப்பிராயங்களுக்குப் பேதமாக வெண்ணிக்கொண் டிருக்கும் முரண்களைக் கண்டிக்கச் செய்யவும் வேண்டியவைகளை உபந்நியாச மூலமாய் யாவருமறிந்து முன்னேற்றத்திற்கு வரும்படியாக ஜோதிஷசங்க மென்னுமோர் சபையை ஸ்தாபித்திருக்கின்றனர்.

இக்குலாபிமானியார் 1911ஆ செனஸஸ் காலத்தில் விசுவகர்மகுலத்தின் விருத்தாந்தங்களைச் சென்ஸஸ் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டுமென்னும் குலாபிமானப் பெருக்கால், சுருதிஸ்மிருதி சிற்ப இதிகாச புராணநிகண்டு முதலானவைகளிலிருந்தும், அநேக வசனங்களைக் கோடிகரித்தெழுதி இதற்கு விசுவப்பிராம்மண வமிசப்பிரகாசிகை யென்னும் பெயர் கொடுத்து, இதுவும் இத்துடன் விண்ணப்பங்களுமெழுதி சென்னை கனம் ஸென்சஸ் சூப்பிரெண்டெண்டு துரையவர்களுக்கு ரெஜிஸ்தர்செய்தனுப்பியும், திருவாங்கூர் சமஸ்தானம் கனம் ஸென்சஸ் கமிஷனர் அவர்களிடம் நேரிற் கொடுத்து மிருக்கின்றனர்.

இப்புருஷோத்தமர் வைதீக விஷயங்களைக் கற்பவர்களுக்குச் சொல்லிவைப்பதேயன்றி அவைகளைச் செய்து வைப்பதில்லையென்றிருந்தாலும், திருநெல்வேலி விஸ்வகர்ம மஹாஜனங்கள் விருப்பத்துடன் வேண்டிக் கொண்டதற்காக பௌரோஹித்திய விதியான மந்திரதந்திரங்களில் தனக்கொருவரும் நிகரில்லையென்று சொல்லும்படியாக, திருநெல்வேலி பரசமயகோளரிநாத ஸ்ரீ ராஜரத்நஸ்வாமியவர்கள் விவாஹோத்ஸவத்தைநடத்திஷியார்களின் கிரீடதாரணத்திற்கு யாகசாலை போஜனசாலை ஹோமகுண்டங்கள் வேதிகைகள் அபிஷேகமண்டபம் கிரீடதாரண மண்டபம், முதலியவைகளை விதிப்படியமைத்து, ரித்துவிக்குகளுடனும், கணங்களுடனும் வேதாகம சம்மேளனமாய் சமஸ்தமான ஜனங்களும் இம்மஹோத்ஸவத்தைப்போல யாம் கண்டதில்லை யென்று சொல்லும்படியாகத் தான் ஆச்சார்யராயிருந்து நான்கு தினமாக இக்கிரியைகளை விதிப்பிரகாரம் மந்திரதந்திர லோபமின்றி சரிவர நடத்திப் பின்னர் குரு மஹா அபிஷேகத்தைச் செய்தும், பெரியோர்களுடன் கிரீடத்தைச் சூட்டியு மிருக்கின்றனர்.

அன்றியும், வைதீகவிதியில் மிகவும் சிறந்ததா யிருக்கின்ற சிரௌதவிதியும் இப்பெரியார்க்குத் தெரியுமென்று சொல்ல வேண்டியதா யிருக்கிறது. அதாவது ஸ்தலம் மூர்த்தி தீர்த்த முதலியவைகளைத் தெரிசிக்கும்படி திருப்பதி காளஹஸ்தி அருணாசலம் சிதம்பர முதலிய அநேக ஸ்தலங்களுக்குப் பதின்மூன்றுபேர்களுடன் யாத்திரைசெய்தசமயம் ஸ்ரீ குடந்தைக்கு வந்து ஷை நகரில் குரோதிஆ ஸ்ரீ சதாசிவ உபாத்தியாயரவர்களும் ஸ்ரீ மார்க்கசகாய உபாத்தியாயரவர்களும் ஆச்சார்யராயிருந்து செய்துவைத்த ஸோமயாகத்தின் அவ்விருத ஸ்நாநத்தன்று யாகத்தில் உத்காதா அத்வரியு ஹோதா பிர்ம்மா முதலான ரித்துவிக்கள் கணங்கள் இவர்களின் கர்மங்களையும், வேதிகை குண்டம் யாகசாலை பத்நிசாலை போஜனசாலை யூபஸ்தம்பம் ஸோமலதை முதலியவைகளின் லக்ஷணங்களையும், அவைகளிற் செய்யப்படும் மந்திரதந்திரங்களையும், தேவர்கள் ஆஹ்வாநாதிகளையும், அதின் பிரயோஜனங்களையும் பலன்களையும், இவைகளின் அபவாத சித்தாந்தங்களையும், சிரௌதவிதிப் பிரகாரம் உபந்நியாசம் செய்தும் விசுவகர்மாக்களின் யாகாதிகாரம் வேதாதிகாரம்



உபநயனாதிகார முதலியவைகளின் நியாயங்களை, சுருதிஸ்மிருதி இதிஹாஸசிற்பபுராண நிகண்டுகளின் விதிப்படியெடுத்துக்காட்டியு மிருக்கின்றனர்.

மேலும், இக்கனவான் அநேக புருஷார்த்தங்களை யடைந்திருக்கின்றனர். அதாவது, ஸ்ரீகாசி, பிரயாகை, கயை, ஸேதுமுதலியவைகளுக்குச்சென்று ஸ்நானஞ்செய்து மூர்த்தி ஸ்தலமுதலியவைகளைத் தெரிசித்தும், பிதுர்க்கடன்களை நிறைவேற்றியும், வித்தியாப்பியாசங்கள், தர்ம ஸ்தாபனங்கள், யாசகங்கள் முதலியவைகளுக்கு வேண்டும் பொருளுதவிகளைத் தன்னாலியன்றவரையில் பல ஜனங்களுக்குச்செய்து அதினால் கியாதியடைந்து வந்திருக்கின்ற புண்யவானாயு மிருக்கின்றனர்.

இந்தப்பிரகாரம் நம்குலத்தில் ஜோதிஷ முதலிய சாஸ்திரங்களில் தேர்ந்த வித்வத்ரத்நமாயும், குலாபிமானப் பெருங்கடலாயும், குலத்திற்கோர் மணியாயும், தயைக்கோர் பாத்திரமாயும், புத்திர பௌத்திர சம்பத்தோடிருக்கின்ற இப்புண்ணிய புருஷோத்தமர் இன்னும் நெடுங்கால மிருந்து செல்வத்தையும், யஜஸ்ஸையும்பெற்று நம் குலமுன்னேற்றத்திற்கு வேண்டும் உதவிகளைச் செய்யும்படியாக நாமெல்லோரும் ஸ்ரீ விராட் விஸ்வகர்மாவைச் சதா பிரார்த்திப்போமாக.

இவை, நான் யாத்திரை செய்த காலத்தில்நேரிலும் பல ஆதாரங்களாலும் தெரிந்துகொண்ட விஷயங்கள்.

**கோ. கன்னியப்ப ஆச்சாரி,**
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை.

---



## வேதங்கள்.

'வித்' என்னுந் தாதுவினின்று தோன்றியது வேதம், தெரியச்செய்வதாதலால் வேதம் எனப்பட்டது. வேதம் ஆதியில் கடவுளால் பிரமதேவனுக் குபதேசிக்கப்பட்டு, பிரமதேவனால் மகரிஷிகளுக் குபதேசிக்கப் பட்டதென்பர். ஷை ரிஷிகள் சிஷ்யர்களுக் குபதேசித்தனர். சோமுகாசுரன் வேதங்களைத் திருடிக்கொண்டு கடலில் ஒளித்துக்கொண்டபோது, மகாவிஷ்ணுவானவர் மச்சாவதாரங்கொண்டு அந்த அசுரனைச் சங்காரஞ்செய்து வேதங்களைக் கொண்டுவந்து பிரமதேவனிடங் கொடுத்தார். வேதங்கள் எழுதப்படாமல் உபதேசக் கிரமமாகவே எழுதாக்கிளவி யென்னும் பெயரால் விளங்குகின்றன.

வேதங்களானவை காலாகாலங்களில் ஒவ்வொருவரா லெழுதிச் சேர்க்கப்பட்டன வென்னுங் கொள்கையாளர் பலரிருக்கின்றனர். இதற்குத் திருஷ்டாந்தமாக, விசுவாமித்திரர் ருக்வேதத்தின் மூன்றாங்கண்டத்திற் சில கீதங்களும், பாரத்வாசர் அதின் ஆறாவது கண்டத்திற் சில கீதங்களும், வசிட்டர் அதின் ஏழாவது கண்டத்திற் சில கீதங்களும், வாமதேவர் அதின் நான்காங் காண்டத்திற் சில கீதங்களும், இப்படியே அகத்திய ஆங்கிரச கஸ்யப ஜமதக்னி பராசர கௌதம கண்ணுவ மேதாநிதி சுநச்சேபாதியர் வேதங்களிற் சிற்சில கீதங்களை இயற்றிய கர்த்தாக்களாக விளங்குகின்றார்கள். வேதத்தில் கர்மகாண்டம் உபாசனாகாண்டம் ஞானகாண்டமென மூன்று பிரிவுக ளிருக்கின்றன.

கர்மகாண்டம்- இகபரசுகங்களுக்கேற்ற கர்மாநுஷ்டானங்களை நடத்தும் பத்ததிகளையும், அசுவமேதம் வாஜபேய முதலிய

யாகங்களைச் செய்யும் விதங்களையும் இவற்றைச் செய்வதா லுண்டாகும் பலன்களையுஞ் சொல்லுவது.

உபாசனாகாண்டம் - பரமேஸ்வரனிடத்தில் பக்திசெய்யும் விதத்தையும் அப்படிச் செய்வோரடையும் பயனையுங் கூறுவது.

ஞானகாண்டம் - தத்துவ ஞானத்தால் பிரமஞானத்தை யடையு மார்க்கத்தையும் அதனாலுண்டாகும் பிரயோஜனத்தையும் போதிப்பது.

அன்றியும், பிராமணமென்றும் மந்திரமென்றும் ஆரணியகமென்றும் மூவகையாயுள்ளது. பிராமணமாவது - பிரமஞானிகளநுஷ்டிக்கவேண்டிய விதிகள். மந்திரமாவது - பகவான் முதலியவர்களைத் துதிக்குந் தோத்திரங்கள். ஆரணியகமாவது-ரிஷிகள் ஆரணியங்களில் பகவானைத் துதிசெய்த பாகங்கள். ரிஷிகள் கேட்டவை மந்திரங்களென்றும், ரிஷிகள் தெரிந்துகொண்டவை பிராமணங்களென்றுங் கூறுவாருமுண்டு. ஆரணியகங்கள் பிராமணங்களுக்கு உரை போன்றவை யென்பது சிலர் கருத்து.

ருக்வேதத்திலுள்ளபிராமணங்கள் ஹோதாக்களுக்கும், யஜுர்வேதத்திலுள்ள பிராமணங்கள் அத்வர்யுக்களுக்கும், ஸாமவேதத்திலுள்ள பிராமணங்கள் உத்காதாக்களுக்கும் உரியவிதிகளைப் போதிக்கின்றன. ஐதரேய பிராமணம், கௌஷீதகீ பிராமணம், தைத்திரீய பிராமணம், கோபதபிராமணம் என்னும் இப்பிராமணங்கள் ஆரியர்களுடைய ஆதி வசன காவியங்களென்று சிலரெண்ணுகிறார்கள். மேலே சொல்லிய பிராமணங்களும் ஆரணியகங்களும் உபநிஷத்துக்களிற் சேர்ந்தவை.

பிராமணங்கள் மந்திரங்கள் ஆரணியகங்கள் உபநிஷத்துக்கள் முதலிய வெல்லாம் முதலிற் பிரிக்கப்படாமல் ஒன்று யிருந்தபடியால் அத்தியயனம் செய்பவர்களுக்கு கஷ்டமாயிருந்ததினால்வியாஸமுனிவர் ருக் யஜுர் சாமம் அதர்வணமென நான்காகப் பிரித்தனர்.

**ருக்வேதம்** - ருக்கென்பது பரமாத்மாவைத் துதிக்கும் மந்திரம். இது அதிகபழமையானதென்பதும் சுமார் 3000 வருடங்களுக்குமுன்னமே இதன் வாக்கியம் பதம் முதலியன கணக்கிடப்பட்டனவென்பதுஞ் சிலர்கொள்கை. இது 10-மண்டலங்களும், 1,53,326 காவியங்களும், 4,32,000பதங்களும் அடங்கியுள்ளதாம். இதின் முதலே மூமண்டலங்களில் பரப்பிரமத்தை அக்கினியென்னும் பேராலும், பத்தாவது மண்டலத்தில் இந்திரனென்னும் பெயராலுந் துதித்து மற்றையகீதங்களில் விசுவேதேவரென்னும் பெயரால் துதிசெய்யப்பட்டுள்ளது. எட்டாவது ஒன்பதாவது மண்டலங்களில் பிரதானமான கீதங்கள் பரப்பிரமத்தைத் துதிக்கின்றன. எட்டாவது மண்டலத்தில் 92-கீதங்களும் ஒன்பதாவது மண்டலத்தில்114-கீதங்களுமிருக்கின்றன. இவற்றில் சில சோமலதையைப்பற்றிப் பிரார்த்திக்கின்றன. இப்பத்து மண்டலங்களில் 100க்கு மேற்பட்ட அநுவாகங்களிருக்கின்றன.

இவற்றில் கீதங்களையெழுதின ரிஷிகளின் பெயர்களும், எத்தேவரைக்குறித்தெழுதப்பட்டன வென்பதும், விசதமாமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. 1-மண்டலம் 15-ம் அத்தியாயத்தில் குத்ஸன் திருதனைக்கூடிய கீதங்களும், சில தவசிகள் வனத்திற்போய்க் கொண்டிருக்கையில் நீர் வேட்கையினால் ஒருவன் ஒரு கிணற்றிலிறங்க வேறொருவன் வண்டியின் சக்கரத்தால் அக்கிணற்றைமூட, உள்ளேயிருந்தவன் பரிதாபத்துடனே பிரார்த்தித்த கீதங்களும், 23-ம் அத்தியாயத்தில் அகஸ்தியர் இந்திரன் முதலானவர்களுக் குண்டான சல்லாபங்களும், 24-ம் அத்தியாயத்தில் அகஸ்தியர் துதிசெய்த கீதங்களுமிருக்கின்றன. இப்படியே 7-மண்டலம் 3-ம் அத்தியாயம் 8-ம் பிரகரணத்தில் வசிஷ்டர் விஷவேதனை விலகும்படிப் பிரார்த்தித்துள்ளார். 3-ம் மண்டலம் 5-ம் அத்தியாயத்தில் விசுவாமித்திரர் செய்த பிரார்த்தனைகளும், கடைப்பட்ட கீததில் ஆறுமந்திரங்களி லொன்றில் பரமாத்மாவை ஓங்கார காயத்திரியாகத் துதிக்கப்பட்டதுமாயுள்ளது. 6-ம் மண்டலம் 3-கீதைகளில் பரமேஸ்வரனைச் சூரியனென்னும் நாமத்தால் துதித்தவையும், மழைநிமித்தமாக வசிட்டர் துதித்தவையுங் காணப்படுகின்றன. 7-ம் மண்டலம் 3-ம் அத்தியாயத்தின் கடைசியில் ஆரியர் ஆதியில் கிருகங்களை நிர்மித்தபொழுது துதிசெய்த மந்திரங்களிருக்கின்றன. 4-ம் அத்தியாயத்தில் ருத்திரபகவானைத் துதிக்கப்பட்டுள்ளது. அன்றியும், இம்மண்டலத்தினிறுதியில் ஆதிகாலத்து அரசர் சரிதைகள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன. 8-மண்டலம் 27-ம் அத்தியாயத்தில் ராஜபட்டாபிஷேகச் சடங்கியற்றும் விவரங்களும், 3முதல் 38வரையிலுள்ள அத்தியாயங்களில் இந்திரன் தேவர்களைவர்ணித்த வகைகளும், 34-ம் அத்தியாயத்தில் பயபக்திகளுண்டாவதற்குக் சாதனமாகிய கர்மங்களும், 4-ம் அத்தியாயத்தில் புரோகிதர் ஆசாரியர் இவர்களுடைய லக்ஷணங்களும், அவர்களுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளும், விவரிக்கப்பட்டுள்ளன; 10மண்டலம் 6-ம் அத்தியாயத்தில் சத்துரு ஜயவிஷயமான இரண்டுகீதங்களும் 7-ம் அத்தியாயத்தில் சந்திரசூரியர்களின் சல்லாபங்களும், இயமன் யமுனையைக்கெடுக்க முயன்றபொழுது நீதி வாக்கியங்களைச் சொல்லித் தடைசெய்த கீதங்களும், 10-ம் அத்தியாயத்தினீற்றில் அம்பரீஷன் குமாரத்தியைக் குறித்தும் சூரியனைக் குறித்தும், 11-ம் அத்தியாயத்தின் முதலில் உலகசிருஷ்டியைக்குறித்தும்சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்தருக்வேதத்திலே ஐதரேயபிராமணமும், ஐதரேய ஆரணியகமும், ஐதரேயோபநிஷத்தும், கௌஷீதக்யுபநிஷத்தும் பிரசஸ்தமானவைகளாகஎண்ணப்பட்டுள்ளன.

**யஜுர்வேதம்** - இது இரண்டாவது வேதம். இதில்யாகம் பலிதானமுதலியவைகள் சொல்லப்பட் டிருக்கின்றன. இதன் பிரதான பாகங்களில் தோத்திரங்களுஞ் சொல்லப்பட்டுள. ஏறக்குறைய 1987 பிரகரணங்கள் இவ்வேதத்திற் காணப்படுகின்றன.

முதலிரண்டு அத்தியாயங்களில் முதல் அமாவசை பௌர்ணமிதினங்களில் செய்யவேண்டிய யாகங்களும், அவற்றின் பின்னர் பிதுர்கர்மஞ் செய்புமுறையும், மூன்றுமத்தியாயத்தில் நித்தியகர்மாதிகளும், நான்குமுதல் எட்டு அத்தியாயம் வரையில் அக்னிஷ்டோமாதிகளும் சோமபானமும், பத்தாவதில் வாஜபேயம் ராஜசூய முதலிய யாகங்களும், பத்தொன்பதுமுதல் இருபத்தைந்து வரையில் அசுவமேதமும், முப்பதுமுதல் முப்பத்தோராவது அத்தியாயங்களில் புருஷமேதம் ஸௌத்ராணி, நாராயணபலி முதலியவைகளுங் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வகையே மற்ற அத்தியாயங்

களிலும் யோகமுதலிய விஷயங்கள் பிரபலமாக வர்ணிக்கப்பட்டுள்ளன.

மேலும், இவ்வேதத்தில் ஸ்தோத்திர பாகங்களில், பரமேஸ்வரனைப் பிரஜாபதி, இந்திரன், வருணன், அஸ்வினி முதலிய பெயர்களாற்கொண்டாடப்பட்டிருக்கிறது- இத்துதிபாகங்களுக்குவசிட்டர் வாமதேவர் விசுவாமித்திரர் முதலியோர் கர்த்தாக்கள். இவ்வேதத்திற் கூறியபடி பசுபக்ஷிகளைக் கொல்லுதல் உத்தமமன்றெனத் தோன்றுவதுமாத்திரமன்றிப் பிராணிகளை இலேசமும் வருத்தலாகாதென்னும் விதிகளுமுள. சதபதப்ராம்மணத்திலே பலிகளே கொடுக்கப்படாதென்று நிஷேதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த யஜுர்வேதம் வாஜஸநேயர்காலத்தில் கிருஷ்ண யஜுர்வேதமென்றும் சுக்கில யஜுர்வேதமென்றும் இரு பிரிவுகளாக்கப்பட்டது. சுக்கில யஜுர்வேதம் வாஜஸநேய ஸம்ஹிதை யென்றும், தைத்திரீய ஸம்ஹிதை யென்றும் சொல்லப்படுகிறது. இதற்கு உதாத்த அநுதாத்தமாகிய இரண்டுஸ்வரங்களும், கிருஷ்ண யஜுர்வேதத்திற்கு உதாத்த அநுதாத்தஸ்வரித ப்ரசலமாகிய நான்குஸ்வரங்களுமுரியவை. சுக்ல யஜுர்வேதத்தில் உபநிஷத்துகளுக் கெல்லாம் பிரதானமாக ஈசாவாஸ்யோபநிஷத் விளங்குகின்றது. (இன்னும் வருகும்)

வேதப்பிரியன்.

---

## விஸ்வகர்மரே ஆச்சாரிய ஜாதியார்.

என்பதை நிரூபிக்கும்பொருட்டு வேதசாஸ்திர வாக்கியாதாரங்கள் காட்டி ஜோஸ்யர் முத்து ஆச்சாரியார் எழுதிய புத்தகம் அச்சாகி விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. விலை ஆறே அணா. உடனே பெற்று வாசியுங்கள்.

---

## ஊக்கமும் உழைப்பும்.

1918ஆம் ஜனவரிமீ 28உ திருநெல்வேலி பிரம்மஸ்ரீ சண்முகாச்சாரியாரவர்கள் கிருஹத்தில் (சண்முகவிலாசத்தில்) விஸ்வகர்ம குல அபிமானியாகிய பிரசங்க வல்லபர் ஸ்ரீமான் ஆண்டியப்பபிள்ளை அவர்களின் தலைமையின் கீழ், பண்டிதர் ஸ்ரீமான் V. வேங்கடராஜுலு ரெட்டி அவர்கள் செய்த பிரசங்கச்சுருக்கம்.

ஊக்கமானது மனிதரை முன்னிலைக்குக் கொண்டுவருகிறது ஊக்கமுடையவரே உடையவரெனப்படுவர். "உடைய ரெனப்படுவது ஊக்கம் அஃதில்லார் உடையது உடையரோ மற்று" என்று நாயனாரும் கூறியுளார். ஊக்கமொருவருக்குளதானால், அவன் மேன்மேலும் தொழிலில் முயற்சியுடையவனாய்ப்பொருளைத் தேடிக்கொள்ளுவான். ஆதலின், அவனையே உடையவன் என்று சொல்லுதல் சாலும்.

ஊக்கமாவது தொழில்களிலே செல்லும் மனமுயற்சியாம். இதன் காரியமே முயற்சி (உழைப்பு) ஊக்கமில்லாவழி உழைப்பு நடத்தலமையாதன்றே? அதனால் ஊக்கமே இதற்குக் காரணமென்பது நன்கறிதற்பாலது. ஊக்கமுடையவன் வறியனாயினும் அவன் செய்தொழிலில் முயற்சியாய் உழைப்பானாயின் செல்வம் அவனிடத்திற்கு வழி கேட்டுவரும். "ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும், அசைவிலா ஊக்கமுடையானுழை" என்ற குறளையுங்காண்க. ஒருவனுக்குத் தொழிலே அவன் நினைத்தவெல்லாவற்றையுங் கொடுக்கும். "வினைநலம் வேண்டிய வெல்லாந்தரும்" என்றார் திருவள்ளுவர். முயற்சியில்லாவிடத்துச் செல்வனும் வறியனாதலும், முயற்சியுள்ள விடத்து வறியனும் மிகுந்த செல்வனாதலும், "முயற்சி திருவினையாக்கும்; முயற்றின்மை இன்மைபுகுத்தி விடும்" என்பதனாலறியலாகும். சங்கநூல்களுளொன்றாகிய சீவகசிந்தாமணியில், சச்சந்தனென்னுமரசன், தன்பகைவர்களினின்று தப்பும் பொருட்டு அன்புளான் ஒருவனால் தூண்டப்பட்டு, தன் அரண்மனைச் சிற்பியருள் ஒருவனை அழைத்து, நீ ஒரு மயில்வாகனஞ் செய்து கொ



ண்டு வருகவெனக் கட்டளையிட, அங்ஙனமே அவன் ஒருவாரத்தில் மயில்வாகனம் ஒன்றமைத்து,

"பீலி நன் மாமயிலும் பிறி தாக்கிய
கோலநன் மாமயிலும் கொடு சென்றவன்
ஞால மெல்லா முடையானடியில் வீழ்ந்து
ஆலு மிம்மஞ்ஞை அறிந்தருள் என்றான்"

இதுகாண்டலும் அரசன் அவன் செய்த மயிலிதுவென அறியக்கூடாதவனாய் மயங்கி, அவனால் காட்டப்பட்டதை அறிந்து மிகவும் களிப்புற்று அவனுக்களவில் பெருநிதியுமளித்தான். இந்த மயில்வாகனமானது ஆகாயத்தில் பறக்குந் தன்மையதாய் அமைக்கப்பட்டிருந்தது. இன்னு முற்காலத்து மதிற்சுவர்களில் பகைவர் உட்புகாவண்ணம், வாள் வேல் முதலிய ஆயுதங்களும், கல்லெறியும் பொறிகளும், நூற்றுவரைக் கொல்லி என்னும் பொறிகளும், இன்னும் பல பொறிகளும் அமைக்கபபட்டிருந்தனவென்பது சிந்தாமணி முதலிய சங்கநூலாலும், மற்றைய நூல்களாலும் அறியப்படுகிறது. சிலப்பதிகாரத்து 'ஊர் காண்காதை'யில்,

"வையமும் பாண்டிலும் மணித்தேர்க்கொடிஞ்
(சியும்
மெய்புகு கவசமும் வீழ்மணித்தோட்டியும்
அதள்புனை அரணமும் அரியா யோகமும்
வளைதரு குழியமும் வால்வெண் கவரியும்
ஏனப்படமும் கிடுகின்படமும்
கானப்படமும் காழ்ஊன்று கடிகையும்
செம்பிற் செய்நவும் கஞ்சத்தொழிலவும்
வம்பின் முடிநவும் மாலையிற் புனைநவும்
வேதினத் துப்பவும்கோடுகடை தொழிலவும்"

என்று கூறப்பட்டிருக்கிற அடிகளையும், அதனுரையாசிரியர் அடியார்க்கு நல்லார் "அங்காடிவீதி கூறுவார் கம்மியர் முதலாயினோர் பண்ணி விற்பன. கூறுகின்றார்" என்ற உரையையும் ஈண்டுக் கவனிக்க. இதனால், மேற்சொல்லிய பொருள்கள் எல்லாம் உள்நாட்டுக் கம்மியராலேயே செய்யப்பட்டனவென்பதை ஆராய்ந்தறிந்துகொள்க.

இக்காலத்தும் சிலர் தொழில்களைச் செய்கின்றனராயினும் சில அருமையான தொழில்கள் மறைந்துபோயினமையும், முன்னோர் போல் விளக்கமாய்ச் செய்யக்கூடியவர்கள் இல்லாதிருப்பதையும் எண்ணும்போது, நமது நாட்டின் நிலைமை மிகவும் விசனிக்கத் தக்கதென்பதை எவருமறுக்கார். மேற்கூறியவாற்றால், நமது முன்னோர்களின் தொழில்வன்மை ஒருவாறு அறிதலாகும்.

இனி, ஊக்கமும் உழைப்பும் நம்மிடத்தில்லா தொழிவதற்கு மடியும், இடுக்கண் அழிதலுமே காரணமாம். மடியாவது சோம்பல். இதனால் ஊக்கமும், இடுக்கண் அழிதல் என்பது செய் தொழிற்குத் தடை ஏற்படுங்கால் மனஞ் சலித்து விட்டு விடுதல், இதனால் உழைப்பும் நம்மிடத்தினின்றும் கழிந்து விடுகின்றன. சோம்பலானது சிறிது சிறிதாக ஒருவனிடத்திலமைந்து பிறகு அவனது குடியையுங் கெடுத்து விடுகின்றது. "குடி என்னும் குன்றா விளக்கம்—மடி என்னும் மாசூர மாய்ந்துகெடும்". இதனால் சோம்பலினது கெடுதி அறிதலாகும். நம்முள் சிலர் ஒரு தொழில் செய்யுங்கால் சிறிது தடைப்படின் அதனை அத்துடன் நிறுத்தி விடுகின்றனர். இதனால் நம் தேயத்துத் தொழிற் சாலைகளில் பல இருந்தவிடந் தெரியா தொழிந்தன வென்பதை எவரும் அறிவர். ஒருவனுக்குச் செய் தொழிலில் இடுக்கண் வருங்கால் அவன் சந்தோஷப்பட வேண்டுமென்றும், அங்ஙன மானால் அவனுக்கேற்படுந் துன்பங்கள் தொலைந்து விடுதற்குரிய கருவியாகுமென்றும் நாயனார்—

"இடுக்கண் வருங்கால் நகுக, அதனை அடுத்தூர்வதஃ தொப்பதில்" என்னும் குறளில் அருளிச் செய்திருக்கின்றார். ஒன்றன் மேலொன்றாய்ப்பலதுன்பங்கள் தொடர்ந்தவரினும், அவற்றால் மனஞ் சலியாது தொழிலை மேற் கொண்டால் அத்துன்பங்கள் யாவும் வருந்தி ஒழியும். இதனை,

"அடுக்கிவரினும் அழிவிலான் உற்ற—இடுக்கண் இடுக்கட்படும்" என்னும் திருக்குறளாலறியலாகும். நம் நாட்டுச் சில சோம்பேறிகள் "ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்—போகூழால் தோன்றுமடி" என்னுங் குறளையும், "ஊழிற் பெருவலியாவுள" என்னுங் குறளையும் காட்டி எல்லாம் விதிவசம் நம்மால் ஒன்றுமில்லை என்கின்றனர். இவர்கள் சொல்லுவது சரியாகுமா? "ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்—தாழாதுஞற்றுபவர்" என்னும் பாடலும் பொய்யில் புலவர் வாக்கே. அங்ஙனம் கீழ்க் கூறிப்போந்த ஆசிரியர் மேல் இப்படிக் கூறியிருப்பதனால் சிலருக்கு இதனிடத்து சந்தேகமுண்டாதலுங்கூடும். இதனை ஊழானது ஒருவனுக்குத் தீய ஊழாகுமிடத்து அவன் தொழிலில் ஒருகால் இருகால் தடைப்படுத்தும். அத்தடைகளுக்கு மனஞ் சலியாது ஊக்கத்துடன் உழைப்பானானால் அத்தொழிலில் அவன் சித்திபெறுவான். தீய ஊழ் சிறிது காலத்தில் கழிந்துவிடும்; அது மேலும் தடைப்படுத்தாது என்பதே அறிஞர் கொள்கை. ஊழைவென்றதற்கு மார்க்கண்டேயர் சரிதம் போதிய சான்றாம். இதனால் தொழிலில் ஏற்படுந் தடைகளுக்கு மனஞ் சலியாது, இடைவிடாத முயற்சியுடனிருக்க வேண்டும். இதனினும் பெருமை வேறொன்றுமில்லை. "கருமஞ்செய ஒருவன் கைதூவேன் என்னும்—பெருமையில் பீடுடையதில்" என்னுங் குறளையுமறிக. ஆடவராய்ப் பிறந்தார் யாவரும் தாம் பிறந்த குடியை முன்னிலைக்குக் கொண்டு வருதல் வேண்டும். அங்ஙனஞ் செய்தலே ஆண்மை எனப்படும்; அங்ஙனஞ் செய்யாதவர் ஆடவரல்லர். ஆண்மையுடையார் அல்லர். ஆதலின்,

"நல்லாண்மை என்பது ஒருவற்குத்தான் பிறந்த இல்லாண்மை ஆக்கிக் கொளல்" என்றார் திருவள்ளுவ நாயனார்.

இனி, தொழில் நிகழ்வதற்கு ஒற்றுமை வேண்டும். பலபேர் சேர்ந்து ஒரு தொழிற்சாலையை நடத்துவோமாயின் அது நமக்கும் நமது நாட்டிற்கும் நன்மையைப் பயக்கும். இது விஷயத்தில் கற்றவர்களும் கனவான்களும் முயற்சி எடுத்தலவசியம். நம்மவர்கள் சுயநல மொன்று மட்டுமே கருதி, தன்னினத்தார் நன்மையுங் கருதாது பிறரிடத்தில் குறைந்த ஊதியத்திற்குத் தொழில் செய்வதாக ஒப்புக்கொண்டு அங்ஙனமே செய்து அதனாலடைவதைப் பெரிதாகக்கொண்டு காலங் கழிக்கின்றனர். இது தொழிற்குக்குறைவையும், குலத்தாருக்கு வருமானக் குறைவையும் அவ நம்பிக்கையையும் விளைவிக்கின்றதென்பதை இன்னு மறியா திருத்தல் எத்துணை விசனிக்கத்தக்கதா யிருக்கின்றது. ஆகையா லிதுகாறும் சொல்லிப்போந்த வாற்றால் நாமெல்லோரும் ஊக்க முடையோராய்த் தொழிலை விருத்திசெய்ய முயற்சி செய்ய வேண்டுமென்றும், இதற்கு எதிரிகளாகிய மடி இடுக்கண் அழிதல் என்னுங் குணங்களை நம்மிடத்துச் சிறிது மணுக வொட்டாது காக்க வேண்டுமென்றும், நம் முன்னோர்களைப் போல் நாமும் தொழிலில் முயற்சி செய்ய வேண்டுமென்றும், இதற்கு நம்மவர் ஒற்றுமையுட னிருப்பதோடு கனவான்களும் கற்றவர்களும் ஊக்கங்கொள்ள வேண்டுமென்றும், சுயநலங் கருதாது, குலத்தார் நன்மையைக் கருதித் தான்பிறந்த குடியை உயர் நிலைக்குக் கொண்டு வருதல் ஆண் மக்களாய்ப் பிறந்தார் யாவருக்கும் உரியதென்றும், அங்ஙனமே செய்வது நமது கடமை என்றும் ஒருவாறு அறியலாகும்.

இனி, ஒரு நாடாவது ஒரு குலமாவது விருத்தியடைய வேண்டுமாயின், இச்சபையைப்போல் பல சபைகளும் சங்கங்களும் ஏற்படவேண்டும். கல்வி கைத்தொழில் முதலிய பொது நன்மையான விஷயங்களைப் போதிக்கும் ஓர் பத்திரிகையு மவசியம் வேண்டும். நாமேல்லோரும் நமது குலத்தை விருத்தி செய்ய வேண்டுமென்று திரிகரண சுத்தியோடு உழைபோமாயின் தெய்வமே நமக்கு முன்வந்து நின்று நாம் எண்ணியவாறே நடத்துமென்பது "குடி செய்வல் என்னு மொருவற்குத் தெய்வம்—மடிதற்றுத்தான் முந்துறும்" என்னும் பொய்யா மொழியார் வாக்கானு மறியலாகும். நீங்கள் எல்லோரும் குல விருத்தியைநாடி உழைத்து வருவதால், கடவுளே உங்கள் குலம் முன்னிலைக்கு வரவேண்டு மென்றெண்ணி இவ்விராஜதானியின் தலைகரான சென்னையில் உங்கள் குலத்தறிஞர்களால் சபை ஒன்றேற்படுத்தி குல நன்மையைக் கருதி "விஶ்வகர்மன்" என்றொரு பத்திரிகையும் வெளிவரக் கிருபை பண்ணி யிருக்கிறாரென்று நீங்கள் அறியவேண்டும்.



இவ்வாறு உங்கள் குலம் பூர்வீக நன்னிலைக்கு வந்தாலொழிய நமது தேசம் பழைய நன்னிலையில் வருதல் அமையாதென்பதை அறிவுடையோர் யாவருமறிவர். ஆகவே, நீங்கள் உங்கள் குலத்தை விருத்தி செய்வதனால் குல நன்மையைச் செய்தவர் ஆவதோடு தேச நன்மையுஞ் செய்தவராவீர்கள். இப்படி ஒரு முயற்சியில் இருவித புண்ணியத்தை அடைபவர் நீங்களே.

மேற் சொன்ன 'விஶ்வகர்மன்" சஞ்சிகைகள் சிலவற்றை நான் பார்த்திருக்கிகின்றேன். அதில் உங்கள் குலத்தின் முன்னேற்றத்திற்குரிய பல அரிய பெரிய விஷயங்கள் பல அறிஞர்களால் எழுதப்பட்டு வருகின்றன: இது உங்கள் குலத்தில் விலைமதிக்க வொண்ணாத ஒரு பெரிய ரத்தினம்போல் விளங்குவதொன்று. இப்பத்திரிகையை நீங்கள் எல்லோரும் பெற்று அதனை வாசித்துணர்ந்து நன்னிலைக்கு வரவேண்டு மென்பது நான் கூறாமலே அமையும். ஆகவே, இனி நீங்கள் அப்பத்திரிகையைப் பெற்று வாசித்தறிவதோடு குல நன்மையும் தேச நன்மையும் செய்வதற்குக் காரணமாகிய இப்படிப்பட்ட சபைகளையும் பத்திரிகையையும் விருத்தி செய்து உங்கள் முனனோர்களைப் போல் உயர்ந்த நிலைக்கு வருமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

அக்கிராசனாதிபதி கூற்று—உபந்நியாசகர் மிகச் சாதுரியமாய்க் காட்டியவாறு, நீங்கள் ஊக்கமும் உழைப்பும் அடைவதற்கு தக்க கல்வி யிருந்தாலொழிய சாத்திய மாகாது. ஆகையால், நமது குழந்தைகள் தக்க முறையில் கல்வி பயிலுவதற்கு ஓர் பாடசாலை ஏற்பட வேண்டும். இப்படிப்பட்ட பல சபைகளும் சங்கங்களு மேற்படவேண்டும். ஜப்பான் தேசம் அநேக காலங்கள் சென்றடைய வேண்டிய நன்மைகளைச் சிறிது காலத்தினுள் அடைந்தது, இப்படிப்பட்ட சபைகளாலும் சங்கங்களாலுமே யென்பதைச் சரித்திர ஆராய்ச்சியார் யாவருமறிவர். இப்படிப்பட்ட ஊக்கமில்லாதவர்கள் மனிதர்களல்லர். அவர்கள் மரத்தை ஒத்தவர்கள் என்பதை "உரம் ஒருவற்குள்ள வெறுக்கை அஃதில்லார் மரம் மக்களாதலே வேறு" என்னும் அருமைத்திருக்குறள் நமக்குப் போதிக்கின்றது. ஆகவே நாமெல்லோரு மதிக ஊக்கமும், உழைப்புமுடையோராய் இருக்கவேண்டும். இடையறுதோர் நீர் ஓட்டத்தைப் பாருங்கள். அது கல்பாறை முதலியவை தடுத்தாலும் நிற்கிறதா? அவற்றையு முராய்ந்து கொண்டே அவற்றைப் பொருட்படுத்தாது செல்லுகின்றது. அது போலவே நாமும்நமக்கேற்படு மிடையூறுகளைப் பொருட் படுத்தாது, நமது தொழிலில் இடைவிடாத ஊக்கத்துடனுழைக்க வேண்டும்.

"மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற இடுக்கண் இடர்ப்பாடுடைத்து" என்னும் தேவர் வாக்கால், நமக்கு இடையூறு ஏற்பட்டால், எப்படி ஒரு எருதானது மிகுந்த சேற்று நிலத்தில் ஊக்கங் குன்றாது, காலை மடக்கியும் மூச்சுப் பிடித்தும் பக்கத்தில் ஒற்றியும் வண்டியை இழுத்துச் செல்லுகின்றதோ அப்படியே நாமும் நமது மெய் வருத்தம் பாராமல் முயன்று செய்யவேண்டும் என்பதை நன்கு அறிதல் கூடும்.

இனி, நம்மவருள் ஒரு சிலர் தாம் உயர் நிலையை அடைவார்களாயின் தம்மைப்போலவே தமது குலத்தார்களையும் உயர் நிலைக்குக் கொண்டுவரவேண்டு மென்றெண்ணி, அங்ஙனஞ் செய்வது அவர்கள் கடமையா யிருக்க, அவர்கள் தாம் மாத்திரம் உயர்நிலையி லிருப்பதை

கண்டு மகிழ்கின்றார்களே ஒழிய தம்மினத்தாரின் முன்னேற்றத்தைக் கருதுகின்றார்களில்லை. ஆ! ஆ!! இது எத்துணை விசனிக்கத்தக்கது! ஒரு குலத்தில் ஒருவரிருவர் உயர்நிலைக்கு வந்துவிட்டால் அதனால் அக்குலத்திற்கு உயர்வுண்டெனினும், அக்குலத்தார் யாவரும் தகுந்த கல்வியுடையோராய் முன்னிலைக்கு வந்தாலொழிய அக்குலத்தார்க்குச் சரியான உயர்வுண்டாகா தென்பதையும், அவ்வொரு சிலர் தாம் தம்மை எண்ணிக்கொண்டிருக்கும் உயர்ந்த கௌரவமின்றி சில சமயங்களில் கௌரவக் குறைவு மடைவார்கள் என்பதையும் உலகானுபவ முடையோர் நன்கறிவர். ஆகவே, ஒரு குலத்தில் உயர்நிலைக்கு வந்தாரெல்லோரும் தங்குலத்தை முன்னுக்குக் கொண்டு வருதல் உரிய கடமையேயாம். ஒருவன் தன் குல நன்மையின் பொருட்டு முயற்சித்த அதனால் பல துன்பங்களை அடைவானாயின், அத்துன்பங்களெல்லாந் துன்பமாவன வல்ல; மேல் நன்மையடைதலால் நன்மையேயாம். இது "இடும்பைக்கே கொள்கலங்கொல்லோ குடும்பத்தைக்—குற்ற மறைப்பானுடம்பு" என்னுங் குறளாலும் தெள்ளிதின் விளங்கும். ஆகவே, நாம் இடையுறாத ஊக்கமுடையவர்களாய், இடையில் ஏற்படும் இடுக்கண்களைப் பொருட்படுத்தாது நம் சிறுவர்களுக்குக் கல்வி ஞானமும், தொழில்ஞானமும் தக்கவாறுபோதித்து முன்னேறியிருந்த உயர்நிலையை அடைவதில்லூக்கமுடன் உழைப்பதில் ஈசனருள்புரியவாராக.

குறிப்பு:—இவ்விரு கனவான்களும் தங்கள் பிரசங்கத்தில் முன்னிலை எழுவாய் இன்றி தன்மை எழுவாயாய் "நாம், நாங்கள்" என்று கூறியதிலிருந்தே நமது குலத்திலிவர்கள் கொண்டுள்ள அபிமானம் நன்கு விளங்குகின்றது.

T. தங்கவேல்,

காரியதரிசி, விஸ்வகர்ம சன்மார்க்க சபை,

திருநெல்வேலி.

## சூரியன்.

ஸ்ரீ கா. திருவேங்கடஆச்சாரியார், சென்னை

கசியபப் பிரஜாபதிக்கு அதிதிவயிற்றிலே பிறந்த புத்திரன் மனைவி துவஷ்டாவின் புத்திரியாகிய சஞ்ஞாதேவி. இவளிடத்திலே பிறந்த புத்திரர் வைவசுத மநுவும் யமனும்; புத்திரியமுனை. சஞ்ஞாதேவி தன் பர்த்தா சூரியனுடைய வெப்பத்திற்கு ஆற்றாது தன்னுடைய சாயையை ஓர் பெண்ணாகச்சிருஷ்டித்து வைத்துவிட்டு தன் பிதாவின் இல்ல மெய்தினள். சூரியன் சாயையைத் தன்பாரியென எண்ணி அவளோடு சேர்ந்து வந்தனன். அவளிடத்திலே சனியையும் மற்றொரு மநுவையும் தபதி என்பவளையும் பெற்றான் எனக்கூறப்பட்டிருக்கிறது.

உதயகால சூரியன் பிரம்மாவின் சொரூபமென்றும், மத்தியான சூரியன் சிவசொரூப மென்றும், அஸ்தமான சூரியன் விஷ்ணுசொரூபமென்றும் சந்தியா காலங்களில் ஜபத்தில் தியானிக்கப்படுவான். சூரியன் ஓராழித்தேரிலே ஏழுபரிபூட்டிச் சஞ்சரிப்பவனென்றும், தினத்தைச் செய்வதால் தினகர னென்றும், பிரபையைச் செய்வதால் ப்ரபாகரனென்றும், ஆதியில் உதித்தவனாகையால் ஆதித்தனென்றும், பிறவுமான அநேக நாமங்களைப் பெற்றவன். இவ்வண்டம் சூரியனை ஆதாரமாகவுடையது. சூரியன் துருவனை யாதாரமாகவுடையவன்.

சூரியனைக் குறித்து விஷ்ணுபுராணத்திற் கூறப்பட்டனவற்றை இங்கே சங்கிரகமாகக் கூறுவாம். அதிற் கூறப்பட்டன, ஐரோப்பிய சித்தாந்தத்திற்குப் பெரும்பாலு மொத்தனவாகவே யிருக்கின்றன.



துருவனை யாதாரமாகக்கொண்டு அவனாலே ஆட்டப்பட்டு அவனையே வலஞ்செய்து வருதலைத் தொழிலாகவுடைய சூரியனுக்கு ஓரிரதமுண்டு. அவ்விரதத்திற்கு ஓரச்சும், அவ்வச்சிலே ஒருருளும், அவ்வுருளினிரு மருங்கிலும் அச்சிலே கோர்க்கப்பட்ட பூட்டுக்கோலாகிய கொடிஞ்சிகளும் அவற்றின்மீது பாரும் அதன் மீதே தட்டும் உறுப்புக்களாக வுள்ளன. கொடிஞ்சிகளிலே ஏழு குதிரைகள் பூட்டப்பட்டிருக்கும். காயத்திரி, பிருந்தி, உஷ்ணிக்கு, ஜந்தி, திருஷ்குப்பு, அநுஷ்டுப்பு, பந்தி என்னும் பெயர்களையுடைய சந்தங்கள் ஏழுமே அவ்வேழு குதிரைகளுமாம்.

அவ்வுருளின் ஒருபக்கத் தச்சு மிக நீண்டிருக்கும். மற்றபக்கத் தச்சு மிகக் குறுகியிருக்கும். அவ்வுருளினது பண்டிகாலை நண்பகல் மாலை என்னும் பிரிவுகளாலாயது. சவ்வற்சரம், பரிவற்சரம், இடாவற்சரம், அநுவற்சரம், இத்துவற்சரம் என்னும் ஐந்தும் உருளாரங்களாம். இருதுக்கள் ஆறும் உருள்வலயங்களாம். குறுகிய அச்சுப்பக்கம் துருவபக்கத்தை நோக்கி நிற்கும்; அவ்வச்சு துருவ நக்ஷத்திரத்திலிருந்துவரும் வாயுவடிவினவாகிய கயிறுகளிலே தொடுக்கப்பட்டிருக்கும். உருளை மானசோத்தர பர்வதத்தின் மீதே சஞ்சரித்துவரும். அப்பர்வதத்தின் மீது கிழக்கில் இந்திரனுக்குரிய வசுவோகசார நகரமும், தெற்கில் யமனுக்குரிய சம்யமனி நகரமும், மேற்கில் வருணனுக்குரிய சுகா நகரமும் வடக்கிலே சோமனுச்குரியவிபாவரி நகரமுமென நான்கு நகரங்கள் உள்ளன.

சூரியன் இவ்விரதத்திலே சஞ்சரித்து வருதலால் உதயாஸ்தமானமாகின்றன. உதயாஸ்தமயங்க ளுண்மைபோல் நமக்குத் தோன்றினும் சூரியன் உண்மையாக உதிப்பதும் அஸ்தமிப்பதுமில்லை. சூரியன் மேலே கூறப்பட்ட நான்கு கோணத்து நகரங்கள் நான்கினுள் எதிலாகிலும் இடையிலாயினும் இருக்கும்போது இரண்டு கோணங்களுக்கும் இரண்டு நகரங்களுக்குந் தரிசனமாவான். சூரிய கிரணங்கள் செல்லாதவிடம் மேருபக்க மொன்றுமேயாம். அப்பக்கஞ் செல்லும் சூரியகிரணங்கள் மேருவினது கிரணங்களாலே திரஸ்கரிக்கப்பட்டு மீளுமாம்.

சூரிய ரதஞ் சஞ்சரிக்கின்ற கிராந்தி விருத்தங்கள் (183) நூற்றெண்பத்து மூன்று. அவை தக்ஷணாயண உத்தராயண எல்லைகளுக் கிடையே உள்ளன. இரதம் அக்கிராந்தி விருத்தங்களிலேயே உத்தராயணத்திலேறுவதும் தக்ஷணாயனத்திலிறங்குவதுமா யிருக்கும். அதனால் ஒரு கிராந்தி விருத்தத்திற்கு இரண்டாக 366 முந்நூற்றறுபத்தாறு கதிகளினாலே ஒரு வருஷமுண்டாகும். மாசந்தோறுஞ் சூரியன் தன் இயல்பு வேறுபடலால் பன்னிரண்டு பெயர்களைப் பெற்றுள்ளன. அது பற்றியே சூரியர் பன்னிருவராகக் கொள்ளப்படுவர். சூரியரதத்திலே சூரிய ரிஷி கந்தர்வ அப்சர யக்ஷ சர்ப்ப ராக்ஷச கணங்கள் ஏழும் ஏறியிருக்கும். சித்திரை மாசத்திலே தாதா வென்னுஞ் சூரியனும் கிரகதஸ்தலை என்னும் அப்சரப்பெண்ணும் புலஸ்திய விருஷியும் வாசுகி சர்ப்பமும் ரதபிருது வென்னும்யக்ஷனும் ஹேதி ராக்ஷசனும் தும்புரு வென்னும் கந்தருவனும் அவ்விரதத்திலே வசிப்பார்கள்.

—

(சோம்பலினால் உண்டான)

## நூதன தொழில் முறைகள்.

சோம்பல் அநேக நூதன தொழிற் பிரயத்தனங்களுக்குக் காரணமாயிருக்கிறது. உதாரணமாக, வேலையில் சோம்பலடைந்த ஓர் இராணுவவீரன் தன்னுடைய ஈட்டியைத் துருப்பிடிக்கும்படி விட்டுவிட்டான். பிறகு தான் செய்த குற்றம் தெரியாமலிருக்கத் திராவகத்தை உபயோகித்தான். அந்த மார்க்கமாய்த் தொழில் முறையான எண்ணங்கள் பலப்பட்டு, எழுகில் செதுக்கு வேலையின் முறை கண்டுபிடிக்கப்பட்டது.

* * *

நிருபங்களை வரைதல் முதல் முதல் சாதாரண வழக்கத்தில் வந்தபோது ஒரு காகித உத்தியோகசாலைப் பையன் ஒரு கத்தரியைக் கொண்டு பிரதிதினமும் ஒரு பெரிய முத்திரைக்காகிதத்தைக் கத்தரிக்கவேண்டியதாக இருந்தது. அப்போது வியாபாரிகள் உத்தியோக சாலைக்கு குதிரைமீது சவாரி செய்துகொண்டு வந்தார்கள். அப்போது தன்னுடைய எஜமானருடைய குதிரைமேலேறும் மிதிப்படி அந்தக்காகிதத்தில் வரிசையாகத் தைத்தது. அதனால் முத்திரை ஸ்டாம்புகளுக்கு இடையில் கிழிப்பதற்குச் சௌகரியமாய்த் துவாரங்கள்போடும் முறை கண்டுபிடிக்கப்பட்டது.

* * *

ரயில் பாதையில் ஒரு சோம்பலான பாய்ண்ட்ஸ்மான் கொஞ்சம் தூரம் விலகியிருக்கும் இரண்டு இடங்களுக்குப் போய்வரும் கஷ்டத்தை நிறுத்துவதற்காக ஒரு கம்பித்துண்டினால் இரண்டு சட்டங்களை ஒன்றாய்ச் சேர்த்தான். உடைந்துபோன இரும்பு நாற்காலியைப் பிரதிபாரமாக உபயோகித்தான். அவன் அந்தக் கம்பியைத் தன்னுடைய பெட்டிக்குள் செலுத்தினான். அங்கிருந்து ஒருவரும் அங்குஉதவிக்கு இல்லாதபோது இடம்விட்டுப் பெயராமலே இரண்டு எச்சரிக்கை அடையாளச் செய்கைகளைச்செய்தான். அவன்சூழ்ச்சியை அதிகாரிகள் கண்டுபிடித்து அவனுக்குச் சம்பளத்தை உயர்த்தினார்கள்.

* * *

தூலங்களில் உயர்த்தும் யந்திரத்தின் பூர்வீக உபயோகம் நிலக்கரி சுரங்கங்களிலிருந்து நீரை இறைப்பதில் செலுத்தப்பட்டது. நீரை இறைத்தல் பிள்ளைகளால் ஆனது. அதைப் போன்ற ஒரேமாதிரியானவேலை மனதினாலும் நினைக்கமுடியாது. நிலக்கரி சுரங்கத்தில் நீர்ப்பையைத் திறக்கவும் மூடவும் வேலையாயிருந்த பையல்களில் ஒருவனாகிய ஹம்பரிபாட்டரும் அதேமாதிரிதான் நினைத்து தூலமே வேலை செய்து மூடியைத் திறக்கவும் மூடவுமிருக்கும்படி ஏற்பாடுசெய்தான். இந்த வேலையை யந்திரத்தையும் தூலத்தையும் சௌகரியமாய் ஒரு துண்டுக் கயிற்றினாலும் செப்புக்கம்பியினாலும் சேர்ப்பதினால் செய்து முடித்தான். இதனால் தான் வேலை செய்யவேண்டிய காலத்தில் யந்திரத்தைத்தானாகவே வேலைசெய்யும்படி விட்டுவிட்டு, தான் வெளியே போய் விளையாடச் சௌகர்யப்படுத்திக் கொண்டான். அவன் விளையாடிக்கொண்டிருக்கும்போது கண்டுபிடிக்கப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டான். ஆனால் தந்திரப் பிரயோகத்தைமாத்திரம் அங்கீகரித்து உபயோகித்தார்கள்.

* * *

இப்போதுங்கூட ரயில்வே டிக்கட்டை விற்கிறவனை புக்கிங்கிளார்க் என்று அழைக்கிறார்கள். இது ரயில்வே முதல் முதல் வந்தபோது இருந்த நிலைமையை ஞாபகப்படுத்துகிறது. இப்போது கடற் பிரயாணத்தைப் பதிக்கிறது போல, அக்காலத்தில் ரயில் பிரயாணத்தைப் பதிந்துவைக்க வேண்டியதா யிருந்தது. ஒரு நாள் ஓர் நூதனபிரயத்தன இயற்கையையுடைய ஒருபுக்கிங்கிளார்க்கு தன் வேலையில் மிகவும் களைத்து அனாவசியமான விவரங்களைப் பதிக்க வேண்டியதாயிருக்கிறதென்று நினைத்து தன் அருகிலிருந்த காகித அட்டைப் பெட்டியில் சதுரத்துண்டுகளை வெட்டி இவற்றில் போகவேண்டிய இடத்தைப்பதித்து, இலக்கமிட்டு தன் கையெழுத்தையும் போட்டான். பிறகு அநேக காவலாளிகளுடன் செய்துகொண்ட சங்கேத ஏற்பாடுகளினால் திரும்பவும் அந்த அட்டைத் துண்டுகள் தன்னிடத்திற்கே வரும்படி செய்துகொண்டான். முதல் முதல் ரயில்வே டிக்கட்டுகள் இவ்விதமாகத்தான் உபயோகத்திற்கு வந்தது.



* * *

அமெரிக்காவில் எலிமிச்சம்பழங்களை ஆரோக்கியபானங்களைச் செய்வதில் அதிகமாய் உபயோகிக்கிறார்கள். இங்கிலாந்தில் அவ்வளவு ஏராள உபயோகமில்லை. நியூயார்க்கில் ஹோட்டலில் ஒரு பையன் காலையிலிருந்து மாலைவரைக்கும் வேறுவேலைசெய்யாமல் எலிமிச்சம்பழத்தையே பிழிந்துகொண்டிருந்தான். அவன் ஒரேமாதிரியான வேலை செய்வதில் இளைத்து தன் புத்தியை உபயோகப்படுத்தி முதல் முதல் யந்திர வழியாய் எலிமிச்சம்பழத்தைப் பிழிவதற்கு ஆரம்பித்தான். அவன் பிரயத்தனம் ஜயமடைந்ததினால் அவனுக்குச் செல்வச் சம்பத்து உண்டாயிற்று.

* * *

ஸ்டாப்போர்ட்ஷைரின் தற்காலத்திய செல்வாக்கு ஓர் சோம்பலான பெண் வேலைக்காரியின் அஜாக்கிரதையினால் வந்தது. அநேக நூற்றாண்டுகளாக இந்த மாகாணத்துக் களிமண்ணானது சட்டிகளாகவும் பானைகளாகவும் இதர பாத்திரங்களாகவும் செய்யப்பட்டு வந்தது. ஆனால் அந்தத் தொழிலானது சுலபமாக ஆகத்தக்கதும் எப்போதுமிருக்கத்தக்கதுமான பளபளப்பில்லாதபடியால் பிரக்யாதியை அடையாதிருந்தது. பிறகு ஒரு நாள் ஸ்டான்லே என்கிற கிராமத்தில் ஒரு வேலைக்காரப் பெண் பளபளப்பில்லாததோர் பானையில் உப்பு நீரைவார்த்துப் பன்றி மாமிசத்தை உப்புபோட்டுப் பதப்படுத்திவைக்கத் தயார்செய்யும்பொருட்டு நெருப்பின் மீதுவைத்துத் தூங்கிவிட்டாள். அவளுக்குநித்திரை தெளிந்தபோது அந்த உப்புத் தண்ணீர் பொங்கி வழிந்து நெருப்பையெல்லாம் அவித்து விட்டது. அந்தப் பானையின் வெளிப்பக்கம் அழகான வெள்ளை எனாமலைப்போல் பளபளப்புடன் இருந்தது. பின்பு இதைப் பரிசோதித்துப் பார்த்ததில் பானை குளிர்ந்தபோதுங்கூட அந்த பளபளப்பு உதிர்ந்துபோகவில்லை. பானையிலிருந்து நீர்கசியாதிருக்கக் கண்டார்கள்.

## ஆரோக்கியபோதம்.

### நாக்குப் பூச்சி மருந்து.

மானிடர் வயிற்றில் பல காரணத்தால் மூன்றுவித நாக்குப் பூச்சிகளுற்பத்தியாகின்றன. அவையாவன-உருண்டை பூச்சி, நூல்பூச்சி, தட்டைப்பூச்சி. இவ்வகையான பூச்சிகளெல்லாம் இனிப்பானபதார்த்தங்களையும் கீரைவிரையையும் அசுத்த பதார்த்தங்களையும் அதிகமாய்ச் சாப்பிடுவதனாலே உற்பத்தியாகின்றன. இவ்வித ஜெந்துக்கள் வயிற்றுக்குள் வியாபித்து விடுவதால் தீராத வயிற்று நோவும் வாந்தியும் மலபந்தனமும் சுரமும் தலைவலியும் மூக்கில் ரத்தம்வடிதலும் ஆசனத்தில் அரிப்பும் ஜன்னிமுதலிய நரம்புரோகங்களும் இன்னும் பலவிதமான ரோகங்களும் உண்டாகின்றன.

ஆகையால் எவ்வித ரோகத்திற்கும் சிகிச்சை செய்வதற்கு முந்தி ஷை கிருமிகளை நாசப்படுத்திஅப்புறப்படுத்த மருந்து கொடுக்கவேண்டும். பிற்பாடுதான் வேறு அவுஷதங்கள்கொடுக்க ஆரம்பிக்க வேண்டும். இதற்குச் சான்டோனயின் என்ற மருந்துதான் விசேஷமானது. இந்தமூலிகை மருந்தானது தற்காலயுத்தத்திற்கு முந்தியே ஒரு அவுன்சு ஒரு ரூபாய்க்குக் கிடைக்கக்கூடியதாயிருந்தது. ஆனாலிப் போது ஒரு அவுன்சுக்கு 15 முதல் 20 வரையில் விலை யதிகமாய்விட்டது. இக்காரணங்கொண்டு அநேக ஆஸ்பத்திரிகளில் ஒரு அவுன்சுக்கு எழுதினால் கால் அவுன்சே மிக்கபிரயாசையுடன் கிடைக்கிறது. ஆகையால், அநேகமாய் ஆஸ்பத்திரிகளுக்கு வரப்பட்ட ரோகிகளுக்கு இல்லை யென்றே வைத்தியர்கள் சொல்லியனுப்பி விடுகிறார்கள்.

சாதாரணமாய் மூன்றுவிதக் கிருமிகளுக்கும் மூன்றுவித மருந்துகள் கொடுத்துவருகின்றார்கள். அஃதாவது உருண்டைப் பூச்சிக்கு சான்டோனயின் மருந்து. நூல் பூச்சிக்கு குவாஷியா, இரும்பு திராவகம், கொயினா இவ்வித மருந்துகளை ஆசனத்தில் இன்ஜெக்ஷன் செய்தும், தட்டைப் பூச்சிக்கு மேல்பொன் என்றமருந்து சாதாரணமாய்க் கொடுத்து வருகின்றார்கள். உருண்டைப்பூச்சிக்கு புரசம்விரைப்பொடியைச் சர்க்கரையில் 20-கிரெயின் கலந்து ஒரு மணி நேரத்திற்கு பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கு 5-கிரேயின் வீதமும் 3-வேளைகொடுக்கவும். நூல்பூச்சிக்கு தோல் சீவிய பல்பாய்க்காயைத் துண்டுகளாகக் கண்டித்துச் சர்க்கரையில் கலந்து காலையில் சாப்பிட்டுவரவும். தட்டைப்பூச்சிக்கு மாதளம் பழத்தோலை அரைத்து மோரில்கலக்கி அதிகாலையில் 3-நாளைக்கு கொடுக்கவும். அல்லது ஒருடேபிள்ஸ்பூன் வெள்ளைச் சர்க்கரையில் கலந்து அதிகாலையில் சில நாட்களுக்குச் சாப்பிட்டுவரவும்.

ஆனால், மூன்றுவகைப் பூச்சிகளுக்கும் அதிகாலையில் பெரியவர்களுக்கு 30 துளி டர்பன்டயின் ஒரு அவுன்சு பாலில் கலந்து 5 நாள் சாப்பிட்டு வந்தபின்னர் 4-அவுன்சு தேங்காய்ப்பால் சாப்பிட்டுவிட்டால் போதுமானது. பூச்சிகளெல்லாம் வெளியில் வந்துவிடும். ஆமணக் கெண்ணெய் குடிக்கவேண்டிய அவசியமில்லை. உயர்ந்த டர்பன்டயின் ஒரு அவுன்சுக்கு 2-அணாதான் விலையாகும். 12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 10துளி கொடுத்தால் போதும்.

---

## விவசாய விளக்கம்.

### கொறுக்காப் புளி.

கொறுக்காப் புளி மரம் சாதாரணமாய் எல்லா உஷ்ணப் பிரதேசங்களிலும் விருத்தியாகக் கூடியது. மழை பெய்ய வேண்டுமென்னும் அவசியமில்லை. இது தன் விதையினால் முளைக்கும். விதை கறுப்பாய் சீயக்காய் விதையைப் போலிருக்கும். இதன் விதையை ஆடு மாடுகள் தின்னும். இந்த மரம் பல விதங்களில் உபயோகமானது. இதன் பழத்தை ஏழைச் சிறுவர்களும் பக்ஷிகளும் ஏராளமாகச் சாப்பிடுகிறார்கள். இதன் கிளைகள் அடுப்பெரிக்க உதவும்.

### மரம்.

கொறுக்காப்புளி மரம் முட்கள் நிறைந்தது. ஆகவே, தோட்டக் கால்களுக்கும், மா, பலா, தென்னை முதலிய தோட்டங்களுக்கும் வேலியாக உபயோகிக்கலாம். கனவான்களின் பங்களாக்களில் இருப்பக்கத்திலும் இச்செடிகளை வரிசையாக நட்டுப் பயிரிட்டு வெகு அழகாய்க் கத்தரித்து வருகிறார்கள். இதனை எவ்விதமாக எவ்வளவு வெட்டினாலும், இது பட்டுப்போகாமல் விருத்தியாகிவரும். ஆடுகள் இதன் தழைகளை வெகு நன்றாய்த் தின்கின்றன. வேலியாக வைத்தால், இதில் முட்களிருப்பதால் மனிதராவது மாடுகளாவது திருட்டுத்தனமாய் உள் நுழைய முடியாது.

மரம் உறுதியானதன்று, சீக்கிரத்தில் உளுத்துப் போகக் கூடியது. ஆகவே, இம்மரத்தில் சித்திர வேலையாவது, இன்னும் ஏதாவது செய்வது வீண் நஷ்டமாகும். இம்மரத்தைச் சில விவசாயிகள் கம்பங்களாகவும் நுகத்தடிகளாகவும் செய்கிறார்கள். அப்படிச் செய்வது அறியாமையும் நஷ்டமுமாய் முடியும். இம்மரம் அடுப்பெரிக்கத்தான் லாயக்கானது. செங்கல் சூளை முதலியவைகளுக்குக் கொறுக்காப்புளிமரம் ஏற்றது. தற்காலத்தில்விறகு அகப்படுவது மிகுந்த கஷ்டமா யிருக்கிறபடியால் விவசாயிகள் தங்கள் மாட்டுச் சாணியை எரு



முட்டையாகத் தட்டி அடுப்பெரிக்காமல் கொறுக்காப்புளி மரத்தைப் பயிரிட்டு அதன் மூலமாய் விறகு சம்பாதித்தல் விரும்பத்தக்கது.

### வேலி.

தனி நிலங்களுக்கு ஓரத்திலும், பெரிய வீட்டின் புறக்கடையிலும் கொறுக்காப்புளி மரத் வைக்கலாம். நிலத்திற்கு ஓரத்யலிா வதவேகை தில் இரண்டடி தூரம் இடையில் விட்டு 10 அங்குலம் அகலமும்16 அங்குலம்ஆழமுமுள்ள குழிகள் வெட்டி அக்குழிகளை 10 நாள் காற்றுடும்படி மக்க வைத்து அக்குழிகளில் மாட்டெருவோ அல்லது பன்றி, ஆடு முதலியவைகளின் எருவையோ போட்டுப் பின்னர் ஒவ்வொரு குழியிலும் வைகாசி அல்லது ஆனி மாதங்களில் ஒரு மழை பெய்யுங்கால் விதையை நட்டால், ஒவ்வொரு செடியும் வெகு வீரியமாயும், குளுகுளு என்று பசுமையாயும் அழகாயும் வளர்ந்துவரும். விதைகளை ஒன்றோ டொன்று கிட்டக்கிட்ட விதைத்தால் செடிகள் நெருக்கடியாய் வளர்ந்து புதர் போலாய்விடும். அப்பொழுது அது பலமான வேலியாய்விடும். அப்போதைக் கப்போது ஒரு செடி வெயிலில் உலர்ந்துபோனாலும் அது விறகாய்விடுகிறது. அக்கம் பக்கத்திலிருக்கும் செடிகளிலிருந்து கீழேவிழும் விதையினால் முளைத்து அந்த சந்தும் அடைப்பட்டுவிடும். ஆகவே, கொறுக்காப்புளி மரம் விவசாயிகட்குப் பல விதத்தில் உபயோகமானது.

விவசாயிகள் எந்த அல்ப வஸ்துவையும் வீண் என்று கருதி அசிரத்தை காட்டக்கூடாது. கொறுக்காப்புளி மரம் மேலான மாய்நோக்கின் "அதனால் ஒருவித இலாபமும் வரப்போகிறதில்லை" என்று தான் நாம் நினைக்க ஹேதுவாக விருக்கிறது. ஆனால், ஒரு காணி நிலத்தில் வரக்கூடிய இலாபத்தைக் காட்டிலும், அதிகமாகவே கொறுக்காப்புளி மரத்தால் லாபம் கிடைக்கிறது. விறகுக்கென்றே நன்செய் நிலத்தில் நம் ஜில்லாக்களில் சில ரிதனைப் பயிரிடுகிறார்கள்.

---

## ஜய வழி.

### சத்தியவசனன் எழுதியது.

பிரான்ஸ் தேசத்தில் (Baron Rothschild) பாரன் ராத்ஸ்சைல்ட் என்பவர் இலாவாதேவி செய்வதில் அதிக ஜயத்தையடைந்து செல்வவந்தராயிருந்தார். அவர் ஜயத்தின் காரணத்தை அறிய விரும்பியவர்களுக்கு உயிர்வாழ்க்கைக்குரிய சட்டதிட்டங்களாகப் பின்வரும் புத்திமதிகளைத் துண்டுபத்திரிகையில் பிரசுரம் செய்தார்.

அவை (1) போதையைக் கொடுக்கும் பானத்தைநிக்ரகம்பண்ணு (2)முன்னுக்குவரத் தைரியங்கொள் (3)எப்போதும் அதைரியம் கொள்ளாதே. (4) ஒவ்வொருவரிடத்தும் மரியாதையாயிரு. (5)உன்காலத்தை நன்றாய்ப் பிரயோஜனமுள்ளதாகக்கழி. (6) எப்போதும் வியாபார விஷயத்தில் பொய்சொல்லாதே. (7) உன்கடன்காரர்களுக்கு சேரவேண்டியபாக்கியை நீஉடனுக்குடனேகொடுத்துவிடு. (8) எந்த விஷயத்திலும் முன் ஜாக்ரதையாக இரு. (9) எல்லாகஷ்டங்களையும் பொறுமையாகச் சகித்துக்கொள். (10) தற்செயலாக எதாவது உனக்குப் பலிதமாகுமென்று எதிர்பார்த்துக்கொண் டிராதே. (11) அப்பிரயோஜனமான சிநேகங்களைக் கொள்ளாதே. (12) உயிர்வாழ்க்கையின் போராட்டத்தில் அதிக தைரிய முள்ளவனாயிரு. (13) உன்சத்தியத்தையும் நாணயத்தையும் ஓர் பரிசுத்தமான வஸ்துவாக வைத்துக்கொண்டிரு. (14) உன் சுபாவத்தை மேலிட்டு இருப்பதாக எப்போதும் காட்டிக்கொள்ளாதே. (15) யோசனை செய்வதற்கு அதிககாலத்தை எடுத்துக்கொள். பிறகு காரியசித்தியான தீர்மானத்தைச் செய்துக்கொள். (16) உன் வியாபாரத்தில் ஒவ்வொரு விஷயத்தையும் ஜாக்கிரதையாய் ஆய்ந்தோய்ந்துபார்.

மேற்கண்ட உண்மைசாதகத்திற் குரியவும் பிரயோஜனமுள்ளவையுமான சட்டதிட்டங்களையும் புத்திமதிகளையும் அனுசரித்து நடந்தால் எந்தவாலிபனும் ஜயத்தை யடைவான்.

## அதிமதுரம்.

### "கொம்பு முளைத்திருக்கிறதோ.?"

யாதானுமொருவனைப்பற்றிச் சிலாக்கியமாய்ப் பேசினால், அவனுக்குக் கொம்பு முளைத்திருக்கிறதா?என்று சொல்வதைநாம் அடிக்கடி கேட்கிறோம். இங்ஙனம் கேட்கும் வழக்கம் எதிலிருந்து ஏற்பட்டதென்பது பின்வரும் சரித்திரத்தை விளங்கும். தசரத சக்கரவர்த்தி தமக்குப் புத்திரபாக்கியமுண்டாக வேண்டுமென்று குலகுருவாகிய வசிஷ்ட முனிவரைப் பிரார்த்தித்தபோது, அம்முனிவர், 'இது என்னால் ஆகக்கூடிய காரியமல்ல. கலைக்கோட்டு முனிவர் வரவேண்டும். அவர் உடனிருந்து புத்திரகாமேஷ்டியாகஞ் செய்தால் உனக்குப் புத்திரர்கள் உண்டாவார்கள்' என்று சொன்னார். வசிஷ்ட முனிவருங் கொண்டாடும்படியான யோக்கியதை கலைக்கோட்டு முனிவரிடம் இருந்தது. அவருக்குத் தலையில் மான்கொம்பு முளைத்திருந்தது. அதனால்தான் அவருக்கு ரிசிய சிருங்கர் (மான் கொம்புள்ளவர்) என்று பெயர் வந்தது. அவனுக்கென்ன கொம்புமுளைத்திருக்கிறதா என்பதற்கு அவனென்ன கலைக்கோட்டு முனியா என்பது அர்த்தம்.

### சண்டைக்கு எடுபிடி மாடுபிடி.

பழைய காலத்தில் ஒரு அரசன் மற்றொரு அரசனோடு யுத்தஞ் செய்வதாக இருந்தால், அதைப் பலரும் அறியப் பகிரங்கப்படுத்தி விட்டுத்தான் யுத்தஞ்செய்யப் போவது வழக்கம். அவ்விதம் முன் எச்சரிக்கை செய்வதின் நோக்கம் என்னவென்றால் தான் சண்டை செய்யப்போகும் ராஜ்யத்திலுள்ள பசுவும், பிராமணர்களும், ஸ்திரீகளும், வியாதியை யுடையவர்களும், பிள்ளைகளைப் பெறாதவர்களுமாகிய இவர்கள் அந்த ராஜ்யத்தைவிட்டுத் தங்களுக்கு இஷ்டமுள்ள புகலிடத்தைத் தேடிக்கொண்டு போகும்படி செய்வதுதான். அரசனது யுத்த விளம்பரத்தை அறிந்தவுடன் பசு ஒழிந்த எல்லாரும் அவ்விடம் விட்டு வேறு இடங்களுக்குப் போய்விட, பசு மாத்திரம் விளம்பரத்தை அறியும் அறிவில்லாத பிராணியானதால் அவ்விடத்திலேயே தங்கிவிடுமல்லவா? பசு பட்டினி கிடந்தாவது அம்பு பட்டாவது இறந்தால் தங்களுக்குப் பாபம் ஸம்பவிக்குமென்று எண்ணி முதன் முதலில், அதாவது சண்டை யாரம்பிப்பதற்கு முன்னாகவே சத்ருவின் ராஜ்ஜியத்திலுள்ள அப்பசுக்களைப் பலாத்காரமாகப் பிடித்து வருவதற்குச் செல்வார்கள். பசுவைக் கவர்வதற்கு ஆரம்பித்தால் அது சண்டை தொடங்கி விட்டது என்பதற்கு அடையாளம். பாரத யுத்தமும், முதன் முதல் விராட தேசத்திலுள்ள பசுக்களைக் கௌரவர்கள் கவர்வதற்குத் தொடங்கியதி லிருந்தே ஆரம்பமானதையுங் கவனிக்க இதற்கு ஆதாரமாகப் "புறநானூறு" பின்வருமாறு கூறுகின்றது:—

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம் அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்
அறத்தாறு நுவலும்" (புறம்9) [என:

### உண்டி சுருங்குதல் பண்டிக்கு அழகு.

உண்டி குறைதல் வயிற்றுக்கு அழகு என்பது இதன் பொருள், பண்டி-வயிறு. இது இப்போது, 'உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு' என்று படிப்பிக்கப்படுகிறது. இதற்கு, ஆகாரத்தைக் கொஞ்சமாகச் சாப்பிடுதல் ஸ்திரீகளுக்கு அழகாம் என்று பொருள். ஐயோ! ஸ்திரீகள் வயிறு நிரம்பச் சாப்பிடக்கூடாதா! சோறுகூடச் சரியானபடி சாப்பிடாமல், மாடுபோல் ஓயாமல் இரவும் பகலும் வேலைசெய்து சாவதற்கென்றா கடவுள் ஸ்திரீகளைச் சிருஷ்டித்திருக்கிறார்? பரிதாபம்! பரிதாபம்!! ஔவைக் கிழவி பெண்களைபார்த்து இந்த உபதேசந்தானா செய்தாள்? "இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும் - கழிபேர் இரையான்கண் நோய்" என்றுதானே திருவள்ளுவர் சொன்னார். உண்ணவேண்டும்



அளவிற்குச் சிறிது குறைவாகவே உண்பது நல்லதென்று அறிந்து, அந்த விதமே உண்பவனிடத்தில் இன்பம் நிலைநிற்பதுபோல, பெரிய ஆகாரத்தை விழுங்குபவனிடத்தில் வியாதி எப்போதும் நிலைநிற்கும் என்று புருஷர்கள் ஸ்திரிகள் எல்லாருக்கும் பொதுவாகத்தானே சொல்லியிருக்கிறார்? பண்டிக்கழகு என்பதைப் பெண்டிர்க்கழகு என்று திருத்தி ஸ்திரீகள் வயிற்றிலா அடிக்கவேண்டும்! அன்புள்ள கணவன்மார்களே! அபத்த பாடத்தை நம்பி ஏமாந்து போகாதிருப்பீர்களாக.

### இலவசமாய்க் கொடுத்தல்.

யாராவது ஒருவர் நமக்கு ஒரு பொருளை இனாமாகக் கொடுத்தால், அப்போது நாம் 'எனக்கு அவர் இதை இலவசமாகக்கொடுத்தார்' என்று சொல்லுகிறோம். அப்படிச் சொல்லும்போது இலவசமா, இலைவசமா, எப்படிச் சொல்லவேண்டுமென்பது தெரியாமலே சொல்லுகிறோம். இலவசம் என்பதற்கு இனாம் என்று பொருளிருப்பதாக மட்டும் நமக்குத் தெரியுமே ஒழிய, எதனால் அதற்கு அந்தப்பொருள் கிடைத்தது என்று நமக்குத் தெரியாது. இலை இலை என்றால், வெற்றிலை பாக்கோடு வைத்துக்கொடுத்தால் அது இனாமென்று தாத்பர்யம்; சன்மானஞ் செய்யும்போது செல்வர் வெற்றிலை பாக்கோடு வைத்துத்தான் துணியோ, மணியோ கொடுப்பது வழக்கம். இதிலிருந்து தான், இலைவசமாய்க் கொடுத்தாலென்பது இனாமாகக்கொடுப்பது என்ற அர்த்தத்தில் வழங்கிவருகிறது.

### பித்தளாட்டம் பண்ணுகிறான்.

யாராவது ஒருவன், ஒன்றை மற்றொன்று கமாறாட்டஞ்செய்து ஏமாற்றும்போது, 'ஓகோ இவன் பித்தளாட்டஞ் செய்கிறான்' என்று அடிக்கடி சொல்லுகிறோம். பித்தளாட்டம் என்பதற்கு மாறாட்டம் அல்லது மோசம் என்ற அர்த்தம் எதனால் கிடைத்ததென்பதை அநேகம்பேர் இன்னும் அறியாமலே இருக்கிறார்கள். பதங்களின் உண்மையான வடிவத்தையும், அவற்றின் அர்த்தங்களையும் ஆராய்ந்து தெரிந்துகொள்வதைப்போல் வேறு ஆனந்தம் என்ன இருக்கிறது? பித்தளாட்டம் என்பது பித்தளை ஆடகம் என்ற இரண்டு சொற்களின் சேர்க்கையாலாகியது. ஆடகம் என்பதற்குப் பொன் என்று அர்த்தம். ஆகவே பித்தளாடஞ் செய்கிறான் என்பது பித்தளையை பொன்னென்றுசொல்லி ஏமாற்றுகிறான் என்கிற அர்த்தத்தில் உபயோகப்படுவதாம். அது இப்போது சொரூபங்கெட்டுப் பித்தளாட்டம் என வழங்கப்பட்டு வருகிறது.

### உலக்கைக் கழுந்து.

ஒருவன் புத்திகூர்மை இல்லாதவனாக இருந்தால், அப்போது நாம் அவனைப்பார்த்து "என்னடா, உன்புத்தி உலக்கைக் கொழுந்தாயிருக்கிறது!" என்று சொல்லிப் பரிகாசஞ் செய்கிறோம். உலக்கைக்குக் கொழுந்து ஏது? எப்படி இந்த உபமானம் பொருந்தும் என்று நாம் சிறிதும் யோசித்ததே இல்லை. தப்பாக இருந்தாலும் பழைய வழக்கத்தைச் சரியென்றே ஸ்தாபிக்க முயலும் பிடிவாத குணமுள்ள சிலபேர், உலக்கை எப்படி கொழுந்துவிடாதோ அம்மாதிரி என்ன சொல்லியும் புத்திவிகாசம் உண்டாகாதவருக்கு இது உபமானமாகச் சொல்லப்படுகிறதென்றும் சம்ஸ்கிருதத்திலும் முசல கிசலயம் (முசலம்-உலக்கைக் கிசலயம் -கொழுந்து) என்று இருக்கிறபடியால், உலக்கைக் கொழுந்து என்றிருப்பதுசரிதானென்றும்சொல்லுகிறார்கள். கழுந்து என்பது முளை மழுக்கத்திற்கும், கைபிடித்துத் தேய்ந்த இடத்திற்கும் பெயர். விற்கழுந்து என்ற பிரயோகம் அடிக்கடி தமிழில் வருகிறது. கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் கழுந்தர் என்று அறிவில்லாதவர்களை சொல்லியிருக்கிறார். ஆகவே உலக்கை கழுந்து என்பதற்கு உலக்கையின் மழுங்கிய முனை என்று அர்த்தமாகும். இது மந்தமதிக்கு உபமானமாகச் சொல்லப்பட்டது. கழுந்து என்பதற்குப் பொருள் தெரியாதவர் கொழுந்தென்று திருத்த, அது பின்னர் முசலகிசலயம் என மொழிபெயர்க்கப்பட்டுப் போயிற்று.

## கேள் நெஞ்சே.

இன்னுமொருமுறை சொல்வேன்,
பேதைநெஞ்சே; எதற்குமினியுளைவதிலே
பயனொன் றில்லை.
முன்னர்கம திச்சையினாற் பிறந்தோமில்லை
முதலிறுதி யிடை நமது வசத்திலில்லை.
மன்னுமொரு தெய்வத்தின் சக்தியாலே,
வையகத்திற் பொருளெல்லாம் சலித்தல்
கண்டோம்.
பின்னையொரு கவலையுமிங்கில்லை நாளுர்,
பிரியாதேவிதெலையைப்பிடித்துக்
கொள்வோம்.

நினையாத விளைவெல்லாம் விளைந்து கூடி
நினைத்த பயன் காண்பதவள் செய்கை
யன்றோ?
மனமார வுண்மையினைப் புரட்டலாமோ?
மஹாசக்தி செய்நன்றி மறக்கலாமோ?
எனையாளுமாதேவி வீரர் தேவி இமையவருந்
தொழுந்தேவி!யெல்லைத் தேவி,
மனைவாழ்வு பொருளெல்லாம் வகுக்குந் தேவி
மலரடியே துணையென்றவாழ்த்தாய்
நெஞ்சே.

சக்தியென்று புகழ்ந்திடுவோம்
முருகனென்போம்,
சங்கரனென் றுரைத்திடுவோம், கண்ண
னென்போம்,
நித்தியமிங்கிவள் சரணே துணையென்றெண்ணி
நினக்குள்ளகுறைளையெல்லாந் தீர்க்கச்
சொல்லி
பத்தியினாற் பெருமை யெலாங் கொடுக்கச்
சொல்லிப், பசிபிணிக ளில்லாமற்காக்கச்
சொல்லி,
உத்தமநன்னெறிகளிலே சேர்க்கச் சொல்லி,
உலகளந்த நாயகிதா ளுரைப்பாய்
நெஞ்சே!

"செல்வங்கள் கேட்டால்நீகொடுக்க வேண்டும்,
சிறுமைகளென்னிடமிருந்தால்
விடுக்கவேண்டும்,
கல்வியிலே மதியினை நீ தொடுக்க வேண்டும்
கருணையினாலையங்கள்கெடுக்க
வேண்டும்,
தொல்லைதரும் அகப்பேயைத்தொலைக்க
வேண்டும், துணையென்று நின்னருளைத்
தொடரச் செய்தே
நல்லவழிசேர்ப்பித்துக் காக்கவேண்டும்,
நமோநமஓம்சக்தி" யெனநவிலாய்
நெஞ்சே!

பாட்டினிலேவருவதெலாமவள்சொல்லன்றோ
பயனின்றி யுரைப்பாளோ? பாராய்
நெஞ்சே,
கேட்டது நீ பெற்றிடுவாய்ஐய மில்லை.
கேடில்லை தெய்வமுண்டு வெற்றியுண்டு
மீட்டுமுனைக் குரைத்திடுவேன். ஆதிசக்தி
வேகத்தின் முடியினிலே விளங்குஞ்சக்தி,
நாட்டினிலே சனகனைப்போல் நமையுஞ்
செய்தாள், நமோ நம ஓம் சக்தியென
நவிலாய் நெஞ்சே!

சி. சுப்பிரமணிய பாரதி.

---

## காளயுக்தி ௵த்திய நவீன

## விஸ்வகர்ம காலண்டர்.

இக்காலண்டர் விஸ்வப்பிரம்ம உருவப் போட்டோ படம் அமைப்புடன் 12 மாதத்தின் தேதி வாரங்களுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் இங்கிலீஷ் தேதிகளும் தெரிந்துக் கொள்ளக்கூடிய விபரங்களும் செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இதன் விலை நாலணாதான். இதை வி. பி. மூலமாகப் பெறவேண்டுமானால் எட்டணா ஆகின்றது. அதன் விபரம் காலண்டர்கிரயம் 4-அணா. பார்சல் வீ. பி. சார்ஜ் 4-அணா, ஆகமொத்தம் 8 அணா ஆகிறது. நேரே பெறுகிறவர்களுக்குமட்டிலும் 4-அணாதான். இது ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்கவேண்டியது அவஸ்யம். ஆராதனைக்கும் உபயோகப்படக் கூடியது.

கோ. கன்னியப்ப ஆசாரி.
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

---

உ
சுபமஸ்து.
ஸ்ரீமத் விராட் விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்—தொழில்.

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள
சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.
301, தங்கசாலை வீதி, சென்னை.

சஃபுடம்-5] பிங்கள௵ பங்குனிமீ 1918௵ மார்ச்மீ [சஞ்-3.

## ஒளிவளர்விளக்கு.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஸ்ரீ கோ. கன்னியப்ப ஆச்சாரியார் அவர்கள் விஸ்வகர்ம வேதாத்தியயன பாடசாலைக்காக ஏற்படுத்தியிருந்த உண்டி, பாடசாலை நடைபெறாததினால், தண்டல் செய்யாமல் நிறுத்தப்பட்டிருந்தது. ஷை பாடசாலைக்காக சுபாசுபங்களில் கிடைத்த பலதானச் சில்லரைகளை அவ்வுண்டியில் சேகரித்து வந்ததில், 1918௵ மார்ச்சுமீ 15உ வரையில் சேர்ந்திருந்த ரொக்கம் ரூபாய் 25—5—8. இதுதவிர பழைய மிச்சம் பொன் அரையே மூணுவீச் அரைவீசம் வீராகனிடையும், வெள்ளி நான்கு ரூபா யெடையும் இருந்தன. இவற்றையும் கிரயப்படுத்தி மொத்த ரூபா 32—5—3 விஸ்வகர்மச்சிறுவர்கள் வித்தியாதான நிதிக்கு முதலாக வைத்து இதுமுதல் அந்த உண்டியை வசூலிக்கவும், அதில் சேரும் தொகைகளை மாதமாதம் எடுத்து ஷை வித்தியாநிதிக்குச் சேர்க்கவும் தீர்மானமாயிருக்கிறது. ஆகலால், விஸ்வகர்ம சந்ததியார்கள் ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்கேற்ப பொன், வெள்ளி, பணம் முதலியவைகளை ஷை உண்டியிற்போட்டு வருவதுடன் தங்கள் வீடுகளில் நடைபெறும் சுபாசுப காரியங்களில் இந்தத்தர்மநிதிக்கு ஒரு ரூபாய்க்கு குறைவுபடாமல் செலுத்திவர வேண்டுகிறோம். இன்னும், மொத்தமாகவோ மாதச் சந்தாவாகவோ பொருளுதவி புரிந்துவரவும் வேண்டுகிறோம். இங்ஙனஞ் சேரும் பொருளெல்லாம் விஸ்வகர்மச் சிறுவர்களுடைய வித்தியாதானத்திலேயே விநியோகிக்கப்படும். பொருள் கொடுக்கும் புண்ணியவான்களின் ஜாபிதா இப்பத்திரிகையில் மாதமாதம் வெளிவரும். இந்நிதிக்கு விசேஷ பொருள் சேர்ப்பதில் விஸ்வகர்ம ஜனங்களெல்லாம் மிகவும் ஊக்கமெடுத்துழைக்கும்படி வேண்டுகிறோம்.

* * *

திருவிராமேச்சுரமென்னும் மஹாக்ஷேத்திரத்தில் விஸ்வகர்ம சந்ததியாரனைவோர்களுக்கும் பரம்பரை பாத்தியமாக கீழ ரதவீதியில் கீழச்சரகில் அக்கிரசாலைப்பிள்ளையார் கோவிலும், அதைச்சேர்ந்த மடமும் நந்தவனமும் மேலைத்தெருவில் இராமலட்சுமண தீர்த்தங்களுக்குப் போகும் வழியில் வங்கநகர அக்கிரகாரம் ரோட்டுக்கு வடபுறத்தில் நந்திகேஸ்வர சிவலிங்கம், பிள்ளையார் கோவிலும், அதிக விசாலமான மடமும், நந்தவனமும் இன்னும் சில கட்டிடங்களுமிருக்கின்றன. நமது மடத்தின் விஸ்தீர்ணமோ அதிகமாயிருக்கிறது. ஆனால், சீர்திருத்தமில்லாதிருக்கிறது. இவ்வி

டம் யாத்திரைக்கு விஜயமாகிவரும் நமது ஜாதியார்களுக்கு சௌகரியமா யிருக்கும்படி ஷை மடம் இரண்டையும், கோவிலையும், அஸ்திவாரமுதல் விசாலமான கட்டிடமாக வெகுஜன உதவியைக்கொண்டு புதிதாய்க் கட்டவேண்டுமென்று இவ்வூர் வாசிகளில் காரியதரிசிகள் மூன்றுபேரும், பொக்கிஷாதிபர் ஒருவரும், கணிதபரிசோதகர் ஒருவரும், டிரஸ்டிகள் ஆறுபேரும், ஜனரல் மீட்டிங் மெம்பர்கள் 15-பேர்களுமாகத் தீர்மானிக்கப்பட்டு, 1917௵ ஜனவரி௴ 3உ இராமேஸ்வரம் சப் ரிஜிஸ்டிரார் ஆபீசில் 15-ரூபாய் ஸ்டாம்பில் ஒப்பந்த தஸ்தாவேஜு ரிஜிஸ்டராகி அதின் விபரப்படி நடந்துவருகிறது. இம்மகாக்ஷேத்திரத்தில் இக்குல தருமத்தை நிலைநாட்டிவைத்தவர்கள். அக்கிரசாலைப்பிள்ளையார் கோவில் கட்டிக் கும்பாபிஷேகஞ் செய்வித்தவர்களுமான ஜெகம்புகழும் ஜெயவீரசில்பி அவர்கள். விஸ்வகர்மகுலத் தர்மவான்கள் இத்தருமகாரியத்திற்கு பொருளுதவிசெய்யப் பிரார்த்திக்கப்படுகிறார்கள். வசூல் செய்யும் நேயர்கள் வசம் தஸ்தாவேசு காணலாம்.

* * *

சென்னை திராவிடன் பத்திரிகையில் 'நியூரிபார்மர்' பத்திராதிபர் டி. கோபால செட்டி என்பவரால் எழுதப்பட்ட 'பூணூல்'என்னும் மகுடங்கொண்ட வியாசம் இச்சஞ்சிகையில் பெயர்த்தச்சிடப்பட்டிருக்கிறது. அதில்“கம்மாளர்களைப்பிரிக்கும்போது எல்லா கலகங்களும் உற்பத்தியாயின. மநுதர்ம சாஸ்திரத்தின்படி தச்சர்களும் கருமார்களும் எண்ணெய் விற்பவர்களும் வைத்தியர்களும் அசுத்தமானவர்கள்! ஆரியவர்க்கத்தில் இத்தொழிலாளர் தாழ்ந்த ஜாதிகளில் விடப்பட்டனர். அதன்படி கம்மாளர்களை ஆரியர்கள் தாழ்ந்த ஜாதியாராகப்பிரித்து **தொடக்கூடாதென்று** வைத்தனர். அதனால் கம்மாளர் கலகத்திற்கு ஆரம்பித்தனர். அதன்பேரில் வலங்கை இடங்கை சண்டைகள் ஆரம்பித்தன. கம்மாளருடன் வாணிபர், கோமுட்டி முதலியவர்கள் சேர்ந்தனர். இவர்கள் பூணூலை மாட்டிக்கொண்டு வைசியராகவிரும்பினர். இவர்கள் இடங்கையர் ஆயினர். பூணூலை வேண்டாமென்ற மற்ற திராவிடர்கள் வலங்கையினராயினர். ஆகையினால் பூணூலைப்பற்றித்தான் இக்கலகங்கள் நேரிட்டன:”—என்பவாதி ஆக்ஷேபகரமான சில வாக்கியங்கள் காணப்படுகின்றன.

“கம்மாளர்களெல்லாம் திராவிடர்களென்றும் திராவிடர்களில் வேளாளர் முதலியவர்கள் உயர்ந்தவராக உலகம் ஒத்துளதால் கம்மாளர்கள் திராவிடர்களில் அனேகம்படி தாழ்ந்தவர்களென்றும், ஆகையால் பூணூல் தரித்துக்கொள்ள யோக்யதையற்ற ஜாதியாரென்றும் ஆரியக் கம்மாளர்களுக்கே மனுவாதிஸ்மிருதிகளில் இழிவு வற்புறுத்தியிருக்கும்பொழுது திராவிடநாட்டுத் தமிழ் கம்மியர்களாகிய திராவிடரிலும் தாழ்ந்த திராவிடர்களுக்கு பூணூல்தரிக்கும் பாத்தியமில்லையென்றும், ஆகையால் உபநயனசம்ஸ்காரத்திற்கு யோக்கியர் அல்லவென்றும் அதனால் த்விஜத்வமில்லையென்றும், த்விஜத்வமில்லாதபொழுது ஆரிய வேதோக்த பாத்தியங்களுக்கும் உரியர் அல்லவென்றும் ஷை வ்யாசத்தின் கருத்து” என்று கோயமுத்தூர் ஸ்ரீ C. R. சுப்பராய ஆசாரியாரவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். மற்ற குலாபிமானிகளும் இவ்வியாசத்தை நன்கு வாசித்து தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடவேண்டுகிறோம்.



## இரும்புந் தொழில்

(6-வது பக்கத்தொடர்ச்சி)

ஸ்ரீ C. கந்தசாமி ஆச்சாரியார், சென்னை.

வர்த்தகக் கைத்தொழிலுக்கு முக்கியமானதாய் இயற்கையாக அகப்படக்கூடிய இரும்பின் விகற்பங்கள் (1) Carbonate கார்போனேட் (2) Oxide ஆக்ஸைட். முதலாவது இரண்டு வகுப்பா யிருக்கிறது. (a) மண் கொஞ்சமேனும் கலவாதது. (b) களிமண் அதிகமாகவாவது சிறிதாகவாவது கலந்துள்ளது. இரண்டாவது மூன்றுவகுப்பா யிருக்கிறது. (a) பிராணவாயு மாத்திரம் ரசாயன வகையில் சேர்ந்துள்ள இரும்பு. (b) பிராணவாயுவும், (Oxygen) ஹைட்ரோஜன் வாயுவும் ரசாயனவகையில் சேர்ந்துள்ள இரும்பு. (c) காந்தசக்தியுள்ள பிராணவாயு கலந்த இரும்பு. (a) வகுப்பு இரும்பு மெதுவாயும் சுலபமாய்ப்பொடியாகத்தக்கதாயு மிருக்கிறது. இதற்குப் பெயர் ரெட்ஹேமடைட் ஓர் (Red haematite ore). இது சிவப்பாயிருக்கும். இது உருக்கு இரும்பை அடித்து இணைத்து வேலை செய்யும் இரும்பாகச் செய்கிறவர்களுக்கு அதிக உபயோகமானது. அது கடினமான இயற்கை ரசாயன ரூபத்தோடு கூடியும் அகப்படுகிறது. (Specular ore) ஸ்பெகுலர் ஓர் வெண்மையாகவாவது அல்லது கருப்பாகவாவது இருக்கும், அதிக பளபளப்புள்ளதாக இருக்கும். கடினமான இயற்கை ரூபத்தை அடைந்திருக்கும்.

இரண்டாவது விகற்பஇரும்புகள் அடிக்கடி அதிகபாகமான மண் கலப்புள்ளது. இன்னுமதிக கந்தகத்தையும் எரிபாஷாணத்தையும் (Phosphorous) கொண்டுள்ளது. அவைகளுக்குப்பேர் (Brown haematite bog iron orlimonite,) ரெட்ஹேமோடைட் இரும்புக்கும் இவைகளுக்கும் வித்தியாசமுண்டு. மண் கலப்பாக அகப்படுகிறது. பாளங்களாக அகப்படுவதில்லை.

மூன்றாவது உள்வகுப்புஇரும்புக்குப்பேர் மாக்னடைட்(Magnetite). சுத்தமானவிகற்பஇரும்பு களெல்லாம் அதிகக்காந்த சக்தியையுடையன. அநேகமாய் இரும்பை இழுத்துக்கொள்ளும்சக்தியையுடையதாக இருக்கிறது. இந்த ஸ்திதியிலுள்ள இரும்புக்கு (load stone) என்று பெயர். இந்தியாவில் மத்திய மாகாணங்களில் எல்லா விகற்ப இரும்புகளும் அகப்படுகின்றன.

சாதாரணமாய் அகப்படும் (Laterite) இரும்பு அதிக அசுத்தமானது. அது (Limonite) இரும்பின் அசுத்தமான விகற்பம். மத்திய மாகாணங்களில் எல்லா மலைத்தொடர்களுக்கு அருகிலும் இரும்புக்கற்கள் அகப்படுகின்றன. சிற்சில பாகங்களில் இரும்பு உலோகக்கற்களைரசாயன பரிசோதனை செய்ததில் நூற்றுக்கு 68 நல்ல இரும்பு தேறினதாகத் தெரியவருகிறது. சில கற்களில் நூற்றுக்கு 40 இரும்பும் 12மாங்கனீஸ் உலோகமும் அகப்படுகிறதாம். (Laterite) லாடரைட் உலோகக் கற்களில் நூற்றுக்கு 50 முதல் 57 இரும்பும் இதற்கும் அதிகமான பாஸ்பரஸ் உலோகமும் அகப்படுகின்றன. (Red ochre) இந்த விகற்க உலோகக் கற்களிலிருந்து உலோக வர்ணத்தை உண்டாக்குகிறார்கள். சில இடங்களில் (haematite) இரும்பு கூழாங்கல்களைப்போல் அகப்படுகிறது. அநேக நதிகளில் மணலோடு சேர்ந்து இரும்பு உலோக மணலும் அகப்படுகிறது.

### உலோகக்கற்களை எடுத்தலும் சுத்தம்செய்தலும்.

இந்து தேசத்துச் சுதேசிகள் சுரங்கங்களிலிருந்து உலோகக்கற்களைச்சேகரிக்கிறதில்லை. அவர்கள் பள்ளங்களிலிருந்து வெட்டி எடுக்கிறார்கள். அந்த இடம் அதிக விசாலமானதல்ல. அகலநீளவாட்டில் சில அடிகளே இருக்கின்றன. 20அல்லது 40 அடி ஆழமுள்ளனவாயிருக்கின்றன. சிற்சில இடங்களில் 60 - அடி ஆழமுள்ளனவாயிருக்கின்றன. இந்தப் பள்ளங்களில் வேலைசெய்யாதபோது கல்லும் மணலும் குவிந்து மேடாய் விடுகிறது. வேலைசெய்யும்போது அவைகளை முதலில் அப்புறப்படுத்த வேண்டியதாகிறது. சாதாரணமாய் ஒருகுழி இரண்டு மூன்று வருஷகாலம் வரைக்குந்தான் வேலைக்கு இடம் கொடுக்கிறது.

ஜலதாரை கண்ணுக்குப் புலப்பட்டதும் வேலையை நிறுத்திவிடுகிறார்கள். நீர் இறைத்துவிட்டு வேலைசெய்கிறமுறை சுதேசிகளுக்குத்தெரியாது. மழைகாலத்தில் இரும்பு உலோக சுரங்கங்களில் ஜலவெள்ளமாகிறது. கடினமில்லாத உலோக சுரங்கங்கள்தான் வேலை செய்யப்படுகின்றன. சுதேசிகளுடைய ஆயுதங்கள் கடினமான உலோக சுரங்கங்களில் உலோகக் கற்களை வெட்டி எடுப்பதற்குத் தகுதியற்றனவா யிருக்கின்றன. முன்னதாகத் தோண்டப்பட்டு நீரால் கழுவிப் பிரித்த இடங்களின் அடையாளங்களைக் கொண்டு இரும்பு உலோக பூமி என்று அறிந்து வேலையை ஆரம்பிக்கிறார்கள்.

மழை காலத்தில் வெள்ளம் இந்த வேலையைச் செய்கிறது. இரும்பு குவிந்திருக்கும் இடங்களைத் தயாரித்துக்காட்டுகிறது. ஜலம் ஓடும்போது இரும்பையெல்லாம்ஒரு இடத்தில் குவித்திருக்கச்செய்கிறது. இரும்புக்கும் இலேசான கற்களை அப்புறப்படுத்துகிறது. ஆகையால், இயற்கை இரும்பின் பூசார பரிசோதனை செய்வது அனுவசியமாகிறது. மழையால் ஏற்பட்ட இந்த சௌகர்யமான இடங்களில் சுரங்கக் கற்களைத் தூள்செய்து எடுக்கும் இரும்பைவிட அதிக இரும்பு அகப்படுகிறது. ஆகையினால்தான் சுதேசிகள் சுரங்கத்தில் வேலை செய்வதைப் பராமரிக்கை செய்கிறார்கள்.

இந்த இடங்களில்மாத்திரம் வேலை செய்வதற்கு மூன்றாவது காரணம் என்னெனில் சுதேசிகளுடைய இரும்புப் பிரிவினை செய்யும்விதம் அதிக பூர்வீகமானபடியால் இரும்புக்கற்களைச் சிறுசிறு குவியல்களாகக் காளவாயில் செலுத்தவேண்டியதாக இருக்கிறது. மழையால் ஏற்பட்ட சௌகர்ய இடங்கள்தான் சிறுசிறு குவியலான மணல் உலோகக்கற்களைக் கொடுக்கின்றன. இவ்வுலோகப் பிரிவினை செய்யும் தொழிலாளர்களுக்குப் பாதிவேலை சகாயமாகிறது. உலோகமணல் கற்கள்பெருங்குவியலாக அகப்படுகிற இடங்களில் அப்பெருங்கற்களைத் தூள்செய்து வேலையை நடத்தவேண்டியதாகிறது.

சில இடங்களில் இப்பெரும் உலோகக் கற்களை கல்லால் உடைத்து பிறகு இரும்பாயுதங்களால் உடைப்பதற்குப் பதிலாக நெருப்பில் சுட்டு பிறகு வெட்டுளியால் தூளாக்குகிறார்கள். உலோகக் கற்களைக் கோடரியால் வெட்டி பூமியிலிருந்து எடுக்கிறார்கள். சில வேளைகளில் கற்களின்மேல் ஒருவன் வெட்டுளியைக் குறட்டினால் பிடித்துக்கொண்டிருக்கிறான். வேறொருவன் அந்த வெட்டுளியின்மேல் சம்மட்டியால் பலமான தாக்குகள் போடுகிறான். அந்தக் கற்களிலிருந்து இரும்பு உலோகக் கற்கள் மொத்தமாக வெளியாகின்றன.



## பூணூல்.

(டி. கோபாலசெட்டி, 'ரியூரிபார்மர்' "திராவிடனுக்கு" பத்திராசிரியர் எழுதியது).

இப்பூணூலை ஆரியர் உப வீதம் என்பர். இதை ஆரியஜாதியினராகிய பிரம்ம க்ஷத்திரிய வைசியராகிய இருபிறப்பாளர் தரிக்கு முரிமையுடையவர். வர்ணாஸ்ரம ஒழுக்கத்தினை நன்கெடுத்தோதும், மனுஸ்மிருதி, பராசரஸ்மிருதி யாஜ்ஞாகிய ஸ்மிருதி முதலிய ஆரிய ஸ்மிருதிகளில் அதைத் தரிக்க உரிமையுடையார் யாரென்றும், தரிக்கவேண்டியது யாதென்றும், தரிக்கும் முறை தொகை இவையென்றும் கூறப்பட்டுள்ளன. அது முதுகெலும்பின்மீதும் தொப்புளின்மீதும் விழும்படி இடைவரையும் இடது தோளிலிருந்து தொங்கியிருக்கும்படி தரிக்கும் முப்புரி நூலாம். இது ஏறவுமாகாது; குறையவுமாகாது எனக் காத்தியாயனர் கூறுகின்றனர். பருத்தி, பட்டு, பசுவாலின் மயிர், சணல், மரநார், வைக்கோல், ஆட்டுமயிர் இவற்றால் ஆரிய இருபிறப்பாளர் தரிக்கலாமென மனு கூறுகின்றார்.

இவற்றுள்ளும் வருணபேதங்கள் விளங்கு. நிமித்தம் அந்தணர் அரசர் பட்டும், வைசியருக்கு ஆட்டு மயிராலாகிய நூல் இவைகளால் உபவீதம் தரிக்கவேண்டுமெனவும் மநு கூறுகின்றனர். இவ்வுபவீதம் சதா தரிக்கவேண்டுமெனவும் ஸ்மிருதிகள் கூறுகின்றன. இவ் "வுபவீதம் எதற்காக ஏற்பட்ட" தென்றால் துறவிகள் தமதகம் பழுத்ததெனத் தோன்றுமாறு புறத்தே பழுப்புநிறமுள்ள காவியுடை தரிக்கிறார்கள். அதுபோல் அகத்தே நூலாராய்ச்சியுள்ளார் என்பது தோன்ற புறத்தே மார்பில் நூல் தரித்துக் காட்டுங் குறியெனக்கொள்க. நாசமற்ற பிரமமெதுவோ அது ஸூத்திரம் (நூல்) என்று தரிக்கவேண்டும். சத்தியத்தைக் காட்டுதலினால் பரமபதமே சூத்திரமெனப்படும். அச் சூத்திரத்தை அறிந்தவனே வேத முடிபுணர்ந்தவன். நூலில் மணிகளைக் கோத்தாற்போலும் எதினால் இவ்வுலகு கோக்கப்பட்டுள்ளதோ அந்த நூலினை யோகமுணர்ந்து தத்துவத்தினை நோக்கும் யோகி தரித்தல் வேண்டும். பிரமபாவனையாகிய இந்த சூத்திரத்தினை யறிவுடையோன் தரிப்பன். யாவன், ஒருவனுள்ளே இந்த ஞானசூத்திர முண்டா யிருக்குமோ அவனே சூத்திரமுணர்ந்தவனும் உபவீதமுடையவனுமாம். இப்பூணூலைத் திராவிடர் தரிக்க நியாயமுண்டோ? அதைச் சற்று விசாரிப்போம். பூணூல் ஜாதியைக் காண்பிக்கும் குறி:— ஆரியர் தமிழகம் வந்து சேருவதற்கு முன்னர் திராவிடருள் ஜாதி வித்தியாசமென்பதே கிடையாது. இரு பிறப்பாளர் ஒரு பிறப்பாளர் என்கிற வித்தியாசங்களிவர்களுக்குள் தெரியாது. எல்லோரும் ஒரு வகுப்பினராய் ஒருவரோடொருவர் பிரதிபோஜனம் செய்துகொண்டும் விவாகங்கள் நடத்திக்கொண்டும், 'திரைகடலோடியும் திரவியந்தேடு' என்றபடி அன்னிய தூரதேசங்களுக்கு கப்பல் யாத்திரை செய்து வியாபாரங்கள் நடத்திக்கொண்டும் சிறப்புற்று சகோதரபாவம் நிறைந்தவர்களாயிருந்தார்கள்.

ஆதியில் திராவிடரில் எண் வகுப்புகளிருந்தன. அவையாவன:—அறிவர், உழவர், ஆயர், வெட்டுவர், கண்ணாளர், படையாச்சியர், இவைகள் ஜாதி வித்தியாசங்கள் அல்ல. மேலும், அவர்கள் ஐந்திணைகளை அனுசரித்து குறிஞ்சி மக்கள் என்றும், முல்லை மக்கள் என்றும், மருதமக்கள் என்றும், நெய்தல் மக்கள் என்றும், பாலைமக்கள் என்றும் பிரிந்திருக்கின்றனர். இதுவுங்கூட ஜாதி வித்தியாசங்கள் அல்ல.

பிராமணரைப் பார்த்து கபிலர் "நாற்குலஜாதியை யிந்நாட்டில் நீர் நாட்டினீர்" என்றமையால் ஆரியர் ஜாதி வித்தியாசத்தை இந்நாட்டிலேற்படுத்தினர் என்று ஏற்படுகிறது. அவரை யனுசரித்து பத்திரகிரியாரும்,

"ஆதிகபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே, சாதிவரை யில்லாமல் சஞ்சரிப்ப தெக்காலம்" என்றார். கி.பி. 600 முதல் 1100 வரையில்கூட திராவிடருள் ஜாதி வித்தியாசங்

களை பிராமணர்கள் ஏற்படுத்த முடியவில்லை. ஏனென்றால், அக்காலங்களில் ஜாதி வித்தியாசமில்லாமல் தமிழர் ஒருவரோடொருவர் பிரதி போசனம் விவாகம் முதலிய செய்துகொண்டு வந்தனர். சுந்திரமூர்த்தி சுவாமிகளும் வேசி வீட்டில் வளர்ந்த பரவையாரையும், வெள்ளாளமாதாக வளர்ந்த சங்கிலியாரையும் விவாகம் செய்துகொண்டனர். வேளாளராகிய அப்பர் சுவாமிகள் அப்பூதியுடன் போசனம் செய்தனர். ஜாதிப் பட்டங்களாகிய "பிள்ளை" முதலியவைகள் கி.பி. 17-வது நூற்றாண்டு வரையில் ஜாதியைக் குறிப்பிடமாட்டாமல் தடுமாறின. மனுதர்ம சாஸ்திரத்திலேயே **ஆரியர் வேறு, திராவிடர் வேறு** என்று ஏற்படுகிறது ஆரியர் இத்தமிழகம் வருமுன் இப்பூணூல் என்பதே திராவிடர்களுக்குத் தெரியாது. மூவரசராகிய சேரசோழ பாண்டியர் அதைத் தரித்ததில்லை. அது அவர்களுக்கு எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டதல்ல.

ஆரியர் தமிழகம் வந்துசேர்ந்து ஜாதி வித்தியாசங்கள் ஏற்படுத்தியபின்னர் சிலர் பூணூலை மாட்டினர். அப்படி மாட்டிக்கொண்டவர்களும் மகிழ்ந்தனர். இப்பவும் அநேகர் அதை மாட்டிக்கொள்ளப் பார்க்கிறார்கள்

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்னிருந்த தொல்காப்பியர் அதைத் தமிழகத்தில் ஏற்படுத்த முயன்றனர். தன் தொல்காப்பியத்தில் தமிழரை நான்கு வகுப்பினராகப் பிரிக்கின்றனர். முதலாவது பிராமணர் அல்லது பார்ப்பாரைக்குறித்து முடிவில் வருமாறு வரைகின்றனர்.

நூலேகரக முக்கோண் மனையே
யாயுங்காலை யந்தணர்க்குரிய'

பொருள் மரபியல் 626-வது பாடல். இதிலவர் அந்தணர் என்றது பார்ப்பனரை. அவர்களுக்கு நூல்அதாவது 'பூணூல்'' தரிக்கப் பாத்தியமுண்டென்கிறார். மற்ற திராவிடர்களை அரசர், வைசியர், வேளாளர் எனப்பிரித்து அவர்களைப்பற்றிய பாடல்களில் பூணூல் சங்கதி கிடையாது. அவர் 'அந்தணர்' என்றது பார்ப்பாரை அல்லவென்றும், திராவிடரில் சிறப்புற்ற 'அறிவர்' ஆக இருக்கலாகாதோ எனும் ஐயம் பூணூல் போட்டுக்கொண்டு மேலானவர்களாக ஏமாற்ற நினைக்கும் சிலருக்கு உண்டாகும். அவ்விதம் ஐயமுற யாதொரு முகாந்திரமும் கிடையாது. எவ்வாறெனில், இவ் 'வறிவர்' என்போர் தொல்காப்பியருக்கு நன்றாய்த் தெரியும். அவரிட தொல்காப்பியத்தில் 'அறிவரைப்'பற்றி அடிக்கடி உதகரிக்கிறார். அவர்கள் அதிக மரியாதை யடைந்தவர்களென்றும், அவர்களுக்குத் திரிகால கியான முண்டென்றும், அவர்கள் ஊர்களின் வெளியே வசித்தார்களென்றும் ஞானிகளென்றும் பிராமணர்கள் தூர்நடத்தை யுள்ளவர்களா யிருந்தபடியினால் அவர்களுடன் சேரவில்லையென்றும் தொல்காப்பியத்தில் வரைந்துளார் பொருள் 502-வது பாடல். —

"1800 வருஷங்களுக்கு முன் தமிழர் சரித்திரம்'' வரைந்த கீர்த்திபெற்ற ஸ்ரீமான் கனகசபை என்பவர் தொல்காப்பியர் மேல்சொல்லிய 'அந்தணர்' என்பவர் பார்ப்பார்தான் என்பதை அடியில் வருமாறு தன்னிட நூலின் 116-வது பக்கத்தில் வரைந்துளார். 'கி. மு. முதலாவது இரண்டாவது நூற்றாண்டில் தொல்காப்பியர் என்கிற பிராமணரால் எழுதப்பட்ட பூர்வீக தமிழ் இலக்கணத்தில் அறிவர்களைக் குறித்து அடிக்கடி உதகரிக்கப்பட்டிருக்கிறது. அறிவர் என்பதை எடுக்காமலே பூணூல் தரிக்கும் பிராமணர்களை முதல் வகுப்பில் வைக்கின்றனர். ஸ்ரீமான் சேஷகிரி ராஜா சம்பிட "பூர்வீக திராவிடர்'' சரித்திரத்தில் அடியில் வருமாறு கூறுகின்றார். ''அந்தக் காலங்களில் திராவிடரில் உயர்ந்த வகுப்பினர்கூட பூணூல் தரித்ததில்லை'' தமிழில் சிறப்புற்ற புரொபசர் பி. சுந்திரம் பிள்ளை எம் ஏ. அவர்களும இம்மாதிரியே நினைத்தார். மேலும், ஸ்ரீமான் கனகசபை தம் நூலில் வேறோரிடத்தில் அடியில் வருமாறு சொல்லுகிறார். 'பூணூல் தரித்து புனிதரானவர்களுக்கு ஆரிய இருபிறப்பாளர் என்று சொல்லியது பூர்வீக தமிழிலக்கண விலக்கியங்



களில் பிராம்மணர்களையேகுறிக்கிறது ஆனபடியினால் தொல்காப்பியத்தில் பூணூல் தரித்தவர் பிராமணர்தாம் என்பதும் திராவிடரில் யாருமே தரித்ததில்லையென்பதும் ஏற்படுகிறது.

கி. பி. ஏழாவது நூற்றாண்டிலிருந்த திவாகரர் தம் திவாகரத்தில் பிராமணரைப்பற்றி அடியில் வருமாறு உரைக்கிறார்.

"அய்யர், வேதியர். இருபிறப்பாளர், மெய்யர், மிக்கவர்; மறையோர், பூசுரர், அந்தணர், நூலோர், அறுதொழிலாளர், செந்தீ வளர்ப்போர், உயர்ந்தோராய்ந்தோர், ஆதிவருணர், வேதபாரகர், விப்பிரர், தொழுகுலத்தோர், வேள்வியாளர், முப்புரிநூலோர்முனிவரென்றிவை தாம் தப்பிலா பார்ப்பார் தம் பெயராகுமே"

இப்பாடலில் முப்புரிநூலோர் என்றது முப்புரிகளுடைய பூணூல் தரிக்கும் பிராமணருக்கு ஓர் பெயராம்.

கி-பி. 12வது நூற்றாண்டிலிருந்த ஒளவையார் அடியில் குறித்த பாட்டில் 'நூல்' என்னும் பதத்தை பிராமணருக்கு உபயோகப்படுத்தினர்.

"நூலெனிலோ கோல்சாயு நம்தமரேல் வெஞ்சமராம், கோலெனிலோ வாங்கேமுடிசாயும்—நாலாவான், மந்திரியுமாவான் வழிக்குத் துணையாவான், இந்த வரசே யரசு"

கி-பி. 16, 17-வது நூற்றாண்டிலிருந்த மண்டல புருடனர் தமது சூடாமணி நிகண்டில் பிராமணரை அடியில் கண்ட வகையாய் விவரிக்கின்றனர்

"ஐயர் வேதியரே நூலோ ரறுதொழிலாளராய, மையில் பூசுரரே செந்தீ வளர்ப்பவர் தொழுகுலத்தோர், பொய்யில்ந்தணரே'வருணர்முப்புரி நூன்மார்பர், மெய்யர் விப்பிரரே வேதபாரகர் வேள்வியாளர்'' இப்பாடலில் 'முப்புரி நூன்மார்பர்' என்பது பிராமணருக்கு ஓர் பெயர்.

மற்ற வகுப்பினரைக்குறித்துச் சொல்லும்போது திவாகரரும் மண்டல புருடனரும் தங்கள் அகராதிகளில் 'பூணூல்' சங்கதியே எடுக்காமல் விட்டபடியினால் திராவிடரில் யாரும் பூணூல் தரித்ததே இல்லையென்றும் தரிக்க நியாயமில்லையென்று மேற்படுகிறது.

'ஆறுகெட நாணலிடு ஊருகெட நூலைவிடு' என்று ஓர் பழமொழி தமிழிலுண்டு. அதிலுங்கூட நூல் அல்லது பூணூல்தரிப்பவர் பிராமணரெனவாகிறது.

ஆகையினால், தென்னிந்தியாவிலிருக்கும் திராவிடர் பூணூல் தரிக்க யாதொரு சுதந்தரமுமில்லாதவரா யிருக்கின்றனர். மேல்கூறியவைகளால் 17-வது நூற்றாண்டுவரையில் திராவிடர் யாரும் அதைத் தரித்ததில்லை அல்லது அதைத்தரிக்க நியாயமில்லை என்பது ஏற்படுகிறது. வட ஆற்காடு ஜில்லா மானியுலில் வன்னியர்கள் அதை சுமார் 50 வருஷத்திற்குமுன் தான் தரிக்க வாரம்பித்தனரென்று கூறுகின்றார்.

தமிழகத்தில் பௌத்த சமணமதங்கள் தூரத்தப்பட்டு ஆரியர்கள், ஆரிய ஜாதி வகுப்புகளாகிய பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்ற ஜாதி வித்தியாசங்களை திராவிடருள் ஏற்படுத்த முயன்றபோது 'பூணூல்' தோன்றிற்று. அப்பூணூல் வலங்கை இடங்கை சண்டைகளுக்கு காரணமானது. அக்கதையை இங்ஙனம் சுருக்கிச்சொல்வோம். தமிழகத்தில் ஒரே ஜாதியாராய் சமாதானமாகவும்சுகமாகவும் வாழ்ந்துகொண்டிருந்த திராவிடருள் ஆரிய ஜாதி வித்தியாசங்களை சரியான வம்சஸ்தரல்லாத தமிழர்களின் உதவியைக்கொண்டு ஆரியரேற்படுத்த முயன்றபோது திராவிடரில் கலகங்களுண்டாயின. எவ்வித திராவிடரும் மற்றவர்களைவிடத் தாழ்ந்தவரென்றொத்துக்கொள்ளவில்லை. ஏனையோர்மட்டும் பறையரை சுலபத்தில் ஒதுக்கிவிட்டனர். பௌத்த மதத்தைச் சார்ந்தவர்களா யிருந்தபடியினாலும் ஆரிய வேதங்களை நம்பாதவர்களானபடியினாலும் ஆரியர் யோக்கப்படி பறையர்கள் 'சண்டாளர்' ஆயினர் மனுதர்ம சாஸ்திரப்படி சண்டாளர் கிராமத்தின் வெளியேயிருக்கவேண்டும். அவர்களுக்கு மாத்திரம் கிடையாது. செல்வம் நாய்களும் கழுதைகளுமே. அவர்களுடைய உடுப்புகள் சவத்தின்

லிருப்பவை; சாப்பிடும் பாத்திரமோ உடைந்த சட்டி. ஆகையால், 'பறைய'ரென்போரை வெளிப்படுத்தி நாளதுவரையில் மநுதர்ம சாஸ்திரத்தின்படி நடவடிக்கை நடத்திவிட்டனர்.

பின்னிட்டு, கம்மாளர்களைப் பிரிக்கும்போது எல்லா கலகங்களும் உற்பத்தியாயின. மநுதர்ம சாஸ்திரத்தின்படி தச்சர்களும் கருமார்களும் எண்ணெய் விற்பவர்களும் வைத்தியர்களும் அசுத்தமானவர்கள்! ஆரியவர்க்கத்தில் இத்தொழிலாளர் தாழ்ந்த ஜாதிகளில் விடப்பட்டனர். அதன்படி கம்மாளர்களை ஆரியர்கள் தாழ்ந்த ஜாதியாராகப் பிரித்து தொடக்கூடாதென்று வைத்தனர். அதினால் கம்மாளர் கலகத்துக்கு ஆரம்பித்தனர். அதின்பேரில் வலங்கை இடங்கை சண்டைகள் ஆரம்பித்தன. கம்மாளருடன் வாணியர் கோமுட்டி முதலியவர்கள் சேர்ந்தனர். இவர்கள் பூணூலை மாட்டிக்கொண்டு வைசியராக விரும்பினர். இவர்கள் இடங்கையர் ஆயினர். பூணூல் வேண்டாமென்ற மற்றத் திராவிடர்கள் வலங்கையினராயினர். ஆகையினால் பூணூலைப்பற்றிதான் இக்கலகங்கள் நேரிட்டன. இப்பூணூலால் அனேக ஆண்டுகளாக திராவிடருள் ஒற்றுமையற்று கலகங்கள் உண்டாயின. கடைசியாக ஆங்கிலேயர் இத்தேசம் வந்தபின் அவைகளெல்லாம் ஒருவாறு அடங்கி நிற்கின்றன.

தற்காலம் ஆங்கிலேய அரசாட்சியில் முற்காலத்தைப்போல் கலகங்கள் நேரிட வழியில்லையென்று தெரிந்து அனேக ஜாதியார் மாமிசம் புசித்தலைவிட்டு பூணூலை மாட்டிக்கொண்டு வைசியராகப் பார்க்கிறார்கள். தென்னிந்தியாவில் ஜாதிக்கூட்டங்களெல்லாம் ஜாதி வித்தியாசங்களை அதிகப்படுத்துகின்றன. ஒவ்வொரு ஜாதியாரும் மேல்ஜாதியில் தாக்கல் செய்துக்கொள்ள பார்க்கிறார்கள். இம்மாதிரி இவர்கள் செய்வதினால் அது எல்லா ஜாதியாரும் ஒற்றுமையாயிருப்பதை தடுக்கிறது. சுத்த திராவிடர் இவைகளுக்கு இடங்கொடாது எந்த திராவிடனும் பூணூல் போட நியாயமில்லையென்று அறிந்து அப்பூணூல் தரிக்கலை விட்டுவிட்டால் எல்லா சண்டைகளும் ஒழியும். ஒரே ஜாதியராகலாம்.

இது நிற்க, இப்பூணூல் தரித்தல் ஆரியதுவிஜர்களாகிய பிரம க்ஷத்திரிய வைசியரில் ஞானமுடையோர்களுக்குமட்டும் பாத்தியமிருக்க ஆரிய சாஸ்திரங்களுக்கு சம்பந்தப்படாத திராவிடருள் சில முழு மூடர்களும் தரிக்கிறார்கள். இது சுத்த பிசகு. அப்படி மூடர்களும் தரிப்பதினால் அவர்கள் பூணூல் தரிக்கும் ஜாதிகளில் சேர்ந்தவர் என்பதைக் காண்பிக்கிறதேயொழிய ஞானமுடையாரென்பதைக்காண்பிக்கிறதில்லை சர்வகலாசாலையார் ஓர்வித பரிட்சைகள்செய்து கவுன் (Gown) கொடுக்கிறார்கள். அது B. A. M. A. முதலிய பரிட்சைகளில் ஒன்றைச் செய்தவர் என்பதைக் காண்பிக்கிற ஓர் அடையாளமாயிருக்கிறது. இப்பூணூல் தரிப்பதற்கு இம்மாதிரி ஞானபரிட்சை யாதொன்றும் கிடையாது. அப்படியிருக்க, நிர்மூடன் ஒருவன் பூணூலை மாட்டிக்கொண்டு பிரமஞானம் வந்துவிட்டதென்றும், தான் மேல்ஜாதியானென்றும் சொல்வதில் பிரயோசனமென்ன? அவ்வித பிரமஞானம் வந்துவிட்டது ஜாதியேது குலமேது? திருமூலருக்கும் மற்றவர்களுக்கும் அடையாளங்கள் இஷ்டமில்லை ஞானமே சிரேஷ்டம் என்பர்.

திருமூலர் சொல்லுகிறார்:—
'ஞானமிலார் சடைசிகை நூலணிந்து
ஞானிகள் போல நடிக்கிற வர்தம்மை
ஞானிகளாலே நரபதி சோதித்து
ஞான முண்டாக்குத னலமாகு நாட்டிற்கே
என்றார்.

பட்டினத்துப்பிள்ளையாரும்—"கோமங்க ளிட்டைகள் வேதங்களாகம நீதிநெறி, ஓமங்கடர்ப்பணஞ் சந்திசெப மந்த்ரயோக நிலை, நாமங்கள் சந்தனம் வெண்ணீறுபூசி நயமுடனே, சாமங்கடோறு மிவர்செய்யும் பூசைகள் சற்பனையே" என்றார்.

அகப்பேய் சித்தர் சொல்லுகிறார்—
"தீர்த்தமாடி னாலும் அகப்பேய்



தீவினைபோகாதே
ஊத்தை போனாலும் அகப்பேய்
ஊழ்வினை தீராதே"

சிவவாக்கியர் சொல்லுகிறார்—
"இருக்கு நாலுவேதமும்
எழுத்தறவே யோதினும்
பெருக்க நீறுபூசினும்
பிதற்றினும் பிரானிரான்"

ஞானம் நிறைந்த திருமூலர், திருவள்ளுவர், மெய்கண்டதேவர், நம்மாழ்வார், தாயுமானவர் முதலிய பெரியோரில் ஒருவராவது தங்களுக்கு ஞானம் வந்துவிட்டதென்று பூணூலை மாட்டிக்கொண்டு திரிந்தனரோ? இல்லை என்க.

பூணூல் என்பது விபூதி நாமம் ருத்திராக்ஷம் முதலியவைபோன்ற ஒன்றன்று. பூணூலைப்போல் அவைகள் ஜாதியைக் காண்பிக்கும் குறிகள் அல்ல. எச்சாதியாயினும் அவைகளைத் தரிக்கலாம். விபூதி ருத்திராக்ஷம் நாமம் தரித்துக்கொண்டு தான் மேலான ஜாதியான் என்று சொல்லுகிறதில்லை. பூணூல் ஆரிய சின்னம். மற்றவைகள் திராவிட சின்னங்கள்.

குமரிக் கண்டத்திலிருந்த நூல்களெல்லாம் பிரளயங்களில் கடலுக்கு இரையாயின. பிற்பட்டு தமிழ் நாட்டரசர்கள் சேகரித்து வைத்திருந்த நூல்களெல்லாம் வியாசர் காலத்திலும் வைத்துல்லியன் காலத்திலும் சமணர்காலத்திலும் மகம்மதியர் காலத்திலும் நெருப்புக் கிரையாயின. மேல்படி காரணங்களால் இறவாமல் எஞ்சிநின்ற அனேக நூல்கள் செல்லுக்கிரையாயின.

ஆகையினால் தமிழ் நூல்கள் எல்லாம் ஒன்றுமகப்படாமல் போகவே பின்னிட்டு வித்துவான்கள் "வியாசர் கட்டுப்பாடு" செய்து எழுதிய நூல்களையே ஆதாரமாக எண்ணி தமிழர்களெல்லாம் ஆரியர் என்று சரித்திரம் தெரியாமல் கூறிப்போனார்கள். ஆரியர்கள் தமிழர்களிடத்திலின்றும் தங்களுக்கு வேண்டியது எவ்வளவோ அவ்வளவுமாத்திரம் தெரிந்துகொண்டு தங்கள் சுய நன்மைகளைக்கோரி எழுதிக்கொண்ட நூல்களையே தமிழ் வித்வான்கள் உண்மையான நூல்களென்று நம்பி தாங்கள் அவைகளை அனுசரித்தும் பிறரை அனுசரிக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டும் போயினர். அவ்விதக் கொள்கையை யனுசரித்து அனேக நூல்களையும் எழுதிவிட்டனர். தற்கால சரித்திரம் தெரியாத தமிழ் வித்வான்களும் அப்படியே எழுதத் தயாராயிருக்கிறார்கள்.

ஆரியர் தமிழகம் வந்து சேர்ந்தபின்னர் தங்கள் சிறப்பையும் செல்வத்தையும் நாகரீகத்தையும் ஒருங்கே யிழந்து சீர் அழிந்தனரென்று தெளிவாக விளங்குகிறது.

ஆரியர் பூர்வ அரசரிடத்தில் மந்திரிகளாகவும், கல்விச் சங்கத்தாராகவும் அமர்ந்து இதிகாசம் எழுதியவரால் எழுதப்பட்ட சரித்திரங்கள் அரசர் முன்பாக கொண்டுவரப்பட்டு அங்கீகரித்தல் செய்யவேண்டுமென்று நியமனமிட்டு அவ்வாறே கொண்டுவரப்பட்ட இதிகாசங்களில் தங்களைப் புகழ்ந்திருப்பவைகளை அங்கீகரிக்கச்செய்து தங்கள் பூர்வோத்திரங்களில் உள்ளதை உள்ளபடி எழுதியிருப்பவற்றை அழிக்கச்செய்ததினாலும் பூர்வ சரித்திரங்களை ஒழிக்கச்செய்ததினாலும் இத்தமிழர் நாட்டின் பூர்வ சரித்திரமில்லாமலும் போயிற்று.

பூர்வகாலத்தில் ஆரியரே வானசாஸ்திரம் முதலியவைகளையும் தெரிந்திருந்தபடியாலும் திராவிடர் அச்சாஸ்திரம் தெரியாதவர்களாயிருந்தபடியினாலும் அவர்கள் இத்தேச மன்னவர்களிடத்திலும் பிரஜைகளிடத்திலும் எதிர் காலங்களில் சம்பவிக்கும் சூரியசந்திரகிரணங்களைப்பற்றி முன்னறிவித்து அவ்வாறே சூரியசந்திராதிகள் மறைந்து போவதைக்காண்பித்து அதிசயிக்கும்படி செய்து தங்களிடத்தில் என்றுமில்லாத மதிப்பையும் கௌரவத்தையும் அச்சத்தையும் வருவித்துக்கொண்டனர். ஆகாயத்தில் தோன்றும் வியாழன் முதலிய கிரகங்கள் சுயகுலத்தைக்கோரி பிராமணர்களென்றும் அவர்கள் கடவுள் தன்மைபெற்று சுடரொளி தேகத்தையடைந்து நட்சத்திர மண்டலங்களில் கிரகங்களாக உயர்த்தப்பட்டார்களென்றும், அக்கிரகங்களின் சுயகுலத்தாராகிய தங்களால் செய்யப்ப

டும் கிரியைகளை அக்கிரகங்கள் அங்கீகரித்துக் கொண்டு 'தாங்கள் வேண்டுவதை அளிக்கின்றனவென்றும் மொழிந்து மனிதருக்கு நேரிடும் மனவருத்தம் பிணியாதிகளை நிவர்த்திக்க நவக்கிரகசாந்தி கிரியைகளை தங்களைக்கொண்டு செய்விக்கப்பட வேண்டுமென்றும் மற்ற, வல்லமையினாலும் யாகாதி கிருத்தியங்களினாலும் மழை பெய்விக்க தங்களுக்கு வல்லமை யிருக்கிறதென்றும் மொழிந்து அவற்றைத் தங்களைக்கொண்டு செய்வித்தும் இன்னும் பலவித அச்சங்களை உண்டாக்கி தங்கள் ஜீவனத்திற்கு பலவழிகளை ஏற்படுத்திக்கொண்டனர்.

ஆரியர்கள் தங்கள் வாக்கு அணுவும் தவறாமல் நாளடைவில் அனைத்தும் நிறைவேறுமென்று அரசர் உள்ளத்தில் வழுவான நியாயத்தால் உறுதி பிறப்பித்ததினாலேயே சொல்லும் இயற்கையுள்ள ஆரிய வாக்குறுதியை நம்பி தங்கள் பொருள்களை அவர்களுக்குச் சமர்ப்பித்து அவர்கள் வசமாகி அவர்கள் சொன்னபடியெல்லாம் ஆடினார்கள். அப்போது திராவிடர் பட்சபாதமின்றி சகலரையும் காக்கும் பூர்வீகச் சட்டதிட்டங்களையே காத்து ஒழுகும்படியும் நயத்திலும் பயத்திலும் பலவிதம் செய்து அவர்களைத் தங்களுக்குக் கீழ்படுத்திக்கொண்டு தங்களை மந்திரிகளாகவும் உயர்த்தவேண்டுமென்று மகுட வர்த்தனர்களை கேட்டமைந்து எங்கும் வியாபித்து பரவினார்கள்,

இத்தேசத்தவரான இறைவர்களிடத்தில் தங்கள் நூல்கள் கடவுளால் பெற்ற வரப்பிரசாதமென்றும் அதை ஓத தாங்களே உரியர் என்றும், தாங்கள் கடவுளுக்கும் மனிதர்களுக்கும் மத்தியஸ்தர்களென்றும் அனேகவித மந்திர வித்தைகள் தெரிந்தவர்களென்றும், மனிதர்களுக்கு தேவர்களென்றும் பயமுறுத்தி இத்தமிழகம் இனி நற்சீருக்கு வரவேண்டுமானால் தாங்கள் சொல்வதையெல்லாம் அங்கீகரிக்கும்படி உபாய தந்திரம் செய்தார்கள். அம்மாதிரி நம்பும்படி செய்தபின்னர் தாங்கள் உயர்ந்த ஜாதியாரென்றும் மற்றவர்கள் தங்களுக்குத் தாழ்ந்தவர் என்றும் கூற ஆரம்பித்து ஜாதி வித்தியாசங்களையும் வேறு அனேக தீய ஒழுக்கங்களையும் இந்நாட்டில் நிலைநாட்டினார்கள்.

பூர்வகாலத்தில்மட்டுமல்ல, இக்காலத்திலும் கூட பிராமணர்கள் ஒழுக்கங்களையும் ஆசாரங்களையும் சாஸ்திரங்களையும் ஏற்றுக்கொண்டவர் மேலான ஜாதியார் என்றும் ஏற்றுக்கொள்ளாதவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் கருதி இருக்கிறார்கள். அதினால் மாமிசம் சாப்பிடுகிறவர் சாப்பிடாமல் விடுகிறதும் பூணூல் போடாதவன் போட்டுக்கொள்ளுகிறதும் விதவை விவாகம் செய்துகொண்டிருக்கிறதும் திடீரென்று விட்டுவிடற்பாலனவா யிருக்கின்றன. இப்படியெல்லாம் செய்வதில் சில ஜாதியார் மேல்ஜாதியாகிறோமென்று கனவு காண்கிறார்கள். இப்பேர்ப்பட்ட கனவுகளை தமிழர்கள் ஆதிகாலத்திலும் கண்டுகொண்டிருந்தபடியினால் பிராமணர்கள் திராவிடரை அடிமையாக்கினார்கள். இப்போதும் ஜாதிபேதமற்ற வகுப்புகளும் ஜாதி உள்ளவர்களாக நடிக்கிறார்கள். இம்மாதிரி காரியங்கள் செய்வதில் இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவர்களான சிலரும் ஜாதி வேண்டுமென்கிறார்கள். ஜாதியின் பலம் எவ்வளவு இருக்கிறது பாருங்கள்'

கடவுளே தங்களைச் சதா அடிமைத்தனத்துக்கும் அவமானத்துக்கும் ஏற்படுத்திவிட்டாரென்று நம்பும் தமிழர்களின் மூடத்தனத்தை யாதென்று சொல்லலாம். உண்மையிலே இச்சாதி வித்தியாசங்கள் ஜட்ஜி ரானடே அவர்கள் சொல்லியபடி இவைகள் எல்லாம் மனிதர் செய்ததே ஒழிய கடவுளின் ஏற்பாடல்ல. இதை உண்மை தெரிந்துகொண்டால் ஐந்து கோடி தமிழர்கள் பிராமணர்களுடைய கொடுங்கோன்மையிலிருந்து நீங்குவார்கள்.

மேலும், என் திராவிட சகோதரர்களே! நீங்கள் எல்லோரும் ஆரியர்களுடைய கொள்கையை ஏற்றுக்கொள்ளவேண்டாம். அது ஒரு இந்து கிறிஸ்து மதத்தில் சேர்ந்தாப்போலிருக்கிறது. அப்படி மதத்தில் சேர்ந்தபோதிலும் சேரப்பட்டவனை அம்மதத்தோர் தங்களுக்கு சமமாக ஏற்றுக்கொண்டு சகோதரனைப்போல் அன்பு பாராட்டுகிறார்கள். திராவிடர்களாகிய நீங்கள் பிராமணர்களிட வழக்கங்களை ஏற்றுக்கொண்டதினால் உங்களை அவர்கள் சகோதரர்களாக நடத்தினார்களா? அவர்கள் வேதங்களை மறைத்து வைத்துக்கொண்டு, உங்களைத்தொட்டாலும் பாவம் வந்துவிடுகிறது என்று தூரத்தில் நிறுத்தி பல ஹிம்சைக்கு ஆளாக்கினார்கள். அப்படி அவர்கள் வழககங்களை நீங்கள் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பது உங்களுக்கு என்ன? உங்களுக்குள் ஆதியில் இல்லாத ஜாதி வித்தியாசங்களை நிவர்த்திசெய்தும் அதற்குமுன் ஜாதி வித்தியாசத்தை காண்பிக்கும் பூணூலை விந்தியமலைக்கு அப்பால் எறிந்தும் இன்னும்மற்ற அவர்களது தீய வழக்கங்களையெல்லாம் நீக்கியும் முற்காலத்தில் இருந்தபடி ஒரு ஜாதியாயிருந்து நாகரீகத்திலும் கல்வியிலும் சிறப்படைந்து விர்த்திக்குவர முயலுங்கள். பிராமணர்கள் சொல்கிறபடி நடக்கிறவரையில் நீங்கள் அடிமைகளாய்த்தான் இருக்கவேண்டும். இனியாவது உலகத்தார் பார்த்து இவ்வளவு கெடுதியானவைகளை ஒத்துக்கொள்ளும் மூடரும் உலகத்தில் உண்டோ என்று அதிசயிக்காதபடி நடந்துகொள்ளுங்கள்,



---

# இயற்கை அற்புதங்கள்.

### ஜலம் ஆவியாதல்,

பூலோகம் முழுமையிலுமிருந்து ஒரு வினாடிக்கு 37,0000 டன் நிறையுள்ள ஜலம் ஆவியாகி வானத்தில் போய்க்கொண்டிருக்கிறதாம்.

### வேளைக்கோருவிதம்.

'டியு ஆந் தி பே' என்னும் பூசந்தியில் காலையில் வெண்மையாயும், மத்தியானத்தில் சிகப்பாயும், இரவில் நீலமாயு மிருக்கிற ஒருவித புஷ்பம் பூக்கிறதென்றும். மத்தியானத்தில்மட்டும் அதற்கு மணமுண்டென்றும் சொல்லப்படுகிறது!

### மிகப்பெரிய மரங்கள்.

அமெரிக்காவில் உள்ள மரங்களுள் ஸைக்கமூர் என்னும் மரந்தான் மிகப்பெரியதாம். அடிமரத்தின் சுற்றளவு 42 அடியாகும். அதன் உயரம் 150 அடியாம். இதற்கு அடுத்தபடியாயுள்ளது ஒரு ஓக் மரமாகும். இதன் அடிமரத்தின் சுற்றளவு 37 அடியாம்.

### தீ கக்கு மலைகள்.

உலகத்திலே 672 தீ கக்கு மலைகளுண்டு. இவற்றில் 298 எப்பொழுதும் எரிந்துகொண்டே இருக்கும். இவற்றில் அமெரிகாவிலே 80ம், ஆசியாவிலே 24ம், ஆபிரிகாவிலே 20ம் உண்டு. ஜாவா என்கிற ஒரு சிறு தீவில்மட்டும் 109 இருக்கின்றன. நியூசிலாந்திலே 63 உண்டு. ஆனால் பசிபிக் சமுத்திர பாகத்தில்தான் இம்மலைகள் விசேஷம்.

### காதுங் கொம்புமுள்ள மீன்.

சமுத்திரத்தில் மீன் பிடிக்கச் சென்ற சில ஜப்பானிய வலைஞரிடம் ஒரு விநோத மீன் அகப்பட்டதாம். அதன் நீளம் தலையிலிருந்து வால் வரையில் 40 அடியாம். 2 அடி நீளமுள்ள காதுகளும் 2 அடி நீளமுள்ள கொம்புகளுமிருக்கின்றனவாம்.

### பிரம்மாண்ட புஷ்பம்.

இது சுமத்திரைத்தீவில் விளைகின்றது. இதன்பேர் ரப்லீஷா ஆர்னெல்டி. அது மூன்றடி குறுக்களவுள்ளது. அதன் எடை 15 பவுன். அதற்கு பிரமாண்டமான 5 இதழ்களுண்டு. அவற்றின் நடுவிலே பத்து புட்டி ஜலம் கொள்ளுமாம்.

### குடும்ப ரக்ஷணி மரம்.

பொலிவியாவில் நெடுங்காலத்திய ரப்பர் மரமொன்றிருக்கிறதாம். இதன் அடிமரத்தின் சுற்றளவு 24 அடி. ஒரு வருஷத்தில் இம்மரத்திலிருந்து 120 காலனுக்குப் பால் வடிகிறது. தினங்கொடுக்கும் பாலினிடை 23 பவுன். இம்மரத்தினால் 7 பேரடங்கிய ஒரு குடும்ப முழுவதுஞ் சம்ரட்சணை செய்யப்படுகிறது. 12,000 பவுனுக்குரிய வரும்படியை இம்மரம் ரப்பரால் உதவுவதாய் தற்கால விலையின் மதிப்பாலேற்படுகிறது.

"விஶ்வகர்ம" னும் விஶ்வகர்ம குலோபகாரி யென்னுங் "தொழி" லும்
ஒற்றுமைப்பட்டதால் ஆநந்தமேற்கொண்டு இயற்றப்பட்ட

# பஞ்சப் பிரம்ம பத்திரிகா பஞ்சகம்

யாழ்ப்பாணம் ஹைகோர்ட் வக்கீலும் 3-வது விஸ்வகன்ம கான்பரன்ஸ் பிரசிடெண்டுமாகிய
பிரம்மஸ்ரீ ந. சிவக்கொழுந்தாச்சாரியார்.

1. "சென்னைவிஶ்வ கன்மனொடு சேருங் குலோபகாரி
"யென்னுமிவர் வாழ்க வினி" தென்று—முன்னே
அறைந்தவா றேநீவிர் அன்புமிக்குச் சேர்ந்து
சிறந்திரிது வன்றோ சிறப்பு

முதலாம் கான்பரன்ஸ் சிறப்புக்கவிகளில்—கான்பரன்ஸின் காரணராம் கர்த்தா C. சுப்ராயன் அன்பார் சதசிவமாம் ஆச்சாரி—இன்பமிகு, சென்னை விஸ்வகன்மனொடு சேருங்குலோபகாரி யென்னுமிவர் வாழ்கவினிது—என்ற கடைசிக்கவியில் காட்டியபடி நீவிர் இருவிரும் நமக்குள் ஒற்றுமைப்பட்டிணங்கி குலதர்மத்தை மேற்கொண்டது மிகச் சிறந்த செயலாம்.

2. சிறந்தநீ ரொன்றியதாற் றெய்வக்கம் மாளர்
சிறந்து பெருஞ்சாபந் தீர—வருந்தாது
நல்லுமலை யிலக்கை நாட்டினீர் நும்மைப்போல்
எல்லவருஞ் சேர்வா ரினி.

விஶ்வகர்மருக்குள் குலதர்ம கைங்கர்யம் மேற்கொண்டதாற் சிறந்தவராகிய நீவிர் நமக்குள் ஒற்றுமையையும் மேற்கொண்டபடியினால் நமது குலத்தினோர்க்கு உற்ற சாபத்தை நீக்கத்தகுந்த முன்மாதிரியைக் காட்டினீர். அதனால் குலத்தார் சகலரும் ஒற்றுமையை மேற்கொள்வார்கள் என்பது நிச்சயம்.

3. இன்னொன்று கேண்மினோ எம்விஶ்வ கர்மரே
பொன்னென்றே போற்றுமின் பூம்பத்திரிகை—அன்னையிலாப்
பிள்ளைக்குத் தாயும் பிறப்பறுக்குஞ் சற்குருவுங்
கொள்ளினிது வென்றே தொளும்.

விஶ்வகர்மர்களே! இப்பத்திரிகையை தாயிலாப் பிள்ளைக்கு இகபரஞான மிரண்டையு மொருங்கே யூட்டும் தாய் வாய்த்ததுபோலவும், பிறவிப்பிணிதீர்க்கவந்த சற்குருபோலவுங்கொள்ளுங்கள். கொண்டு, இப்பத்திரிகையைப் பொன்னைப்போலப் போற்றி சந்தா கொடுப்பதில் அலுக்காது வருந்தியும் இதனை நிலைநிறுத்துங்கள். இதனை நிலைநிறுத்த உங்கள் சந்தா அவசியமென்பதை ஒவ்வொருவரும் உணருங்கள்

4. கொண்டு படிமின் குலதர்ம மாமிதனைக்
கண்ட வருக்குங் கதியுண்டாம்—தொண்டு
செயின்விஶ்வ கர்மனுக்குச் செய்மி னதனால்
பயனுண்டாம் பாரிற் பரிது.

விஶ்வகன்மனுக்குத் தொண்டு செய்யுங்களென்றது ஒருபொருள். விஶ்வகர்மனாகிய இப்பத்திரிகைக்கு மனமொழி மெய்களால் உபகாரஞ்செய்து நிலைநிறுத்துங்கள் என்றது மற்றக் கருத்து.

5. துக்கத்தை நீக்குஞ் சுகத்தை வருவிக்கும்
மிக்கநல்ல ஒற்றுமையை மேவுவிக்கும்—தக்க
சபையேற்று விக்கும் தரித்திரம் போக்கும்
எவையே தொழிற்கிணை யிணை.

தொழில் முயற்சியால் இந்நன்மையெல்லாம் வருவன என்பது ஒருபொருள். இந்த "தொழில்" என்னும் பத்திரிகையை வழக்கமாய்ப் படித்துவருவதால் மேற்படி நன்மைகள் சித்திக்கின்றன என்பது மறுபொருள்.

சுபமஸ்து.

உ
சுபமஸ்து.
ஸ்ரீமத் விராட் விஶ்வகர்மணே நம:

# விஶ்வகர்மன்—தொழில்.

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள
சென்னை விஶ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.
301, தங்கசாலை வீதி, சென்னை.

சம்புடம்-5] காளயுக்தி ஸ்ரீ சித்திரைமீ 1918 ஸ்ரீ ஏப்ரல்மீ [சஞ்-4.

## ஒளிவளர் விளக்கு.

யுத்தம் காரணமாக நெசவுக்காரர்கள் மிகவும் கஷ்டமடைகின்றார்களென்பதை உத்தேசித்து காஞ்சீபுரத்தில் ஐக்கிய சங்கங்களின் சட்டப்படி ஒரு நூல் கம்பெனி ஆரம்பிக்கவேண்டுமென்று இவ்வூர்ப் பிரமுகர்களில் சிலருடைய முயற்சியின்மேல் 1-2-18 யன்று ஐக்கிய நாணயச் சங்கங்களின் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்திரார் அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்றது. இக்கம்பெனியானது பங்கு 1-க்கு 10-ரூபாய் வீதம் 20,000-பங்குக்கு 2,00000-ரூபாய்களுக்கு ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது. இங்ஙனம் நாம் உத்தேசித்த கம்பெனிக் காரியம் சீக்கிரம் நிறைவேறுமாறு விஶ்வகர்ம குலத்தினரெல்லாம் விரைவிற் சகாயஞ்செய்ய வேண்டுகிறோம்.

* * *

குலாபிமானமிக்க நிருபரொருவர் பின்வருமாறு எழுதுகிறார்:—விஶ்வகர்மசந்ததிச் சிறுவர்களில் வாசிக்கப் பிரியமுள்ளவர்களுக்கு சம்பளம் கொடுத்துப் படிக்கச்செய்ய முன்வரும் குலாபிமானிகளைக் காணோம். ஒரிருவர்களுக்கு யாரேனும் சம்பளம் கொடுப்பதாக முன்வந்தாலும் போஜனமளிப்பவர்களைக் காணோம். இப்படி அவஸ்தைப்படுவதால் நம்ஜாதிப்பிள்ளைகள் எங்ஙனம் படித்து முன்னுக்குவர முடியும்? சாப்பாட்டுக்குக் கஷ்டமில்லையென்று முதலில் ஏற்பட்டாலல்லவா விசனமில்லாமல் படிக்கத் தொடங்குவார்கள்? படிப்பின்பேரிலும் ஞாபகமிருக்கும்? படிக்கும்போதே, சாயந்திரம்போய் என்னசெய்வது, சாப்பாட்டுக்கு ஐவேஜியில்லையே என்ற கவலையிருந்தால் படிப்பேறுமா? ஏறாது. ஆதலால், நம் ஜாதியாருக்கென்று ஓர் பொது இடம் ஏற்படுத்தி தக்கவர்களை அதற்கு டிரஸ்டிகளாக நியமிக்கவேண்டும். நம்மவர்களில் அனேகர் பிரார்த்தனைக்கென்று பல இடங்களுக்குச்சென்று அவரவர்கள் சக்திக்குத் தக்கபடி பண்டாரங்களுக்கு சாப்பாடு போடுகிறார்கள். அவ்விதப் பிரார்த்தனைகளுக்குரிய பேர்களுடைய சாப்பாட்டுச் சாமான்களையாவது பணத்தையாவது ஷை பொது இடத்து டிரஸ்டிகளிடம் ஒப்புவித்துவிட்டால் வாசிக்கக்கூடிய பிள்ளைகளுக்கு அந்தத் தர்மசாப்பாட்டை உபயோகிக்கலாமல்லவா? பண்டாரங்களுக்குச் சாப்பாடு போடுவதைவிட ஜாதிச் சிறுவர்களுக்குப்போடுவது விசேஷதர்மமல்லவா? இதை அவஸ்யம் யோசித்து மேற்சொன்னவிதமாகத் தர்மம் நடத்தவேண்டியது நம் ஜாதியார்களின் கடமையாகும். ஒவ்வொருவரும் தாங்கள் வருடத்திற்கு எத்தனை பேர்களுக்குச்சாப்பாடுபோடப்பிரதிக்கினை செய்துகொள்கிறார்களோ அத்தனைபேர்க

ளூர்குத் தக்க ஏற்பாடு செய்துகொண்டால் பலர் பொருள் மொத்தமாகச்சேரும். அதிலிருந்து ஷை தர்மம் நடைபெறும். அந்தந்த மாதத்தில் நடக்கும் தர்ம விபரங்களை அந்தந்த மாதத்தில் நமது பத்திரிகையில் எழுதி வெளியிடலாம். மற்றப் பத்திரிகைகளிலும் வெளிப்படுத்தலாம். ஓரிருவர் இங்ஙனஞ்செய்ய முன்வந்தால் இந்தத் தர்மம் அநுஷ்டானத்திற்கு வந்துவிடுமென்பதற்கு ஐயமில்லை. முதலில் ஆரம்பிப்பவர்களே இத்தர்மத்திற்கு வழிகாட்டிகளென்பதை யோசித்து குலாபிமானிகள் முன்வருவார்களாக.

* * *

திருவண்ணாமலை ஸ்ரீகாமாக்ஷியம்மன் தேவஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விஸ்வப்பிரம்ம பாடசாலையின் இரண்டாவது வருஷ மகோற்சவம் இம்மாதம் 21உ ஆதிவாரத்தன்று ஷை இடத்தில், சென்னை பச்சையப்பன் தருமவிசாரணை சபைக்காரியதரிசி ஸ்ரீ பிக்கபாடி-கல்யாணசுந்தர ஆச்சாரியார் அவர்களுடைய அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. சென்னையிலிருந்து ஸ்ரீ கொளத்தூர்-கன்னியப்ப ஆச்சாரியாரவர்களும், திருவண்ணாமலைக்கடுத்திருக்கும் ஊர்களிலிருந்து பல குலாபிமானிகளும், உள்ளூர்க் குலஜனங்களும் பிறஜாதிச்சகோதர கனவான்களும் பெருந்திரளாய் விஜயமாயிருந்தனர். காலையில் ஸ்ரீகாமாக்ஷியம்மன் அபிஷேக அலங்காரதீபாராதனையும், சரஸ்வதிபூஜையும் வெகு விமரிசையாய் நடைபெற்றன. பாடசாலைச்சிறுவர்களும் சிறுமிகளும் மனப்பாடங்களாலும், சம்பாஷணைகளாலும், பாடல்களினாலும் அனைவருக்கும் ஆனந்தமூட்டியபின் அவர்களுக்குத் தின்பண்டங்கள் நல்கப்பட்டன. உயர்தரக் கல்வியின் அவஸ்யத்தையும், தொழிலபிவிருத்திக்கான விசேஷக்கல்வி நமது குலத்தினர்க்கின்றியமையாததென்பதையும் பற்றி அக்கிராசனபதியார் வற்புறுத்திப் பேசினார்கள். பிற்பகலில், மேளக்கச்சேரி நடந்தது. பின்னர், வில்வாரணி இராமாயணப் பிரசங்கி ஸ்ரீ தி-குப்புசாமி ஆச்சாரியாரவர்கள் 'கல்வி'யைப்பற்றி மிக அருமையாய் உபந்நியாசஞ் செய்தார்கள். அப்பால், பாடசாலைச்சிறுவர் சிறுமியர்களுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன, பிறகு, கோயமுத்தூர் ஸ்ரீ C. R. சுப்பராய ஆச்சாரியாரவர்களாலும், கும்பகோணம் ஸ்ரீ T. S. பஞ்சநதேச ஆச்சாரியாரவர்களாலும் எழுதியனுப்பப்பட்ட கடிதங்களின் முக்கியபாகங்கள் வாசிக்கப்பட்டன. மேல், இப்பாடசாலையின் பரிபாலன சம்பந்தமான விஷயங்கள் பேசப்பட்டு சில தீர்மானங்கள் செய்யப்பட்டன. இத்தீர்மானங்கள் அநுஷ்டானத்திற்கு வருங்கால், இப்பாடசாலை ஓர் கமிட்டியின் பராமரிப்பின்கீழ் வரும். அதனால், இதன் செல்வாக்கு அதிகரிக்குமென்றும் இப்பாடசாலை தற்போதினுமதிகமாய்ச் சுஜாதிவிஜாதிப் பிள்ளைகளுக்குப் பயன் தருமென்றும் நம்புகிறோம். பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீ சோ. ஆறுமுகதேசிகர் தமது மாணவர் மாணவிகளுடைய வித்தியாபிவிருத்தியில் காட்டும்பரிவும், பாடசாலை நடவடிக்கையில் மேற்கொண்டிருக்கும் சிரத்தையும் மிகப்பாராட்டத்தக்கனவாயிருக்கின்றன. மேற்கூறப்பட்ட கடிதங்களிரண்டும் இச்சஞ்சிகையில் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவற்றில் குலசம்பந்தமான பல அரிய விஷயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன என்பதை வாசகர்கள் கவனிக்கவேண்டுகிறோம். அவற்றைப் பற்றிய எமதபிப்பிராயம் சமயம் நேர்ந்துழி வெளியிடப்படும்.

* * *



ஸ்ரீமத் விராட் விஸ்வப்பிரம்மணே நம:

## திருவண்ணாமலை விஸ்வகர்மகுலத்தலைவர்களுக்கு

பிரஹ்மஸ்ரீ குலப் பெரியோர்களும் குலாபிமானிகளும் வித்யார்த்திகளும் வைதிகோத்தமர்களுமாகிய திருவண்ணாமலை விஸ்வகர்ம வித்யாசாலை ஸ்தாபகர்கள் கீழ்ப்பாலூர் மய-ஈஸ்வர ஆச்சாரியார் முதலிய பிரமுகர்களுக்கு கோயமுத்தூர் மய (சனாதன - வாமதேவ) C. R. சுப்பராய ஆச்சாரி வேதோக்த நமஸ்காரம்.

× × ×

2\. இத்துடன் வரும் லெட்டரிலுள்ள சொற்பொருள் குற்றங்களைப் போக்கிக் குணங்களைமட்டும் ஏற்றுக்கொள்ளப் பிரார்த்திக்கிறேன்.

3\. இதிலுள்ள சங்கதிகளும் யோசனைகளும் தாங்கள் முதலானவர்களால் ஆழ்ந்து கவனிக்க வேண்டியவைகளாக நம்புகிறேன்.

× × ×

5. என்மனதில் கிளம்பிய சங்கதிகளை எழுதாது விடக்கூடவில்லை. சாந்தமாய் வாசித்து ஏன் இப்படி எழுதினான் காரணம் இருக்கவேண்டுமென்று யூகித்து அங்கீகரிக்கப் பிரார்த்தனை.

× × ×

(3) ஒரு ஸ்தலத்தில் சபையாவது பாடசாலையாவது ஸ்தாபித்து நடத்துவது அவ்வத் தலவாசிகள் சுற்றுப் பக்கத்திலுள்ள குலத்தவர்கள் குலாபிமானிகள் முதலானவர்களின் மனோபக்குவத்தையும் திடசங்கல்பத்தையும் ஒற்றுமையையும் வித்யாபிமானத்தையும் விடாமுயற்சியையும் தழுவி நிற்கிறது. என்போன்ற வெளியூர்வாசிகள் வந்து போவதின்பேரில் தொக்கி நிற்பதானில் தாங்கள் எடுத்த விரதம் தடைப்போகும். அநேகமயில் தூரத்துவாசிகள் மனதினாலும் எழுத்தாலும் உதவிசெய்வார்களே ஒழிய வேறுயாது செய்யவல்லர்? ஆகையால் தாங்கள் முதலான சிலர் பரஸ்பரம் ஒற்றுமையோடு இடைவிடாது முயன்று வித்யாசாலையின் நோக்கங்கள் இனிது நடத்தவேண்டுமாய்ப் பிரார்த்தனை. எல்லாம் வல்ல கடவுளும் தாங்கள் முதலானவர்கள் ஒற்றுமையாய்நடத்துவதை ஆசீர்வதித்துத் துணை செய்வார் என்றும் நம்புகிறேன். துணை நிற்கவும் பிரார்த்திக்கிறேன்.

× × ×

சிலகாலமாய் ஸ்ரீ T. M. முக்கண்ணாசாரியார் முதலான பெரியோர்கள் ஒருகக்ஷியாயும் ஏழையைப்போன்றவர்கள் வேறு கக்ஷியாகவும் பிரிந்துபோக நேர்ந்தது. ஜாதியின் பூர்வ தத்கால பவிஷ்யத் விஷயமாயும் ஜாதியின் முன்னேற்றத்திற்கு அடிப்பீடம் போடும் விஷயமாயும் ஸ்ரீ T. M. முக்கண்ணாச்சாரியார் கக்ஷிக்கும் என்போன்றவர் கக்ஷிக்கும் அநேகவிஷயங்களில் அபிப்பிராயபேதங்கள்மிகுந்து கடித்துப்போயின. இருகக்ஷிக்கும் சம்பந்தப்பட்டவர்கள் ஒரு இடத்தில் கூடி ஏக அபிப்பிராயத்தோடு ஒத்துழைப்பது (மிகவும் விரும்பத்தக்கதாயினும் இன்றியமையாததாயினும்) அசாத்தியமாய்விட்டது. ஸ்ரீ T. M. முக்கண்ணாசாரியார் கக்ஷியார்கள் ஜாதி சம்பந்தமான கான்பரென்சுகளை நடத்தியுளார், நடத்தவும் வல்லார், இனிமேலும் நடத்தவும் முயன்று வருகிறார்கள். கான்பரென்சுகள்மூலமாய் ஜாதிக்குச் சாதிக்கவேண்டிய கடமைகளில் அவர்கொண்ட நோன்புகளுக்கும் என்போன்றவர்கள் கொண்ட விரதங்களுக்கும் பரஸ்பரம்ஒற்றுமை காண்பது குதிரைக்கொம்பாக விளங்கிவிட்டது. விஸ்வகர்ம-சந்ததியாரின் பூர்வகாலத்திய பாபமிகுதியே ஒற்றுமை யில்லாததற்குக் காரணமென்று வற்புறுத்த மிக விசனிக்கின்றேன்.

× × ×

நம்ஜாதிக்கு கம்மியத்தொழிற் கல்வி இருந்தால் போதுமென்பது ஸ்ரீ முக்கண்ணாச்சாரியாருடைய சித்தாந்தம். சிறிது தமிழ் தெலுங்கு கல்வியும் நுனிப்புல் மேய்ச்சலான வைதீகக்கல்வியும் போதுமென்பதும் அவர் துணிவு. எனது எண்ணம் வேறாயிருக்கின்றது.

(m) தத்காலத்திய ஆங்கில உயர் தரக் கல்வியும், சமஸ்க்ருதபாஷையில் உயர் தரக்கல்வியும், சிற்ப சித்திர விஞ்ஞானத்தில் உயர்தரக்கல்வியும் நம் ஜாதியின் முன்னேற்றத்திற்கு அவசியம் அவசரமென்பது எனது சித்தாந்தம். ஜாதியார்களில் பெரும்பான்மையோர்க்கு உயர்தரக்கல்வியில் விருப்பமில்லையாயினும், கற்கப் போதுமான மூளைபலமில்லையாயினும் கற்கப் போதுமான திரவிய வசதியில்லையாயினும், ஜாதியில் சிறுபான்மையோராயினும் (100க்கு 5,10 பேர்களாயினும்) ஷை உயர்தரக்கல்வியைக் கற்று உயர்தர உத்தியோகத்திலும் வக்கில் வைத்யம் உபாத்தியாயர் இஞ்சினீயர் முதலிய ஞானேந்திரிய சம்பந்தமான ஜீவனோபாயத்திலும் மாறவேண்டுமென்பதும், அதற்குத் தங்களைப்போன்ற குலாபிமானிகளும் குலத்தலைவர்களும் வேண்டியமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதும் எனது விருப்பம், சித்தாந்தம். ஜாதியார்களில் பெரும்பான்மையோர்கள் நாளடைவில் கம்மியத்தொழிலை விட்டுவிட்டு வேறு விதமான மேலே சொல்லிய ஜீவனோபாயத்தில் நுழைந்து விப்பிராதிகளுக்குச் சமமாயும் உயர்வாயும் மேம்பாடடைய முயலவேண்டுமென்பதும், இதுவே குலதர்மமாக ஜாதியார் விரதங்கொள்ள வேண்டுமென்பதும் எனது சித்தாந்தம்.

5. தாங்கள் ஸ்தாபித்து நடத்தும் பாடசாலையில் தமிழும் தெலுங்கும்தான் கற்பிப்பதாக எழுதியிருக்கிறீர்கள். அதனால் ஜாதிச்சிறுவர்களுக்கும் பெரியோர்களுக்கும் உண்டாக்கக்கூடிய பலன் விசேஷமாயிருக்குமென்று விளங்கவில்லை. சிறிது தமிழும் தெலுங்கும் போதிப்பதால் மிகச் சிலர் ஒருசிறிது சந்தியாவந்தனத்தையும் பௌரோஹித பத்ததியில் சிறிதுபாகத்தையும், ஒருவாறு கற்றுக்கொள்ளுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. அதனால் ஜாதியார்களுக்கு உண்டாகப் போகும் பயன் விசேஷமாகுமா?

(a) ஷை பாடசாலையில் படிக்கிறவர்களெல்லாம் ஒரே பந்துக்களாயும் ஆசார குடும்பங்களாயுமிருந்தால் வைதீகத்தில் சிறிது ஞானத்தைப்பெற்று அனுஷ்டிப்பார்கள். அவைதிகக் குடும்பத்தவர்களும் ஏழைகளும் பௌரோஹிதாதிப்பத்ததிகளைக்கற்றுக்கொள்வதினால் கற்றவர்களே அனுஷ்டிப்பார்களென்று நிச்சயிக்க முடியாதே?

(b) நம் ஜாதியாரில் சில பந்துக்கட்டார் பரம்பரை வைதிகாசார முடையவர்களாயிருந்து நாளடைவில் க்ஷீணித்து விட்டதாகத் தெரிகிறது, ஆசார பந்துக்கட்டுகள் தனித்தனியாய் நின்று பரஸ்பரம் போஜன விவாக சம்பந்தமின்றி வாழ்ந்து தானே வருகின்றனர். தனித்தனியாய் நிற்கும் ஆசாரபந்துக் கட்டார்களுக்குள்ளாகவே பரஸ்பரமாக ஒன்றுமில்லையே. அனாசாரமாயும் அவைதீகமாயும் நடக்கும் விஸ்வகர்மாக்கள் பெரும்பான்மையோர்களும் பந்துக்கட்டு பாஷை நாடு வித்யாசங்களைப் பாராட்டிப் பரஸ்பரமில்லாது நடக்கின்றனரல்லவா? இதில் உயர்ந்தோர்யார்? தாழ்ந்தவர்யார்? யார் விஸ்வகர்ம சந்ததியார்? யார் சந்தேகப்பேர்வழிகள்? சிறுபான்மையோர் மட்டும் ஆசாரமாய் நடந்தால் பெரும்பான்மையோரா யார் எப்பொழுது ஆசாரர்களாகப் போகிறார்கள்? புதிதாய் ஆசாரர்களாகவும் வைதீகர்களாகவும் மாறுபவர்களை நீண்டகாலமாய் ஆசாரமாய் நடந்துவந்த பந்துக்கட்டார் எப்பொழுது எப்படி மதிக்கப்போகிறார்கள்? மதிக்காவிட்டால் ஆசாரர்களாவதினால் என்னபயன்? ஆசாரர்களாகிறவர்களையும் ஆசாரமாய் நடக்கும் தனிபந்துக் கட்டாரையும் சில ஆசாரபந்துக்கட்டார் சரியாய் மதிக்காமல் தாழ்மையாய் நினைத்து நடத்தினால் ஆசாரத்தினால் ஜாதிக்கு உண்டாகும் பயன் என்ன? இவைகளைச் சபையார் யோசிக்க வேண்டுகிறேன்.



(c) ஆசாரமாய் நடப்பவர்களையும் நடக்க முயல்பவர்களையும் சற்று விசேஷமாய் நடக்கும் ஆசாரபந்துக்கட்டாரே மதிக்காவிட்டால் பிறஜாதியார்கள் எப்படி மதிப்பார்கள்?

ஆசாரமாய் நடக்கும் நம்ஜாதியாரிடம் பிறஜாதியார் அன்னபானாதிகளைக் கொள்ளாது இழிவாய் மதித்து நடக்கும் பொழுது ஆசாரமாய் நடப்பதினால் ஜாதிக்கு உண்டாகும் பயன்யாது?

(d) ஷை சந்தேகங்களைப்பற்றி ஸ்ரீ அத்யாபக-லிங்காச்சாரியாரும் நானும் 2-வருஷகாலமாய் நீண்டலெட்டர்களில் விவகரித்து ஒருவிதமான முடிவிற்குவந்தோம். பின்பு இருவரும்சேர்ந்து சில வேலைகளைச் செய்யலாமென்று எண்ணியிருக்க, நம்ஜாதியின் துர்ப்பாக்கியத்தால் ஸ்ரீ அத்யாபகர் காலம் முடிந்துபோயிற்று. அதன்பின் நான் அதிக விசனத்தை அடைந்தேன். ஸ்ரீ அத்யாபகரைப்போன்ற வித்யா பாண்டித்யத்துடன் குலாபிமானமும் வைதீகமும் ஜாதியை உயர்த்தவேண்டியதற்குத் தத்காலப்போக்கும் தெரிந்து முயற்சியும்பூண்டவர்கள் நம் ஜாதிக்கு அநேககாலம் சித்திப்பார்களென்று நம்பக்கூடவில்லை. அவர் காலஞ்சென்றதினால் ஜாதிக்கு விளைந்த நஷ்டம் அபாரம். அவரும் நானும் இனி ஜாதியாருக்குச் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றி நிச்சயித்து ஏக அபிப்பிராயம் கொள்ள இரண்டு வருஷங்கள் இடைவிடாது நீண்ட லெட்டர்கள் எழுதின பின்பே சாத்தியமாயிற்று.

(e) இரண்டு வருஷம் பட்டபாடெல்லாம் வீணாய்ப்போய் விட்டது. வட ஆற்காடு ஜில்லாவில் நம் ஜாதியாருக்கெல்லாம் வழிகாட்டத்தக்க ஒரு செண்ட்ரல் சபை ஸ்தாபிக்க பிளான் (plan) போட்டிருந்தோம். போட்டும் என்ன பயன்! அவருக்குச் சமமாயும் உயர்வாயும் யாரேனும் முன்வந்தாலன்றோ அவர்கனவும் என்கனவும் உண்மையான ரூபமடையும். என்ன துர்ப்பாக்கியம்? என்னபரிதாபம்? ஜாதிக்கே தனது வாழ்நாளையும் மனோவாக்குக் காயத்தையும் அர்ப்பணம்செய்ய விரதங்கொண்ட ஸ்ரீ அத்யாபகனார் காலபுருஷனால் கொள்ளை கொண்டதற்கு யார்தான் துயர்க்கடலில் ஆழமாட்டார்கள்! என்னே நம் துர்ப்பாக்கியம்?

(g) தாங்கள் நடத்தும் பாடசாலையின் நோக்கம் சிறிது சாதாரண தமிழ் தெலுங்கு கல்வியோடு தான் நிற்கும்போல் தெரிகிறது. நடந்தமட்டும் நடத்து மட்டும் நலமே, விரும்பத்தக்கதே. அதற்குமேல் உயர்தரக் கல்வியாதிகளை (முன்பாராக்களில் விளக்கியபடி) தங்கள் பாடசாலையின் விரதமாகக் கொள்ளவேண்டுமென்பது ஏழையின் விருப்பம். உயர்தர விரதம்கொண்டுளோம் என்று நோட்புக்கில் எழுதிவைத்துவிட்டால் போதாது. தாங்கள் முதலானவர்கள் மேல்படி பாடசாலைக்கு வித்யா சகாய நிதியாகிய பண்டைச்சேகரித்து ஆங்கிலக்கல்வி கற்க யோக்யதையுடைய ஏழை விஸ்வகர்மாக்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கும் விரதத்தை மேற்கொண்டால்தான், தங்கள் பாடசாலையின் பயனை பின் சந்ததியார்களும் மெச்சுவார்கள். தற்கால சாந்தியாயும் பிறர் பார்த்தும் கேட்டும் மெச்சும் படிக்கும் பாடசாலை நடந்துவதென்றால் அதைப்பற்றி நான் அதிகம் சொல்லவேண்டியது யாதுமில்லை. சாதாரணக் கீழ்த்தரத் தமிழ்தெலுங்குக் கல்வியோடு நிறுத்தாமல் உயர்தரக்கல்வியை தக்க ஏழை விஸ்வகர்மாக்கள் அடையும்படிச் செய்யவேண்டுமாயும் கடவுளையும் தங்களையும் பிரார்த்திக்கின்றேன். கம்மியத்தொழிலையும் அது சார்பான கல்வியையும் நான் விசேஷித்துப் பாராட்டக்கூடவில்லை. ஸ்ரீ T.M. முக்கண்ணாச்சாரியார் விசேஷித்துப் பேசுவார். உயர்தரக்கல்வி முதன்மையென்பது எனது சித்தாந்தம்; கைத்தொழிற்கல்வி முதன்மை

யென்பது ஸ்ரீ T.M. முக்கண்ணாச்சாரியார் சித்தாந்தம். எங்களுக்குள்ளாகவே இதில் இப்படி அபிப்பிராயபேதம் இருப்பதும் நம் ஜாதியாரின் துர்ப்பாக்கியமே. ஒரு கக்ஷியார் சாதாரணக் கல்வியையும் கம்மியத்தொழிலையும் அது சார்பான கல்வியையும் புகழ்ந்து பேசுவதும், மற்றொரு கக்ஷியார் அதை 2ம் பக்ஷமாக்கி உயர்தரக்கல்வியை முதன்மையாக்கிப் பேசுவதும் பரஸ்பர விரோதமாகையால், ஜாதியார்களுக்கும் எது முதன்மையென்பது விளங்குவதில்லை. இதனால் ஜாதியார்களும் உயர்தரக்கல்வியை விரும்பாமல் உயர்தரக்கல்வியாதிகளை விப்பிராதிகளுக்குத் தத்தம் செய்துவிட்டு பல ஜாதியாருக்கும் அஹோராத்ரம் பேய்போல் வேலைசெய்து கஷ்டப்பட்டு ஜீவிக்கும் கீழ்ப்படியில் நின்று க்ஷீணித்து வருகின்றனர். அந்தோ! என்னபரிதாபம்? கம்மாளர்கள் பழையகருப்பாளர்களாகவே ஜீவிக்கும்படி அயன் தலையி லெழுதியாவிட்டான்? குருஸ்தானங்களும் ஜாதித்தலைவர்களும் குலாபிமானிகளுமாவது அயன் எழுதியஎழுத்தை மாற்ற விரதங்கொள்ளக் கூடாதா?

(7) சிருஷ்டியாதியாய் நம்ஜாதியார் விப்பிராதிகளுக்கு அநேக சிற்பங்களையும் அற்புதவேலைகளையும் கிரீடாதிகளையும் கோவில் குளம் கோட்டை அரண்மனையாதிகளையும் பல ஜாதியாருக்கு வேண்டிய ஜீவனோபாயக் கருவிகளையும் செய்துகொடுத்து வந்ததற்கெல்லாம் பிறஜாதியார்களால் நம் ஜாதிக்குச் சித்தித்தபலன் யாது? பறையன் வண்ணான் நாவிதன் வலையன் ஒட்டன் குயவன் முதலான கடைச்சாதியார்களும் கூட கம்மாளன் வீட்டில் அன்னபானாதிகள் செய்தால் தங்கள் தங்கள் ஜாதிக்கு இழிவு என்று நினைப்பதும், விப்பிராதிகளெல்லாம் கம்மாளர்களைத் தாழ்மையாக நடத்துவதும்தான் பயனாக லபித்திருக்கின்றதல்லவா? கம்மியத்தொழிலால் நம் ஜாதியார் அடைந்த பலனை நாம் அனுபவித்ததும் அனுபவிப்பதும் போதாதோ? இனிமேலும் நம் பின்சந்ததியார்களும் நம்மைப்போல் இழிகுலத்தவர்களாய் நடத்தப்படும்படிக்கோ கம்மியத் தொழிலையும் கம்மியத்தொழிற் கல்வியையும் குலதர்மமாக மதித்துக் கற்று உழலவேண்டும்?

(a) கம்மியத்தொழிலைச் செய்து வந்ததற்கெல்லாம் நம்ஜாதிக்கு இடங்கை கட்சிபட்டமும் இடுக்கணும் பிறஜாதியார்களின் த்வேஷங்களும் அவமதிப்புகளும் பிரதிபலனாகக் கிடைத்துவிட்டதினால் இனிமேல் அத்தொழிலை உபேக்ஷையாகப் பாவித்து உயர்தரக் கல்வியையும் அதுசார்பான ஜீவனோபாயத்தையும் முதன்மையான குலதர்மமாக அனுஷ்டிக்க விரதங்கொள்ள வேண்டியது அவசியம் அவசரம் என்பதை வற்புறுத்துவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். தாங்கள் முதலானவர்கள் இதில் வற்புறுத்தும் சங்கதிகளை ஏற்றுக்கொண்டால் நான் விஸ்வகர்ம குலத்திற்கு உண்மைப்பாடு பட்டவனாக நினைத்துத் துணை நிற்கக் கடமைப்பட்டவனாவேன். எனது ஜாதிப்பயித்தியமும் கம்மாளஜாதியில் பிறந்ததையும் தாங்கள் முதலானவர்கள் எடுத்துக்கொண்டுள்ள பாடசாலை விஷயமான விரதங்களுடன் நின்றுபோகாது தங்களுடைய விரதங்களுக்கு விரோதியுமன்று உடன்பட்டவனே ஆயினும் எனது பயித்தியமும் விரதமும் நோக்கமும் முயற்சியும் அதிக உடன்பாடும் உடன் உழைப்பும் முன்பக்கங்களில் வற்புறுத்திய உயர்தர ஆங்கிலக் கல்வியிலும் உயர்தர சமஸ்கிருதக் கல்வியிலும் அதிகமதிகமாய் காட்டக்கூடுமென்பதற்கு அசங்கியங் கொள்ளாதிருக்கப் பிரார்த்திக்கின்றேன்.

(8) மேலும், தாங்கள் முதலானவர்கள், இப்பொழுது அச்சிட்டு உலாவும் சித்தூர் ஜில்லா அதாலத்துக்கோர்ட் தீர்ப்பானது உண்மையான அசல்தீர்ப்பின்படி இருக்குமென்றும், அத்தீர்ப்பால் நம் ஜாதிக்கு பிராஹ்மணீகமும், பிராஹ்மணபாரமும் நிராக்ஷேபணையாய்ச் சித்தித்துவிட்டதாகவும் நம்பியிருப்பீர்கள். அசல் தீர்ப்பிலும் அப்பீல் தீர்ப்பிலும் உள்ளவைகளுக்கும் அச்சுப் புத்தகத்திலிருக்கும் தீர்ப்பிலுள்ளவை



களுக்கும் அநேக வித்யாசங்க ளிருப்பதாகக் கண்டேன். ஸ்ரீ அத்யாபகரிடம் அசல் அப்பீல் தீர்ப்புகளிருந்ததை வாசித்துப் பார்த்தேன். நம் ஜாதியார்க ளெல்லாம் அசல் தீர்ப்புகளைப் பார்க்காமல் அச்சுப் புத்தகத்தை உண்மையெனநம்பி மோசம் போய் விட்டார்களென்று வற்புறுத்துவதற்குக் கோபிக்காதிருக்க வேண்டுகிறேன். அசல்தீர்ப்பின் சர்க்கார் நகலைவாங்கி அச்சுப்புத்தகத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மை விளங்கும். பார்க்கவேண்டியதும் அவசியம் அவசரம்; பார்த்தால்தான் நாம் விஸ்வகர்மத்ரோகிகளாக மாட்டோம்.

9. கவர்ன்மெண்டாருடைய ரிகார்டுகளிலும், சென்சஸ் ரிப்போர்ட்டுகளிலும் மேதாவிகளால் சிலா தாம்பிர சாசனங்களின்பேரில் எழுதியுள்ள தேசஜாதி சரித்திரங்களிலும், ஸ்ருதி ஸ்ம்ருதிகளிலும், விஸ்வகர்மனுக்கு ஐந்துமுக மில்லையென்றும், மூலத்தில் வேதங்கள் ஐந்தா யிருந்ததில்லையென்றும், வடநாடாகிய ஆரியநாட்டுக் கம்மாளர்களுக்கே வேதோக்தமும் த்விஜத்வமும், பிராஹ்மண க்ஷத்ரிய வைசிய உயர்வும் இருந்ததில்லை யென்று நிச்சயித்திருக்கும்பொழுது தமிழ்நாட்டுக் கம்மாளர்களாகிய திராவிடர்களுக்கு விஸ்வகர்ம சம்பந்தமும், ஆரியத்வஜர் என்னும் உயர்வும் இருந்ததில்லையென்றும், இல்லை என்றும் அநேகபுத்தகம் பத்திரிகைகளில் எழுதப்பட்டிருப்பதை தாங்கள்முதலானவர்கள் அவசியமாயும், அவசரமாயும் தெரிந்துகொள்ள வேண்டுமாய்ப் பிரார்த்தனை. தமிழ்க் கம்மாளர்கள் திராவிடர்களா ஆரியர்களா என்பது தற்போது பெரியகேள்வியாயிருக்கிறது. பெரும்பான்மையோரிடம் திராவிட இலக்ஷணமும் ஆசாரமும் காணப்படுகிறதாகவும்நிச்சயித்து விட்டார்கள். திராவிடர்களாகில் வேதோக்தம் ஆரியத்விஜத்வம் பிராஹ்மணீகம் விஸ்வகர்ம சம்பந்தம் எல்லாம் அடியோடு தொலைந்துபோயின போகின்றன போகும் என்பதை எச்சரிக்கிறேன். சில மதஸ்தர்களால் சென்னையில் அச்சிட்டுலாவிவரும் திராவிடன் முதலிய பத்திரிகைகளையும் வேளாளர் சூளாமணி வேளாண்மரபியல் வருணசிந்தாமணி வருண தர்ப்பணம் முதலிய புத்தகங்களையும் தாங்கள் வாசித்தால் நான் சொல்லுவது சரியென விளங்கும்.

10. ஷை பத்திரிகை புத்தகங்களில் பிராஹ்மணர்கள்மட்டும் ஆரியர்களென்றும் அவர்களுக்கே வேதங்களும் அவைகளில் கூறும் ஆசாரங்களுமுரியனவென்றும், கம்மாளர்முதலிய சிலர் பார்ப்பாரைப்பார்த்து நடிக்கிறார்களென்றும், வேளாளர்களும் கம்மாளர்களும் திராவிடர்களென்றும், திராவிடர்களில் வேளாளர்களே உயர்ந்த ஜாதியென்றும் தமிழ்க்கம்மாளர்கள் வேளாளர்களுக்கெல்லாம் அநேகம்படி தாழ்ந்த திராவிட ஜாதியென்றும் ஆகையால் ஆரியர்க ளல்லவென்றும், ஆரியர்களின் வேதோக்தம் த்விஜத்வம் ஆசாரம் நடையுடைவித்யை முதலியவைகளுக்கு கம்மாளர்கள் சிறிதும்பாத்திய முடையவர்களல்லவென்றும், நீண்டகாலமாயும் தற்போது அதிகமாயும் பிறஜாதியார்கள் பறைசாற்றி வருகின்றனர் என்பதைக் கவனித்திருப்பீர்களென்று நம்புகிறேன். கவனிக்காதிருந்தால் காலஹரணமின்றி கவனித்து நிவர்த்திதேடக் கடமைப்பட்டவர்களென்பதை எச்சரிக்கிறேன்.

(a.) சித்தூர் சேலம் ஜில்லாத் தீர்ப்புகளும், விஸ்வப்ராஹ்ம புராணாதிகளும் விஸ்வப்ராஹ்மண சந்தியாவந்தனாதிப் புத்தகங்களும் வேதாத்யயனபாடசாலைகளும் விஸ்வகர்ம கான்பரென்சுகளும் நாம் நீண்டகாலமாய் வற்புருத்திவரும் ஆரிய விஸ்வகர்ம ப்ராஹ்மணீகத்தை நிரூபித்து நிலைநாட்டக்கூடிய பலமான ஆதாரங்க ளல்லவென்று கவர்ன்மெண்டார் 1901-௵த்திய சென்சஸ் ரிப்போர்ட்டிலும் 1911-௵த்திய சென்சஸ் ரிப்போர்ட்டிலும் பறைசாற்றி வற்புறுத்தி யிருப்பதையும் கவனிக்க வேண்டுகிறேன்.

(11) ஸ்ரீ T. M. முக்கண்ணாச்சாரியார் விஸ்வகர்மகான்பரன்ஸின் பிரசிடெண்டாகவும், 13லக்ஷம் விஸ்வகர்மஜாதி ஜனங்களுக்

கெல்லாம் தலைவரென்றும் முடிசூட்டப் பட்டிருந்தும் ஷை விஷயங்களை அறிந்து கொள்ளாமல் தாமும் ஏமாந்தும் ஜாதியார்கள் ஏமாந்து போகவிட்டும் உழல்கின்றார். தாமும் தெரிந்துகொள்ள முயலவில்லை. தெரிவித்தாலும் அறிந்துகொள்ள விரும்புவதில்லை. நம் ஜாதியாரின் பூர்வபாத்தியங்களைப் போக்கிச் சிதைத்து இழிவுபடுத்தி வரும் எதிரிகளைக் கண்டிக்காமலும் விரோதங்களைப் போக்க முயலாமலும், ஹோம் ரூல் (Home Rule) பித்தங்கொண்டு தலைதடுமாறி வீண்காலம்போக்கிவருகின்றனர்.

**12.** ஷை குறைகளையும் ஆபத்துக்களையும் போக்குவதற்கு விஸ்வகர்ம ஜாதியாரில் ஸ்ருதி ஸ்ம்ருதிகளையும் தத்காலத்திய தேசஜாதி சரித்திரங்களையும் சென்சஸ் ரிபோர்ட்டுகளையும்உணர்ந்த வித்யார்த்திகளையும் பண்டிதர்களையும் ஒரு சபை அல்லது கான்பரென்ஸில் கூட்டி நம் ஜாதிக்குப் பலமான ஆதாரங்களைச் சித்தாந்தம் செய்யவேண்டியது அவசரம் அவசியம். இதற்கு ஸ்ரீ T. M. முக்கண்ணாச்சாரியார் விரோதியென நிரூபித்துள்ளார். நம் ஜாதியாரில் பெரும்பான்மையோருக்கு உயர்ந்த கல்வியில்லை. சாஸ்திர சரித்திர ஞானமுமில்லை. உயர்தரக்கல்வியுடையோர் மிகச் சிலரே. இந்த மிகச் சிலரிலும் மிகச் சிலரே ஜாதி யபிமானமும் ஜாதிசம்பந்தமான ஸ்ருதி சரித்திர ஆராய்ச்சியில் விருப்பமுடையவர்கள். ஜாதிக்குவேண்டியஸ்ருதியாதி ஆதாரங்களும், புராணங்களும், சரித்திரமும், கோத்திர பிரவர சூத்திர சித்தாந்தங்களும் முடிவு கட்டிவிட்டதாகவும், இனிமேல் ஆராயவேண்டியதும் சேகரிக்க வேண்டியதும் முடிவுகட்டவேண்டியதும் ஜாதியார்களுக்கு விளக்க வேண்டியதும் யாதுமில்லை யென்றும் சாஸ்திரப் பயிர்ச்சியுடைய குலாபிமானப் பெரியோர்களே நினைத்து ஏமாந்து காலம் போக்கிவருகின்றனர்.

**(13)** ஜாதியின் பூர்வசரித்திர சாஸ்திர விஷயமாய் பண்டிதர்களும் பாமரர்களும் அநேக அபலங்களையும் போலி ஆதாரங்களையும், நவீன கற்பனைகளையும், பலங்களென்றும், உண்மை ஆதாரங்களென்றும், ப்ராசீன வேத (ஸ்ருதி) வாக்கியங்களென்றும் நம்பி நடக்கின்றனர்.

(a) நம் ஜாதியைப்பற்றி விரோதங்கள் எங்கெங்கே வியாபித்துள்ளன. நம்ஜாதிக்குப்பலமான ஆதாரங்கள் எங்குள்ளன? அவையாவை? ஜாதியின் உண்மையான பூர்வசரித்திரம் என்ன? இனிமேல் நம் ஜாதியார்சரியென்று நம்பி கடைப்பிடித்து அநுஷ்டித்து வற்புறுத்தவேண்டிய நியாயங்களும் ஆதாரங்களும், சரித்திரங்களும், சாஸ்திரங்களும் உண்மைகளும் யாவை என்று நிச்சயிக்கப்படவேண்டியது அவசியம் அவசரம்.

(b) ஜாதியாரில் சிலரேனும் உயர்வும் முற்போக்கும் அடைய ஷை 9-வது பாராவில் கண்டபடி நிச்சயிக்கவேண்டிய அரியபெரிய விஷயங்கள் பலவுள. அவரவரிஷ்டப்படி பேசுவதும் எழுதுவதும் வற்புறுத்துவதும் மேதாவிகளின் ஏளனத்திற்கு உட்பட்டுள்ளன உட்படுமென்பதும் நிச்சயம்-

(c) நம் ஜாதியாரில் குலாபிமானமும், ஜாதி சரித்திர சாஸ்திர ஆராய்ச்சியும், குலத்தின் மானவமானப் பொறுப்பும் கொண்ட தக்கோர்கள் ஒரு சபையாகக் கூடித்தான் இனிமேல் நம் ஜாரின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டவேண்டியவர்களா யிருக்கிறார்கள்.

(d) அதற்காக தக்க பண்டிதர்கள் மட்டும் சிலர் சபைகூடவேண்டும். முன் சொல்லிய பல விஷயங்களைப்பற்றியும் முடிவு கட்டவேண்டும். பண்டிதர்கள் சபையோ கான்பரென்ஸோ கூடாமலும் முடிவுகட்டாமலும் இருக்கும்வரையில் விஸ்வகர்ம ஜாதியார் முன்னேற்ற மடையவேமாட்டார்களென்பதை வற்புறுத்துவதற்கு மன்னிக்கவும். அதுவரையில் யார் யாது செய்தாலும் அகோராத்ரம் பாடுபட்டாலும் நம் ஜாதியாரின் கீழ்மைகள் ஒரு சிறிதும் நம்மைவிட்டு நீங்காவென்பதும் நிச்சயம்.



**14.** நீங்கள் அன்புகூர்ந்து 23-3-18-யில் அனுப்பிய அழைப்பு லெட்டரில் 7 குலாபிமானப் பெரியோர்களும் செல்வர்களும் சேர்ந்து கையொப்பமிட்டிருப்பதைக் கண்டு களித்தேன். பொதுநல முன்னேற்ற விஷயங்களுக்கு நம்மவர்கள் ஒன்று சேர்வது மிக அரிது. தாங்கள் ஒன்றுசேர்ந்தது நமது முன்னோர்களின் புண்ணியமென்றே நம்புகிறேன். உங்கள் ஒற்றுமையும் உடன் உழைப்பும் விருத்திச் சந்திரனைப்போல் அதிகரிக்கவேணுமாய்க் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

× × ×

**16.** நிற்க. நான் முன்பக்கங்களில் வற்புறுத்திய உயர்தரக் கல்வியைப்பற்றியும் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றேன். நாம் நம் ஜாதித்தொழிலைச் செய்து ஜீவிப்பது கிரமமாயினும் அதுவே புருஷார்த்தமென்று நினைத்துவிடக்கூடாது. உயர்தரக்கல்வியைக் கற்று விப்ராதிகளுக்கு எல்லா விதத்திலும் ஒப்பு உயர்வாக முயல்வதே முக்கிய கடமையாயும் குலதர்மமாயும் நம் சிறுவர்களுக்கு உபதேசிக்க வேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

**17.** ஒவ்வொருவரும் அவரவர் ஜாதித் தொழிலைச்செய்து ஜீவிப்பது சாமான்ய உலகவழக்கே. அதுவே மானிட ஜன்மத்திற்குச் சிறந்ததாக மாட்டாது. உயர்தரக் கல்வியை நம் ஜாதியின் பிரதி குடும்பத்திலும் ஒவ்வொருவராவது கற்று மேம்பாடடையவேண்டும். கல்வியாதி ஞானேந்திரிய சம்பந்தமான ஜீவனோபாயமே உயர்ந்த ஜாதியாரின் விரதம். நம் ஜாதியானது விப்ராதிகளுக்கு ஒப்பு உயர்வாக வேண்டுமாகில் எல்லோரும் கம்மியத்தொழிலைமட்டும் கற்று ஜீவித்தால் முடியாது. கம்மியத் தொழிலுக்கு ஸ்ருதி, ஸ்மிருதி, புராணேதிகாசங்களிலும் உயர்ந்தோர் அபிப்பிராயத்திலும் இழிவே கற்பிக்கப்பட்டிருக்கிறது. நம் தொழிலை நாமே சிறப்பித்துப் பேசி ஏமாந்துபோனோம். பிறஜாதியார் கம்மியத்தொழிலை இழிவாய் மதிக்கிறதினால் நாமும் அதை இழிவாய் மதித்து கல்வியாதி உயர்தர ஜீவனோபாயத்தை விரதமாகக் கொள்ளவேண்டும். தற்காலத்திலும் இனிமேலும் உயர்தரக்கல்விக்கே எல்லாச்சிறப்பும் சித்திக்கும். கம்மியத்தொழிலால் வயிறு வளர்க்கலாமே ஒழிய அரசாங்கத்தில் உன்னதஸ்தானம்பெற முடியாது. முற்காலமுதல் நம் ஜாதியார் கம்மியத்தொழிலைத் தாழ்வாய் மதித்திருந்தால் கல்வியும் உயர்தரக்கல்வியும் இல்லாத ஜாதியாராக நாம்இருக்கமாட்டோம். கல்விசம்பந்தமான ஜீவனோபாயத்தைக் கடைப்பிடித்தொழுகியிருந்தால் நம் ஜாதியானது அநேக ஆண்டுகளாய் உயர்ந்த ஜாதியாகவே நடத்தப்பட்டிருக்கும். கம்மியத்தொழிலைச் செய்து கொண்டு எவ்வளவு ஆசார அனுஷ்டானிகளாய் நடந்தாலும் நம்மவர்களை உயர்ந்த ஜாதியாக எவரும் மதிக்கப்போகிறதில்லை யென்பதை அறியவேண்டுகிறேன். ஆசார அநுஷ்டானத்தோடு உத்யோகம், வியாபாரம், வக்கீல், உபாத்திமை, வைத்தியம் முதலிய ஜீவனோபாயத்தில் மேம்பாடடைந்தால் நமக்கும் பெருமை ஜாதிக்கும் உயர்வு சித்திக்கும். நாம் எவ்வளவு யோக்யமாயும் ஆசாரமாயும் நடந்தாலும், கம்மாளன் என்ற சப்தம் கேட்டவுடனே நமக்குக் கிடைக்கவேண்டிய எல்லாமரியாதைகளும் குறைந்துவிடுகின்றன. ஷை விஷயங்களெல்லாம் தங்களுக்கே நன்றாய்த் தெரிந்திருக்குமாகையால் விரித்து எழுதுவது அனாவசியம். தங்களுக்கே தெரிந்திருந்தாலும் கேட்டும் நினைத்தும் மறந்துவிடுவதும் சகஜமாய் விட்டதால் இனிமேல் அவ்விதம் கவனியாதிருக்கக் கூடாதென்று எச்சரிக்கின்றேன். ஜாதிப் பயித்தியத்தினால் வற்புறுத்துகிறேனே யன்றி உங்களைவிட அதிகம் தெரிந்தவனாக நினைத்து எழுதவில்லை. மறந்துபோவதை மறக்காமல் ஞாபகமூட்டுவது குற்றமாகாது என்று நம்பியே வற்புறுத்தினேன் மன்னிக்கவும்.

**18.** பாடசாலையை ஏற்படுத்தி நடத்துவதைப்போல் 5 - 7 - 9 - 11 குலாபிமானப்

பெரியோர்கள் ஒரு கமிட்டியாகச் சேர்ந்து நம் ஜாதியின் பூர்வசரித்திரத்தையும் சாஸ்திர ஆதாரங்களையும் ப்ரதிதினம் ½ மணி நேரமாவது ஆராய்ந்து நிச்சயித்து ஜாதியார்களுக்கு விளம்பரம் செய்யவேண்டும் என்று மேற்கொள்ளவேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றேன். நம் ஜாதிக்கு இதுவரையில் அச்சிட்டுள்ள ஜாதி நூல்கள் புராணங்கள் ஆகியவைகள் அபலமென்றும், நவீன கற்பனைகளென்றும், வேதாதி ஸ்ருதிகள் தேசசரித்திரம் சிலாதாம்பிரசாசனங்களின் ஆதாரங்களற்றவையென்றும் கவர்ன்மெண்டாரும் பிறஜாதியாரில் மேதாவிகளும் குறைகூறி எடுத்துக்காட்டி வருகின்றனர். சித்தூர்த் தீர்ப்பு முதலியவைகளை நாம் பலமான ஆதாரமாக நம்பி மோசம் போய்விட்டோம். இனிமேல் ஸ்ருதி சம்மதமான ஆதாரங்களைக்கொண்டு நம் ஜாதிக்கு பலமான சரித்திரம் சாஸ்திரம் நூல்களை தக்கோர்களைக்கொண்டு எழுதும்படி முயன்றால்தான் பயன்படும். நமக்கொரு குறைவுமில்லை யென்று நாம் நினைத்தது பிழையாய் முடிந்தது. இனிமேல் அவ்விதம் நினைத்தால் பிறஜாதியார்களுடைய நன்கு மதிப்பை நாம் எப்பொழுதும் அடையாது போவோம்.

19. ஆகையால், இனிமேல் பிறஜாதியார் கம்மாளர்களை பல புத்தகம்பத்திரிகைகளில் தூஷிப்பவைகளை தங்களைப்போன்றவர்கள் கவனித்து வாசிக்கவேண்டும். வாசித்து அவைகளுக்கு அப்போதைக்கப்போது கண்டனங்களை வெளியிட வேண்டும். அவைகளுக்கு வேண்டிய வேதாதி ஸ்ருதி ஆதாரங்களை ஆராய்ந்து சேகரித்து வெளியிடவேண்டும். வெளியிட்டு சாதியாரெல்லாம் இலகுவாய் உணர்ந்து நடக்கும்படி உபதேசிக்கச் சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டும். அத்தகைய கடமையைச்செய்துவர சிலரை ஒரு கமிட்டியாக நியமித்து, அவர்களைக்கொண்டு ஷை வேலைகளை செய்துவரும்படி துணைசெய்யவேண்டும். தமிழ் தெலுங்கு சொல்லிக்கொடுக்கும் பாடசாலையை ஏற்படுத்தி நடத்திவந்தால் மட்டும் போதாது. ஜாதியாரின் மானுவமானத்தைக் கண்காணித்துக் காப்பாற்றும் விரதம் பூண்ட கமிட்டியாரை நியமித்து அவர்கள்மூலமாய் ஜாதி நூல்களை பிறஜாதியின் மேதாவிகளும் நன்கு மதிக்கும்படியாய் இயற்றி வெளியாக்குவதைச் சிறந்த கடமையாய் மதிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

20. ஷை 19-வது பாராவில் வற்புறுத்திய கமிட்டியை ஸ்தாபிக்காது பாடசாலையைமட்டும் கவனித்தால் ஜாதியாருக்கு முக்கிய கடமைகளைச் செய்யாது போனவர்களாக பின்சந்ததியார் குறைகூறுவார்கள். காய்த்த மரத்திற்கே கல்லடி என்னும் பழமொழிப்படிக்கு ஒன்றும் கவனியாது காலம் போக்குபவர்களை எவரும் மதியார் நினையார் குறைகூறார். ஒரு நல்ல கடமையை மேற்போட்டவர்களின்மீதுதான் மற்ற பாரங்களையும் சுமத்துவது உலகவழக்கு. ஜாதிக்கு கல்வி இன்றியமையாதது. உயர்தரக்கல்வியோ மிக முக்கியம், ஜீவன். உயர்தரக்கல்விக்கு ஜாதியின் பூர்வசரித்திரம் சாஸ்திர ஆதாரங்கள் பூர்வபெருமை உன்னதம் ஆகியவைகளை பலமான ஆதாரங்களைக்கொண்டு விளக்கவேண்டும். இன்றேல், அஸ்திபாரம் போட்டபின்பு மேல் கட்டிடம் கட்டாதுவிட்ட வீட்டைப்போல் தங்கள் முயற்சிகள் பயன்படாது போகுமென்று பயந்து இவ்வளவுதூரம் எழுதினேன். அதிகப் பிரசங்கமாக இகழாது மன்னித்து நான் எழுதியவைகளைப் பற்றி யோசித்து வேண்டியவைகளைக் கவனிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

22. முடிவுரை. ஆரியசகோதரர்களே! இதுவரையில் நான் பல சங்கதிகளைப்பற்றி மனதில் கிளம்பியவைகளை தோற்றியவாறு எழுதிவிட்டேன். நான் தங்கள் முதலானோருக்கும் ஜாதியாருக்கும் வற்புறுத்த வேண்டியவைகள் பலவுள. இதில் சில சங்கதிகளைத்தான் அவசரமாய் எச்சரிக்கலாயிற்று. மற்றொரு சமயத்தில் எனது எண்ணங்கள் நம்மவர்களால் நன்கு மதிக்கப்படும் என்று புலப்பட்டால் இதில் குறிக்காத



பல சங்கதிகளையும் விரித்து எழுத உத்தேசித்திருக்கிறேன்.

(a) முற்காலத்தில் நம் ஜாதித்தொழிலால் நாம் இலகுவாய் ஜீவித்துவந்தோம். ஆலயம், நகரம், கோட்டை, அரண்மனை, இரதம் முதலிய வேலைகளைச் செய்வதற்கு வேண்டிய மரியாதைகள் நடைபெற்றன. ஆங்கிலேயர் இந்துதேசத்தைக் கைப்பற்றியபின்பு மேல்நாட்டார்கள் கம்மியத்தொழில்சம்பந்தமான அநேகபொருள்களை இந்தியாவிற்கு அனுப்பிவருவதால் நம் கைத்தொழில்களுக்கு விலையில்லாதுபோயிற்று. பிறஜாதியாருடைய துன்பங்களால் நம் ஜாதியார்களிடம் ஒற்றுமைக்குறைவும், செல்வக்குறைவும், கல்வியின்மையும், கஷ்டஜீவனமும், மேல்நாட்டாருடன் கம்மியத்தொழிலில் போட்டிபோட நம்மால் முடியாது போயினமையும் எல்லாம் திரண்டு நம் ஜாதியார் பிறர்தயவால் ஜீவிக்கவேண்டிய பரிதாப நிலைமைக்கு வந்துவிட்டார்கள்.

(b) தற்காலத்தில் அநேக ஜாதியார்கள் உயர்தரக்கல்வியாலும், வியாபாரப் பெருக்கத்தாலும், விவசாயத்தாலும், மிகவிரைந்து மேம்பாடடைந்து வருவதை நம் ஜாதியார் நேரில்பார்த்தும் நம்மவர்கள் மேம்பாடடைய முயலாது யாது குறைவுமில்லாதவர்களைப்போல் இறுமாந்து கம்மியத்தொழிலே இந்திரப்பதவி மோக்ஷ சாம்ராஜ்யம் என்று மதிமயங்கி ஏமாந்து வீண்காலம் போக்கி வருகிறார்கள். இந்து ஜாதி சமூகத்தில் நம் ஜாதியார் உயர்ந்த ஜாதியாக வற்புறுத்தி வருகிறார்கள். பிறஜாதியார் நம் ஜாதியாருடைய பாத்தியங்களைச் சிறிதும் அங்கீகரிக்காமல் ஏளனம்செய்துவருகின்றனர். பிறஜாதியார் நம்மிடம் தொழில் செய்துகொள்ளுவதற்காகக் காட்டும் போலிநட்பினாலும், நயத்தினாலும், ஏமாந்து மோசம்போகின்றோம். சாஸ்திரம், சரித்திரம், வியாசங்கள், புத்தகங்கள், பத்திரிகைகளில் நம் ஜாதியைப்பற்றி பிறஜாதியார் விரோதங்களையே நாட்டி வருகின்றனர். உயர்தரக்கல்வி யில்லாத குறைவால் நம் ஜாதியாரை பிறஜாதியார் எவ்விதம்மதித்து எழுதிவருகிறார்கள் என்பதை நம்மவர் உணர்வதில்லை. ஜாதியாருக்குள் பரஸ்பர ஒற்றுமையும் குலாபிமானமும்முன்னேற்ற உணர்ச்சியுமில்லாததால் நமது விரோதிகளைக் கண்டிப்பது சாத்தியப்படுகிறதில்லை. பொதுநலத்திற்குப் பங்கம்வராது காப்பாற்றுவதற்கு பொதுநலத்திற்குப் பாடுபடும் குலாபிமானிகள் சிலரேனும் ஒற்றுமைப்பட்டுழைப்பதில்லை. ஒற்றுமைப்பட்டுழைப்பதற்கு ஜாதியார் சகாயமில்லை. பொதுநலத்தைப் பாதுகாப்பதற்கு நேரிடும் செலவிற்குப் பொதுநிதியில்லை. பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை. அருளிலார்க்கு அவ்வுலகமில்லை என்பது நம் ஜாதியாருக்கே பொருந்தி இருக்கின்றது. நம் ஜாதிக் குயர்தரக்கல்வி யில்லாததால் இலக்கண இலக்கியங்களின் ஞானமில்லை. சாஸ்திர விசாரணையும் கடவுள் பக்தியுமில்லை. கடவுள் பக்தி யில்லாததால் எல்லாம்வல்ல கடவுளின் அநுக்கிரகமுமில்லை. உயர்தரக்கல்வி யில்லாததால் நன்மைதீமை யுணர்ச்சி பெரியோர் வழிநிற்றல், பெரியார் துணைக்கோடல் சகோதரவாஞ்சை, குலாபிமானம், பரஸ்பர சகாயம், ஒற்றுமையாதி உயர்தர குணம்,செய்கைகளில்லை.நல்லொழுக்கமும் ஒற்றுமையும் கல்வியுமில்லாததால் தாரித்திரமும், பொய்மையும், துர்அகங்காரங்களும், பிறஜாதியாருடைய பகைமையும், கஷ்டஜீவனமும், பிறர் நன்குமதிப்பின்மை

யும், நம் ஜாதியாருக்குக் குலதனமாய் குவிந்து வருகின்றன.

(c) ஷை காரணங்களால் நம் ஜாதியார் நம் முன்னோர்களடைந்த பதவிகளை இழந்து பிறஜாதியாரால் சிறுமையாய் நடத்தப்பட்டு வருகின்றனர். எல்லாவித துர்வாக்கியங்களும் ஒருங்கே நம்ஜாதியாரிடம் காணலாம். "மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே" என்னும் பெரியோர் வாக்கியப்படி நடக்கவேண்டிய கீழ்நிலையிலிருக்கிறதினால் நம் ஜாதியார் கொண்டாடும் உயர்ந்தஜாதி பாத்தியங்களும், வேதோக்தங்களும் பிறர் நகைப்பை விளைத்துவருகின்றன.

(d) நம் ஜாதியார் மேன்மை அடைவதற்கு கல்வியும், உயர்தரக்கல்வியும்தான் சரியான ஏணியாக நம்மவர்கள் அறியவேண்டும். உயர்தரக் கல்வியானது உடனே அடையக்கூடியதன்று. ஒவ்வொரு விஸ்வகர்மனும் தன் குடும்பத்தைக் காப்பாற்றப் பாடுபடுவதுபோல் தன்தன் பிள்ளைகளில் ஒருவனாவது உயர்தரக்கல்வியில் மேன்மையடையும்படி முயலவேண்டும். 'கற்கை நன்றே கற்கை நன்றே-பிச்சைப் புகினும் கற்கை நன்றே' என்பதை வேதமந்திரமாக ஜபித்துவந்தால் நம்ஜாதிக்கு ஒற்றுமையும், செல்வமும், பக்தியும், ஆசாரமும், நன்கு மதிப்பும், எல்லாவித சம்பத்துகளும், விரைவிலும் லகுவிலும் சித்திக்குமென்பது நிச்சயம்.

(e) உயர்தரக் கல்வி பரவவேண்டியது மிகவும் அவசியமும் அவசரமுமா யிருப்பதால் தற்போது உயர்தரக்கல்வியும், உயர்தரக் குலாபிமானமுமுடைய உத்தமர்கள் ஓர் இடத்தில் கூடித் தக்கதொரு கமிட்டியை நியமித்து அக்கமிட்டி மூலமாய் ஜாதியாருக்குவேண்டிய முக்கிய விஷயங்களைத் தீர்மானித்து விளக்கும்படி செய்யவேண்டும். இதற்கு பல குலாபிமானிகளும் ஜாதி உத்தமர்களும் தங்கள் உடல்பொருள் ஆவியை இனிதுதவ விரதங் கொள்ளவேண்டும். ஷை வேண்டுகோள் தங்கள் மனதில் பதிந்து ரூபமெடுக்கவேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக. ஷை விஷயங்கள் காரியரூபமெடுத்தால் நம் ஜாதிக்கு நற்காலமென்று நம்பும்

தங்கள் ஊழியன்,

C. R. சுப்பராய ஆச்சாரி.



**கும்பகோணம் ஸ்ரீ T. S. பஞ்சநதீஸ்வர ஆச்சாரியார் எழுதியது—**

× × ×

பிரதிதினமும் நாம் ஒவ்வொருவரும் வம்சம் ஈடேறவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும்.

கல்வி என்பது நூலை வாசித்தோதுதல் என்பது பொருள். ஆனால், கல்வியில்லாமலேயே அநேகர் ஞானம் பேசவும், அநேக அரியபெரிய காரியங்களைச் செய்யவுமில்லையா என்று வினவலாம். இஞ்ஜினுக்குத் தானாகவே ஓடக்கூடிய சக்தியிருந்தாலும், தண்டவாளத்தின்மீது ஓடினால் எவ்விதமோ, வயிரத்திற்குச் சுயமாக எவ்வளவு பிரகாசமிருந்தபோதிலும் தங்கத்தில் வைத்துப் பதித்தமாத்திரத்தில் பூரிப்பு எப்படி ஏற்படுகிறதோ அவ்வண்ணமாக, கல்வியுடன் கூடிய ஞானமிருக்கும் பக்ஷத்தில் எவ்விதத் தோஷங்களும் உண்டாகா. ஷை கல்வியினால்தான் உலகம் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது என்பது யாவருக்கும் நன்றாய்த் தெரியவரும். (உதாரணம்) எத்தனையோ ஆயிரம் மைலுக்கப்பாலுள்ள வர்த்தமானங்களை எவ்வளவு எளிதில், தினமும் நாழிகையாகவும் பேப்பரைப்பார்த்து ஆனந்தித்து அறிந்துக் கொள்கிறோம். கல்வியில்லாதவர்கள் கூட வர்த்தமானப்பேப்பரை வாசியுங்கள் கேட்போமென்று சொல்லுகிறார்கள். அப்போது ஏதோ அவர்களுக்கு ஓர்விதமான அவாவோ, பரவசமோ ஏற்பட்டுத்தான் சொல்லுகிறார்கள். அவ்விதப் படிப்பில்லாதவர்கள் தங்கள் தங்கள் தாய் தந்தையர்களை நினைத்து இன்றும் வருந்துகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எத்தனையோ பேர்களை நானும் பார்த்திருக்கிறேன்.

இந்த இடத்தில் நான் முக்கியமாய் ஒன்றுகூறவேண்டியதா யிருக்கிறது. நமது கான்பிரன்ஸுகளும், மற்றுமிதைப்போல சங்கங்களும், நம்மினத்து வித்வான்களின் வித்வத்துவம் நமது சுயஜாதியாரால் ஏற்படுத்தப்பட்ட பத்திரிகைகளாகிய சஞ்சிகைகளாலே அரிய அற்புதச் செயல்களும், இரகஸியங்களும் வெளிவந்தன. நாம் தூங்கியிருந்தவர்களை அதிலிருந்து தட்டி எழுப்பிவிட்டன. ஸ்ரீ கல்யாணசுந்தர ஆச்சாரியார் அவர்களால் இயற்றப்பட்ட இராமசுனர், விஸ்வகர்மோபதேச வீரகண்டாமணி இவைகளை வாங்கிப் பார்வையிட்டால் வெகு விஷயங்கள் எளிதில் அறிந்துக்கொள்ளலாம். ஆக நம்மினத்துச் சஞ்சிகைகளை ஆதரிக்க வேண்டியது நம் ஒவ்வொருவருடைய முக்கியமான கடமை என்பதைத் தங்களுக்கு வற்புறுத்திக் கூறுகிறேன்.

"எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடியிற்கற்றோரை வருகவென்பர்" நமக்குப் படிப்பு இல்லாமலிருக்கும்போது பிறர் நம்மைப்பற்றிதோஷங்களும், ஏளனமும் சொல்லுகிறார்கள். இதுபற்றி கோபமாத்திரமிருந்து என்ன பிரயோஜனம்?

பெண்கல்வி அவசியம் தேவை என்பது நான் சொல்லாமலே விளங்கும். ஓர் இரட்டைமாட்டு வண்டியில் ஒரு மாடு நொண்டியா யிருக்க மற்றொன்று சரியாயிருந்தால் அவ்வண்டி சரியாய் இழுபடுமா? அதைப்போலவே ஓரே குடும்பத்திலுள்ள ஆண்மாத்திரம் கல்வி அறிவு ஏற்பட்டு ஸ்திரீக்கு கல்வியறிவு ஏற்படாவிடில் புருஷனுக்கு எமவாதனை வேறு வேண்டுவதில்லை. ஆனால், பெண்கள்வாசித்தால்

வியபசாரம் போய்விடுகிறார்களென்று சிலர் சொல்லுகிறார்கள். என்னுடைய பிரஸினை என்னவென்றால், அப்படி வாசிக்காதஸ்திரீகளில் 100-க்கு எத்தனைபேர் துர்நடத்தை யில்லாதவர்களென்று சொல்லக்கூடும். வாசித்தவர்கள்மட்டும்தானா கெட்டுப்போகிறார்கள்? அரசாங்கத்தில் இராணிமார்கள் சிலகாலங்களில் மந்திரிக்குப் பதிலாயிருந்து தக்க யோசனைகள் தெரிவித்திருக்கிறார்கள்.

எங்களூர் விப்ரவித்யாரத்னமாகிய காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ குப்புசாமி சாஸ்திரிகள் பண்டித விசேஷ கூட்டத்தின்போது தம்மினத்தாருக்கு எது பிழைப்புக்கு வேண்டுமோ அதற்குரியது மாத்திரம் தேவையென்றும், விஸ்வகர்ம ஆசாரியாராகிய இந்த வம்சத்தினர்களுக்கு சகல தொழில்களின் சில்பலக்ஷணங்கள் அவசியம் தெரிந்தே யிருக்கவேண்டும் என்றும் என் முன்னிலையில் தெரிவித்திருக்கிறார். சில்ப சாஸ்திரக் கலாசாலை ஏற்படுத்தினால்தான் நமது புராதீன அற்புதச் செயல்களெல்லாம் வெளிவரும். நம்மில் ஸ்தபதிகளென்று சொல்லிவருபவர்களெல்லாம் தங்கள் தொழிலுக் குரித்தாகிய பிம்பப் பிரதிஷ்டை முதலியவை மட்டும் தெரிந்துக்கொண்டிருக்கிறார்களே யொழிய இயந்திரசக்திக்குரிய சாதனங்களை நமக்கு இதுகாறும் எடுத்துக்காட்டினார்களில்லை. ஆங்கிலேயம் படித்தவர்கள் ரஸாயன சாஸ்திரத்தைக் கொண்டாவது நாளதுவரையில் தெரியப்படுத்தினவர்களையும் காணோம். நமது முன்னோர்கள் எதைச் செய்தார்களோ அதையே நாம் தொன்றுதொட்டு நடத்திவருகிறோமே யொழிய ஜாதிக்குரித்தான தொழில் வல்லபத்தை நூதனமாய் இயற்ற நாம் முயற்சிக்கவில்லை. புராதீன கிரந்தங்கள் எங்கிருக்கின்றனவென்று நாம் ஒவ்வொருவரும் பரிசீலனை செய்யவேண்டும். வைத்தியம், ஜோசியம், மாந்திரீகம் முதலியவைகளிலும் நன்றாய் ஈடுபட்டிருக்கவேண்டும். இது பிறருக்காகவும், பிழைப்புக்காகவும் சொல்லவந்ததல்ல. நமது சுயப்பிரயோஜனத்திற்கே முதன்மையானது. தற்போது மேலே சொன்ன முத்தொழிலுக்கும் உலகம் வசியப்பட்டிருக்கிறது. நம்மிடம் பிறர் தொழில்கொடுக்கும்போது நாம் எவ்வளவு ஏழைப்பாயிருந்தாலும், நம்மை எவ்வித ரிகார்டு அன்னியில் விலையுயர்ந்த ரத்தினாபரணத்தைக் கொடுத்திருக்க நாம்மாத்திரம் குறித்தடயத்திற்குள் கொடாமல் அவர்களை அலையவைப்பதென்றால் எதிரியின் மனம் என்னவிதமாய் நோகும்! அப்படி மனம் நோகவைப்பதுதான் நமக்குச் சாபம் என்று சொல்லப்படுவது. அதுவே தோஷம். பொதுவாய் யாருடைய மனம் புண்பட்டாலும் அதுவேபாபம். எதிரியின் மனதை எவ்வளவு திருப்திசெய்கிறோமோ அவ்வளவு தர்மத்தை நாம் நிச்சயமாய் அடைகிறோம். (அஹிம்ஸா பரமோதர்ம:) இத்தருமத்தைத்தவிர வேறுதருமம் வேண்டுவதில்லை.

நாம் உயரவேண்டிய நிமித்தம் பிறஜாதி தூஷணை நமக்குத் தேவையில்லை. நம்மை நாமே சீர்ப்படுத்திக்கொள்ள வேண்டுமேயல்லாமல் வேறு வருணத்தாரைப் பற்றி நாம் பேசவேண்டியதேயில்லை.

**சிக்கனம்**—வரவுக்கு தக்க செலவு செய்யவேண்டும். நாம் என்ன லெக்ஷக்கணக்காய் சம்பாதித்தாலும் பிரயோஜனமில்லை. இது



பெரும்பாலும் நம்மினத்தவர்களுக்கு நிச்சயமாய் இல்லையென்றே சொல்லலாம். இதுபற்றி எனக்கு ஓர் பெரும் சந்தேகம் வெகுநாளாய் உண்டு. பிறஜாதியார்களில் கேவலம் 7-ரூபாய் சம்பள மேற்பட்டபோதிலும் அவர்கள்மாத்திரம் நல்லவழியிலிருப்பானேன்? நாம்மாத்திரம் தாழ்ந்த நிலைமையிலிருந்து வருந்துவானேன்? இதற்குக்காரணம்நாளதுவரையில் யோசித்துப் பார்த்தும் பொருள்படவில்லை. ஆனால், நம்மில் பெரியோர்கள் ஓர் வசனம் உபயோகிக்கிறார்கள். ஏதோ சாபம் ஏற்பட்டிருக்கிறதாம்! நாம்செய்த குற்றத்திற்கு நாம் ஜவாப்தாரியா? ஏதோ சாபமென்று சொல்வது சரியா? இதற்குமேல்சொல்ல எனக்கு ஒன்றும் தெரியவில்லை.

விசேஷமாக நாம் கெட்டது நமது பெண்டு பிள்ளைமார்களாலேயே. கம்மாளன் கெட்டது கம்மாளச்சியினால்—என்று ஓர் பழமொழியுண்டு. அவர்களுக்கோ வரவு செலவு தெரியாது. அவர்களை எஜமானியாக வைத்துக்கொண்டு நமது கிருஹத்தில் பெரிய விசேஷ தினங்களிலாகட்டும், மற்ற சாதாரண தினங்களிலாகட்டும் அவர்களை யோசனை கேட்டு நடத்துவதென்றால், அது எத்தன்மையாய் முடியுமென்பதை கொஞ்சம் ஆழ்ந்து யோசிக்கவேணும். ஆனால், வியாபார செட்டிஜாதிகளின் பெண்டுகள் ஆண்கள் செலவிட்டாலும், மைந்தர்களுக்கோ மக்களுக்கோ விவாஹாதி காரியங்களுக்கு வேண்டியதாயிருக்கிறதென்று போதித்து சிக்கனஞ்செய்வதுண்டு. நமது சுயபுத்திக்கெட்டியவரையில் வீண் படாடோபங்கள் செய்யாமல் சிக்கனம் என்பதை நாம் நிலைநிறுத்துவோமானால் எவ்வளவோ தனவந்தர்களாய்விடுவோம். அப்போதுதான் நம்மினத்தவர்கள் எடுத்த காரியம் யாவும் எளிதில் முடியும். இதைவிட்டு நமது ஜாதியார்கள் எதைத்தொட்டாலும் சரிவர முடிகிறதில்லையென்று வருந்துவதில் யாது பயன்? ஓர் தொழில் கெட்டுப்போய்விட்டாலும் சரி, ஓர்வியாதி புலப்பட்டுவிட்டாலும்சரி, நாமோ அல்லது வயித்தியனோ என்னவிதமாய்த் தவறுதல் ஏற்பட்டுவிட்டது என்று யூகிக்கிறோமோ அவ்விதமான முக்கியகவலை ஏற்பட்டால்மாத்திரமே நாம் தாழ்ந்த நிலைமைக்கு வந்ததின் காரணம் எளிதில் புலப்படும்.

ஸ்நானம் செய்வதும் நமது ஜாதியார் வீட்டில் சாப்பிடுவதில்லையென்று சொல்வதும்தான் ஆசாரமென்று அனேகர் கருதுகிறார்கள். அதுவல்ல ஆசாரம். என்று நம்மினத்தில் ஒரே சமுகமாய் **சமபந்தி போஜனம்** செய்கிறோமோ, என்று நம்மில் ஒருவருக்கொருவர் கொள்வினைகொடுப்பினை செய்துக்கொள்ளுகிறோமோ அன்றுதான் ஆசாரமுண்டாயிற்றென்று நிர்ணயித்துக்கொள்ள வேண்டியது. அன்றுதான் நாம் யாகம் செய்த நாள். அதுதான் நமக்குள் ஒற்றுமை ஏற்பட்டது முதல்தடவையாகக் கருதவேண்டும். தற்காலம் எல்லா ஜாதியார்களும் சமபந்தி போஜனம் செய்யவேணுமென்று சங்கங்கள்கூட, நாம் ஒரே ஜாதியாராகிய இனத்தவர்கள் வீட்டில் ஏன் உணவுகொள்ளக்கூடாது? ஜாதி சீர்திருத்தமாகவேண்டுமானால் ஒருவன் ஏதோ தவறிக் கெட்டுப்போய்விட்டால் அவனைத் திருத்துவதுதான் உத்தமம். காலஞ்சென்ற மானும்பதி **அப்பாக்கண்ணுசசாரியாரவர்கள்** சில கிராமங்களுக்குச் சென்று ஆசாரத்தை

உண்டாக்குவதற்கு சாப்பிடக்கூடாத இடத்திலெல்லாம் சாப்பிட்டு அவரே வழி காட்டியிருக்கிறார். மதுரையில் வேறு மதத்தி லிறங்கிவிட்ட ஒருவரை திருச்சிசபையார்கள் பிராயச்சித்தம் செய்து சேர்க்கப்போகிறார்கள். சேர்த்துக்கொள்ளாமல் தள்ளிவைத்தால் சீக்கிரத்தில் கெட்டுப்போய்விடுகிறான். இவ்விதமாக நாளடைவில் பெருகிக்கொண்டே வருகிறது.

**திருவள்ளுவர் ஔவை** முதலியவர்களெல்லாம் தங்கள் ஜாதியைப் பெருமைப்படுத்திக்கொண்டுதானா வந்தார்கள்? நந்தன் என்பவரைப்பிராம்மணர்கள் வணங்கவில்லையா? தன்னை வணங்கவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டாரா? நாம் தொழில் செய்வதினால் போஜனம் செய்யக்கூட நேரமில்லையென்று ஸ்நானம் செய்யாமலே எந்த துர்வழக்கத்தை அநுஷ்டித்தோமோ அதே செயலாக நாம் குடும்ப விர்த்தி செய்கிறோம். அப்படிப்பட்ட விர்த்தி செய்வதினால்தான் அனந்தம் கேடுகள் உண்டாகின்றன. தேஜஸும் ஏற்படுவதில்லை.

ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு நல்லஆகாரத்தையும் வாயுவையும் உட்கொள்ளுகிறானோஅவனுக்குவியாதியில்லாமல் நுட்பமான அறிவை ஊட்டுகிறது. ஓர்சிநேகிதனை முதலில் தேர்ந்தெடுக்க வேண்டுமானால் முதன் முதலில் அவன் யாரோடுசேர்ந்திருக்கிறான். என்ன ஆகாரம் புசிக்கிறான். அதாவது மிருதுவான ஆகாரத்தைப் புசிக்கிறானா, கடிப்பான ராக்ஷஸ ஆகாரத்தை உபயோகப்படுத்துகிறானா என்பதைமாத்திரம் தெரிந்துக்கொண்டால் மற்றவைகளை விசாரிக்க வேண்டியதில்லை. உலகத்தில ஏற்பட்டிருக்கிற அதர்மங்களிலெல்லாம் பெரிய அதர்மம் ஜீவஹிம்ஸை. அப்பேர்ப்பட்ட ஜீவஹிம்ஸையிலிருந்து நாம் விடுபடவேண்டும்.

சுயஜாதி ஹோட்டல் ஒவ்வோர் ஊர்களிலும் அவசியம் இருந்தே தீரவேண்டும். ஒவ்வொருவரும் சுயம்பாகம் தெரிந்து வைத்துக்கொள்ளவேண்டியது.

விசுவப்பிராம்மண மஹா ஜனங்களே! தற்போது ஏற்பட்டிருக்கும் பாடசாலைக்கு நினைத்தபொழுதெல்லாம் யாசகம் எல்லா ஊரிலும் வாங்குவதென்று வைத்துக் கொள்ளக்கூடாது. ஆங்காங்கு ஏற்படுகிற வித்தியாசாலைக்கு ஆங்காங்குள்ளவர்களே திறமான பண்டு ஏற்படுத்திக்கொண்டு ஓர்வித கட்டுப்பாடு ஏற்படுத்திக்கொள்ளவேண்டியது. நம்மினத்துப் பிள்ளைகளையும், பெண்களையும் 12 - வயது மட்டும் அவசியம் பெற்றோர்கள் வாசிக்கத்தான்வைக்கவேண்டியது. அவ்விதம் தமது மைந்தர்களை வாசிக்கவைக்காதவர்கள் கிருஹத்திற்கு சுபஅசுப காரியங்களுக்குப் போகிறதில்லை யென்கிற உறுதி யிருக்க வேண்டும். தற்போது கல்வியாகிய தென்னைக்கு அறிவாகிய நீரைத் தினந்தோறும் ஊற்றிவருவோமானால் தாமுண்ட நீரை தலையாலே தான்தருதல் என்பது நிச்சயம். சுபம்!

---

சுபமஸ்து.
ஸ்ரீமத் விராட் விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்—தொழில்.

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள
சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.
301, தங்கசாலை வீதி, சென்னை.

சம்புடம்-5] காளயுக்தி௵ வைகாசி௴ 1918௵ மே௴ [சஞ்-5

## ஒளிவளர் விளக்கு.

விஸ்வகர்ம காலண்டர் என்பதொன்று விஸ்வகர்ம படத்துடன் ஸ்ரீ கொ. கன்னியப்பஆச்சாரியாரவர்களால இவ்வருஷம்வெளியாயிருக்கிறது. இதன் விலை 4 அணாவாகிறது. இதை வி. பி-யில் அனுப்புவதாயிருந்தால் 8-அணா ஆகிறதென்றறிகிறோம். அதன்காரணம் வி.பி போஸ்டில் அனுப்பும்போது உடைபடாதிருக்கும்படி இதனிருபக்கங்களிலும் அட்டைவைத்து பண்டு செய்யவேண்டியதாயிருப்பதேயாகும். நேரில் வாங்குவோருக்கு இது 4-அணாவுக்கே கிடைக்கும்.

* * *

மாயூரம் வித்வான் ஸ்ரீ சிவலிங்க உபாத்தியாயர் குமாரர் கம்பராமாயணப்பிரசங்கி ஸ்ரீ மா. சி. சுந்தரேச உபாத்தியாயர் அவர்கள் சிலமாதங்களாக சென்னையில் நிவாசமாயிருந்து, பல இடங்களில் புராணப்பிரசங்கஞ் செய்துவருகின்றார். இவருக்குக் கம்பராமாயணத்தில் வியாபகமதிகமிருப்பதாய்த் தெரிகிறது. கம்பர் விஸ்வகர்ம வம்ஸத்தினரென்பது இவருடைய தீர்மானமென்றும், அதற்குரிய ஆதாரங்கள் கம்பராமாயணத்தினின்றெடுத்து தொகுத்து ஒரு வியாசமெழுத இவருத்தேசித்திருக்கிறாரென்றுமறிந்து மிக மகிழ்கின்றோம். இவ்வியாசம் நமது பத்திரிகையில் என்று வருமென்பதை நமது வாசகர்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பார்களென்பதிற் சந்தேகமுண்டோ?

* * *

நமது பத்திரிகை இனிமேல் மாதந்தவறாது வெளிவர ஈசனருள்வாராக. இவ்வருஷாரம்பத்திலிருந்து இந்நோக்கத்துடனேயே உழைத்துவருகின்றோமாயினும், எதிர்பாராத இடையூறுகள் தோன்றி, பத்திரிகையை மாதமாதம் வெளிப்படுத்த முடியாதவாறு இடர்ப்படுத்தின. ஆதலால், ஜனவரி, பிப்ரவரி மாதச் சஞ்சிகைகளை ஒருமுறையிலும், மார்ச், ஏப்ரல், மே, ஜூன் மாதச் சஞ்சிகைகளை ஒருங்கேயும் வெளிப்படுத்த நேர்ந்தது. ஜூலைமாதச் சஞ்சிகையை அம்மாதத்திலேயே வெளிப்படுத்தக் கூடுமென்று நம்புகிறோம். அங்ஙனமே பிறமாதச் சஞ்சிகைகளும் காலந்தாழாது வாசகர்கள் கையுறச் செய்தற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். சஞ்சிகைகளைக் காலந்தவறிப் பிரசுரிப்பதினால் யாமே நஷ்டமடைகின்றனமாதலின், இதைத் தடுப்பதில் யாம் கவனஞ்செலுத்துதல் அவஸ்யமாயிருக்கிறது. யாம் தளராவண்ணம் சந்தாதாரர்கள் பொருட்சகாயஞ் செய்யவேண்டியது. அவர்கள் கடமையாயிருக்கிறது. காகிதவிலை குறைவாயிருந்தகாலத்திலேயே சந்தா வருமானங்கொண்டு பத்திரிகையை நடத்துவது கஷ்டமாயிருந்ததென்றால், காகிதவிலை ஆறுமடங்கதிகரித்திருக்கும் இக்காலத்தில் அக்கஷ்டம் எவ்வள வதிகமா யிருக்குமென்ப

லைச் சந்தாதாரர்களை ஊகித்தறியவேண்டுகிறோம். மற்ற ஜாதியார்களோ தங்கள் தங்கள் ஜாதிப்பத்திரிகைகள் நிலைநின்றுலாவி நன்மை பயக்கும்பொருட்டு அவைகளுக்குப் பெருந்தொகைகளைத் தானமாகக் கொடுத்து பத்திரிகாதிகாரிகள் ஊக்கங்குறையாதிருந்துழைக்கச் சகாயஞ் செய்கிறார்கள். சுஜாதியாரிடமிருந்து நாம் அவ்வளவு சகாய மெதிர்பார்க்கவில்லையாயினும், சந்தாவையும் அசட்டை செய்திருக்கக் கூடாதவர்களாயிருப்பதுபற்றி மிக விசனிக்கின்றோம். ஜாதியார்க்குப் பத்திரிகாவாசிப்பிலும் குலோத்தாரண காரியங்களிலும் நோக்கமுண்டாகுமட்டும் இதுபோன்ற பத்திரிகையைக் குலாபிமானமிக்கார் சிலர் முன்னின்று பணமுதவிச் சந்தாவை எதிர்பாராது நடத்திப் பலபிரதிகளை இலவசமாக ஊரூராக விநியோயஞ் செய்து, ஜாதியாருடைய பரிபக்குவத்தை யநுசரித்துக் காலக்கிரமத்தில் சிறு சந்தாவை நியமித்து வசூல் செய்வது சிலாக்யமாகும். அங்ஙனஞ் செய்யத்தக்கவர் நம்முன் காணப்படவில்லையென்பது குல துர்ப்பாக்கியமேயெனவேண்டும். சந்தா செலுத்துஞ் சக்தியுடையாரெல்லாம் தடைப்படுத்தாது அநுப்பி வருவாராயின், அதுகொண்டு வேறு பலர்க்குப் பத்திரிகையை இலவசமாய்ச் சிறிது காலமேனும் அனுப்பிவர யாம் சித்தமாயிருக்கின்றோம். சந்தா வருமானம் இதற்கே விநியோகப்படுகின்றதென்பது யாவரும் கவனிக்கத்தக்கது. சில நூறு சந்தாதாரர்களைப் பெற்றிருப்பதற்குப் பதிலாகச் சில ஆயிரஞ் சந்தாதாரர்களைப் பெற்றால் கவலைக்கிடம் அதிகமிராது; சந்தா தொகையைக் குறைத்தல் சாத்தியமாகும். அன்றிப் பக்கங்களைப் பெருக்கலாம்; பத்திரிகையை மாதமிருமுறை பிரசுரிக்கலாம். சகல ஜாதிச் சகோதரர்களும்பெற்று வாசிக்குமாறு பத்திரிகையைப் பயன்படுத்தலாம். இவ்வெண்ணங்களெல்லாம் சந்தாதாரர் பலத்தால் நிறைவேறக்கூடியவையேயல்லாமல் மற்றைப்படி பலிக்கக்கூடியவையல்ல. விஸ்வகர்ம ஜாதிக்கெனத் தனித்தொரு பத்திரிகை நடத்த யாம் முன்வந்த நாள்முதல் ஒருநிலைப்பட்டு நமது ஜாதியார் உற்சாகமூட்டிப் பக்கத்துணையாயிருந்தார்களாயின், இப்போது மாதப்பத்திரிகை நடத்துவதற்குப் போதிய ஆதரவு பொருந்தியிருக்கவில்லையேயென்று வருந்துவதற்குப் பதிலாக, வாரப்பத்திரிகையேனும் தீரமாய் நடத்திக்கொண்டிருத்தல் சுலபசாத்தியமாயிருக்கும். பத்திரிகை நம்மவருக்குள் நன்கு பரவியிருந்தால் நன்மைகளனந்தம் பயக்கவிருக்கும். சுஜாதிநிலை மேம்பட்டிருக்கும். இன்னு மநேக கான்பரன்ஸ்கள் நடைபெற்றிருக்கும். வியாபாரச் சாலைகள் ஏற்பட்டிருக்கும். வித்தியாநிதிகள் விளங்கிருக்கும் வித்தியார்த்திகள் சகாயம்பெற்றுச் சர்வகலாபரீக்ஷைகளில் தேறிப் பட்டம் பல பெற்றிருப்பர். உத்தியோக கௌரவங்கள் உல்லாசமாய் வந்திருக்கும். வீண் செலவுகள் குறைவுபட்டிருக்கும். சத்காரியங்கள் பலப்பட்டிருக்கும். ஒற்றுமையுயர்ந்திருக்கும், வேற்றுமை தாழ்ந்திருக்கும், துன்பம் உருவியிருக்கும், இன்பம் பெருகியிருக்கும். ஆனால், அவ்வித உணர்ச்சி நம்மவர்க்குள் அப்போது தோன்றிற்றில்லை. இப்போதேனும் தோன்றுமாயின் இனியேனும் பழைய எண்ணங்களைப் பூர்த்தி செய்து ஜாதியார்க்குப் பயன்படலாமென்றெண்ணுகிறோம். நமது பத்திரிகை நமது ஜாதியார்க்குப் பயன் தருதல் அவர்கள் பக்குவத்தினையே யாருமென்பதைமட்டும் அவர்கள் மறக்கலாகாது.



## சூரியன்.

(41 வது பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ கா. திருவேங்கடஆச்சாரியார், சென்னை.

சூரிய ரதத்திலுள்ள ஏழு கணங்களும் இப்பூமியிலே மழைபனி வெயில் சுகம் விருத்தி பஞ்சம் நோய் முதலியவற்றிற்குக் காரணராய்க் காலபேதங்களை யுண்டாக்குவர். சூரியனை அவ்விரதத்திலிருக்கும் இருஷிகள் தோத்திரஞ் செய்துகொண்டிருப்பார்கள். அரம்பையர் ஆடிக் களிப்பிப்பர். யக்ஷர் கடிவாளம் பிடித்து நிற்பர். கந்தருவர் பாடிக்களிப்பிப்பர். சூரியன் அண்டத்தைக் காப்பன்.

மேலே ஏழுகணமெனக் கூறப்பட்டன சூரியனிடத்திலே யுள்ளனவாய் விளங்குகின்ற ஆற்றல்களேயாம். இருஷிகள் என்றது ஒளியைக்கொடுத்து உலகத்தை அதற்குரிய வியாபாரத்திற்கேவிடும் சத்தியாம். அரம்பையரென்பது உலக வியாபாரத்தில் உயிர்களை யாட்டுவிக்கும் சக்தி. இராக்ஷசர் பின் தொடர்ந்து நிற்பரென்பது இருள். சர்ப்பகணமென்றது சூரியவீதி. அதுபற்றியே அதற்கு நாகவீதியெனப் பெயர்வந்தது. யக்ஷர் கடிவாளம்பற்றி நிற்பரென்பது சூரியனை உதயத்தில் பிறழாது காக்குஞ் சத்தியை. கந்தருவர் பாடிக்களிப்பிப்பர் என்பது அணுக்களைக் கவரும் சக்தியை. சூரியன் அண்டத்தைக் காப்பன் என்றது அண்டங்களெல்லாம் தன்னை வலம் வருமாறுசெய்து அவைக்கெல்லாம் தான் காரணமாய் நிற்கும் ஆற்றலை.

மானசோத்தர பர்வதமென்றது - சூரியன் சஞ்சரிக்கும் வீதியின் நிலையை. அவ்வுயர்ந்த நிலையில் கீழே பூமியை நோக்கி யிறங்காமலும் அந்நிலையினின்று மேலே யுயராமலும் சமமாகிய ஒரு மலைபோன்ற மதிற் சுவரின்மீதே சஞ்சரிப்பதுபோலச் செல்லுதலால் மலை என்னப்பட்டது. மனதிற்கு எட்டாத உயர்ந்த மலை என்பது அதன் பொருள்.

நான்கு நகரமென்றது உதயம், உச்சி, அஸ்தமயம், அந்தோபாகம் என்னும் நான்கு கோணங்களையுமாம். உதயகோணத்தை இந்திரனுக்குரிய வசுலோகசார நகரமென்றது. பொன் மயமாகிய வெளியும் புள்ளொளியும் முதலிலே யிடமாதல்பற்றியாம். வெளிக்கிறைவன் இந்திரனாதலின் இந்திரனுக்குரியதெனப்பட்டது.

உச்சிகோண நகரம் யமனுக்குரியதெனப்பட்டது. வெயின்மிக்க கொடியதாதலானும் உயிர்களுக்குப் பசிதாகங்களையுண்டாக்குதல் பற்றியாம். அஸ்தமய கோணத்தை வருணனுக்குரியதென்றது சூரியன் அவ்விடத்தை யடையும்போதுபூமி குளிர்ச்சியும் சோகநீக்கமும்பெறுதலால் தண்ணென்ற சுபாவத்தையுடைய நீருக்கிறைவன் வருணனே யன்றோ? வடக்கென்றது அதோபாகத்தை. சூரியன் அதோபாகத்திலிருக்கும்போது ஊர்த்துவபாகத்திலுள்ள உயிர்களுக்கு களிப்பையும் நித்திரையையுங் கொடுத்தல்பற்றி அக்கோணம் சோமனுக்குரியதெனப்பட்டது.

பூமியைவிட சூரியன் ஏறக்குறைய $12\frac{1}{2}$-லக்ஷமடங்கு பெரிதானது. சூரியனுடைய சுற்றளவு ஏறக்குறைய 23-இலக்ஷம் மைல். பூமிக்கு சூரியன் ஒன்பதுகோடியே இருபது இலக்ஷம் மைல் தூரத்திலிருக்கிறான். பூமியின் மையத்திலிருந்து சூரியனுக்குள்ள தூரம் ஏறக்குறைய 32 இலட்சம்மைல்.

பூமி ஜூன் மாதத்திலிருப்பதைவிட டிசம்பர் மாதத்தில் சூரியனுக்கு 3 - இலக்ஷம் மைல் அருகாமையி லிருக்கிறதாக வைத்துக்கொண்டு இரவும்பகலும் விடாது ஒரு குதிரை அதிவேகமாகச் சென்றிடினும் அது சூரியனைச்சேர ஏறக்குறைய 700 வருஷம் செல்லுமாம். சூரியன் தன்னைத்தான் சுற்றிவர இருபத்தைந்து நாள் செல்லுமாம்.

சூரியனைச்சுற்றி ஓடும் அண்டங்களுக்கு கிரகங்கள் என்று பெயர். அவை பிரதான கிரகங்கள் எனவும் உபக்கிரகங்கள் எனவும் பாகிக்கப்பட்டிருக்கின்றன.

சூரியனைச் சுற்றியோடும் கிரகங்கள் பிரதானகிரகங்கள். பிரதான கிரகங்களைத்தொடர்ந்து அவைகளோடு சூரியனுக்கும் அதைச் சுற்றியிருக்கும் கிரகங்களுக்கும் சூரியமண்டலம் எனப்படும்.

புதன், சுக்கிரன், அங்காரகன். குரு, சனி, யூரேனஸ், நெப்டியூன் இவைகளில் சூரியனுக்கு அதிக சமீபத்திலிருப்பது புதன். அதிகதூரத்திலிருப்பது நெப்டியூன். பூமிக்கோர் உபக்கிரகமுண்டு. அதுதான் சந்திரன். அது பூமிக்கு 2,40,000 மைல் தூரத்திலிருக்கிறது. அதன் குறுக்களவு 2160 மைலில். அது சற்றேறக்குறைய 28 நாட்களில் பூமியைச் சுற்றிவரும். பூமிக்கு அதிகச் சமீபத்திலிருப்பதால் சூரியனைவிட அதிக பெரிதாகத் தோற்றுகின்றது. பூமி சந்திரனைப்போல் அந்தரத்தில் அசைவாடிக்கொண்டிருக்கிறது. அது எதின்பேரிலும் சார்ந்திருக்கவில்லை. 24 மணிக்கொருதடவை பூமி சுழல்கின்றது. இதை தினசரி ஓர்நாள் என்பர். இதனால் இரவும் பகலும் நமக்கு உண்டாகின்றன.

---

365¼ நாள் பூமி சூரியனைச் சுற்றுவருகின்றது. இதை வருஷாந்தி என்பர். நமக்கு பருவகாலங்கள் உண்டாகின்றன. இவைகளை யுற்று விசாரித்துப் பார்க்குமளவில் இவைகளை ஆட்டுவிக்கும் ஓர் சக்தியிருப்பதாகவும் எல்லாம்வல்ல இறைவன் செயல் என்றும் கூறுகின்றார்களே அது உண்மை எனவும் புலப்படுகிறது. இன்னும் விரிக்கில் பெருகுமென இம்மட்டோடே விடுத்தனன். சாந்தி. சாந்தி.

## நாம் முன்னேற்றமடைவதெப்படி?

நமக்குக் கல்வியும் ஒழுக்கமு மிருந்தால் முன்னேற முடியும். நம்மவர்கள் தங்கள் தங்கள் பிள்ளைகளைக் கல்விச்சாலைகளுக்கு அனுப்புகிற வழக்கம் கிடையாது. ஐந்து ஆறுவயதானவுடன் தொழிற்சாலைகளுக்கு அனுப்பிவிடுகிறார்கள். அப்படி அனுப்பினாலும் இராத்திரிகாலங்களிலாகிலும் வாசிக்கச் செய்யவேண்டும், அதுவுமில்லை. இவர்களுக்கு சாவகாசமேது? காலையில் 6-மணிக்கு நித்திரைவிட்டெழுந்ததும் சிலர் பல்லைத் துலக்காமலே தொழிற்சாலையைத் திறந்து தொழிலை ஆரம்பித்துவிடுகிறார்கள். இரவு 9 - மணிக்குத்தான் மூடுகிறார்கள். அதுபரியந்தம் பெரியவர்கள்கூடவே பிள்ளைகளும் இருக்க நேரிடுகிறது. இந்த ஸ்திதியில் பிள்ளைகள் எப்படி படிக்கமுடியும் ? அவர்கள் படிக்கச் சாவகாசமேது?

தற்சமயம் அனேக இடங்களில் அனேக புண்ணியவான்கள் தொழில் செய்யும் பிள்ளைகளுக்கென்று இராப்பாடசாலைகள் ஏற்படுத்திச் சம்பளமில்லாமல் இலவசமாகப் படிப்பு சொல்லிக்கொடுத்து வருகிறார்கள். அப்படிப்பட்ட இலவசப்படிப்பைப்படித்துக்கொள்வதற்கும் நமது ஜாதிச் சிறுவர்க



ளுக்கு வசதி கிடையாது. அப்பாடசாலைகளில் எவரேனும் நம் ஜாதிப்பிள்ளைகள் கிடைப்பதரிதா யிருக்கிறது. மற்ற ஜாதிப் பிள்ளைகள் நிரம்ப இருக்கிறார்கள். நம் ஜாதி மஹா நாடுகளில் செய்யுந் தீர்மானங்களுக்கு உட்படும்படி தக்க ஏற்பாடுகள் செய்தால்தான் விஸ்வகர்ம ஜாதியார்களுக்கு கல்வியும் நாகரீகமும் பலவித சவுகரியங்களும் ஒழுக்கங்களும் சித்திக்கும். உலக விவகாரங்களும் தெரியும் இல்லாவிட்டால் கிணற்றிற்குள் இருக்கும் தவளைகளுக்கு நாட்டு வளப்பம் எப்படித்தெரியாதோ அதுபோலத்தானிருக்கும்.

இவர்கள் கல்வி யில்லாமலும் கேள்வியில்லாமலும் உலகத்தில் இன்னது நடக்கிறதென்று தெரியாமலு மிருக்கிறார்கள். கம்மாளனுக்குச் சொல்லுகிற பழமொழி ஒன்று வழங்குகிறது. தொழிலில் சென்றபோது முழுபுத்தியும், தொழிலைவிட்டு வெளியில் வந்தால் கால் புத்தி என்றும் சிலர் சொல்லக்கேட்டிருக்கிறோம். இவர்கள் தொழிலையே முக்கியமாய்க் கவனிக்கிறதினாலும் விழித்தது முதல் நித்திரைக்காலம் வரையிலும் போஜனகாலம் தவிர டிராமா, பயாஸ்கோப்பு, பந்தய இடங்கள், பூஜாரித்தனம் முதலிய வேடிக்கை பார்க்குமிடங்கள் தவிர வேறு எதையும் கவனிக்காதிருக்கிறபடியால் இவர்களுக்கு மற்ற உலக அனுபவம் ஏதும் வருகிறதில்லை. அதனால்தான் கால்புத்தி என்று சொல்ல நேர்ந்ததாகத் தெரிகிறது. இந்நிலைமை மாற்றவேண்டுமானால், ஓர்வித கட்டுதிட்டங்கள் செய்து சீர்திருத்தங்கள் செய்யவேண்டியது சபைகள் வைத்திருக்கும் விஸ்வகர்ம குலாபிமானிகளின் கடமையாகும்.

1. காலையில் 7 அல்லது 8 மணிக்குத்தான் தொழிற்சாலைகளைத் திறப்பதென்றும், மாலையில் 5, 6-மணிக்குள்ளாக தொழிற்சாலைகளை மூடுகிறதென்றும் ஓர் ஆர்டர் பிறப்பிக்கவேண்டும் அப்படியானால் காலை மாலைகளில் பிள்ளைகளுக்கு வாசிக்க சாவகாச மேற்படும். பெரியவர்களுக்கும் உலகவிவகாரங்களைத் தெரிந்துகொள்ள பலபத்திரிகைகளை வாசிக்கச்சாவகாசம் ஏற்படும். அப்பொழுதுதான் பொதுப் பிரசங்கங்களுக்கும் போய்க்கேட்கவும் அதனால் எல்லா நன்மைகளையும் அடைய முடியும்.

2. நம் ஜாதியார்களுக்கென்று சில ஓவர்சியர்களையும் சில பியூன்களையும் ஏற்படுத்தவேண்டும். அந்தப் பியூன்கள் எந்தெந்த இடத்தில் விஸ்வகர்மச் சிறுவர்கள் வாசிக்கக்கூடியவர்க ளிருக்கிறார்களோ அவர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு போய் அவர்களுக்கு அருகாமையிலிருக்கும் இலவச இராப்பாடசாலைகளில் விடவும் அழைத்துவரவும் பழக்கம் செய்துவர வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு ஊக்கமுண்டாகும். அப்படிச் செய்யாமல் நோடீசுகள் போட்டாலும் வாயினால் சொன்னாலும் கவனிக்கமாட்டார்கள். இதுதான் தக்க தூண்டுதலா யிருக்கும்.

பீடி, சிகாட்டு, சுருட்டு முதலியவற்றை பிடிப்பதும், லாகிரி வஸ்துக்களைச் சாப்பிடுவதும், சீட்டு ஆடுவதும், மற்றும் பலவிதமான ஒழுங்கீனங்களில் பிரவேசிப்பதும், டிராமா பயாஸ்கோப்பு முதலிய பல இடங்களில் திரிந்து காலம்சழிப்பவர்களாகவு மிருக்கப்பட்டவர்களை மேற்சொல்லிய ஓவர்சியர் கண்டுபிடித்து புத்திமதிகளைச் சொல்லி சீர்திருத்தங்கள் செய்துவர ஏற்படுத்த

## ஏழை மாணவர் கல்வி நிதி.

எல்லா தேசங்களிலும் நம்மைச் சுற்றிலும் பூர்வீக புராண வழக்க பழக்கங்கள் ஒவ்வொன்றாய் ஜீரணமடைந்து ஒழிந்து நவீனமானவைகள் தோன்றிப் பிரகாசமடைகிறதை நாம் பார்க்கின்றோம். ஒரு சந்ததி மண்ணறைக்குள் போகிறதும் இன்னோர் சந்ததி எழும்புகிறதும் இயற்கைப்பிரமாணம். நாகரிகத்தில் முன்னுக்கு வந்திருக்கும் நம்முடைய பிராமணசகோதரர் தற்கால நாகரிகத்துக்கேற்காத விபரீதமும் இடையூறுமான அநேக வழக்கங்களையும் கொள்கைகளையும் கட்டோடே விட்டொழித்து முன்னேறுகிறார்கள் முன்னோர்களின் கொள்கைகளிலே நிலைத்திருப்போர் முன்னேறமாட்டார்கள் என்னும் சத்தியம் பிரத்தியட்சமாய் எப்பக்கத்திலும் பார்க்கலாம். ஆகையால், முன்னேற்றம் அடைய வேண்டுமென்று விரும்பும் ஜாதியார் தற்கால நாகரிகத்துக்கு விகற்பமான பழயவழக்கங்களைக் களைந்து அநுகூலமான புதியவற்றை ஆவலோடு அங்கீகரித்து அநுஷ்டிக்கவேண்டும்.

சகல ஜாதிகளும் முன்னேற்றமடையும்படிக்கான அருணோதயம்தோன்றியிருக்குமிக்காலத்தில் ஒவ்வொரு குலத்திலுமுள்ள தனவந்தர்களும் குலாபிமானிகளும் கும்பகர்ணனைப்போல் நித்திராதேவி மயக்கத்திலிராமல் விழித்தெழுந்து தாங்கள் ஒவ்வொருவருந் தங்குலம் மேன்மையடையும்படி என்ன செய்யலாமென்று யோசித்து நலமாகத் தோன்றுங் காரியங்களை நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாமென்று கடத்திவைக்காமல்,

"ஒன்று செய், நன்று செய், இன்று செய்"

என்னும் பிரமாணத்தின்படி உடனே அம்முயற்சிகள் கைகூடும்படி செய்யவேண்டியது அவசியம். வெள்ளத்தால் போகாததும், வெந்தணலால் வேகாததும், வேந்தராலும் கொள்ளத்தான் முடியாததும், கொடுத்தாலும் நிறைவொழியக் குறைவுபடாததும், கள்ளர்க்கு மிக அரிதும், காவலுக்கு மிக எளிதுமான கல்வியென்னும் பொருள்

---

வேண்டும். அதற்கும் அடங்காத பிள்ளைகளைப் போலீசாரிடம் ஒப்புவித்து தண்டிக்கச் செய்யவேண்டும். அப்பொழுதுதான் இந்த ஜாதிப் பிள்ளைகள் சீர்திருத்தமடைவார்கள்; சோம்பேரித்தனத்தையும் விடுவார்கள்; மேல்நிலைமைக்கும் வருவார்கள். இவ்வித காரியங்களை யொன்றும் செய்யாமல் நம் ஜாதி கீழ்நிலைமைக்கு வந்துவிட்டது. மேல்நிலைமை அடையவேண்டுமென்று சொல்லிக்கொள்வதாலும் பயனில்லை. உடனே தேக கஷ்டத்தையும் பொருள் நஷ்டத்தையும் பாராமல் பாடுபட்டுவந்தால் கூடியசீக்கிரம் முன்வர யாதொரு ஆக்ஷேபணையும் கிடையாது.

இவ்வித ஏற்பாடுகளுக்கெல்லாம் விஸ்வகர்மகுலாபிமானிகள் ஒன்றுசேர்ந்து சபைகள் மூலமாக மஹாநாடு ஒன்றுகூட்டி விஸ்வகர்ம மஹா ஜனங்களுடைய அங்கீகாரம் பெற்று நடத்தவேண்டியது முக்கிய கடமையாகும். இவ்வித காரியங்களைச் செய்ய முயன்றால் இதற்குவேண்டிய செலவிற்கும் பொருள் சகாயம் கிடைக்கும். இவ்வித விஷயங்களையெல்லாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது நமது கடமை.

ஸ்ரீ கொ. கன்னியப்ப ஆச்சாரியார்.



எளியோர் தனவந்தர் எல்லோருடைய உள்ளத்திலும் இருக்கும்படி எந்த ஜாதி முயற்சிசெய்யுமோ அதுதான் இனிமேல் முன்னுக்கு வந்து பிரகாசிக்குமே யல்லாமல்,

......................................................

மமதையில் நிலைத்திருப்பதால் ஜாதி முன்னேற்றமேயடையமாட்டாது.

'கல்வியைக்கல், கற்றபடி நில்' என்பது ஆன்றோர் மொழி. அப்படியே யாவரும் கோபித்தெழும்பி வலியோர் எளியோர் யாவருடைய பிள்ளைகளும் கல்வி கற்கும்படியான ஒழுங்குகள் செய்யவேண்டியது தனவந்தர்கள்மேல் விழுந்த கடமை. அவர்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் ஏழைமாணவர்கள் கல்விநிதி யொன்று ஏற்படுத்தி அந்தந்த கிராமங்களிலுள்ள ஏழைமாணவர்கள் எல்லோரும் கல்வியறிவில் தேறும்படி பணஉதவிசெய்து ஜாதி முன்னேறச்செய்ய வேண்டும். தனவந்தர்களில் சிலர்:

*சட்டியடிப்போர்க்குங் கண்மீதிலேறுவோர்க்கு*
*எட்டியடிப்போர்க்குஞ் சுவரே-திட்டமுடன் [ம்*
*பாடுவோர்க்கீயாரே பல்லுகிரத்தாடையினிற்*
*போடுவார்க்கீவார் பொருள்.*

என்றபடி இக்காலத்திலுமிருப்பது மிகவும் வெட்கமான காரியம். உத்தமர் சொல்லாமலே செய்வார்; மத்திமர் சொல்லிச் செய்வார்; அதமர் சொல்லியுஞ் செய்யார்.

ஆகையால்.................கனவான்களே, நீங்களிருக்கும் ஒவ்வொருகிராமங்களிலும் ஏழை மாணவர் கல்விநிதியென்னும் பண்டு ஏற்படுத்தி தன சகாயத்தால் அந்தந்த கிராமங்களிலுள்ள ஏழை மாணவர்கள் எல்லோரும் கல்வி அறிவில் தேறிக் குலத்தார்க்கு மேன்மையாகவிளங்கும்படி உடனே முயற்சி செய்யுங்கள்.

## பிராமணக் குருமாரும் தபதிகளும்.

'சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் ஒருபாற் கோடாத' சைவசமயிகளே! ஒருவர் நூதனமனை யியற்றிக் கிரகப்பிரவேசஞ் செய்யும்போது, ஒவ்வொரு இடங்களிலும் நமது பிராமணக் குருமாருக்கும், தபதிகளுக்கும், பிரதமக்கிரியை ஆசிர்நடத்துவதென்னும் விஷயத்தில், நெடுங்காலமாகப் பெரும் வாக்குவாதங்கள் நடந்துவருகின்றன. இப்போராட்டத்தைக் கல்வியறிவான் மேம்பட்ட மேதாவிகள் வெளிப்பட்டு, வேதசிவாகமங்களின் விதியை அநுசரித்து, இவ்வண்ணமாகவே நடத்தல்வேண்டுமென்னும் ஓர் நியதிபண்ணுது வாளாயிருப்பது மாபன்று. இசனுல் 'தென்றல் முற்றிப் பிரசண்டமாருதம்' ஆனாற்போல நமது சமயத்திற்கே பெருங் கேடுண்டாகிவிடும்போலிருக்கின்றது. அதற்கு அத்தாட்சியாக, வண் கிழக்கு ஆனைப்பந்தியடியில் சமீபத்தில் ஓர் சம்பவம் நடந்திருக்கின்றது. அது வருமாறு:—

வண்கிழக்கு ஆனைப்பந்தியடியிலிருக்கும் ஸ்ரீ க. இரத்தினப்பிள்ளை என்பவர், புதுமனையொன்றியற்றுவித்து சென்ற சித்திரைமீ 20உ குருவாரத்தன்றிரவு கிரகப்பிரவேசஞ் செய்வதற்கு முகூர்த்தம் வைத்திருந்தார். அவர்களுக்கு புரோகிதர் ஸ்ரீமத் கோ. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களேயாம். மேற்குறித்த குருக்கள் அவர்களே, கிரகப்பிரவேசத்திற்கு வேண்டிய உபகரணங்களுக்குப் பட்டோலை போட்டுக்

---

நம்குல மாணவர்க்கு நல்காத் திரவியங்கள் [காம்
பம்புக்காம் பேய்க்காம்பரத்தையர்க்காம்-வம்புக்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவு
கள்வர்க்காந் தீக்காகுங் காண். [க்காம்

திராவிடாபிமானி.

கொடுத்துப் பின்னால் நடத்தவேண்டிய ஒழுங்குகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, தபதிகள் வீட்டெசமானை நோக்கி, குருக்கள் வாஸ்துசாந்தி செய்தபின்னரே நாங்கள் பொங்கி எங்களுடைய கிரியைகளை நடத்துவோம். வாஸ்துசாந்தி செய்யாமல் நாங்கள் ஒரு காரியமுஞ் செய்யமாட்டோமென்று சொன்னார்கள். அதற்குக் குருக்கள் நான் வாஸ்துசாந்தி செய்யுமுன்னமே தபதிகள் தங்கள் வேலைகளை முடித்துக்கொள்ளக்கடவர். வாஸ்துசாந்திசெய்தபின் அவர்களுக்கு வீட்டினுள்ளே எந்தக் கிரியையுஞ் செய்வதற்கு ஆகமப்பிரமாணங் கிடையாது. ஆனதால் நான் அவர்களுடைய எண்ணத்துக்கு சம்மதிக்கமாட்டேனென்று கூறினார். அதைக்கேட்ட வீட்டெசமான் சிலருடைய போதனையினால் தபதிகளுடைய எண்ணப்படியே கிரியைகளை நடத்தவேண்டுமென்று கேட்டார். அக்கேள்விக்குக் குருக்கள் சிறிதுமுடன்படாது ஆகமப் பிரமாணத்தை மீறி நான் ஒரு கிரியையுஞ் செய்யமாட்டேன், உங்களுக்கு விருப்பாயிருந்தால், வேறு யாராவது குருக்களை வைத்து நடப்பித்துக்கொள்ளுங்களென்று சொல்லிவிட்டு எழுந்துபோய் விட்டார். அதன்பின்னர் ஸ்ரீமத் ச. தியாகராஜக் குருக்களைக் கூட்டிவந்து, அவர் வாஸ்துசாந்தி செய்துவிட்டபின், தபதிகள் வீட்டினுள்ளே பொங்கித் தங்கள் ஏற்பாடுகளை நடத்திமுடித்தார்கள். அதன்மேற் புதிய குருக்கள் அட்டமங்கலம் முதலிய பொருள்களை எடுப்பித்துக்கொண்டுவந்து, இலக்குமி ஸ்தாபனஞ் செய்து எஞ்சிய கிரியைகளையும் இயற்றிப் பூர்த்திசெய்தார். அந்தச் சமயத்தில் நானும் அங்கே சமுகமாயிருந்தேன். அப்போது நான் ஸ்ரீமத் ச. தியாகராசக் குருக்களை நோக்கி, ஐயா! பழைய குருக்கள் தபதிகளுடைய அபிப்பிராயத்திற்கு செய்ய ஆகமவிதி யில்லையென்று திராகரிக்க தாங்கள் எந்த விதியைக்கொண்டு அவர்களுடைய எண்ணத்துக்குக் கட்டுப்பட்டு செய்துமுடித்தீர்களென்று வினவினேன். அதற்கு குருக்கள், நான் விதிகாணாமல் நடத்தவில்லை 'காமிகாகமம்' தமிழ் மொழிபெயர்ப்பு என்னிடத்திலிருக்கின்றது. அதிலே குருக்கள் வாஸ்துசாந்தி செய்துவிட்டபின், தபதிகளுடைய கிரியைகள் செய்ய விதியிருக்கின்றது நாளை எங்கள் வீட்டுக்கு வந்தால் காட்டுவேனென்று கூறினார். நான் இரண்டுமூன்று தினங்கழித்து ஸ்ரீமத் ச. தியாகராசக்குருக்கள் வீட்டுக்குப் போய், அக்காமிகாகம மொழிபெயர்ப்புப் புத்தகத்தை வாங்கிவந்து பார்வையிட்டேன். அதில் கோயில் விஷயத்தில் இலிங்கப் பிரதிஷ்டை செய்யும்போது, குருக்கள் வாஸ்துசாந்தி செய்தபின், கண்திறத்தல், மருந்துசாத்துதல் முதலிய சில கிரியைகளைச் சிற்பி செய்யலாமென்று கூறப்பட்டிருக்கின்றதேயன்றி, கிரகப்பிரவேச விஷயத்தில், வாஸ்துசாந்தி செய்தபின், தபதிகள் எந்தக் கிரியைகளையுஞ் செய்யும்படி சொல்லப்பட்டிருக்கவில்லை. அதிலும் வீட்டினுள்ளே பொங்கவேண்டுமென்று தபதிகள் வற்புறுத்திக் கூறும் விஷயம், வைதிக நூல்களெவற்றிலுங் காணப்படவில்லை, செந்தாமரையாள் சகிதமுஞ் சாந்நித்தியமாய் வீற்றிருக்கும் மந்திரத்தில், செருக்களத்திற் பூசிக்கப்படுபவளாகிய காளிதேவியின் ஆராதனை கைக்கொள்ளற்பாலதன்று என ஆன்றோர் கூறுகின்றார்கள். சிலர் இது உலகவழக்கெனக் கூறுகின்றார்கள். எங்களுக்குக் கடவுளால் அருளப்பட்ட வேதாகமங்கள் கிரியிலேற்றிய தீபம்போல ஏற்பட்டிருக்கும்போது, அவைகளைப் புறக்கணித்து தீபத்தை ஏற்றிக்கொண்டு கூபத்தில் விழுவார்போல, அவைதிகக் கிரியைகளை நாமேன் கைக்கொள்ளவேண்டும். அன்பர்களே! வேதா



ங்காகிய நமது ஆகமப் பிரமாணத்துக்கு விரோதமாகச் செய்யப்படுகின்ற எந்தக் காரியங்களும் தீமைபயக்குமென்பது திண்ணம். அதற்கு நாரத மகாரிஷி முதலிய முனிவர்கள், வேதம் சிவாகம விதிப்படி யாதாமொன்றை இயற்றும்போது, அதில் அவைதிகக் கிரியைகள் சிலவற்றைக் கையாண்டமையான், அது மாணயாகமாகி அதிலிருந்து செம்மரியாட்டுக்கடா வென்று எழுந்து முனிவர்களை இம்சை செய்யும்போது, அவர்கள் சுப்பிரமணியப் பெருமானைப் பிரார்த்திக்க, அவர் அத்தகையரை வாகனமாக்கிக்கொண்டு முனிவர்களை இரட்சித்தமையே போதியசான்றாகும். அதுவன்றி ஒருவன் தன் குலகுருவைக் கைவிட்டு வேறொருவரைக் குருவாக வரித்துக் கிரியைகளைச் செய்வித்தால், மிகுந்த தீமை விளைக்கும். திருசங்கு மகாராசன் தனது குலகுருவாகிய வசிட்ட முனிவரைக் கைவிட்டு விஸ்வாமித்திரரைக் குருவாகக் கொண்டமையினாலன்றோ, நீசத்துவமடைந்து பின்னரும் உலப்பற்ற இன்னல்களை அனுபவிக்கும்படி நேர்ந்தது. குருக்கள்மாரே தண்டுல ஆர்வமிகுதியினால் ஆகமப்பிரமாணங்களைக் கைவிடுவார்களானால் சிஷர் குழாத்தை நாம் குறைகூறுவதிற் பயனென்னோ? தமிழரசர் காலமாயின் சேத்திரத்துக்குப் பங்கமெய்திவிடுமே! இது கிறிஸ்துமத அநுசாரிகளான ஆங்கிலேய அரசாட்சிக் காலமாதலினால், வெளிக்குக் குருவென்னும் நாமத்தைக்கொண்ட ஆசாரியர்களும், சமய உணர்ச்சியற்ற தனவந்தர்களும். தாங்கள் நினைத்தபடி நடக்க இடங்கொடுக்குந்தானே? உலகத்திலே ஒவ்வொரு சாதியாருள்ளுங் கட்டுப்பாடும் ஐக்கியமும் விருத்தியாகும்போது முதல் வருணத்தாராகிய விப்பிரர்களுள்ளே அவைகளில்லாதிருத்தல் விசனிக்கத்தக்கதே! புதிய குருக்கள் பழைய குருக்களோடு சேர்ந்து, ஒத்து நடப்பித்திருப்பாரானால், நாம் அவரைக்குறைகூற இடமேற்படமாட்டாது. செருப்புக்காகக் காலைக்குறைக்கலாமா? நண்பர்களே! நமது தபதிகள் கிரகாரம்பந்தொடக்கம், கிரகப்பிரவேசம் வரையில் தங்கள் சிரமத்தைப் பொருட்படுத்தாது உங்களோடு சேர்ந்து ஒத்துழைத்தவர்கள். ஆதலால், அந்த நன்றியை மறந்துவிடாமல், அவர்களது ஆசைவாரிதி மறக்கும்படி கனகாபிஷேகஞ் செய்யுங்கள். அதனை ஒருவருந் தடுக்கமாட்டார்கள். சுபகாரியங்களில் ஆகமப் பிரமாணத்தை மீறி ஒரு கிரியையும் நடத்தக்கூடாதென்பதே எமது வேண்டுகோள். அதுவன்றி "துவிபுத்திரரைப் பயந்த மாதாவுக்கு ஒரு குயத்தாற்பாலும், மற்றக்குயத்தால் நீருஞ் சொரிவதுபோல மரவேலை செய்த தச்சருக்கு இவ்வளவு கண்ணியமும் மேம்பாடுமீய்ந்து, சுதைவேலைசெய்த எங்களைப் புறக்கணித்தது நீதியாகுமோ" என்று மேசன்மாரும் முறுமுறுக்கின்றார்கள். அவர்களும் ஆட்சேபிக்கவுரிமையுண்டுதான். மித்திரர்களே! இதுகாறும் வழக்கம் பழக்கமென்னுங் குருட்டுவழியை பின்பற்றிக் கண்மூடித்தனமாய் நடந்ததுபோக, இனிமேலாவது உட்கலகத்தை விடுத்து நமது ஆகமவிதியைப் பின்பற்றி யொழுகும்படி மிக்க தாழ்மையோடு வேண்டிக்கொள்கின்றேன்.

க. வைத்தியலிங்கப்பிள்ளை, வண்ணைநகர்.

[இது, யாழ்ப்பாணத்து 'இந்துசாதனம்' பத்திரிகையில் வெளிவந்தது.]

# இயற்கை அற்புதங்கள்.

### தாயைத்தின்னும் பூச்சி.

தேனீக்கள் குஞ்சுபொரிக்கும்போது முதுகு பிளந்துபோகிறதாம். தாய் இறந்ததும் குஞ்சுகள் வயிற்றுக் காகாரமில்லாமல் செத்ததாயையே தின்று ஜீவிக்கின்றனவாம்.

### சிகப்பாக மாறும் நீர்.

சுவிட்சர்லாண்டிலுள்ள மோராட் எரியின் ஜலம் பத்து வருடத்திற்கொருதடவை சிவப்பாக மாறிவிடுகிறதாம் இதில் ஒருவித சிறிய பூண்டுகள் இருப்பதால் அவ்விதமாகிறதென அணுதரிசனி கருவிகளால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

### தும்மல் மரம்.

தென் ஆப்பிரிக்காவில் ஒருவித மரம் இருக்கின்றது. இதை அறுத்தாலும் வெட்டினாலும் மனிதருக்குத் தும்மலுண்டாகிறதாம்தவிர, பூச்சி புழுக்கள் ஒன்றும் இம்மரத்தை நாடுவதில்லையாம். இது ருசிக்குக் கடுங்கசப்பு. வேலைக்காக வெட்டிய காய்ந்தமரம் பார்வைக்கு அழகாயும் உறுதியாயுமிருக்கின்றதாம். இழைத்து மெருகு கொடுத்தால் நன்றாயிருக்குமென்றும், இம்மரம் ஜலத்தில் நெடுநாளைக்கு கெடாமலிருப்பதால் கடற்பாலங்கள் முதலிய வேலைக்கு மிகவும் உபயோகப்படுகிறதெனவும் ஊகிக்கப்படுகின்றது.

### பகவானை வணங்கும் பனைமரம்.

பரீத்பூரண்டை ஒரு பனைமரமுள்ளது. மாலையில் கோயில் மணிகள் அடிக்கும்போது தரையில் படிந்து விழுந்திருக்கிறதும், அடுத்த காலையில் நிமிர்ந்துகொள்வதுமாயிருக்கிறது. இவ்விக்கையின் மகிமையானது ஒப்பற்றதாயிப்படியே ஒரு வருஷகாலமாய்த் தினந்தோறும் செய்து வருவதினாலே எங்கும் ஆச்சரியகரமாய் யாத்திரிகர்களும் பெருந்திரளாய் வந்து கூடுகிறார்கள். இம்மரத்துக்குப்பிரார்த்தனை செலுத்துவதிலும் எப்பேர்ப்பட்ட கஷ்டங்களும் பரிகரிக்கப்படுகிறதாம். இரவும்பகலும் அம்மரப்போக்குகளை கவனிப்பதற்கேற்ற விசேஷ கருவிகளை அமைத்துப்பார்த்ததில் இம்மரம் உஷ்ணநிலையேறியபோது விழுவதும், இறங்கியபோது எழுவதுமாயுள்ளது. மற்ற மரங்களையும் கவனிக்கிறபோது அவையும் சுற்றியுள்ள மாறுபட்டபடி அசைவு பெறுகிறதாயேற்படுகிறது

சுபமஸ்து.

ஸ்ரீமத் விராட் விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்-தொழில்.

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.

301, தங்கசாலை வீதி, சென்னை.

சம்புடம்-5] காளயுக்தி௵ ஆனி௴ 1918௵ ஜூன்௴ [சஞ்-6

## ஒளிவளர் விளக்கு.

யாழ்ப்பாணம் ஹைகோர்ட் வக்கீல் ஸ்ரீ. ந. சிவக்கொழுந்து ஆச்சாரியாரவர்கள் நமது குலத்தாருடைய பார்வைக்கும் ஆராய்ச்சிக்கும் உரியதான விஷயமொன்று பிறிதொரு பத்திரிகையில் வெளிப்பட்டதை நமது கவனத்திற்குங் கொண்டுவந்தார்கள். இவ்வாறே கோயமுத்தூர் ஸ்ரீ சி. ஆர். சுப்பராய ஆச்சாரியாரவர்களும் செய்தார்கள். இவர்களிருவர்பால் யாம் மிகவும் நன்றியறிதலுடையேமா யிருக்கின்றனம். நம் குல சார்பான விஷயங்கள் பல பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் அடிக்கடி வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவை பிறஜாதியார் பார்வையையும் கவனத்தையுமடைகின்றனவே யல்லாமல், பெரும்பாலும் நம்மவர் பார்வைக் கெட்டுவதில்லை. ஆதலால், பிறர் நம்மைப்பற்றி என்ன எண்ணுகிறார்களென்றும் ஏதெழுதுகிறார்களென்று மறிந்துகொண்டு, அவர்களுடைய வார்த்தைகளில் ஆக்ஷேபகரமா யிருக்கக்கூடியவைகளை நிக்ரகிக்கவும் யுக்தமானவற்றைக் கைக்கொள்ளவும் சௌகரியமேற்படுவதில்லை. இந்த அசந்தர்ப்பத்தை நீக்குமாறு, நமது ஜாதி சம்பந்தமாய் அச்சேறி வருவனவும் பகிரங்கப் பனுவலிற் படுவனவுமாகிய வாக்கியங்களையெல்லாம் நமதுப் பத்திரிகையில் வெளிப்படுத்தி, அவற்றை நமது ஜாதியார் வாசிக்கச் செய்யவேண்டுமென்பது எமது கருத்து. இக்கருத்தை நிறைவேற்றுவிக்க சுஜாதி வித்யாவந்தர் யாவருடைய சகாயமும் அவஸ்யமாயிருக்கிறது. அவ்வித சகாயத்தை மேற்கூறிய குலாபிமானிகள் செய்ய முற்பட்டாற்போல் மற்றையரும் செய்துவர வேண்டுகிறோம். இங்ஙனஞ் செய்வோர் குலோபகாரிகளாதல் நிச்சயம்.

*
* *

தென்னாட்டு முக்கிய ஸ்தலங்களெல்லாவற்றிலுமிருந்து ஜாதி சம்பந்தமான விருத்தாந்தங்களடங்கிய நிருபங்க ளெழுதக்கூடிய குலாபிமானிகளைத் தேடவேண்டியவர்களாயிருக்கிறோம். இங்ஙனஞ்செய்ய ஏற்கனவே சில கனவான்கள் முன்வந்திருக்கிறார்கள். இவர்கள் பொதுவாய்ச் சுஜாதியாரெல்லோருடைய கவனத்திற்குரியனவாகிய விஷயங்களை யெழுதவேண்டும். தங்களூரில் சுஜாதியாருடைய நடவடிக்கைகளில் புகழ்ச்சிக்குரியனவும் இகழ்ச்சிக்குப் பாத்திரமானவுமாகியவற்றை நிராக்ஷேபமான வார்த்தைகளிலெழுதி நமக்கறிவிக்கவேண்டும். இந்நிருபர்களுடைய பெயர்கள் பகிரங்கப்படாது காக்கப்படும். இவ்வித அறிக்கைகள் வெளியாவதால் நெறிதவறி நடப்போர் திருந்தி நெறிப்படுவதும், ஓரிடத்துள்ளார் நன்முயற்சிகண்டு வேறிடத்துள்ளாரொழுகுதலும் சாத்தியப்படுமாதலால், நன்மை மிக விளைதல் திண்ணம். ஜாதிச்சார்பான விசேஷங்கள் யாவும் நமது பத்திரிகை மூலமாக தமிழ்நாட்டு விஸ்வகர்மர்கள் யாவருக்கும் காலதாமதமின்றி எட்டிக்கொண்டேயிருக்கும். பல விடங்களில் வசிப்பவர்களுக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும்; குலப்பற்று விசேஷப்படும். இத்தகைய நிருபங்களெழுத விழைவோர் தங்கள் பெயரையும் விலாசத்தையும் எமக்கறிவிப்பார்களாக.

## விஸ்வகர்ம சத்திரங்கள்.

**ஸ்ரீ கா. திருவேங்கட ஆச்சாரியார்.**

தொண்டமண்டலத்துள் என்னாட்டினும் நன்னாடாகிய பொன்னாட்டினும் மேம்பட்டதெனப் புலவர் புகழும் திருக்கழுக்குன்றம் திருவச்சிறுபாக்கம் திருவிடைச்சுரம் திருக்கச்சூராலக்கோயில் முதலிய சிவஸ்தலங்களுக்கிடையில் வேதசிரத்தில் விளங்கும் பிரணவம் மலையுருவெய்தியிருத்தலின் பிரணவ சைலம் எனவும், சூராதிசூரர்களை வென்ற காரணத்தால் சமராபுரி எனவும், ஸ்கந்தபுரி எனவும், சுப்பிரமண்யபுரமெனவும் திருப்பேர் வாய்ந்த திருப்போரூர் என்ற திவ்ய க்ஷேத்திர பிரம்மோற்சவத்திற்குச் சென்றிருந்தேன் எனது சிறிய மாமனாராகிய காலஞ் சென்ற ம-ள-ள-ஸ்ரீ ஆத்தூர் - வீரபத்திர ஆச்சாரியார் அவர்கள் சுமார் 50 வருடங்களாக மேற்படி க்ஷேத்திரத்தில் சிவசுப்பிரமண்ய பெருமானுக்கு வேடர்பறிஉற்சவதினத்துக்காலையில் சிவனடியார்களுக்கு அன்னதானமும் காலை 11 மணிக்கு அபிஷேகமும் நடத்திக்கொண்டு வந்திருந்தனர். அவர் விண்ணுலகம் சென்றபிறகு அவர் தமையனார் குமாரர்கள் ஷை கைங்கரியத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள். யானும் இரண்டு வருடங்களாக இக்கைங்கரியத்திற்கு உடன்சென்று வந்திருக்கிறேன்.

நம்மவர்களுக்கு இந்த க்ஷேத்திரத்தில் சத்திரவசதியுண்டாவென விசாரித்தேன். இரண்டு சத்திரங்கள் இருப்பதாகக் காண்பித்தார்கள். இவ்விரண்டும் நம்குல முன்னோர்களால் சர்வஜன சௌகரியங்களுக்கிணங்க வடக்கு மாடவீதியில் மூன்றாவதுநாள் உற்சவ மண்டபடி மண்டபமும் அடுத்து இருபக்கங்களிலும் கருங்கற்களால் நிர்மாணிக்கப்பட்ட சத்திரமும் இருக்கின்றன,

மற்றொரு சத்திரம் தெற்கு மாடவீதியில் திருக்குளத்திற்கு அருகாமையிலிருக்கிறது. இந்த சத்திரமானது மதுராந்தகம் வகையறாக்கள் சுப்பராய ஆச்சாரியார் பார்வையிலுள்ளதெனத் தெரிவித்தார்கள். அது சிலவருடங்களாகச் சீர்குலைந்து பார்ப்பதற்கு அசேதனமாக இருந்ததாம்.

அதனை தற்போது ஷை க்ஷேத்திரத்தில் ரத நிர்மாணம் செய்யும் சென்னை நகரவாசியாகிய ஸ்தபதி - இராகவாச்சாரியார் கண்ணுற்று தர்மார்த்தமாக சுமார் 200-ரூபாவரையில் செலவழித்து ஜீர்ணோத்தாரணம் செய்து கண்டோர் களிக்கும்படி நம்மவர்கள் தங்குவதற்கு வசதியை ஏற்படுத்தியிருக்கின்றனர். இப்புண்ணியவானுடைய நன்னோக்கம் குறிப்பிடத்தக்கது.

இன்னும் மற்றவர்களுடைய சத்திரங்களைப் பார்வையிடச் சென்றேன் வைசியதனிகர்களது சத்திரங்கள் பல நிறைந்திருக்கின்றன. முதலிமார்கள் சத்திரங்கள் பல உள. வணிகர் சத்திரங்களும் வன்னியர் சத்திரங்களும் கிராமணிகள் சத்திரங்களும் யாதவாள் சத்திரங்களும் வண்ணார் சத்திரங்களும் தாசிகள் சத்திரமும் பஞ்சமர்கள் சத்திரமும் இன்னும் பலவகுப்பினர்கள் சத்திரங்கள் இருப்பதாகக் காணப்படுகின்றது.

இவைகளெல்லாம் கூடுமானவரையில் நன்னிலைமையிலிருந்து வருகின்றன. நம்மவர்களுக்கு அதாவது ஐந்து வகுப்பினர்களுக்குச் சொந்தமானதும் 3-வது நாள் உற்சவமண்டபடி ஆகக்கூடியதுமான சத்திரமானது இருபக்கங்களிலும் கதவுகள்மூடி பூட்டப்பட்டிருப்பதைக் கண்டேன். இதனை விசாரிக்கப்புகுந்தேன். சில வருடங்களுக்குமுன் ரங்காச்சாரி என்னும் ஓர் விப்பிரர் சத்திரத்திற்கு வரும் யாத்திரைவாசிகளுக்கும் தரிசனார்த்தமாக வரும் பக்த சிரோமணிகளுக்குங் காசுவாங்கிக்கொண்டு அன்னமளித்து வந்தனரென்றும் அவர் காலமானபிறகு அவர் குமாரர் அதனையே பூட்டிக்கொண்டு தங்கள் அனுபோகத்திலிருப்பதால் தன் சுவாதீனமென்று சொல்லிக்கொண்டு வருகிறாராம்.

இதனைக் கேட்டமாத்திரத்தில் ஆராமையும் ஆச்சரியமும் என்னை அறியாமலே வந்து பிரமித்தேன். திப்பிரமை கொண்டேன். என்னே என்னே! நம்மவர்கள் பல்லாயிரம் தலைகட்டுகளாக இருந்தும் இத்தகைய தர்ம கைங்கரிய விஷயத்தில் சீர்திருத்தஞ் செய்ய முன்வரவில்லையே! கிருத்திகைதோறும் சென்னையிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் நம்மவர்கள் தரிசனார்த்தமாகச்செல்லுகின்றார்களே, இதனை ஒருவரேனும் கவனிக்க முன்வந்தாரில்லையே. வீணே அல்பவிஷயங்களுக்கெல்லாம் ஆயிரக்கணக்காகப் பொருளைச செலவழித்து வருகின்றார்களே. இத்தகைய அரிய புண்ணிய விஷயங்களில் பாடுபட்டு என்றும் புகழுடம்பைதேடினாரில்லையே. வீணே பெருமை பேசிக்கொண்டு எல்லாம் எங்களால் ஆகின்றதென்று வாசாஞானம் படிக்கின்றார்களே, இது என்ன விந்தையோ அறிகிலேம் இம்மட்டோ? திருக்கழுக்குன்ற க்ஷேத்திரத்தில் நம்மவர்களுக்கு வடக்கு மாடவீதியில் ஓர் சத்திரமிருக்கிறது அது புண்ணியவதியாகிய பூசையம்மாள் சத்திரமெனவும் பொதுவாகக் கம்மாளர் சத்திரமென்றும் சிலாசாசனம் அடிக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பூசையம்மாள் ஜீவதிசையோடுஇருந்தவரை பூப்பந்தலும் மண்டபடியும் நடந்தேறிவந்தனவாம். அதனை இப்போது பார்க்க எனக்குண்டாகிய துக்கம் சொல்லமுடியாது.

சத்திரமுழுவதும் கில்மாயும் புல்முளைத்தும் மண்மேடிட்டுமிருக்கிறது. பார்ப்பதற்கும் உள்பிரவேசிப்பதற்கும் சங்கோசமாகவேயிருக்கின்றது. இன்னும் சிலகாலம் சென்றால் இருந்த இடம் தெரியாமல் மண்மேடிட்டு யார்சுவாதீனமாய்விடுமோ அறிகிலேன். என்ன ஆச்சரியம்! உற்சவகாலங்களிலும் மற்றைய காலங்களிலும் பிரார்த்தனை செலுத்துவோரும் முடிகழித்துக் கர்ணபூஷணஞ்செய்வோரும் அனேகம்பேர் வருகின்றார்கள். நம்மவரில் பெரும்பாலார் அன்னிய சத்திரங்களிலே தங்குகிறார்கள்.

இந்த சத்திரத்தைப் பார்ப்பவர்களும் கேட்பவர்களும் கிடையாதென்றே சொல்லலாம். எந்த க்ஷேத்திரத்திற்குச் சென்றாலும் நம்மவர்களுக்குச்சத்திரம்கிடைப்பது துர்லபமாகவே இருக்கிறது. இதுபற்றியே எமது நண்பர் வீரகண்டாமணியில்- "கம்மாளர் என்றாக்கால் காசிந்தும் சத்திரத்தில் எம்மாத்திரமும் இடங்கிடைத்தல் துர்லபமே" - என்று கூறியுள்ளார். இந்த வேதவாக்கியமானது அனுபோகரீதியாக பார்த்திருக்கின்றேன். என் செவியில் இந்தக் கண்டாமணி வோசை கேட்டுக்கொண்டே இருக்கிறது. செவியைப்

பொத்திக்கொண்டு இருப்போமென்றுல் மனமானது சதா நினைப்பூட்டுகின்றது.

இதனை நிறுத்தமுபாயம் தேடவேண்யது. திருப்போரூர் க்ஷேத்திரத்திலேயே புராதீனமாக வசிக்கும் விஸ்வகர்ம-சந்ததியார்களைக் கண்டு விசாரித்தபோது மனு - வீரபத்திர ஆச்சாரி மயஆண்டியப்பாச்சாரி, விஸ்வக்ஞ பொன்னம்பல ஆச்சாரி, சண்முக ஆச்சாரி, வெங்கிட சுப்பாச்சாரி இவர்கள் நாங்கள் என் செய்வோம் நீங்கள் முயற்சி எடுத்துக்கொண்டு வருவீர்களேயானுல் யாங்கள் உங்களுக்கு ஆகவேண்டிய காரியங்களையெல்லாம் முன்னின்று செய்விக்கின்றோ மென்று கூறுகின்றூர்கள்.

ஆகையால், நம்குல மேதாவிகளாகிய பஞ்சானனேற்பவர்கள் யாவரும் தங்கள் தோளின்மேலிட்ட பாரமாகக்கருதி கூடியசீக்கிரமே இந்தத் திருப்பணியைச் செய்து முடிக்கத் தங்களால் இயன்றவரையில் பொருளுதவிசெய்து புண்ணியமும் புகழும் அடைவார்களென்று முழுமுதற் கடவுளாகிய தீப்பொறியில் அவதரித்தசேந்தனை திரிகரணசுத்தியாய் மனமொழி மெய்களால் பிராத்திப்போமாக.

---

## சிவோஹம்பாவனை.

யாழ்ப்பாணம் சைவசித்தாந்த மஹாசமாஜத்தின் 14ம் வருடாந்தக்கூட்டத்தில் (1918-ஞு மேமீ 4௳) ஹைகோர்ட் வக்கீல் சுப்பிரீம் கோர்ட் பிறக்தர் ஸ்ரீ ந சிவக்கொழுந்து ஆச்சாரியார் அவர்கள் செய்த உபந்நியாசம்.

### முன்னுரை.

அன்பர்காள்! இப்பூமியின் கண்ணே இந்த யுகத்திலே இப்போது ஐரோப்பாவில் நடக்கும் பெரிய யுத்தம்போல் வேறொரு யுத்தம் நடக்கவில்லை. இப்போது யாவர்வாக்கிலும் இந்த யுத்தத்தைப்பற்றிய விசாரமும் பேச்சுமாகவேயிருக்கிறது. ஆயினும் ஆன்மகோடிகளெல்லாம் தத்தம் புலன் முதலிய தத்துவக்கூட்டங்களுடன் நித்தமுஞ் செய்யும் பிரபஞ்சப்போரைப் பற்றி உலகத்தார் அவ்வளவு விமரிசையாய்ப் பேசுவதில்லை. இதற்கு நியாயம் ஒருகட்சி மற்றக்கட்சிக்குள்ளடங்கித் தமது போரை மும்முரமாய் நடத்தாது வாளாவிருத்தலாம். ஐம்புலன்கள் அகங்காரம்முதலியனவே வெற்றியோடு விளங்கி நெடிது நிற்பதாலாம். இந்தப் பிரபஞ்சப்போரிற் பிரயோகிக்கவேண்டிய பிரதானமான ஆயுதம் ஞானம் என்னும் வாள்; முரசப்பறை பிரணவம்; சிரசைக் காக்கும் தொப்பி இளம்பிறை; கவசம் அல்லது சட்டை விபூதி; சத்துராதிகள் மாயப்படை.

"ஞானவா ளேந்துமையர் நாதப்பறை யறைமின், மானமா வேறுமையர் மதிவெண் குடைகவிமின், ஆனநீற் றுக்கவச மடையப் புகுமின்கள், வானநா டான்வோதா மாயப்படை வாராமே"—திருவாசகம்.

இப்போரிலுள்ள சேனை காருடவியூகமாக வகுக்கப்பட்டுள்ளது. தொண்டர்கள் அக்கருடனது அலகு ஆகிய தூசிப்படை அல்லது முன்னணியாயும், பக்தாகள் இரு செட்டைகளாகிய சூழணியாயும், யோகிகள் மார்பு உதரமாகிய பேரணியாயும். சித்தர் அப்பட்சியின் வாலாகிய கடைக்கூழைப்படையாயுமுளர். இதனுல் தொண்டர்கள் மகாவீரரும், சித்தர்கள் வீரமில்லாதவரும் என்பது பெறப்படும்

"தொண்டர்காள் தூசிசெல்லீர் பக்தர்காள் சூழப் போகீர், ஒண்டிறல் யோகிகளே பேரணியுந்தீர்கள், திண்டிறல் திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள், அண்டர்நாடான்வோர்யாம் அல்லற்படை வாராமே"—திருவாசகம்.

இப்போரின் நோக்கம் புலன் அகங்காரம் காமக் குரோத லோப மத மாச்சரியம் முதலிய சத்துராதிகளா லுண்டாகும் பிறவிப்பிணி



யென்னுஞ் சிறைத்தனத்தை நீக்கிச் சுயாதீனமென்னும் முத்தியைப் பெறுதலாம்.

இப்போர்த்தொழில் வித்தைக்குரிய நூல் யாதோவெனில் இறைவனுலருளப்பட்ட வேதாகமங்களாம். இவற்றை முழுச்சேனையுங் கற்க முடியாதாகையால் சேனுதிபதிகளாய சயாச்சாரியர் முதலியோர் கற்றிருந்து செய்யுங் கட்டளைகளாகிய போதனைகளுக்கு அமைந்து மற்றையோர் நடந்தால் வெற்றியடைவது திண்ணமாம்.

போர்வித்தை கற்று யுத்தப்பயிற்சி யில்லாதவன் சேனுதிபதியாயிருந்து ஒருபோரைச் சரிவர நடத்திமுடிக்க இயலாது. படிப்படியே யுத்தப்பயிற்சி செய்துவரவேண்டியவனுயிருக்கிறுன். அதுபோலவே மேற்படி நூல்கள் போதிப்பது சரியை கிரியை யோகப் பயிற்சி செய்து ஞானசாதனஞ் செய்யவேண்டும். இவற்றை முற்பிறப்பிலேனும் இப்பிறப்பிலேனும் பயின்றவர்க்கே ஞானசாதனஞ் சித்தித்து முத்தியுண்டாகும். பிறவிப்பிணி யுண்டென்பது அளவையா னறியற்பாலது.

### அளவை.

யாம் ஒன்றை அறிவது காட்சிமூலமாய் அல்லது அனுமானம் மூலமாய் அல்லது ஆப்தர்வாக்கிய மூலமாயாம். புகையைக் கண்டு நெருப்பு இங்கு உண்டென்று அறிவது காட்சிப் பிரமாணத்தாலாம். புகையைமாத்திரங் கண்டு அக்கினி தோற்றுவிடினும் ஆங்கு அக்கினி உண்டென்ற அறிவது அனுமானப் பிரமாணத்தாலாம். அக்கினியில் நெய் முதலியன சொரிந்து மந்திர சகிதமாய் ஆகுதி செய்தால் பிதிரர்க்குப் பிரீதியுண்டாம் என்றறிதல் ஆப்தர் வாக்கியத்தாலாம்.

### பிறப்பு அனேகம்.

நாம் அனேகம் பிறப்புப் பிறந்து வந்திருக்கின்றோம். இது பெரும்பான்மையும் ஆப்தர் வாக்கியங்களாலும் சிறுபான்மை அனுமானத்தாலும் அறியக்கிடப்பது. ஒரே வகுப்பான ஜீவர்களில் வெளிப்படையான காரணமின்றி உயர்வு தாழ்வு சுகதுக்காதிகள் தோன்றுவதாலும் கன்மானுபவம் அழியாது என்னுந் தத்துவத்தாலும், புனர்ஜன்ம உண்மை அனுமானத்தா லறியப்படும். ஆப்தர் வாக்கியம் அனேகம் உண்டு. அவற்றிற் சில வருமாறு:—

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற வித்தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"—திருவாசகம்.

"துறக்கப்படாத வுடலைத் துறந்து வெந்தூதுவரோ, டிறப்பன் இறந்தா லிருவிசும் பேறுவன் எறிவந்து, பிறப்பன் பிறந்தாற் பிறையணிவார்சடைப் பிஞ்ஞகன்பேர், மறப்பன் கொலோ"—அப்பர்சுவாமி.

இது பஞ்சாக்கினி வித்தையையுங் குறிக்குமாறு காண்க.

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே, வழுவா திருக்க வரந்தர வேண்டும்"—அப்பர்சுவாமி.

"அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
அப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
பெண்டி ரெத்தனை யெத்தனை பெண்டிரோ"
—திருவெண்காடர்.

'பெற்றலுத்தாள் தாயார் பிறந்தலுத்தேன் யானும்'—திருவெண்காடர்.

'உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு'

அவா வென்ப தெல்லார்க்கு மெஞ்ஞான்றுந் தவாஅப் பிறப்பீனும் வித்து'—திருக்குறள்.

'வெஹூனி மேவ்யதீதானி ஜன்மானி தவசார் ஜுன,' தானயஹம் வேதஸர்வாணீ நதுவம் வேத்த பரந்தப:'

யானும் நீயும் அநேகம் பிறப்புப் பிறந்தோம் நீயறிவாய் யான் அறிவேன் —பகவத்கீதை.

முடியாப் பிறவிக் கடலுட் புகார்'—அருணகிரிநாதர்.

'எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவியே யாதினு மரிதரிது காண், இப்பிறவி தாபினுல் எப்பிறவி வாய்க்குமோ ஏதுவருமேப் அறிகிலேன்'—தாயுமானவர்.

'மலத் துளதாம்'—சிவஞானபோதம்.

'நாத்வம் தேவத்வம் நகவன மிருகத்வம் மசத்தா பசுத்வம் டேத்வம்பவது விஹகத்வாதி ஜனனம்'—சங்கராச்சாரியர்.

முற்பிறப்பிருந்தாற் றெரியுமே என்பார்க்கு இப்பிறப்பிற் கருப்பாசயத்திலும் ஓராண்டுப் பிராயத்திலும் நடந்தவை தெரியுமோ எனக்கேட்டு அவர் சந்தேகந் தெளிவிக்கலாம்.

### அவ்வாறு பிறக்கும் உயிரின் சொருப லக்கணம்.

உயிர் சார்ந்ததன் வண்ணமானது

'பளிங்கு போன்றதன் றன்மை யத்தன்மையா யுடல்பல வெடுத்துழன்றாய்'—திருவாதவூரடிகள் புராணம்.

உயிரானது சிவத்தையுமறியக்கூடும் பிரபஞ்சத்தையு மறியக்கூடும்.

'சத்தேயறியா தசத்திலதறியா திருதிறனறியுள திரண்டலா'வான்மா—சிவஞானபோதம்.

ஆகையால் உள்ளத்திற் பிரபஞ்சத்தை வைத்தாற் பிரபஞ்சமாகவும், சிவத்தை வைத்தாற் சிவமயமாகவும் வருகிறது அவ்வுயிர். ஐரோப்பியரும் இவ்வுண்மையைக் கைக்கொள்ளுகிறார்கள். எவன் என்னென்ன நினைத்து வருகிறானே அவன் அது அது வாகிறானும். உன் நண்பன் யாரெனஉரை நீயெப்படிப்பட்டவனென யானுரைப்பன் என்பதும் இதுவே. பிரபஞ்சத்தொகுதி பிறப்பிறப்புக்குட்பட்டது. சிவம் பிறப்பிறப்புக்குட்படாதது. ஆகையால் சிவமான சீவனுக்குப் பிறப்புவராது. சிவமாவது எப்படியெனில்

### சிவோஹம்பாவனை.

யினுலாம்' இப்பிறவித்துன்பத்தை நீக்குவதற்குச்சிவத்தை உள்ளத்தே வைக்கச் சிவத்துக்கு உருவம் வேண்டப்படும். ஆன்மாவின் நன்மைக்காக நம்மை இப்படித் தியானஞ் செய்ய. இதுவே நமது உருவம் என்று அந்தச் சிவமே வெளிப்படுத்தி யிருக்கிறார். உருவமிலானுக்குள்ளதாமுருவம் புனற்கண் பனிக்கட்டியற்று என உணரற்பாலது. சரியையில் சகளமாய் காயத்தால்மாத்திரமும் கிரியையில் சகளநிஷ்களமாய்க் காயத்தாலும் மனத்தாலும் யோகத்தில் நிஷ்களமாய், மனத்தான்மாத்திரமும் இவையெல்லாம் கடவுள் வழிபாட்டுக்காக சோபானமுறைக்காகக்கொண்ட திருமேனியென உணர்ந்து ஞானத்தில் அறிவுத்தொழின் மாத்திரையால் வழிபடுவதுவே இங்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

'உருவத்து நின்ற மனமுறவ தருவத்துச்
சிற்றிலக்கிற் பிண்பயில்வ தற்று'

என்பதனு லுணர்க.

இனி நாம் எடுத்துக்கொண்ட விஷயம் சிறப்பிலக்கணத்தால் சிவஞானபோதம் 9 ம் சூத்திரத்திருந்து பெறப்படுவது.

"சித்ருசாத்மனி திருஷ்ட்வேசம் த்யக்த்வா வர்த்தி மரீசிகாம், லப்த்வா சிவ பதச்சாயாம் த்யாயேத் பஞ்சாக்ஷரீம் சுதீ" எனவருஞ் சூத்திரம்.

இதற்கு ஸ்ரீ மெய்கண்ட சிவாசாரியர் செய்த மொழிபெயர்ப்பு வருமாறு:—

ஊனக்கண் பாசமுணராப் பதியை ஞானக் கண்ணினிற் சிந்தைநாடி யுராத்துனைத் தேர்த்தெனப்பாச மொருவத் தண்ணிழ லாம்பதி விதியெண்ணு மஞ்செழுத்தே"

"சித்ருசா ஆத்மனி திருஷ்ட்வேசம்" ஈசனை ஞானக்கண்ணினுற் றன்னிற்கண்டு என்னும் இந்தப் பாகமே சிவோஹம்பாவனையை யுணர்த்துவது. சிவ அஹம் பாவனு என்னைச் சிவமாய்ப் பாவித்தல் என்பதாம் இப்படிப் பாவிப்பதன் பயன் யாதோவெனில், மேற்சொன்ன சத்துராதிகள் வலிமைகுன்றிப் பின்காட்டுவார்கள். உயிருக்கு வெற்றியாகும். இது அனுபவத்தாலும் அறியற்பாலது. அதற்குத் திருஷ்டாந்தம் கருடோஹம்பாவனை என்பது ஒன்று. கருட அஹம்பாவனு என்னை யான் கருடனுக மந்திர தியானத்தாற் பாவிப்பது. ஒருவன் கருடமந்திரத்தோடு தன்னைக் கருடனுகப் பாவித்துவந்த பயிர்ச்சி முதிர்ச்சியால் விஷத்துக்குப் பார்த்தால் விஷம உடனே நீங்குவது பிரத்தியட்சப் பிரமாணத்தாலறியப்படுவது. இது போலவே சிவோஹம்பாவனையால் சீவனைப்பந்தித்திருக்கும் மலத்தை நீக்கிச் சிவத்தை அடைவதாகும். இச்சாதனத்தைப்பற்றி ஆன்றோர் கூறியிருப்பது பல சண்டு சில வருமாறுகாண்க.

"காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக, வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக, நேயமே நெய்யும்பாலாய் நிறையநீ ரமையவாட்டிப், பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினேனே".—அப்பர் சுவாமிகள்.

"உடம்பெனு மனையகத்து ளுள்ளமே தகழியாக, மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி, யிடம்படு ஞானத்தீயா லெரியெழ விருந்துநோக்கிற், கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே"

'தந்ததுன் றன்றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா யார்கொலோ சதுரர், அந்தமொன்றில்லா ஆநந்தம்பெறறேன் யாதுநீ பெற்றதொன் றென்பால்'—திருவாசகம்.

(தொடரும்.)





## விவாகச்சடங்கு.

நாம் நமது வாழ் நாட்களில் செய்யும் சடங்குகளில் விவாகச்சடங்கு ஒன்றாகும். இவ்விவாகச் சடங்கைப் பல தேசத்தாரும், பல மதத்தாரும் பற்பல விதமாகச் செய்கின்றார்கள். ஆனுல் நமது தேசத்து இந்துக்களைப்போல விவாகச்சடங்கு நிமித்தமாக அனுவசியமான விஷயங்களில் பணத்தைச் செலவழித்துப் பின்னர் துக்கித்து அவஸ்தைப்படுகிறவர்கள் எவருமில்லை. விவாக காலத்தில் நாம் இப்போது செய்யும் காரியங்கள் யாவும சில நூற்றாண்டுகட்கு முன்னர் தம் ஜீவனார்த்தத்தின் பொருட்டாக ஒரு சிறு கூட்டத்தினர் தம் ஜீவனத்தின் பொருட்டாக ஜாதிபேதமென்னும் கோலினுல் ஒன்றாயிருந்த நம்மைப் பல்வகுப்பினராகப் பிரித்து தமக்குத்தாமே தம்மை மேற்குலமாக ஏற்படுத்திக்கொண்டு, இந்த விவாகச்சடங்கை நமக்கு நூதனமாக உற்பத்திசெய்து, தாங்களே இச்சடங்கைச் செய்ய உரியவர்களென்றும் ஏற்படுத்திக்கொண்டனர் விவாகத்தின்போதுநம்மைப்போன்ற அநித்தியமான மானிடராகியஇச்சிறு வகுப்பினரை நம்மவரில் பலர் மானிடதெய்வங்களாகப் பாவித்து அவர்கட்கு உண்பதற்கு மூட்டைக்கணக்கான அரிசியும், மற்ற உணவு பொருள்களும், உடுப்பதற்கு 12 முழத்தில் காஞ்சிபுர பட்டுக்கரை வேஷ்டிகளும், போதாதற்குக் கையிலே தக்ஷணை முதலானதும் கொடுப்பதினுல் திரளான பணத்தைச் செலவழித்துக் கடைசியில் ஓட்டாண்டியாகி நின்றுவிடுகிறார்கள். செலவுசெய்யச் சக்தியில்லாதவர்களும் மேற்கூறியவாறு ஏற்படுத்தப்பட்ட சடங்குகளை கட்டாயம் செய்தே தீரவேண்டுமென்கிற மூட எண்ணத்தாலும் கொள்கையினுலும் அக்கம்பக்கத்தில் கடன் வாங்கியோ அல்லது அவர்களுக்குஜீவனத்திற்கே ஆதாரமாயிருக்கும்மாட்டையும் வீட்டையும் விற்றோ கண்மூடிக் குருடர்களாய்ச் செலவுசெய்துவிட்டுப் பின்பு நடுத்தெருவில் நின்று நாராயணுவென்று தவிக்கிறார்கள். நமக்கு ஏன் இந்தக்கஷ்டம்? இச்சடங்குகளெல்லாம் இல்லாமல் நாம் விவாகம் செய்யமுடியாதா? அப்படிச்செய்தால் நாம் நன்றாக வாழமா


ட்டோமா? மற்ற மதஸ்தர்களும் மற்ற தேசத்தார்களும் நம்மைப்போன்ற சாதாரண மானிடர் உற்பத்தி பண்ணிய சடங்கில்லாமல் விவாகம் செய்யவில்லையா? அவர்கள் நம்மைக்காட்டிலும் அனேக மடங்கு மேன்மையாக வாழவில்லையா? முற்காலத்தில் நமது முன்னோர்கள் விவாக சம்பந்தமாக இப்போது பெரும்பாலர் செலவழிப்பதுபோல் செலவழித்ததில்லை. அறபது வாரகனில் அலங்காரப் பந்தல் போட்டதில்லை. முனிசிபாலிடியாருக்கும் பந்தல் கால்கள் ரோட்டில் நடுவதற்காக வரி கட்டினதில்லை. விவாக காலங்களில் பாட்டுக்கச்சேரியையும், ஆட்டக் கச்சேரியையும் கேவலமானதாக எண்ணினார்கள். ஆனால், தற்காலத்தில் விவாகம் செய்பவர்களோ அப்படிப்பட்ட கச்சேரிகளை உத்தமமானதாக மதித்து அநுசரித்து வருகிறார்கள். இது சுத்த கேவலம். ஒரு விஷயத்தை மற்ற மதஸ்தர்களும், மற்ற தேசத்தார்களும் எம்மாதிரியாகச் செய்கிறார்களென்று ஆராய்ச்சிசெய்து அவைகளில் எது உத்தமமானதாயும் சிக்கனமானதாயும் இருக்கின்றதோ அப்பழக்க வழக்கத்தை நாம் கைப்பற்றல்வேண்டும். விவாககாலத்தில் ஐரோப்பியர்கள் தங்கள் கோவிலுக்குப்போய் புந்தமித்திரர் முன்பாக மணப்பிள்ளை மணமகளின் கைவிரலில் விவாக மோதிரத்தைத் தரித்துவிட்டதும் வந்த விருந்தாளிகளுக்கு ஒருவேளை போஜன விருந்துடனே விவாகத்தை முடித்துவிடுகின்றனர். இதேமாதிரியாகவே நாமும் பிறர் சேர்க்கையின்றி நமக்கு ஆலயமாகிய பகவான் சந்நிதானத்திலே பெண்ணுக்குப் பிள்ளை மாங்கிலியதாரணம் செய்யலாம்.

நமது முன்னோர்களில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவொற்றியூரின்கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தியாகராயபெருமான் சந்நிதானத்திலே வியாகத்திற்கு வந்திருந்த பந்துமித்திரர் அறியபரவைநாச்சியாருக்கு மாங்கலியதாரணம் செய்யவில்லையா? நமது முன்னோர்கள் இம்மாதிரியாகச் செய்திருக்கும்போது நாம் ஏன் இப்போதும் அப்படியே செய்யக்கூடாது?

அப்படி கோவிலுக்குப்போக இஷ்டமில்லாவிடில் வீட்டிலேயே அநாவசியமாகப் பணத்தை இறைத்து அலங்காரப் பந்தல் ஒன்றும் போடாமல் மேற்கூறிய வாறு மணமகன் மணமகளுக்கு மாங்கலிய தாரணம் செய்ததும், வந்த விருந்தாளிகளுக்கு ஜாதிபேதம் பாராமல் ஒருவேளை போஜன விருந்துடனே விவாகத்தை முடித்துவிடலாம்.

இவ்விதமாகக் கல்வியிற் சிறந்த கல்விமான்களும், செல்வத்திற் சிறந்த செல்வவந்தர்களும், புத்தியிற் சிறந்த புத்திமான்களும் செய்துகாட்டி மற்றவர்களைப் பின்தொடரச் செய்வது அவர்களுடைய கடமையாயிருக்கின்றது அப்போதுதான் நாம் மெய்வருந்தக் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பொருள் சுயநலத்தை நாடும் ஒரு ஜாதியார் நன்மைக்கின்றி நமது நன்மைக்கு உபயோகப்படும்.—திராவிடன்.





## ஸ்ரீமத் யோகி மாணிக்கசுவாமிகள் குருபூஜை.

உடல்பொருளா வியிறுதவி யுத்தமர்க்கே
செயிணிகனி னுறபே றண்டோ
கடவுளருட் பெறற்குமிது வழியன்றே
புண்ணியர்காள் கருத்தி லோர்ந்து
இடத்துறவு பூண்டுமிது யாணிக்க
யோகியெனத் திகழ்ந்தோ னுற்ற
இடத்தினைச்ச மாதிமுற்றி குருபூசைப்
புரிதரும மியற்று வீரால்.

தஞ்சை ஜில்லா வலங்கைமான் அமராவதி யென்னும் பதியில் கிரகஸ்தாஸ்ரம வைதீக ஒழுக்கத்தினராயும் கல்வி கேள்விகளில் வல்லுநராயும் பக்திமானாயும் சாமிநாதாச்சாரியென ஒருவர் இருந்தனர். இவர் ஒருதினம் ஒன்றை உத்தேசித்து போகும்வழியில் நல்வினைக்கோக எழுதிய சீட்டு ஒன்று கிடைக்க அதை வாசித்துப்பார்த்ததினால் அது காரணமாக ஞானவிளக்கந்தோன்றி இம்மையின்பின் மனவிரக்தராய் வெளிவந்து மதுரை இராமேஸ்வரம் முதலான பல ஸ்தல தரிசனஞ் செய்து அதன்பிறகு இச்சென்னை நகரில் வாசமாய் அமர்ந்தனர். இங்குநின்றும் குயப்பேட்டை சச்சிதானந்த சுவாமிகள் முதலான சில பெரியாரிடத்து ஞானார்த்த நூல்களைக் கற்றுஞ் சிரவணஞ்செய்தும், எச்சுவையுமின்றி ஒருவேளை போஜனமுண்டும் சமஸ்கிருதம் தமிழ் தெலுங்காகிய பாஷைகளில் முன்னிலும் மிக பாண்டித்தியமுடையவராயும் சித்தர் சாஸ்திரங்களை மிக ஆய்ந்து வைத்திய முதலான எல்லா விஷயங்களையும் உணர்ந்தும் மனத்துய்மை இந்திரிய நிக்கிரமுடையவராயும் யோக

நிஷ்டாபரராயும் காவியுடையோடு ஒழுக்கங்குன்றாத திருமேனியில் என்றும் நீறுவிளங்க மாணிக்கச்சுவாமியென்ச் சிறப்புநாமம் பெற்று வாழ்ந்துவந்தனர். இவர் கல்வி மேம்பாட்டை உணர்ந்த பல விஸ்வகர்ம வம்ஸத்தர் இவரையடைந்து சமஸ்கிருத பாஷையிலுள்ள நம் குலஸாஸ்திரங்களை தமிழில் அர்த்தம் விளக்கி அச்சிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள தமது சந்நியாச ஆஸ்ரமத்தையுங் கருதாது அவர் வேண்டுகோளுக்ிரங்கி பஞ்சப்பிரம்மான்வய தீபிகை நாகரகாண்டம் கோத்திரகாண்டம் முதலான நூல்களுக்கு தமிழுரை யெழுதி வெட்டப்பிரதியாக வைத்துள்ளார். வம்ஸத்தைப்பற்றி இவரியற்றிய நூல்கள் இன்னுமபலவுண்டு. இதுவன்றி காபாத்திரசுவாமிகள் சம்பிரதாய சிந்தனை விஞவிடை யென்கிற புத்தகமும் அச்சிட்டு வெளியிட்டனர். இத்தகைச் சிறப்புவாய்ந்த பெரியார் பிங்களஞு ஆனி மீ 28உ புதவாரங் காலை 10-மணிக்கு ரேவதி நக்ஷத்திரத்தில் விதேகமுத்தி அடைந்தனர். புரசை ஒட்டேரி மயானத்துக்கெதிரில் வெங்கட்டம்மாள் சமாதி தோட்டத்தில் அடைக்கலம் செய்யப்பட்டது. 1918-ஞு ஜூலைமாதம் 2உ மங்களவாரதினம் காலை கும்பாபிஷேக அலங்கார ஆராதனையும், மஹேஸ்வரபூஜையும், உபந்நியாசங்களும் நடைபெறும்.

மாணிக்கசுவாமிகளின் தொண்டர்கள்.

ஓம்

ஸ்ரீ அம்பாள் துணை.

ஸ்ரீ காளிகாம்பாள் தேவஸ்தான

## திருப்பணி தர்மகைங்கரியப் பத்திரிகை.

மநு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞரென்று சொல்லப்பட்ட பாஞ்சானன விஸ்வகர்ம சந்ததியார்களுக்கும் ஏனைய சகோதரர்களுக்கும் மிகுந்த வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளும் விஞ்ஞாபனம் என்னவென்றால்:—

திருவள்ளூர் தாலூகா சத்தியவேடு கிராமத்தில் நம் குலதேவதையாகிய ஸ்ரீ காளிகாம்பாள்தேவஸ்தானமொன்று இல்லாதகுறைதோன்றி அதற்காக தற்சமயம் ஷை கிராமத்தில் ஷை கிராமவாசிகளாகிய நம் விஸ்வகர்ம சந்ததியார்களுடைய பொருளுதவியைக்கொண்டும் என்னால் கூடுமானவரை பொருள் செலவிட்டும் ஷை தேவஸ்தானமொன்று சிறியதாகக் கட்டி முடித்துவிட்டேன்.

அதற்கு இன்னும் துவஜஸ்தம்பமும், பிரதமமூர்த்தியாகிய ஸ்ரீ காமாக்ஷியம்மன் சிலாவிக்கிரமும், உற்சவவிக்கிரஹமும், அதைச்சார்ந்த திருப்பணி சாமான்களும் வேண்டியதிருப்பதால் புண்ணியவான்களும் புண்ணியவதிகளும் பொருளுதவிபுரிந்து ஷை திருப்பணி கைங்கரியத்தைப் பூர்த்திசெய்துவைத்து புகழையும் புண்ணியத்தையும் பெறும்படி தங்கள் மேலானகுணத்தை மிகவும் பிரார்த்திக்கின்றனன்,

இதற்கு பொருள்சகாயம் செய்யக்கூடிய புண்ணியவான்கள் எனக்கு நேரே கீழ்க்கண்ட விலாசத்திற்கு மணியார்டர் செய்துவிடலாம். திருப்பணிக்கு வேண்டிய சாமான்கள் அனுப்புவதாயிருந்தாலும் அனுப்பலாம். அவர்கள் பெயரால் அவை சமர்ப்பிக்கப்படும்.

இப்படிக்கு,
தங்கள் அன்புள்ள,
ச. ஏடாச்சாரி,
சத்தியவேடு போஸ்டு, திருவள்ளூர் தாலுக்கா.

## சந்தாநேயர்களுக்கு!

9-AUG19

உங்கள் சந்தா ஆதரவினாலேதான் இப்பத்திரிகை நடைபெறவேண்டியதா யிருக்கிறது.

ஆதலால், உங்கள் சந்தாவை முன்பணமாக அனுப்பிவிடுங்கள்; அல்லது, பத்திரிகையை வி. பி. யில் அனுப்பும்படி தெரிவியுங்கள்.

சந்தா செலுத்தியபின், உங்கள் பெயரும் நீங்கள் செலுத்திய தொகையும்,

சந்தா வரவு ஜாபிதாவில் அச்சிடப்பட்டதா என்று பார்த்துக்கொள்ளுங்கள். அச்சில்வராதபக்ஷத்தில் உடனே பிராது செய்யுங்கள்.

இப்பத்திரிகையைப்பற்றி தங்கள் பந்துமித்திரர்களுக்குப் பிரஸ்தாபஞ் செய்யுங்கள். புதுச் சந்தாதாரர்களைத் தினமும் சேர்த்துக்கொடுங்கள். உங்கள் குலோபகாரம் என்றும் கொண்டாடப்படும்.

சோ. கந்தசாமி ஆச்சாரி,
301, தங்கசாலை வீதி,
சென்னை.

விஸ்வகுலோத்தாரண பிரஸ், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

## சந்தா வரவு

| | | | | |
|---|---|---|---|---|
| 1918ஞ மார்ச்சுமீ | 18—எம். பத்திரையாச்சாரி, ரெங்கூன் | 1 | 8 | 0 |
| ஏப்ரல்மீ | 8—வி. பு. த. க. சப்பபதி ஆச்சாரி, மேல்விசாரம் | 0 | 8 | 0 |
| மேமீ | 10—டி. ரங்கசாமி ஆச்சாரி, கோயமுத்தூர் | 3 | 0 | 0 |
| ,, | 11—எஸ். அப்பாதுரை ஆச்சாரி, பெங்களூர் | 1 | 8 | 0 |
| ,, | 15—பச்சையப்பாச்சாரி, சேப்பாக்கம் | 0 | 4 | 0 |
| ,, | 18—கெ. வி. தாம்போ, கொளம்பு | 3 | 0 | 0 |
| ,, | 18—கெ. எஸ். சங்கரசுப்பு ஆச்சாரி, தூத்துக்குடி | 3 | 0 | 0 |
| ,, | 18—என். கந்தசாமி ஆச்சாரி, திருக்கன்னபுரம் | 1 | 8 | 0 |
| ,, | 22—சுந்தரேசபத்தர், நீடாமங்கலம் | 1 | 8 | 0 |
| ,, | 22—இராஜாச்சாரி, புதூர் | 1 | 8 | 0 |
| ,, | 23—எஸ். தேகராயபத்தர், கும்பகோணம் | 1 | 8 | 0 |
| ,, | 24—எ. கந்தசாமி ஆச்சாரி, வண்ணாரப்பேட்டை | 0 | 4 | 0 |
| ஜூன்மீ | 1—கோபாலாச்சாரியார், சென்னை | 1 | 0 | 0 |
| ,, | 5—பெ. பார்த்தசாரதி ஆச்சாரி, மைலாப்பூர் | 0 | 4 | 0 |
| ,, | 7—வாசுதேவாச்சாரி, எழும்பூர் | 0 | 8 | 0 |
| ,, | 11—வி. சின்னகுட்டியாச்சாரி, எட்டிகாபாளையம் | 1 | 8 | 0 |
| ,, | 11—வி. சுப்ரமணியாச்சாரி, சிலோன் | 1 | 8 | 0 |
| ,, | 11—ஆர். டி. தவசியாச்சாரி, சிலோன் | 3 | 0 | 0 |
| ,, | 11—பி. வேலாச்சாரி, சிலோன் | 3 | 0 | 0 |
| ,, | 12—எஸ். என். சுப்பய்யாச்சாரி, பாலங்கோடு | 3 | 0 | 0 |
| ,, | 16—வேதாசல ஆச்சாரி, ரூனை | 1 | 0 | 0 |
| ,, | 18—சரவணாச்சாரி, புரசை | 0 | 4 | 0 |
| ,, | 22—வி. கந்தசாமி ஆச்சாரி, சிந்தாதிரிப்பேட்டை | 1 | 0 | 0 |
| ,, | 25—கூ. சுப்ரமணியாச்சாரி, கூந்தலூர் | 1 | 0 | 0 |
| ஜூலைமீ | 6—கல்பாக்கம்-கன்னியப்ப ஆச்சாரி, சென்னை | 1 | 0 | 0 |
| ,, | 12—நி. புண்ணியகோடி ஆச்சாரி | 0 | 8 | 0 |
| ,, | 13—பெ. பார்த்தசாரதி ஆச்சாரி, மைலாப்பூர் | 0 | 8 | 0 |
| ,, | 14—பி. கலியாணசுந்தர ஆச்சாரி, புரசை | 1 | 0 | 0 |
| ,, | 16—சோ. கந்தசாமி ஆச்சாரி, சென்னை | 6 | 0 | 0 |
| ,, | 18—டி. முருகப்ப ஆச்சாரி, ரூனை | 1 | 0 | 0 |
| ,, | 18—கந்தசாமி ஆச்சாரி, ரூனை | 0 | 8 | 0 |
| ,, | 18—கொ. கன்னியப்ப ஆச்சாரி, சிந்தாதிரிப்பேட்டை | 1 | 8 | 0 |
| ,, | 23—கோ. பஞ்சாக்ஷர ஆச்சாரி, சேப்பாக்கம் | 1 | 8 | 0 |
| ,, | 24—மே. வேலாயுத ஆச்சாரி, சிந்தாதிரிப்பேட்டை | 0 | 8 | 0 |
| ,, | 25—வ. மாணிக்காச்சாரி, ,, | 1 | 0 | 0 |

சுபமஸ்து.

ஸ்ரீமத் விராட் விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்-தொழில்.

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள
சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை.
301, தங்கசாலை வீதி, சென்னை.

சம்புடம் 5] காளயுக்தி ஞ ஆடி மீ 1918 ஞ ஜூலை மீ [சஞ்-7.

## ஒளிவளர் விளக்கு.

நமது பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்துவந்த ஸ்ரீ கா. கந்தசாமி ஆச்சாரியாரவர்களை நமது வாசகர்கள் நன்கறிவார்கள். இக்கல்வியாளர் தேகவியோக மடைந்தனரென்பதை மிக வருத்தத்துடன் தெரிவிக்கலாயினோம். பழைய பாடமுறைப்படி பி. ஏ. பரீக்ஷையில் இரண்டு பகுதிகளில் தேறி, சென்னை ரெவினியூ போர்ட் ஆபீஸில் சுமார் இருபத்தைந்துவருஷகாலமாய் இவர் உத்தியோகஞ் செய்துவந்தார். இவருக்குத் தமிழ்ப்பாஷையில் நல்ல பாண்டித்திய முண்டு; கவிசெய்வதிலும் இவர் வல்லவர். இவரா லியற்றப்பட்ட நூல்களிற் சில அச்சேறியும் அச்சேறாமலு மிருக்கின்றன. தொழில் சம்பந்தமான கிரந்தங்களையும் பத்திரிகைகளையும் வாசித்து நமது பத்திரிகைக்குரிய விஷயங்களை யெழுதிக்கொடுத்துதவிவந்த இவர்சகாயம் கெட்டது நமது பத்திரிகைக்கும் ஜாதிக்கும் பெருநஷ்டமெனவேண்டும். இத்தகைய சகாயஞ் செய்யக்கூடியவர்களாய்ப் பலர் நம்முள் காணப்படவில்லை. செய்யவிரும்புவோர்க்கு சக்தி ஏற்படாமலும், சக்தி ஏற்பட்டோர் செய்யும் விருப்பமில்லாமலுங் காணப்படுகின்றமையினால், இவருடைய மரணம் எமது வருத்தத்தை நனிபெருக்கி நிற்கின்றது. உபந்நியாசங்களைக் குட்டெழுத்துக்களால் குறித்துக்கொண்டு பெயர்த்தெழுதிக் குறைவுபடாமற் கொடுப்பார்போல், குட்டெழுத்துச் சகாயமில்லாமலே எழுதித்தரும் பெருஞ்சமத்தும் ஞாபகவன்மையும் இவர்பாற் காணப்பட்டன. இன்னும் இவருடைய விசேஷங்கள் பலவுள. இத்தகையார் இழப்பினால் யாம் தளர்வுறுதபடி மற்றையர் இவர்போன் றுதவிதந்து எம்மையாதரிக்க வேண்டுகிறோம்.

* * *

சென்ற மேமாதப்பத்திரிகையில் "பிராமணக்குருமாரும் தபதிகளும்" என்ற மகுடங்கொண்டதொரு வியாசத்தைப் பிரசுரித்திருந்தோமல்லவா? அதிற் காணப்படும் வாங்கியங்களைப் பற்றிய தமதபிப்பிராயங்களை நமது வாசகர்கள் வெளிப்படுத்த வேண்டுகிறோம். வேதசிவாகமத்துணிபு எதுவென்றும் பல ஊர்வழக்கங்க ளெவ்விதமிருக்கின்றனவென்றும் ஆராய்ந்து, ஸ்தபதிகளுடைய அதிகாரம் இவ்வளவுமட்டில் செல்லுமென்பதை நாம் நிர்ணயித்தல் அத்தியாவஸ்யமாயிருக்கிறது. அங்ஙனம் நிர்ணயித்தபின் அதன்படி எங்கும் நடைபெறும்படி முயற்சித்து நாடெங்கும் ஒரே அநுஷ்டானம் நிலைநிற்கச்செய்யவேண்டும். விஸ்வகர்மஜாதியார் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்களில் இதுவுமொன்றென்பதில் சந்தேகமில்லை. சிற்பாதிகாரிகளும் சாஸ்திராதிகாரிகளும் முன்வந்து

தங்கள் கக்ஷியை நியாயபூர்வமாய் ஸ்தாபிக்கவேண்டும். அவ்வாதாரங் கொண்டு சிற்பாச்சாரியர்கள் வேலைசெய்யு மிடங்களிலெல்லாம் அவர்களுக்குரியதாகிய மரியாதைகளில் அணுவளவுங் குறையாதபடி நடக்குமாறு பலவந்திக்கவேண்டும். இதை பூர்ஜிதப்படுத்திக்கொண்ட பிறகே தொழிற்பிரவேசஞ் செய்யவேண்டும். மானமோ அவமானமோ மரியாதையோ இல்லையோ வேலைகிடைத்தாற்போதும் வயிறு வளர்ந்தாற்போதுமென்ற எண்ணத்தை அறவே விட்டாலொழிய நமது சுதந்திரங்கள் நிலைபெறமாட்டா; நமக்குரிய மதிப்பும் பூஜிதமும் சித்திக்கமாட்டா வென்பதை சிற்பாச்சாரிகளெல்லாம் ஞாபகத்திற்கொண் டொழுகவேண்டும்.

* * *

மைசூரில் வழக்கப்படி தசராவை யநுசரித்து காளது அக்டோபர் மாதத்தில் பொருட்காட்சி நடக்கப்போகிறது. இதில் விஸ்வகர்மர்கள் தமதுதொழிற்றிறமையை விளக்குமாறு பல உலோகங்களிலும் உபயோகமான வஸ்துக்களைச்செய்து பிரதர்ஸனஞ் செய்விப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். தொழிற்பொருட்காட்சி சாலைகளிற் காணப்படவேண்டியன தொழிற்காரர்களுடைய வேலைகளேயன்றோ? விஸ்வகர்ம ஜாதியாரே நாட்டுக் கர்மகாரர்களாதலால், இக்காட்டில் நடைபெறுந் தொழிற்காக்ஷிகளிலெல்லாம் விஸ்வகர்மர் வேலைகளே காட்டப்படவேண்டும். அங்கு காணப்படுவனவற்றிலோ இங்கிலாந்து முதலிய பிறநாடுகளிலிருந்து வரும் வஸ்துக்களொழிந்த மற்றவைபெரும்பாலும் விஸ்வகர்மர்களால் முடிக்கப்பட்டவை யென்றே கூறலாம். ஆயினும், விஸ்வகர்மர்கள்பெயரால் பிரதர்ஸனஞ் செய்யப்பட்டுள்ளனவை எத்தனை யென்று எண்ணிப் பார்ப்போமானால் ஒன்றிரண்டோ இல்லையோ என வேண்டியவர்களாகிறோம். வேலைகளை முடிப்பதில் நம்மவர்களுக்குக் கிடைப்பது கூலிமட்டுமாகவே நின்றொழிகிறது. லாபமும் கீர்த்தியும் சன்மான மாதியவைகளும் அடைந்தநுபவித் தானந்தமுறுவார் பிறராகின்றனர். அதனாலேதான் "கூலிக்காரர்களாதுகூட்டமெனுமுலக மாதுக்குப் பாத்திரராய் மாண்பிழந்தீர் புத்திரர்காள்" என்னப்பட்டது விஸ்வகர்மமோபதேச விரதகண்டாமணியில். ஜீவனத்திற்காகச் செய்யும் வஸ்துக்களின் கதிதானிவ்வாறாயினும், பிரதர்ஸனத்திற்காகச் செய்யப்படுபவற்றின் கதி வேறாயிருக்கலாகாதோ? அவையும் ஜீவனத்திற் காகத்தான் செய்யப்படுகின்றனவாதலால் அக்கதியே அடைகின்றன. ஆதலால், பொருட்காக்ஷிசாலைகளுக்குரிய வஸ்துக்களை நம்முள் தனவந்தரோ, அல்லது, அதற்கென்றேற்படுமொரு சிறுகூட்டத்தாரோ பொருள்கொடுத்து தொழிற்காரரிடமிருந்து வாங்கி அவர்கள் பெயரால் அதைக் காக்ஷிப்படுத்தி அதனாலெய்துமூதியத்தை, முழுவதுமில்லாவிடினும் ஒருபாகமேனும் அவர்கள் அடையும்படிச் செய்யவேண்டும். இங்ஙனஞ் செய்யப்படவேண்டிய காரியங்கள் எத்தனையோ விருக்கின்றன. செய்வாரைத்தான் தேடிக்கொண்டிருக்கின்றோம்.

* * *

நல்லபல்லி கர்மராஜு என்னும் பெயருடையா ரொருவர் ராஜமகேந்திரத்தினின்று பத்திரிகைகள் மூலமாய் விஸ்வகர்ம ஜனங்களுக்கொரு விண்ணப்பஞ் செய்து கொள்ளுகிறார். தற்கால தேச வர்த்தமானப் போக்கை யநுசரித்து பாரதநாட்டு வாசிகளிற் பெரும்பாலோர் தமது மேம்பாட்டிற்



காக கல்வியிலும், வியாபாரத்திலும், தொழில்களிலும், இராஜாங்க காரியங்கள் முதலியவற்றிலும் முற்பட வேண்டுமென்று ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு விடாமுயற்சியுடன்உழைக்கவர, நமது ஜாதியார்மட்டும் அன்றுபார்த்ததகன்னுக்கு அழும்பில்லாதபடி பழைய கருப்பனே கருப்பனென்னுமாப்போல உணர்ச்சியற்று முயக்கமற்று உழைப்பற்று ஒரு நிலையில் ஒடுங்கி ஒதுங்கிப்பதுங்கிப் பாழாய்க்கிடப்பது பரிதாபத்திலும் பரிதாபமென்று துக்கிக்கிறார். பிறஜாதியார் எவ்வித முயற்சிகள் செய்தபோதிலும், விஸ்வகர்ம ஜாதியார் நல்லுணர்ச்சிகொண்டு காலத்திற்கேற்றவாறொழுகித் தொழிற் சீர்திருத்தங்கள்செய்து நாட்டுக்கு வேண்டியவைகளையெல்லாம் நல்லபடி செய்துதர முயன்றாலல்லாமல் தேசம் சீர்படாதென்றும் க்ஷேமமுறாதென்றும் செப்புகிறார். ஆகையால், ஜாதிக்ஷேமத்திற்கும் தேச உயர்வுக்கும் இன்றியமையாத முயற்சிகள் யாவையென்றும், அவைகளை எங்ஙனஞ் செய்வதென்றும் யோசித்துத் தீர்மானிப்பதற்கு அங்கங்குள்ள விஸ்வகர்மர்கள் கூட்டங்கூடவேண்டுமென்றும், இது மிக அவசரமும் அவசியமுமான காரியமென்றும் இதைச்சற்றேனும் அசட்டை செய்யலாகாதென்றும், அசட்டைசெய்தாலும் அன்றிக் காலதாமதஞ் செய்தாலும் இன்னும் மிகத் தௌர்ப்பாக்கிய நிலை இசசாதிக்குச் சித்தித்து நீங்காத்துயரமும் தாழ்வும் நேரிடுமென்றுங் கூறுகின்றார். வாஸ்தவமே! இவ்வார்த்தைகளால் நம்மவர் விழிப்புறுவரோ? இது போன்ற வாக்கியங்களைப் பல வருஷங்களா, யெழுதிவந்தும் பலனதிகங் கண்டோமில்லை. ஒருமொழி யுரைத்தமாத்திரத்திலேயே உறக்கந்தெளிந்து ஓட ஆரம்பித்து யாமே வெற்றியடைவோம் எமதே பந்தயமென்று இமையா நாட்டத்துடன் ஈடேற்ற நெறி தாவுஞ் சாதியாரையுங்கண்டு நம்மவரையுங் காணுமிடத்து நாணமும் துக்கமும் வேணமட்டும் விளைகின்றன. என்செய்வோம்? இந்நிலை யுணர்ந்து ஏக்குறுவார் எத்தனைபேர் நம்முளிருக்கின்றனர்? இந்நிலைமாற்றி நன்னிலைப்படுத்த நாடியுழைப்பார் எத்தனைபேருளர்? ஒவ்வொருவரும் தாமாக நாமிதுவரையிலும் ஜாதி யீடேற்றத்திற்காக எவ்வளவு பாடுபட்டோம் என்று தினமும் எண்ணிப்பார்த்துக்கொள்ளுவார்களானால், நமது ஜாதியும் மற்ற ஜாதிகள்போல் பல துறைகளிலும் நலமடைந்து நிற்காதோ?

* * *

தென்கன்னடம் ஜில்லாவென்பது சென்னை யிராஜதானியின் மேற்கிலுள்ளது. அந்தஜில்லாவாசிகளாயுள்ள நமது வம்ஸத்தினர் கௌரவத்திற்கிடமான வாழ்க்கை மேவியிருக்கிறார்களென் றறிந்து மகிழ்கின்றோம். இதன்தலைநகராகிய மங்களூருக்கும் உடுப்பிக்கும் நமது சபை அத்தியக்ஷர்களிலொருவராகிய ஸ்ரீ S. ஆண்டிசுந்தர ஆச்சாரியார் பி.ஏ., பி.எல்., அவர்கள் சமீபகாலத்தில் சென்றிருந்தார். அவர் கண்டு கேட்டறிந்தமட்டில் நம்மவர்கள் வைதிக நிலையிலும் லௌகிகஸ்திதியிலும் பொதுப்பட பிறர் மதிப்புக்குரிய மாதிரியா யிருக்கிறார்களென்றால், நாம் சந்தோஷமுறவேண்டுமன்றோ? இவ்விதமாகப் பல ஜில்லாக்களைப்பற்றி நாம் கேள்விப்படுகிறோமில்லை. புகழ்பட வாழ்வாரே வாழ்வார். அப்புகழ் அக்கம்பக்கத்தாரிட மிருந்து கிடைக்கவேண்டியதா யிருக்கிறது: கிடைப்பதற்குச் சில லக்ஷணங்கள் காணப்படவேண்டும். அவை காணப்படாவிடில் புகழ்கிடைப்பதில்லை, மதிப்பேற்படாது, மரியாதை தவறு

கிறது, இகழ்ச்சி சித்திக்கிறது. புகழ்ச்சிக்குரியார் புகழ்ச்சியடையாது தப்பார். அங்ஙனமே இகழ்ச்சிக்குரியாரும். புகழ்ச்சிக்குரிய லக்ஷணங்கள் யாவையென்று நாமிங்கெடுத்தோதுதல் அனாவஸ்யம். அவற்றை யாவரும் நன்கறிந்திருக்கின்றனர். எனினும், அவைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவாராமலும், அவைகளில் லக்ஷியம் வையாமலும், பலர் காலங் கழித்தலால் புகழ்ச்சியுறாது போகின்றனர். புகழ்ச்சிக்குரிய லக்ஷணங்களைக் கைக்கொள்ளாதிருத்தலினும் இகழ்ச்சிக்குரிய (அவ) லக்ஷணங்களைக் கைவிடாதிருத்தலே பெருந்தோஷமாயிருக்கிறது. இகழ்ச்சிக்குரிய (அவ) லக்ஷணங்களைக் கைப்பற்றாது காலங்கழித்தாலே ஒருவாறு திருப்தியடையலாம். அந்தத் திருப்தியும் கிடைப்பதற்கில்லையேயென்று அலமறுவார் அனந்தம்பேருளர். அந்தோ! என்ன பரிதாபமான நிலையிது! தென்கன்னட வாசிகளாயுள்ள விஸ்வகர்மர்களோவெனில், பெரும்பாலும், அறிவது அறிந்து அடங்கி அஞ்சுவது அஞ்சி உறுவது உலகுவப்பச்செய்து பெறுவதனால் இன்புற்று வாழுகிறார்களாம். இவர்களில் அநேகர் ஆங்கிலக்கல்விகற்று உத்தியோக பதவிகளில் அமர்ந்து கண்ணியமுற்றிருப்பதாகத் தெரிகிறது. உவர்கோட் என்னுமிடத்தில் ஸ்ரீ கிருஷ்ணாச்சாரி யென்னுமொரு விஸ்வகர்மர் தாசில்தாராயிருப்பதாயறிகிறோம். ஆருஷேய சகோதரர்கள் நம்மவர்கள்பால் அன்புசெலுத்தி நம்மவர்கள் ஜாதிப்பட்டம் திரிபுறா துச்சரித்து அஃது நமக்குரியதேயெனக்கூறுவாராயின் ஆருஷேயருக்கும் பௌருஷேயருக்கு மேற்பட்டுள்ள அந்நியோந்நியம் எவ்வளவென்பது எளிதில் விளங்கும். எஜமானத்வம், பந்தாக் கட்டுப்பாடு, தேவாலயபரிபாலனம் முதலிய விஷயங்களிலும் இவர்கள் பழிப்புக்கிடமின்றி வாழுவதாய்ச் சொல்லப்படுகிறது. இவர்கள் இப்பொழுது சென்னை முதலிய கீழ்ப்பிராந்தியங்களிலும் அதிகமாய்ப் பரவிவருகின்றனர். இவ்வூர் வாசிகள் உள்ளூர்த் தொழிலாளிகளை விடுத்து ஷையாரிடம் வேலைசெய்துகொள்ள முற்படுவதையும் யாம் சிலகாலமாகக்கவனித்து வருகிறோம். பிறரும் இதைக் கவனித்திருப்பார்களென நம்புகிறோம். இவ்வளவுமெழுதியவாற்றால்நமது வாசகர்கள் இவர்களிடமிருந்து ஓர் படிப்பினை யேற்பார்களானால் யாம் களிப்படைதல் திண்ணம்.

* *

விஸ்வகர்மஜனங்களுடைய உரிமைகளையும் கடமைகளையும் அவற்றை நிறைவேற்றுதற்கான சாதனங்களையும் இடைவிடாது எடுத்துக்காட்டிக்கொண்டுவருதல், இக்குலசுடேற்றத்தில் நாட்டமுடைய குலாபிமானிகள் ஒவ்வொருவருடைய பொறுப்பாயிருக்கிறது. இப்பொறுப்பை மறக்காமலும், அலக்ஷியஞ் செய்யாமலும் கைவிடாமலும் குலாபிமானிகள் யாவரும் நடக்கவேண்டியவர்களாயிருக்கின்றனர். காலமோ கடுகி நடந்துகொண்டிருக்கின்றது. காலதாமதம் கஷ்டங்களைப் பெருக்குகின்றதேயொழிய வேறில்லை. குலமேம்பாட்டிற்காகச் செய்யவேண்டிய பிரயத்தினங்களில் அசிரத்தையாயிருந்து காலத்தையும் சந்தர்ப்பங்களையும் அவலமாக்கினோம். இனியேனும் ஒருநெறிப்பட்டு ஊக்கத்தோடும் விடாமுயற்சியோடும் உழைக்க விரதங்கொள்ளவேண்டும். யாரியார் என்னென்ன விதங்களில் துணைநிற்கக் கூடுமோ அந்தந்த விதங்களிலெல்லாம் துணைபுரிய வேண்டும்.

வாக்குவல்லபமுடையார் உபந்நியாசமூலமாகவும் சம்பாஷணைமூலமாகவும் தங்



1620571

தனை செய்யவேண்டும்; குலாபிமானம் பெருக்கவேண்டும். எழுதுந்திறமையுடையாரெல்லாம் சுஜாதி யபிவிருத்திக்கான விஷயங்களைப்பற்றி அடிக்கடி நமது பத்திரிகைக் கெழுதவேண்டும்; புத்தகங்களெழுதியச்சிட்டுப் பிரசுரிக்கவேண்டும். கவி வன்மையுடையார் ஜாதியெழுச்சியுறத்தக்கவிதமாய்க் கீதங்கள்பாடி பத்திரிகையிலும் புத்தகரூபமாகவும் அச்சிட்டுப் பரப்பவேண்டும். நம்மவர்களில் பாடல்களிற் பிரியமுள்ளவர்கள் பலரிருக்கின்றார்கள். நீதிபோதமானவையும், குலாபிமான மூட்டுவனவும் எழுச்சி தருவனவுமாகிய கீதங்கள் வெளிப்பட்டால் ஆண்பாலரும் பெண்பாலரும் கிழவரும் குமரரும் படிக்கவல்லவரும் அல்லாரும் ஏழைகளும் தனவந்தரும் யாவருங் கற்றுப் பாடி உற்சாகம் பெற்று குலாநுகூலக் காரியங்களைச்செய்யத் தூண்டப்படுவார்கள். இதை சுஜாதிக்கவீஸ்வரர்கள் நன்கு கவனித்தல் மிகவும் அவசரமாயிருக்கிறது.

ஊரூராகப் பிரயாணஞ்செய்ய நேரிடுவோர் ஆங்காங்குள்ளாரைக் கண்டு குலசம்பந்தமான வார்த்தைகளாடி அந்நியோன்னியம் பெருக்கலாம். ஓரிடத்துள்ளார் மேற்கொண்டிருக்கும் முயற்சிகளைப்பற்றி வேறிடத் துள்ளார்க்குப் பிரஸ்தாபித்து, அவர்களும் அதுபோன்ற வழிகளிலுழைக்கத் தூண்டலாம். நமது பத்திரிகைக்குச் சந்தாதாரர்களைச் சேர்க்கலாம். இது மிகவும் பிரயோஜனகரமான கைங்கர்யமென்பது யோசிக்குமிடத்து நன்கு புலப்படும். பத்திரிகையில் சுஜாதி சம்பந்தமான பல அரிய பெரிய விஷயங்களைப்பற்றி சுஜாதிப்பண்டித சிரேஷ்டர்களுடைய அபிப்பிராயங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவை நமது ஜாதியாரெல்லோருடைய பார்வைக்கும் கவனத்திற்கும் உரியனவா யிருக்கின்றன என்பதிற் சந்தேகமில்லை. அவற்றை வாசிப்போர் குலாபிமானிகளாகி குலோபகாரகாரியங்களைச்செய்தல் திண்ணம். குலாபிமானமுடையார் தாஞ் செய்யவேண்டிய தின்னதென்றறிந்து முயலுதல் சாத்தியமாகிறது. எனவே, பத்திரிகை வாசிப்போர்க்கெல்லாம் குலப்பற்று அதிகரித்து வருகின்றது.

இத்தன்மை அதிகமதிகமா யுண்டாகவேண்டுமானால் பத்திரிகை அதிகமதிகமாய்ப் பரவவேண்டும். இதை வாசிப்போர் தொகை நாளுக்குநாள் அதிகப்படவேண்டும். அப்படி அதிகப்பட்டால் பல ஊர்வாசிகளாயுள்ளவர்களுக்குள் பரஸ்பர அன்புண்டாதலும், இவர்கள் ஒரு நெறிப்பட்டவர்களாய் ஒரேவித நடவடிக்கைகளும் அனுஷ்டானமும் உண்டாகி உயர்வடைதலும் சுலபசாத்தியமாகும்.

ஆதலால், தமிழ்நாடெங்கணும் ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலுக்காவிலும் பட்டணத்திலும் கிராமத்திலும் குக்கிராமத்திலுமுள்ள ஒவ்வொரு விஸ்வகர்மகுடும்பத்திலும் 'விஸ்வகர்மன்-தொழில்' பத்திரிகை காணப்படும்படி செய்யவேண்டும். இது விஸ்வகர்ம வம்ஸத்தில் உற்பவித்த ஒவ்வொரு புருஷனுடைய கடமையாயிருக்கிறது. இக்கடமை யொன்றை நிறைவேற்றுதலாலேயே குலநலம் பெரிதும் பயக்கலாம். எவ்வளவு சீக்கிரத்தில் நமதுபத்திரிகை பல விடங்களுக்கும் பரவுகிறதோ அவ்வளவு சீக்கிரத்தில் சுஜாதி முன்னேற்றம் கைகூடும். ஒவ்வொருவரும் தங்களூரிலுள்ளாரையும் அயலூரிலுள்ளபந்துமித்திரர்களையும் நமது பத்திரிகைச் சந்தாதாரராக்க வேண்டும். இவ்வித முயற்சி யேற்பட்டால், ஒரு மாத

த்திற்குள் நாம் ஓராயிரஞ் சந்தாதாரரை யடையலாம். ஓராயிரஞ் சந்தாதாரர்கள் ஏற்பட்ட சீக்கிர காலத்திற்குள் நமது பத்திரிகாபிப்பிராயங்கள் நாலாதிசைகளிலும் நன்கூடுருவிச்செல்லு முகத்தால் நலமிகப்பயக்கும். சந்தாதாரர்கள் தொகை இடைவிடாது அதிகரித்துக்கொண்டேயிருக்கும். அப்போது, நாம் ஏற்கனவே தெரிவித்துள்ளவாறு, மாதமொருமுறைபிரசுரித்தற்குப் பதிலாக மாதமிருமுறையோ நான்குமுறையோ பத்திரிகையைப் பிரசுரிக்கலாம். நாளடைவில் தினப்பத்திரிகையு மாக்கலாம்.

எல்லாம் நமதுஜாதியார் தரும் ஆதரவை யநுசரித்து நிற்கிறது. நமது பத்திரிகை தினப்பிரசுரமாகிப் பல்லாயிரக் கணக்காய் அச்சிடப்பட்டு பல ஜாதியார் கைகளிலும் உலாவச்செய்யுமட்டும் நாம் திருப்தியடையமுடியாது. இந்நோக்கத்துடன் நாமொவ்வொருவரும் சோராதுழைக்க வேண்டும். நமது ஜனத்தொகையைப் பார்க்குமிடத்து நமதுத்தேசம் மிகப் பெரிதென்று சொல்லுதற்கிடமில்லை. சில வருஷகாலத்திற்குள் முடித்துக் காணக்கூடியதொன்றே யல்லாமல் நினைவின்பால்மட்டிலே நின்றொழியக்கூடியதல்ல.

சகோதரர்களே! உம்முடைய வன்மையை இதிற் காட்டுவீர்களோ? என்னங் கைகூட இச்சையைத் ததவுவீர்களோ? உதவுவீர்களாயின் உம்போற் பெரியார் உலகத்திலிரார். உங்கள் மேலெழுச்சி உறுதிப்பாடுற்றதெனலாம். உங்கள் குறைதனெல்லாம் ஒழிந்ததன்றனவென்று ஓங்காரக் கூச்சலிடலாம். உங்கள் தொழில்கள் பங்கமடையாது பரிசுத்த நிலையிற் பரிமளித் தோங்குமெனப் பாடி யாடலாம். உங்கள் கல்வி உலகவியப்புறுத்துப் பாத்திரமாகும்படியான உற்சாகநிலையெய்தி உயருவீரென்று உள்ளங்களிக்கலாம் உங்களால் பாரதநாடு க்ஷேமப்பட்டதென்று ஓமங்கள் செய்யலாம்.

குலாபிமானிகாள்! அன்புவையுங்கள், ஆதரவு செய்புங்கள். பலதுளி பெருவெள்ளமாம். பலபேர் சிறுசிறு சகாயஞ்செய்தாலும் பெருஞ்சகாயமாய்க் கூடி அரிய முடிவுதரும், ஆனந்தம்தரும், செல்வம் தரும், சிறப்புதரும், சீரெனப்படுதல் எல்லாம்தரும். அன்பர்களே! அன்புகூருங்கள் துன்பந்தீருங்கள். ஆலஸ்யம் செய்யாதீர்கள். ஆலஸ்யஞ் செய்தே அலக்கணுற்றோம் அடிநாளிலிருந்து. ஆலஸ்யம் அவதியேதரும், அஃதினி யாகாதாகாது. அதையறவே தொலையுங்கள். ஆலஸ்யம் விட்டு அவசரம் பற்றுங்கள். தினமொருவரைச் சேர்த்தாலும் கனமதிக முண்டாய்விடும். சேர்ந்தோர் உம்மை வாழ்த்துவர், சபையார் உம்மைப் போற்றுவர், குலம் உம்மைக்கொண்டாடும். குணம்அதிகம் கூடிவிடும்.

ஒன்றொன்றாய்ச் சேர்த்தாலே ஒரிலக்ஷம் சேர்த்துவிடலாம். சேர்க்கத்தான் வேண்டும். இது உங்கள்கடமை, உங்கள் பொறுப்பு. இப்பொறுப்பை நிறைவேற்றும்படி உங்கள்ஜாதி உம்மை வேண்டுகிறது. உங்கள் ஜாதியின்பொருட்டு இதுசெய்யுங்கள், உங்கள் குடும்பத்திற்காக இதுசெய்புங்கள், உங்கள் மக்களுக்காக இதுசெய்புங்கள். இன்றே செய்புங்கள், இன்னே செய்யுங்கள்.

எம்மவரே! நாளுக்குநாள் அளந்தளந்து செய்யுங்கள். பின்னேசெல்லோம் முன்னேயே செல்வோம் என்று மொழிந்துகொண்டே செய்புங்கள். யாருக்கும் பிற்படமாட்டோம் முற்படிமோறு மோதிச் செல்வோமென்று முனைந்து செய்புங்கள், நினைந்து

செய்புங்கள். நிமிஷமும் தாமதஞ் செய்யாதுழைத்தால் நிச்சயமாய்க் கனம்பெறுவீர்கள், தனம்பெறுவீர்கள், நீடித்தபுகழ் நிலையாய்ப் பெறுவீர்கள், நிச்சயமாய்ப்பெறுவீர்கள். விஸ்வகர்மரே! வேளையிது. வேலைசெய்தற்கான வேளையிது. இப்போதே முன்வருவீர்களாக, இன்புறுவீர்களாக, துன்புறுவீர்களாக.



## தொழில்.

ஸ்ரீ T. தங்கவேல் ஆச்சாரியார்,
திருநெல்வேலி.

உலகத்தில் தோன்றும் எவ்வித சிருஷ்டிக்கும், எவ்வித வித்தைக்கும், பிரம்மாவும், சரஸ்வதியும் முறையே ஆதி கர்த்தாக்கள் என்பதும், எவ்விதத் தொழிலும் நமது தொழிலின் உட்பிரிவானதால் நாமே எத்தொழிலுக்கும் அதிபதிகளென்பதும் யாவருமறிந்த உண்மையாகும்; சிருஷ்டிகர்த்தாவான பிரம்மாவின் தொழில் ஜேஷ்டபுத்திரரான நம்மிடத்தில் பிரத்தியக்ஷமாயிருப்பதால் நாம் விஸ்வப்பிராமணாள் என்றும் தேவப்பிராம்மணாள் என்றும் அழைக்கப்பட்டு வருகிறோம்.

### பூர்வநிலை.

அஞ்ஞானத்தி லழுந்திக்கிடக்கும் ஜீவாத்மாக்கள் நற்கதியடையும்பொருட்டு ஆங்காங்கு பகவானின் திருரூபங்களையும் ஆலயங்களையும் நிர்மாணித்தும், மன்னர்க்குரிய முடி, சிம்மாசனம், வில், வச்ருபுதம் முதலியுவையும், சன்னியாசிக்குரிய யோகதண்டம் கமண்டலம் முதலியவும், இல்லறத்திற் குரியனவும், இன்னும் லோகசம்ரக்ஷணைக்கு வேண்டுவன யாவையும் செய்து வருபவர்கள் நாமே என்பதற்கு கம்பர் ஏரெழுபதில் 10 பாசுரத்திற்கு ஒருபாசுரம் "காராளர் பெருமையெல்லாம் கண்ணாளர் கைத்தொழிலே" என்று கூறியிருப்பதே போதுமானதாகும். மேலும்,

"மகதவினைஞரும் மராட்டக்கம்மரும்
ய்வனக்கொல்லரும் அவந்தித்தச்சரும்
கண்டொருவினைஞர் தம்மொடுகூடி
கொண்டினிதியற்றிய கண்கவர்செய்வினை."

என்ற மணிமேகலைஅடிகளாலும், இன்னும் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, குலசங்கரமாலை முதலிய நூல்களாலும், மஹாபலிபுரம், (Caves of Elephanta) கரிபுரக்குகைகள், இராமநாதபுரம், கோவிலூர் மடாலயம், கிருஷ்ணாபுரம், கதிர்காமம், கழுகுமலை, எட்டிக்குடிமுதலிய விடங்களிலுள்ள வேலைகளின் அருமையாலும் அறியலாம்.

### நிகழ்கால நிலை.

தற்காலம் சிலர், பொறாமையாலும், சுயநலத்தாலும் நம்மைத் தொழிலாளர் (கூலிக்காரர்) என்று கூறவும், தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி என்ன செய்வான் என்ற மொழிக்கிணங்க காலதேசத்தின் கொடுமையால் நாம் நமது பூர்வீக நடையுடைபாவனைகளில் குன்றியநிமித்தம் அது வழக்கத்தில் வரலாயிற்று. வெளித்தோற்றத்திலிருந்து அபிப்பிராயத்தைக் கூறுகிறவர்கள் அதிகமும் தீர்க்காலோசனைசெய்து நடுநிலையிலிருந்து கூறுகிறவர்கள் சொற்பமாதலால் யாரைக் குறைகூற முடியும்.

இவற்றிற்கெல்லாம் காரணம் ஒழிந்தநேரத்திலும், வேலை கற்பதற்கு முன்னும் பின்னும் வீண்வார்த்தையிலும், விதண்டாவாதத்திலும் வீண்காலப்போக்கு செய்தவர்கள், வேதாதிகாரத்திலும், சிற்பாதிகாரத்திலும், காலதேச வேறுபாட்டின் நிலையிலும், உலகினர் இயல்பிலும், வாய்மையிலும், நமது முன்னோர்வழிகளை அநுசரி

ப்பதிலும் கவனம்வைத்து காலங்கழித்து வந்திருந்தால் நாம் 'இழிவை அடைந்து இன்னலுற இடமிராது. ஒரு குட்டப்பையனின் தந்தை தன்மகனென்றுகூறி அவனை விரும்புவானா? ஒரு ஜாதியாரின் உயர்வோ, தாழ்வோ அச்சாதியாரின் பெரும் பகுதியார்கள் கைக்கொண்டுள்ள நடையுடைபாவனைகளால் நிச்சயிக்கப்படும். வியாபாரிகளும் மற்றவர்களும் கைக்கொண்டுள்ள வெளிப் பகட்டான நடையுடைபாவனைகள் அவர்களின்பொய்யை மறைத்துவிடுகின்றன. நம்மவர்கள் ஒரேபட்டரையில் நெடுங்காலமிருந்து வேலைகற்பதில்லை. கற்ருலும், சம்பளத்திலும், ஜால்சாப்பிலும் கவலையேயன்றி தொழிலிலில்லை. இருந்தாலும் நுட்பமறிவதில்லை. அறிந்தாலும் விரைவினிற் செய்வதில்லை. ஏன்? தொழிற்கல்வி இல்லாமையே யாகும்.

நம்மவர்கள், சக்கரத்திற்குக் கட்டுபோடுவதும், அகப்பைபோடுவதும் அம்மிகொத்துவதும், செம்புவாட்டுவதும், ஊதிக்காசிப்போடுவதுமே தொழிற்கல்வியென்று உடல்பூரித்திருக்கின்றார்கள். அவ்வழிகளையும், கூலிக்குப் போட்டாபோட்டி போடுவதையும் என்னென்றியம்புவோம். சரியான கூலி கொடுப்போனுக்கும், கொடுக்கப்பட்டவனுக்கும் எதிலும் எவ்வித மனத்தாங்கலும் ஏற்படாது என்பதை இரண்டினத்தினரும் கவனிக்காதது அறிவிலாமையே யாகும். 'பேராசை பெருநஷ்டம்'. இவர்கள்வேலையில் கூலி ஒன்றே கிடைப்பதால் தரித்திரம் வந்தணுகாது என்செய்யும்? பவுன் 15 ரூபா விற்றபோதும் 1703 கெ. மல் 7 ரூபாய்க்கு விற்றபோதும் இவர்கள் கூலிகள் எவ்வளவோ அதே கூலிதான் இந்த விலையேற்ற காலத்திலும் என்றால் இவர்கள் கடன்காரர்களாவதல்லாது கண்ணியமடையப்போகிறார்களா? கூலிக்கட்டுப்பாடும் ஒற்றுமையில்லாமையுமே காரணம் 'கம்மாளன் கட்டுப்பட்டால் கதிர் ஆயிரம் பொன்' என்று சும்மா சொன்னார்களா!

நாம் வியாபார முறைகளை நாடவேண்டும். நம்முன்னோர்கள் நாடியதற்குப் போதிய ஆதாரமில்லாமலில்லை. முற்காலத்தில் ஒவ்வொருபெரிய பட்டரைகளில் பல தொழில் செய்வோர் 20, 30 பெயர்களிருந்து வேலை செய்து சாமான்களை விற்பனைசெய்து வந்தனர். ஒரிடத்திற்கு வேண்டிய ஆட்களை பட்டரையின் எஜமானர்களின் மூலமாய் மற்றவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

வேலையின் திறத்தால் கிராக்கி சம்பாதிக்கவேண்டுமேயன்றி கூலிக் குறைவினால் சம்பாதிப்பது குலத்திற்குப் பழியும் கேவலமுமாகும். வியாபாரத்தைக் கைகழுவவிட்டதையும், தொழிலில் மற்றவர்கள் பிரவேசித்திருப்பதையும் அவர்களை ஊரார் போற்றுவதையும், கூலிக்காரர் என்ற சொல்லடைந்ததையும், நங்குலச் சிறுவர்கள் தரித்திரதிசைக்கு வந்ததும் வாஇருப்பதையும், 1825ல் சென்னையிலுள்ள இரும்பாலைகளிக்கோட்டைக்குக்கொண்டுபோகப் பட்டதையும் நாளடைவில் மேனாட்டுச் சாமான்கள் வரத் தலைப்பட்டதிலிருந்து நம்மவர்கள் கூலிவேலையே குடிவாழ்க்கைக்குப்போதுமென்று நாடிவருவதையும், நமதுதொழிலின் வன்மைகளையும் திறமைகளையும் கண்ணுற்ற நமதரசரும், மற்றவர்களும், டில்லிமாநகரின் புதுக்கட்டடங்கள் இந்திய சிற்பமுறையில் அமைக்கப்படவேண்டுமென்று பன்னெடுநாள் வாதாடவும் அதற்கு இந்தியா மந்திரி இசையவும், இந்திய கவர்ன்மெண்டாரும் நம்மில் தேர்ந்த சிற்பிகளைத் தேடவும், அவர்கள் கிடையாமையால் அக்கட்டடங்கள் கிரீக் முறையில் நிர்மாணிக்கப்பட்டு வருவதால், நாமிழந்த லாபத்தையும், சமயத்தையும் வாஸ்துசாஸ்திரம் தெரிந்த நம்மவர்களால் ஆலயநிர்மாணஞ் செய்தாலல்லாமல் ஆக்கினவரின் குலம் மேன்மைபடையாதென்ற மகரிஷிகளின் வார்த்தைகளை நன்குணர்ந்த நாட்டுக்கோட்டைசெட்டிகளால் கட்டப்படும் ஆலயவேலைகளில் நமது குலத்தினரின் எண்ணிக்கை குறைந்து வருவதையும் இவர்களிடத்தில் சமஸ்கிருத பாஷாஞான மில்லாததையும் கவனித்தால் கண்கலங்க வேண்டியதே யாகும். (Industrial Commission) தொழில் இலாக்கா கமிஷன் நமது தொழில்முறைகளைக் கவனித்து வருவதையும், வந்ததையும், தற்காலம் தொழிலின் விருத்திக்குரிய பிரயத்தனம் விருத்திமுகங் காட்டுமென்பதையும், தொழிலை விருத்தி செய்யும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரின் உதவியைப் பெறவேண்டுமென்பதையும் நல்ல வாசிப்பும், உலகஞானமும் செல்வமும், உத்தியோகமும் கொண்டுள்ள கனவான்கள் நன்குணர்ந்திருக்கிறார்கள்.



முயற்சிகள்.

சென்னையில் கைத்தொழிற்சாலை, வர்த்தகசாலை, வித்தியாநிதி முதலியவற்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதை பத்திரிகையில் படிக்க பரவசமாயிற்று. ஆனால், முயற்சி எழுத்திலும் சொல்லிலுமில்லாது காரிய நிர்வாகத்தி லிருக்கவேண்டுமென்பதும், இவ்விதத் தொழிற்சாலையை முன்பே துவக்கியிருக்கவேண்டுமென்பதும், இதற்கான பிரயத்தனங்களைச் செய்யாதிருந்தது நமது துர்ப்பாக்கியமே என்றாலும் சென்ற ஒரு வருடமாய் தேசத்தின்நிலைகளைக் கவனித்தவர்கள் கூடி உழைத்தால் கைகூடாதது ஒன்றுமில்லை என்றும் கண்டுகொள்ளுவார்கள் என்பதை எடுத்துரை செய்யவேண்டுமோ? இந்தப் பெரிய காரியம் ஊரிலுள்ள ஓரிருவரா லாகக்கூடியதன்று. பல ஜில்லாவிலுள்ள பலபேர்களின் பண உதவியால் ஆகக்கூடியது. இதற்குச்சுமார் 10 ஆயிரம் ரூபாயாவது வேண்டுமென்பது தொழிலில் ஞானமுள்ளவர்களின் துணிபு. அவைகளைப் பங்குகள் மூலமாய்ப் பிரிக்கவேண்டும். பங்குகளும் ரூ. 20, ரூ. 10, ரூ. 5, என்று பலவாறு யிருக்கவேண்டும். இவ்விதப் பங்குகளை அவ்வரவர்கள் ஆஸ்திக்குத் தக்கவிதமாய், 1, 2, 3 ஷேர்கள் எடுக்க முன்வரவேண்டும். சென்னையிலும் மற்ற விடங்களிலும், கமிட்டிகள் ஏற்படுத்த வேண்டும். அந்த கமிட்டிகள் (சென்னையிலுள்ள) தொழில்சாலையின் விவரம், பங்காளிகளின் லாபம், அவர்களுக்குள்ள நன்மை முதலியவற்றை விளக்கிக்கொண்டு ஒவ்வொரு ஜில்லாவாய்ச்சென்று பணம் வசூல் செய்யவேண்டும். இவர்களிடம் மூன்றுபகுதிகள்கொண்ட (Receipt Book) ரசீது புத்தக மிருக்க வேண்டும். ஒன்று பணம் சேருமிடமான சென்னைச் சபைக்கும், மற்றொன்றுபங்குக்காரர்களுக்கும் ஒன்று வசூல்செய்துவரும் கமிட்டியாருக்கு மிருக்கவேண்டும். இந்தப் பணம் பாங்கியில் போடப்படவேண்டும். இதற்குச் சென்னைச் சபையார் முன்னின்றால், எல்லோருக்கும் உற்சாகமுண்டாகி காரியம் சித்திபெற்று தேசம் நன்மையை அடைந்து நாமும் சுகப்படுவோம். இதில் அங்குள்ள கனவான்களுடைய அக்கறை வேண்டும். இவ்விதம் ரூ.7000 சேர்ந்ததும் தொழில் முறைகளையும், அதன் (மானேஜ்மெண்டு) நடத்தும்முறை இவைகளைப் பரி

சிலனைசெய்ய ஒருகமிட்டிஏற்படவேண்டும். அந்தக் கமிட்டியின் பொறுப்பில் தொழிற்சாலையிருக்கவேண்டும். அந்தக்கமிட்டியின் நடவடிக்கைகள் சென்னை வி. கு. சபைக்கு உட்பட்டதா யிருக்கவேண்டும்.

அதில் சேரும் மெம்பர்களும் (Directors) டைரெக்டர்களும் சென்னை சிற்பவித்தியா சங்கத்தில் அங்கத்தினராயுள்ளவர்களும், 20 ரூ. பங்குகள் எடுத்தவர்களும், பெரிய (Factory) பாக்டரியில் மானேஜராயிருப்பவர்களுமாயிருக்கவேண்டும். இவர்கள் யாதொரு விகல்பமின்றியும், காரியம் சித்திக்கக் கூடியவழியிலும் தற்புகழ்ச்சியை விரும்பாது, திரிகரண சுத்தியாய் உழைத்தால் இவர்களே நாட்டிற்கு நலந்தரும் நல்லவர்களாவார்கள்.

இவை யாவும் சென்னையில் "விஸ்வகர்ம மடம்" கட்ட யோசித்ததுபோல் இருக்கக்கூடாது. (ஆனால் 'விஸ்வகர்மன்" பத்திராதிபர் இது நம்மவர்களால் ஆகக்கூடாததும், விரும்பாததுமான காரியம் என்று ஒளிவுற விளக்கியிருக்கின்றார்) காண்பரன்சு காலத்தில் பேசினது போலிருக்கக்கூடாது. வாயிலும், எழுத்திலும் வேண்டியதைக் கூறலாம். "ஏட்டுச் சுரைக்காய் என்றுணர்த்த தாளுலும் கூட்டுக் கறிசமைக்கக்கூடுமோ? " என்ற வீரகண்டாமணியின் வார்த்தைகளை மனதிற் கொள்ளவேண்டும். இதற்காக வேண்டிய பிரயத்தனஞ் செய்து காரியத்தை நிர்வாகித்தாலல்லாமல் இதற்கு ஓர் மகிமை யுண்டாவதில்லை.

௸கண்டவிதத்தில் ஏற்படும் சாலையை ரிஜிஸ்டர் செய்யவேண்டும். " (Madras Visvakarma Technical Institute) " 'சென்னை விஸ்வகர்மதொழிற்சாலை' என்ற நாமமிடலாம். ஷேர் எடுத்தவர்களுக்கு (Share holders) வரும்லாபத்தில்பங்கும், வேலை ஆட்களுக்கு (Bonus) போனசும் கொடுக்கவேண்டும். அப்போதுதான்பங்குகளும் அதிகமாகும். வேலைஆட்களும்பிரியமாட்டார்கள். ஏன் இச்சாலை சென்னையில் அமைக்கப்பட வேண்டுமென்றால், அங்கு தொழிற்கல்வி கற்பவர்கள் உருவசித்திரம் சுயரூபமாய் வரையவும், பிளான் போடவும், உலோகங்களைபலவாறுசேர்க்கவும் சென்னை(School of Arts, Victoria Institute, Museum) பொம்மை காலேஜ், விக்டோரியா இன்ஸ்டிடியூட், காட்சிசாலை முதலிய விடங்களிலுள்ள வேலைப்பாடுகளைப் பார்க்கவும், செய்யவும் ஏதுவாகுமாதலால் அங்கு அமைப்பதே சர்வ சிலாக்கியமாகும். அது நூதனமுறையுடன் தக்கதோரிடத்தில் அமைக்கப்படவேண்டும். அதில், மயமதம், மானசாரம், வாஸ்து சாஸ்திரம், லோகசாஸ்திரம், நாதசாஸ்திரம், விஸ்வகர்மியம், காசியம், ஆங்கிலத் தொழில்களின் நுட்பங்களை விவரிக்கும் நூல்முதலியவை போதிக்கப்படவேண்டும். காலை 8-மணிமுதல் 11-மணிவரையில் மேற்படி கல்வியிலும், 1-மணிமுதல் 5-மணிவரையில் தொழிலிலும், அதில் வாசிக்கும் சிறு



வர்களின் கவனஞ் செலுத்தப்படவேண்டும். அப்பொழுது நல்லொழுக்கம் அவர்களுக்கு நன்கு பதிந்துவிடும். அன்னியநாட்டுச் சாமான் விலை குறைவாயும் பார்வைக்கு அழகாயுமிருப்பதால் அதைவிட குறைந்த விலையாயும் வேலைப்பாடாயுமிருப்பது முக்கியம். ஆகையால், இதில் வேலைசெய்வோர் அதிக லாபத்தையும் அதிக சம்பளத்தையும் கருதுவதில் ஆசைகொள்ளலாகாது. இதில், அயம், தாரு, தாம்பிரம்முதலிய மூன்று லோகங்களினால் ஆகக்கூடியவேலைகளைத்தான் கையாடவேண்டும். சிறிய சாமான்களும், எப்போதும் விரும்பப்படத்தக்கனவும், சீக்கிரத்தில் அழியக்கூடிய சாமான்களும் இதில் செய்யப்படவேண்டும். லோக்கல் போர்டு, முனிசியல் போர்டு, பள்ளிக்கூடங்கள் முதலிய விடங்களுக்கு வேண்டிய சாமான்களை செய்துதரலாம். இவ்விதநோக்கத்துடன் தொழிலை விருத்தி செய்யவேண்டுமென்ற எண்ணம் எங்கும் பரவிவரு மிக்காலத்தில், தொழிலிலே பிறந்து, தொழிலிலே வளர்ந்து, தொழிலிலே இறந்து தொழிலிலே முக்தியடையும் நம்மவர்கள் இதுவரை இருந்ததுபோல் இல்லாமல் 'விஸ்வகர்மன்' என்ற பாலன் 'விஸ்வகர்மன் தொழில்' என்று மகுடம் கொண்டு வெளிவந்து தொழில் முறைகளை புகட்டுவதால் அதற்கான பிரயத்தனத்தை வேண்டியபடி செய்யக் கங்கணங் கட்டாதிருப்பது பெரிய கேவலத்திற்கு இடமாவதோடு நில்லாமல் நாம் நமதுதொழிலை இழந்து இருந்தவிடந் தெரியாது இடரில் இன்னலுற இடமாகும். ஏனெனில், தேசநன்னிலைக்குக்காரணம் தொழில். தொழில் விருத்திக்குக் காரணம் தொழிற் கல்வியேயாகும். தொழிற்கல்வி யுள்ளவர்கள் அங்கங்கே பெரிய மில்லுகளிலும், ஓர்க்ஷாப்பிலும் மானேஜர்களாயிருந்து 100, 150 ரூ. சம்பளம் வாங்குவதையும் அவர்களின்கீழ் தொழிற்கல்வி இல்லாதவர்கள் கூலிவேலை செய்து வருந்துவதையும் கவனிக்கவில்லையா? நாம் கஷ்டப்பட்டது போதாதா? நம் சிறுவர்களும் கஷ்டப்படவேண்டுமா? போதும்போதும். நண்பர்காள்! பிரயத்தனத்தை ஊக்கத்துடன் செய்யுங்கள், அனந்த நன்மைகள் அடையலாம்.

### நன்மைகள்

அங்கங்கே கூலிவேலை செய்வோர் நமது சாலையில் வேலைசெய்யலாம். இவர்கள், சுஜாதி அபிமானத்துட னிருக்கவேண்டும். இவர்களிடத்தில் எஜமானர்களும் அன்பு செலுத்த வேண்டும். வேலைசெய்யுமிடத்தில் தவிர வெளியில் சிநேகிதர்கள்போ லிருத்தல் வேண்டும். சென்னை "Trades Association" வியாபாரசங்கம் காலதேச வேறுபாட்டிற்கும் சரக்குகளின் தன்மைக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப அதன்விலைகளைக்கூட்டவும் குறைக்கவும் இருப்பதை பொது ஜனங்கள் ஒப்புக்கொள்ளவும் கையாடவும் ஏதுவாகின்றது. ஏன்? இதில் கட்டுப்பாட்டிற்கு வழியிருக்கிறது.

நம்மில் நிறந்தரக்கூலி காலதேச வேறுபாட்டிற்குத் தக்க விதமாய் எங்குமில்லாதிருப்பது நமது தொழிற்சாலையால் நிவர்த்தியாகும். ஒரு எஜமானின்கீழ் அநேகர் வேலைசெய்வதால், அவர்கள் சொல்வதைக் கேட்பார்கள். இப்படி 10 - எஜமானர்கள் ஒன்று சேருவது சுலபம். அவர்களிடம் குறைந்தது 100 பேர் வேலைசெய்யலாம். ஆக 1000 பேர்களும் ஒற்றுமையா யிருக்கலாம். (இவ்விதச் சங்கமே நம்மில் ஒற்றுமையை உண்டுசெய்யும்) ௸ கூறிய விஸ்வகர்ம தொழிற்சாலை சங்கத்தார் தொழி

வின்முறைகளையும், கூலிமுதலியவற்றையும் வெளியிடலாம். அதைஅங்கங்குள்ள ஷேர் ஓல்டர்கள் கையாடலாம். அதில் வேலையாட்களுக்கு (Provident Fund) ப்ராவிடண்டு பண்டு போன்ற வைசளையும் இன்னும் (Co-operative credit society) ஐக்கியநாணய சங்கத்தையும் உண்டுசெய்யலாம். இதனால் நமது வறுமையும் கடனால் வரும் கஷ்டமும் நீங்கும். கொஞ்சகாலத்தில் தேசநன்மையை உண்டாக்கியதோடு தேசத்தாரின் நன்மதிப்பையு மடையலாம். விவசாயத்திற்கு கவர்ன்மெண்டார் பணம் உதவுதல்போல் நமக்கும் நாளடைவில் உதவக்கூடிய வழியைத்தேடி உதவிபெறலாம். 50 வருடங்கழித்து அடையக்கூடிய நன்மையை தற்போது அடைந்துவரும் சிறிய தேசமாகிய ஜப்பான் தேசத்தைக் கவனியுங்கள்.

அயவேலைக்குப் பேர்போன கோயமுத்தூர், சேலம், துவரங்குறிச்சிமுதலிய விடங்களிலுள்ளவர்களும், தாருவேலையில் சிலாக்கியமுடைய பாளையங்கோட்டை மலையாளவாசிகளும், தாம்பிர வேலையில் சிறந்து விளங்கும் தஞ்சை, திருச்சி, மதுரை முதலிய விடங்களிலுள்ளவர்களும், தொழிலின் நுட்பங்களை வெளியிடலாம். மேலும், அங்கங்கே இருக்கும் ஷேர் ஹோல்டர்கள் தங்கள் தங்கள் ஊர்களில் கிளைச்சாலையை ஏற்படுத்தலாம். அதில் குறிப்பிட்ட 2, 3, சாமான்களைமாத்திரம் அந்தந்த விடங்களுக்கு ஏற்பச்செய்யவேண்டும். அப்படிசெய்வதால் அதிக லாபத்தையும், அந்த வேலையில் அதிக கியாதியையுமடையலாம். எவ்விதப் பத்திரிகையின் பலனால் பல ஊர்களில்சபைகளும் அதன்மூலமாய்க் கல்வியும் விருத்தியாகி வருகின்றனவோ அவ்வாறே இவ்விதத் தொழிற்சாலையால், தொழிலும் விருத்தியாவதோடு நாம் செல்வவந்தர்களாகலாம்.

மானாமதுரை கூஜா எல்லோராலும் விரும்பப்படக்கூடியது, அங்குள்ள குயவர்கள் அதைமும்முரமாய்ச்செய்யத்தலைப்பட்டதில் அந்த குளையால் இடையூறு உண்டாகிறதென்பதைஅறிந்தகவர்ன்மெண்டார் தடுக்க அக் கூஜா செய்வது சிறிதுகாலம் நின்றது. மற்றவர்கள் அந்தக் கூஜா அத்தியாவசியமானது, அதைச் செய்யும்படி வேண்டிய உதவிகள் செய்யவேண்டுமென்று விண்ணப்பிக்க (குளை போடுவதற்கு ஒரு புறம்போக்குநிலம்) கவர்ன்மெண்டாரால் அடையப்பெற்றார்கள். எல்லாம் கட்டுப்பாட்டிலும் வேலைத்திறத்திலுமிருக்கிறது.

சகோதரர்களே! இப்படிகட்டுப்பாடுடன் நாம் ஒரு தொழிற்சாலையை நடத்தினால் நாம் நமது எண்ணங்களைப் பூர்த்திசெய்ததோடும் நம் பின்னுள்ள நமது சந்ததியார்களும் நன்னிலைக்குவருவார்கள். ஆதலால், மேற்கூறிய பிரயத்தனங்கள், வாய்ப்பேச்சிலும், எழுத்திலுமில்லாது, இருந்த விடத்தைவிட்டு 5, 6, பேர்கள் கங்கணங்கட்டி வெளியேறி வரவேண்டும். அங்கங்குள்ளவர்களும் உடனின்று பங்குகள்சேர்த்துக்கொடுக்கவேண்டும். இப்படிச் செய்தாலல்லாமல் நமதெண்ணம் பூர்த்தியாகாது. ஆதலால், இவ்விதமுயற்சியைக் கையாடும் நமது குலாபிமானிகளுக்கு பங்குகள் சேர்ப்பதிலும், எடுப்பதிலும் திரிகரண சுத்தியாய் உழைத்து வருவதில் ஸ்ரீமத் விஸ்வேசுரன் அருள்புரிவாராக.

T. தங்கவேல்
விஸ்வகர்ம சன்மார்க்கசபை
திருநெல்வேலிபாலம்.



## நமது விவாஹச்சடங்கு.

விஸ்வகர்ம சந்ததியார்கள் தற்கால நாகரீகத்தை அனுசரிக்காமலும் பழைய வழக்கங்களைக் கைவிடாமலும் நடப்பதைத்திருத்தும் நிமித்தம் இதை எழுதலாயிற்று. இதை ஒவ்வொருவரும் அவஸ்யம் கவனித்து நடந்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நமக்குள் விவாஹம் ஐந்துநாள் செய்வதாகப் பழக்கம் வைத்துக்கொண்டிருக்கிறோம். அதனால் ஏற்பட்டிருக்கும் தேககஷ்டத்தையும் பொருட்செலவையும் கவனியாமல் பழைய பழக்கத்தைக் கைவிடாமல் கடன்காரராகவும், வியாதிபஸ்தராகவு மாய் விடுகிறோம். கடன்காரனாவதற்கு காரணம் ஐந்துநாள் விவாஹச்செலவுகளேயாகும், வியாதியஸ்தராவதற்கும் இந்த ஐந்துநாட்களில் படுகிற சிரமமே காரணமாகும்.

ஒருநாள் விவாஹத்தை ஒழுங்காகச் செய்துமுடித்தால் செலவும் குறைவாக ஏற்படும்; தேக கஷ்டமும் ஒருநாளோடு ஒழியும். இவ்விதம் செய்வதற்கு ஒத்துக்கொள்ளப் பலர் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் திருநாமங்கள் பின்னர் அச்சிடப்படும்.

### விவாஹம் செய்யும் சடங்குகள்.

1. வதுவரர்களுக்கு மங்கள ஸ்நானம்.
2. அனுக்ஞை.
3. விக்நேஸ்வரர் பூஜை.
4. சங்கற்பம்.
5. அங்குரார்ப்பணம்.
6. ரக்ஷாபந்தனம்.
7. நாந்தி
8. கோத்திரோச்சாரணம்
9. கன்னிகாதானம்.
10. தீக்ஷாவஸ்திரதானம்.
11. அக்கினிப் பிரதிஷ்டை.
12. பாதப்பிரக்ஷாளனம்.
13. மதுபர்க்கம்.
14. மாங்கல்யதாரணம்.
15. முகாந்தம்.
16. பாணிக்கிரஹணம்.
17. சப்தபதிபூஜை.
18. பிரதானஓமம்.
19. பிரதக்ஷணம்.
20. அம்மிமிதித்தல்.
21. லாஜஓமம்.
22. ஜயாதிஓமம்.
23. பிராயச்சித்த ஓமம்.
24. ரக்ஷாபந்தனம்.
25. ஆசீர்வாதம்.
26. சபாபூஜை.
27. பிரவேச ஓமம்.
28. ஸ்தாலீபாகம்.
29. ஔபாசனம்.
30. காந்தர்வபூஜை.
31. சதசு (மஹதாசீர்வசனம்).
32. வசந்தபூஜை.
33. சேஷஓமம்.
34. தாம்பூலஸ்ரவணம்.
35 முளைபாலிகை விசர்ஜனம்.

இவைதவிர விரதங்களை அனுஷ்டிக்க வேண்டிய விதிகளிருக்கின்றன. அவைகளையெல்லாம் அந்தந்த சமயத்தில் மந்திர பூர்வமாக முடித்துக்கொள்ளலாம். பிரம்மசாரி விரதங்களைத் தவறுதலில்லாமல் நடத்திவரும் பிள்ளைகள் அவ்வித ஒழுங்குகளையெல்லாம் தவறாமல் நடத்திக்கொள்ள வேண்டியது கடமையாகும்.

இவைகளெல்லாம் அவரவர்களுக்குரிய சூத்திரப்பிரகாரம் செய்து முடித்துக்கொள்ளவேண்டியது விதியாகும்.

காலை ஆரம்பித்து மேற்சொல்லிய சடங்குகளில் சதசுவரையில் பூர்த்தி செய்துக் கொண்டு பகல்போஜனத்தை முடித்துக் கொண்டு பிற்பகல் மற்ற சடங்குகளையும் முடித்து இரவு ஊர்கோலத்துடன் முடிக்கவேண்டும். மறுநாள் பந்துக்களெல்லாம் அவரவர்கள் வீடுபோய்ச்சேர்ந்து அவரவர்களுடைய தொழில்களை ஆரம்பித்து சொல்நாணயத்தைப்போல் வாங்கிய வேலைகளை முடித்துக்கொடுக்கமுடியும்.

இன்னும் பழையவழக்கத்தை வைத்துக் கொண்டிருப்பதால் வேலை கொடுத்தவர்களுக்கு சொல்நாணயம் தவறிவிடுகிறது. கடன் அதிகரித்து மற்றப் பந்துக்களுக்கும் அவரவர்கள் நாணயம் தவறிவிடுகிறது. நமது வீட்டில் கலியாணமானால் நமது பந்துக்கள் கடன்வாங்கியோ கையிருப்பிலிருந்த பணத்தைக்கொண்டோ செலவு செய்து பத்துநாள் பதினைந்துநாள் வேலை கெடுத்துக் கொள்வதல்லாமல் நமக்கும் பலவிதமான செலவுகள் ஏற்படுகின்றன. அப்படியே அவர்கள்வீட்டில் கலியாணமானால் நாமும் பணத்தைக் கடன்வாங்கியோ கையிருப்பிலெடுத்தோ செலவு செய்வதுந்தவிர நம்முடைய வேலையும் 10, 15 நாள்கெட்டு அவர்கள் வீட்டில் போய் உட்கார்ந்துக்கொண்டிருந்து அவர்களுக்கும் நம்மால் பணச்செலவுகள் ஏற்படுவதுமல்லாமல் அவர்களுடைய வேலைகளும் கெட்டுவிடுகின்றன.

இப்படியே நம் விஸ்வகர்ம ஜாதியார்கள் கெட்டுப்போகிறார்கள். மற்றவர்களைப்போல் ஒருவேளைச் சாப்பாட்டுடன் வேலைகளை முடித்தால் நமது ஜாதியார்கள் கூடியசீக்கிரத்தில் முன்னுக்கு வருவார்கள். நான் இவ்விதம் செய்யத்தயாராகி இருக்கிறேன். இது சத்தியம். என் நண்பர்களில் பலர் இங்ஙனஞ் செய்யத் தயாராயிருக்கின்றார்கள்.

பொருள் அதிகமுள்ளவர்கள் செலவிட நினைக்கும் பொருளை நகையாகவும், சொத்தாகவும் அளிக்கலாம். அதற்கும் மிஞ்சிய பொருளிருக்கும்பக்ஷத்தில் நமது வம்சக் குழந்தைகள் வித்தியாதான நிதிக்கும், வாசிக்கும் நமது ஜாதிச் சிறுவர்கள் அன்னதானக் கைங்கர்ய நிதிக்கும் ஏற்படுத்தினால் புகழும் புண்ணியமுமுண்டாகும். அப்படிச்செய்யாமல் புண்ணியமில்லாத வீணான காரியங்களில் கடன்பட்டு செய்வது அவலமே. இதை நம்மவர்கள் அவஸ்யம் கவனிக்கவேண்டும்.

ஒருநாள் கலியாணம் செய்வது நமது ஜாதியார்களுக்கு புதுமையல்ல. வடதேசத்திலும், தென்தேசத்திலும், மேற்கு தேசத்திலும் இன்னும் அநேக இடங்களில் காலையில் மாங்கல்யதாரணம் மாலையில் கங்கணவிசர்ஜனம் இரவு பட்டணப்பிரவேசம் நடக்கின்றன. இதுபோல் நமது குருஸ்தானங்களிலும், பௌரோகிதர்கள் கிருஹங்களிலும், மேதாவிகள் கிருகங்களிலும் நடக்கின்றது. இந்தப் பழக்கத்தைக்கொண்டே நாலும் இவ்வநுஷ்டானத்தை எல்லோரும் கைப்பற்றவேண்டுமென்று விரும்பலாயினன்.

கொ. கன்னியப்ப ஆச்சாரி.



## சிறுவர்த்தகத் தொழில்முறைகள்.

'சத்தியவசனன்' எழுதியது.

---

### சேர்மான சிலேட் பலகைகள்.

| | |
|---|---|
| சன்னமான ஜல்லித்த வெள்ளை மணல் | 82-அவுன்சு |
| உத்தமமான விளக்குக் கருப்பு (மெழுக்கு) | 8-அவுன்சு |
| கொதிக்கவைத்த என் அல்லது பருத்திக்கொட்டைஎண்ணெய் | 10-அவுன்சு |

இதையெல்லாம் ஒரு மர உரலிலே போட்டு மாவாக்கிக் கலக்கவேண்டும் பிறகு வெந்நீர்ப் பானையில் போட்டு கொதிக்கவைக்கவேண்டும். போதுமானவரையில் கொதிக்கவைத்தபோது நெருப்பிலிருந்துபாத்திரத்தைஎடுத்துவிடவும். கூழ்பாகமுள்ளதை டர்பண்டைன் கொஞ்சம் சேர்த்து நீராக்கவேண்டும். மேலே விவரித்த சேர்மானத்தைச் சேர்ப்பதற்கு முன்னமே பேஸ்டு அட்டைகளை சிறுதுண்டுகளாகத் தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். அவைகள் பரிமாணத்திலும் அளவிலும் வேண்டிய அளவினையுடையனவாக இருத்தல்வேண்டும். டர்பண்டைனைக் கலந்தபிறகு சேர்மானவஸ்து இன்னும் சூடாக இருக்கும்போதே பேஸ்ட்போர்டின்மேல் ஒரு புருசினால் இலேசாய்த் தடவவேண்டும். மூன்று பூச்சுகள் பூசவேண்டும். ஒவ்வொரு பூச்சு ஆனதும் உலர்த்தவேண்டும். டர்பண்டைனில் நனைத்தபஞ்சுத் துண்டினால் அவைகளை மெதுவாக தேய்க்கவேண்டும். இந்தவேலை சரியாக முடிந்ததும் சிறிய பையன்களுக்கும் பெண்களுக்கும் நேர்த்தியான கற்பலகையாகும்; ஞாபகத்திற்காக விஷயங்களை எழுதிவைக்கும் புஸ்தகம் முதலியன ஆகும்.

### கண்ணாடிக்குத் துளை போடுதல்

கண்ணாடிக்குத் துளை போடும்போது எந்த இடத்தில் துளை போடவேண்டுமோ அந்தஇடத்தில்கட்டியான களிமண்ணையாவது அல்லது பேஸ்டையாவதுஒட்டவைத்து அந்தபேஸ்டில் ஒரு துளைசெய்து எவ்வளவு பிரமாண துளை வேண்டுமோ அவ்வளவு கண்ணாடியின் பாகம் அந்த துளையில் இருக்கவேண்டும். இந்தப் பேஸ்டு துவாரத்தில் சிறிது உருக்கிய காரீயத்தை வார்க்கஅப்போதுஅந்தத் துளையிலுள்ள கண்ணாடிபாகம் கீழே விழும்.

### புட்டிக்கு சீல்போடும் அரக்கு.

(1) வெள்ளை தார் 4-பாகம் மஞ்சள் மெழுகு வேலன் பிசின் ஒவ்வொன்றும் 8 பாகம் டர்பண்டைன் 4 பாகம் இவைகளை ஒன்றாய் உருக்கவேண்டும்

(2) வேலன்பிசின் 20 பாகம், மஞ்சள் மெழுகு 4 பாகம், டர்பண்டைன் 4 பாகம் இவைகளை ஒன்றாய் உருக்கவேண்டும். இதற்கு வர்ணம் உண்டாக்கும் முறை.

சிவப்பு வர்ணம் வேண்டுமானால் 4 பாகம் (Red ochre) சேர்க்கவேண்டும்.

பச்சை வர்ணம் உண்டாக்கவேண்டுமானால் (Berlinblue) 2 பாகம், க்ரோமேட் ஆப் ஜிங்கு (Zinc) 2 பாகம் சேர்க்கவேண்டும்.

நீலநிறம் வேண்டுமானால் 4 பாகம் (Alter-marine) சேர்க்கவேண்டும்.

### இரும்பு சிலுவை.

(The Iron cross) இரும்புசிலுவை ஜெர்மனிதேசத்து பட்டாளத்தில் உபயோகப்படும் இரும்பு சிலுவை உருக்கிவார்த்ததல்ல. பாரமான நாணயம் அடிக்கும் யந்திரத்தில் எழுகு அச்சுகளில் அடிக்கப்படுகின்றன. முத்திரிக்கப்பட்டதும் சிலுவைகள் வெள்ளிவேலைக் கம்மியரிடம் கொண்டுபோகப்படுகின்றன. அவ்விடத்தில் பற்றுவைப்பு வேலை நடக்கிறது. ஓர் நேர்த்தியான வெள்ளிவரம்பு உண்டாக்கப்படுகிறது. மின்சார சக்தியினால் வேலை நடக்கும் சுத்தப்படுத்தும். கடைச்சல் பிடிக்கும் வேலை ஆகின்றன. தானாக இயங்கும் மின்சார யந்திரத்தில் சிலுவைகள் சுத்தப்படுத்தப்படுகின்றன.

## நெருப்பு அவிக்கும் சாதனவழி.

அமோனியா பாம்ஸ் காட்டுத்தீயை அவிப்பதற்குச் சாதனமாக இருக்கிறது. அமெரிக்கா ஆரண்யங்களில் இவ்விஷயம் பரிசோதிக்கப்பட்டுவருகிறது. புதரில் நெருப்பு அண்டினால் தீயை அணைக்கிறவர்கள் நெருப்பை அவிப்பதற்குப் போதுமான சமீபத்தில்போவதற்கு அடிக்கடி கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள். அவர்களுக்கு அமோனியா பாம்ஸ் அதிகப் பிரயோஜனமுள்ளதாகக் காணப்படுகிறது. ஒரு பாமினுடைய வெடிப்பால் சுற்றிலும் 15 அடியுள்ள ஒரு வட்டமான நெருப்பை அவித்துவிடும்.

## படமெழுதிய கண்ணாடிகளைச் சுத்தம் செய்தல்.

படம் எழுதிய கண்ணாடியைச் சுத்தம்செய்ய: முதலில் ஒரு மெதுவான பட்டைக்கொண்டாவது அல்லது மஸ்லின் துடைப்பு வஸ்திரத்தைக்கொண்டாவது தூசு நீங்கத் துடைக்கவேண்டும். இரண்டு காலைபோஜன கோப்பைகள் நிறையும்படியான வெந்நீருள்ள தொட்டியில் ஒருடேபில் ஸ்பூன் நிறையும்படியான ஸ்பிரிட் சாராயத்தை வார்த்து இதில் ஒரு கடற்பஞ்சுத்துண்டை நனைத்தெடுத்துப் பிழிந்துவிட்டுப் படக்கண்ணாடி முழுவதையும் துடைக்கவேண்டும். கோடிகளையும் ஓரங்களையும் துடைக்கும்போது சட்டம் நனையும்படி பார்க்கக்கூடாது. எவ்விதமான கறைகளும் படாமற் பார்க்கவேண்டும். பிறகு நேர்த்தியான கைக்குட்டையால் உலரத் துடைக்கவேண்டும். பிறகு ஒரு மெதுவான தோலினால் பளபளப்புண்டாக்கவேண்டும்.

## பனிக்கட்டி சேர்க்காமல் ஜலத்தைக் குளிரச்செய்தல்.

பனிக்கட்டி சேர்க்காமல் நீரைக் குளிரச்செய்வதற்காக ரசாயன பரிசோதக சாஸ்திரி ஒருவரிடமிருந்து ஒரு மெல்லிய பரிசோதக கிளாஸ் குழையை வாங்கிக்கொண்டுவந்து அதில் பாதியளவு அமோனியா நைட்ரேட் உப்பு நிறைத்துக்கொண்டு ஜலம் நிறைய வார்த்து கெட்டியாய்க் கார்க்கு போட்டு உப்பு கரைகிறவரையில் குலுக்கி அந்தக் கண்ணாடிக்குழையின் மேல்பாகத்தை அதிக ஜாக்கிரதையாய் துடைத்து நைட்ரேட் அடையாளக் கறைகள் ஒன்றுமில்லாமல் பார்க்கவேண்டும். இந்தக் குழையை ஒரு நீருள்ள கண்ணாடி ஜாடியில் வைக்கவேண்டும். ஒரு ஸ்பூனில் கலக்குவதுபோல கலக்கவேண்டும். நீர் துரிதமாய் குளிர்ச்சியை யடையும் ரசாயன சாஸ்திரி எவரிடமாகவாவது அமோனியா நைட்ரேட் உப்பு வாங்கிக்கொள்ளலாம்.

## சூட்டின் அளவை நிதானித்தல்.

அவைஅவை உருகும் சூட்டின் அளவு தெரிந்துள்ள சில உலோக உப்புகளால் சூட்டின் அளவை தெரிந்துகொள்ளும் அல்லது 'குறிப்பிக்கும் சுலபமான வழி. அப்படிப்பட்ட உலோக உப்புகளைப் படிப்படியான உஷ்ண அளவைக் காண்பிக்கும்பொருட்டு தயாரித்து வைத்திருக்கிறார்கள். அந்த உப்புகள் 425 முதல் 2,425 டிகிரி பாரின்ஹீட் உஷ்ணநிலைகளைக் காண்பிக்கத்தக்கனவாயிருக்கின்றன. ஒரு உலையில் ஓர் இரும்புக்கம்பி உருக்கப்படுவதாயிருந்தால் அந்த இரும்பின் உஷ்ண நிலையை தெரிந்துகொள்வதற்கு மேல்குறிப்பிட்ட உலோக உப்புகளை அந்த இரும்புத்துண்டின்மேல் வைத்தால் எந்த உப்பு உருகுகிறதோ அதைக்கொண்டு சூட்டின் அதிகரித்த நிலையை நிர்ணயப்படுத்திக்கொள்ளலாம். அதேமாதிரியாக எழுகு உருகும் உஷ்ண நிலையை அடைந்ததாவென்று சில உப்பை அதின்மேல்வைத்து அவை உருகப்பார்த்து நிதானித்துக்கொள்ளலாம். இவ்விதமாக இரும்பையோ எழுகையோ குறிப்பிட்ட உஷ்ண நிலையை அடைய அவைகளைக் காய்ச்சி அந்த உஷ்ண நிலையைக்காட்டும் உப்பு அந்தக் காய்ச்சின உலோகத்தின்மேல் உருகுகிறதா என்று பார்த்து வேண்டியவரையில் இரும்பையும் எழுகையும் காய்த்துக்கொள்ளலாம்.



## பால்ய விவாகப் பரிதாபங்கள்.

அந்தோ! நம் இந்துப் பெண்களின் பரிதாப நிலைமையை என்னென்று கூறுவது? பால்ய விவாகம் என்னும் தீச்செயல் இன்னும் நம்மைவிட்டு அகன்றபாடில்லையே. உலக விவகாரம் இன்னதென்றறியாத பாலப்பருவத்தில் விவாஹம் என்னும் படுகுழியில் சிசுக்களை இழுத்துவிடும் நம்மவர்களின் கூந்தை என்னென்றுரைப்பது! பால்ய விவாகத்தால் மணமகன் மணமகள் ஆகிய இவர்களுடைய தேகங்கள் போதுமான வளர்ச்சியடையாமல் பலஹீனமாயிருப்பதால் இவர்கள் அற்ப ஆயுளுடையவர்களாய் அகால மரணத்துக், குட்படும்படிக்கு ஹேதுவுண்டாகிறது. கல்வியே கடவுளெனக்கொள்ளும் இக்காலத்தில் மணமகன் உயர்தரப்படிக்குப் போகவொட்டாமல் பால்ய விவாகமே அவன் மனதைத் தளர்ச்சியடையச்செய்து, பாசக்கயிறுபோல் கட்டி இழுத்துக்கொள்ளுகிறது. மணமகன், தனதாயுள்வரை ஒத்துழைக்கக்கூடிய மணமகளைத் தெரிந்தெடுப்பதற்குச் சக்தியற்றவனாய் பால்ய பிராயத்திலிருப்பதால், நோக்கங்களைச் சிந்தியாது ஜாதிக்கட்டு என்று சொல்லும் பண்டைக்காலத்து வழக்கங்களையே கையாடிவரும் தாய்தந்தையர்கள், மணமகன் தனதாயுள்வரை தான்வைத்துப் பரிபாலிக்கவேண்டிய பெண்ணை தாங்கள் தேடி, மணமகனை மணத்துக்குக் கட்டுப்படச்செய்து, மனமில்லா மணமுடிக்கிறார்கள். இதனால் மணமகளும் தனக்கேற்ற வரனைத் தேடிக்கொள்ளச் சக்தியற்றவளாய்க் கட்டுறவேண்டியதாகவே யிருக்கிறாள். இப்பொழுது இவர்கள் பூண்டிருக்கும் குடும்ப பரோபகாரமானது சிக்கனமான குடும்பபாரத்தை பின்பு இவர்கள் இருவரும் மனமொத்து இழுக்க இயலாதவராய் 'தவளை தண்ணீருக்கு இழுக்க ஓந்தி வேலிக்கு இழுக்க' என்ற பழமொழிப்படி இருதலைக்கொள்ளி எறும்புபோல் இவர்களிருவரும் சஞ்சலமடைந்து ஆயுளையும் துன்பத்திற்கே அர்ப்பணம் செய்யும்படி நேரிடுகின்றது.

இவர்கள் கதி இப்படியிருக்க, இவர்களுக்கு ஜனிக்கும் குழந்தையோவெனில், இதுதானோ பூவுலகம் இங்கு என்னை ஏன் தள்ளினாய், இங்கு எவ்வாறுய்வேன் முடியாது என்று சொல்லும்பாவனையாக, திடகாத்திரமில்லாது தேகம் குன்றி அற்ப

---

## முகம்பார்க்கும் கண்ணாடிகளைச் சுத்தம் செய்தல்.

முதலில் எல்லா தூசையும் துடைத்து ஒரு தொட்டி சாதாரண தண்ணீரில் சிறிது நெடி உண்டாகும்படியான அமோனியாவைச்சேர்த்து அதில் கடற்பஞ்சையாவது (Chamois) காமய்ஸ் தோலையாவது நனைத்துப் பிழிந்து அந்தக் கண்ணாடி முழுவதையும் ஓரங்களில் மாத்திரம் சாக்கிரதையாய்த் துடைக்கவேண்டும், மூலைகளிலும் அதேமாதிரி சாக்கிரதையாய்த் துடைக்கவேண்டும். ஏனென்றால், சட்டம் ஈரமாகக்கூடாது. கில்டுபோட்ட சட்டமாயிருந்தால் ஈரம் படவே கூடாது. ஒரு மிருதுவான துட்டையால் ஈரத்தைப் போக்கி ஒரு காமாய்ஸ் தோலைக்கொண்டாவது அல்லது பழைய பட்டு கைக்குட்டையைக்கொண்டாவது பளபளப்புண்டாகும்படி துடைக்கவேண்டும். கண்ணாடி சிறிதுநேரம் வரையில் சுத்தமாகாமல் மலினப் பட்டும் கறைப்பட்டுமிருந்தால் உமைமண்ணில் ஸ்பிரிட் சாராயம் வார்த்து பசைசெய்து கண்ணாடியின்மேல் தடவவேண்டும். பினானல் துண்டினால் துடைக்கவேண்டும். உலர்ந்தபிறகு துடைக்கும் துணியால் துடைத்து முன்போலவே சுத்தம் செய்யவேண்டும்.

ஆயுளுடையதாகவு மிருக்கிறது. இப்படி ஜனிக்கும் குழந்தையினால் எமதர்ம ராஜனையே பேட்டிகொண்டழைக்க இவர்களுக்கு அடிக்கடி சமயம் ஏற்படுகிறது. இது நிற்க,

பால்யத்தில் மணமுடித்த மணமகன் மரித்துவிட்டால் சந்ததியற்று, மணக்கோலமெல்லாம் பிணக்கோலம்போல் மணமகனுக்குரிய பெண்ணைத் தனதாயுள் உள்ளமட்டும் உலக இன்பத்தையே யநுபவிக்கவொட்டாது சிறைச்சாலையி லடைத்து வைப்பதுபோல் அவர்களுக்கு நல்லுணவருந்தவும் நல்லுடை தரிக்கவும் ஆபரணம் அணியவுமொட்டாது செய்துவைப்பதோடு இப்பக்கம் காணுதென நினைத்து அவர்களின் தலையை மொட்டை யடித்துவிடுகிறார்கள். அந்தோ இப்பரிதாபத்தை யாரிடம் விளம்புவது? இவர்கள் இனி எதைக்கொண்டு காலந்தள்ளுவது? ருதுமதியாகி மணமுடித்த பெண்ணாயிருக்கும்பக்ஷத்தில் மக்கட்பேறடைந்து அதனைக்கண்டு களித்தே கடைத்தேற ஹேதுவாயிருக்கும். அல்லது விதவா விவாகம் அநுஷ்டானத்திலிருந்தாலும் ஒருவனையாய்க் காலந்தள்ளுவர். அப்படியில்லாதபோது லென்செய்வர் ?

ஆண்களோவென்றால், தாரம் தவறிவிடின் இஷ்டப்பட்டபோதெல்லாம் சிறுபருவமோ அல்லது தள்ளாடும்பருவமோ எப்பருவத்திலும் எத்தனைதடவையும் எத்தனை பெண்களையும் கட்டிக்கொள்ளலாமாம். இவர்களுக்கும் தாரம் தவறிவிட்டால் வேறு தாரம் கட்டாது காவியங்கி தரித்து தலைமொட்டை யடித்துக்கொண்டே யிருக்கவேண்டுமென்று ஒரு வழக்கம் ஏற்படுத்திவிட்டாலென்ன?

## சிவோஹம்பாவனை.

(93-வது பக்கத்தொடர்ச்சி)

'உயிராவணமிருந் துற்றுநோக்கி யுள்ளக்கிழியி னுருவெழுதி, யுயிராவணமிட்டுன் கைத்தந்தா லுணரப்படுவாரோ டொட்டிவாழ்தி' —அப்பர்சுவாமி.

கண்ணானது உயிரால் காட்டப்பட்டு நின்று தன்னையுங் காணாது உயிரையுங் காணாது அதுபோல முதல்வன் மறைந்துநின்று காட்ட உயிர் தன்னையுங்காணாது முதல்வனையுங்காணாது. தன்னிலேயே முதல்வனைக் காணப் பயின்றால் தன்னையுங்கண்டு முதல்வனையுங் காணும்.

---

பெண்களும் நம்மைப்போலதானே பத்துமாதங் கர்ப்பாசயத்திலிருந்து பிறந்தவர்கள். கடவுள் சிருஷ்டியில் ஆண்பெண் என்கிற பேதந்தவிர இன்ப மநுபவித்தலில் வேறு எவ்வித பேதமும் உண்டாக்கியிருப்பதாகக் காணப்படவில்லையே. ஒரு விவரமுமறியாத பாலப்பருவத்தில் மணமுடித்து வைத்துவிட்டு மணமகன் மரித்துவிட்டால் பெண்ணின் தலைவிதியென்று கூறுவது என்ன அறியாமை. இப்புதுமை வேறெங்கேனும் இருப்பதாகக் காணப்படவில்லையே! இப்படிச் செய்வதனாலன்றோ நம் தேசத்தில் பால்ய விதவைகளின் கூட்டம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. கணக்கற்ற பால்ய விதவைகள் தங்களின் வாழ்வு குலைந்திருப்பதைப்பற்றி ஓயாது வருந்தி மனதுருகிக் கண்ணீரைத் தாரை தாரையாக உகுத்து அழுதுகொண்டிருந்தலே நம் தேசம் முன்னடையாதிருப்பதற்கு முக்கிய காரணமெனச் சொல்லலாம்.

முத்துச்சங்கரன்.



'தன்னமொ டில்லமுடையார் கலந்திடில்
வெள்ளவெளி யாமென் றுந்தீபற'

என்றற் றொடக்கத்து வாக்கியங்களும் இதைக் குறிப்பன.

'த்யக்த்வா விர்த்தி மரீசிகாம்'

என்பது மேற்சூத்திரத்தின் மற்றப்பாகம் இதனை ஸ்ரீ மெய்கண்ட சிவாசாரியர் தமது வார்த்திகவுரையால் விரித்திருப்பதை உணரவேண்டியது.

'கண்டதையன் றன்றென விட்டுக் கண்டசத்யா, யண்டனை யான்மாவி லாய்ந்துணரப்— பண்டனைந்த, வூனத்தைத் தான்விடுமா றுத்தமனி னெண்கருட, சானத்திற் றீர்விடம் போற்றான்'—சிவஞானபோதம்.

கண்டனவ யன்றன்றென விடுத்தல் பின்வருவனவற்றால் விளங்கக் கிடப்பது.

'மனோபுத்ய ஹங்கார சித்தானி நாஹம்
நச்சுரோத்ர ஜிஹ்வே ந சகிராண நேத்ரே
சாவ்யோ மபூமிர்ந தேஜோ நவாயு:
சிதாநந்தரூப: சிவோஹம் சிவோஹம்'—சங்கராச்சாரியர் நிர்வாண ஷட்கம்.

இதுமுதலிய 6 சுலோகங்களின் மொழிபெயர்ப்பு:—

மனமல்லேன் புத்தியல்லேன் சித்தமல்லேன்
மற்றொருகங் காரமல்லேன் மயக்குகின்ற
புலனல்லேன் பூதமல்லேன் பிராணனல்லேன்
பொருந்து பஞ்சவாயுவல்லேன் சப்ததாது

கணபஞ்சகோச கன்மேந் திரியமல்லேன்
கடுமோக மதமாச்சர்ய லோபமல்லேன்
நலமான நாற்பொரு ளோம்பாபபுண்ய
நானல்லேன் சிதானந்த சிவமேயானே

சுகதுக்க மந்த்ரமொடு தீர்த்தமல்லேன்
சொல்லியதோர் வேதமொடு யாகமல்லேன்
தகவான வுணவுண்போ னுண்பதுவு மல்லேன்
தரியாத மரணபயஞ் சாதிபேதம்

அகலாத அன்னைபிதாப் பந்துஜன்ம
மரியவொரு மித்ரனொடு குருவுஞ்சிஷன்
பகருருவ விகற்பமொடு வீடுபந்த
பாசமலேன் சிதானந்த சிவமேயானே.

இனி சூத்திரத்தின் கடைப்பாகம் சிவோஹம்பாவனையினால் ஒரு நிலைப்பட்ட உள்ளம் பழைய வாசனையால் பிரபஞ்சத்தை மீட்டுஞ்சாராது நிற்கும்பொருட்டுப் பஞ்சாக்ஷர ஜெபம் முறைப்படி செய்யவேண்டுமென்றது. அண்டத்திலுள்ளது பிண்டத்திலுமுள்ளது. ஆகையால் இருதய கமலத்தில் சிவத்தைப் பூசிக்கத் தத்துவமசிமுறையாகப் பஞ்சாட்சரத்தை வைத்து - கமலமெனில் நாளம் எது இதழ்கள் எவை கேசரம் எது பொருட்டு எது வித்துக்கள் எவை என்ற வினாக்கள் நிகழ்வனவாகையால் அவைக்குத்தரம் வருமாறு:—

நாளம் உந்தியிலிருந்து எட்டுவிரற்கடை நீளமுள்ளது. அந்த நாளத்திற் பஞ்சபூதங்களும் கன்மேந்திரிய மைந்தும் ஞானேந்திரியமைந்தும் தன்மாத்திரையைந்தும் மனம் புத்தி சித்தம் அகங்காரம் ஆகிய அந்தக்கரணம் நான்குமாகிய 24 தத்துவங்களும் சூக்குமமாயுள்ளன. அக்கமலத்தின் எட்டிதழ்களாவன:—வித்யாகலையேழும் சுத்தவித்தை ஒன்றும் அவ்விதழ்களுக்கு அயற்கணுள்ள கேசரத்தில் (அல்லி) ஈசுர தத்துவமுஞ் சதாசிவ தத்துவமும். பொகுட்டில் சத்திதத்துவமும் பொகுட்டின் கண்ணே பொருந்திய 51 பீஜங்களாகிய அக்ஷரங்கள் சிவதத்துவமும் ஆகிய இம்முப்பத்தாறு தத்துவங்களுக்கும் மேல் சிவமுள்ளதென மந்திரத்துடன் தத்துவக்கூட்டங்களை நீக்கிச் சிவத்தைப்பூசிக்கவேண்டியது.

'ஆறாறையுநீத் ததன்மேனிலையைப் பேறாவடியேன் பெறுமாறுளதோ' என்பது கந்தரநுபூதி.

'லப்த்வா சிவபதச் சயாம்' என்ற பாகத்தை ஈண்டு விரிக்கிற் பெருகுமென விடுத்தாம்.

### இருதய கமலம்.

எமது சாஸ்திரங்களில் இருதயகமலம் எனக்கூறியிருப்பதன் காரணமறியும்படி சிறிது சஸ்திரத்தில் ஐரோப்பாவிற் றனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாத ஒரு பண்டிதர் Encyclopaedia என்ற கிரந்தத்தில் எழுதியிருக்கிறார். இருதயத்தை அவர் விபரித்திருப்பதை ஈண்டு அன்பர்களுக்கு அறிவிக்கிறேன். அதாவது பொருட்டை Auricle என்றும் அதன்மேல் வெளியை Ventricle என்றும் கேசரத்தைச் சிப்புவடிவாயிருக்கிறதென்றும் நாளத்தை aotia என்றும் விபரித்திருக்கிறது. விசேஷமாய்க் கேசரத்தைச் சிப்புப்போலிருக்கிற தென்பதைப் பார்க்க மிக நூதனமாகவிருக்கிறது. என்னை? நமது மேதாவிகள் தாமரைமலரின் கேசரம்போலிருக்குமென்றதை அநாகரிக ஐரோப்பியசாஸ்திரி சிப்புப்போலிருப்பதென்று சொல்லியிருக்கிறார். எமது ஆன்றோர்க்கு காதலாகமலம் தெரிந்த இந்த இரகசியங்களை ஐரோப்பியர் அபோற்றியார். அக்கேசரத்தில் ஈசுரதத்துவம் சதாசிவதத்துவம் உள என்றும் மற்றைப்பாகங்களில்மற்றைத் தத்துவங்கள் உள என்றும் எமதுமேதாவிகள் அறிந்தார்கள்.

### யாம் செய்யவேண்டியது.

பிணியாளி பிணியைத் தீர்க்க முயலானாயின் அவனுக்கு நாசமுண்டாவதுடன் மற்றையோர் அவனை மூடன் அல்லது பித்தன் என்பார்களன்றோ? ஆகையால், யாம் எமது சத்துருக்களாகிய புலன் மனம் அகங்காரம் முதலியவற்றை அடக்கிச் சித்தத்தை அடைய விரைந்து முயலவேண்டும்.

'தெய்வத்தா லாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.
செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்க லாதார்'

இதற்கும் நமக்கும் வெகுதூரம் என்று பின்போட்டு வைப்பது சரியன்று.

'மகன்மனம் பின்யோரு செய்வமெனின் அன்றோன், மகன்மனமும் மார்குர் தடை'

'அன்றறிவா மென்னு தறஞ்செய்க'
அவ்வாறு செய்யாதிருத்தல் குற்றமென ஆன்றோர் கூறினர்.

'வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட், டாழ்கின்றா யாழாமே காப்பானை யேத்தாதே, சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும், வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே'—திருவாசகம்.

'இப்பிறவி யென்னுமோ ரிருட்கடலுள் மூழ்கியே யானென்னு மகரவாய்ப்பட்டு'—தாயுமானவர்.

'தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றெல்லாரு, மவஞ்செய்வா ராசையுட் பட்டு'—குறள்.

'தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ், சந்தையிற் கூட்டமிதிலோ'—தாயுமானவர்.

'தந்தையார் தாயார் உடன்பிறந்தார் தாரமார் புத்திரரார் தாந்தாமாரே, வந்தவா றெங்ஙனே போமாறேதோ'—அப்பர் சுவாமிகள்.

'அத்தமும்வாழ்வு மகத்துமட்டே'—திருவெண்காடர்.

'மனையாளும் மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாயின்மட்டே'—திருவெண்காடர்.

'மன்னணி விருவிளைக் குடலாய் வானிரயத் தாயர்க்குடலாய்'—கோயிற் புராணம்.

---



### நமது வாசகர்கள்,

---

#### திருச்சி கான்பரன்சும் திருச்சி R-P. கோவிந்தசாமி ஆச்சாரியரும்.

விஸ்வகர்மன் சென்ற நவம்பர் மாதச் சஞ்சிகையில் திருச்சி R. P. கோவிந்தசாமி ஆச்சாரி என்பவரால் எழுதப்பட்ட "கான்பரன்ஸ்—சுயஆட்சி" என்னும் மகுடம்பூண்ட வியாசமானது தற்கண்டனஞ் செய்து நிற்றலால் அதற்கு விடைகூறல் தக்கதன்று என விடுத்த நாம் பொதுநலப்பிரியன் தைமாதச் சஞ்சிகையில் அவரது வியாசத்தைச் சான்றாய்க் கொள்வதால் விடைகூறல் ஆவசியமாகக் கண்டு இதைக் கூறலானோம். திருச்சிக் கான்பரன்ஸைப் பற்றி 'இன்னின்னார்' இன்னின்னவற்றை பேசுவரென முன்னதாக அறிந்துகொள்ள முடியவில்லையென்றும் 'அதைப்பற்றி யாதொரு பிரசுரமுங்கிடையாது' என்றார். அப்படியே முன்னரே யாவர்க்கு மறிவிப்பது கடமை யென்னும் ரூல் உண்டோ? இருந்தால் அந்த ரூலை ஏன் ஆதாரமாக எடுத்துக்காட்டவில்லை.

'என்னையும் ஒரு முக்கியஸ்தனாக இருக்கும்படி கோரினர்' என்றார். அப்படிக் கோரினோர் செய்தது பிழையாயிருந்தால் யான் முக்கியஸ்தனாயிருக்கத் தகுதியற்றவனென்று அத்தானத்தை ஏற்றுக்கொள்ளாமல் விட்டதென்ன? "விபரந் தெரியும்படி கேட்டால் பதில் கிடைக்கிறதில்லை" என்றார். உடனே அறியாதோர் முக்கியஸ்தனாக நியமித்த நியமனத்தை ஏன் ரிஸைன் பண்ணவில்லை? "விஸ்வகர்மர் சீர்பெறத் தீர்மானங்கள் வெளிவருமென்று ஆவலுடன் பார்த்தேன்" என்றார். ஏன் இவர் உபசாரணைக் கமிட்டியில் முக்கியஸ்தனாய் நியமிக்கப்பட்டும் ஒரு சிறந்த தீர்மானத்தைக் கான்பரன்ஸ் முன்னிலையில் கொண்டுவரவில்லை? 'பாமர ஜனங்கள் குதூகலிக்கும் ஒரு கொண்டாட்டக் கூட்டமாகவே யிருந்த"தென்றார். இவரும் அப்பாமர ஜனங்களுள் ஒருவராய்க்குதூகலித்திருந்ததல்லாது பிரயோஜனமான காரியம் ஏன் செய்யவில்லை?

பிரம்மஸ்ரீ முக்கண்ணாச்சாரியாரைத் தம்மைப் பெருமைப் படுத்திக்கொள்ள இதுதான் சமயமென்று திரிகிறார் என்றார். மஹா ஜனங்கள் இக்கோவிந்தசாமி ஆச்சாரியாருக்குப் பெருமையைக் கொடாமல் முக்கண்ணாச்சாரியருக்குப் பெருமையைக் கொடுத்தது மேற்படியாருக்கு அழுக்காறை உண்டாக்கியது நூதனமல்ல. முக்கண்ணாச்சாரியார் முதற்கான்பரன்ஸில் பிரசிடெண்டாக விருந்ததிலும் அதன்முன் முனிசிபல் கமிஷனராக இருந்ததிலும் அதன்முன் காங்கிரெஸ் டெலிகேட்டாகப்போய் மேன்மைபெற்றதிலும் தஞ்சையில் 2ம் கான்பரன்ஸ் கூடியபோதிலும் பார்க்க இத்திருச்சிக் கான்பரன்ஸ் ஒன்றிலேதான் இதுதான் சமயமென்றிருந்தாரா? இதைப் போலிக்கூட்டம் என்றார். அப்படி அவர் அபிப்பிராயங்கொண்டது அவர் இயல்புக்கும் ஆற்றலுக்குந்தக்கதேயாம். அதனை ஓர் கதையினால் விளக்குவாம்.

ஒருசாது தெருவோரத்தில் சமாதி நிஷ்டை கூடியிருந்தனர். அவரைக்கண்ணுற்ற வெறியன் அவர் தன்னிலும் அதிகமாய்க் கள்ளருந்திவிட்டனர் என்று அபிப்பிராயங்கொண்டான். அவரைக்கண்ட திருடன் தன்னிலும் அதிகநேரம் தூக்கம் விழித்திருந்து களவு செய்தனனென்று அபிப்பிராயங்கொண்டான். கடைசியில் அம்மார்க்கனைக் கண்ணுற்ற ஏதோ ஒருவர் சாது சமாதி நிஷ்டையிலிருப்பதை உண்மையாக உணர்ந்து உடனே சமீபத்திற்போய் கால்வருடி உபசாரணை செய்துகொண்டிருந்தார் என்க.

அறிஞர் அறிவுயிலென்று மதனை
வெறிஞர் வெறியென்னு வார்.

போலி ஞானிக்குப் போலிக்கூட்டமாயும் உண்மை ஞானிக்கு உண்மைக்கூட்டமாயுந் தோற்றுவது சகஜமே.

கோவிந்தசாமி ஆச்சாரியின் உள்ளத்தெழுந்த தாழ்வுணர்ச்சிபோன்ற நினைவுகளே குலத்துக்குக் கேடு விளைவிப்பதாகும். ஆகையால், அன்பார்ந்த விஸ்வகர்ம சகோதரர்களே! அவ்வித நினைவு உங்கள் மனதில் உதியாமல் யாவரும் எஞ்ஞான்றும் காவற் பண்ணிக்கொள்ளுங்களென்று விஸ்வேஸ்வரப் பெருமானது திருவருளை முன்னிட்டுப் பிரார்த்திக்கின்றேன்.

கண்டோன்.

## நம்மவர்களின் நிலைமை.

விஸ்வகர்ம ஜாதியில் ஆண்மக்களாயுள்ள சிறுவர்களையே வாசிக்கவிடுகிற பழக்கமில்லை. சிலர்கள்மட்டிலும் தங்கள் புத்திரர்களை வாசிக்கவிட்டால் மற்றவர்கள்பிள்ளைகளுக்கு வயதாய்விட்டது இன்னும்வேலையில் விடாமல்பையன்களைவீணாகக்கெடுத்துவிடுகிறீர்களேயென்றுசொல்லிக்கெடுத்துவிடுகிறார்கள். இதிலும்பெண்குழந்தைகளை வாசிக்கவிட்டிருந்தால்பெண்களாயுள்ளவர்கள்; வீட்டு சமுசாரத்தில் பழகவிடாமல் பெண்களைக் கெடுத்துவிடுகிறீர்கள் என்பதாக தொந்தரவு செய்வதுடன் ஆண்மக்களாயுள்ள வீரலிங்கங்களுங்கூட பெண்களுக்கு படிப்பு எதற்காக பாஸ்பண்ணிவிட்டு எங்குபோய் உத்தியோகம் செய்யப் போகிறாளென்றும் பேசுகிறார்கள், சாதாரணமாகியபடிப்புக்கே இவ்விதமிருந்தால் மேலாகிய படிப்புக்கு இவர்கள் எங்கே விடப்போகிறார்கள்? வாசிக்கவிடுகிறவர்களும் எப்படி விடப்போகிறார்களென்பது எமக்குத் தெரியவில்லை.

விஸ்வகர்மாக்கள் வீட்டில் அனேகமாகபெண்கள் படித்திருந்தால் அப்பெண்களை வந்து கட்டிக்கொள்ளகேட்பது கஷ்டமாக யிருக்கிறது. அதன் காரணம் படித்தபெண் சமுசாரத்திற்கு உதவமாட்டாள் அவனுக்கு வேலைசெய்வதற்கு நீர் ஆள்வேண்டும் என்பதாக சொல்லுகிறார்கள் இது பிரத்யக்ஷமாக அநுபவிக்கும் அநுபவம்.

பிள்ளை வாசித்திருந்தாலோ அவனுக்கும் பெண் கிடைப்பது கஷ்டமாக யிருக்கிறது. அதன் காரணம் பெண்களை வைத்துக்கொண்டிருப்பவர்கள் பிள்ளைக்கு வேலை தெரியாது என்ன சம்பாதிப்பான் என்பதாக சொல்கிறார்கள் இதுவும் இப்பொழுதுள்ள அநுபவம்.

பெண் வீட்டுக்காரர்களும் வாசித்திருந்து பிள்ளை வீட்டுக்காரர்களும் வாசித்தவர்களாகயிருந்தால் இவ்விததொந்தரவு கிடையாது. அப்படியே வாசித்தவர்கள் ஒரே பந்துத்துவத்தில் கிடைப்பது கஷ்டம் அதனால் பந்துக்களை விட்டு அன்னியமாக போகவேண்டியதாயிருக்கிறது அப்போது பந்துக்களுக்கு விரோதம் ஏற்படுகின்றது கக்ஷி பிரதிகக்ஷி ஏற்படுகின்றது. இவரென்ன வாசித்து விட்டு உத்தியோகம் செய்துவிட்டால் இவனிஷ்டப்படி போகலாமா வென்பதாக பேசுகிறார்கள். அதன் காரணம் யாவரும் படிக்காத குறையே யாகும்.

இவ்வித காரியங்களுக்காகவே நம்மவர்களைத் திருத்தவேண்டி மெனகிற எண்ணங்கொண்டு அச்சுக்கூடத்தை ஸ்தாபித்து அதில் பத்திரிகைகளையும், புஸ்தகங்களையும் அச்சிட்டு வருகிறோம். அது சில விஸ்வகர்மாக்களுக்கு மனம் பொறாமல் இவன் அச்சுக்கூடத்தை எப்பொழுது ஒழிப்பான் இவ்வித சீர்திருத்த பத்திரிகைகள் எப்பொழுது வெளிவாராதிருக்குமென்று வாய்க்கு வந்தபடி பேசுகிறார்கள்.

இதுதவிர, நம்மவர்களின் தேவஸ்தான விஷயமாகவேனும், கூட்டவிஷயமாகவேனும், காக்ஷிரிய சுதந்தரவிஷயமாகவேனும், ஏதேனும் செகிந்துக்கொண்டு பொது நன்மைக்காக சொந்தத்தொகைச்செலவிட்டு பத்திரிகைகளை அச்சிட்டு சீர்திருத்தமடையுமாறு வெளிப்படுத்தினாலதற்கும்தங்கள் நம்கள் இஷ்டம்போல்நடக்கக்கூடிய தாக்குண வஸ்தர்கள் நடக்கைகளைத்தடுக்கும் இவர் இந்த அச்சுக்கூடத்தை ஒழித்து விட்டால் இவ்வித கண்டன கோஷைகள் வெளிவராது நம் இஷ்டம் போல் நடக்கலாம். இது எப்பொழுது ஒழியுமோ தெரியவில்லையே. இது நர் பெருந்தடையா யிருக்கிறதே. எதைகண்டாலும் உடனே அச்சிட்டு வெளிப்படுத்திவிடுகிறானே என்பதாகச் சொல்கிறார்கள். இப்பேர்ப்பட்ட மவுடீகமான நம் குலத்தவர்கள்முன் என்ன நன்மைசெய்ய முன்வந்தாலென்னபயன்படும்? பன்றிக்குத்தவிடு வைப்பதும் தெரிகிறதில்லை கழுத்தை அறுப்பதும் தெரிகிறதில்லை, வெறுமனே கூச்சலிடுவது என்பதாகச் சொல்வது பழமொழி. அதுபோல் மேற்சொல்லியவர்கள் வீண்வம்பு பேசுகிறார்கள்.

இவ்விதமிருப்பதாலும் நாம் தேககஷ்டத்தைப் பாராமல் உழைத்தும் நம் கைப்பொருளைச் செலவிட்டுப்பாடுபட்டும் நம்முடைய முயற்சிகளெல்லாம் விழலுக்கிறைத்த நீராகப்போய்விடுகிறபடியால் இனி இச்சாதிக்குப்பாடுபட முன்வரக்கூடாதென்று மனம் முறிந்து வெறுப்பு உண்டாகிறபடியால் கூடியசீக்கிரம் குலாபிமானத்தை ஒழிக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறேன்- இச்சாதிக்கு உழைப்பதைவிட வேறு எச்சாதியாருக்காகவேனும் இவ்விதபாடுகள் பட்டால் நமக்குப்புண்ணியமேற்படும். வீணே ஜாதிஜாதி என்று இந்த ஜாதிக்குப் பாடுபடுவதால் யாதொருபயனும் சித்திக்காதென்பது எமது கருத்து.

கொ. கன்னியப்ப ஆச்சாரி.



# ஆரோக்கியபோதம்.

வாந்திபேதியைத் தடுப்பதற்கும்,
சொஸ்தம் செய்வதற்கும்
அநுசரிக்கவேண்டிய விதிகள்.

1. மிதமாயும், காலாகாலத்திலும், வழக்கம்போல் ஆகாரத்தைப் புசிக்கலாம். நன்றாய்ப் பழுக்காத அல்லது அழுகிப்போன பழங்களை அல்லது காய்கறிகள் முதலியவைகளை உண்ணக்கூடாது நன்றாய்ப் பாகம் செய்யப்பட்ட காய்கறிகள், கனிந்த பழங்கள் இவைகளை யுண்ணலாம். கெட்டுப்போன மாமிசம், மீன், ஆறிப்போன அன்னம் இவைகளை உண்ணவேகூடாது. குழந்தைகளுக்கு புளித்துக் கெட்டுப் போகாத நல்லபாலை வாங்கிக் கொடுக்கவேண்டும். பால்காரன் பாலில் சேர்க்கும் தண்ணீர் மிகவும் அசுத்தமானது. ஆதலால் பாலை எப்பொழுதும் காய்ச்சியே உபயோகப்படுத்தவேண்டியது.

2 கக்கூஸ், சாக்கடை, குப்பைத்தொட்டி முதலியவைகளிலிருந்து உண்டாகும் துர்நாற்றம் தேகத்துக்கு மிகவும் கெடுதியானது. ஆகலால் மேற்சொன்ன இடங்களை பினாயில் (Phenyle) முதலிய மருந்துகளைத்தண்ணீரில் கரைத்து தினம் 2 அல்லது 3 தடவை தெளித்து சுத்தமாய் வைக்கவேண்டும். காய்ந்த குப்பைகளை வீட்டில் வைக்காமல் குப்பைத்தொட்டியில் கொட்டவாவது தீவைத்துக் கொளுத்தவாவது வேண்டும். நீர் சம்பந்தமான குப்பைகளைச் சாக்கடையில் கொட்டி நன்றாய்த் தண்ணீர் விட்டுக் கழுவவேண்டும்.

3. வாந்திபேதியுள்ள காலங்களில் தண்ணீரை அப்படியே உபயோகிப்பது மிகவும் கெடுதியானதால், நன்றாய் வடிகட்டி கொதிக்கவைத்து உபயோகப்படுத்தவேண்டும்.

4. இப்படி வாந்திபேதியுள்ள காலங்களில் ஒவ்வொருவரும் டாக்டர்களால் கொடுக்கப்பட்டாலொழிய வேறு எவ்விதத்திலும் சுகபேதிக்கு மருந்து சாப்பிடவே கூடாது.

5. குளிரைத் தடுப்பதற்கும், வியர்வையைத் தடுக்காமலிருப்பதற்கும், வயிற்றில்இழுப்பைத் தடுப்பதற்கும் கம்பளிச்சட்டை, கம்பளி பெல்ட்டு முதலியவைகளை உபயோகிக்கவேண்டும்.

6. வசிக்கும் வீடு, படுக்கும் அறை முதலிய இடங்களில் நல்ல காற்று பரவும்படியாய் ஜன்னல்களையும், கதவுகளையும் நன்றாய்த்திறந்து வைக்கவேண்டும்.

7. மதுபானம் செய்தல் வாந்திபேதியை உண்டுபண்ணுமாதலால், உண்பதிலும் மதுபானம் செய்வதிலும் மிதமாயிருத்தல் நல்லது.

8. வாந்திபேதியைப்பற்றி பயப்படாமலும், அதையே மனதில் நினைத்துக்கொள்ளாமலும் இருக்கவேண்டும். ஏனென்றால், பயம் மனோவியாகூலம் முதலியவைகள் தேகத்தைப் பலஹீனப்படுத்தி வாந்திபேதி வருவதற்கு ஹேதுவாகின்றன.

9. வாந்திபேதிக்குமுன் காணும் அஜீர்ணம் எளிதில் சௌஸ்தம் செய்யக்கூடியது. இந்த அஜீர்ணத்துக்கும் சாதாரணமாய் உண்டாகும் அஜீர்ணத்துக்குமுள்ள வித்தியாஸத்தைக் கண்டுபிடிப்பது அரிது. ஆதலால், அஜீர்ணம் கண்டவுடனே ஒரு டாக்டரிடத்தில் தெரிவித்து வைத்தியம் செய்துகொள்ளவேண்டியது மெத்த அவசியம். அவைகள் இரண்டும் வெவ்வேறு வியாதிகளாயிருந்தாலும் ஒன்று மற்றொன்றுக்கு காரணபூதமாயிருக்கிறது.

10. ஒவ்வொரு வீட்டிலும் ஒருபுட்டி குளோரோடைன் (Chlorodyne) அல்லது காம்போரோடைன் (Camborodyne) இருக்கவேண்டும். வாந்திபேதி கண்டவுடன் பெரியவர்களுக்கு ஒரு அவுன்ஸ் தண்ணீரில் 40 முதல் 60 துளி வரையிலும், குழந்தைகளுக்கு ஒரு வருஷத்துக்கு ஒரு துளி வீதமாக வயதுக்குத் தக்கபடி போட்டு உடனே உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். முதலில் கொடுத்த மருந்தை வாந்தி செய்துவிட்டால் மறுபடியும் ஒருதடவை கொடுப்பதுடன் வயிற்றுக்கும் கடுகு அரைத்து பத்து போடவேண்டும். வயிறு, கால், கைகளில் குரக்குவலி வாங்குதலும் மேன்மேலும் தண்ணீர்போல வாந்தியும் உண்டாகுமானால் அதுதான் உண்மையான வாந்திபேதி. மிக்க கடுமையான நிலைமைக்கு வந்திருக்கிறதென்று அறிந்துகொள்ளலாம். இப்போது மேற்சொன்ன மருந்துகளைக் கொடுக்கக்கூடாது. வாந்தியை, பனிக்கட்டியை நாக்கில்வைத்து உறிஞ்சச்செய்தாவது அல்லது பால், சோடா, பனிக்கட்டி மூன்றையும் கலந்து குடிக்கச்செய்தாவது நிறுத்தவேண்டும். கால், வயிறு இவைகளில் குரக்குவலி உண்டானால் சுக்குப்பொடி அல்லது கர்ப்பூரத்தைலம் (Turpentine) தேய்த்தால் நின்றுவிடும். கால் கைகளில் சீதளம் தட்டாமலிருப்பதற்கு வெந்நீர் நிரம்பிய புட்டிகளைக்கொண்டு ஒத்தடம் கொடுக்கவேண்டும்.

11. வாந்திபேதி முதல்முதல் கண்டவுடனே நோயாளியை படுக்கையிலிருக்கச் செய்யவேண்டும். கெட்டியான ஆகாரம் ஒன்றும் கொடுக்கக்கூடாது. இந்த விதிகளை அநுசரிப்பதினால் வைத்தியர் தேவையில்லையென்று நினைக்கக்கூடாது. இவைகளெல்லாம் டாக்டர் வருவதற்குமுன் செய்யவேண்டியவைகள்.

12. உங்களுடைய பந்துக்களுக்காவது, சிநேகிதர்களுக்காவது, அல்லது வேலைக்காரர்களுக்காவது வாந்திபேதி கண்டு அவர்களுக்கு வீட்டிலேயே சரியானபடி வைத்தியம்செய்ய சௌகரியப்படாவிட்டால் உடனே அவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடவேண்டும். அங்கே அவர்களுக்கு நல்லமருந்து கொடுத்துக்காப்பாற்றுவார்கள். மேலும், அப்படிச் செய்வதினால் உங்களுடைய குடும்பத்தில் வேறு யாருக்காவது வாந்திபேதி வராமல் தடுப்பதுடன் கண்டவர்கள் பிழைப்பதற்கு ஹேது உண்டாகின்றது. ஏழைஜனங்கள் வாந்திபேதி கண்டவர்களுக்கு நல்ல வைத்தியம் செய்வது மிகவும் கஷ்டம்.

13. வாந்திபேதியின் விஷமானது வாந்தியிலும் பேதியிலும் இருப்பதால் அவைகளை உடனே அப்புறப்படுத்துவதுடன் அவைகளை நன்றாய்ச் சுத்திகரிக்கவேண்டும். [illegible] வாந்திபேதிகளை பினாயில் போடப்பட்ட ஒரு பாத்திரத்துடன் ஜனப் போக்குவரத்தில்லாத ஒரு இடத்தில் தோட்டி வரும்வரையில் வைத்திருக்கவேண்டும்.

14. விஷசம்பந்தப்பட்ட துணிகள், படுக்கை, பாத்திரங்கள் இவைகளை பினாயில் முதலிய மருந்து சேர்க்கப்பட்ட தண்ணீரைக்கொண்டு நன்றாய்க் கழுவிச் சுத்தம் செய்யவேண்டும். இது உங்கள் வார்டு சானிடரி இன்ஸ்பெக்டரால் செய்யப்படும். அவர் செய்யவரும்போது தடுக்காமல் வாந்திபேதி கண்டவுடன் அவருக்குத் தெரியப்படுத்தி துணி, பாத்திரங்கள், படுக்கை முதலியவைகளைச் சுத்திகரிப்பதில் உங்களைவிட அவர்களுக்கு நன்றாய்த் தெரியுமாதலால் அவரைக்கொண்டு செய்யச்சொல்வதுடன் வாந்திபேதி பரவுதலையும் தடுக்கவேண்டும். துணிகளைத் தீயில்போட்டு கொளுத்துதல் மிகவும் உத்தமம். வாந்திபேதிகண்ட வீடுகளெல்லாம் அது முடிந்தவுடன் கந்தகப் புகை போடுவதுடன் பினாயில் ஜலத்தைத் தெளித்து சுத்தம் செய்யவேண்டும்.

15. வாந்திபேதிக்காரர்களிடத்தில் நெருங்கி உதவி புரிந்துகொண்டிருந்த ஒவ்வொருவரும் தாகத்துக்குச் சாப்பிடும் முன்னும் போஜனம் செய்யுமுன்னும் முகம், கை, கால்களை நன்றாய்க் கழுவிக்கொண்டு சாப்பிடவேண்டும். வியாதிக்காரர் இருந்த அறையில் சாப்பிடவேகூடாது.

டாக்டர் யு. ராமராவ்,
323, தம்புசெட்டி தெரு,
சென்னப்பட்டணம்

ஸ்ரீமத் விராட் விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்—தொழில்.

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள
சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதப் பத்திரிகை.
301, தங்கசாலை வீதி, சென்னை.

சம்புடம்-5] காளயுக்தி௵ ஆவணி௴ 1918௵ ஆகஸ்டு௴ [சஞ்-8.

## ஒளிவளர்விளக்கு.

### நிருகப்பிரவேசவுண்மை.

திருநெல்வேலி ஸ்ரீ வ. வயிரமுத்து ஸ்தபதியவர்களால் சென்றமாதம் எழுதப்பட்டு, யாழ்ப்பாணம் ஆனைப்பந்தித்தெரு ஸ்ரீ கா. விஸ்வலிங்கம் ஆச்சாரியாரவர்களால் வண்ணார்பண்ணை ஸ்ரீ சண்முகநாத யந்திரசாலையிலச்சிடப்பட்டு இலவசமாய்ப் பலருக்கும் விநியோகிக்கப்படும் "நிருகப்பிரவேசவுண்மை" யென்னும் நூலின் பிரதியொன்று எமக்குக் கிடைத்திருக்கிறது. இதைப்பற்றிய விவரங்களை மறுசஞ்சிகையில் வெளியிடுவோம். இது, இந்து சாதனப்பத்திரிகையில் வெளிவந்த 'பிராமணக்குருமாரும் தபதிகளும்' என்ற கடிதத்திற் கண்ட அபிப்பிராயங்களுக்குக் கண்டனமாக எழுதப்பட்டிருக்கிறது.

***

### தற்போது செய்யத்தக்கது

வெளியூர்களிலிருந்து சுஜாதிச்சமாசாரங்கள் நமது பத்திரிகைக்கு மாதந்தோறுமெழுதியனுப்பத் தக்க நிருபர்கள் வேண்டுமென்று யாமெழுதியிருந்ததுகண்ட நண்பரொருவர் —— "எழுதக்கூடியதான சமாசாரமொன்றும் கிடைக்கமாட்டாதென அஞ்சுகிறேன். ஏனென்றால், இவர்கள் எங்கும் ஒரேஸ்திதியிலிருக்கிறார்கள். பெரும்பாலர்க்குக் குலாபிமானமே காணோம். குலாபிமானமென்றால் என்னவென்றும், குலாபிமானிகளெனப்படுவோர் என்ன செய்வதென்றும் கேட்பாருமிருக்கின்றனர். இவர்களுக்கு வேண்டிய போதனை செய்தபின்னாவது தக்கவாறு நடந்துகொள்ளுகிறார்களோவென்று நிதானித்தால் அதுவுங் காணோம். குலசம்பந்தமான இயக்கங்கள் —ஊரில் யாதொன்றும் காணப்படவில்லை. மற்றஊர்களிலும் அப்படியேயிருக்குமென்றெண்ணுகிறேன். இந்நிலையிலே எங்களூரார் பலவருஷங்களாக இருந்து வருகின்றனர். இப்படியிருக்க, நான் மாதமாதம் என்ன எழுதுவதென்று தெரியவில்லை. இன்னது எழுதுவதென்பதை இனி மெதுமெதுவாய் யோசித்துத்தான் எழுதமுடியும். அப்படி யெழுதினாலும், மாதந்தோறும் எழுத விஷயம் கிடைக்குமோ என்று அஞ்சுகிறேன். ஆனால், தங்கள் பத்திரிகை நன்றாய்ப் பரவி யாவர்கைகளையும் அடையுமானால் அப்புறம் நமது ஜாதியாருக்குள் முயற்சிகள் ஏற்படலாமென்று தோன்றுகிறது. ஆதலால், இதற்கான பிரயத்தினம் தாங்களே செய்வதோடு பிறரையும் செய்யும்படி இடைவிடாது கேட்டுவருதலே செய்யத்தக்கதெனத் தோன்றுகிறது" ——என்கிறார். இவ்வபிப்பிராயத்தை யாமே சென்ற சஞ்சிகையில் வெளியிட்டிருக்கிறோம். நமது வாசகர்களும் மற்றோரும் தங்கள் தங்களாலியன்ற அளவு சகாயஞ்செய்யவேண்டுகிறோம்.

***

காலமாயினார்.

நமது நண்பர் ஸ்ரீ கொ. கன்னியப்ப ஆச்சாரியார் தமையனார் கொ. நயினாச்சாரியார் சென்ற ஜூலைமீ 29உ சோமவாரம் சிவலோகபதவி யடைந்தனரென் றறிந்து வருந்துகின்றோம். இவரைப்பற்றி ஸ்ரீ கொ.க. ஆச்சாரியார் பின் வருமாறு தெரிவிக்கின்றார்—"அவரால் எனக்கு எவ்வளவோ ஒத்தாசை யிருந்தது. என்னுடைய வீட்டுச் சமுசாரம் முழுவதும் அவரே சுமந்துகொண்டிருந்தார். நான் எங்கு போகவேண்டுமானாலும் அவர் யாதொரு தடையும் சொல்வது கிடையாது. கைச்செலவிற் கில்லாவிட்டாலும் அவரே கொடுத்தனுப்புவார். திடீரெனப்புறப்பட்டு வெளியூருக்குச் சொல்லாமல் போய்விட்டால் எத்தனை நாளானாலும் மனங்கோணாமல் இருப்பார். இவ்விதமிருக்கும் சகோதரர்களை நான் இதுபரியந்தம் பார்த்தது கிடையாது. குலோத்தாரண விஷயத்தில் என்ன செய்தாலும் அவருக்குத் திருப்தி. இதுபரியந்தம் நான் குலோத்தாரண விஷயமாக உழைத்து வந்ததற்கு காரணம் அவர் குடும்பத்தைப் பாதுகாத்து வந்ததேயாகும். இவர் திடீரென்று ஒருநாளில் சுரங்கண்டு இறந்துபோனார். இப்படியிருக்கிறது உலகம். நாமெடுத்த காரியங்களில் ஒன்றையும் முடிக்காமல் காலத்தைப் போக்குவது சரியாயில்லை."— உண்மை! சரியாகத்தானில்லை. சரியென்று எவரே கூசாது கூறுவர்? தம் வாழ்நாளில் ஜாதிக்குப் பல நன்மை செய்யலாமென் றெண்ணியிருந்தாரும், செய்வாரெனப் பிறர் நம்பிக்கைக்குப்பாத்திராயிருந்தாருமாகிய பலர் யாதொன்றும் செய்யாமலோ அல்லது பிசகிப்பிதே செய்து முடிக்கோ உயிர்துறந்த தறிந்திருக்கின்றோமல்லவா? அறிந்திருந்தும்,

ஒன்றே செய்யவும் வேண்டும்—ஒன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்—இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்—அன்றி
நாளைநாளை யென்பீராகில்
நமனுடைமுறைநாளாவது மறியீர்
நம்முடைமுறைநாளாவது மறியீர்
எப்போதாயினுங் கூற்றுவன் வருவான்—

என்னுங் கபிலர்வாக்கை நினைவிற்கொண்டு செய்யவேண்டியதைக் காலஹரண மின்றி செய்வோமென்று முற்படுவாரைக்காணோமே!

* * *

### சமஸ்கிருத வித்தியார்த்திகள்.

சிதம்பரத்தில் பொன்னம்பல பிள்ளை சமஸ்கிருத பாடசாலை யென்பதொன்றிருக்கிறது. இதில் சமஸ்கிருத பாஷையும் நூல்களும் இலவசமாய்க் கற்றுக்கொடுக்கப்படுவதுடன் வித்தியார்த்திகளுக்கு உபகாரச்சம்பளமும் கொடுக்கப்படுகிறது. இப்பாடசாலையில் வாசிப்பவர்களிற் பெரும்பாலோர் ஆருஷேயச் சிறுவர்களேயாயினும் பௌருஷேய ரிருவரும் இப்போது வாசித்து வருகிறார்கள். இவர்களில் தங்கவேலு என்பான் ஸ்ரீ உலகநாதபத்தருடைய குமாரன்; மற்றவன் இராமநாதனெனும் பெயருடையான், ஷையார் மைத்துனராகிய ஸ்ரீ அரங்கசாமி பத்தருடைய குமாரன். இவ்விரு சிறுவர்களில் முதல்வன் 12 - வயதுடையவனும், இரண்டாமவன் 11 - வயதுடையவனுமாவர். குமாரசம்பவம், ரகுவம்சம், அமரம் முதலிய நூல்களை இவர்கள் இப்போது வாசித்து வருவதாகத் தெரிகிறது. இருவரும் தனித்தனி மாதவரியில் ரூபா இரண்டு உபகாரச் சம்பளமாகப் பெற்று வருகின்றனர். இவ்விசேஷமறிய நமது வாசகர்களெல்லோரும் சந்தோஷமுறுவரென்பதிற் சந்தேகமில்லை.



சமஸ்கிருத பாடசாலைகளில் பௌருஷேயச் சிறுவர்கள் சேர்ந்து வாசிக்கும்படி நாம் சதா தூண்டவேண்டியவர்களா யிருக்கிறோம். நமது இராஜதானியின் பல இடங்களில் இவை ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன. அவ்விடங்களின் ஜாபிதாவை முன்னொரு சஞ்சிகையிற் பிரசுரித்திருந்தோம். ஒவ்வொரு பாடசாலையில் இருவர் மூவர் வாசித்தாலும் மொத்தத்தில் வருஷவாரியில் இருபத்தைந்து சமஸ்கிருத பண்டிதர்களாவது இக்குலத்தில் ஏற்படுவார்கள். பாடசாலைகளிலேயே பல சாஸ்திரங்களை இவர்கள் கற்றல்கூடாது போயினும், கற்ற ஞானங்கொண்டு பல சாஸ்திராராய்ச்சி செய்து குலானுகூலஞ் செய்தல் சுலபசாத்தியமல்லவா? இவ்விதமாக சமஸ்கிருதங் கற்கச்செய்வதே சுலபமான வழியாகும். நம்மவர்களுக்கென்று நாமாக நமது சொந்தச்செலவில் சமஸ்கிருத பாடசாலைகள் பல விடங்களில் ஏற்படுத்தி நடத்துவது கூடாமை. இதற்குவேண்டிய பணங்கிடைக்கமாட்டாது. கிடைக்கவேண்டியதும் அங்ஙனம் பாடசாலைகள் ஸ்தாபிக்க வேண்டியதும், நம்மவர்களுடைய தற்காலஸ்திதியில், அனுவஸ்யமென்பது தெற்றென யாவர்க்கும் புலப்படும். ஆதலால், இதுபற்றிச் சிந்தைநோதல் வீணேயெனவேண்டும். பிறரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாடசாலைகளில் சேர்ந்து கற்றாலே போதும்.

இப்படி மக்களைக் கற்கவிடும்படி பெற்றோரைத் தூண்டவேண்டும். உள்ளூரிற் பாடசாலையில்லாதபக்ஷத்தில்நெருங்கியுள்ள இடத்தில் நடைபெறும் பாடசாலையிற் சேர்ப்பிக்கவேண்டும். ஊர்விட்டு ஊர்சென்று வாசிக்கும் இளைஞருக்கேற்ற சௌகரியங்கள் செய்தமைக்கவேண்டும். நம்மக்களிடம் சமஸ்கிருத வித்தியாவிருத்தி சித்திப்பதற்கான சாதனங்கள் பலவும் தேடியமைக்கவேண்டும். இது பௌருஷேய குல ஈடேற்றத்தில் நோக்கமுள்ள அபிமானிகள் யாவருடைய கடமையாகவுமிருக்கிறது. இக்கடமையை ஏற்றுழைப்பார்களானால் சில வருஷங்களுக்குள் பல பண்டிதர்கள் நமது ஜாதியில் ஏற்பட்டுவிடுவார்கள். இவ்வழி நம்முள் அதிக சீர்திருத்த முண்டாய்விடும்; பெருமை மிகுந்துவரும் என்பது கண்டு குலாபிமானிகள் உழைக்கவேண்டுகிறோம்.

* * *

### ஜாதித்தலைவர் சரித்திரங்கள்.

பலஜாதியாரும் தங்கள் ஜாதியினுற்பவித்தவர்களிற் சிறந்தார் சரித்திரங்களை எழுதி யச்சிட்டுக் கொண்டாடி வருகிறார்கள். இங்ஙனஞ் செய்ய நமது ஜாதியார் இன்னும் முற்படாதது சுஜாதிக்கோர் பெருங்குறையே யெனவேண்டும். வித்தை, ஒழுக்கம், முயற்சி, மதப்பற்று, தவம் முதலியவற்றிற் சிறந்தவர்களுடைய சரித்திரங்களைச் செவ்விதின் விளக்கி எழுதி வெளிப்படுத்துவதால் இக்குலத்திற்குப் பெருமை மிக வுண்டாவதுடன், அச்சரித்திரங்களை வாசிக்குமுகத்தால் குலத்தார்க்குள் எழுச்சியும் நன்னோக்கங்களாதியவைகளு முண்டாகி இவர்கள் மேலேறத் தூண்டுதலேற்படும். அன்றியும், நங்குல மேதாவிகள் சரித்திரங்களை யெழுதிப் பிரகாசிக்கச் செய்யவேண்டியது நங்குலக் கடமையாகவு மிருக்கிறதென்போம். இக்கடமையிற்றவறினால் பழியுறுதல் திண்ணமாம். ஆதலினாலேயே, இவ்வழியிலுழைக்கப் பலரைத் தூண்டலாயினோம். எனினும், பயனேதுங்காணாமல் கவலையுறலாயினோம்.

கவிவாணர்களாகவும், யதீந்திரர்களாகவும், விவகாரதுரந்தரர்களாகவும், குலமணிகளாகவும் பலரிருந்தகன்றனர். இவர்களைப்பற்றி யெல்லாம் அறிந்தவர் மிகச் சிலரேயாயிருக்கின்றனர். பலர் மாகூரியையறிந்தவர்கள் மாண்டொழிந்தன ரென்றுங் கூறலாம். இதனால் குலப்பெருமையின் பெரும்பாகம் விகசிதமாகாமல் மறைந்துபோயிற்றெனவேண்டும். போனவரொழிய எஞ்சி நிற்பாரேனும் தாமறிந்தவற்றைப் பலரறிய வெளிப்படுத்தவேண்டாமா? அவையும் மறைந்தொழியவேண்டுமோ? வேண்டாம். வேண்டாம். இது குலத்திற்குப் பெருநஷ்டமாகும். மற்ற நஷ்டங்களை நம்மைத்தலையெடுக்கவொட்டாது தாழ்த்தியடிக்கும்போது, இந்நஷ்டத்தையுங் கூட்டத் தேடிக்கொள்ளலாமா? கூடாது. அவரவர்களுடைய ஞாபகத்திற்கு எட்டிய மட்டில் எண்ணிப் பார்த்தால் எத்தனையோ மேதாவிகள் இறந்து விட்டதாகத் தெரிகிறது. ஆதலால், காலஹரணஞ்செய்யாமல் அவரவர்கள் தாம் தாம் அறிந்த பெரியாரைப்பற்றிய விபரங்களை நமது பத்திரிகைமூலமாகவாவது தனிப்புத்தக ரூபமாயாவது சீக்கிரம் வெளிப்படுத்த வேண்டுகிறோம்.

தம்மாயுட்கால முழுவதும் குலப்பற்றுகொண்டு பல விதங்களிலுதவிய டாக்டர் பழனியாண்டி யவர்கள், அவர் சகோதரர் இஞ்சினீயர் ராவ் பகதூர் செஞ்சி - சுப்பராய ஆச்சாரியார் இவர்களுடைய சரித்திர விபரங்களை யெழுதித்தரும்படி, ஷை இஞ்சினீயர் குமாரரான ஸ்ரீ செஞ்சி - ஆண்டிசுந்தர ஆச்சாரியார் பி. ஏ. பி. எல். அவர்களைப் பன்முறை கேட்டும் அவர் எமது வேண்டுகோளுக் கிணங்காதிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கதே. பண்டித மார்க்கசகாய ஆச்சாரியாரைப்பற்றி அத்தியாபக-லிங்காச்சாரியார் எழுதித்தருவதாகக் கூறிவந்தும் அங்ஙனஞ் செய்யாதே போயினர். அத்தியாபகர் சரித்திர விபரங்களுந் தெரியவில்லை. இவருடன் அந்தியகாலத்தில் அதிகமாய் நெருங்கிப் பழகிய ஸ்ரீ C. R. சுப்பராய ஆச்சாரியாருக்கு அவை தெரிந்திருக்கலாமென்று தோன்றுகிறது. தெரிந்தவரையில் வெளிப்படுத்தினாலும் போதுமாயிருக்கும். அதிகந் தெரியவில்லையென்று தெரிந்ததையும் மறைத்துவிடுதல் அழகல்ல.

இனி, மாம்பழக் கவிச்சிங்க நாவலர்போன்ற புலவர் சிகாமணிகள், மடாதிபதிகள், சிற்பசிரேஷ்டர்கள் முதலியோரைப் பற்றியும் எழுதுவார்வேண்டும். அறிந்தார் எழுதுவரென்று ஆதியாவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

* * *

**பிறர் நம்மைத் தூஷிப்பதேன்.**

மீனாக்ஷிபுரம் ஜோஸியர் ஸ்ரீ A. முத்து ஆச்சாரியார் சகோதரர் ஜோஸியர் ஸ்ரீ A. அனந்தபெருமாள் ஆச்சாரியார் பின்வருமாறு எழுதுகிறார்:—

பூணூல் என்ற மகுடத்தில் டி, கோபால செட்டி கூறியிருக்கின்றதையும் இதைச் சுட்டிக்காட்டி பிரம்மஸ்ரீ சகோதரர் ஸி. ஆர். சுப்பராய ஆச்சாரியாரவர்கள் தெரிவித்திருக்கின்றதையும், பிராமணக்குருமாரும் தபதிகளும் என்ற வியாசத்தையும் பார்த்தேன். ஷை செட்டி அவர்கள் கிரந்தத்தில் சுருதி ஸ்மிருதி சில்ப இதிகாச புராண சிரௌத மீமாம்ச முதலியவைகளைப் பார்க்கவும் கேட்கவும் செய்திருக்கமாட்டாரென்று தோன்றுகிறது. பார்த்திருந்தால் கம்மாளர் திராவிடர், பூணூலுக்கு அதிகாரமில்லாதவர், திராவிடரில் தாழ்ந்தவரென்று கூறியிருக்கமாட்டார். தவிரவும்சுருதிஸ்மிருதிவசனங்களன்னியில்கூறும் வார்த்தைகள் துவேஷத்தால் கூறியவைகளாகும். ஷை செட்டியார் காத்தியாயனஸ்மிருதியைச் சுட்டிக்காண்பித்திருக்கின்றார். ஷை ஸ்மிருதி காத்தியாயனசூத்ர வியாக்கியாதார்த்தசுவாமி பாஷியத்தைப் பார்த்திருந்தால் கம்மாளர் திராவிடர் பூணூலை இடையில் போட்டுக்கொண்டார்களென்று சொல்லவே மாட்டார். ஆனதினால், துவேஷமுடையவர்கள் கூறுவதற்கு நாம் பதில்சொல்லவேண்டுமென்ப தவசியமில்லை. நமக்கு சுருதி ஸ்மிருதிகளும் சில்பங்களும் ஆதாரமாயிருக்கின்றன.

“நமது சகோதரர் ஸ்ரீ ஸி. ஆர். சுப்பராயாச்சாரியாரவர்கள், பிறசாதியார் நமதுஜாதியாரைத் தூஷிப்பவைகளை அதி உத்சாகத்துடன் வெளிப்படுத்துகின்றார். இதுபோல நம்ஜாதியார்க்கனுகூலமான விஷயங்களில் தான் பார்த்ததும் கேட்டதுமான குணங்களைப் பிரசித்தப்படுத்தவேண்டியது அவர்கள் பாரமல்லவா? தவிரவும், ஜாதிமானம் சந்நியாசிக்குமுண்டல்லவா? மேலும் அவர்கள் நம் ஜாதியாருக்கனுகூலமான அனேக வசனங்களைக் கண்டுபிடித்துவைத்திருக்கிறேன் என்று நமக்கெழுதியிருக்கின்றார்கள். அவைகளையாவது வெளிப்படுத்தி இச்சமயத்தில் கோபாலசெட்டி எழுதினவைகளுக்கு கண்டனமெழுதக் கூடாதா? தவிரவும், அவர்கள் நம்முன்னோர்கள் அதிபிரயாசத்துடன் சம்பாதித்த தீர்ப்புக்களும் குலநூல்களும் பிரதானமன்று என்று கூறுவது தர்மமாகுமா? இவ்விதம் சாதியபிமானத்தைக் கொண்டோ மற்றவித எண்ணங்கொண்டோ தானறிந்த குணங்களை வெளியிடாது குற்றத்தையே வெளியிடுவதின் உண்மையைக்கேட்டறியுங்கள்.

“சிற்பசாஸ்திரங்கள் பரவியிருக்குமானால் பிராமணக் குருமாரும் தபதிகளும் என்ற வியாசத்தை யாழ்ப்பாணம் இந்துசாதனப் பத்திரிகையில் எழுதியிருக்கமாட்டார்கள். இவைகளுக் கெல்லாம் நம்மவரில் ஆங்கிலக் கல்வியும் பட்டதாரிகளும் தனவந்தருமில்லாத குறைவே முதற்காரணமாயிருக்கின்றது. இக்குறையை நிவிர்த்திப்பதற்கு நாம் வழிதேடவேண்டும். தாழ்ந்த வகுப்பினர்கள் தற்காலத்தில் கனக்கலாமென்று உத்தியோகங்களில் அமர்ந்த ஹேதுவால் அவர்கள் உயர்குலத்தவராக பிறஜாதியாரால் மதிக்கப்பட்டு வந்திருக்கின்றதை நாம் பார்க்கின்றோம். அவர்களைப் போல நாமும் பொதுநிதிசேர்த்து வருஷத்திற்கு நாலைந்து பட்டதாரிகளைப் பெறும்படி முயலவேண்டும்.”—ஜோஸ்யரிவர் கோரிய உண்மையைக் கோயமுத்தூர் ஸ்ரீ C. R. சுப்பராயாச்சாரியார் சீக்கிரம் வெளியிடப் பிரார்த்திக்கின்றோம்.

* * *

**விஶ்வகர்ம வித்தியாநிதி.**

“நமது தற்போதைய நிலைமைக்கு விஶ்வகர்ம கல்விச்சங்கந்தான் அவசியம். நமது ஜாதியார் முன்னேறுவதற்குப் பிறஜாதியாருடைய ஆதரவையும் அபிமானமும் கட்டாயம் வேண்டும். அவர்களுடைய உதவியைக்கொண்டுதான் கல்விச்சங்கம் ஒழுங்காய் நடைபெறச் செய்யலாம். நம்மவர்கள் சிந்தையும் அதிகம் வேண்டும். வருஷம் தவறாது காலேஜ் மாணவர் ஒருவருக்குப் பொருளுதவி புரியக்கூடிய வருமானமுள்ள மூலதனத்தைச் சேர்ப்பது முடியாதகாரிய

மல்ல''—என்று ஸ்ரீ R. P. கோவிந்தசாமி ஆச்சாரியார் திருச்சிராப்பள்ளியிலிருந்தெழுதுகிறார். 'வித்தியாமகிமை விளங்கியதற்கறிகுறியாக ஒவ்வொரு ஜாதியாருந் தானங்கொடுப்பதற்காக நிதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள், நமது ஜாதிக்கென ஒரு வித்தியாநிதி ஏற்படுத்தவேண்டுமென்று சில வருஷங்களுக்கு முன்னமே யாம் முயற்சி செய்தும் போதியசகாயங்கிடைக்கவில்லை. ஷை நிதியினின்று சிற்சில வித்தியார்த்திகளுக்குச் சகாயஞ் செய்த விவரங்களும் ஏற்கனவே வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைத் தொடர்ந்துநடத்த முயன்று வருகின்றோம். இனியேனும் வேண்டுமளவுக்கு சகாயங் கிடைக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

வித்தியாநிதியைத் தனியாய் நடத்தல் நன்றென்பதெமதபிப்பிராயம். இதற்கு மாதவாரியிலும் வருஷவாரியிலும் நம்மவர்கள் சந்தா செலுத்தவேண்டும். இவ்விதமாகவே மற்ற ஜாதியாருடைய வித்தியா நிதிகள் நடைபெறுகின்றன. வித்தியாநிதிக்கெனச் சுபாசுபங்களில் கட்டணங்கள் வாங்கிச் சேர்க்கலாம். முன் நாம் நடத்திவந்த தீபாவளித் தண்டலைத் திரும்பவும் மும்முரமாய்ப் பல விடங்களிலும் நடத்தி அந்தண்டல் முழுவதையும் அப்படியே இந்நிதியிற் சேர்க்கலாம்.' இப்படிப் பலவிதங்களாகத் திரட்டி மூலதனஞ் சேர்க்கவேண்டும் வருஷவாரியில் எவ்வளவு வருமானங் கிடைத்தபோதிலும் நமது ஜாதிச் சிறுவர்களுக்கு வித்தியா தானஞ் செய்யவேண்டியிருக்குஞ் செலவுக்குப் போதாமலிருக்கும் நம்மவர்களிற் பெரும்பாலார் ஏழைகளாயுளர். வித்தியா செலவோ மிகவும் அதிகமாயிருக்கிறது. வித்தியா பிரவர்த்தி யதிகமுடையார் ஏழைக்குடும்பங்களில்தான் மிகுதியாய்க் காணப்படுகின்றனர். மற்ற ஜாதியார்களில் கீழ்ப்படிப்புக்கும் மத்தியதரப் படிப்புக்கும் பெற்றோர்களே செலவிட்டு உயர்தரப் படிப்புக்கு மாத்திரமே சாதாரணமாய்ப் பொதுச் சகாயந் தேடுகிறார்கள் நமது பிள்ளைகளுக்கோ கீழ் வகுப்புகளிலிருந்தே சகாயஞ்செய்வ தவசியமாகுமெனத் தோன்றுகிறது. இதற்கு, ஏழ்மையினும், பெற்றோருடைய வித்தியா வெறுப்பு முக்கியகாரணமா யிருக்கிறது.

இவற்றை யெல்லாம் எண்ணும்போது நமது வித்தியாநிதிக்கு விசேஷ வருமானமிருத்தல் அவஸ்யமாகிறது. நம்மினும் வித்யாவிஷயத்தில் எவ்வளவோ முற்பட்டிருக்கும் ஜாதிகளெல்லாம் பெரும்பொருள் திரட்டி வருஷத்திற்குவருஷம் அதிகமதிகமாய்த் தங்கள் ஜாதிப்பிள்ளைகளைப் பாடசாலைகளில் நுழைத்து வித்யாபோதஞ் செய்துவருகிறார்கள். அவர்கள் செய்யும் முயற்சியினளவு நாமும் செய்தபோதிலும் அவர்களுக்கு மிகவும் பிற்பட்டேயிருப்போம். ஏனென்றால், அவர்களெல்லாம் இத்துறையில் பல வருஷங்களுக்கு முன்னமேயே யிறங்கி நீந்திக்கொண்டிருக்கிறார்கள்; அக்கரையை யேறியும் சமீபித்துக்கொண்டி ருக்கிறார்கள்.

நாமோ இக்கரையில் கரையோரத்திற்கு நெடுந்தூரமிப்பாலிருந்துகொண்டு மற்றவர் நாட்டத்தை யுணராமலே காலங்கழித்து வருகிறோம். கரையோரஞ் சேருவதிலேயே கனகாலங் கழிந்துவிடும். அப்புறம் நீந்த ஆரம்பித்து அக்கரை சேருவதெக்காலமோ என் றேங்கவேண்டியவர்



களாயுளோம். முதலிற் சென்ற மூதறிவாளர் அக்கரையைப் பற்றிக்கொண்டு அரும்பெருஞ்செல்வமும் சிரேயஸும் அதிகாரமாதியவைகளும் பெற்று ஆனந்தானுபவத்திலிருக்கிறார்கள். அந்த அநுபவம் நமக்கு என்றும் லபிக்குமென்றெண்ண இடமில்லை. அதில் ஆயிரத்தில் ஒருபங்கு சித்திக்க வேண்டு மென்றாலும் அநேக ஆண்டுகள் நாம் இடைவிடா துழைக்க வேண்டும்.

ஸ்ரீ C. R. சுப்பராயாச்சாரியார் அபிப்பிராயப்படுவதுபோல், குடும்பத்திலொரு பிள்ளைக்காவது உயர்தரக்கல்வி தரவேண்டும். இப்படிக் கல்வி கற்க வெளிப்படுவோரில் பலபேர் பொதுச்சகாயந்தேடுவார்கள். அவர்களுக்கெல்லாம் சகாயஞ் செய்யவேண்டும். இதற்குப் பெரும்பொருள் வேண்டும். கீழ்தரப்படிப்பு பாடசாலைகளில் ஐந்து வருஷங்களில் போதிக்கப்படுகிறது. இதற்கான செலவை பெற்றோர்களே செய்ய வேண்டும். மத்தியதரப்படிப்பு ஆறுவருஷகாலங்கொண்டது. இவ்வகுப்புகளின் வருஷவாரி சம்பளம் ரூ. 15 முதல் ரூ. 42 வரையிலுஞ்செல்லுகிறது. உயர்தரக்கல்வி நான்கு அல்லது ஐந்து வருஷகால அளவுள்ளது. 'இவ்வகுப்புகளின் வருஷவாரி சம்பளம் ரூ. 86 முதல் ரூ 120 வரையிலுஞ் செல்லுகிறது இதற்குமேல் (இஞ்சினீரிங்) சிற்பக் கல்வி, சட்டக் கல்வி, வைத்தியக் கல்வி முதலிய விசேஷதுறைக ளிருக்கின்றன.

இவைகளைச் சார்ந்த வகுப்புகளி லெல்லாம் ஒவ்வொன்றில் ஒவ்வொரு மாணவனுக்கே சகாயஞ் செய்வதாயினும் வருஷவாரியில் ரூபா ஆயிரத்தைந்நூற்றுக்கதிகந் தேவையிருக்கும். இத்தொகை முழுவதும் சந்தா வசூலில் கிடைக்கவேண்டியதாயிருக்கிறதெனில், மாதந்தோறும் ரூ. 125 வருமானங் கிடைக்கவேண்டும். வித்தியாபிமானமுடையா ரெல்லாம் 4 அணுமுதல் தங்களுக்கிசைந்த அளவுக்கு சந்தா செலுத்த முன்வந்தால் இத்தொகை இலேசாய்க் கிடைத்துவிடும். இதுவன்றி, வருஷவாரி தலைகட்டுக்கு இவ்வளவு வசூல் செய்வதென்ற ஏற்பாடொன்று செய்தால் பெரும்பொருள் திரண்டுவரும்.

தனவான்கள் மொத்தமாய்த் தரும் பெருந்தொகைகளை மூலதானமாக்கவேண்டும். வருஷாந்த செலவுக்கு மேற்பட்டிருக்கும் தொகையையும் மூலதனத்திற் சேர்த்து அதை வருஷத்திற்கு வருஷம் பெருக்கவேண்டும். இந்நிதி செவ்வையாய் நடத்தப்பட்டு பல மாணவர்களுக்கு உபயோகமாவதாகக் கனதன சம்பன்னர்கள் அறிந்தால் தாராளமாய்த் தங்கள் பொருளைத் தருவார்கள். அப்புறம், வெகுவிரைவாய் நமது வித்தியாநிதி விருத்தியடையும். இந்நிதியின் சகாயத்திற்குரியார் இன்னார்தான் என்ற வரையறையாதுமிராது. விஸ்வகர்ம மாணவருக்கென் றேற்பட்டபடியால், தென்னிந்தியாவிலுள்ளார் யாவருக்கும் பயன்படும். ஆனால், பொருள் அளவுக்கேற்ப சகாயத்திற்கு மிகவும் பாத்திரரா யுள்ளார்க்குமட்டும் எட்டுவதா யிருக்கும். இந்நிதியைப் பரிபாலனஞ்செய்வதில் பிறஜாதிசகாயம் அவஸ்யமா யிருக்குமென்று எமக்குத் தோன்றவில்லை. சுஜாதியாரே கமிட்டியாயிருந்து பரிபாலிக்கலாம்

விஸ்வகர்ம சகோதரர்களே! பல வருஷங்களுக்கு முன்னாலேயே ஆரம்பித்திருக்கவேண்டியவேலையை இனியேனுஞ் செ

ய்வதற்கு முன்வாருங்கள். உங்கள் பொருளை ஒடுக்காமல் தாருங்கள். இந்நிதியைப் பெருக்குவதான சாதனங்களைத்தேடுங்கள். தெரிவியுங்கள். இதைப்பற்றிப் பிறருக்குப் போதியுங்கள். உங்களாலான விதங்களிலெல்லாம் துணைபுரியுங்கள்.

•••

### ஒருநாள் விவாகம்.

ஐந்துநாள் விவாக ஏற்பாட்டினால் நமது ஜாதிக்குப் பல கஷ்டங்கள் நேரிட்டிருக்கின்றன என்பது யாவரும் அறிந்தவிஷயம். இதன் செலவுக்குப்பயந்து பலபேர் விவாகஞ்செய்துகொள்ளாமலே காலங்கழித்துவிடுகின்றனர். சிலர் பிறஜாதிஸ்திரீகளுடைய சகவாசங்கொண்டு ஜாதிப் பிரஷ்டர்களாகி, தாங்கள் பெற்றெடுக்கும் மக்களுக்குப் பூணூல்போட்டு அவர்களுக்கு இச்சாதித்தொழில் கற்றுக்கொடுத்து ஜாதிச் சங்கிரமம் உண்டாக்கிவிடுகிறார்கள். இது நாளுக்குநாள் அதிக சாதாரணமாய்க் கொண்டுவருகிறது. ஆதலால், எந்தக்குடும்பம் சரியானது எந்தக்குடும்பம் சங்கிரமப்பட்டதென்று இலேசில் தெரிந்துகொள்ள முடியவில்லை. கொள்வன கொடுப்பனவற்றிற் பெரியசந்தேகங்களேற்படுகின்றன. அதனால், சுபாசுபகாரிய சமயத்தில் கொண்டார் கொடுத்தாருடைய தகுதிகளைப் பற்றிய வாக்குவாதங்கள் நடந்து காரியத்திற்கு பங்கமுண்டாவது எங்கெங்கும் சர்வ சாதாரணமாய்விட்டது.

இவ்வளவுக்கும் காரணம் எதுவென்று பார்த்தால் ஐந்துநாள் விவாக ஏற்பாடேயென்பது நன்கு புலப்படும். இம்மட்டோ? இன்னும் பல கேடுகளுக்கும் இதுவே காரணமாயிருக்கிறது. ஜாதியார் ஒருவர் வீட்டி லொருவர் சாப்பிடப் பின்னிடுவதற்கு இதுவே காரணம். இதுவே இச்சாதியாரை ஏழைகளாக்கிவைத்திருப்பது. இதுவே குடும்பக் கவலைகள் பலவற்றிற்குக் கூட்டுறவாயிருப்பது. இதுவே குடும்பாதிகாரியை உற்றுருறவினருக்குப் பொல்லாதவனாக்குவது. இதுவேதொழில் நாணயத்தைக் கெடுத்து அடாதகாரியங்களைச் செய்யத்தூண்டுவது. யோசிக்குமிடத்து, ஐந்துநாள் விவாக ஏற்பாடே அலங்கோலங்கள் பலவிளைத்து அகதிக்கு ஆளாக்கி அவமானந்தந்து ஆபாசப்படுத்தி அலக்கழிப்பது.

ஐயோ! இவ்வொரு சடங்கினால் நாம் இம்சைப்பட்டது போதாதா? இந்நியதியில் அறிவற்றதோர் அசம்பாவிதப்பற்று வைத்து அல்லல் மிக அடைந்தழிந்தது இந்தச்சாதி. இந்தப்பற்றை யொழித்தால் இலேசாக ஈடேற்றமடையலாம். இந்தப் பற்றை யொழித்தால் ஜாதிச்சங்கிரமம் குறைந்தொழியும். இந்தப்பற்றை யொழித்தால் ஏழ்மை நீங்கும், தாழ்வுபோகும், துஷ்டகாரியஞ் செய்யத்தூண்டுதல் மிகக் குறையும். ஐந்துநாள் விவாகமகன்றால் அந்நியோந்நியமும் ஐக்கியமும் நமது ஜாதியார்க்குள் அதிசீக்கிரம் பரவும். அநேக நன்மைகளுண்டாகும். இதற்கு சாஸ்திரிகளும் பௌரோகிதர்களும் நாட்டாண்மைக்காரர் காரியஸ்தர் முதலானவர்களும் துணைசெய்யவேண்டும். இதனால் வேதசாஸ்திர விரோதமொன்றும் ஏற்படாதென்றே தெரிகிறது.

சென்றமாதச் சஞ்சிகையில் இதைப்பற்றி யெழுதிய வியாஸத்தில் ஸ்ரீ கொ. கன்னியப்ப ஆச்சாரியார் ஒருநாளில் விவாகத்தை நடத்துமுறையைக் குறிப்பிட்டிருக்கிறார். அதுபோன்ற ஏற்பாடொன்று சீக்கிரமே அநுஷ்டானத்திற்கு வருவது அத்தியாவஸ்யமாயிருக்கிறது. ஆருஷேயர்கள் பல வருஷங்களாக ஒருநாள் விவாகமும் ஒருவேளை விவாகமும் செய்துவருவதை நாம் நன்கறிந்திருக்கிறோம். இது யுக்தமென்று அவர்கள் கைப்பற்றி நடக்கும்போது பௌருஷேயர்கள் ஏன் அங்ஙனஞ்செய்யக் கூடாது? அவர்களோ நல்ல பதவிகளடைந்தவர்களாகவும், மிகுந்த வருமானமுடையவர்களாகவும், பிறருடைய சகாயத்தை ஏராளமாய்ப் பெறுகிறவர்களாகவுமிருக்கின்றார்கள். ஆதலினால் அவர்கள் எத்தனைநாள் விவாகஞ் செய்தாலும் தகும், செலவுக்கு முட்டுப்படார்கள். அப்படிப்பட்டவர்களே ஒருநாள் விவாகஞ் செய்யும்பொழுது ஏழ்மை மேலிட்டுள்ள நமது ஜாதியார்மட்டும், எத்தனைபேர் ஜாதிப் பிரஷ்டர்களாயினுமாகட்டும், ஜாதி சங்கிரமம் எவ்வளவு மிகுந்தாலும் மிகட்டும், எத்தனை குடும்பங்கள் கடன்பட்டு கதியற்றேகினும் ஏகட்டும், என்னகெடுதி நேர்ந்தாலும் நேரட்டும் என்று ஐந்துநாள் விவாகச்சடங்கைக் குரங்குப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருப்பது மதியீனமல்லவா? அல்லவென்று யாரே கூறமுடியும்?

அபிமானிகாள்! இந்நிலையை நன்றாயோசித்து ஜாதியைத் துயரினின்று மீட்பதில் துணைபுரியுங்கள். இதனால் உங்களுக்குப் பெரும்புண்ணியமுண்டு, புகழுண்டு. பல குடும்பத்தார் உங்களுக்குப் பல்லாண்டு கூறுவார்கள். விவாகஞ்செய்துகொள்ளச் சக்தி யில்லாமலும் தீநெறிச்செல்ல மனமில்லாமலும் தயங்கும் இளம்பிள்ளைகள் உம்மை ஏத்தித்துதிப்பார்கள். கடன்பட வழியில்லார் களிப்பொடு கொண்டாடுவார்கள், ஜாதிக்கே நல்லகாலம் பிறந்துவிடும். அல்லலெல்லாம் அகன்றொழியும். உண்மையுண்மை. பொய்யில்லை, புனைவுரையல்ல. எண்ணிப்பாருங்கள்: உண்மையென்பது ஒருநொடியில் விளங்கும்.

நமது ஜாதியார் வருமானமோ நாளுக்குநாள் குறைந்து வருகிறது. நமது வேலைகளை நமது கைகளினின்று பலஜாதியாரும் பிடுங்கிக்கொண்டனர். ஜீவனஞ்செய்வதே மிகவுங் கஷ்டமாயிருக்கிறது. தினப்படி இரண்டுவேளை ஆகாரம் வயிறாரக்கிடைக்காமல் எத்தனையோ குடும்பத்தார் செத்தோமென்று சிந்தைகலங்கி நொந்து தவிக்கிறார்கள். இவர்கள் சிக்கனஞ்செய்து பொருள் மிகுத்துவதெங்கே? அப்படி மிகுத்தினாலும் எவ்வளவு பணஞ் சேர்க்க இவராலாகும்?

விவாகமொன்றுக்கு குறைந்தபக்ஷம் ரூ. 500 வேண்டியதாயிருக்கிறது. குடும்பமொன்றில் 10-வருஷங்களில்சராசரியில் 4விவாகங்கள்நடப்பதாக வைத்துக்கொண்டாலும் வருஷம் பத்தில் ரூ 2000 விவாகங்களுக்குமாத்திரம் வேண்டியிருக்கின்றது. அதாவது, வருஷமொன்றுக்கு ரூ. 200ம் மாதமொன்றுக்கு ரூ. 16க்கு அதிகமும் வேண்டியிருக்கின்றது. இதை நம்மவர் எப்படி மிகுத்திவைக்கமுடியும்? எங்கிருந்து மிகுத்தலாம்? அது சாத்தியமேயில்லை. இடையிடையே பல சுபாசுப காரியங்கள் நேரிடுகின்றன. அவற்றிற்கெல்லாம் அப்போதைக்கப்போது பணந்தேட வேண்டியதாயிருக்கிறது. வியாதிமுதலிய பீடைகளும் பெரும்பொருள் கேட்கின்றன.

இவைகளுக்கான செலவிற்காகக் கடன்பட்டும், பெரியோர் தேடிவைத்தபொருள்

களைக் கொடுத்தும் விற்றும் ஓட்டாண்டிகளாய்ப் பல குடும்பத்தார் பதைபதைக்கின்றனர். செலவுக்குப்பயந்து செய்ய வேண்டிய சடங்குகளையும் கிரியைகளையுஞ் செய்யாது விட்டு பிறர் பார்வையில் இழிதமடைகின்றனர். மிக முக்கியமாய்ச் செய்யப்படவேண்டியதாகிய விவாக சடங்குக்கே செலவுக்கில்லையெனில் மற்றவற்றைப் பற்றி எண்ணவும் வேண்டுமோ? செலவுக்குச் சற்றேறக்குறைய பொருளிருந்தாலும் அது முழுவதும் ஒரு விவாகச் சடங்கிலேயே ஒழிந்துபோகிறது. என்ன கேடான ஏற்பாடிது. ஐயோ! விவாகஞ்செய்துகொள்வோன் அதனால் இன்பமுற்று வாழ்வதற்கில்லாமல் பட்ட கடனுக்காகவும் அடைந்த ஏழ்மைக்காகவும் 'அதிகரித்த செலவுக்காகவும் அல்லும்பகலும் ஏங்கியேங்கி இளைத்திளைத்து 'தப்புதண்டா' வேலைகள் செய்யத்தூண்டப்பட்டு மனங்கலங்கி மாளுவதே முடிவாயிருக்கிறது.

அன்பர்களே! உங்கள் விவாக ஏற்பாடு தரும்உபத்திரவங்களை உற்றுநோக்குங்கள். உள்ளங்கசிந்துருகி பள்ளத்தில் வீழ்வோரை மெள்ள மேலெழுத்துவிடுங்கள், கை கொடுங்கள், காப்பாற்றுங்கள், கடுமை கூறுதீர்கள்; கல்லெறியாதீர்கள். ஐந்துநாள் விவாகம் ஒருநாளில் முடிக்கப்பட்டால் செலவு எவ்வளவோ குறையும். பருவகாலந் தாழாது பாலியரெல்லாம் பயமின்றி விவாகங்கொள்வர். கடனின்றிக் களிகூறுவர். ஏழ்மையடையாது இன்புறுவர். சாஸ்திரோக்தமாய்ச் செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் காலமறிந்து செய்ய விழைவார்கள்.

ஆகலால், ஒருநாள் விவாகங்கள் ஒவ்வொரு பத்துக்கட்டிலும் அநுஷ்டானத்திற்கு வருமாறு தூண்டுங்கள். முன்னின்று முடியுங்கள். இங்ஙனஞ் செய்யத்துணிவோரைப் பழிக்காது ஆதரவு செய்யுங்கள். இதனால் நமது ஜாதிக்கு யாதொரு இழுக்கும் ஏற்படாது. உள்ள சிறுமையும் வறுமையும் ஒருங்கே ஒழியும். குலத்தலைவர்கள் இதைந் தழுவி யெழுதவும் இதுபற்றிய தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடவும் வேண்டுகிறோம்.

# தொழிலும் கல்வியும்.

ஸ்ரீ ஷண்முகானந்த சுவாமிகள்,
சமரசஞான சங்கத்தலைவர், சென்னை.

சராசராத்மகமாகிய இப்பிரபஞ்சத்தில் பல்வகையான தேகங்களுடன் பொருந்திய வுயிர்களும், இயற்கையான சுகதுக்கங்களையே அநுபவிக்க யோக்கியமாதலினால் பல மேதாவியர்களும் ஆராய்ச்சி முகத்தாற்றேர்ந்து மானிடதேகமே மிக மேலானதென்று வரையறுத்துக் கூறுவாராயினர், கூறவுமிருக்கின்றனர். காரணம், இயற்கை செயற்கையாலுளதாகுஞ் சுகதுக்கங்களை அநுபவிக்கும் திறனுடைமையினன்றே? இயற்கை செயற்கையாவது வல்லான்வகுத்த வழியென்னும் நியதி அல்லது பிராரப்தத்தினாலுளவாகுஞ் சுகதுக்கங்களை அநுபவிப்பதும் உலகியல், உயிரியல், உடலியல், பந்தகாரணவியல், முத்திபடையுமார்க்கவியல் பொருளும் போற்றலும் பேரின்புருவாகிய கடவுளியலும் ஆராய்ச்சியாற் றேர்ந்து (பிரமச்சரிய அநுஷ்டானத்தால்) நல்லனபுரிந்தும் அல்லனநீத்தும் இவ்வுலக இன்பமோ, மறுமையின்பமோ, மோக்ஷ இன்பமோ யாதொன்றேனும் அதற்குத்தக்க துணைகளை வாய்க்கப்பெற்றுக் கருதியவாறு பெறுதலுமாகும். செய்ற்கை வகையால்



கருதியன பெறுமாறுளதோ வென்னும் ஐயப்பாடொழிக்க நம்மனோருய்வான் பல பிரபலப் பிரமாணங்களுள. அவற்றுட் சில வற்றை இங்கு கூறுவாம்.

இவ்வுலக கவர்ச்சிக்குஹேதுவாகிய துருவநிலையினை ஓர் அரசகுமாரன்பெற்று விளங்குவதும், பதினாறுவயது பெற்றுநித்த மார்க்கண்டன் சிரஞ்சீவியாக இருப்பதும், இவருடன் மாபலியாதி அறுவர்களும் அவ்வாறே சிரஞ்சீவியாக விளங்குவதும், திருஞான சம்பந்தமூர்த்திசுவாமிகள் என்பைப் பெண்ணுரு வாக்கியதும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலைவிழுங்கிய மகவை மீட்டதும் கருதுமிடத்து இயற்கை விளக்கமென்னும் பேரருட்கடலாகிய கடவுளின் சத்தியைத் தனது விடாமுயற்சியாற் பெற்றுள்ளவர்களே பெரியாரென்று கூறுவது மரபு. இவர்கள் எவ்விதம் நினைக்கின்றார்களோ அவ்விதமே இவ்வுலகமன்றி மற்றெவ்வுலகத்தும் நடைபெறும். இவர்களைக் குறித்தன்றே திருவள்ளுவரும் தமதுதமிழ்மறையில் "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியர்-திண்ணியராகப் பெறின்" என்றார். இவ்வித சத்தியைப் பாரமார்த்திகத்தில்செலுத்தி முத்திபுற்றார் பலர். வியாவகாரிகத்தில் செலுத்திப் பல்வகைச் சித்திகளுடன் விளங்கினர் பலர். இவ்வித சத்திபெறுவது மானிட சரீரிகட்கே உரியது.

ஆகையால், தொழில் இன்றியமையாது வேண்டற்தக்கதே. அத்தொழிலும் மனம், மொழி, மெய் என்னும் வேறுபாட்டால் மூவகைப்படும். முத்தொழில்களையும் விபரமாகத் தெரிந்து பிறகே செய்யவேண்டும். இங்குத் தெரிவது என்பதுதான் கல்வி, கல்வியில்லாவிட்டால் தொழில் மேன்மையடையாது. தொழிலிருந்தாலும் தனக்கும் பிறருக்கும் உபயோகம் செய்யும்வகை தெரியாது. ஆகையால், தொழில் விரும்புவோருக்குக் கல்வி யின்றியமையாததாகையால் வருந்திக் கற்கவேண்டியது.

சகோதரர்களே! கவனியுங்கள். ஒரு தேசம், மத சம்பந்தமாகவும், பாஷை சம்பந்தமாகவும், கைத்தொழில் சம்பந்தமாகவும், மேன்மையுறுவதே தேசத்தின் ஆக்கம் என்பது பலரும் மறுக்க வியலாத மாண்பு. நம் தேசமானது பன்னாட்களுக்கு முன்னமே மேற்கூறிய மனோசத்தி சம்பந்தமாக மதங்களின் உண்மைகண்டும் விரும்பினோர் பெறுமாறுதவியும் விளங்கினர் பலர். இவர்களை ஞானிகள் சித்தர்களென்று கூறுவது மரபு. வாக்கின் சத்தியினைப்பெற்று பாஷையின் உண்மைகண்டு தாங்கள் மேன்மையுற்றும் தங்களை யடைந்தார்க்குதவியும் களித்தும் களிப்பித்தும் விளங்கினர் பலர். இவர்களை வித்வான் கவீஸ்வரன் என்று கூறுவது மரபு. தொழில் சம்பந்தமாக பலதுறைகளும் ஆராய்ந்து தேகசத்தியும், வாக்குசத்தியும், மனோசத்தியும் ஒருங்கே பெற்று விளங்கினர் பலர். இவர்களையே விஸ்வகர்மாக்களென்றும் கம்மியரென்றும் கூறுவதுமரபு. ஐயா! நம் நாடானது இம்மூவிதத் துறைகளினும் சீர்குலைந்ததைப் புத்திமான்கள் நினைத்தால் மனம் புண்ணாகுமாறு நேர்ந்து விளங்குகின்றது. முற்கூறிய இரண்டைப் பற்றிப் பின்னொருமுறை கூறுவாம்.

பின்னதாகிய தொழிலின் பகுதிக்குரியவர்களாகிய கம்மியர்கள் கல்வியைக் கனவிலும் நினையாது கபட எண்ணமுடையவர்களாய்ப் பிறர் நகைக்குமாறு மிகத்தாழ்ந்த நடையுடையவர்களாய் விளங்குவது மிகவும் பரிதாபமே. ஒரு வருக்கத்தார் உன்

னதிலே பெறவேண்டுமானால் தாங்களும் முயற்சிக்க வேண்டும். அன்னியர்கள் அதற்கு தடைபுரியாது உதவியாக நின்று நாண்டவும் வேண்டும். பிரபுக்களோ சிற்றரசர்களோ தொழிலாளர்களுக்குத் தாய்போற்பரிந்து விரும்பியன வெறுக்கத்தந்து பல்லாற்றானும் விருத்தியடையுமாறு கருத வேண்டும்.

இதில் தொழில் என்பது கைத்தொழில் புரியும் பல வேறுவகைப்பட்ட பிரிவாக இருப்பினும் கம்மியர்கள் வசமாக நடைபெறும் ஐம்பெருந்தொழிலே உலகத்திற்கே காரணமாக வுள்ளது. இதனைக் குறித்தன்றே பூர்வப் புலவரொருவர் 'கம்ப நல்லூர்க் கொல்லன் உலைமூட்டினால் இவ்வீரேழுலகு'-என்று தனிச்செய்யுளிற் கூறியுள்ளார். இவ்விதமிருப்பினும் இப்போது சில ஆண்டுகளாக இவர்கள் பத்திரிகை பிரசுரித்தும் சபைகூட்டி உபந்நியாசங்கள் செய்வித்தும் கான்பரன்ஸ் கூட்டி தங்கள் குறைகளை அரசாங்கத்தாருக்குப் பகிரங்கமாகப் பேசி தெரிவித்தும் மனுக்களனுப்பியும் வருவாராயினர். அதினாலொரு பலனும் இதுகாறுங் காணப்படாவிடினும் பிரயத்தனங்களைக் கைசோரவிடாது பின்னோர்களுக்கு வித்தைகளைப் போதித்தும் தொழிற்சாலைகளைப் பல பங்காளிகளைச் சேர்த்துத் தக்க தலைவர்களின் ஆதரவினையைப் பெற்றுச் சிறுகச்சிறுக நடத்திவந்தால் நாளடைவில் பொதுஜனங்கள் தொழிலாளிகள் மீதுள்ள அவநம்பிக்கை மாறிப் பலவிதமாகவே தாங்களும் சேர்ந்து விருத்திசெய்யலாமென முற்படுவார்கள். இவ்விதம் பிரமுகர்கள் பலர் சேர்ந்த காலத்திலேயே இராஜாங்கத்தாரும் தங்கள் கடமையைச் செய்யாதிருக்கவியலாது. விசாரித்து தக்கவாறு உதவிபுரிவார்கள். அப்போது தான் தொழில் விருத்தியடையும். அதனால் க்ஷாமமென்னும் பேரிருள் மாய்ந்து க்ஷேமமென்னும் பேரொளியால் தேசமே முன்னேற்றமடையும்.

அன்பர்களே! இதுகாறுங் கூறியவாற்றால் தினவுள்ளவன் தானே வருத்தப்பட்டுச் சொறியவாற்றாது மிக முயன்று வருந்துவதைக் கண்ணுற்ற விவேகியாகிய புருஷர்கள் உதவிபுரிந்து அவன் கஷ்டத்தினைத் தாங்களே நிவர்த்தி செய்தாலும் அல்லது மேலான மனிதனிடம் தான் பரிந்து கூறி நீக்குவதே உலகத்தில் நிதரிசனமாகும். அதுபோலவே தொழில் செய்வோர்கள் ஜில்லாக்கள்தோறுங் கூடி தங்கள் குறைகளை முன்னம் தெரிந்துகொண்டு தங்களினத்தவர்கள் பலரும் சிறு தொகை யுதவி புரிந்து பகல் பள்ளிக்கூடங்களும் இராப் பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்திச் சுயநலங் கருதாத உத்தமர்களால் கண் காணிக்கப்பட்டுச் சிறுவர்களுக்கு அடிக்கடி பிரசங்க வாயிலாகவும் வாசகசாலையாகிய ரீடிங்ரூம் ஸ்தாபித்து பல சமாச்சாரப் பத்திரிகைகளை வாங்கி வாசிக்கச்செய்து அறிவைப் பரவச்செய்தும் தொழிற்சாலைகளை முற்கூறியவாறு மெஷின்களில்லாவிடினும் தொழில் மூலமாகவே விருத்திக்குக் கொண்டுவந்தால்தான் நம்தேசம் சீர்படும்.

இங்ஙனமில்லாது பிறர் உதவி கொண்டே நடத்தவேண்டுமென்று கருதி இலவு காத்த கிளி போலிருந்தால் நாள் கழியக் கழிய வறுமையதிகரிக்கவும் பல சங்கடங்களை மாறுபட அனுபவிக்கவும் பார்த்தவர் பரிகசிக்கும் நிலைமையிலேயே யிருக்க நேரும். தேசமுன்னேற்றத்தினைக் கருதிய அன்புள்ள சகோதரர்களே! கவனியுங்கள். உறங்காதீர்கள். விழிப்படையுங்கள் "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்; முயற்சி திருவினையாக்கும்" என்னும் தமிழ்த்தாய் கூறும் அரிய நல்லுபதேசத்தினைக் கருத்திலமையுங்கள். சர்வகலாவல்லவன் தன்னருள் சுரப்பான். அஞ்சா நெஞ்சுடைய நெப்போலியனென்னும் மேல் நாட்டரசன் தான் மேற்கொண்ட காரியத்தில் தளராத ஊக்கத்துடன் பிரயத்தனம்செய்து காரியசித்திபெற்றதினாலன்றோ என்றும் மாறாத புகழ்பெற்று விளங்க நேர்ந்தது. நாம் அவர்போல் புதிதாகப் பெறவேண்டியது ஒன்றுங் கிடையாது. நாம் பல காலங்களாகத் தெள்ளிய அறிஞர் பலராலுங் கையாண்டு கீர்த்தியுடன் விளங்கிக் காலவேறுபாட்டால் க்ஷீணமடைந்திருக்கிறோம். அதனைப் புநருத்தாரணம் செய்வதே நமது கடமையாக விருக்கின்றது.

நாம் குடியின் பழமை பாராட்டிக் கர்வமடைகின்றோமே யல்லது பழய தொழிலின் பெருக்குற்று இறுமாப்படையாது தவித்தலுக்கு காரணம் தக்க கல்வியின்மை யென்றே உறுதியாகக் கூறலாம். இதனாலன்றோ "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" என்று கூறினார் முதியார். கண்ணில்லாத அந்தகன் விரும்பிய தலத்தினையடைவது எப்படி அரிதோ, நம்தேசத்திலுள்ள தொழிலாளிகளும் கல்வியில்லாத அந்தகாரத்தில் தொழிலனுபவமென்னும் மின்மினி வெளிச்சத்தில் கலங்குகின்றார்கள். போனநாள் போயினும் புதிய நாட்களையும் வீணே கழித்து விடாது கண்ணுங் கருத்துமாக ஒவ்வொரு புத்திமான்களும் தங்கள் தங்களாலான அளவுக்குப் பிரயத்தனம் செய்து சிறுவர்களுக்கு கல்வி விருத்தியாகுமாறு விரும்புவதுடன் செய்கையிலும் காட்டி நம் சிறுவர்களாவது முன்னேற்றமடைந்து சுகமடையுமாறு முயலவும் முயல்வார்க்கனுக்கூலம் செய்யவும் எல்லாம்வல்ல இறைவன் பேரருள் துணை புரியுமாறு விரும்புகின்றோம்.





## ஐந்துநிறப் பொன்வகைகள்.

பொன்னிற் கலப்புகளெல்லாம் அநுபோகத்தில்தான் தெரியும். ஆயினும், அடியில் கண்ட முறைகள் அனுகூலமாயிருக்கும். பொன்னைச் சேர்மானமீ சேர்த்து உருக்கினால் அதின்குணம் நன்றாய்த்தெரியவரும். செம்பு சுத்திசெய்ததாகஇருக்கவேண்டும். அப்படி செய்யாதபட்சத்தில் குறித்தநிறம் வருதல் கஷ்டம். செம்பும் வெள்ளியும் அயச்செந்தூரமும் சுத்தி செய்தனவாய் வேண்டும். பொன் மஞ்சள்நிறமாக வேண்டுமானால் அசல் தங்கத்தை யுபயோகித்துக்கொள்ளவேண்டும். சிவப்புநிறமாக வேண்டுமானால் அசல் தங்கம் 18பாகம் சுத்தி செய்த செம்பு 6 பாகம் சேர்த்துக்கொள்ளவும். பொன் பச்சைநிறமாக வேண்டுமானால் அசல் தங்கம் 19 பாகம் சுத்திசெய்த வெள்ளி 6 பாகம் சேர்த்துக்கொள்ளவேண்டியது. பொன் நீலநிறமாக வேண்டுமானால் அசல் தங்கம் 18 பாகம் சுத்திசெய்த அயச்செந்தூரம் 6-பாகம் சேர்க்கவேண்டும். பொன் வெண்மைநிறமாக வேண்டுமானால் 12 பாகம் தங்கம் 12 பாகம் வெள்ளி சேர்த்துக்கொள்ளவேண்டியது.

சிவந்தநிறமுள்ள பொன்னும் வெண்மைநிறமுள்ள பொன்னும் புஷ்பஞ்செய்ய முக்யமானவை. பச்சை நிறமுள்ள பொன் இலைகள் செய்வதற்கு முக்யமானது. புஷ்பத்திற்கும் இலைக்கும் காம்பு தழை முதலி

யவைகளைச் சேர்க்க அல்லது செய்ய மஞ்சள்பொன்னை உபயோகிக்கலாம். நீலநிறமுள்ள பொன்னை நாம் செய்யவேண்டிய நகைகளின் சந்தர்ப்பங்களைப்போல் வேலை செய்வது வேலைக்கழகு. மேற்கூறிய பொன்வகைகள் அநுபோகமாகிற வரையில் அவற்றை முயற்சியோடு செய்யும்பட்சத்தில் சுலபமாகும். சேர்மானம் சேர்த்து வேலை பூர்த்தியாகிற வரையிலும் கஷ்டமாகவே தோன்றும்.

இதற்கு குவை நல்லதா யிருக்கவேண்டும். இதில் வைத்து உருக்கின பிறகு வார்க்கக்கூடிய கட்டிசாய்க்கல் இரும்பு அல்லது தண்டவாளத்தினால் செய்ததா யிருக்கவேண்டும் உருக்கின பொன் வார்ப்பதற்குமுன்பாக கட்டிசாய்க்கும் கல்லுக்குச் சூடு காண்பிக்கவேண்டும். சூடுகாட்டின பிறகு அதில் மெழுகு போடவேண்டும். இந்த மெழுகு சூட்டில்கரைந்தவுடன் உருக்கின பொன்னுக்கு வெங்காரம் அல்லது (Salt-ammonia) சால்ட் அமோனியா வென்னும் உப்பைபோடவேண்டும், பிறகு அதனை அடுப்புக்கரிக் கோலினால் ஆறவிடவேண்டும். அப்புறம் பொன்னை கட்டிசாய்க்கக்கூடிய இடத்தில் அதனை வார்க்கவேண்டும். அப்பொழுதே எந்த நிறம் சேர்த்தோமோ அது விபரமாகத் தெரியவரும்.

தவிர, மேற்சொல்லிய பொன்னை சேர்மானம் செய்ய நல்ல திராசு வைக்கவேண்டும். திராசு கொஞ்சமாகிலும் பின்னம் இராமல் இருக்கவேண்டும். இதற்கு தக்க படிகள் இருக்கவேண்டும். அப்பொழுது நாம் சேர்க்கக்கூடியபொன்னுக்கு பின்னம் நேரிடாது. இந்த பொன்னில் சிவப்பு பொன்னும் நீலநிறப் பொன்னும் காச்சினால் தண்ணீரில்தோய்க்கக்கூடாது. அதை குளிரச்செய்து கம்பியோ அல்லது தகடோ வேலைக்குதக்கபிரகாரம்செய்யவேண்டியது. அவற்றை அதிகமாய் அடிக்கக்கூடாது. அதிகமாக அடிக்கும்பட்சத்தில் வேலைக்குப் பின்னம்வரும். ஆகையால் கனக்காக காயவைத்து மெதுவாக அடித்து நீளமசெய்யவேண்டும். வெட்டை மெருகு போட்டு தளுக்கு பிடிபோகாவிடினால் செய்ததை அப்படியே மெருகுபோடவும். இதற்கு பத்தவைப்பதற்கு சவரம் பொன்னினால் சமவிடையாக சேர்த்து சரியாக பத்தவைக்கலாம். (இன்னும் வரும்)

S. அப்பாதுரை ஆச்சாரி,
T. மோகனராம் ஆச்சாரி,
பெங்களூர்.

## விஸ்வகர்மாக்களுக்கு ஓர் விண்ணப்பம்.

கனவான்களே !

"விஸ்வகர்மன் தொழில்" 5-வது சம்புடம் 4-வது சஞ்சிகையில் பூணூல் என்ற வியாஸத்தை கண்ணுற்றவர்கள், துக்கமும் ஆச்சரியமும் கொள்ளாமலிருக்கமுடியாது. ஆனால் அதைப்பற்றி வருந்துவதில் பிரயோசனமில்லை. நான் பார்த்தவரையில் பிறரால் எழுதப்படும் புத்தகங்களில், நம்மினத்தினரைப்பற்றிவரும் சந்தர்ப்பங்களிலெல்லாம், சிறிது கற்றோர்கள் நம்மை இழிவாய்க்கூறாமல் எழுதுவதில்லை. ஆகையால் நம்மிடம் பிறர் எள்ளளவாவது உண்மையில் அபிமானங் கொள்ளவே யில்லை. இவ்விஷயங்களை பல நூல்களில் காணுகையில், இலங்கைவேந்தனின் நெஞ்சம்போல கலங்கவேண்டியதுதான்; இவைகளை எழுதுகிறவர்கள் நமது விரோதிகளால் எழுதப்பட்ட நூல்களைக் கற்று உண்மைநூலைப் பாராதவர்களே அவ்விதம் கூறுவார்கள்; யானையானது சிங்காரிக்கப்பட்டுவருதலைப் பார்த்து ஊளருகிறவர்களை உலகம் என்னென்று உரைக்கும்.

2. குப்பையில்கிடந்தாலும் குண்டுமணி குண்டுமணிதான். ஆனால் குண்டுமணியை குப்பையில் கிடக்கும்படி விடலாகாது; அதை அதனினின்றும் விலக்கி அதன்மேலுள்ள மாசுகளை நீக்குவது உசிதமென்பதை உத்தமர்கள் உண்மை என்று உணர்வார்கள். அத்தூசி, குப்பை முதலானதுகளின் சேர்க்கையை அறவே நீக்கவேண்டியது அவசியமன்றோ. நமது குலத்தைக் குறைகூறும் புத்தகங்களுக்குக் கண்டனம் எழுதவேண்டியது அவசியத்திலும் அவசரமே. 'வன்னிவம்ஸப்பிரகாசிகை' 'வருணபேதவிளக்கம்' முதலிய நூல்களுக்கு ஸ்ரீ சாது மாணிக்க சுவாமிகளால் கண்டனமெழுதப்போவதாய் 6 வருடத்திற்குமுன் வதந்தி; அதைப்பற்றிய விவரம் அன்னவரது சிஷியர்கள் நமது "விஸ்வகர்மன் தொழிலில்" வெளியிடுவதை ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்கள்.

3. ஷை வியாஸத்திற்குக் கண்டனம் எழுத விரும்பும் நண்பர்கள் நமது "விஸ்வகர்மன் தொழில்" பத்திராதிபர் அவர்களுக்கே எழுதவேண்டுமாய்க் கோருகிறேன். இவ்விதம் பல கண்டனங்கள்வந்து சேரும். அவைகளில் எவை, மற்றவர்களின் கேள்விக்கு இடமில்லாமலும், தகுந்த ஆதாரத்துட னிருக்குமோ அந்த வியாஸங்களை, தகுந்தவிதமாய் பரிசிலனைசெய்து வெளியிடுவார்கள். ஏன் எனில், சாஸ்திர சம்பந்தமான விஷயங்களில் சுஜாதி பண்டிதர்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் பல விருந்து வருவதென்பதை ஸ்ரீ வி. ஆர். சுப்பராய ஆச்சாரி போன்ற நண்பர்கள் ஒப்புக்கொள்ளாது போகமாட்டார்கள். ஆகவே நன்றாய் பரிசிலனை செய்தே தக்க மேற்கோள்களுடன் வெளியிட வேண்டுமென்பதே நோக்கமாகும்.

4. இத்தியாதி விஷயங்களுக்கு இடமின்றி நடந்துகொள்ளவும், இவ்விஷயங்களைப் பற்றிய அபிப்பிராயங்களைக் கலந்துகொள்ளுவதற்காக தனித்தொரு பரிஷத் கூடவேண்டுமென்பது சிலகனவான்களின்கருத்து. அவ்விதம் கூடுவது காலதாமதத்திற்கும் பணவிரயத்திற்கும் காரணம் என்பது என் போன்றவர்களின் கருத்தாகும். சென்னையில் கூட உத்தேசிக்கும் கான்பரன்சில், பல பண்டிதர்களும் டெலிகேட்டுகளாய் (Delegates) வருவார்கள்; அந்த கான்பரன்சில்(Pass)பாஸ் செய்யப்படும் (Resolutions) ரிசலூஷன்களை அமுலுக்குக் கொண்டே கூடவேண்டு மென்பது சென்னை சபையாரின் கருத்தா யிருப்பதால் அக் கான்பரன்சின் 3-வது நாளில், பண்டிதர்களும், பௌரோகிதர்களும், ஜில்லா, கிராமம் முதலான இடங்களிலுள்ள சுஜாதித் தலைவர்களும், வலங்கை இடங்கை சண்டைக்குக் காரணமான தெலுங்கு, கன்னட தேசங்களின் பண்டிதர்களும் கலந்து ஷை கூறப்பட்ட புத்தகங்களுக்குக் கண்டனம் நாம் கையாடக்கூடிய வழக்க ஒழுங்குகள் விரதங்கள் முதலானவைகளை நிச்சயிக்க வேண்டுமென்பது எனது கோரிக்கை. (Mr Hunter, Mr Nelson) மிஸ்டர் ஹண்டர், நெல்சன் முதலானவர்கள் கூடியிருப்பதையும், ஸ்ரீ C. R. சுப்பராய ஆச்சாரி அவர்கள் தமது லிகிதத்தில் 9-வது

10-வது பாராக்களில் கூறியிருப்பதையும் கமிட்டியார்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

5. சமீபத்தில் மேலப்பாளையம் (திருநெல்வேலிக்கு அருகிலுள்ள ஓர் கிராமம்) என்ற கிராமத்தில், குலாபிமானமும், ஈசுவரபக்தியும் கொண்டு விளங்கும் ஸ்ரீ நயினார் ஆச்சாரி அவர்களால் கட்டப்பட்ட ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலய கும்பாபிஷேகம் சென்ற ஆவணிமீ 30உ நடைபெற்றபோது நானும் போயிருந்தேன். அப்போது, கும்பாபிஷேகம் செய்தவர்கள், 160 ரூபா பெற்றுக்கொண்ட விப்ர சகோதரர்கள்! மருந்து சாத்தினவர்கள் ஸ்தபதிகள். நம்மவர்களால் செய்யப்படும் ஆலயத்திலேயே இவ்விதமென்றால் பிறரால் பிரதிஷ்டை செய்யப்படும் ஆலயத்தில் என்னவிராது? இதனால் நாம் மருந்து சாத்தமாத்திரம் அருகர், கும்பாபிஷேகஞ் செய்ய அருகரல்லர் என்பதை வேறே யாராவது ருசுப்படுத்தவேண்டுமா? ஆனால் மேற்கூறிய நண்பர் அவர்கள் இது விஷயமாய் சில முகாந்திரங்கள் உரைத்தார். அதனால் நமக்குள் கட்டுப்பாடும் ஒற்றுமையுமில்லை என்பதே காரணம் என விளங்கிற்று; ஸ்ரீ S. சங்கர ஆச்சாரியாரவர்கள், இனிநடக்கும் காரியங்கள் எல்லாம் தம்பிடம் கலக்காமல் செய்யலாகாதென்று கூறியதற்கு அன்னவரும் ஒப்புக்கொண்டுள்ளார்.

6. ஒவ்வொரு ஜாதியிலும் குற்றமும் குறைவுமில்லாமலில்லை. அவைகள், அச்சாதியார்களின் ஜனத்தொகைக்குக் குறைவான குற்றமும், அவர்கள் கொண்டுள்ள வெளிப்படையான நடையுடைபாவனைகளினாலும் மறைப்பட்டொழிகின்றன. நம்மை நாமே பெரியவர்கள் என்று தற்புகழ்ச்சியாய்க் கூறிக்கொள்வதும், நம் ஜனத்தொகை ¾-க்குமேல் குறைவான நடைகளைக் கொண்டுள்ளவர்களாயிருப்பதும் நமது இழிவிற்குக் காரணம். ஒரு ஜாதியின் உயர்வும் தாழ்வும் அச்சாதியர்களின் பெரும் பகுதியர் கொண்டுள்ள நடையுடை பாவனைகளினால் நிச்சயிக்கப்படுமென்பது அநேகரின் கருத்து. நாடகத்தில் துலுக்கவேடம் அணியப்புகுந்த ஒருசெட்டி அல்லதுவேறு மதஸ்தன் தன் வேடத்திற்குரிய தாடி மீசை தலைப்பாகை, உடை, வார்த்தை முதலியவைகளில் குறையின்றி நடந்துகொண்டாலல்லாமல் அவ்வேடத்திற்குரியவனென்று கூறமுடியாது! துலுக்கவேடத்திற்குரிய நடையுடை பாவனையின்றி நான் துலுக்கன் என்று (Stage) ஸ்டேஜில் இங்குமங்குமலைந்தால் அவன் பிறர் நகைக்கு உள்ளாகாது போவானா? நாம் பிறரால் தேவப்பிராமணன், விஸ்வப்பிராமணன் என்று அழைக்கப்படவேண்டுமானால், என் அப்பன் காலத்தில் ஆயிரம் வேலி நெல் என்று கூறி நான் கஞ்சிக்குக் கதருவதுபோல் நாம் நமது ஒழுக்கங்களில் கவனமின்றி வாயில் நான் "விஸ்வப்பிராமணன்" என்று கூறுவதில் எள்ளளவேனும் பிரயோசனமில்லை. நடைகளினால் (ஒழுக்கத்தினால்) ஜாதிக்கு உயர்வு உண்டாக வேண்டுமேயன்றி பெயர்களின் தன்மையாலல்லவென்பதை உள்ளத்தில் ஊன்றச்செய்வதுவே உத்தமர்களின் உண்மைக் கருத்தாகும். எல்லா நன்மையும் கல்வி, ஒழுக்கம், உத்தியோக பதவி முதலானவைகளினால் ஆகவேண்டுமேயன்றி தற்போதத்தாலும், பிறரைத் தூஷிப்பதாலும் ஆகவே ஆகாது. (Ifyou want tobe respected by others you should respectothers) நீ பிறரால் மதிக்கப்படவேண்டுமானால் நீ பிறருக்கு மரியாதைசெய்யவேண்டும்" என்ற பழமொழியைப் பின்பற்றி நடக்கவேண்டும்.

"தாழ்ந்தவருணத்துதித்தவரும் தக்கோராவர் ஒழுக்கத்தால்" என்ற பாசுரத்தின் உண்மையை உற்று நோக்குவதே நெறி. "விஸ்வகர்ம உபதேச வீரகண்டாமணி"யில் நமது நண்பர் கூறும் ஒவ்வொரு மொழியையும் உள்ளத்தால் ஊன்றிப் பார்த்திருந்தால் உல்லங்கனத்திற்கு இடமின்றி உத்தமராவோம் என்பது உண்மை.

7. நமது சஞ்சிகைகளில் நமதுமுன்னேற்றத்திற்குரிய அரியபெரிய விஷயங்கள் அப்போதைக்கப்போது வருவதை நாம் கவனித்துவருகிறோமா என்பது சந்தேகம். இதில் குற்றமானால் மன்னிக்கவும்.

8. மேலும், மேற்கண்டவிதமாய், கான்பூரன்சின் 3-வது நாளில் கூடும் "ஆசார சீர்திருத்தக் கமிஷனர்கள்" நமது கவனத்திற்கு நாம் நடக்கவேண்டிய விஷயங்களைக் கொண்டுவருவார்கள். அவ்விஷயங்களை அமுலுக்குக் கொண்டுவர அங்கங்கு கமிட்டிகள் ஏற்படவேண்டும். அந்த கமிட்டியார்களின் கருத்திற்கு இணங்காதவர்களை ஜாதிக்கட்டுப்பாடு முதலான நிபந்தனைகளினால் கட்டுப்படச் செய்யவேண்டும். 5 வருடத்திற்கு ஒருமுறை சென்னைச் சபையாரால் தெரிந்தெடுக்கப்படும் "ஆசார சீர்திருத்தக் கமிஷன்" வந்து பரிசீலனை செய்யவேண்டும். இதில் சங்கத்தார்களும் ஊரார்களும் உள்ளங்கலந்து ஒழுகினால் உன்னதமடைதல் ஒருதலை என்பது உலக சம்மதமான உண்மை. இதை உதாசினஞ் செய்தவர்கள் உல்லங்கனத்திற்கு உள்ளடங்கி ஊரார்நகைக்குஇடமாகவேண்டியதுதான்.

9. (a) ஸ்தபதிகள் விக்கிரஹஞ்செய்து கொடுப்பதற்குமுன் தாம் எல்லாக்காரியங்களையும் செய்வதற்கு சட்டபூர்வமாய் ஒப்புக்கொள்ளப்பட்டாலன்றி அட்வான்ஸ் பெறக்கூடாதென்பதை உள்ளத்தில் ஊன்றச்செய்வதோடு அதை வழக்கத்தில் கொண்டுவரவேண்டும்.

(b) இவர்கள் 5 வகுப்பிலும் மேலானவர்கள் என்று வாய் வீசுவதை அறவே நீக்கவேண்டும்.

(c) மநு வகுப்பார், மய வகுப்பார் சில இடங்களில் சிற்சிலர் ஆசாரக்குறைவாயிருப்பதால் விஸ்வக்ஞ வகுப்பார், அவர்களுடன் சுபாசுபகாரியங்களில் உண்பதில்லை, கொள்வதும் கொடுப்பதுமில்லை; இதுமுற்றிலும் பிசகு. ஆசாரமுள்ள ஒரு விஸ்வக்ஞன் ஆசாரமில்லாத மநு மய வகுப்பில் பெண்கொண்டால், தனது மருமகளுக்காகவேண்டியாவது அவர்கள் சுத்தமாயிருக்க நேரிடும்; அது சிறிதுநாளில் வழக்கத்திற்கு வரும். இவ்வித அபிப்பிராயபேதமே நமது வழக்க ஒழுக்கங்கள், எங்கும் ஒரேவிதமாய் காண்பதற்கில்லாது போவதற்குக் காரணம். இதை இனியாவது உற்றுநோக்குங்கள்

10. படிக்குஞ் சிறுவர்களை பெற்றோர்கள் படிக்காது செய்துவிடுகிறது உண்மை என்பது நேரில் விசாரிக்கப்புகுந்ததில் தெரியவருகிறது. இது எப்படி என்றால்— ஒரு கவுண்டன் தனது வீட்டில் தன்ஸ்திரீயினிடம் தவறிப்போன மாட்டைப்பற்றி பேசிக்கொண்டிருக்கையில், அவன் மகன் பள்ளிக்குச்சென்றவன் அரி, சித்தரி, நானு என்று கூறிக்கொண்டே வாசலில் கால் வைக்கும்போது நானு என்று கூறுவதற்

கும்கவுண்டன் யார் மாட்டைத்தேடப்போகிறீர்கள் என்பதற்கும் சந்தர்ப்பம் ஒன்றுமிருந்தது; நானு என்று உடனே தனது மகன் கரத்திலிருந்த ஓலைச்சுவடிகளைப் பிடுங்கி "ஆனமானவன் வயிற்றில் பிறந்து ஆட்டைமாட்டை மேய்க்காமல் ஓலைவாரிக் கழுதையாய்ப் போகிறாயே" என்று அடித்தானும். அதுபோல கம்மாளன் வயிற்றில் பிறந்து கதிர்கம்பி நீட்டாமல், கல்வி கற்கவா போகிறாய் என்று படிக்கும் சிறுவனை பட்டறைப்பையனு யிருக்கச்செய்யும் பாவிகளை என்னென்றுரைப்பது.

(b) நாம் பிறருக்குச் செய்துகொடுக்கும் சாமான்கள் (Exhibition) கண்காக்ஷி சபைக்கு அனுப்பப்படும்போது, (Maker's Name) செய்தவர்கள் பெயர்கள் நம்மிடம் வாங்கிச்சென்ற பிறஜாதியார்களின் பெயரா யிருக்கிறது. அதில் மெடல்முதலானது பெறுவதால் காளடைவில் பிறஜாதிச சகோதரர்களும் இவ்விதத்தொழிலில் வல்லவர்கள் என்று புத்தகங்களில் தாக்கலாய் விடுவதனுலே நமது தொழிலில் க்ஷீணதிசை யடைந்தும், கஷ்டப்பட்டும் கலங்குகின்றோம்.

(c) ஒருவன் தனது நடத்தையால், தனது நேத்திரத்தில் ஒரு பூ விழுந்து பார்வை குறைவா யிருந்து வந்தான். அவன் தனது தேசம்விட்டு அயல்நாடு சென்று வாழ்க்கையில் அவனைக் குருட்டுக்கண்ணன் என்று ஊரார் கூறுவதைக் கண்டு அவன் நான் நல்ல கண்ணன்தான், நான் இன்ன வூரிலிருந்தேன் என்று கூறினும் கேலி செய்தவர்கள் கேலிசெய்யாதிருப்பார்களா? அவன் சென்னைக்குச் சென்று, நேத்திர சிகிச்சை செய்யப்பட்டு, நேத்திரப்பார்வையும் பெற்றால் குருடன் என்று கூறியவர்கள் அதை மறைப்பார்கள். கனவான்களே! இம்மூன்று விஷயத்தையும் கவனிக்கையில் நமது கடைகளும், கவனக்குறைவும், நமது கல்வி, கைத்தொழில், ஆசாரம், முதலானவைகளின் கெடுதிக்குக் காரணம் என்பதற்கு எதிர்மொழியுண்டோ?

11. கலியுகம், திரேதா துவாபர யுகங்களில், பராக்கிரமசாலிகளாயும் அரசர்களாயுமிருந்த இராவணேசுவரன் சூரபத்மன்முதலானவர்கள் விப்பிரர்களின் சூழ்ச்சிக்கு உட்படாததால் அவர்களை தாங்களியற்றிய புராணங்களில் இராக்ஷகர்கள் என்று கூறினார்கள். இதனுண்மை புராணங்களின்உண்மையை உணர்ந்தவர்களுக்குத் தெரியாது போகாது; கபிலர், திருவள்ளுவர் முதலியவர்கள் புராணங்களை எவ்விதம் மதித்துள்ளார்கள் என்பது அவர்கள் நூல்களினால் வெளியாகும்.

இவைகளை யுணராமல் அந்த யுகங்களில் கூறியபேதாபேதமில்லாத மக்களில் வலங்கை இடங்கை வித்தியாசங்களை உண்டுபண்ணினதும், தாழ்ந்த வர்க்கத்தினரைச் சேர்ந்தவர்கள் என்று கூறுவதையும், தற்போது ஆச்சாரிப் பட்டத்திற்கு அழிவுண்டாக்கியிருப்பதையும் நோக்குங்கால், 'திராவிடர்-தமிழர், பிரான்ஸ்-பிரெஞ்சு France-French என்பதுபோல் நாமும் நாட்டுப்பெயருடன் ஜாதிப்பெயரை பாஞ்சாலம் பாஞ்சாலர் என்ற நாமத்தோடு இருந்து வருவதையும் ஒழித்து இவ்விதமான ஜாதி ஒன்று ஆதியில் இல்லவேயில்லை என்று கூறக்கூடிய நிலையில் வந்துவிடும் என்பதை உத்தமர்கள் உள்ளத்தில் ஊன்றச்செய்து இன்னமும் இதுவரை இருந்து வந்ததுபோல் இருக்காதல் இன்னலுற்று இடிவிழுந்த மரம்போலாவோம் என்று கருதி, நாம் நமது நடையுடைபாவனைகளைத் திருத்தி தற்போதமும் பிறமத நூதனையுமின்றி, வாய்மையுடன் உலகத்தி னியல்புகளை ஊக்கத்துடன் ஊன்றிப்பார்த்து உத்தமவழிகளைக்காட்டி நடப்பதில் ஸ்ரீமத் விஸ்வேசுரன் அருள் என்றும் கிடைக்கும்வண்ணம் பிரார்த்திக்கின்றேன்.

T. தங்கவேல்.

உத்தமர்க்கு ஊழியன்.



## சிற்பிகள்கை அற்புதங்கள்.

ஸ்ரீ கோ. கன்னியப்ப ஆச்சாரியார்.

சதுரங்கப்பட்டினத்திற்கும் திருப்போரூருக்கும் அருகிலுள்ள மஹாபலிபுரமென்னும் க்ஷேத்திரத்தில் காணப்படும் சிற்பத் தொழிற் பெருமையைப்பற்றி விசேஷமாக அடிக்கடிசொல்லக்கேட்டிருக்கிறோம். ஆயினும், அதன் சரித்திரமொன்றும் விபரமாகத் தெரியவில்லை. இந்த க்ஷேத்திரத்திலுள்ள சரவேலைகளை விசேஷமாகக்கொண்டாடுவதற்கு காரணம் இருக்கவேண்டும். இதைவிடப் பதின்மடங்கு வேலைத்திறமாக அநேக இடங்களில் பல சிற்பிகள் இராஜாக்களிடம் பொருள்பெற்று செய்து முடித்திருக்கிறார்கள். இந்த மஹாபலிபுரத்தில் அப்படிச் சிற்பிகள் காசு வாங்கிக்கொண்டு வேலைசெய்ததாகத் தெரியவில்லை.

அந்த காலத்தில் சிற்பாச்சாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் ஏதோ வியாஜ்யம் நடந்ததாம். அவ்வியாஜ்யம் அந்த மஹாபலிபுரத்தை ஆண்டுவந்த அரசரிடம் தீர்மானத்திற்கு வந்திருந்ததாம். அப்பொழுது இருந்த கர்னாடக ராஜாக்கள் ஒருவருடம் இரண்டு வருடம் வரையில் கேசுகளை அமைந்து விசாரிக்காம லிருப்பது பழக்கமாம். அச்சமயம் வந்திருந்த சிற்பாச்சாரிகள் சாதம் சமைத்து சாப்பிட்டுவிட்டு வீண்காலம் கழிக்க மனமில்லாமலும் வேலையின்பேரிலேயே ஊக்கமுடையவர்களாகவுமிருந்தபடியால் தங்களுடைய வேலைத்திறமையைக் காட்டும் நிமித்தம் அம்மஹாபலிபுரக் கற்பாறைகளில் அவரவர்களுக்குத் தோன்றியவண்ணமும் அந்த க்ஷேத்திரத்தின் பெருமைக்குத் தக்கவாறுகவும் சிற்ப சாஸ்திரத்தின் பிரகாரம் சிற்ப வேலைகளை ஆரம்பித்துசெய்துவந்தார்களாம். இவர்கள் செய்யும் வேலைகளுக்கு சம்பாவனையும் கிடையாதாம். வேலையைச் செய்யச்சொன்ன முதலாளியும் கிடையாதாம்.

அப்படி சிலநாள் செய்துகொண்டு வந்தபோது ஒருநாள் அவ்வரசன்வேட்டையாடி வரும்போது இவ்வேலைத் திறமைகளைக் கண்டு பிரமித்து இவ்வித வேலைகளை யார் செய்யச்சொன்னதென்றும், யார் செய்தவர்களென்றும் கேட்டபோது அவ்விடத்திலிருந்த சிற்பாச்சாரிகள் நாங்கள்தான்செய்தோம் எங்களுடையகேஸ் தங்களிடத்தில் தீர்மானத்திற்கு வந்திருக்கிறது. அதற்காக வந்தவர்கள் தாங்கள் எங்களை இதுபரியந்தம் அழைத்து விசாரிக்கவில்லை யாகையால், வீண்காலத்தைப் போக்காமல் இவ்விதத் தொழில்களைச் செய்துவந்தோமென்று சொன்னார்களாம். அவ்வரசன் ஆச்சரியமுற்று அப்பொழுதே அவர்களையழைத்துக்கொண்டுபோய் அக்கேஸை விசாரித்து இவர்கள்பக்ஷம் தீர்மானம் செய்ததாகவும் உடனே இந்த சிற்பாச்சாரியர்கள் சந்தோஷத்துடன் அவரவர்கள் ஊருக்குச் சென்றுவிட்டதாகவும் அப்பொழுது எது பரியந்தம் செய்து முடித்தார்களோ அத்துடனே அவ்வேலைகள் நின்றுவிட்டதாகவும் பெரியோர்களால் சொல்லக் கேட்கிறேன்.

இன்னும் வேறுவிதம் கேள்விப்பட்டவர்களாவது ரிகார்ட்டுமூலமாயாவது தெரிந்தவர்கள் இருந்தால் விபரமாக எழுதினால் யாவரும் தெரிந்துக்கொள்ள முடியும். அந்தப் பிராந்தியங்களில் சிற்பாச்சாரிகளுக்கு வேலைத்திறமைக்காக கல்மலைகளை இனாமாகக் கொடுத்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அம்பையாளச்சேரி முதலிய இடங்களில் சிற்பாச்சாரிகள் வாய்தா செலுத்துவது கிடையாது. அம்மலைகளில் அவர்களுக்கு வேண்டிய கல்களை எடுத்து வேண்டிய வேலைகளைச் செய்துகொள்வது பழக்கம். அது அநேகநாளாக நடந்துவந்திருக்க இரண்டொரு வருடத்திற்குமுன் அதை யாரோ தடுத்ததாகவும் அதைப்பற்றி ஏதோ வியாஜ்யம் நடப்பதாகவும் கேள்விப்பட்டிருக்கிறோம். அது எப்படியானதும் தெரியவில்லை.

முன்னிருந்த விஸ்வகர்மாக்கள் தங்கள் கைத்தொழில்களின்பேரில் எவ்வளவோ ஊக்கம்வைத்து தொழில்களை விருத்திசெய்து பாதுகாத்துவந்தார்கள். இப்பொழுதுள்ள விஸ்வகர்மாக்கள் தாங்களும் செய்யாமல் தங்களுடைய வம்சஸ்தர்களுக்கும் சொல்லிக்கொடுக்காமல் சிற்ப சாஸ்திரங்களைச் செல்லரிக்கும் ஸ்திதியில் வைத்திருக்கிறார்கள். அப்படிச்செல்லுக்கு வைப்பதைவிட அவைகளுக்கு காப்பிகளெடுத்து சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபைக்கு அளித்தால் லைப்ரெரியிலாவது வைத்துப் பாதுகாப்பார்களென்று நம்புகிறேன்.

கம்மாளரி கொத்தர்களும் கம்மதொழில் கொத்தர்களையும் காபி எடுத்து ஒவ்வொருவரும் அனுப்பினால் எல்லாப் புத்தகங்க-

## குலாபிமானக்கொத்து.

(நமது திருநெல்வேலி நிருபரிடமிருந்து)

தெற்கே நாங்குநேரி, களக்காடு முதலிய விடங்களுக்கு யாத்திரை செய்து குருகாணிக்கையும் குலஜனங்களின் நன்மதிப்பையும் பெற்றவரும் திருநெல்வேலி பரசமய கோளரிநாத இராஜரெத்தின சுவாமிகள் நமது குல விருத்திக்குரிய விஷயங்களைப் போதித்து அவைகளைக் கையாடும் வழியைத்தேடி குலத்தை முன்னுக்கொண்டுவருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் களக்காடு "விஸ்வகர்ம சபையின்" இரண்டாவதாண்டு நிறைவு விழா கூடிய சீக்கிரத்தில் நடைபெறுவதாய்த் தெரிவதால் இதில் சுவாமிகளும் அன்னவர்கூடச் சென்றவர்களும் ஊக்கமெடுத்துக்கொண்டால் குலவிருத்திக்கு நன்மை உண்டாகும்.

### விவாஹம்.

இந்த ஜில்லாவில், மனு, மய, விஸ்வக்ஞ இந்த வகுப்புகளில் பேதம் சகலவிதத்தும் இருந்து வந்தது. தற்போது அது நீங்கி மநு, மய, விஸ்வக்ஞ வகுப்புகளில் ஒருவருக்கொருவர் சொன்னதால், கொடுப்பதுமாயிருந்து வருகிறார்கள். இது நமது குல ஈடேற்றத்திற்கு முக்கிய விஷயமாகும்; ஒற்றுமைக்கு வித்தாகும். "விஸ்வகர்ம சன்மார்க்க சபை"யின் பிரசிடெண்டு ஸ்ரீ M, S சங்கர ஆச்சாரி அவர்கள் தமது விவாஹத்தை மய வகுப்பில் நடத்திக்கொண்டது குலத்தினர் யாவரும் கவனிக்கத்தக்கதே யாகும். இதைப்போல் மற்ற விடங்களிலும் நம் ஜாதியினர் பேதத்தை ஒழித்து பெரிய ஒற்றுமைத்தேடுவார்களாகவும்.

---

ளும் நமது ஆபீஸிற்கு ஓரிடத்திலேயே யிருக்கும்.. வேண்டியவர்கள் இவ்விடத்திலேயே வந்து பார்த்துக்கொள்ளலாம். விரைப்போகாது. இவைகளில் போனது போக இனியாகிலும் இவ்விதம் செய்வார்களென்று நம்புகிறேன்!



### கூட்டுத் தொழில்

திருநெல்வேலிபாலத்தில் நீலகிரி ஸ்ரீ T.முத்துசாமிஆச்சாரி ஸ்ரீபூவலிங்கமாச்சாரிமுதலானவர்கள் "கம்பனிபட்டரை" என்று கூறி, கூட்டுறவாய் வேலைகள்செய்து வருகிறார்கள். இப்படிச்செய்வதில் லாபமதிகம் என்று கூறுகிறார்கள். இவர்கள் வரவு செலவு கணக்குவைத்து வருவதே லாபத்திற்குக் காரணம்.

கூலிகட்டுப்பாடு, நாணயம், கெடுவுதவறாமை வாய்மை முதலானதில் நம்மினத்தினர் கவனம் வைத்து கண்ணியமடைய ஷெடியார்கள் வழிகாட்டிகளாயிருந்து வருவதும்; அவர்களும் Mr. V. M கந்தசாமி ஆச்சாரியும் (சாஸ்திரி என்று கூறப்பட்டவர்) "விஸ்வகர்ம சன்மார்க்க சபைக்கு" பல வழிகளில் உதவிவருவதும் சிலாகிக்கத்தக்கதே யாகும்.

### மடம்.

திருச்செந்தூரில் நல்லதோர் மத்தியவிடத்தில், நமது முன்னோர்களால் "விஸ்வகர்ம மடம்" என்ற நாமத்துடன் ஓர் மடம் அமைக்கப்பட்டிருக்கிறது. தற்போது நமது வகுப்புகளில் மாணுட்டுக்காரர்களுக்கும் - நாட்டார்களுக்கும் தாவாக்கள் அதன் பாத்தியா பாத்திய விஷயமாய்க் கோர்ட்டில் நடைபெற்று வருகிறது இது போன்ற விவாதங்கள் எங்கும் நம்மினத்தினருள் நடைபெறுவது விசனிக்கத்தக்கதேயாகும். இதில் நம் குலப்பிரமுகர்கள் காலத்தையும், திரவியத்தையும் வீணுக்குவதினால் மடத்துக்கைங்கரியங்கள் தடைப்படுகின்றன. அதனால் குலோத்தாரண விஷயங்களும் பின்னடைகின்றன; பொதுவாய்க் குலம் விருத்தியடைந்தால் அதன்புகழ் குலத்திற்கே ஊரோடு ஒத்துவாழ்வதன்றோ உலகினர் நன்மைக்கு வழியாகும்.

### குலோத்தாரணக்கூட்டம்.

ஜூலை 24உ புதவாரம் திருநெல்வேலி ஸ்ரீ சண்முகமாச்சாரி அவர்கள் கிருஹத்தில் சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் காரியதரிசி ஸ்ரீ பி. சொக்கலிங்கமாச்சாரி அவர்களின் ஆதரவின்கீழ், விஸ்வகர்ம சன்மார்க்க



## குலாபிமானக்கொத்து-2.

### ஓர் வியாஜ்ய விவரம்..

குளித்தலை தாலுகா இனும் ஆலத்தூர் கிராமம் கஸ்பாவில் ஷெடி கிராமம் முன்சீபு வேலையும் கர்ணம் வேலையும் பார்த்துவருகிற வைத்தியலிங்கம் ஆச்சாரி தாயார் இறந்துபோனாள். அதற்குமுன் ஷெடி ஊரில் போலீஸ் பந்தோபஸ்தின்பேரில் நம் இனத்தாருக்குள் நடந்த விவாகமுகூர்த்த ஊர்கோலத்திற்காக ஷெடி ஊர்க் குடிகளுக்கும் நம் இனத்தாருக்கும் விரோதம் ஏற்பட்டு வண்ணான் பரியாரிகளை நமக்குத் தொழில் செய்யாதிருக்கும்படித் திட்டம்செய்திருந்ததினால், இப்போது நடந்த காரியத்திற்கு ஷெடி தொழிலாளிகள் வேண்டியிருப்பதால் ஷெடி ஊரார்களிடம் ஷெடி வைத்தியலிங்கம் ஆச்சாரி போய் மேற்படி தொழிலாளிகளை இந்த கேத காரியத்திற்கு அனுப்புவீர்களா அல்லது எங்கள் இஷ்

---

சபையாரால் குலோத்தாரண விஷயமாய் பிரசங்கம்நடைபெற்றது. அவ்வமயம் பிரசிடெண்டு (தலைவர்) அவர்கள் தமது முகவுரையிலும், முடிவுரையிலும் நமது கல்வி, ஆசாரம் இவைகளைப்பற்றி சுமார் 2 மணிநேரம்யாவரும்சந்தோஷம் செய்யும்வண்ணம் பிரசங்கஞ் செய்தனர். சென்னைச் சபையைப்பற்றியும் அதன் உழைப்பைப்பற்றியுங்கூறி 'விஸ்வகர்மன் தொழில்' பத்திரிகையை எவ்வளவு பெயர்கள் அதிகமாய்ப் பெறுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு கல்வியை நமது மரபில விருத்தி செய்யலாம். அதன் புண்ணியம் அதன் சந்தாதாரர்களுக்கே யாதலால் அப்பத்திரிகைக்கு ஒவ்வொருவரும் சந்தாதாரரா யிருக்கவேண்டுமென்றும் பிரசங்கம் செய்தனர். ஸ்ரீ டி. தங்கவேலாச்சாரி அவர்களும் கல்வி கைத்தொழில் ஆசாரம் இவைகளைப்பற்றி உபந்நியாசித்தார். ஸ்ரீ கருணானந்த சுவாமிகளும் விஜயம் செய்திருந்தனர். பிறகு, வழக்கப்பிரகாரம் வந்தனோபசாரம் தலைவர் அவர்களுக்குக் கூறப்பட்டு சபை கலைந்தது. வந்தன உபசாரப்பத்திரமும் சபையாரால் வாசிக்கப்பட்டது.

டம்போல் வேறு தொழிலாளிகளை ஏற்படுத்தி நடத்தவாவென்று கேட்டார். அவர்கள் வழக்கம் போல் செய்துவந்த தொழிலாளிகள் வேலை செய்யச் சம்மதிக்காததினால் உடனே நம் இனத்தார்கள் இஷ்டம்போல் வேறு தொழிலாளிகளை நியமித்து பிரேதத்தை அடக்கம் செய்ய எத்தனித்தார்கள். அப்போது மேற்படி ஊர்க் குடிகள் தூண்டுதலின்பேரில் பறையர்கள் ஒன்றுசேர்ந்து கலகம் செய்ய எத்தனிக்கிறார்களென்று தெரிந்து போலீஸ்பந்தோபஸ்து வாங்கிக்கொண்டு அவர்களையுங்கைத்துக்கொண்டு அடக்கம்செய்ய ஆரம்பித்ததில், மறுபடியும் கலகம் செய்ய ஆரம்பித்ததினால் ஜில்லா கலெக்டருக்கும் மாஜிஸ்டிரேட்டுக்கும் போலீஸ் சூபரின்டெண்டெண்டுக்கும் தந்தி கொடுத்ததில் யாதொரு பயனில்லாதிருந்தது. அப்பால் பந்தோபஸ்துக்கு வந்திருந்த போலீஸ்காரர் அவர்களுடைய முயற்சியின்பேரில் அடக்கம்செய்யவோர் வழக்கம்போல் ஊருக்கு ஓர் புறத்தில் கட்டிவைத்திருந்த ஆசந்தியை பிரேதமிருக்கும் வீட்டுக்குத் தூக்கிவர எத்தனிக்கும்போது சகல ஜாதிகளுக்கும் மேற்கண்டபடி வழக்கமென்றும் நமக்குமட்டில் ஆசந்தியிருக்கு மிடத்திற்கு பிரேதத்தைத் தூக்கிப்போக வேணுமென்றும் ஊரார் சொன்னதை நம் இனத்தார் சம்மதிக்காததினால் இருதரப்பிலும் பெருத்த கும்பல் கூடி அடிதடி கலகம் செய்ய எத்தனிக்கையில் வேறு சிலர் கலகத்தை அடக்கி சமாதானம் செய்தார்கள்.

உடனே மேற்படி வைத்தியலிங்கம் ஆச்சாரி இச்சங்கதிகளையெல்லாம், கண்டு போலீஸ் டிப்டி சூபரின்டெண்டு அவர்களிடம் பேரில் மனு கொடுத்துக்கொண்டதின்மேல் 2-சப் இன்ஸ்பெக்டரும், 8-கான்ஸ்டேபிளும் ஆயுதபாணிகளாய் வந்து இருதரத்தாரிடத்திலும் வாக்குமூலம் வாங்கிக்கொண்டு அவர்கள் இஷ்டம்போல் பிரேதமிருக்கு மிடத்திற்கு ஆசந்தியைக் கொண்டுவந்து, பிரேதம் அடக்கம் செய்வதில் ஆக்ஷேபனை செய்பவர்களைக் குற்றவாளியாக்கப்படுமென்று சொல்லி நம் இஷ்டம்போல் அடக்கம் செய்யும்படி அவர்கள் பந்தோபஸ்தின்பேரில் 7-ம் நாள் அடக்கம் செய்யப்பட்டது. இச்சங்கதிகளெல்லாம் எனக்குத் தெரியாது இந்தமட்டில் அவர்கள் பேசாதிருந்துவிட்டார்கள். சுமார் ஒரு மாதத்திற்குப் பிறகு எனக்கு தெரிந்தது.

இப்படிப்பட்ட கேஸை விட்டுவிடலாகாதென்று நினைத்து மேற்படி கேஸ் நடந்து ஒரு மாதம் டயம் பாருகி விட்டதினால் கிரிமினலில் இடம் கொடுக்காதென்று நினைத்து அடியேனுக்கு தெரிந்தமட்டில், 1. District Collector 2. Sub Collector 3 Surgeon General 4. Inspector General of Police 5. Police Superintendent இவர்களுக்கு மேல்கண்ட சங்கதிகளையெல்லாம் காண்பித்து 24 மணிநேரத்திற்குள் அப்புறப்படுத்தும்படி கவர்ன்மெண்டு சட்டமிருக்க இம்மாதிரி 7-நாள் டிலேபடுத்தி பிரேதம் கெட்டுப்போகும்படிக்கும் எங்களை கஷ்டப்படுத்தியும் அவமானப்படுத்தியும் துன்பப்படுத்தியு மிருப்பதோடு வீட்டில் நெருப்பு வைப்பதாகவும் அடித்து இம்சை செய்வதாகவும் சொல்லிக்கொள்வதாயும் மேற்படி வாதி வைத்தியலிங்கமாச்சாரி கவர்ன்மெண்டு ஆபீசாயிருப்பதால் கவர்ன்மெண்டு ரிகார்டுகளுக்கு மோசம் வருமென்றும் இதைப்பற்றி விசாரித்து நியாயம் கிடைக்கவேணுமாய் மனு கொடுத்துக்கொண்டதில் மேற்படி மனுக்கள் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் வந்து அவர் விசாரணை செய்து மேலான ஆபீசருக்கு அனுப்புவதாக சொல்லிப்போயிருக்கிறார்.

ஆகியில் போலீஸ் பந்தோபஸ்துக்குவந்த கான்ஸ்டேபில்கள் அடிதடி கலகம் நடக்க ஆரம்பித்தசங்கதியைப்பற்றி ரிப்போர்ட்டு செய்திருப்பதாகக் கேள்வி. போலீஸ் நடவடிக்கைகளுக்கு நகல் கொடுக்கமாட்டார்களாம். உண்மையை டிபிசில் விசாரிக்கச் சக்தியில்லை. இந்தமட்டியிருக்கிறது. கேஸ் நடந்த இடத்திற்கும் என் ஊருக்கும் 17 மைல் தூரமிருக்கும். கேஸ்காரன் எனக்கு சொந்தக்காரனுமல்ல. நான் மாதம் ஒன்றுக்கு ரூபா 15க்கு கடையில் கணக்கு வேலையிலிருந்து அதைக்கொண்டு ஜீவனம் செய்து வந்தவன். இந்தக்கேஸ் ஆரம்பமுதல் என் தொழிலையும் விட்டு கஷ்டப்பட்டு இம்மாதிரியான கேஸை விடலாகாதென்றும் இதைப்போலொத்த கேஸ்கள் சமீபத்திலுள்ள அனேகம் குக்கிராமங்களிலும் நடக்கிறபடியால் இனி இம்மாதிரி நடவாதிருக்கும்படி இந்தக் கேஸை யெவ்வகையிலும் ஜெயிக்கலாமென்று. எண்ணி இம்மாதிரி துணிந்து நடத்தினேன். சுமார் 8 மாதகாலமாய் இவ்வேலையாயிருப்பதால் உடம்புக்கு நோயுண்டாகி அதினாலும் கஷ்டமடைந்து இனி நடத்தவேண்டிய நடவடிக்கைகள் நடத்தசக்தியற்றவனாய்த்தோன்றுகிறது. இருந்தாலும் குலாபிமான விஷயத்தில் ரொம்பவும் விருப்பமிருக்கிறது.

ஆகவே, இக்கேஸ் இந்தமட்டில் நமக்கு அனுகூலமா யிருக்கிறதென்கிற சங்கதியும் கடைசிவரை ஜெயிக்கலாமென்கிற விபரத்துக்கும் தைரியமும் ஊக்கமும் சொல்லுபவர்கள் ஒருவருமில்லாததினால் ஒருசமயம் பிராப்தமில்லாமல் தோற்றுப்போனால் இதுவரை நஷ்டமும் பெருத்த அவமானமும் ஏற்படுமேயென்று ரொம்பவும் வியாகூலமாயிருக்கிறேன். திரவிய விஷயத்தில் பிச்சை யெடுத்தாகிலும் நடத்தத் தைரியமிருக்கிறது. ஆனால், விவகார விஷயத்தில் தைரியம் சொல்லக்கூடியவர்கள் ஒருவருமில்லையேயென்று களைப்புண்டாகிறது. இவ்விஷயம் எல்லோர் மனதிலும் அருள்வுரிவானுக

ஊழியன்,

T. S. ராமசாமி ஆச்சாரி.

---



## செய்ற்கை விநோதங்கள்.

### நீரில் செல்லும் மோட்டார்.

நிலத்தில் செல்லுவதல்லாமல், நீரிலும் செல்லக்கூடிய ஒரு மோட்டாரை ஆஸ்ட்ரியாவைச் சேர்ந்த வியன்னுவில் எல்கிநீர் என்னும் எஞ்சினியர் கண்டுபிடித்திருப்பதாக ஒருபத்திரிகை கூறுகிறது.

### ஒரு புதிய யந்திரம்.

கடலில் முழுகிப்போகும் கப்பல்களை ஆகாய விமான வாயிலாகத் தூக்குவதற் குரிய கருவியொன்றைக் கட்டியாமாவென்பவர் கண்டுபிடித்திருக்கின்றார்.

### குண்டூசிப் பட்டரை.

இந்த பட்டரைகளிலெல்லாம் பெரியது இங்கிலாந்தில் பர்மிங்காம் பட்டணத்திலுண்டு. அதில் தினம் ஒன்றுக்கு 3,70,00,000 அதாவது 3-கோடி 70-லட்சம் குண்டூசிகள் செய்யப்படுகின்றனவாம்.

### பரிசோதனை இயந்திரம்.

துணிகள் நான்பட நிற்குமா நிற்காதா என்ற விஷயத்தைப் பரிசோதிப்பதற்காக ஒருவகை இயந்திரம் பிராட்போர்ட் என்னும் ஊரில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

### பாம்பு விஷ விற்பனை.

பாம்பின் விஷம் மருந்துகளுக்கும் சில ரசாயனத் தொழில்களுக்கும் பிரயோஜனப்படுகிறது. பாம்பின் விஷத்தைச் சேகரிக்கும் தொழிலை நியூசௌத்வேல்ஸில் செய்து வருகிறார்கள். ஒரு கிரேயின் குண்டுமணி எடை 20, 25 ஷில்லிங் விலையாம் (ஷில்லிங் 12 அணு) மேற்படி விஷம்சேகரிப்பது கடினமானதால் இவ்வளவு விலை கொடுக்கப்படுவதாய்த் தெரியவருகிறது.

### கீழ்நீர்க் கப்பல்.

டியூச்லண்ட் என்னும் ஒரு ஜெர்மன் கீழ்நீர்க்கப்பல் 29 மாலுமிகளையும் பல டன் எடை

யுள்ள தபால்சஞ்சியையும் ஜெர்மன் சக்ரவர்த்தி அமெரிக்கா ஐக்கியநாட்டின் பிரசிடெண்ட் வில்ஸனுக்கெழுதிய ஒரு கடிதத்தையுமேற்றிக் கொண்டு சென்ற சில தினங்கட்கு முன் ஒரு ஜெர்மன் துறைமுகத்தி லிருந்து புறப்பட்டு பிரிட்டிஷ் பிரான்சு யுத்தக்கப்பல்களுக்குப் பயந்து 1800 மைல் தூரம் நீர்மட்டத்திற் குள்ளேயே பிரயாணஞ் செய்து அமெரிக்காவிலுள்ள பால்டிமூர் என்னும் துறைமுகம் வந்து சேர்ந்ததாம். அதில் சாயச்சரக்கும் மிகுதியாக ஏற்றப்பட்டிருந்தது. அக்கப்பல் 1000 டன் எடையுள்ளதாம். அதன் நீளம் 300 அடி; அகலம் 40 அடியாம்.

## பெரிய மணி.

1870-ம் வருஷத்தில் பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பீரங்கிகளால் உருக்கி வார்க்கப்பட்ட பெரிய மணியொன்று இங்கிலாந்திலுள்ள கலோன் கோயிலில் இத்தனை வருஷங்களாக உபயோகிக்கப்பட்டு வந்தது. இந்த மணி உலகத்திலேயுள்ள மிகப் பெரிய மணிகளில் ஒன்றாகும். இதன் நிறை 27-டன்கள் என்ப. இது பதினாலரை அடி உயரமுடையது. அதன்றன் வாயின் சுற்றளவு பதினொன்றரை அடியாம் 1887-ம் வருஷத்தில் இந்த மணி கலோன் கோவிலுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது அந்த கலோனிலேயே பிறிதொரு மணியிருக்கின்றது. இது 1413-ம் வருஷத்திலிருந்து அவ்விடத்தில் காணப்படுகின்றது. சுமார் 11 டன்களுக்கு மேலிட்ட நிறையினதாகும் ஆகுல் வெயின்ட்பால்ஸ் கோவிலில் "கிரேட்பால்" என்றொரு மணியுண்டு. இது பதினேழரை டன்கள் நிறையுடையது. இதனினும் வெஸ்ட் மினிஸ்டர் ஆலயத்திலுள்ள மணி 13 டன்கள் நிறையினதாம். ஆதலின், கலோன் கோயிலுள்ள மணியே இங்கிலாந்திலுள்ள பெரிய மணியாகும். சென்னை டைம்ஸ் பத்திரிகை கூறுவது போன்று ருஷியாவில் இரண்டு மணிகள் இருக்கின்றன. மாஸ்கோவிலுள்ள "மகா மணி" 250 டன் நிறையுடையதாம். இந்த மணி உலகத்திலுள்ள மணிகளுக்கெல்லாம் தலைமை பெற்று விளங்குகின்றது.

## மிகப் பெரிய டைப்ரைட்டர்.

அமெரிக்காவிலுள்ள ஸான்பிரான்ஸிஸ்கோ என்னும் பட்டணத்தில் சிலநாளைக்குமுன் ஒரு பெரிய பொருட்காட்சி நடத்தினார்கள். அங்கே டைப்ரைடிங் மெஷினை வைத்துக் காட்ட விரும்பிய ஒரு கம்பெனியார், அநேக மெஷின்களின் நடுவில் தங்களுடைய மெஷினை வைத்தால் காட்சியைப் பார்க்க வருபவர்கள் கவனிக்காமல் போய்விடக் கூடுமென்று எண்ணி ஒரு பிரம்மாண்டமான டைப்ரைடிங் மெஷின் செய்து காட்சியில் வைத்தார்களாம். இது அவர்கள் விற்பனைக்கு வைத்திருக்கும் மெஷினைவிட 1728 மடங்கு பெரியது. இதில் 9-அடி அகலமுள்ள காகிதத்தில் ஒவ்வொன்று 3-அங்குலம் உயரமுள்ள எழுத்துக்களை அச்சடிக்கும். ஒவ்வொரு எழுத்துக்கும் இடைவெளி 2 அங்குலமிருக்கும். பெரிய மெஷின் 14 டன் நிறையுள்ளது. (ஸாதாரண மெஷின் 30 ராத்தல் நிறைதான் உள்ளது.) இது 21 அடி அகலமும் 15 அடி உயரமும் உள்ளது. இது 30 அடி நீளம் 25 அடி அகலம் 25 அடி உயரமும் உள்ள ஒரு அறையில் வைக்கப்பட்டது. இந்த மெஷினில் அச்சடிக்க இதற்குப் பக்கத்தில் ஒரு சிறிய மெஷினை வைத்து இரண்டுக்கும் மின்ஸார ஸம்பந்தம் ஏற்படுத்தி சிறிய யந்திரத்தில் 'டைப்'அடிக்க பெரிய யந்திரத்திலும் அச்சடிக்கும்படி உபாயம் அமைத்திருக்கிறார்கள். இந்த யந்திரத்தைச் செய்து முடிக்க 2 வருஷம் சென்றதாம். இதற்குப் பிடித்த செலவு 3 லக்ஷரூபாயாகுமெனத் தெரிய வருகிறது.

---



# விசேஷ வர்த்தமானம்.

## இங்கிலீஷ் படிக்கின் குரங்குகள்.

அமெரிக்காவிலுள்ள பிலடெல்பியா என்னும் பட்டணத்தில் போதகாசிரியரொருவர் இரண்டு குரங்குகளுக்கு அக்ஷராப்பியாசம் செய்து வருகின்றனராம்.

## லண்டன் கஞ்சித்தொட்டி.

லண்டனிலே யாரும் பிச்சை யெடுக்கக் கூடாது. வேலைசெய்து பிழைக்கமாட்டாதவர்கள் எல்லாரும் கஞ்சித்தொட்டிக்குப் போகவேண்டுமாம். இதற்காக வருஷந்தோறும் 68 லட்சம் ரூபா செலவு செய்கிறார்கள்.

## மகமதியராய்விட்டார்.

பிக்தால் என்னும் ஓர் ஐரோப்பியர் மகம்மதியராய்விட்டாரென்று காஜா கமால்டீனென்பவர் 'ஹாம்டன்' என்னும் பத்திரிகைக் கெழுதியிருக்கின்றார். அவர் கிழக்குத் தேசத்து சாஸ்திரங்களை நன்றாகப் படித்தவராம்.

## வெள்ளி வியாபாரம்.

இந்திய நாணயத்திற்காகவும் ஐரோப்பிய நாணயத்திற்காகவும் வெள்ளி வேண்டியிருப்பதால் இவ்வருஷத்தில் வெள்ளி கிராக்கி உலகத்திய விலைவிலும் மதிகமாயிருக்குமென்று 'டைம்ஸ்' பத்திரிகை கூறுகிறது லண்டனில் வெள்ளி இரும்பு அவ்வளவாகக் கிடையாது.

## நாய்ப் பாடசாலை.

நாய்களுக்கு திருடர்களைப் பிடித்தல், சுவரேறிக்குதித்தல், ஜலத்தில் விழுந்தவர்களை எடுத்துக்கொண்டு வருதல் முதலிய பல தொழில்களைக் கற்பிக்க பாரிஸ் நகரத்திலும் ஸூரிச் என்னும் நகரத்திலும் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவாம். இத்தொழில்களை நாய்கள் சீக்கிரம் கற்றுக்கொள்ளுகின்றனவென்றும், ஆறுமாதகாலமே அவை பயிற்சி பெறுகின்றனவென்றும் சொல்லப்படுகின்றது.

---


ஆதியே துணை.

A. E. முஹையத்தீன்

## 'சுகஜீவி'

| ஔஷதங்களின் விபரம். | ரூ. | அ. |
|---|---|---|
| சுகஜீவி மாத்திரை புட்டி 1க்கு | 0 | 8 |
| ,, கஸ்தூரி, கோரோஜனை மாத்திரை | 0 | 10 |
| ,, ஆத்ம ஆகார பற்பம் | 1 | 0 |
| ,, வெள்ளை, வெட்டை, மூலிகை யெண்ணெய் | 1 | 4 |
| ,, ஆத்மலாப செந்தூரம் | 1 | 8 |
| ,, நவமூல நாக பற்பம் | 3 | 8 |
| ,, ஆத்ம இரத்தின மாத்திரை | 2 | 4 |
| ,, சர்வரணக் களிம்பு | 0 | 8 |
| ,, மஹாவிஷபேதி காலறாமாத்ரை | 0 | 12 |
| ,, சர்வபடைக்களிம்பு | 0 | 6 |
| ,, ஆத்ம செந்தூரம் | 0 | 12 |
| ,, வெட்டுக்காய திராவகம் | 0 | 8 |
| ,, சர்வஜ்வர ஜன்னி மாத்திரை | 0 | 12 |
| ,, ஆக்ராணம் | 0 | 4 |
| ,, தைலம் டப்பி 1க்கு | 0 | 12 |
| ,, சர்வரோக சந்தனாதித்தைலம் 70-ரூபா எடை டப்பி 1க்கு | 2 | 8 |
| ,, ஷை சந்தனாதித் தைலம் 55 ரூபா எடை | 2 | 8 |
| ,, ஷை சந்தனாதித் தைலம் 35 ரூபா எடை | 1 | 4 |
| ,, குடும்பஆதார சஞ்சீவி லேகியம் | 2 | 0 |
| ,, நறுமணக் கலவை | 0 | 8 |
| ,, வீரிய சாலாமிசிரி தாதுபுஷ்டி லேகியம் | 3 | 0 |
| ,, சந்தான மூலாம் | 1 | 0 |
| ,, சொரிசிரங்கு மூலிகை எண்ணை | 0 | 8 |
| ,, பற்பொடி | 0 | 5 |

மேற்கண்ட சுகஜீவி ஔஷதங்களின் முழுவிபரம் தெரிய விரும்புவோர்கள் தங்கள் விலாஸத்தைத் தெரிவித்தால் விபரமடங்கிய புத்தகம் இனமாகவே அனுப்பப்படும்.

விலாசம்:—

ஹக்கீம் S. P. M. அப்துல்கனீ ராவுத்தர்

A. E. முஹையத்தீன் மெடிகல் ஹால்,

வலங்கிமான், தஞ்சை ஜில்லா.

பெரிய கம்பெனி! பெரிய கம்பெனி!

**திருப்தியில்லா தவைகள்**
**திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.**

நவீன நாகரிகத்திற்கேற்றபடி தயாரிக்கப்பட்ட

பட்டு
சேலைகள்
ரவிக்கைகள்
துப்பட்டாக்கள்
தாவணிகள்
வெண்பட்டு வேஷ்டிகள்
அங்கிகள், சாரங்கள், கம்பைகள்.

உருத்திராக்ஷங்கள்
ஜபமாலைகள்
காசிவைரவர் பிரசாதக்கயறு
கஸ்தூரி
முதலியவை.

விலை விபரங்கடங்கிய
'பட்டு பீதாம்பர' கேட்லாக்
**'இனாம்'**

Addres:—
Manager,
Siik Pitamber Co,
Benares City.

விலாசம்:—
மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி.

டாக்டர் K. T. ராமஸ்வாமி M. A. ph. D., அவர்களின்
புதிய யோக நூல்கள்.

ஆத்ம யோக மனோவிஞ்ஞான சாஸ்திரம்.

இதிலடங்கிய விஷயங்களாவன:—நிட்சிந்தப்பயிற்சி, மனோவசியம், ஹிப்னாடிஸம் மெஸ்மெரிஸம், மானஸதத்தி, பிரார்த்தனா ஆராய்ச்சி, ஞானதிருஷ்டி, ஆகாசிரவணம், தேவதா உபாஸனை, பிதுர் சம்பாஷணை முதலிய அரியபெரிய ஞான ரகசியங்களும், யோகாப்பியாச முறைகளும் 100 படங்களில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ்வரிய நூலைக் கைப்பற்றிய 2 மாதங்களுக்குள் மேற்கண்ட இச்சா சக்திகளைப் பெறலாம் என்பது திண்ணம்.

விலை ரூ. 1—1 தபால் கூலி பிரத்தியேகம்.

---

தபோடலி யோக தந்திரம்.

இப்புதிய தமிழ் யோகநூலில் குண்டலினி என்ற சூக்ஷம சக்தியை அபிவிருத்தி செய்ய யோகமுறைகளும் அப்பியாசங்களும் அனுபவசித்தி பெற்ற அரியபெரிய ஞான ரகசியங்களும் வெகு தெளிவாய் எளிய தமிழ் நடையில் காண்பீர்கள்.

விலை ரூ. 1—8 தபால்கூலி பிரத்தியேகம்.

---

மனோஜால தந்திரம்.

இப்புதிய தமிழ் நூலில், பிறர் மனதைக் கட்டி ஜாலக்கிரியையில் மயக்கிச் சித்தத்தினுள் அநேக அற்புத மனோஜாலம் என்னும் கண்கட்டி வித்தைகளை செய்ய தகுந்த யான சாஸ்திர முறைகளை காண்பீர்கள். இதில் நூதன ஆங்கில முறையும் மேல்நாட்டு மாந்திரீக ரகசியங்களும் படங்களும் வெளியிட்டிருக்கிறோம்.

விலை ரூ. 1—0 தபால்கூலி பிரத்தியேகம்

இந்தியா சாஸ்திர கல்விச்சாலை,
105, ஆர்மீனியன் தெரு, மதராஸ்.



அடர்ந்த கூந்தல் கருமையும் செழுமையும்

ஸ்திரீகளுக்கு அழகை அதிகப்படுத்துகிறது

அப்படிச் செய்வது அசாத்தியமான காரியமல்ல!

எங்கள் **மணித்தைலம்.** போதுமானது-

தற்காலம் வெளிவந்துலாவும் நவீன தைலத்தைப்போல் நமது தைலத்தை எண்ணிவிடக்கூடாது. நமது தைலம் சாஸ்திரோக்தமாகத் தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மணித்தைலம் நமது ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயத்தில் சுமார் 35 வருஷமாய் விற்பனையாகிவருகிறது. இதைவிட உங்களுக்கு என்ன அத்தாட்சி வேண்டும்; இன்னும் சந்தேகமாயின் நூற்றுக்கணக்கான நற்சாக்ஷிப் பத்ரங்களிலொன்றாகிய கீழ்க்கண்டதை வாசித்துப் பாருங்கள்.

அன்புள்ள ஐயா,

ஒரு மாதத்துக்கு முன் தங்களிடமிருந்து தருவித்த மணித்தைலம் அற்புத குணத்தைக் கொடுத்துவருகிறது. இன்னும் 5 புட்டி மணித்தைலமும் ஒரு டப்பி ஆ. நி. மாத்திரையையும் வி. பி-யில் அனுப்பவும்.

ஜீ. வாசுதேவராவ், வக்கீல்,

(பெசவாடா) மர்க்காப்பூர்

இந்தப் பரிமள மிகுந்த வாசனைத் தைலம் விலை புட்டி 1க்கு ரூபா—1.

இந்தத் தைலம் மனோவுற்சாகத்தைக் கொடுக்கிறது.
ஸ்நானத்துக்கு சுகந்தருவது.

வைத்திய சாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜி.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம், 157, பிராட்வே, மதராஸ்.

## சந்தா வரவு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1918ஞு ஜுலைமீ | 29—C.S. ஆறுமுகாச்சாரி, ஸ்டேஷன்மாஸ்டர் சென்னை | 1 | 8 | 0 |
| ,, | ,,—ஆ. கந்தசாமி ஆச்சாரி, சேப்பாக்கம் | 1 | 0 | 0 |
| ,, | 30—T. S. சுகானந்தம் ஆச்சாரி, குன்னூர் | 3 | 0 | 0 |
| ,, | ,,—சின்னாச்சாரி, காரியமங்கலம் போஸ்டு | 3 | 0 | 0 |
| ,, | ,,—கேசவாச்சாரி, சென்னை | 0 | 8 | 0 |
| ,, | 31—ஆ. சாமு ஆச்சாரி, சிந்தாதிரிப்பேட்டை | 0 | 8 | 0 |
| ஆகஸ்டுமீ | 4—செ. ஆண்டிசுந்தராச்சாரி, கோமளீஸ்வரன்பேட் | 3 | 0 | 0 |
| ,, | ,,—அப்பாதுரை ஆச்சாரி, மீர்சாயப்பேட்டை | 1 | 0 | 0 |
| ,, | ,,—ஆ. கந்தசாமி ஆச்சாரி, சிந்தாதிரிப்பேட்டை | 1 | 0 | 0 |
| ,, | 6—டி. துலுக்காணாச்சாரி, சேலம் | 1 | 0 | 0 |
| ,, | 8—சி. அருணகிரி ஆச்சாரி, சிந்தாதிரிப்பேட்டை | 0 | 8 | 0 |
| ,, | 9—பச்சையப்பாச்சாரி, சேப்பாக்கம் | 1 | 0 | 0 |
| ,, | 10—டி. கேசவாச்சாரி, புரசை | 1 | 0 | 0 |
| ,, | ,,—S. ஆனையப்ப ஆச்சாரி, வண்ணாரப்பேட்டை | 0 | 4 | 0 |
| ,, | ,,—கல்பாக்கம் கன்னியப்பாச்சாரி, சென்னை | 0 | 8 | 0 |
| ,, | 11—அங்கப்பாச்சாரி, சென்னை | 1 | 0 | 0 |
| ,, | 13—T. S. கதிரேசமாச்சாரி, திருப்பூர் | 1 | 0 | 0 |
| ,, | ,,—பெ. பார்த்தசாரதி ஆச்சாரி, மைலாப்பூர் | 0 | 3 | 0 |
| ,, | 21—T. பாக்ஷாச்சாரி, திருவல்லிக்கேணி | 3 | 0 | 0 |
| ,, | 22—தி. சாமுண்டியாச்சாரி, பெங்களூர் | 1 | 8 | 0 |
| ,, | 23—வாசுதேவ ஆச்சாரியார், எழும்பூர் | 0 | 8 | 0 |
| ,, | 24—சங்காலிங்க ஆச்சாரியார், முத்தியாலுப்பேட்டை | 1 | 8 | 0 |
| ,, | ,, பி. செங்கல்வாராய பத்தர், புரசைவாக்கம் | 1 | 0 | 0 |
| ,, | S. V. நாராயணாச்சாரியார் ,, | 0 | 8 | 0 |
| ,, | பி. சாம்பசிவ பத்தர் ,, | 1 | 0 | 0 |
| ,, | பி. உமாபதி பத்தர் ,, | 1 | 0 | 0 |

23 OCT 1918 MADRAS

I

## உள்ளுறை.


| | பக்கம் |
|---|---|
| ஒளிவளர்விளக்கு ... ... ... ... | 145 |
| நமது எண்ணங்கள்,—ஸ்ரீ T. தங்கவேல் ஆச்சாரியார் ... ... | 147 |
| ஆசாரக்குறைவெது,—ஸ்ரீ K. கன்னியப்ப ஆச்சாரியார் ... | 151 |
| அரிய உபந்யாசங்கள் ... ... ... ... | 153 |
| குலாபிமானக்கொத்து ... ... ... ... | 159 |
| விசேஷ வர்த்தமானம் ... ... ... ... | 168 |


## விஸ்வகர்மன் - தொழில்.

விஸ்வகர்ம குலாபிவிருத்திக்காகவும் கைத்தொழில் மேம்பாட்டிற்காகவும் உழைத்துவரும் மாதாந்தப்பத்திரிகை. விஸ்வகர்மகுல பண்டிதர்களுடைய வியாசங்கள் நிரம்பி, இச்குலத்தார் அறியவேண்டியனவாகிய பூர்வமொழிகளையும் நவீன முறைகளையும் நன்கு விளக்கிக் காட்டுவதாயிருப்பதினால், இப்பத்திரிகையை விஸ்வகர்ம குலத்தார் ஒவ்வொருவரும் கட்டாயமாக மாதந்தவறுமல் வாசித்து வரவேண்டும்.

| | | |
|---|---|---|
| சந்தா விபரம் | வருஷமொன்றுக்கு தபால் சார்ஜ் உள்பட | 3—0—0 |
| | ஆறுமாதத்திற்கு ,, | 1—8—0 |
| | தனிப்பிரதி ,, | 0—5—0 |

புதுச் சந்தாதாரர் எந்த மாதத்திலேனுஞ் சேரலாம். ஒரு வருஷச் சந்தாவாவது ஆறுமாதச் சந்தாவாவது முன்பணமாக அனுப்பவேண்டும். அங்ஙன மனுப்பாவிட்டால் வி. பி. தபால் மூலமாக சந்தா வசூல் செய்யப்படும். 1918ஞு ஜனவரி மீ த்தியிருந்து ஐந்தாவது சம்புடம் ஆரம்பமாகிறது.

| | | | |
|---|---|---|---|
| விளம்பர விகிதங்கள் | 1 பக்கத்திற்கு மாதம் ஒன்றுக்கு | ... | 3—0—0 |
| | $\frac{1}{2}$ ,, ,, | ... | 1-12—0 |
| | $\frac{1}{4}$ ,, ,, | ... | 1—0—0 |
| | $\frac{1}{8}$ ,, ,, | ... | 0-12—0 |

இந்த சார்ஜ் முன்பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

| | | |
|---|---|---|
| விஸ்வகர்மன் முதல் வருஷ சம்புடம் (பைண்டு செய்யப்பட்டது) | | 2—4—0 |
| ஷை இரண்டாவது ,, ,, ,, | | 2—4—0 |
| விஸ்வகர்மோ தேச வீரகண்டாமணி மூலமும் உரையும் | ... | 0-10—0 |
| ஷை மூலம் மட்டும் | ... | 0—5—0 |
| முத்து வீரியம் ... ... | ... | 1—0—0 |

சந்தாதாரர்கள் தங்கள் விலாசம் மாறும்போதெல்லாம் தவறுமல் எழுதியறிவிப்பார்களாக.

**சோமங்கலம் - கந்தசாமி ஆச்சாரி.**
301, தங்கசாலைவீதி, சென்னை.


மர்மசாஸ்திர தர்மபோதினி, மூன்றாவது பதிப்பு

விலை அணா ஐந்து. வி. பி. சார்ஜ் உள்பட அணா எழு.—அணா ஆறுக்கு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். ஸ்திரீபுருஷ சுகபோக மர்மதர்மங்களைச் சாங்கோபாங்கமாய் யாவரும் அறியும்படித் தெரிவிக்கும் அருமையான நூல். இதை வாசிப்போர் தேகசம்பந்தமாகவும், ஆரோக்கிய சம்பந்தமாகவும், ஆனந்தானுபவ சம்பந்தமாகவும் பல ரகசியங்களை அறிந்து இன்புறுதல் நிச்சயம்.

எ. டி. ராஜு, புரசைவாக்கம் ஹைரோட், வேப்பேரி, சென்னை

## சந்தா வரவு.

### 1918ஞு ஆகஸ்டுமீ

| | | | |
|---|---|---|---|
| 12உ | வி. எம். முத்து ஆச்சாரியார், ரேடால் | 3 | I0 |
| 13 | பழனிவேலு ஆச்சாரியார், திருச்சி | I | 4 |
| 15 | T. A. கன்னியப்ப ஆச்சாரியார், ரங்கூன் | 3 | 0 |
| 29 | சரவணாச்சாரியார், புரசை | 0 | 4 |
| 3I | பாநுமூர்த்தி ஆச்சாரியார், மைலாபூர் | 2 | 0 |
| 8I | கா. திருவேங்கடாச்சாரியார், முத்தியாலுப்பேட்டை | I | 0 |

### 1918ஞு செப்டம்பர்மீ

| | | | |
|---|---|---|---|
| 3 | ஆ. கேசவாச்சாரியார், சென்னை | 0 | 4 |
| 3 | க-கன்னியப்ப ஆச்சாரியார், சென்னை | 0 | 4 |
| 4 | முருகப்பாச்சாரியார், சூளை | 1 | 0 |
| 5 | பரமசிவ ஸ்தபதியார், சூளை | 1 | 0 |
| 5 | அரங்கநாதாச்சாரியார், புரசை | I | 0 |
| 6 | வீ. சீயாளாச்சாரியார், சிந்தாதிரிபேட்டை | 0 | 4 |
| 6 | டி. கேசவாச்சாரியார், புரசை | I | 0 |
| 6 | வெங்கடசுப்பாச்சாரியார், வடுகன்பாலம் | I | 8 |
| 7 | ஜெகன்னதாச்சாரியார், சேப்பாக்கம் | I | 0 |
| 8 | நாகப்பாச்சாரியார், காட்டானூர் | 3 | 0 |
| 8 | வெங்கடாஜலாச்சாரியார் சேப்பாக்கம் | l | 0 |
| I0 | கந்தசாமி ஆச்சாரியார், சூளை | I | 0 |
| I2 | க-கன்னியப்ப ஆசசாரியார், சென்னை | 0 | 4 |
| I3 | எ. கந்தசாமி ஆச்சாரியார், வண்ணாரப்பேட்டை | 0 | 8 |
| I4 | குமாரசாமி ஆச்சாரியார், கோயலீஸ்வரன்பேட்டை | 0 | 8 |
| 14 | ஜெகன்னாத ஆச்சாரியார், சூளை | I | 0 |
| 17 | தாண்டவாச்சாரியார், புரசை | 1 | 0 |
| 17 | பி. புஜவிங்காச்சாரியார், புரசை | 1 | 0 |
| I7 | R. P. கோவிந்தசாமி ஆச்சாரியார், திருச்சிறுப்பள்ளி | I | 0 |
| 17 | A. குமாரசாமி ஆச்சாரியார், திருநெல்வேலி | 3 | 0 |
| I8 | S. A. முத்துகுமாரசாமி ஆச்சாரியார் பண்ருட்டி | I | 0 |
| 22 | சபாபதி ஆச்சாரி, இராயப்பேட்டை | I | 0 |
| 23 | இராமசாமி ஆச்சாரியார், பாலக்காடு | 1 | 0 |
| 24 | S. சங்கராச்சாரியார், திருநெல்வேலி | 3 | 0 |
| 24 | T. தங்கவேலு ஆச்சாரியார், திருநெல்வேலி | 3 | 0 |
| 24 | A. ராமசுப்பாச்சாரியார், திருநெல்வேலி | 3 | 0 |
| 24 | T. நயினார் ஆச்சாரியார், திருநெல்வேலி | 3 | 0 |
| 24 | N. சங்கராச்சாரியார், திருநெல்வேலி | 3 | 0 |
| 24 | V. M. கந்தசாமி ஆச்சாரியார் | I | 8 |
| 26 | கல்பாக்கம்,கன்னியப்ப ஆச்சாரி சென்னை | 1 | 4 |
| 29 | ஜெகன்னாத ஆச்சாரி, சேப்பாக்கம் | 1 | 0 |
| 30 | தர்மவரம்-நம்மைய்ய ஆச்சாரியார், சென்னை | 1 | 0 |


## விஸ்வகர்மரே ஆச்சாரிய ஜாதியார்.

சமஸ்கிருத பண்டிதராகிய மீனாக்ஷிபுரம் ஜோஸ்யர்

பிரம்மஸ்ரீ அ. முத்து ஆச்சாரியா ரவர்களால் எழுதப்பட்ட புத்தகம்.

விலை ஆறே அணா

ருக்வேதம், கிருஷ்ண யஜுர்வேதம், யஜுஸம் ஹிதை, மஹாவிஸ்வகர்மீயம், விஸ்வ போதம், சிந்திரம், ருக்வேதம், சகளாதிகாரம், மநுசாரம், காஸ்யபம், யானசாரம், மநுசூத்திரம், ஸ்காந்தம், ஸ்தலஸ்தம்பம், காசகாண்டம், விஷ்ணுபுராணம், பாரதம், ஹாலாஸ்ய மகாத்மியம், பாகவதம், ஹரிவம்சம், வாயுபுராணம், பாகவதம், பிரஹதாரண்ணியகோபநிஷத், காசிகண்டம், இராமாயணம், விஸ்வகர்ம புராணம், மனையலங்காரம், சூடாமணி நிகண்டு, தமிழ் ஆசிரிய நிகண்டு, சிலாசாஸனங்கள், சம்மதிப்பத்திரங்கள் முதலியவற்றால், விஸ்வகர்மரே ஆச்சாரிய ஜாதியாரென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதிற் காட்டும் திவ்வியநூல். விஸ்வ கர்மர்களுக்கு அத்தியாவஸ்யமான அரும்பெரும் நூல். ஸ்லோகங்கள் தமிழிலும் தெலுங்கிலும் எழுதப்பட்டிருக்கின்றன.

சில காப்பிகளே அச்சிடப்பட்டன. உடனே எழுதிப் பெறுங்கள்.

சோமங்கலம்-கந்தசாமி ஆச்சாரி,
301, தங்கசாலை வீதி, சென்னை.



ஸ்ரீமத் விராட் விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்-தொழில்.

1860-வது வருஷத்து 2I-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதப் பத்திரிகை.

சம்-5] காளயுக்திஞு புரட்டாசிமீ 1918ஞு செப்டம்பர்மீ [சஞ்-9.


## ஒளிவளர் விளக்கு.

### W. நாகபூஷணம் ஆச்சாரியார்.

காகினாடாவில் கலெக்டர் சிரஸ்ததாராயிருந்து பென்ஷன் பெற்றுவந்த ஷை கனவான் சென்ற மாதங் காலமாயினாரெனக் கேட்டுக் கலுழலாயினோம். குலத்திற்கோர் பேரணியாய் விளங்கி விஸ்வகர்ம ஜனங்களுக்கெல்லாம் பிறமதிப்பேற்படும்படியாக வாழ்ந்தவர்களில் இவரொருவர். வட நாட்டில் இவர் மிகச் சிறப்புடன் விளங்கியவர்; தாசில்தாராகவும், டிப்டி கலெக்டராகவும் பலவிடங்களி லுத்தியோகஞ் செய்தவர்; ஆந்திர பாஷையில் ப்ராண்டித்தியம் பெற்றவர், சில கிரந்தங்களுக்கு ஆசிரியருமாவர். இன்னோர் இழப்பினால் நம் குலம் உலகநோக்கில் ஏழ்மையும் தாழ்வுமுறுகின்றதென்பது பொய்யோ?

*
* *

### மகாநாடுகள் கூட்டவேண்டும்.

இராஜீயவிஷய சம்பந்தமான ஆலோசனைசெய்து தீர்மானிக்க, கான்பரென்ஸ் என்னும் மகாநாடுகளை நம்மவர்கள் சேர்க்க வேண்டுமென்று, திருச்சி ஸ்ரீ R. P. கோவிந்தசாமி ஆச்சாரியாரவர்கள் கோருகிறார்கள். மகாநாடுகள் கூட்டுவதின் அவசியத்தைப்பற்றி நாம் பன்முறையும் பலவிதங்களினு மெழுதியிருக்கிறோம். பேரெல்லைகளைத்தழுவிப் பெருங்கூட்டங்கள் சேர்ப்பது கஷ்டமாயிருக்கலாமேனும், சிற்றெல்லைகளைச் சார்ந்து சிறு கூட்டங்களை நடத்துவதில் கஷ்டமொன்று மிராது. இச்சிறு கூட்டங்களோவெனில் பெரியவற்றினும் மிகுதியாய்ப்பலனளிக்கவல்லன. ஆகலால், இவ்விதக் கூட்டங்களை அங்கங்குள்ளார் சேர்க்கவேண்டும். ஒரு தாலுக்கா வாசிகளாயுள்ளவர்களைக் கூட்டுவதிலும் அவர்களுக்கேற்ற வசதிகளமைப்பதிலும் பிரயாசையேனும் பணச் செலவேனும் விசேஷமாய் வேண்டியிராது. எளிய ஒரு மாதத்திற்குள் இவர்களை இலேசாய்க் கூட்டி இனிமையாய் வார்த்தையாடி எத்தனையோ விஷயங்களை ஏற்றபடி முடித்துக் கொள்ளலாம். இப்படிச் செய்வதினால், இக்கூட்டங்களை யமைப்பதுபற்றியும் நடத்துமுறைபற்றியும் பலருக்கு அநுபவம் சுலபமாயுண்டாகிறது. குலப் பொதுவிஷயங்களில் ஞானமும் அநுபவமுமுண்டாயின் அவைகளை யடைவோர் குலோத்தாரண காரியங்கள் பலசெய்யத் தூண்டப்படுவர். அப்புறம் பெரிய மகாநாடுகளை ஜயப்பிரதமாய் நடத்துதல் சுலபசாத்தியமாகும்.

*
* *

### விஸ்வகர்ம தொழிற்சாலை.

இங்ஙனமொரு கூட்டுக்கம்பனி ஸ்தாபிக்கும் விஷயமாய் சென்ற ஜனவரிமாதப் பத்திரிகையில் யாமெழுதியவை குலத்தாரிடம் போதிய கவனம் பெறவில்லையென்றஞ்சுகிறோம். குலசம்பந்தமாய் எம்முயற்சி செய்யினும் அம்முயற்சியில் அநேக

ருடைய கவனம் செலுத்தப்பட்டாலன்றி அம்முயற்சி கைகூடி நீடித்த பலன்களைத் தாராதென்பது எமதபிப்பிராயம். ஓரிருவர் அல்லது ஒரு சிலர் கூடி முயன்றாரம்பித்த காரியங்கள் அன்னார் ஊக்க அளவே நின்று அதிகப்பயன் விளைவிக்கா தகல்வது சர்வசாதாரணமாய் அறியக்கிடக்கும் உண்மை. அவ்வித முடிவை தொழிற்சாலைப் பிரயத்தினம் அடையலாகா தென்றல்லவோ யாவரும் விரும்புவர்? ஆதலினாலே தான் குலஜனவூக்கம் போதிய அளவு எழுந்து நடத்தப்படவேண்டிய காரியமாய் இதனைப் பாராட்டலாயினோம். யாமெழுதிய வார்த்தைகளைத் தொடர்ந்து குலப்பிரமுகர்கள் இவ்விஷயமாய் எழுதமுற்படாதது மிகவும் விசனிக்கத்தக்கதே யெனவேண்டும். பலபேர் கருத்துகள் பத்திரிகையில் வெளிவருமானால் யுக்தாயுக்தத்தை நிச்சயித்துக் காரியாரம்பஞ் செய்தலிசையும். பின்னர் எடுத்தகாரியம் இடர்ப்படாது நடைபெறுதலுஞ் சாத்தியமாகும். காலத்தை வீணாகக் கழியவிடுதல் குலத்தினர்க்குச்சிறப்பல்லவென்பதைப்பன்முறை பகர்ந்திருக்கின்றோம். எனினும், இத்தொழிற்சாலையின் மூலதனத்தைப்பற்றியாவது, அதைச்சேகரிக்கும் உபாயங்களைப்பற்றியாவது, தொழிற்சாலையை நடத்தும் விதத்தைப்பற்றியாவது, செய்யக்கூடிய வஸ்துக்களைப்பற்றியாவது, சாலையின் அமைப்பைப்பற்றியாவது, இன்னோரன்ன விபரங்களைக்குறித்தாவது வியாசங்களும் கடிதங்களுங் கிடைக்காததின் காரணமென்னோ? ஒருக்கால், இவை கிடைக்குமென்றெதிர்பார்த்திருத்தல் பிசகோ?

* * *

## திருநெல்வேலி விஸ்வகர்ம சன்மார்க்க சபை.

இச்சபையின் முதல் வருஷோற்சவக் கொண்டாட்ட விபரங்களும், அச்சமயத்து அக்கிராசனம் வகித்த பண்டிதர் ஸ்ரீ K. முத்துசாமி ஆச்சாரியாரவர்களும், ஷை சபைத்தலைவர் ஸ்ரீ S. சங்கராச்சாரியாரவர்களும் செய்த உபந்நியாசச் சுருக்கமும் இச்சஞ்சிகையில் வேறிடங்களில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நமது வாசகர்கள் கவனித்து வாசிக்க விரும்புகிறோம். அவற்றை வாசிக்குமிடத்தும், அச்சபையாரால் நமது சபைக் கனுப்பப்பட்ட வந்தனோபசாரப் பத்திரத்தை வாசிக்குமிடத்தும், இச்சபையார் நம்மீது எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறார்களென்பது தெற்றென விளங்கும். (ஷை வந்தனோபசாரப் பத்திரமும் பின்னொரு பக்கத்திலச்சிடப்பட்டிருக்கின்றது.) இச்சபைபோல் ஜில்லாவுக்கொரு சபை யேற்பட்டாலும், ஜாதீய எழுச்சி ஒருவாறு பரவுதற்கிடமுண்டாகும். திருநெல்வேலியார்போல் மற்ற ஜில்லா வாசிகள் ஏன் சபை கூட்டி நடத்துகின்றிலரென்பது விளங்கவில்லை. ஜில்லாவுக்கொரு சபை யேற்பட்டபின்னர், தாலுக்காக்களில் அவற்றை ஸ்தாபிப்பதுபற்றி யெண்ணலாம். ஏற்கனவே, பலவிடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சபைகளின் இயக்கத்தைப்பற்றிய விபரம் நமக்கெட்டுவதில்லை. அந்தந்த சபையார் சற்று கவனம் வைத்து எமக்கெழுதி யறிவிக்கவேண்டுகிறோம்.

திருநெல்வேலி சபையார் இவ்வருஷோற்சவத்தை வெகு சம்பிரமமாக நடத்தவே



ண்டுமென் றுத்தேசித்திருந்ததாகத் தெரிகிறது. ஆயினும், நடந்தமட்டில் மிகத் திருப்திக்கிடமாகவே முடிந்ததென்றறிகிறோம். இவ்வித வருஷோற்சவங்களை சுஜாதிக் கான்பரன்ஸ்களாக மதிக்கப்படுமாறு நடத்தப்படுதல் சிலாக்கியமாகும். இதற்காக, இரண்டு அல்லது மூன்றுநாள் கூட்டங்கள் நடத்தப்படவேண்டும். ஜில்லா வாசிகளில் முக்கியஸ்தர்களெல்லாம் அழைக்கப்படவேண்டும். சுஜாதி சம்பந்தமான விஷயங்களைப்பற்றிய உபந்நியாசங்களை நடத்தி தக்க தீர்மானங்களைச் செய்து; அவற்றை யநுசரித்து ஜில்லா வாசிகள் நடக்கும்படியான மார்க்கந்தேடவேண்டும். இங்ஙனஞ்செய்தால், சபைக்கு அதிக பெருமையும் ஆதரவும் ஏற்படுவதோடு குலத்திற்கும் நன்மை மிகவுண்டாகும். இவ்விதம் இனி கூடியவரையில் இச்சபையாரும் மற்ற சபையாரும் செய்ய வேண்டுகிறோம்.

அங்கு நடைபெற்ற உபந்நியாசங்கள் குலோத்தாரண ஹேதுவாய் விளங்குமென்றமையால் மிகச் சிலாகிக்கத்தக்கவையாயுள. குலஜனங்களுடைய கவனத்திற்குப் பாத்திரமாயிருக்கும் முக்கிய விஷயங்களெல்லாம் பிரஸ்தாபிக்கப்பட்டன. இதனால் உபந்நியாசகர்களுடைய குலாநுபவமும் ஆராய்ச்சியும் நன்கு வெளிப்படுகின்றன. இவர்கள்போல், பொதுப்பட்ட விஷயங்களைக் கையாளாமல் குல விஷயங்களையே கையாளக்கூடிய உபந்நியாசகர்கள் நமக்குப் பலர் வேண்டும். இங்ஙனஞ் செய்யக்கூடியவர்களைக் காண்பது அரிதாயிருக்கிறது. ஆயினும், சமயமேற்படாமையின் பலருடைய திறமை வெளிப்படாதிருக்கிறதென் றெண்ணுகிறோம். ஷை வருஷோற்சவம்போன்ற சந்தர்ப்பங்கள் அடிக்கடி பலவிடங்களில் நேர்ந்தால் புதிது புதிதாய் குலோத்தாரண வல்லபவர்களைப் பற்றி நாமறியலாகும். ஆனால், இவர்கள் தங்கள் திறமையும் அநுபவமும் ஆராய்ச்சியும் வீண் போகாது குலநலம் பயக்கும்படி சமயம் நேர்ந்தபோதெல்லாம் குலத்தார்க்கு நல்லுபதேசம் செய்து வருதல் பெருங்கடமையாக வகித்து நடத்தல் அத்தியாவஸ்ய மாயிருக்கிறது.

## நமது எண்ணங்கள்,

நமது விஸ்வகர்மன் 5-வது சம்புடம் 4-வது சஞ்சிகையில் வெளிவந்த 'பூணூல்' என்னும் வியாசத்தைப்பற்றி சிலர் கீழ்க்கண்ட விதமாய் அபிப்பிராயங்கள் கொடுப்பது வியக்கத்தக்கதாயிருக்கிறது.

1. பூணூல் போன்ற வியாசங்களை அநுபந்தமாக அனுப்பவேண்டுமென்று சிலர் கூறுகிறார்கள்.

2. நமக்கு விரோதமாய் நம்மைக் குறைகூறும் எந்த வியாசத்தையும் நமது பத்திரிகையில் வெளியிடலாகாதென்று கூறுகிறார்கள் சிலர்.

3. பிரசங்க முதலான காலங்களில், நமது விருத்திக்குப் பாதகமான பழக்க ஒழுக்கங்களை வெளிப்படையாய்க் கூறி அகற்றவேண்டிய அவசியத்தைக் கூறுகையில் நமது குறைகளை நாமே கூறலாகாது பிறர் கேலிக்கு இலக்காய்விடும் என்று சிலர் கூறுகிறார்கள்.

4. சித்தூர்த் தீர்ப்பைப் பார்க்கவேண்டுமென்று கூறுபவர் பலர்.

இவர்களைப்போன்றவர்கள் வடக்கிலுமுளர். ஏன் எனில், நமது குறைகளைக் கூறுகையில், "தன் பல்லைக் குத்தி நாற்றமெடுக்கக் காண்பித்ததுபோல்" என்று கூறினதும் ஞாபகத்திலிருக்கிறது.

இவர்களுக்கு என்ன பதிலுரைப்பதென்பது விளங்கவில்லை. ஆயினும், பிறரிடம் பழகியதிலிருந்தும், அவர்கள் பேசுந்தன்மையைக் கவனிக்கும்போதும் என் சிற்றறிவிற்கு எட்டியதைக் கூறுமாறிருக்க முடியவில்லை.

நமது பத்திரிகையில் கூறுவதினால்தான் நமது குறைகள் வெளிவந்திருக்கின்றன என்று கூறினால், அதற்குமுன் நாம் கொண்டுள்ள நமது நடையுடைகளின் குற்றத்தையும் அதற்குமுன் இருந்த தாரதம்மியத்தையும் ஆலோசித்து அறியவேண்டியது அவசியமல்லவா? பூனை இருகண்மூடி பூவுலக மூடிவிட்டதாய்க் கொண்டதைபோலிருக்கின்றது. நமது பெயருக்கும் குலத்திற்குமுரிய நடைகள் எந்நாளில் கெட்டனவோ அந்நாளிலிருந்தே அன்னியர் ஏளனத்திற்கு ஆளாயினோம். ஒரு குலத்தினர் அக்குலத்திற்குரிய மேன்மைகளையும் குறைகளையும் விளக்கிக்கூறி நீக்கவேண்டியதை நீக்கிக் கொள்ளவேண்டியதைக்கொண்டு ஒழுகலே சிறந்தவழி என்பதை இந்த ஆங்கில அரசாட்சிகாலத்தில் அறியாதவர்களை என்னென்றியம்பலாம்? இவர்களுக்குள்ள உலகப்பழக்கம் எவ்வளவென்பதை உணருங்கள். நீங்கள் சிறு தெய்வங்களை வழிபடுவதையும், அங்கு நடைபெறுவதையும், அப்போது நம்முடன் பழகும் பிறஜாதி நண்பர்கள் கண்டும் கவனித்தும் வருகிறார்கள் என்பதை இனிமேலும் சிந்தையில் சிந்திக்காதிருத்தல் சிறப்பிற்கிடமல்ல.

நமது குறைகளைக் கூறலாகாதென்று கூறும் நண்பர்களே! "சைவசபையில்" மாம்ச விலக்கைப்பற்றிய உபந்நியாஸங்களும் பத்திரிகைகளும் நடைபெறவில்லையா? சன்மார்க்க சங்கத்தில் துன்மார்க்கங்களைப்பற்றி பேசவில்லையா? நமது குற்றத்தைப் பிறர் கண்டுகொண்டார்கள் என்ற சங்கை உண்டானால் சஞ்சலமுண்டாகும். சஞ்சலமுண்டானால் சிந்தை சிதறும். சிந்தை சிதறினால் சரியான வழியைத்தேட இடங்கொடுக்கும். சரியான வழி சன்மார்க்கத்தைப் போதிக்கும். அதை உணர்ந்து அதன்வழி நின்று ஆடினால், குறைகளகன்று குதூகலமடைந்து குலத்தை உயர் நிலைக்குக் கொண்டுவருவோம் என்பதை உணருங்கள்.

தன்மகன் கட்குடியனும், வேசிகாந்தனும், சூதாடுபவனுமிருந்தால் அவனை நல்வழிபடுத்த நினைந்த தந்தை அவனிடமுள்ள துர்க்குணத்தைமறைத்து அவனைப் புகழ்ந்து பேசி நல்வழிப்படுத்துவாரா? தனது முன்னோர் நன்னடைகளையும், அவனது துர்நடைகளையும் ஊரார் உரைப்பதையும் விளக்கிக்காட்டி நல்வழிப் படுத்துவாரா? அவன் இவ்விதம் நடக்கின்றானே நமது குலத்திலிவ்வாறு யாராவது இருந்ததுண்டா, கட்குடிப்பதும் வேசிவீடு செல்வதும் சூதாடுவதுமாயிருந்தால் என்றைக்கு எல்லாரையும்போல் நன்னிலைக்கு வருகிறது என்று அவனது குறைகளை அவனது சுஜாதி நண்பரிடத்திலாவது விஜாதி நண்பரிடத்திலாவது முறையிடமாட்டாரா? அல்லது உள்ளங்கையில் வைத்து உச்சிமுகர்ந்துகொண்டாடுவாரா? இப்படிக்கூறிய தந்தையின்பால், இவர் மகன், குற்றங்களை இவர்தான் சொல்லவேண்டுமோ யாரோ சொன்னான் என்று இவரும் கூறுகிறாரே என்றும், எதற்காகக்கூறினர் ஏன் கூறினர் எப்படி கூறினர் என்று யோசியாது கோபங்கொள்ளும்புத்திரனை அன்னவரும் குலத்தினரும் எவ்வாறு கருதுவார்கள் என்பதை நீங்களே யோசித்துக்கொள்ளுங்கள். இப்படிக் கூறினதில் வெட்கம் வந்துவிட்டது தனது நடை குற்றமென்பதை உணரவில்லையே என்று இன்னும் கூறி நல்வழிக்கு வரவில்லையே என்று சிந்திக்காதிரார்.

குணத்தை நாடுகையில்குற்றங்களை அகற்றவேண்டியது முறையல்லவா? இம்முறையை நாடிக் கூறும் குலாபிமானிகளைக் குறைகூறுவோர்களை என்னென்று கூறுவது? "கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம் அல்லாத மாந்தர்க்கு அறங்கூற்றம்"போலும். ஒரு சிங்கக்குட்டி சிறுவயதிலிருந்து ஆட்டுக்குட்டிகளுடன் சேர்ந்து பழகும் விதியை யடைந்து பழகிவருகையில் அதனைக் கண்ணுற்ற ஓர் பெரிய சிங்கம் நான் உனது இனத்தைச் சேர்ந்தவன், அவர்கள் கூட்டத்தில் சேர்ந்து அந்தப் பழக்கங்களைப் பழகாதே; நமக்குரிய பழக்கங்களையும் வழக்கங்களையும் நான் கற்பிக்கிறேன் வா! வா!! வா!!! என்று அதை அழைக்க ஆத்திரங்கொண்டதாம். ஆட்டுக்குட்டிகளுடன் பழகிய சிங்கம் இது எந்தக் காட்டு மிருகமோ இது இப்படிபுலம்புகிறது நம்மைத் தின்றுவிடுவதற்கு இவ்விதச் சூட்சிசெய்கிறதென்று இதை இவ்விடத்தை விட்டு தொலைத்துவிடுவதேசரி என்று எண்ணி அது இதனோடு நாடாது விரோதமாயிருந்ததாம். கடைசியாய் நீர் குடிக்குஞ் சந்தர்ப்பத்தில் ஒன்றை ஒன்று ஜலத்தின் நிழலில் கண்டுகொள்ள சமயம் வாய்த்ததும், இது நமது வம்ஸத்ததே என்று இதனுடன் சேர்ந்து பழகிவரலாயிற்றாம். பகுத்தறிவில்லாத மிருக ஜாதிகளுக்கு சமயம் வாய்த்ததுபோல் பகுத்தறிவுள்ள நமர்கும் அபிப்பிராய பேதமின்றி உண்மையைக் கண்டு உத்தமவழியில் நடக்க சமயம் எப்போது வாய்க்குமோ? ஈசனே அறிவான்.

II. ஸ்ரீ மார்க்கசகாய ஆச்சாரி கூறினதைப் பாருங்கள் என்கிறார்கள். சித்தூர் ஜில்லா தீர்ப்பு விஷயமாய் என் தந்தையார் கூறினது ஞாபக மிருக்கிறது. அதாவது, நமக்கு ஜென்ம சுதந்திரமாயுள்ள பாத்தியதைகளைச் செய்ய நாம் அருகரல்லவென்று பஞ்சாங்க குண்டையர் முதலானவர்கள் கூறியதற்கு நமது நன்னடைகளை விட்டு துர்நடைகளைக் கைக்கொண்டதே காரணம். அதை அக்காலத்தில் நமது மரபார் கொண்டுள்ள சாஸ்திர ஞானத்தையும் வைதிக பழக்கத்தையும் நிரூபித்து ஸ்ரீ மார்க்கசகாய ஆச்சாரியாரவர்கள் நமது பாத்தியதைகளை நாமே செய்துகொள்ள அருகர் என்பதை ஸ்தாபித்தனர். ஆதலால், நமது பாத்தியதைகள் சிதறுவதற்கு நமது சீர்கேடான நடை காரணம். அதை அகற்றவேண்டும். நமது பாத்தியதைகளைக் கையாடக்கூடிய நடைகள் நமக்கு வேண்டும் என்பதுதான் அறிவாளிகள் அதிலிருந்து அறியக்கூடிய விஷயம். தப்பித நடையுள்ளவர்களைக்கண்டித்தால் எங்களைப்பற்றி இந்தத் தீர்ப்பில் எப்படி எழுதியிருக்கிறது என்று கூறுவதற்கும் நமது நடை கெட்டாலும் புத்தகத்தின் நடை கெடவில்லையென்று நடப்பதற்கும் அப்புத்தகம் அச்சடிக்

கப்பட்டதில்லை என்றும், மேலும் ஆங்கில முறைக்குத் தக்கபடி அதைஸ்தாபிக்கவில்லையென்றும், எங்கெந்த காலத்திற்கு எப்படி நடந்தால் நாம் முன்னேறலாம் என்று கண்டு நடப்பதே உசிதமான வழி என்பதையும் கூறினர். தற்போது இம்மொழிகள் நன்னடைக்கு எனக்கு திறவுகோலாயிருக்கின்றன.

சென்னைச் சபையாரும் நமது குற்றங்களை விளக்குவது குலோத்தாரண வழிக்கு ஏற்றவழி என்பதை எண்ணுங்கள்; நண்பர்களே! சென்ற ஜூன்மீ வந்த 6-வது சஞ்சிகையில் "ஒளிவளர்விளக்கு" என்ற தலைப்பின்கீழ்க்கூறும் கடைசி பாராவைப் பார்த்தீர்களா? அதைப் படிக்கையில் உண்மையில் பத்திராதிபரவர்கள் மிகுந்த ஆவேசங்கொண்டு எழுதியதாய்த் தெரியவில்லையா? அதைப் படித்தவுடன், நமது சரியான வழியைத் தேடுவதும், நமது மேன்மைகளையும், நமது குலச்சார்பான கிரந்தங்களையும், பாசுரத்தாலும் கதையாலும் விளக்கி வெளிப்படுத்தவேண்டியது நமது கடமையென்று கொள்ளவேண்டாமா? உண்மையில் நான் ஒளிவளர்விளக்கில் கூறிய விஷயம் அனைத்தையும் படித்துப் பார்த்ததில், பத்திராதிபர் அவர்களுக்கு குலோத்தாரண சிந்தை இருக்கும் அளவை இவ்வளவவ்வளவு என்று கூற முடியாது. இதை எனது நண்பர் ஒருவர் (ஓர் தமிழ்ப்பண்டிதர்) பார்வையிட்டுக் கூறினதாவது:

இப்பத்திரிகையின் வியாஸங்களையும் அவைகளின் நடைகளையும், அதில் பத்திராதிபரவர்களின் அபிப்பிராயங்களையும் கவனிக்கையில், உயர்பத்திரிகாலக்ஷணங்களோடு விளங்கக்கூடிய பத்திரிகைகளில் இது ஓர் சிறந்த பத்திரிகை என்றும், இப்பத்திரிகையைப் பெற்று இதன்வழி நடக்குங் குலம் நல்ல நிலையில் நிச்சயமாய் நிற்கும் என்றும், இப்பத்திரிகை மற்றவைகளைப்போலல்லாமல் உண்மையான உள்ளத்தோடு உழைத்து வெளிவருவதாகும்; ஒவ்வொரு வார்த்தையும் அனேக மர்மங்களையும் உண்மைப் பொருள்களையும் அடக்கிக்கொண்டிருக்கின்றது என்று கூறினர். அவர் பத்திரிகைகள் எல்லாவற்றையும் பார்க்கவேண்டுமென்றும் கேட்டிருக்கின்றனர்.

இவ்விதம் பிறஜாதிச் சகோதரர் போற்றும் பத்திரிகைக்கு சபையார் கருத்துப்போல் 1000 சந்ததாரர்கள் 2,70,000 ஜனத்தொகையில் சேரவில்லையானல் மற்றென்னவிருக்கிறது! 270ல் ஓர் பங்குதானே! ஆகையால், ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்தது 200 சந்தாதாரர்களாவது சேர்க்கப்படவேண்டும் இதில் கூறும் வழிகளைச் சுஜாதியார் அனைவரும் கண்டு நடக்கும்படி போதிக்கவேண்டும். அங்கங்குள்ள சுஜாதி வித்துவாம்ஸர்களை சுஜாதிக்குரிய நூல்களை வெளியிடச் செய்யவேண்டும். ஒவ்வொரு குலத்திலும் அக்குலத்தினர் அவர்களுக்கு ஏற்ற நூல்களை வெளியிடவில்லையா? வேதங்களுக்குப் பின்னும் 50 வருடங்களுக்கு முன்னும் வெளியிடப்பட்ட புராணங்களும், கதைகளும் தற்போது ஆதாரமான புத்தகங்களாகவும் ரிக்கார்டுகளாகவும் கொள்ளப்படவில்லையா? 2-பக்கம் 3-பக்கம் சிறு விஷயங்களை நுட்பமாய் எழுதக்கூடிய வித்துவான்கள், சிறந்த நூல்களை எழுதி சென்னைச்சபைக்கு அனுப்பி அவர்களை வெளியிடும்படிக் கேட்டுக்கொள்ளலாம். காலப்போக்கை அறிந்து அதற்கு இயன்றவாறு அவரவர்கள் தன்மைக்கு இயன்றளவு உண்மையாய்க் குலத்திற்கு உழைக்கவேண்டுமென்று இதை வாசிக்கும் நண்பர்கள் அனைவரையும் வந்தனத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உத்தமர்க்கு ஊழியன்
T. தங்கவேல்,
திருநெல்வேலிப்பாலம்.



## ஆசாரக்குறைவெது?

சென்ற ஜூலை மாதப் பத்திரிகையில் ஒருநாள்விவாஹச் சடங்கைப்பற்றி எழுதியிருந்தேன். சில விஸ்வகர்மாக்கள் ஒருநாள் விவாகம் நமக்குப் பழக்கமில்லை என்றும் வேறு ஜாதியார்கள் செய்வதுபோல் நாமும் செய்யக்கூடாதென்றும் பலவிதமாகப் பேசுகிறார்கள். விஸ்வகர்மாக்கள் தங்களுடைய ஆசாரஅனுஷ்டானங்களில் தவறுதலில்லாமல் நடந்துகொள்ளுகிறார்களாவென்று பார்த்தால் அப்படி நடப்பதாகத் தெரியவில்லை. அவ்விதத் தவறுதல்களை நீக்க முயலாமல் நமக்குச் சௌகரியமாகிய ஒருநாள் செய்துகொள்ளக்கூடிய விவாஹச்சடங்கைப்பற்றிய முயற்சியைமாத்திரம் தடுக்க முயலுவதென்ன நியாயம்?

உதாரணமாக: விஸ்வகர்மாக்கள் நிர்யாணகாலத்தில் செய்யக்கூடிய அபரக்கிரியைச் சடங்குகளையெல்லாம் சரிவரச்செய்து முடிக்காமல் ஜோகிஜங்கமரைப்போல் பிரேதத்தைச் சமாதி வைத்துவிடுகிறார்கள். இவர்களுக்கு அம்மாதிரி புதைக்கும்படி சாஸ்திரமிருக்கிறதா? எந்த சாஸ்திரம் அவ்விதம்சொல்லுகிறது?விஸ்வகர்மாக்கள் பிரேதத்தைப்புதைக்கும்படியாகவும் புதைத்த பிரேதத்திற்கு 10-நாள் கர்மகாரியங்களைச் செய்யும்படியாகவும் சாஸ்திரமிருப்பதாக எனக்கொன்றும் தெரியவில்லை.

விஸ்வகர்மாக்கள் பிரேதத்தை தகனம் செய்யவேண்டுமென்றும் அதற்குத்தான் 10-நாள் கர்மம் செய்யவேண்டுமென்றும், அதற்கு வேண்டிய மந்திரதந்திர கிரியைகளும் கிரமமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. செத்த பிணத்திற்கு ருத்திராக்ஷத்தைக்கொண்டு லிங்கதாரணம் செய்து சமாதிவைப்பது எத்தனைநாள் பழக்கமென்பது எனக்கு விளங்கவில்லை. சமாதி செய்வதானுண்டாகும் கெடுதலைப்போலும் தோஷத்தைப்போலும் ஆசாரயினத்தைப்போலும் ஒருநாளில்செய்யும் விவாஹத்தில்ஏதேனுங் கெடுதல் உண்டா? அதிக கெடுதலானவைகளை நம்மவர்கள் கையாளுவதைக்காட்டிலும் நமக்கு சௌகர்யமாகிய ஓர்நாள்விவாஹச்சடங்குகளை ஏன் செய்யக்கூடா.தென்பது எம்மனோர் கொள்கை. இதை விஸ்வகர்ம மஹாஜனங்கள் யோசித்து தக்க முயற்சி செய்யவேண்டும்.

ஒருநாள் விவாஹம் நல்லது கெட்டது என்று அறிந்துக்கொள்ளாமலே நம்மவர்கள் ஒருநாள் விவாஹமென்றால் நான் பெண்ணைக்கொடுக்கமாட்டேன், நமக்குள் பழக்கமில்லையென்று முரட்டுத்தனமாகப் பேசுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் நிர்யாண காலத்தில் விஸ்வகர்மாக்கள் செய்யவேண்டிய விதியைப்போல் தகனம் செய்வதானால்தான் பெண்ணைக் கொடுப்பேன் சம்மந்தம் செய்வேன், அப்படியில்லாவிட்டால் பெண்ணைக் கொடுக்கமாட்டேன் என்று ஏன் சொல்லக்கூடாது? இவர்களுக்கு அந்த உண்மை யின்னதென்று தெரியாத குறையால் மனம்போல் செய்கிறார்கள்போலும்.

இவ்வருடம் விஸ்வகர்மாக்களுடைய விவாஹமுகூர்த்தங்கள் அனேகம் நடந்தேறின. அதிலும் இந்த ஆவணி மாதத்தில் நடந்த விவாஹங்களைக் கணக்கிடமுடியாது. காலம் கருப்புக்காலமாயிருந்தாலும் விவாஹம் செய்வதில் குறைவு கிடையாது. ஆனால், இத்தனை விவாஹங்களுக்கும் புரோகிதர்கள் எப்படிக் கிடைத்தார்களென்றால், சரியானபடி பௌரோகிதம் செய்யக்கூடிய விஸ்வகர்மாக்கள் பத்துப்பேர்கள் கூட கிடைப்பதரிது. சந்தியாவந்தனம் செய்யத்தெரியாத விஸ்வகர்மாக்களெல்லாம் பௌரோகிதர்களாக தர்ப்பையை எடுத்துக்கொண்டு பௌரோகிதம் செய்யப்போய்விட்டார்கள். மற்றவர்களுக்கு விப்பிரர்களும் போய்ச் செய்தார்கள். ஆனால், இவர்கள் என்ன மந்திரத்தைச் சொன்னார்களென்பது எனக்குத் தெரியவில்லை. விஸ்வகர்மாக்களுக்கு விவாஹ விஷயத்தில் அதிக சாங்கியமிருப்பதாகவும் அவ்வித சாங்கியங்களையெல்லாம் தவறாமல் நடந்தவேண்டுமென்றும் வாய்ப்பறைசாற்றுகிறார்கள். இந்தமாதத்தில் நடந்த விவாஹங்களுக்கு என்ன வைதீகங்களை அனுசரித்து எந்த வேத மந்திரங்களைச் சொல்லி வேதோக்தமாக நடத்தினார்களென்பது எவருக்கும் தெரியாது. இப்பேர் பட்ட நம் விஸ்வகர்மாக்கள் ஐந்துநாள் விவாஹத்திற்குக் குறைந்து நடத்தக்கூடாதென்று சொல்லுகிறார்கள். இப்படி ஆபாசமாய் விவாஹத்தைச்செய்வதைவிட சரியானபடி ஒருநாள் விவாஹத்தை செய்து முடித்தால் என்ன குறை?

பொருளுள்ளவர்களும் ஒழுங்காகச்செய்து முடிக்கக்கூடியவர்களும் ஐந்துநாளில்லாவிட்டால் இன்னும் அதிகமாகப் பத்துநாள் செய்துகொண்டால் யார் வேண்டாமென்கிறார்கள். ஒருமாதம் செய்தால் யார் தடுக்கிறார்கள்? ஏழைகளாயுள்ளவர்களும் மற்றப்படி இவ்வித ஆபாசமாக செய்யக்கூடியவர்களும்ஏன் ஒருநாள்விவாஹம் செய்யக்கூடாது? விசேஷமாகிய பந்துக்கள் இருக்கக்கூடியவர்கள் ஐந்துநாள்விவாஹத்தை வைத்துக்கொண்டு ஐந்துநாளும் ஜனங்களுக்கு சாப்பாடு செய்துவைத்து யாவருக்கும் திருப்திசெய்து அனுப்பக்கூடிய சிரமத்தைக்கவனித்தாலல்லவா தெரியவரும்? பத்து வீட்டுக்காரர்களாயிருந்தால் வேளைக்கு 5-படி அரிசி 10-படி அரிசி சமைத்துப் போட்டுவிடலாம். 50-படி 70-படி 100-படி சமைக்கக்கூடிய இடங்களில் சமைக்க ஆள் தேடவேண்டும். அவர்களும் பந்துக்களாயிருக்கவேண்டும். வீட்டுப் பெண்டுகளால் சமைக்க முடியாது இப்பேர்ப்பட்ட கஷ்டம் 5-நாளும் படுவதானால் தேகம் என்னத்திற்கு ஆகும்? ஒருநாளாயிருந்தால் ஒருநாள் கஷ்டத்தோடு முடியும். கலியாணமும் கௌரவமாக இருக்கும்.

மேலும், இந்த 5-நாள் கலியாணத்தில் வீட்டுக்காரர்களுக்கு உற்சாகக்குறைவு ஏற்படுகிறது. முதல்தினமிருப்பது அடுத்த நாளில்லை. அடுத்தநாளிருப்பது அதற்கடுத்தநாள் கிடையாது. அதனால் வரப்பட்டவர்களுக்கு தக்க மரியாதை செய்ய ஏலவில்லை. பலவிதத்திலும் பலதொந்தரவுகள் இருக்கின்றன. இதனால் 12-மணிக்கு போடவேண்டிய சாப்பாட்டை மாலை 4-மணிக்கு போடுகிறார்கள். இவைகளையெல்லாம் கவனித்து இனி 5-நாள் கலியாணத்தைவிட்டு ஒருநாள் கலியாணத்தை ஒழுங்காகச்செய்துமுடிக்கவேண்டியது விஸ்வகர்மாக்களின் கடமையாகுமென்பதை வற்புறுத்திச் சொல்ல முன்வந்தேன்.



சென்ற ஆகஸ்ட் மாதப் பத்திரிகை ஒளிவளர் விளக்கில் ஒருநாள் விவாஹத்தாலுண்டாகும் நன்மையைப்பற்றியும் ஐந்துநாள் விவாகத்தாலுண்டாகும் கெடுதல்களைப்பற்றியும் விரிவாகச் சொல்லப்பட்டது. அதைக் கவனித்து வாசித்தால் ஒருநாள் விவாஹத்தை அங்கீகரிக்காதவர்கள் ஒருவரும் ஏற்படமாட்டார்கள் என்பதாக எனக்குத் தோன்றுகிறது. பத்திரிகையைப் பார்த்தேனென்று புரட்டிப் பார்த்துவிட்டால் பிரயோஜனமில்லை. அதை மனஊக்கத்துடன் கவனித்தால் அதில் அனேக விஷயங்கள் புலப்படும். அப்படியில்லாமல் பத்திரிகையை அவர்கள் அனுப்புகிறார்கள் நமக்கு இஷ்டமிருந்தால் பார்க்கலாம் இல்லாவிட்டால் தூக்கி மூலையில் போடலாமென்று யோசித்துவிட்டால் பயன்படாது. பத்திரிகையை ஒவ்வொருவரும் சரியாய்க் கவனித்திருக்கும்பக்ஷத்தில் அவரவர்களுடைய சினேகிதர்களையும் பந்துக்களையும் இப்பத்திரிகையை வாங்கி வாசிக்கும்படித் தூண்ட இடமுண்டாயிருக்கும். எண்ணிறந்த சந்தாதாரர்களும் சேர்ந்திருப்பார்கள் பத்திரிகையைச் சரிவரப்பார்க்காத குறையினாலேயே வாசகர்கள் குறைவாயிருப்பதாகத்தெரிகிறது.

இனியேனும் அவ்விதம் பராமுகமாயிராமல் நமது பத்திரிகையைக்கவனித்து அதிலுள்ள விஷயங்களை நம்மவர்களுக்குத் தெரிவித்து அதுபோல் நடந்துகொள்ளும்படி வற்புறுத்துவார்களென்று நம்புகிறேன். அப்பொழுதுதான் பத்திரிகைக்கு விஷயம் எழுதக்கூடியவர்களுக்கும் உற்சாகமேற்படும். அப்படிக்கின்றி விழலுக்கிறைத்த நீராக ஏற்படுவதால் பயனென்ன? ஆனதால், 5-நாள் விவாஹத்தை அபலமாகச் செய்துமுடிக்காமல் ஒருநாள் கலியாணத்தை ஒழுங்காகச் செய்துமுடிக்கக் கோருகிறேன்.

கொ கன்னியப்ப ஆச்சாரி.

## அரிய உபந்நியாசங்கள்

திருநெல்வேலி விஸ்வகர்ம சன்மார்க்க சபையின் வருஷோற்சவத்தில் அக்கிராசனம்வகித்த ஸ்ரீ K முத்துசாமி ஆச்சாரியார் உபந்நியாசச் சுருக்கம் :—

உலகத்தில் சகல ஜாதிகளும் சங்கங்கள் என்றும், சபைகள் என்றும், கான்பரன்ஸ்கள் என்றும் கூடி தங்கள் குறைபாடுகளை உணர்ந்து அவற்றை நிவர்த்திக்கக்கூடிய வழிகளைக் கண்டு கையாடி நிவர்த்தித்துக்கொண்டுவருமிந்நாளில், தேச நன்மைக்கும் பொதுஜன மதிப்பிற்கும் காரணமான நாம், (வில்லிபுத்தூராரும் தமது பாரதத்தில் எல்லாம்வல்ல விராட்புருஷனை வணங்குகிறேன், என்று கூறியிருக்கிறார்) வரவர க்ஷீணதிசையிலிருந்து வருகிறோமே நம்மினத்தினர் தூங்குகின்றார்களோ என்று துக்கித்துக்கொண்டு இருக்குந்தருவாயில், ஸ்ரீ விசுவேஸ்வரன் கிருபையால் சென்னைமாநகரின்கண் பல சுஜாதிக்கனவான்களால் ஓர் சபை ஸ்தாபித்து அதன் துவாராவாய் வெளிவரும் பத்திரிகையின் பலனால் அதன் நோக்கங்களைப் பின்பற்றி நடக்க இந்த சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்பது ரிப்போர்ட்டினாலும் உங்கள் வாசாவினாலும் அறிந்து சந்தோஷமடைகிறேன்.

கலியுகத்தில் எக்காரியமும் கைகூடுதல் ஜனங்களின் வலிமையைப் பொருந்திருக்கிறது. அந்த வலிமைக்குக் காரணம் ஒற்றுமை. எந்தப் பலசாலியாலும் கட்டுவிறகை ஒடிக்க முடியாது. அவைகளைக் கட்டினின்றும் பிரித்துவிட்டால் எளிதினில் முறிக்கலாம். எதற்கும்

கட்டுப்பாடுவேண்டும். நாம் கட்டுப்பாடுடன் கருமங்களைச்செய்தவர்கள், விட்டுப் பிரிந்து வேதனைக்குள்ளானோம். இதற்குக் காரணம் தற்போதம். இதுதான் ஒற்றுமை என்னும் மரத்திற்கு வேர்ப்புழுவாயிருந்துவருகிறது. அந்த வேர்ப்புழுவை நீக்குவதற்கு சிற்றுயிர்க்கு உற்றதுணையாயும், சதுர்வித புருஷார்த்தங்களைப் பெறுவதற்குக் காரணமாயுமுள்ள கல்வியும், இதை விருத்தி செய்வதற்கு ஊக்கமும் ஆக ஊக்கத்துடன் கூடிய கல்வி அவசியம் வேண்டும். கல்விநலம்பெறாத எவ்வருணத்தாரும் எவ்விதப்பதவியையும் இகத்திலாவது பரத்திலாவது அடையமுடியாது. "கல்லா ஒருவன் குலநலம் பேசுதல் நெல்லினுள் பிறந்த பதராகுமே" என்ற ஆன்றோர் மொழிப்பிரகாரம் கல்வியின்றி கமமானர் கண்ணியமடைய முடியாது. உலகஞானமும், காலதேச வேறுபாட்டை அறிந்துகொள்ளக்கூடிய அறிவும் நமது குலச் சிறுவர்களுக்குப் புகட்டினாலன்றி நமதெண்ணம் கைகூடுதல் கடினம்.

"தந்தைமகற்காற்று முதவி அவயத்து முந்தியிருப்பச்செயல்"

என்று பொய்யாமொழிப்புலவரும் கூறியுள்ளார். ஒவ்வொருவரும் தம்மக்களுக்கு 13-வயதுவரை கல்வி புகட்டவேண்டும். அதோடு நல்ல பழக்கமும் புகட்டவேண்டும். இவ்விஷயத்தில் கவலை கொள்ளாதவர்கள் மக்களைப்பெற்றதனாலாயபயனைப் பெறுவதற்குப்பதில் பாவத்தையே சம்பாதிப்பார்கள். இது நிச்சயம். பட்டறையில் கதிர் கம்பி நீட்டவும் கறிசுரண்டவும் ஆள் வேண்டுமென்று சிறுவர்களைச் சீர்கேடானவழியில் நடாத்திச் சீர்குலையாதீர்கள். நமது தொழிலில் தேற்றமடையாததற்குக் காரணம் கல்வியில்லாக் குறையே. கல்விகற்றவர்கள் தொழிலைக்கையாடி மேன்மையடைவதை நீங்கள் பார்த்து நிந்தைக்கிடமான வழியில் நிற்பதேனோ? களங்கமும் கல்மிஷமுமின்றி மாங்கல்ய முத்திரையைச் சிருஷ்டித்தீந்தால் அதனாலுற்பவிக்கும் குழந்தைகள் நமக்கு நலந்தேடும். நாம் விசுவாசமின்றி செய்துகொடுக்கும் மாங்கல்யத்தினாலுற்பவிக்கும் குழந்தைகள் நமக்கு விரோதமேசெய்யும். பிறஜாதிச்சகோதரர் நம்மை விசுவாசியாதிருப்பதற்கு நாம்தான் காரணம். இந்த ஒரு விஷயத்திலாவது நாம் அதிகக் கூலிவைத்து உண்மையுடன் செய்யவேண்டும். ஒருதேச நன்மைக்குக் காரணம் தொழிற்சாலைகளும், வியாபாரங்களும். ஆகையால், நாம் தொழிற்சாலைகளைக் கூட்டுறவு சங்கங்களால் ஏற்படுத்தி வியாபாரங்களை நாடவேண்டும். ஒரு உதாரணம் கவனியுங்கள், மதுரை டெக்னிக்கல் இன்ஸ்டிடியூட்டில் இன்ஸ்ட்ரக்டர் (Technical Institute Instructor) வேலைபார்க்கும் ஸ்ரீ சிதம்பரபத்தர் அவர்களின்கீழ் 10-பேர்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் அன்னவர் கொள்கைக்கு இணங்குகிறார்கள். இரவில் குறித்த நேரத்தில் சபைக்கு வருகிறார்கள். குழந்தைகளை இராப்பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிடுகிறார்கள். இந்த ஜில்லாவில் அப்படி ஓர் தொழிற்சாலையை நியமிக்கவேண்டியதவசியம் என்பதை நீங்கள் அறியாதவர்களல்ல.

"தச்சப்பயனும் தரித்திரக் கொல்லனுமாங் கச்சத்தானுள்ளும் அகதியினைக் காணீரோ" என்று விஸ்வகர்மவீரகண்டாமணியில் ஸ்ரீ கல்யாணசுந்தராச்சாரியரவர்கள் கூறுகிறார். (ஆங்கு என்றது அங்கே, பட்டிக்காடுகளில்) அச்சத்தால் மணங்குறை



ந்து வருவதை இங்குள்ள (பட்டணங்களிலுள்ள) விஸ்வக்ஞ வகுப்பார் கவனிக்கவேண்டியது அவர்கள் பொறுப்பு என்று கூறுகிறார்.

"கூலிக்கேயென்றுங் கைகூப்பியிருத்தலினால், மேலுக்குவருநோக்கம் மேவுதலு மொல்லுமோ" என்றும் கூறுகிறார். இக் கண்டாமணியி லுரைப்பதை உள்ளத்தில் கொண்டு நடந்தால் நன்னிலை அடைவோமென்பது நிச்சயம்.

நமது குடும்பங்களில் ஒரு துர்வழக்கமிருக்கிறது. அது நமது தரித்திரத்திற்குக் காரணம். அதாவது கலியாண நாளை 5நாளாய் வைத்துக்கொள்வது. விவாஹத்திற்கு வந்த விருந்தாளிகளும் 20, 30-நாள் விவாஹவீட்டைவிட்டு வெளியேறுவதில்லை. ஐசுவரியவான்களே இவ்வளவு நாளிருந்தால் நாமுமிருப்போம் என்று ஏழைகளுமிருக்கிறார்கள். அப்போதுதான் இவர்கள் உறவும் பாத்தியமும் ஊரார்க்கு தெரியுமென்ற கொள்கைபோலும். கல்யாண வீட்டுக்காரன் கடனாளியாவதுமல்லாமல் ஏழைகளும் கெடுகிறார்கள். கலியாணச் செலவு மதிகம். சரியானவழியில் செலவிடுவதுமில்லை. போஜனமும் 3-மணி 4-மணிக்குத்தான் நடைபெறும். அன்றுதான் ஊர்வழக்கும் கோவில்வழக்கும் நடக்கும். இவர்கள் கக்ஷிகளுக்குமளவுமில்லை. வார்த்தைக்கும் தரித்திரமில்லை. பட்டுநூல்காரர்களும், பார்ப்பனர்களும் ஊர்விருந்து ஓரேநாள் வைத்துக் கொள்ளுகிறார்கள். மற்ற நாட்களில் பெண்வீட்டுக்காரரும் பிள்ளைவீட்டுக்காரருந்தான் போஜனம் நடத்திக்கொள்ளுவார்கள். பழையனகழித்தலும் புதியன கொள்வதும் அறிவாளர்களின் கொள்கையாதலால் நாம் விவாஹச் செலவையும் விவாஹ நாளையும் குறைக்கவேண்டியது அவசியம். இவ்விதஞ்செய்வோரைப் பழிக்காமல் பலரும் அதில் பற்றுவைத்து நடக்கவேண்டும். டம்பமாய்ச் செலவிடுகையில் ஐடா மதிவாணு பிரபு கர்ணுவ்தாரா என்போர், கடன்காரனாய் நிற்கையில் உல்லங்கனஞ் செய்வார்கள். இதைக் கவனியுங்கள். ஐந்து நாள் முகூர்த்தம் ஜாதியை உயர்த்தாது. சிறு தெய்வங்களை வழிபடுவதில் ஸ்திரீகள் கொண்ட எண்ணத்தில் புருஷர்கள் மதிகலங்கி மாண்பழிகிறார்கள். அதில் செலவிடுவது மதிகம்; இல்லற தர்மமிது என்பதை இவர்கள் அறியாதவர்கள் என்று சொல்லுவதற்கு யோசனை வேண்டியதில்லை. அவ்விதம் வழிபடுவதில் போஜனசீலமுண்டா புண்ணியமுண்டா அநுஷ்டானமுண்டா கண்ணியமுண்டா? திருவிழாவிற்குச்சென்று பாத்திரமறிந்து செலவழிப்பதுண்டா? கூத்து பந்தயம் சீட்டு இவ்விஷயங்களில் செலவிடுவதில் சித்தங் கலங்குவதில்லை. குலோத்தாரணத்திற்கென்றால் கும்பி குமுறும் குலத்தினரும் கூடார்கள். மாடனும் ஈஸ்வரனும் ஒன்றுதான், ஈசுவரனை வணங்கினால் மாடன் கோபங்கொள்ளான், ஆலயவழிபாடுகளை இன்னின்னாக்கின்னவிதமென்று வகுத்த நாம் நமது கொள்கைக்குமாறாக ஈனதெய்வங்களை வணங்குவது மதியீனம். ஆலகால விஷத்தை உண்ட திருமாலும் நீலநிறமாயினர்- கண்டத்தில் நிறுத்தியருளிய சிவபிரான் கண்டமும் நீலநிறமாயிற்று. எல்லாம் ஒரே தெய்வந்தான்.

நமது குலத்தினர் பணிந்து நடக்கிறதில்லையென்று கூறக்கூடாது. அவர்கள் நம்

மினத்தாரிடம்மாத்திரம் பணிந்து நடக்கின்றதில்லையேயன்றி மற்றவர்களிடத்தில் வேஷ்டி இறக்கிக்கொண்டு பணிந்துநடக்கும் குணமில்லாமலில்லை. சீர்திருத்தங்கள் சீர்திருத்தங்களென்று அனேக சீர்திருத்தங்களைச் சிந்திப்பதில் பலனில்லை. கோபுரங் கட்டுவதற்குப் போடப்பட்ட சாரம், கோபுரம் உயரஉயர தானும் உயரவேண்டும். சாரத்தை உயரக்கட்டினால் மேலே இருந்தெப்படிக் கட்டமுடியும்? கோபுரத்திற்குச் சாரமாதாரம் சாரத்திற்குக் கோபுரத்தொண்டுகள் ஆதாரம். இதுபோல் ஒவ்வொன்றாய்ப் படிப்படியாய்ச் செல்லவேண்டும்.

நமது செய்கையால் கைநழுவவிட்ட "ஆச்சாரி"ப்பட்டத்தைப்பற்றி கவலைகொண்டோமா? க ங ச (ச்ச) என்று சரியாய் உச்சரித்திருந்தால் தவறுமா? சா (ஸா) என்று கூறி நாமிழந்தோம். கவர்ன்மெண்டார் மத விஷயத்தில் பிரவேசிக்கிறதில்லை என்றவர்கள் இப்போது தலையிட்டுவிட்டார்கள். சத்திரம் ஆங்கிலத்தில் எழுதும்போது Chattram ch சேர்த்து எழுதுவார்கள். ஆச்சாரி (Sa) சேர்த்து (Asari) என்று எழுதுவார்கள். இவர்களும் இவ்விதம் எழுதுகிறவர்களும் அறிவாளிகளே! இவ்விஷயத்தில் திருச்சிசபையாரும் சென்னைச்சபையார்களும் கவலை உறுதல்போதாது. ஒவ்வொரு ஜில்லா கிராமம் முதலிய விடங்களில் உள்ளவர்கள் ஆலோசிக்கவேண்டும். தற்காலம் உலகத்தின் தன்மையை அறிந்தும் அந்தகாரத்தில் அழுந்தியிருப்பது அவதிக்கிடமன்றோ? நமக்கு முன் தோன்றியவர் உரிமைகளைத்தொலைத்தனர். நாம் பட்டத்தைத்தொலைத்து நமதுமக்களுக்குப் பழிக்கிடந்தேடிப் பாவத்தை அடையவேண்டுமோ?

"பெருமைக்குமேனைச் சிறுமைக்குந்தத்தம், கருமமேகட்டளைக்கல்" என்று வள்ளுவரும் கூறுகிறார். நமது ஒழுக்கங்களை ஒழுங்குபடுத்தவேண்டும். சந்தியாவந்தனஞ் செய்வதில் ஆத்மசுத்தியும் பகவத்பக்தியும் புண்ணியமுமுண்டு.

"புகழ்படவாழாதார் தந்நோவார்தம்மை
இகழ்வாரை நோவதெவன்" என்றபிரகாரம் நாம் புகழுள்ள வழியில் நடவாமல் நம்மை இகழ்வாரை நோவதில் பிரயோசனமில்லை. திருத்தங்கள் எதுக்கென்று திரிந்தார் தீராத வசைக்குள்ளாகவேண்டியதுதான்.

### கல்வியும் ஒழுக்கமும் வேண்டும்

மதுரையில் மீனாக்ஷிவாத்தியார் ஸ்ரீமான் நல்லசாமிப்பிள்ளை வீட்டில் ஓர் கலியாணத்தை நடத்திவைத்தனர். அப்போது பிராமணர்களும் வந்து இருந்தனர். அவர்களும் கூடவிருந்து விவாஹத்தை நடாத்தி தக்ஷிணை பெற்றுச் சென்றார்கள் நம்மினத்திற்கு அறிவும் ஆற்றலுமதிகம். அதை உபயோகிப்பதில்லையென்று கூறவுங்கூடாது, உபயோகிக்கின்றார்கள். ஆனால், நல்வழியில் உபயோகிப்பதில்லையேயன்றி மற்றப்படி இவர்களுக்கு தெரியாதது ஒன்றுமில்லை எல்லாந்தெரியும். குண்டுமணி குப்பையிலிருந்தாலதனொளியென்ன என்ற எண்ணம்போலும்! நான் நமது நிலையைச் சிந்திக்கையில் இன்னது சொல்லுவது என்பது புலப்படவில்லை. நான் நேற்று காரியதரிசியார் அவர்கள் தந்திபார்த்ததும் புறப்பட்டேன். நான் கூறினதில் அனேக அபிப்பிராயபேதங்களிருக்கலாம். அவைகளை மன்னித்து இந்த சபை நீடூழிகாலம் நிற்கவேண்டிய வழியை நாடுவதோடு குலச்சிறுவர்க



ளின் கல்வியை விருத்தி செய்வதிலும், பத்திரிகா வாசகத்தை விருத்தி செய்வதிலும் உழைப்பதுவே முக்கிய முதல்வேலையாகக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஓர் சபை ஏற்படவேண்டும். அவை அந்தந்த ஜில்லா சபைக்கு உட்பட்டிருக்கவேண்டும் அங்கங்குள்ள ஜில்லா சபை சென்னைச் சபைக்குட்பட்டிருக்கவேண்டும். இது எவ்வளவுக்கெவ்வளவு பலப்படுமோ அதற்குத்தக்க பலனடையலாம். மடத்துச் சொத்துகள் பொதுச்சொத்துகளை தற்போதத்தாலும பொறாமையாலும் கக்ஷிப்பிரதிகக்ஷிகளுண்டாக்கி நரி தோசையைப்பூனைக்குப்பங்குவைத்ததுபோல்கோர்ட்டு விவகாரத்தில்குறைபடுவதைக்குலப் பிரமுகர்கள் தடுக்கவேண்டும். ஆகையால், இந்த ஜில்லா கல்வியிலும், ஆசாரத்திலும் பத்திரிகாவாசகத்திலும் முதன்மைபெற்று விளங்கவேண்டிய வழியில் ஊரார் உழைப்பதில் விஸ்வேசுரன் துணை புரிந்திடுவாராக.

*
* *

ஷை சபையின் பிரசிடெண்டு ஸ்ரீ S. சங்கர ஆச்சாரியார் அவர்கள் உபந்நியாசச் சுருக்கம்:—

சகோதரர்களே! நமது ஈடேற்றத்தைக் குறித்து ஒரு சபை ஸ்தாபித்து நடத்தவேண்டியது அவசியம். அப்போதுதான் சென்னைச்சபையின் நோக்கங்கள் சிறிதளவாவது பூர்த்தியாகும். அதற்கு என்னைப் பிரசிடெண்டாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். நான், இவ்விஷயம் எனக்கு ஒன்றுந்தெரியாது. ஆயினும், ஓர் சபை நடத்தவேண்டியது அவசியமென்பதைக் கருதி நான் அந்த ஸ்தானத்தை வகித்து எனது கடமைகளை இயன்றவகை செய்து வந்ததிலும் வருவதிலும் குறைகள் பலவிருக்கலாம். அவைகளையும், இனி கூறுவதிலுண்டாகும் குற்றங்களையும் மன்னிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நாம் அன்றுபார்த்ததுபோல் இன்றுமிருந்துவருவது இழிவேயாகும். நமது நிலை உயரவேண்டுமானால் சபைதான் அவசியம்; குறைகளைஉணர்ந்து உன்னதமடையஇதைவிட வேறு வழியில்லை. இதற்குமுன் இவ்வூரில் ஏற்பட்ட சபைகள் குலஜனாதரவைப்பெற்று நடைபெற்றிருந்தால் நமது நண்பர்கள் அனேக திரவியங்களைச் செலவிட்டும் அல்லலுற்றிருப்பதற்கு அவசியம் ஏற்பட்டிராதென்பதையும் அநேக நன்மைகள் அடைந்திருப்பார்கள் என்பதையும் நீங்கள் ஒப்புக்கொள்ளாது போகமாட்டீர்கள். ஆனால், இச்சபை நமது குறைகளகன்று குலோத்தாரண முயற்சிகளில் ஊக்கத்துடனுழைக்க வருடந்தோறும் அரிய பெரிய வித்துவான்களால் நடைபெறவேண்டும். இதற்கு ஈசன்துணையும் உங்கள் துணையும் வேண்டும். ஒருநாளில் ஒரு வீடு கட்டக்கூடியதல்ல. எண்ணி எண்ணிச் செய்யவேண்டியது. நமது குலச்சிறுவர்கள் கல்வியை விருத்தி செய்யவும், நமது குலத்தினர் பல பிரிவுகளில் ஒற்றுமையின்றி நடையுடைகளில் பேதப்பட்டிருப்பதை நீக்கி ஒற்றுமையை ஏற்படுத்தவும் சபை கூட்டினோம். அவ்விதப் பிரயத்தினத்தில் தப்புவழிக்கும் பிரயத்தனமாறுபாட்டிற்கும் காரணமான அவசரமின்றி நிதானமாயும் பொறுமையுடனும் உழைப்பதில் சிரத்தை வைப்பதுதான் சிறந்தவழி!

### இராஜபக்தி.

பூர்வீக அரசர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று நமது இராஜபக்தி உடன் பிறந்ததாகையால் நமது அரசர் வெற்றிக் கொடிநாட்ட விஸ்வேசுவரனை துதிப்போமாகவும்.

### கல்வி.

இந்த ஜில்லாவில் இரண்டு காலேஜுகளும் 3 செக்கன்டரி ஸ்கூல்களும் இருந்துவருகின்றன. இன்னும் அங்கங்கே ஹைஸ்கூல்களுமிருக்கின்றன. நமது சிறுவர்களில் F. A. வகுப்பில் ஒருவரும், 10-வது வகுப்பில் இருவரும், 6-வது வகுப்பில் இருவரும் வாசிக்கிறார்கள் என்று கூற வெட்கமாயிருக்கிறது. 30,800 ஜனத்தொகையில் 15 பேர்கள் வாசிக்கிறார்கள் என்றால் நாம் கல்வியில் கொண்டுள்ள ஊக்கம் எவ்வளவு என்பதை நீங்களே அறிந்து கொள்ளுங்கள். இதற்கு ஊக்கமின்மையும் வறுமையும் காரணம். குலச்சிறுவர்களின் விருத்திக்குவற்ற சௌகரியங்களைக்குலஜனங்கள் ஏற்படுத்தாது, கோர்ட்டு விவகாரங்களில் மடத்துச்சொத்துக்களைச்சூறையாடுவதை நிறுத்த வழிதேடாதிருப்பது யாருடைய துர்அதிர்ஷ்டமென்று கூறலாம்? நானும் காரியதரிசியவர்களும், வாசிக்கும் சிறுவர்களின் தன்மையை அறிந்து கொள்ள பள்ளிக்கூடஞ் சென்று பார்த்ததில் 1-மாதத்திற்கு 10-நாள் பள்ளிக்கூடத்திற்குச்சரியாய் வரக்கூடிய பையனை (Attendance Register) தினசரி ரிஜிஸ்டர் புத்தகத்தில் காணக்கூடாமல் போனோமென்றால், சிறுவர்களின் தந்தைமார் கொண்டுள்ள கவலைதான் என்னே! இதற்கு இயன்ற பிரயத்தனஞ் செய்வதில் உங்கள் உதவி வேண்டற்பாலது. ஸ்ரீ மாது மந்திரமாள் அவர்களால் குலச்சிறுவர்கள் கல்விக்காக நன்கொடையாகக் கொடுத்த திரவியத்தால் நடைப்பெற்ற பள்ளிக்கூடம் நிறுத்தப்பட்டதற்கு அந்த சொத்தின்மேல் நம்மில் சிலர் வியாஜ்ஜியந் தொடுப்பதாய்ப் பிரஸ்தாபித்ததே காரணம். இந்த குணங்களை ஈசனே அறியவேண்டும்.

### தொழில்.

நமது குலச்சிறுவர்கள் தொழிலில் பழகுவதற்கு முன் கல்வி வேண்டும். தொழிற்கல்விதானவசியம்; கூலிக்கட்டுப்பாடும் வேண்டும். குலத்தொழிலை வஞ்சனையின்றிச் சொல்லிக்கொடுக்கவேண்டும். நான்வேலை செய்கையில் அறுந்த கொடியை பொருத்தும் விதத்தை என் முதலாளியோடு உதவியாயிருந்தவர் ஒருவருக்கும் காண்பிக்கவில்லை. பொருத்தக்கூடிய சமயம் நேர்ந்தால், அவர்தனிமையாயிருந்து பொருத்தியிருப்பார். இந்த வழக்கம் மேல்நாட்டினரிடம்கிடையாது. ஆகையால், அவர்கள் மேனோக்க மடைகிறார்கள். அக்கிராசனாதிபதி கூறியவண்ணம் கூட்டுறவுச சங்கத்தால் தொழிலையும் வியாபாரத்தையும் விருத்திசெய்யவேண்டும்.

### ஒற்றுமை.

இந்த ஜில்லா ஒற்றுமையில் சிறந்ததென்பது முன் பட்டரை மரியலால் கலெக்டர்துரை அவர்கள் வண்டிவேலை மதுரையிலிருந்து வந்த கொல்லரால் செய்து கொடுக்கப்பட்டதென்பதால் விளங்கும். தற்போதமும் கல்வியின்மையும் இதனழிவுக்குக் காரணம்.



### சிக்கனம்.

இது விஷயமாய் நான் அதிகங்கூறவில்லை. தலைவர் அவர்கள் போதியவளவு கூறியிருக்கிறார். இலஞ்சியில், கலியாண மண்டபம் என்று ஓர் மண்டபமிருக்கிறது. அதில் அவ்வூர் வேளாளர் தங்கள் விவாஹத்தை நடத்திக்கொண்டு பெண் வீட்டுக்காரரும், பிள்ளைவீட்டுக்காரரும், மாப்பிள்ளை கிருஹத்தில் போஜனம் நடத்திக்கொள்ளுகிறார்கள். முகூர்த்தத்திற்கு வந்தவர்கள் தங்கள் தங்கள் வீட்டில் போஜனஞ்செய்துவிட்டுப் பட்டணப் பிரவேசத்திற்கு வந்துவிடுவார்கள். அவர்களில் ஒரேநாள் கலியாணம். நாமும் ஒரேநாள் கலியாணம் வைத்துக்கொள்ளுவதோடு அக்கம்பக்கத்தாரையும் அவ்விதம் நடக்கத் தூண்டவேண்டும். இலஞ்சியில் பிள்ளைமார்கள் ஆஸ்திவந்தர்களாயிருப்பது அதனால்தான். மேலும் அவர்கள் செலவுகள் அதிக சுருக்கம். நாமும் நமது விவாஹ நாளையும் சுருக்கவேண்டும்.

### ஆசாரம்.

நமது மேன்மைக்குப் பாதகமான கொள்கை எவ்வளவுநாள் நமது பழக்கத்திலிருந்துவந்தாலும் அதைக்கைவிடுதலில் கவலைவேண்டாம். கல்வியிலும், உபநயனத்திலும், சமஸ்கிருதத்திலும், சிறுவர்களை உட்புகுத்துங்கள். நமது கணபதிஆலயத்தில் பூஜைசெய்வதுபிராமணர். இவ்விஷயமாய்க் காரியதரிசியார் சபையில் எடுத்துக்கூறியும் கோவில் தர்மகர்த்தா அவர்கள் கவனிக்கவில்லை. சுஜாதியார்கள் பூசை செய்தால் அன்னியர் விபூதிப்பிரசாதம் வாங்கமாட்டார்கள் என்றுகூறுகிறார்களே. இது என்ன அழகு! ஸ்தபதிகளும் பணத்தில் பற்றுவைத்து மருந்தைமாத்திரம் சாத்தி விட்டு தமது பாத்தியதைகளை விட்டு வருகிறார்கள். இவர்களுக்கு நல்ல ஞானம் எப்போதுண்டாகுமோ ? நமது உரிமைகள் கெட நமது நடைகளே காரணம். யாரை நோவது? இனியேனும் கவலைவைக்கவேண்டியது அவசியமென்பதை அகத்தில் கொள்ளுங்கள். "மறப்பினு மொத்துக்கொள்ளலாகும் பார்ப்பனன், பிறப் பொழுக்கம் குன்றக்கெடும்" நமது மேன்மைக்கும் சிறுமைக்கும் நமது ஒழுக்கமே காரணம்.

### பத்திரிகை.

ஈசனருளால் விஸ்வகர்மனும் தொழிலும் ஒன்றுசேர்ந்து வருகிறது. நமது குலசம்பந்தமானவைகளை நன்றாய்ப் பரிசீலனைசெய்து பிறர் பிரியங்கொள்ளக் கூடிய வழியில் வெளிவருவதால் குலத்தினர்யாவரும் பெற்று வாசித்து நடக்கும் நாளே நாம் நலம்பெறும் நாள் சீர்பெறும் நாள். அதை விருத்திசெய்வதுதான் முதல் வேலை.

## குலாபிமானக்கொத்து.

### 1. குறுக்குத்துறை விஸ்வகர்ம சத்திரம்.

குறுக்குத்துறை, தாம்பிரபர்ணிநதிக்கரையிலிருக்கிறது. திருநெல்வேலிக்கும் குறுக்குத்துறைக்கும் சுமார் ஒருமைல் தூரமிருக்கிறது. அங்கு ஸ்ரீ சுப்பிரமணிய ஆலயமொன்றுண்டு. ஒரு நாட்டுக்கோட்டைச்செட்டி சத்திரமும் சில மண்டபங்களும் இருக்கின்றன. நாட்டுக்கோட்டைச்செட்டி சத்திரத்திலிருப்பவர்களும் நதிக்குக் காலையிலும், மாலையிலும் ஸ்நானத்திற்கு வருகிறவர்களுமன்றி மற்ற ஜனங்கள் கிடையாது. ஷ கோவிலில் பூஜை செய்வோரும் திருநெல்வேலி டவுன்வாசிகளே. ஷ கோவிலில், வைகாசி விசாகம், சித்திரை, ஆவ

ணிமாதங்களில் நடைபெறும் 7-வது நாள் உற்சவத்தன்று அயலூர் ஜனங்கள் அங்கு கூடுவார்கள்; ஷெ 7-வதுநாள் தங்கச் சப்பரம் எழுந்தருளப்பண்ணி வீதிவிழாச்செய்வது திருநெல்வேலியில் என்றால் அது ஜனப்புழக்கமுள்ள இடமல்லவென்பது வெளிப்படையல்லவா? யாத்திரை ஸ்தலங்களுக்குப் போகக்கூடிய பாட்டையிலுள்ள ஓர் முக்கிய இடமுமன்று. அங்குள்ள ஆலயத்தால் சிறப்புற்றிருப்பதல்லாது வேறொன்றுமல்ல. இந்த இடத்தில் நம் இனத்தினரால் ஓர் சத்திரம் கட்டப்பட்டு வருகிறது. அது உத்திரமட்டம் வரை கட்டப்பட்டுபொருளின்மையால்பூர்த்தியாகவில்லை. சிராவணத்தன்று எக்ஞோபவீதம் தரித்துக்கொள்ளுவதற்கும் ஷெ திருவிழா காலங்களில வேலையைக் கெடுத்து ஓர்நாள் பூராவும் தமது வாழ்நாளைக் கழிக்கும் விஸ்வகர்மாக்கள் தங்குவதற்கும் கட்டப்பட்டதோ அன்றி குறுக்குத்துறையில் நம்மினத்தினர்க்கு ஓர் சத்திரமுண்டென்ற சொல்லிற்குக் கட்டப்பட்டதோ அறியேன்; இவ்விஷயங்களுக்குத்தான் அச்சத்திரம் பிரயோசனப்படக்கூடியதா யிருக்கிறதென்பதை அனுபவசாலிகள் அறியாது போகவில்லை.

பிறதேசங்களிலிருந்து திருநெல்வேலிக்கு விஜயஞ் செய்யும் சுஜாதியர்கள் தங்குவதற்கும் பக்கத்துக் கிராமங்களிலிருந்து ஆனித்திருவிழாவிற்குவந்து தங்குவதற்குக் கஷ்டப்படும் சுஜாதியர் தங்குவதற்கும், பொது விஷயங்களுக்கும் சத்திரத்தினாலடையக்கூடிய நன்மையைப்பெறுவதற்கும் இன்னோரன்ன பலசௌகரியங்களையும் அடைவதற்கேதுவான விடத்தில் அச்சத்திரம் அமைக்கப்படவில்லையென்பது உலகாநுபவமுள்ளகனவான்கள் உணராமலிருக்கமாட்டார்கள். இரவிலாவது பெரிய மழையில் கையில் குடை உடைய ஒருவன் பகலிலாவது அச்சத்திரத்தில் தங்க (சிறிதுநேரம் தாமதிக்க) இசையானென்பது வெள்ளிடைமலைபோல் விளங்கக்கூடிய விஷயம். சத்தியத்தைப் பூர்த்தி செய்யவே பணம் பற்றாதபோதுபடித்தரத்தைப்பற்றி யோசிக்கவேண்டுமோ! திருநெல்வேலியிலுள்ள 4 ரதவீதியில் எந்த ரதவீதியிலாவது சுஜாதியர்க்குப் பொதுவாய்ப் பிரயோஜனப்படக்கூடிய ஒரு இடமாவது இருக்கிறதென்பதற்கு இம்மியேனு மிடமில்லை

இது ஒரு விசனிக்கத்தக்க விஷயமேயாகும். சகோதரர்களே! இச்சத்திரத்திற்கு முதன்மையா யிருந்துவரும் அரசடிபாலத்தெரு, தெற்குத்தெரு முதலிய விடத்திலுள்ள சகோதரர்களே! திருநெல்வேலியில் தேரோடும் வீதியிலாவது, திருநெல்வேலிக்கும் வீரராகவபுரத்திற்கும் ..த்தியிலாவது அச்சத்திரம் கட்டப்பட்டால் மேலே குறிப்பிட்ட பல சௌகரியங்களைத் தேடிக்கொள்வதோடு, இரண்டு கடையும் கட்டிவிட்டால் அதன் வருமானம் சத்திரத்தின் ரிப்பேர்முதலிய செலவுகளுக்குப் பொருள் தேடிக்கொள்ளவும் ஏதுவாகும் அனேக திரவியத்தைச்செலவிட்டுக் கட்டப்படும் சத்திரத்தால் அடையக்கூடிய முக்கிய பிரயோசனங்களை அடைந்தால்தான் கட்டினவர்களுக்கும், சுஜாதியர்க்கும், ஊருக்கும் ஓர் நன்மையும் பலனுமுண்டென்பதை நன்கு யோசித்தால் விளங்காமல் போகாது. ஆகையால், நண்பர்களே! சிறிது சிந்தித்து சீக்கிரத்தில் அச்சத்திரத்தைப் பிறர் விலைக்குக் கேட்பதால் விஜாதியார்க்கு விற்று விஸ்வகர்மாக்கள் பலரும் பயன் பெறக்கூடிய வழியில் மேறகண்டவிடங்களில் எதிலாவது அச்சத்திரத்தை அமைத்து அதனாலடையும் புண்ணியத்தையும் புகழையும் பெற்று உலகபூஜிதர்களாய் விளங்கி விஸ்வகர்மாக்கள் கஷ்டத்தை நீக்கி கண்ணியமடையக்கூடியபடி காலதாமதஞ் செய்யாமல் ஷெ கருத்துடன் சத்திரத்தை அமைப்பதில் அக்கரை காட்டுவீர்களென்று பிரார்த்திக்கின்றேன்.

சத்தியவசனன்.

## 2. பூணூல்.

“விஸ்வகர்மன்-தொழில்” 5-வது சம்புடம் 3-வது சஞ்சிகையில் வெளியான “பூணூல்” என்ற மகுடங்கொண்ட வியாஸத்தின் கருத்



தை அறிந்து அபிப்பிராயம் தெரிவிக்கவேண்டுமென்ற உத்தரவிற்கு உள்பட்டு இதில் என் சிற்றறிவிற்குத்தென்படுவதைத் தெரிவிப்பதில் குற்றமிருக்கின் மன்னிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

1. பூணூல் தரித்தவர் பிராமணர்தாம் திராவிடர் தரித்ததில்லை என்கின்றார். பூணூல் எங்கிருந்து வந்தது? அதன் உண்மைக் கருத்தென்னவென்பதை உணர்வதுவே உத்தமம். மேலும், வேளாள குருக்கள் எப்போதும் பூணூல் தரிக்காத மற்றவர்கள், சுபாசுபகாரியங்களிலும் தரிக்கின்றார்களே எதற்கு அணிந்துகொள்ளுகிறார்கள். குருக்கள் எப்போதும் அணிந்துகொள்வது தாம் மேலானவர்கள் என்று காண்பிக்கவா?

2. விஸ்வகர்மாக்களுக்கு பூணூல் ஜென்மசுதந்திரமாய் உண்டென்பதற்கு ஆதாரமில்லாமல் போகவில்லை என்றும், நமக்கு உபநயனம் பிராமணீகம் முதலானது இல்லையென்று கூறுவது பொருந்தாது என்றும் இங்கு அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். இதற்கு நாம் ஆதாரங்கள் காட்டவேண்டியது அவசியம்.

3. மனுதர்ம சாஸ்திரம் பொய்யென்று அனேக வியாஸங்கள் திராவிடனில் வந்திருப்பதைச் செட்டியார் அறியவில்லைபோலும். அறிந்தும் அதை ரிக்கார்டாய் பாவிப்பது எதுபற்றியோ? தாம் கூறுவதுபோல் பூணூல் அணிந்தவர்கள் எல்லாம் ஒன்றாயிருக்கவேண்டுமே அப்படியுமில்லையே!

4. வலங்கை இடங்கை சண்டைக்கு பூணூல் காரணம் என்கின்றார். அது காரணமல்ல. தரித்தவர்கள் இடங்கை என்றும், தரிக்காதவர்கள் வலங்கை என்றும் கூறுவது யுக்திக்கும் பொருந்தவில்லை. இடதுகை இழிவையும் வலங்கை உயர்வையும் குறிப்பதால் இடங்கையிலும் வலங்கையே சிரேஷ்டமாக இந்துக்களால் பாவிக்கப்படுவது வழக்கம். மேலானவஸ்துவை யடைந்தவர்களும், ஒருவனுக்கு உபகாரியாயிருந்தவர்களும் மேலானவர்கள் என்று சொல்லுபவர்களும் சிரேஷ்டமாக வழங்கப்படுகிற வலது கையை வலங்கை என்றே கூறுவது தகும். அதை விரும்பாத மற்றவர்களை இடங்கை என்று கூறுவது சரி. இங்கே பூணூலை அணிந்தவர்கள் இடங்கை என்றும், அணியாதவர்கள் வலங்கை என்றும் கூறுகிறார். இது எங்ஙனம் பொருந்தும். பொருந்தாததால் இது காரணமன்று.

5. பண்புரிச் சோழனுக்கும், காளிங்கராஜனுக்கும் பட்டம் கட்டும் விஷயமாய் வியாசர் ஏற்படுத்தியதே காரணம். காளிங்கன், பரிமளச்சோழனின் வைப்பாட்டி மகன். ஆதலால் அவன் முடிசூட்டிக்கொள்ள அருகனல்லனென்று கூறியவர்கள், பண்புரிச்சோழன், (பரிமளச்சோழனின் விவாஹ ஸ்திரியினிடம் உற்பவித்தவன்) இறந்து, காளிங்கன் பட்டத்துக்கு பிராமணர்களி னுதவியால் தன்னை வைப்பாட்டி மகன் என்றவர்களை இடங்கை என்றும், தனக்கு அனுகூலமானவர்களை வலங்கை என்றும் திட்டஞ்செய்தான்.

6 பல்லவர்களும் பாண்டியர்களும் சோழர்களுக்கு ஜென்மவிரோதிகளா யிருந்தார்கள். 8 வது நூற்றாண்டின் சமீபத்தில் பல்லவர்கள் சோழஅரசர்களாலும், (Chalukias) சாலுக்கிய அரசர்களாலும் அனேக விடங்களில் தோற்கடிக்கப்பட்டு அவர்களுடைய இராஜ்யமும் சிற்றரசுகளாய்விட்டன. 11-வது நூற்றாண்டின் முதல் 25-வருடங்களுக்குள் இராஜராஜசோழனென்பவன் தன்னுடைய சேனையை இரண்டு பிரிவாய்ப் பிரித்ததாய்த் தெரிகிறது. தன்னுடனிருந்து தனக்கு இதர நாடுகளை ஜெயித்துக் கொடுத்தவர்களுக்கு வலங்கை என்றும், தனக்கு விரோதமாய்ச் சண்டை செய்த மற்றப் பாண்டிய தெலுங்கு நாட்டினர்க்கு இடங்கை என்றும் பெயரிட்டான்.

7- இராஜஇராஜேந்திர சோழனின் சிலாசாஸனமூலமாய் இந்த வலங்கை இடங்கை வித்தியாசம் அவனுடைய சேனையில் முக்கியமாயிருந்ததென்றும், அவன் தகப்பன்காலத்தில் இரு

ந்தில்லை என்றும் தெரிகிறது. அதிலுள்ள வலங்கைப் பழயபடைகள் என்ற வார்த்தைக்கு வலதுகைப் பழயபடைகள் என்று அர்த்தம் கொள்ளப்படும். புதியவர்களினின்று மவர்களை வித்தியாசப்படுத்திக் காட்டவே இவ்விதம் கூறப்பட்டது.

8. 1035-ம் வருடத்தில் ஆதிராஜேந்திரசோழன்காலத்தில் சண்டைக்கருவியை உபயோகப்படுத்தியவர்களுக்கு (Poll-tax) ஆள் வரி ஏற்படுத்தப்பட்டது. இதெல்லாம் வலங்கை இடங்கை சேனைகளிலிருந்து உண்டானதாய்த் தெரிகிறது.

9. நம்மவர்களும் மற்றத் தொழிலாளிகளும் சண்டைக்குப்போகாமல் அவர்களுடைய தொழிலைப்பார்த்துவந்ததால் இவாகளால் தனக்கு உதவியில்லை என்றும், ஆதலால் இவர்கள் இடதுகைக்கு சமானம் இடங்கையென்றும், சண்டைக்கு வந்த ஒரு தொழிலு மற்றவர்களை உபகாரிகள் என்று வலங்கை என்றும் கூறினன்போலும்.

10. நெல்சன் (Nelson) துரை அவர்கள் மத வித்தியாஸம் இதற்குக் காரணமாகமாட்டாது என்று சொல்லுவது தப்பிதம். பாஞ்சாலர் பிராமணர்களின் மேன்மையைப் பிடிவாதமாய் ஒப்புக்கொள்ளாம விருப்பதினுலும் அவர்களுடைய வழக்கங்களை அனுசரித்து வருவதும் இதற்குக் காரணம் என்று கூறுகிறுர்.

11. பர்ண் (Mr. Burn) துரை அவர்கள் விஸ்வப்பிராமணர்களைப்பற்றி சிலாக்கியமாய்ச் சொல்லியிருப்பது (Dr. Palany Andi) டாக்டர் பழனிஆண்டி அவர்களால் எழுதிய புத்தகத்தில் காணலாம்.

விஸ்வகர்ம குலோத்தாரணசபையின் ஊழியன்

T. தங்கவேல்.

## 3. திருச்சி கான்பரன்ஸ்.

திருச்சியில் நடந்த 3-வது விஸ்வகர்ம கான்பரன்ஸ் சம்பந்தமாக திருச்சி பிரமஸ்ரீ R. P. கோவிந்தசாமி ஆச்சாரியார் எழுதிய வியாஸத்திற்கு விடை கூறுவதாக "விஸ்வகர்மன்-தொழில்" ஆடிமாசத்தியசஞ்சிகையில் கண்டோனென்று கையொப்பமிட்டு வரைந்துள்ள வியாஸத்தை நமது குலாபிமான நண்பர்கள் அனைவரும் கண்ணுற்றிருக்கலாமென நம்புகிறேன். கண்டோன் நிருபர் வரைந்த விடையானது ஸ்ரீ R. P. கோவிந்தசாமி ஆச்சாரியார் கூறியவைகள் யாவும் உண்மையென நிரூபிக்கின்றதே ஒழிய அவர் சொல்வதை மறுத்துரைப்பதாக ஒன்றையும் காணும்.

கண்டோன் நிருபர் உண்மையைக் கண்டறியும் நடுநிலையைக்கொள்ளாது கான்பரன்ஸ் நடத்தத் தலைமை வகித்துள்ளாரிடத்தில் தனக்குள்ள பச்சாதாபதை வெளிக்காட்ட முன்வந்தானது நம்மவர்களுக்குள்ள அறியாமையை நன்கு புலப்படுத்துகிறதல்லவா?

கான்பரன்ஸில் நடைபெறக்கூடிய விஷயங்களைப் பொதுஜனங்கள் அறிந்துகொள்ளுமாறு ஆலோசனைக்கு விட்டு தீர்மானங்களை ஒருவித முடிவுக்குக்கொண்டுவரச் சாதகமாக கான்பரன்ஸில் நடைபெறத்தக்கதான விஷயங்களை முன்னதாகவே பிரசுரித்து பொதுஜனங்களுக்குப் பகிரங்கப்படுத்த கான்பரன்ஸில் தலைமை வகித்துள்ளார் கடமைப்பட்டிருக்க, அப்படிச் செய்வதற்கு கடமையென்னும் நூல் உண்டோவெனக் கண்டோன் நிருபர்கூறுகிறுர். கான்பரன்ஸ் இத்தகையதானது. அதில் தலைமைவகித்துள்ளவர்கள் இன்னின்ன வகைகளில் கடமைப்பட்டுள்ளவர்கள் என்பதைக் கண்டோன் நிருபர் அறிந்திலர்போலும்.

ஸ்ரீ R. P. G. ஆச்சாரியார் தான் அதில் ஒரு முக்கியஸ்தராக ஏற்பட்டிருந்தும், கான்பரன்ஸ் நடவடிக்கைகள் எதுவும் தாம் அறிந்துகொள்ள முடியாதபடி காரியங்கள் நடத்தப்பட்டன வென்றதற்கு அப்படி அறிந்துகொள்ள முடியாதவர் தாம் ஏற்றுக்கொண்ட ஸ்தானத்தைக் காலிசெய்துவிட்டிருக்கலாமே என்று கண்டோன் நிருபர்



புறத்திக்கூறுகிறுர். கண்டோன் நிருபர் கருத்துப்படியே தற்போதுள்ள விஸ்வகர்ம கான்பரன்ஸ் ஆனது சுயநன்மையைக்கோரிய ஒருவருடைய சுய அதிகாரத்திலேயே கூட்டப்படுகிறதென நன்ருய்த் தெரியவருகிறதல்லவா? இதை உணர்ந்தே நம்மில் கற்றவர்களாகவும் உயர்தர அந்தஸ்து வகித்துள்ளவர்களாகவுமுள்ள பெரும்பான்மையோர்கள் கான்பரன்ஸை அணுகாமல் ஒதுங்கி நிற்கிறுர்களென்பதை R. P. கோவிந்தசாமி ஆச்சாரியார் அறிந்திருக்கக்கூடும் அப்படி அறிந்திருந்தும் கான்பரன்ஸில் ஒரு முக்கியஸ்தனுயிருக்க ஏற்றுக்கொண்டதானது அதன் உண்மையை அறிய எண்ணங்கொண்டே அந்த ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டிருக்கவேண்டுமென நினைக்கின்றேன்.

மேலும், கண்டோன் நிருபர் பிரம்மஸ்ரீ முக்கண்ணுச்சாரியாருக்காக பரிந்து எழுதுகிறுர் ஷை ஸ்ரீ முக்கண்ணுச்சாரியார் அவர்கள் குலாபிமானம் மிக்க உடையவர்தாம். வயதிலும் முதிர்ந்தவர். குலாபிமானத்தைக்கருதி அனேக நாளாக பாடுபட்டும் வந்திருக்கிறுர். இதை மறுக்க யாவராலும் முடியாது. ஆனல், அவர் குலஜனங்களின் உண்மை நிலைமையை உள்ளபடி உணர்ந்து, தக்கபடி நடந்துகொள்ள முயல்வாராகில், உண்மைத் தலைவரென மதிக்கப்படுதல்கூடும் என்பதை கண்டோன் நிருபர் உணர்வாராக. இவா உயர்தரக்கல்வி வேண்டாமென்று சொல்லும் கொள்கையையுடையவர். அப்படியிருந்தும் தாம் பொறுப்பேற்று நடத்தும் கான்பரன்ஸிற்கு (தம் கொள்கைக்கு விரோதமாக) உயர்தரக்கல்வி பெற்றுள்ளவர்களையே தலைமைவகிக்கத் தேடுகிறுர். இவர் உண்மையில் உயர்தரக்கல்வியாளரை மதித்தும் மற்றவர்களுக்குப் போதனை செய்யும்போது உயர்தரக்கல்வியே வேண்டாமென்று உபதேசம் செய்கிறுர். இவர் அறியாமையினுல் தம மனச்சாக்ஷியைத் தற்கொலை செய்துகொள்வதுமல்லாமல் மற்றவர்களுக்கும் பின்னோக்கிச் செல்லும் முறைகளையும் போதிக்கிறுர். இவர்தம் போதனைக்குள்ளிட்ட ஜனங்கள் எங்ஙனம் முன்னேற்றம் அடைதல் கூடும்?

சகோதரர்களே! நமக்கு கல்வியே முக்கிய அவசியமாகையால் உயர்தரக்கல்வி வேண்டாமென்று சொல்லும் கொள்கையை ஒருபோதும் கைக்கொள்ளாதீர்கள். நமக்கு உயர்தரக்கல்வி இல்லையாகில் நாம் பாழும் கிணற்றில் தள்ளப்பட்டமாதிரியே ஆவோம். நமது கல்விக்கெனத் தனிச்சங்க மேற்பட்டு கல்வி விருத்திக்குரிய மார்க்கங்களைத் தேடாவிடில் நாம் அடிமைக்குரிய தன்மையிலேயே இருந்துவிடுவோமென்பது திண்ணம். மேலும், நாம் எழ்மைத்தன்மையிலேயே இருந்துகொண்டிருக்கிறபடியால் நமது பொருள்கள் அனுவசியமான ஆடம்பரத்திற்குச் செலவழிக்கப்படாமல் கல்வி விருத்திக்குரிய மார்க்கத்திலேயே செலவழிக்கப்படுதல் அத்தியாவசியமென்பதை உணருங்கள். நமது கான்பரன்ஸ் நடந்த அந்த தினங்களில் அதே இடத்தில் தொண்டமண்டல வேளாளர்களால் நடத்தப்பட்ட கான்பரன்ஸில் உயர்தரக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு சகாயம் செய்யப் பொருள்சேகரித்ததும் அவர்களுக்கெனத்திருச்சியில் ஒரு ஹாஸ்டல் ஏற்படுத்தியதும் எதற்காகவென நம்மவர்கள் உணராதுபோனது நமக்கு கண்ணிருந்தும் குருட்டுத் தன்மையில் அமிழ்த்தப்பட்டிருக்கிறேமென்பதை உணர மனதிற்கு அதிக துக்கத்தை உண்டுபண்ணுகிறது, கண்டோன் நிருபர் எழுதிய வியாசத்தில் கடுஞ்சொற்கள் நிரம்பப்பெற்றிருப்பதால் இனி அவ்வித வார்த்தைகளை உபயோகப்படுத்தாதிருப்பது ஒற்றுமைக்கு நலமென்பதை கண்டோன் நிருபர் உணர்வாராக.

உண்மைகண்டுரைப்போன்.

## 4. வருஷோற்சவக் கொண்டாட்டம்.

நிகழும் 1918வரு செப்டெம்பர் மீ 1உ ஆதிவாரம் பிற்பகல் 3-மணிக்கு திருநெல்வேலி அக்கசாலை விநாயகர் கோவில் ஒரு சத்திரத்தில், திருநெல்வேலிப்பாலம் விஸ்வகர்ம சன்மார்க்க சபையின் வருஷோற்சவம் மதுரை

இராஜவிசுவாச விஶ்வகர்ம சாதுசங்க சபையின் முக்கிய அங்கத்தின் தமிழ் வித்துவான் K. முத்துசாமி ஆச்சாரியவர்களின், அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீ திருமலைமுத்துகுமார ஆச்சாரி அவர்களும், சுமார் 300 ஜனங்களும் பல விடங்களிலிருந்து விஜயஞ் செய்திருந்தனர். அக்கிராசனாதிபதியவர்களும் சபைத்தலைவரும் குல ஈடேற்றசம்பந்தமான விஷயங்களைப்பற்றி அரிய உபந்நியாசங்கள் செய்தார்கள். (அவை வேறிடத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன) ஸ்ரீ T. தங்கவேலு ஆச்சாரி (சபையின் காரியதரிசி) தற்கால நிலைஎன்றவிஷயத்தைப்பற்றி தற்காலம் நாம் எவ்விதமிருந்துவருகிறோம் என்பதையும் நாம் விலக்கவேண்டியதை விலக்குவதும் கொள்ளத்தக்கதைக் கொள்ளுவதும் அவசியமென்று விளக்கிக்காட்டி, மடத்துச் சொத்துக்கள் கோர்ட்டு விவகாரங்களில் சூறையாடப்படுவதை குலத்தினர் தடுக்காது காலத்தைப் போக்குவதால் மடத்துக் கைங்கரியங்கள் நடைபெறாதொழிகின்றனவென்றும், அதனால் குலத்திற்கு ஹானி உண்டாகிறதென்றும், கல்வி விஷயத்தில் குலப்பிரமுகர்கள் வேண்டியவழிகளை நாடாதிருப்பது விசனிக்கத்தக்கதென்றும், இவைகள் இனிது நடந்து இன்பம் பயக்க இதுபோன்ற சபைகளும், பத்திரிகையும் அவசியமென்றும் சென்னைச் சபையையும் பத்திரிகையையும்பற்றிக் கூறி அவைகளைப்பெற்று வாசித்து விருத்தி செய்தாலன்றி நம் எண்ணம் கைகூடாதென்றும், கல்வியையும் பத்திரிகா வாசகத்தையும் விருத்தி செய்யவே இச்சபை கூடியதென்றும் அதில் குலத்தினர் அக்கரை காட்டவேண்டியது அவசியமென்றும் சாங்கோபாங்கமாய்க் கூறினர்.

ஸ்ரீ இராமசுப்பாச்சாரி அவர்களால் விஶ்வகர்ம பிரபாவம் என்ற புண்ணிய விஷயம் அற்புதமாய்க் கூறப்பட்டது.

சபையின் பொக்கிஷதாரர் ஸ்ரீ T. M. கந்தசாமி ஆச்சாரி அவர்கள் தொழில், தொழிற்கல்வி விஷயங்களைப்பற்றியும், ஸ்ரீ தங்கவேலு சுப்பிரமணிய ஆச்சாரி அவர்கள் தொழிலினுல் மூலதனத்தைச் சேர்க்கும் வகை, திருமாங்கல்யம் ஒரேஒருவர் செய்வதை கூடியவரை அமுலுக்குக் கொண்டுவருதல் என்பதைப்பற்றியும் பிரசங்கங்கள் செய்தனர்.

F. A. வகுப்பில் வாசிக்கும் ஸ்ரீ பிச்சாண்டி ஆச்சாரியாரால் கல்வி என்ற வியாஸம் வாசிக்கப்பட்டது. அவருக்கு தங்கப்பதக்கம் சபையாரால் பரிசளிக்கப்பட்டது

ஸ்கூல் பைனல் வகுப்பு மாணவர்கள் ஸ்ரீ நெல்லைகுமார ஆச்சாரியாலும், ஸ்ரீ சங்கரலிங்க ஆச்சாரியாலும் முறையே கல்வி, கட்டு என்ற வியாசங்கள் வாசிக்கப்பட்டன. அவர்களுக்கு புத்தகங்கள் பரிசளிக்கப்பட்டன. மற்றும் 5-வது 6-வது வகுப்புச்சிறுவர்களுக்கு புத்தகங்களும் ஸ்ரீ நல்லமுத்துசாமி உபாத்தியாயர் அவர்களால் சந்தியாவந்தன தீபிகைகளும் பரிசளிக்கப்பட்டன.

மாஜி முனிசிபல் கவுன்சிலர் ஸ்ரீ திருமலைகுமாரசாமி ஆச்சாரி அவர்களால் கல்வியை விருத்தி செய்யும்மார்க்கங்கள் நூதனவழிகளில் குலத்தினர்க்குத் தக்கவிதமாய் பிரசங்கிக்கப்பட்டன.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சுப்ரீம் கோர்ட்டு பிறக்தர் பிரம்மஸ்ரீ என்-சிவக்கொழுந்து ஆச்சாரி அவர்களால் அற்புதமாய் எழுதிவிடுத்திருந்த வாழ்த்துப்பாக்கள் தலைவர் அவர்களால் இசையுடன்கூறி ஸ்ரீ D. N. முத்துசாமி உபாத்தியாயர் அவர்களால் சுலோகபூர்வமாய் வழக்கப்பிரகாரம் வந்தனங்கள் கூறி பூமாலை சூட்டப்பட்டதும் சென்னைச் சபையும் மற்றுள்ள சபைகளும் நீடூழிவாழ்க என்ற ஆரவாரத்துடன் சபை முடிவுபெற்றது.

## தீர்மானங்கள்.

(1) விஸ்வகர்ம பூஜை செய்யப்பட்டு நமதரசர் இந்த யுத்தத்தில் ஜெயம்பெற்று வெற்றிக்கொடி நாட்டவேண்டுமென்று பிரார்த்தித்து கீழ்க்கண்ட தந்தி கொடுக்கப்பட்டது.



1. (a) நமது மடாதிபதி ஸ்ரீமத் பரசமய கோளரிநாத இராஜரெத்தின சுவாமிகள் நீடூழி வாழ்கவெனப் பிரார்த்திக்கப்பட்டது.

(2) இச்சபைக்கு அன்னைபோன்ற சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபை நீடூழி நிலைபெற்றோங்கவேண்டுமென்று பிரார்த்தித்து வந்தனோபசாரப் பத்திரம் வாசிக்கப்பட்டது

(3) கல்வியை விருத்தி செய்ய 3 மாதத்திற்கொருமுறை இரண்டு மெம்பர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் இவ்விஷயத்தில் செய்துவருவதை சபைக்கூட்டத்தில் வெளியிடவேண்டும்.

(4) தொழிலை, வாய்மை, கெடுவுதவுறுமை முதலிய நாணயத்துடன் செய்து நாணயத்தைச் சம்பாதித்து கூட்டுறவு சங்கத்தால் சென்னை வி. தொழிற்சாலையை விருத்தி செய்யவேண்டும்

(5) விவாஹதினத்தைக் குறைத்து சாஸ்திரோக்தமாய்ச் செய்துகொள்ளுவதில் ஊர்விருந்தை ஒருநாளில் செய்து செலவைக் குறைக்கவேண்டும்.

(6) விவாஹம், ஆலயபூஜை, பிதிர்கடன் முதலியவைகள் சுஜாதிப்பெளரோகிதர்களால் செய்துவருவதை விருத்தி செய்யவேண்டும்.

(7) நமது விருத்திக்குப் பாதகமான அனுசாரங்களை நம்மினத்தினரிடம் காணும்போதெல்லாம் அப்போதைக்கப்போது நல்லுபதேசத்தால் நீக்கிவரவேண்டும்.

(8) சபையின் மெம்பர்களை விருத்தி செய்வதிலும் "விஶ்வகர்மன்-தொழில்" பத்திரிகைக்கு சமயம் வாய்த்தபோதும், கலியாணக்கூட்டங்களிலும், பலவழிகளிலும் சந்தாதாரர்களைச் சேர்ப்பதிலும் இச்சில்லாமுதன்மைபெற மெம்பர்கள் உழைத்து வரவேண்டும்.

(9) ஸ்ரீ அத்தியாபகலிங்காச்சாரி அவர்கள் ஸ்ரீ கந்தசாமி ஆச்சாரியவர்கள் தேகவியோகமானதைப்பற்றி அனுதாபங்காட்டப்பட்டது.

(10) சென்னை முதலிய சுஜாதிச் சபைகளுக்கு வாழ்த்துகள் கூறப்பட்டன.

### தந்தி.

To

The Governor of Madras, Madras.

The Visvakarma Sanmarka Sabah Tinnevelly performed pooja & prayed for the Allies success during anniversary day.

(Sd) S. Sankarachari, President, Chockalinga Street, Tinnevelly. 5—9—18,

Govt. House, Ootacamund, 6—9—18.

Sir,

I am to acknowledge receipt of your telegram of the 5th Sept. and to express the gratification with which His Excellency has heard of the manner in which the Visvakarma Sanmarka Sabah Tinnevelly has expressed its loyalty on the occasion of the 4th anniversary of the outbreak of the war.

Yours truly

* * *

To the President, V. Sanmarka Sabah, Chockalinga Street, Tinnevelly.

### வந்தனோபசாரப்பத்திரம்.

அன்புரிமைபூண்ட சென்னை விஶ்வகர்ம குலோத்தாரண சபையின் தலைவர் பிரம்மஸ்ரீ சோமங்கலம் கந்தசுவாமி ஆச்சாரியார் முதலான சபையோர் அவர்களுக்கு,

விஶ்வகர்ம சிரியர்காள்! வியனுலகனைத்தும் நிலைபெறுகின்ற உயிர்க்கும் அன்பின் வழியதுயிர் நிலை. அவ்வன்பும் ஆன்றகுடிப்பிறந்த பண்பினுடைமையும். இவ்விருமையும் பெற்

றப் புகழொடு தோன்றினீர்கள். ஐயன்மீர்! மூன்றாப்பிறக்கும் முத்தின் வழிதோன்றி முத்திறச்செல்வமும் முறைபடப் பெற்றீர்கள். சிற்பரச்சிருடை ஸ்ரீமத் விஸ்வேசுர பகவானின் அருளும் பெற்றீர்கள்.

பன்னலம்புனைந்த பரதகண்டத்திற் கோரணியென விளங்குவது நம் விஸ்வகர்ம குலம் அன்னோர் செய்த அருந்தவப்பயனால் பன்னாவலரும்நன்றெனடென உரைக்கும்சென்னைமாநகரில் அவதார புருஷராய்த் தோன்றி பெறுதற்கரியன யாவையும் சீருடன் பெற்று விஸ்வகர்ம குலோத்தாரண சபையை ஸ்தாபித்திருப்பது நம்மரபிற்கோர் ஆலயவிளக்கேயாகும். அது விளங்குவதும் நம் தலைவரின் தருமசீலத்தினாலன்றோ? அது அலகிலாவுயிர் பலவும் இறைவனது திருமேனியாக அவ்வுயிர்கட்குத் தம் நிறைமறைக்கும் ஆணவமகற்றி உள்ளொளி விளக்கும் மெய்யுணர்வினை வளர்ப்பதே சிறந்த ஆலயவிளக்கன்றோ? செந்தமிழ்ச்செல்வர் பிரம்மஸ்ரீ P-கல்யாணசுந்தராச்சாரி யவர்களினது உழைப்பினூக்கத்தால் 'விஸ்வகர்மன்-தொழில்' முகப்பில் ஒளிவளர்விளக்கொடு பிரகாசித்து நம்பால் உலாவிவருவது பிரமஸ்ரீ கோ-கன்னியப்பாச்சாரி யவர்களின் அச்சுவாகனத்தினாலன்றோ? அவ்வழி நின்றொழுகும் நும்மின் அருந்திறமெல்லாம் புகழ்ச்சி விரும்பா நும்மாட்டு யாம் கூறுவதில்லை ஆயின்,

மெய்யருள் ஐயன்மீர்! பலவழியானும்குலோத்தாரணமுயற்சிகள் ஆங்காங்கு நும்மால்நடைபெறுகின்றமையால் நாம் அன்புரிமை பெற்ற இச்சபை தன் கடன்றீரநன்றிகூறுவது இயல்பு. பற்பலரோடு பரஸ்பர அன்னியோன்னியத்தை விளக்கி அளிப்பது அவ்வொளிவளர் விளக்கொடு உலாவிவரும் 'விஸ்வகர்மன்-தொழில்' அன்றோ? நும் அன்பின் பெருக்கால் இச்சபையின் முதலாண்டு நிறைவுவிழா மதுரைத்தமிழ் வித்வான் பிரம்மஸ்ரீ K-முத்துசுவாமி ஆச்சாரி யவர்களின் தலைமையின்கீழ் இனிது நடந்து இன்பம் பயக்கியது.

ஒளிவளர் விளக்கின் உரைகளைத் திறவுகோலாய்க்கொண்டு நம் மரபிற் பரவும் இருளைப் போக்க விஸ்வகர்மன்-தொழிலை ஒவ்வோரில்லத்திலும் புகுத்துவதில் எங்கள் உழைப்பு குன்றுவண்ணமும், அவ்வாலய விளக்கு இன்னும் ஒளிபெற்று விளங்கவும் நும் செல்வமும் ஆயுளும் பெருகவும் ஸ்ரீமத் விஸ்வேசுவரனை மனமொழி மெய்களாலிறைஞ்சும்,

நும்பால் நன்றியறிதற்கடப்பாடுடைய
'விஸ்வகர்ம சன்மார்க்க சபையார்'
1-9-18 திருநெல்வேலிப்பாலம்.

## 5. விஸ்வகர்ம வகுப்பாருக்கு பிரதிநிதித்துவம் வேண்டும்.

விஸ்வகர்மத் தலைவர்களே! உங்களுடைய கடமையை நிறைவேற்ற இதுவே சமயம். உலகத்தில் வசிக்கும் ஒவ்வொரு ஜாதியாரும் தம் தம் வாழ்க்கைப் பந்தயத்தில் போராடிநிற்கும் நிலைமையைக் கண்டு இந்தியாவும் தன் நிலைமையை உயர்த்துவதற்கு மனவெழுச்சிகொண்டு பற்பல கோரிக்கைகளுள்ள சீர்திருத்த ஆவாரங்களினால் காருண்யமுள்ள ஆங்கிலேயர்களின் நற்கருணையால் வெளியிடப்பட்டுள்ள மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தமானது ஜனங்களின் ஆலோசனைக்கு விடப்பட்டிருக்கின்றது.

அந்தச் சீர்திருத்தமானது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுபடாவிட்டால் ராஜீய விஷயத்தில் பின் தங்கியுள்ளவர்களுக்கு அதிக தீங்கை விளைவித்து எப்போதும் அவர்கள் வெளிக்கிளம்பாவண்ணம் பாதாளத்தில் அமிழ்த்திவிடுவதல்லாமல், அது படித்த சிலரிடத்தில் சென்று அவர்களுக்குள்ள அதிகார பலத்தால் தாழ்ந்தவர்களை நன்றாய் நசுக்கிவிடுமென்பது திண்ணம். இந்த சமயம் நமது கடமையைச் செய்து நமக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஸ்தானத்தை யடைய முயலவேண்டும். இச்சமயம் தவறிவிட்டால் படித்த சிலரால் நாம் ஜன்ம ஜன்மத்திற்கு அடிமையாக்கப்பட்டு அவதியுறவோமென்பது நிச்சயம்.



குலாபிமானத் தலைவர்களே சமயத்தை ஏமாந்துவிட்டு விடாதீர்கள், பெயருக்குமாத்திரம் வகுப்புவாரி பிரதிநிதி ஸ்தானம் வேண்டுமென்று பசப்பி வார்த்தைகளைச்சொல்லி உண்மையில் அதை அடையத்தக்க செய்கையிலும் முயற்சியிலும் பிரவேசியாத போலிச்சபைகளையும் போலி மனிதர்களையும் நம்பி மதிமோசம் போகாதீர்கள். அதற்கென்றே பாடுபடும் உண்மைத்தேசாபிமானியாகிய டாக்டர் நாயர் அவர்களைத் தலைவராகக்கொண்டு அவருக்கு உங்கள் நோக்கத்தைத் தெரிவியுங்கள். விஸ்வகர்மத் தலைவர்களும் சங்கங்களும் மகாநாடு கூட்டி நமது நிலைமையையும் நமக்கு வேண்டுவனவற்றையும் தீர்மானம் செய்து இந்தியா மந்திரி அவர்களுக்கும் டாக்டர் நாயரவர்களுக்கும் அறிவிக்கவேண்டுவது அவசியமாயிருக்கிறபடியால் உடனே மகாநாட்டைக் கூட்டுங்கள். உறக்கத்தில் அமிழ்ந்துபோய் விடாதீர்கள். சுறுசுறுப்பாயிருந்து உங்கள் கடமையைச் செய்ய முந்துங்கள். அலட்சியம் காட்டுவீர்களானால் படுகுழியில் வீழ்ந்து பாதாளத்தில் அமிழ்ந்து பரிதவிக்கும்படி நேரிடுமென்பதை உணருங்கள். வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்பது பலவிதமாக கோரப்படுகின்றது. ஜனத்தொகைக் கேற்றவாறு வகுப்பு விகிதாசாரப்படி சகல ஸ்தாபனங்களிலும் நமக்கு பிரதிநிதி ஸ்தானம் வேண்டுமென்பதை வற்புறுத்திக் கூற. நாம் முந்தாவிடில் பொதுவாய் வகுப்புவாரி பிரதிநிதி ஸ்தானம் ஏற்பட்டபோதிலும்கூட பலவித சூழ்ச்சியால் ஏமாற்றப்பட்டு நமக்கென்று தனித்த பிரதிநிதி ஸ்தானம் கிடைக்காமல் மோசம்போய்விடுவோம். நமக்கென்று நமது வமிசத்தினர்களே ஒவ்வொரு ஸ்தாபனங்களிலும் பிரதிநிதியாக அமர்ந்தால் நமது குறைகள் நன்கு கவனிக்கப்பட்டு உலக வாழ்க்கையில் உயர்ந்து விளங்க சாதனமான மார்க்கங்கள் நமக்குச் சாலவும் சித்திக்கும்.

இச்சென்னை ராஜதானியில் சுமார் பதினைந்து லக்ஷம் ஜனத்தொகையைக் கொண்டுள்ள ஒரு முக்கியமான ஜனசமூகத்தினர்களாயிருந்தும் நாம் வாழ்க்கைத் தத்துவத்தில் எவ்வளவோ பின் தள்ளப்பட்டும் ஒதுக்கப்பட்டும் அலட்சியம் செய்யப்பட்டும் கிடக்கின்றோமென்பதை உணரா எவர் மனம்தான் புண்ணாகாதிராது? நாம் நமது நிலைமையை உயர்த்துவதற்கு நல்ல சமயம் இப்போது வாய்த்திருக்கின்றது. இச்சமயத்தைத் தவறவிட்டுவிட்டால் வேறு எச்சமயமும் நமக்கு அனுகூலமாய்க்கிடைப்பது அரிது. ஆகையால், ஒவ்வொரு குலாபிமானத் தலைவர்களும் ஒவ்வொரு சங்கங்களும் மகாநாடு ஒன்று கூட்டி வகுப்புவாரி தனிப்பிரதிநிதி ஸ்தானம் எல்லா ஸ்தாபனங்களிலும் நமக்கு வேண்டுமென்று தீர்மானம் செய்து இந்தியாமந்திரியவர்களுக்கு மனு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சீர்திருத்தத்தைப்பற்றி ஆலோசிக்கக் கொடுக்கப்பட்டிருக்கும் காலவரையறையானது நெருங்கிவிட்டபடியால் அதிசீக்கிரமாக மகாநாடு கூட்டி உங்கள் கடமையை நிறைவேற்றுவீர்களென்று நம்புகிறேன்

R. P. கோவிந்தசாமி ஆச்சாரி,
திருச்சி.

## 6. விஸ்வவகர்மவகுப்பாருக்கு ஓர் அறிவிப்பு.

விஸ்வகர்ம சகோதரர்களே! சென்ற பல்லாண்டுகட்கு முன்னர் நமது மரபினருக்கும் பார்ப்பனர்கட்கும் சிறு விதண்டாவாதம் நிகழ்ந்து நம் மரபே சுபாசுப கைங்கர்யங்களை நடாத்துவதற்கு உரித்தானதென்று கோர்ட்டு மூலியமாய்த் தீர்ப்புப் பெற்றோம் என்பது விசிதம். நமது குலத்தொழில்களாற்றான் உலகம் செழிப்புற்றதென்பதும் நம் மரபே முதன்மையுடைத்தென்று பல்லோராலும் ஆமோதிக்கப்பட்டதென்பதும் மிகையாகாது. இச்சென்னை ராஜதானியின்கண் சுமார் 15 லக்ஷம் ஜனத்தொகையுடைய நமது மரபு இதுகாறும் கல்வி ஆசாரச் செல்வக்குறைவாலும் பற்பல அசம்பாவிதங்களாலும் தீர்ப்புப்படி அமுலுக்குக் கொண்டுவர கஷ்டசாத்தியமாகுமென்றே கூசிவாளாவிருந்தது தற்பொழுது மீளாத்துயராயிற்றென்பது யாவரும் ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியாது. ஒவ்வொரு கிராமங்களிலும்

நகரங்களிலும் அறிவிலித்தனத்தாற் கட்சிப் பிரதிகட்சி நிகழ்த்திக்கொண்டும் நிகழ்த்தவும் உள்ளார்களென்பது யாவரும் ஒப்பத்தக்கதே! என்னே நம்மவரின் அறியாமையை என்னென் றுரைப்பாம்.

பார்ப்பனன் நம்மை எள்ள வாய்ந்தது விந்தையினும் விந்தையே! இனி விதி தவறு தொழுக, துவாங்குறிச்சி நமது குலாபிமானக் கல்விச்செல்வர்காள்! 10-9-18ல் வெளிவந்த நமது திராவிடனில் நம்மவரிற் சிலர் பார்ப்பனனகத்தில் அருந்தின சற்கார பிரஷ்டம்செய்து வைத்திருப்பதாகவும் காமாட்சி அம்மன் கோவிலுக்குள் புகப்படாதென்று தடை செய்ததாகவும் அதன்வாயிலாய் வாதம் நிகழ்ந்து வழக்கிட்டிருப்பதாகவும் கண்ணுற்று ஒருவாறு விசனிக்கின்றோம். நமது குலச் சகோதரர்களே! முன்னரே கல்வி ஆசாரங்கள் புகட்டப்பட்டிருந்தால் இங்ஙனம் நிகழாதன்றோ? இனியேனும் நமது பிள்ளைகளை செவ்வனே கல்வி பயிலச் செய்வதோடு சங்கங்கள் ஏற்படுத்தி "விஸ்வகர்மன்" "திராவிடன்" "ஜஸ்டிஸ்" முதலான பத்திரிகைகளை வரவழைத்து நமது சகோதரர்கட்கு அகவிருளை நீக்கும்படிக் கேட்டுக்கொள்வதாயும் தங்களுக்குள்ள வழக்கை ராஜிநாமா செய்துகொண்டு திராவிடன் வாயிலாகத் தெரிவிக்கக்கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இன்மை யுளின்மை விருந்தொரால்
வன்மையுள் வன்மை மடவார்பொறை,

மூடர் செய்த குற்றத்தைப் பொறுத்தலைக் காட்டிலும் வன்மை வேறன்றென்று வள்ளுவர் வாக்கோன் உய்த்துணர்ந்தொழுகு. இச்சென்னை ராஜதானியின் கண்ணுள்ள நமது விஸ்வகரும கல்விமான்காள்!

* * *

திருச்சி R. P. கோவிந்தசாமி ஆச்சாரியார் அவர்கள் நமது விஸ்வகர்ம வகுப்பாருக்குப் பிரதிநிதித்துவம் இன்றியமையாததென்று வற்புறுத்திவருந்த

## விசேஷ வர்த்தமானம்.

### ஒரு அதிசய சிசு.

செங்கற்பட்டுக்கடுத்த காலித்தண்டலம் கிராமத்தில் ஒரு பெண்ணுக்கு ஆண் குழந்தையொன்று பிறந்தது. அக்குழந்தைக்கு தலை ஒன்றும், நான்கு கால்களும், நான்கு கைகளும் இருந்தன. அது 3-மணிநேரம் உயிருடன் இருந்தது.

### நாலுகால் கோழிக்குஞ்சு.

மிஸ்டர் நாண்டெரி என்னும் பிரும்பீள்ட தோட்டத்தின் துரையினிடமிருக்கும் கோழிக்குஞ்சு பொரித்ததில் ஒரு கோழிக்குஞ்சுக்கு நாலு கால்களிருந்தனவாம். இப்போது அத்தக்கோழிக்குஞ்சுக்கு வயது இரண்டுமாதமாகிறதென்றும், இது பரிபூர்ணம் சௌக்கிய நிலைமையிலிருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

### ஸ்திரீ குமாஸ்தாக்கள்.

டெல்லியில் வேலைசெய்துவரும் மனிதர்கள், சோல்ஜர்களாக்குகள் இவர்கள்போர்முனைக்கு போகிறார்களாம். அவர்கள் வேலையை அனேக ஸ்திரீகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள், சைகிலேறிக்கொண்டு சில ஸ்திரீகள் கவர்ன்மெண்டு செக்ரிடேரியட் ஆபீசுக்கருகாமையில் திரிகிறார்கள். போர்முனைக்குச் சென்றிருப்பவர்களின் பெண்சாதிகள் சில ஆபீசுகளில் வேலையிலமர்ந்துகொண்டு அதற்கான டெக்ஸ்ட்களைப் படித்துவருகிறார்கள்.

---

வியாசத்தை சிரமேற்கொண்டு ஒழுகும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஆக்கம்தர் விறுப் செல்லு மசைவிலா
ஊக்கமுடையா னுழை.

மனவெழுச்சி யுடையவர்களிடத்துச் செல்வம் வருமென்பது திண்ணம் என்ற வள்ளுவர் வாக்கை உன்னி ஒழுகும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

29-9-18

T. P நாராயணசாமி
தில்லையாடி.
(திராவிடன்)

OFFICE OF THE ... 22 NOV 1918

I

# உங்கள் சகாயம் தாரீரா?

---

அது மிகவும் வேண்டியிருக்கிறது. உங்கள் குல க்ஷேமத்தைக்கருதி உங்கள் சகாயந்தாருங்கள். ஒவ்வொருவருடைய சகாயமும் குலோத்தாரணத்திற்கு அவஸ்யமாயிருக்கிறது. ஒவ்வொருவரும் சிறிதளவே துணைசெய்தாலும் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் கிரமமாகச் சீக்கிர காலத்திலேயே செய்து முடிக்கலாம். நமது வாழ்நாளிலேயே பலன்காணலாம். முதலாவது,

## சந்தாதாரர்களை அதிகமாக்கவேண்டும்

நமது பத்திரிகைக் கொள்கைகள் பலவிடங்களில் பரவாமலிருக்கின்றன. பரவிய இடங்களிலெல்லாம் குல எழுச்சி காணப்படுகின்றது. ஆதலால், ஓரூர் பாக்கியில்லாமல் எங்கும் இது வியாபிக்கும்படிச் செய்யவேண்டும். நமது சந்தாதாரர்கள் அன்புவைத்து முயன்றால், இவ்வெண்ணம் எளிதில் ஈடேறும். ஒவ்வொருவரும் தங்களுக்குக் கிடைக்கும் பத்திரிகையை உள்ளூர்க் குலஜனங்களுக்கெல்லாம் காட்டி அவர்களையெல்லாம் சந்தாதாரராக்கலாம். வெளியூர்களி லிருக்கக்கூடியவர்கள் பந்துக்களுக்கும் குலமித்திரர்களுக்கும் இப்பத்திரிகையைப்பற்றி அறிவித்து அவர்கள் சந்தாதாரர்களாகும்படித் தூண்டலாம். இதனால்,

## குலோத்தாரண புண்ணியம் கிடைக்கும்

புகழுண்டாகும். சந்தானமும் சகல சம்பத்துகளும் வாய்க்கும். ஒவ்வொருவரும் பத்து அல்லது ஐந்துபெயர்களைப் புதிதாய்ச் சேர்த்தாலும் போதும். சிற்சிலர் 30,50 ஆகச் சேர்க்கும்போது, 5,10 சேர்ப்பது கடினமா? அக்கரை வையுங்கள். அன்பர்களே!

# குலோத்தாரண நூல்கள்.

பிக்கபாடி - கல்யாணசுந்தராச்சாரியாரால்

இயற்றப்பட்டவை.

## விஸ்வகர்மோபதேச வீரகண்டாமணி.

பாட்டும், உரையும்.

உரையானது, மார்க்கயன்கோட்டை மகாவித்வான் ஸ்ரீ M-P. பழநிச்சாமி ஆச்சாரியாருடைய மருமகரும் மாணாக்கருமாகிய ஸ்ரீ M. S. சுந்தரம் ஆச்சாரியரால் எழுதப்பட்டது.

சென்னை செந்தமிழ் ஆராய்ச்சிக் கழகக் காரியதரிசி ஸ்ரீ M. ஜீவரத்தின ஆச்சாரியார் B-A. அவர்களுடைய முகவுரைகொண்டது.

விலை அணா பத்து.

## இராமசுனர் சரித்திரம்.

நவரஸம்பொருந்திய

நாவல்.

விஸ்வகர்மகுல பக்தசிகாமணிகளில் ஒருவராகிய இராமசுனரின் சரித்திர விபரங்கள் நாவல் ருபமாக இனிய செந்தமிழ் நடையில் இன்பம் பயக்குமாறு எழுதப்பட்டுள்ளன.

படிக்கப்படிக்கப் பரமானந்தந்தரும். முடிக்குமட்டும் தொடுத்து வாசிக்கச்செய்யும் நடைத்திறமுடையது.

விலை அணா ஆறு.

இவ்விரண்டு நூல்களும் விஸ்வகர்ம ஸ்திரீ புருஷர்கள் ஒவ்வொருவரும் கட்டாயமாக வாசிக்கத்தக்கவை. வாசிக்கக்கூடியவர்கள் நேரே வாசிக்கவேண்டும். மற்றவர்கள் பிறரை வாசிக்கச்சொல்லி முற்றிலும் கேட்கவேண்டும்.

குல மேம்பாட்டிற்கு இன்றியமையாத முக்கிய போதங்கள் பல இந்நூல்களில் நிரம்பியிருக்கின்றன. இவற்றை வாசித்தவர்கள் குலாநுகூலஞ் செய்யும் மார்க்கங் கண்டு அதிலுழைக்கத் தூண்டப்படுவார்கள்.

வாசியுங்கள், வாசியுங்கள், வாசியுங்கள்.

கொ-கன்னியப்ப ஆச்சாரி,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.



## விஸ்வகர்மன் - தொழில்.

விஸ்வகர்ம குலாபிவிருத்திக்காகவும் கைத்தொழில் மேம்பாட்டிற்காகவும் உழைத்துவரும் மாதாந்தப்பத்திரிகை. விஸ்வகர்மகுல பண்டிதர்களுடைய வியாசங்கள் நிரம்பி, இக்குலத்தார் அறியவேண்டியனவாகிய பூர்வமொழிகளையும் நவீன முறைகளையும் நன்கு விளக்கிக் காட்டுவதாயிருப்பதினால், இப்பத்திரிகையை விஸ்வகர்ம குலத்தார் ஒவ்வொருவரும் கட்டாயமாக மாதந்தவறாமல் வாசித்து வரவேண்டும்.

| | | |
|---|---|---|
| சந்தா விபரம் | வருஷமொன்றுக்கு தபால் சார்ஜ் உள்பட | 3—0—0 |
| | ஆறுமாதத்திற்கு ,, | 1—8—0 |
| | தனிப்பிரதி ,, | 0—5—0 |

புதுச் சந்தாதாரர் எந்த மாதத்திலேனுஞ் சேரலாம். ஒரு வருஷச் சந்தாவாவது ஆறுமாதச் சந்தாவாவது முன்பணமாக அனுப்பவேண்டும். அங்ஙன மனுப்பாவிட்டால் வி. பி. தபால் மூலமாக சந்தா வசூல் செய்யப்படும். 1918ஆ ஜனவரி மீ 1 தேதியிலிருந்து ஐந்தாவது சம்புடம் ஆரம்பமாகிறது.

| | | | |
|---|---|---|---|
| விளம்பர விகிதங்கள் | 1 பக்கத்திற்கு மாதம் ஒன்றுக்கு | ... | 3—0—0 |
| | $\frac{1}{2}$ ,, ,, | ... | 1-12—0 |
| | $\frac{1}{4}$ ,, ,, | ... | 1—0—0 |
| | $\frac{1}{8}$ ,, ,, | ... | 0-12—0 |

* * *

## விஸ்வகுலோத்தாரண அச்சுக்கூடம்.

இவ்வச்சுக்கூடத்தில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகளில் லெட்டர் பேபர், கார்டு, கவர், பில்பாரம், ரசீது புத்தகம், நோட்டீஸ் வகைகள், மூச்சலிக்கை, கைச்சாத்து, பலவித முகூர்த்தப்பத்திரிகைகள், புத்தகவகைகள் முதலானதும் ஆர்டர்பிரகாரம் கெடுவுதவறாமல் வெகு சுத்தமாயும், சகாயமாயும், பார்வைக்கு அழகாயும் செய்து கொடுக்கப்படும்.

வெளியூர் வாசிகள் ஆர்டர் அனுப்பும்போது அட்வான்சும் அனுப்பினால் வேலையை முடித்து வி. பி. மூலமாக அனுப்பி மிச்சப்பணத்தை பெற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்கள் கடிதமூலமாகவாவது நேரிலாவது தெரிந்துகொள்ளலாம்.

* * *

## விஸ்வகர்ம புத்தகசாலை.

இப்புத்தகசாலை விஸ்வகர்ம சந்ததியார்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டது. விஸ்வகர்ம சந்ததியார்க்குரிய புத்தகங்களும், பொதுநூல்களும், பள்ளிக்கூட புத்தகங்களும் விற்கப்படும். ஒரு ரூபாய்க்கு மேற்பட்ட புத்தகங்களுக்கு முன்பணம் அனுப்பவேண்டும்.

நான்கு அணாவுக்கு குறைவுபடும் புத்தகங்களுக்கு ஸ்டாம்பும், புக்போஸ்டுக்கு அரைஅணா ஸ்டாம்பும் சேர்த்து அனுப்பவேண்டும். அவைகளைப் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

இவைகளுக்கெல்லாம் வி. பி. சார்ஜு பிரத்தியேகம்.

கொ. கன்னியப்ப ஆச்சாரி,

5-10, வேதகிரிமேஸ்திரி வீதி, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

## விஸ்வகர்ம பக்தோபாக்யானம்.

இந்நூல் இதுகாறும் தமிழில் வெளிவராதது.

# விலை ரூபாய் ஒன்று.

இது மகாராஷ்டிர பாஷையிலிருந்து தமிழில் செவ்விய வசன வடிவமாகவும், செய்யுள் வடிவமாகவும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. டிம்மி 8-பேஜ் கொண்ட 22-பாரமுடையது. நல்ல பளபளப்புள்ள உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் முத்துப்போன்ற எழுத்தினுல் அச்சிடப்பட்டிருக்கின்றது.

இதில் சிவபக்தர், விஷ்ணுபக்தர், தேவிபக்தர் முதலிய பெருந்தகையர் பன்னிருவர் சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன.

இதிலுள்ள ஒவ்வொரு சரித்திரமும் படிக்கப்படிக்கப் பரமாநந்தத்தை விளக்கும் பான்மையுடையது.

இதனைச் செய்யுள் வடிவமாகச் செய்தவர் வித்வான் ஸ்ரீமத் ம. இராஜகோபால பிள்ளையவர்கள், இச்செய்யுள்கள் ஒவ்வொன்றும் தேனிலும், பாலினும், கற்கண்டினும் இனிய சுவையுடைத்தாய்ச் சொன்னயம் பொருணயமுடையதா யமைந்திருக்கின்றது. இந்நூல் காவியலக்ஷணம் நிரம்பப்பெற்று யாவரும் சுலபமாய் அறிந்துகொள்ளும் செவ்விய நடையுடையதா யிருக்கின்றது.

புராணப் பிரசங்கம் செய்வோர்க்கு இஃதோ ரரியபெரிய பக்தி நூலாகும். இச்சரித்திரங்களில் அனேக நீதிகளும், மேற்கோள்களும் காட்டப்பட்டிருக்கின்றன

வேண்டுவோர் இதனடியிற் குறிப்பிட்ட விலாசதாரரிடத்து முன்பணமனுப்பித் தங்கள் விலாசம், போஸ்டு முதலியவைகளைத் தெளிவாய் எழுதி அனுப்பவேண்டும்.

நொ. கன்னியப்ப ஆசாரி,
விஸ்வகுலோத்தாரண பிரஸ்,
நெ-5/10, வேதகிரிமேஸ்திரி வீதி, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

ஸ்ரீமத் விராட் விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்-தொழில்.

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள
சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதப்பத்திரிகை.

சம்-5] காளயுக்திஹு அற்பிசிமீ 1918ஹு அக்டோபர்மீ [சஞ் 10.

OFFICE OF THE REGISTRAR 22 NOV 1918

## ஒளிவளர் விளக்கு.

### சுஜாதிப்பௌரோகிதம்.

இவ்விஷயமாய்யாம்பன்முறையெழுதியிருக்கின்றோம். எனினும், மற்ற விஷயங்களைப்போலவே இதுவும் நம்மவரிடம் போதிய கவனம் பெறுதிருக்கின்றது. சுஜாதிப் பௌரோகிதர்களைக் கொண்டுதான் சுபாசுப காரியங்கள் யாவும் செய்துகொள்ளவேண்டுமென்பதை யறியாமலும், அறிந்தாலும் அசட்டைசெய்துகொண்டும் அனேகர் காலங்கழித்து வருகின்றனர். இவர்களை நன்னயமாகவோ நிர்ப்பந்தமாகவோ சீர்திருத்துவாரில்லை, சாதனங்களையுங் காணோம். சுஜாதிப் பௌரோகிதர்களும் போதியபேரிலர். இந்த சத்ஜீவனத்தில் நாட்டமதிகம் நம்மவர்கள் செலுத்துவதுமில்லை. ஆதலால், நாளுக்குநாள் சுஜாதிப் பௌரோகிதர்கள் தொகை அதிகரிப்பதற்குப் பதிலாகக் குறைந்துவருவதுபோல் தோற்றுகிறது.

பௌரோகிதர்கள் தங்கள் பிள்ளைகளைக் கர்மாகாரர்களாக்கிவிடுகிறார்கள், ஏனென விசாரிக்குமிடத்து, தங்கள் விருத்தியில் தக்க வருவாயில்லையெனப் புகலக் கேட்கிறோம். சுஜாதிப் பௌரோகிதர் போராசைக்காரரா யிருக்கின்றனரென்ற பிரஸ்தாபம் வேறிடத்திலிருந்து வெளிப்படுகின்றது. இவற்றையெல்லாம் விசாரித்து வேண்டிய சீர்திருத்தங்கள் செய்யக்கூடிய அதிகாரிகளைக் காணோம். பஞ்சாயத்துகள்போன்ற ஸ்தாபனங்கள் 'பராரி'யாய்ப் போய்விட்டன. இந்த ஸ்திதியில், 'கும்பி கூழுக்கழக் கொண்டை பூவுக்கழுகிறது' என்னுமாப்போல், ஒரு நிருபர் பின்வருமாறு எழுதுகின்றார்:—"மதுரையில் மீனாக்ஷிவாத்தியார் நல்லசாமிபிள்ளை வீட்டில் ஓர் கலியாணத்தை நடத்திவைத்தார் என்னும் விஷயம்முன்னொரு சஞ்சிகையினுல்தெரியவந்தது. இதைப்போல் ஒவ்வொரு ஊரிலும் நடக்கவேண்டும். நமது பௌரோகிதர்கள் எல்லா ஜாதியார் வீடுகளிலும் பிரயோஜனங்களை நடத்தும்படியாக நேரிட்டுவிட்டால் அவர்களுக்கு நல்ல ஜீவனம் நடக்கும். நமது ஜாதியார்களை மற்ற ஜாதியார்கள் தழுவி, நம்மையே அவர்களுடைய 'ஆசாரியர்'களாகக் கொண்டாடுவார்கள். இதற்காக, பௌரோகிதர்கள் நம்மவர்களில் மிகவும் அதிகமாக வேண்டும்"

* * *

### இந்திய சில்பம்.

யாழ்ப்பாணத்து நிருபரொருவர் எழுதுகிறார்:—மைசூர் இஞ்சினியராகிய ஸ்ரீ அனந்தாள்வார் என்னும் பிராமணர் 24-பாகமாக இந்திய சில்பம் என்னும் நூல் ஆங்கிலத்திலிருந்து எழுதி வெளியிடுகிறார். அதில் நமது சிற்பசாஸ்திரங்களிற் சிற்சில பாகங்களை மொழிபெயர்த்து எழுதுகிறார். அச்சிற்ப

நூல்களிற் சொல்லப்பட்ட லட்சணமுள்ள ஒரு சிற்பி மஹானைத் தற்காலத்தில் காண முயலுதல் சமுத்திரத்தில் ஒரு குண்டூசியைத் தேடுவதற்குச் சமானமாம். இது ஒவ்வொரு புத்தகம் ரூபா 50. மைசூர் மஹாராஜா ரூபா 1000க்கு காப்பிகள் எடுத்திருக்கிறார்கள். ஹைதிராபாத் நைசாம் ரூபா 500க்கு காப்பிகள் எடுத்திருக்கிறார்கள். பரோடா மஹாராஜா 500 ரூபாய்க்கு எடுத்திருக்கிறார்கள். சென்னைக் கவர்ன்மெண்டார் 20 காப்பிகள் எடுத்திருக்கிறார்கள். இன்னும் அனேக அரசர்களும் ஜெமீந்தார்களும் எடுத்திருப்பதாகத் தெரிகிறது. இதில் மானசாரம் முதலிய நூல்களை நன்றாக விளக்கியிருக்கிறதுமல்லாமல் காமிகாகமத்தையும் அடிக்கடி வேண்டிய விடங்களில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

தொழில் ஞானத்துக்குமாத்திரம் சிற்ப சாஸ்திரத்தை யெடுத்துக்கொண்டு அதே சம்பந்தமான மந்திர பூர்வக்கிரியைகளைப் பற்றிய விஷயங்கள் உரிமையோடு சிற்ப சாஸ்திரத்திலுள்ளவற்றை ஒருவாறு ஒதுக்கி காமிகாகமத்திற் கூறியிருப்பனவற்றை எடுத்துக்கொள்ளப்படுகிறது. காமிகாகமமும் ஒரு சிற்பநூலாய் வந்தது அதிசயமே இனிமேல் சிற்பநூல் ஒன்றும் இராது. ஆகமங்கள் விழுங்கி வயிறு வீங்கி விளங்குங்காலம்போலும்.

ஆயினும், எமது பிராமணச் சகோதரராலேயே இந்த இரகசியம் அறியவந்தது. இவ்வூரில் சிற்ப சாஸ்திரங்களேதும் உண்டோ என்று விசாரித்தபோது ஒரு கள்ளுண்டு களித்த தபதியிடம் சில சாஸ்திரங்களிருந்தனவென்றும், அவற்றையெல்லாம் கால்ரூபாயோ அரைரூபாயோ கொடுத்துச் சில பார்ப்பார் கைக்கொண்டுவிட்டார்களென்றும் விசனத்துடன் அறியலானேன். அந்தத் தபதி இப்போது இங்கில்லாததால் அப்பார்ப்பார் யாரென அறிந்து அவரிடம் விசாரிப்பதற்கும் முடியாமல் வருந்துகின்றேன். இனியாவது சிற்பசாஸ்திர ஏடுகள் வைத்திருக்கும் விபரங்கள் வெளியிடமாட்டார்களா?

* * *

## தன்மதிப்பு வேண்டாமா?

தன்மதிப்பு என்பது யாவராலும் கையாளப்படவேண்டியதோர் சிறந்தகுணமாகும். இக்குணமுடையார் உலகில் மானத்துடன் காலங்கழித்தல் நிச்சயம். அவ்வாறே, இக்குணமில்லார் மானத்துடன் காலங்கழித்தல் கஷ்டமென்பது பெறப்படுகிறது. இவ்வுண்மை யறிந்து நடப்போரெல்லாம் சிறப்புற்றுவருதலும், அறியாமலும் அநுஷ்டியாமலுமிருப்போர் அவமானப்பட்டிருத்தலும் எங்குங் காண்கின்றோம். தன்மதிப்பென்னும் குணமுடையானொருவன் தகாதகாரியமொன்றுஞ் செய்யத்துணியான். ஏனெனில், அது செய்யும்பக்ஷத்தில் தன்மதிப்புக்குப் பங்கம் வருமென்பதை அவன் நன்றாய் உணர்ந்திருக்கின்றானாதலினால். தன்மதிப்புடையானுக்கே பிறமதிப்பேற்படும். அஃதில்லாதவனுக்குப் பிறமதிப் பேற்படாது. மதிப்புக்குறைவும் அவமானமுமே அவனுடைய பங்காகும். தற்சுதந்திரமின்னதென்று தெரிந்துகொண்டானெவ்வொருவனும் தன்மதிப்பொடு வாழ்வான். அதையறிந்து கொள்ளாதவன் அலக்ஷியமடைந்து அழிநிலையுறுவான். இவ்வுண்மைகளையெல்லாம் தினப்படி உலகநடவடிக்கைகளிற் காணலாம்.



தன் மதிப்பென்னும் அருங்குணமானது நமது ஜாதியாரில் மிகக் குறைவுபட்டிருத்தலை நோக்கப் பெரிதுங் கவலையுறுகின்றோம். இந்த ஜாதியார் "கூலிக்காரர்களது கூட்டம் எனும் உலக மாலுக்குப் பாத்திரராய் மாண்பிழந்த"தற்குக்காரணம் இவர்களிடம் தன்மதிப்பென்னுங் குணமின்மையே யென்று கூறிவிடலாமெனத் தோன்றுகிறது. தன்மதிப் பிருக்கும் பக்ஷத்தில் பிறர் தம்மை அவ்வாறு ஏளனமாய் எண்ணவும் நடத்தவும் இடங்கொடுக்கமாட்டார்கள். இவர்கள் இடங்கொடாதபோது, பிறர் இவர்களை அவ்வாறு நடத்தத் துணியார்கள் அவர்கள் துணிந்து நடத்துவது அவர்கள் குற்றமாகக் கொள்ளலாகாது. நம்மவர் குற்றமே யெனவேண்டும்.

குலத்திற்குள் 'விஸ்வப்பிராம்மண'' ஆரவாரஞ் செய்து அதி மேதாவித்தனங்காட்டுவோர், குலத்திற்கு வெளியே கூழைக்கும்பிடு குனிந்து குனிந்து போட்டு, பல்லெல்லாந் தெரியக்காட்டிப் பதைபதைத்துப் பறையினிலும் பதின்மடங்கு பாழாக நடப்பதைப் பார்த்தாலும் நினைத்தாலும் பகீரென நெஞ்சு படபடக்கின்றது. ஐயோ!, இந்தக் கதியைப்பற்றி எண்ணிப் பார்க்கலாகாதா? குலத்திற்குள் தலைவர்கள், எஜமானர்கள், காரியஸ்தர்கள். கனவான்கள், பந்துக்கூட்டங்களில் முந்திமுந்தி உட்காருவோர், அதிகாரஞ்செலுத்தி அட்டகாசஞ்செய்வோர், தாம்பூலத்திற்குத் தான்முதல் என்போர் இவர்களெல்லாம் குலத்திற்கப்பால் வலத்திற்கிடங்கொடுத்து, கோணிக்கோணி நாணிநாணி கூலிக்கே என்றுங் கைகூப்பினவர்களாய், 'அடே' என்றால் 'ஐயா' வெனத்தாழ்ந்திருப்பார்களானால், குலமுழுவதும் தாழ்ந்து தயங்கி நிற்பது அதிசயமா? அன்பரே! ஆழ்ந்து யோசித்து அமைதியாய் விடைதாருங்கள், அவசரமாய் இம்மொழிகளை அகற்றிவிடாதேயுங்கள்.

அந்தோ! இதுவா 'விஸ்வப்பிராம்மண'த் தன்மதிப்பு? குலத்திற்குள் கூடிக்கூடிக் கூச்சலிட்டுக்கொள்வதினால் கூடுவதென்ன? மதிப்பென்பது அயலாரிடமிருந்தன்றோ அணுகவேண்டும்? அவர்கள் முன்னிலையிலல்லவா தன்மதிப்பொடு நடக்கவேண்டும்? இதை ஏன் நமது கர்மகாரர்கள் கவனித்தொழுகுவதில்லை? இதையேன் அறிந்தார் அவர்களுக்குப் போதிப்பதில்லை? இன்னும் எத்தனை யாண்டுகள் நாம் இப்படி அடிமைத்தனத்தில் அல்லலுழந்து வாழ்வது? சகோதரர்களே! இதை நினைக்க நெஞ்சு புண்ணாகிறதே! என்னகோலமிது? நமது குலப்பெருமையென்ன, நமது நடைச்சிறுமை யென்ன? தன்மதிப் பிருக்கவேண்டாமா நம்மவருக்கு? தொழில் செய்தால் அதை யிழந்துவிடவேண்டுமென்று எங்குஞ் சொல்லவில்லையே! ஏன் இந்த அவமானத்திற்கு இடந்தந்து வாழுகின்றீர்?

இனியேனும் உங்களுக்கும் தன்மதிப்புண்டென்பதை ஊறியக் காட்டமாட்டீர்களா? 'அடே' யென்று ஒருவன் உம்மை அழைப்பது அவமானமென்று உணரமாட்டீர்களா? ஐயோ! ஆண்பாலரேயல்ல, பெண்பாலருமல்லவா நமது கர்மகாரர்களை 'அடே' யென்று அடங்கமின்றி யழைக்கிறார்கள்! என்ன அவமானமிது; என்ன அவமானம்! தலைப்பாகை, சொக்காய் முதலியன 'தடபுட'லாய்ப்போட்டுக்கொண்டிரு

ப்போரும், வாகனாரூடராகி விநோதமாய்ச் செல்வோரும், பத்தாட்களை வைத்துக் கொண்டு வித்தாரமாய் வேலைவாங்கும் 'எஜமான்'களும், 'அம்மாள்' சன்னிதானத்தில் 'அடே'க்களாகிக் கைகட்டி வாய்புதைத்து வண்டா இத்தனை நாள் தவக்கஞ் செய்தாய்' எனக்கேட்க, 'இல்லையம்மா...இல்லேங்க......உம்...உம்......கொஞ்சந்...... தவரிப்பூடிசிங்க......' என்று வாய் குழறி வகைகெட்டு நிற்பார்களாகில், இதைவிட அவமானம் என்னதான் வேண்டும்? இப்படி மானங்கெடவாழ்வது மொரு வாழ்வா?, இந்த சம்பாத்தியமும் ஒரு சம்பாத்தியமா? சிச்சி!

மிருகங்களுக்கு 'மல்லவோ தன்மதிப்பிருக்கிறதாகத் தெரிகிறது? அவற்றை நாம் நினைத்தவாறெலாம் ஆட்டக்கூடவில்லையே! அவ்வாறிருக்க, மனிதர்களெனப் பிறந்து வளர்ந்து வாழுவோர்க்கு இந்நிலையடுக்குமா? குலோவேசத்துடன் (கூட்டத்திற்குள்) கோலாகலஞ் செய்வோர்க்குக் கூடுமா இவ்வொழுக்கம்? நாற்பாற் குலத்துள் மேற்பாலோரென்பார் நாணின்றி இவ்விதநடைகொள்ளலாமா? கடையரிவரெனக் கழிக்கப்பட்டுள்ள ஜாதியாருமல்லவா 'அடே'யெனக் கேட்கப் பொறாராய்த் தன்மதிப்பைத் தைரியமாய்க் காட்டி வாழ்ந்து வருகின்றனர்? அவர்கள் மனோநிலையும் நமக்கில்லையெனில், நாம அவர்களினும் மேலானவர்களென்று பிறருக்குக்காட்ட நாணவேண்டுமன்றோ?

ஆசாரியர்களே! அனைத்துவிதங்களினும் ஆசாரியர்களாகவே யிருக்க முயலுங்கள். அதனால் உங்களுக்கு யாதொரு குறைவும் வாராது. அந்த நிலையினின்று தவறினால் தான் குறைகளும் கோரணிகளும் குவிந்துவிடும். தன்மதிப்பைச் சற்றுந் தளரவிடாதேயுங்கள். தளரவிட்டாரையும் விடுவாரையுந் தட்டியெழுப்பித் தக்கபோதனை செய்து தைரியம் ஊட்டித் தன்மதிப்பை அவர்களுக்குட்புகுத்துங்கள். தன்மதிப்பினும் மேலான ஆபரணம் தரணியிலில்லை. அவ்வாபரணம் அணிந்தவர்க்கே பிற ஆபரணங்கள் அழகுதரும்: அவ்வாபரணம் அணியாதார்க்குப்பிறஆபரணங்கள் அழகுதரா, அவலக்ஷணமுண்டாக்கும். இதை மநுவாசாரிகள், மயாசாரிகள், த்வஷ்டாசாரிகள், சிற்பாசாரிகள், விஸ்வக்ஞாசாரிகளாகிய எல்லா ஆசாரிகளும் நன்குயறிந்து தன்மதிப்புக்காட்டி நன்மதிப்புடன் நடந்து நாட்டினர் கண்களிலுயர்ந்து தாமுற்பவித்த குலத்தைத் தாழ்விளின்றுந் தூக்கி அதற்குந் தமக்குமுரிய நிலையில் அமர ஒழுகி அழகு தருவாராக.

## இருவித விஸ்வகர்மர்கள்.

தற்காலத்தில் நம்மவர்கள் ஒன்று-ஜாதி விஷயமான கவலையே யில்லாதவர்களாகவாவது, அல்லது விஸ்வப்பிரம்ம பித்தம் தலைக்கேறியவர்களாகவாவ திருக்கின்றார்கள். இருதிறத்தினரும் குலக்கேடர்களே! எப்படியென்றால், முதலாவது வகுப்பினர் ஜாதியைப்பற்றிய சிந்தனை அணுவளவும் இல்லாதவராய், தங்கள் சுயகாரியங்களையே கவனித்துக்கொண்டு தங்கள் பழைய ஆசாராதிகளின்படியே நடந்துவருகின்றார்கள். இவர்கள் பிறருடைய பழிச்சொல்களைத் தங்கள் காதுகளிலேற்று அவற்றிற்கேற்ற திருத்தங்களைத்தமக்குள்ளும் தமது ஜாதியாரிடத்துஞ் செய்வதற்கு முயலற்கில்லாதவராகி வாளா காலங்கழித்து மாண்டு போகின்றனர். இவர்களால் நமதுஜாதி பழி



நிலையிலேயே படிந்திருக்கவும், அந்நிலையிலேயே இதின் காலஞ்செல்லவும், காலஅளவு அதிகரிக்கவும் நேரிடுகிறது.

மற்ற வகுப்பாரோவென்றால், பித்துக்கொண்டவர்களா யிருக்கின்றனர். முன் சொல்லப்பட்டவர்களைப்பார்க்கிலும் இவர்களே ஜாதிக்கு விசேஷ தீங்கு செய்பவர்கள். "பொருளல தொன்றினைப் பொருளெனக்கொடு - வெருவுதல் செய்வதும் வினயமோர்கிலா - தொருசெயல் விரைந்துசெய் துயங்கிவாழ்தலும்-பெரியவர் செய்கையோ பேதைத்தன்மையே" என்ற கந்தப்புராணப் பாடலின்படி, பொருளல்லாததைப் பொருள்பொருளென்று மயங்கிச் செய்யவேண்டியவற்றை விட்டுச் செய்யத்தகாதனவற்றில் சிந்தை செலுத்தி நடக்கும் இப்பேதையரைப் பெரியவரென்று நம்மவர் மயங்காராக. இப்பேதையர்க்கு தங்கள் நிலை யிதுவென்றுந் தங்கள் ஜாதிநிலை யிதுவென்றுந் தெரியாது பித்தங்கொண்டவன் தலைசுற்றுவதுபோல் இவர்கள் மயக்கங்கொண்டுத்தடுமாறுகின்றார்கள். உள்ளதுள்ளபடி இவர்கள் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. உலகத்தார் தமது ஜாதிக்கு எந்த ஸ்தானம் கற்பித்திருக்கின்றார்களென்பதும், ஏன் கற்பித்திருக்கிறார்களென்பதும் இவர்கள் ஆராயமாட்டார்கள். பித்தன்போலவேதங்களுக்குத் தோன்றியவாறெல்லாம் பேசுவார். தமக்கு எதிர்ப்பட்ட தமது ஜாதியாரையெல்லாம் மயக்குவதற்குப் பிரயத்தினப்படுவர். இவர்களால் நேரிடுந் தீங்குகளை இரண்டு கூறாய்ப் பிரிக்கலாம்.

முதலாவது, இவர்கள் நமது ஜாதியாரைக் கெடுக்கின்றனர். நமது ஜாதியார்குணங்களைக்கண்டு சண்டித்துச்சீர்திருத்தஞ் செய்யாமல், ஏதோ பெருமை பேசிக்கொள்ளுகிறார்கள். சுஜாதியார் தீயொழுக்கத்தை மறைத்துமறைத்து வைப்பதினால், அவர்கள் 'தங்கள் தீவழிகளிலேயே நடந்து, பிறர் தூஷணைக்கு ஆஸ்பதமாயிருப்பதல்லாமல், இவர்கள் பேசிக்கொள்ளும் பெருமைச் சொற்களைக்கேட்டு அவர்களும் பாடம்பண்ணிக்கொண்டு மற்றவர்களுக்குந் தாங்கள் சொல்லி, தங்கள் நிலையே பரமயோக்கியமும் போக்கியமுமானதென்று மனப்பால் குடித்து, தங்கள் தீயொழுக்கத்தில் உறுதிபெற்றுத் தைரியங்கொண்டு இன்னுமின்னுங் கெட்டுக் கிழடைகிறார்கள்.

இரண்டாவது, இவ்வகுப்பார் தொன்றுதொட்டு ஏதோ சில வாக்கியங்களைச் சொல்லிச்சொல்லி அவைகளே தமது குலத்திற்குப் பெருமைதரும் வேதவாக்கியங்களென்று மதித்துக்கொண்டு, ஆனைகட்டச் சங்கிலி தானே கொடுத்தாற்போல பிறரிடஞ் சொல்ல, அவற்றின் ஆபாஸங்களை அவர்கள் வெளிப்படுத்தி ஒரேயடியாய்க் கண்டித்து ஒதுக்கித்தள்ளியொழிக்கிறார்கள். இதனால் நமது ஜாதிக்குத் தோல்விஸ்தானஞ் சித்தித்திருக்கிறது. ஆதலால், உள்ளும் புறம்புந் துன்பம் விளைவிக்கும் 'விஸ்வப்பிரம்ம' பித்தர் கூட்டத்தை ஒருதலையாய் ஒழிக்கவேண்டியது குலாபிமானிகளுடைய முதற்கடமை.

இப்பித்தர் தாம் ஆதாரமா யெடுத்துக் காட்டும் வாக்கியங்களின் பொருளை யறியார். அவை எங்கிருந்தெடுக்கப்பட்டன என்பதைத் தோரார். அவை யடங்கிய நூற்கள் சர்வாங்கீகாரமானவையா என்ப

தைக் கவனியார். அவ்வாக்கியங்களினால் தமக்குண்டாவது சாதகமா பாதகமா என்பதுணரார். அந்த நூல்கள் புராதனமானவையா அல்லது நவீன சிருஷ்டியா வென்பதோரார். அப்பன் சொன்னதைப் பிள்ளையும், அதைப் பேரனும், பேரனுக்குப் பேரனும் காலகாலமாய்க் கிளிப்பிள்ளை சொல்வதுபோல் சொல்லிச்சொல்லிக் காலங்கழிப்பர். தாமே பிரஹஸ்பதி யவதாரமென்றும் நான்கு வேதங்களையும், பதினெண் புராணங்களையும் 64-கலைகளையுங் கரைகண்டு குடித்து ஏப்பமிட்டிருப்பதாகவும் உலகத்தில் இவைகளை யறிந்துபேசவும் தர்க்கிக்கவும் கூடியவர்களெவருமில்லையென்றும் இறுமாந்திருப்பர். 'அறிவேன் அறிவேன் ஆலிலை புளியிலை போலிருக்கும்' என்பர். இங்குண்டு ஆதாரம் அங்குண்டு ஆதாரம் என்பர். புஸ்தகத்தையும் பக்கத்தையும் வரியையும் காட்ட அறியார்; புஸ்தக மிருந்த இடமும் இவர்களுக்குத் தெரியாது. என்றாலும், தாங்கள் சொன்னதை மற்றவர்கள் நம்பவேண்டு மென்று பிடிவாதஞ்செய்வர். வெறும்பேச்சாய்ச் சொல்பவர்களையே நம்பவேண்டுமானால், வேதசாஸ்திரங்களையும் சிலாசாஸனங்களையுங் காட்டி வாதாடுவோரையெப்படி நம்பாதிருக்கலாம்! கடைசியாய், இப்போது வழங்கிவரும் வேதசாஸ்திரங்களெல்லாம் வியாஸப் புரட்டென்பார்.

புரட்டப்படாத பிராசீன ஏட்டுப்பிரதிகளிருந்து காட்டக்கூடியவர்களும் காணக்கிடைக்கிலர். இவைகளினாலெல்லாம் நம்மவர்களுக்குண்டாகக்கூடிய அநுகூலமும், பெருமையும் ஏதோ நாமறிகிலோம். உள்ள நூலாதாரங்கொண்டும், தற்பிரமாணத்தாலும் அநுகூலமும் பெருமையுந் தேடிக்கொள்ளப் பிரயத்தனஞ் செய்வதே உசிதம். சமஸ்கிருத நூல்களையும், சாஸனங்களாதியவைகளையும் அரசாங்கத்தாரும் மேல்நாட்டுப் பண்டிதர்களுந் தேடிப் புதுக்கிரிகார்ட் செய்துகொண்டு வருகின்றனர். இல்லாததற்காகவும், கிடைக்காததற்காகவும் ஏங்கியேங்கி யிறப்பதைவிட்டு, இருப்பதைக் கண்டுங் கிடைத்ததைக்கொண்டுங் கரையேறுவோமாக. இதுதான் சாத்தியமானவழி. இந்த வழியே சுலப சாத்தியமும், நிச்சயசாத்தியமுமானதெனப் பின்னிடேன்.—விஸ்வகர்மோபதேச வீரகண்டாமணி, இரண்டாவதுபதிப்பு, பின்னுரை பக்கங்கள் 213—218

# இந்தியக் கைத்தொழில் கமிஷன்.

## ரிபோர்ட்டின் சுருக்கம்.

இந்தியாவின் கைத்தொழிலை விருத்தி செய்யவேண்டிய விஷயமாய் விசாரணைசெய்ய ஏற்பட்ட இந்தியக் கைத்தொழில் கமிஷன் ஸர் தாமஸ் ஹாலண்டின் தலைமையின்கீழ் கூடி, இரண்டு வருடகாலமாய் இந்தியாவின் பற்பல மாகாணங்களிலுள்ள கைத்தொழில் செய்வோரையும் வியாபாரிகளையுங் கண்டு விசாரித்து அறிந்த விஷயங்களையும் தங்கள் முடிவான அபிப்பிராயங்களையும்பற்றி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதன் சுருக்கம் பின்வருமாறு:—

அறிக்கையில் கண்ட ஏற்பாடுகள் இரண்டு முக்கிய விஷயங்களைத் தழுவிச் செய்யப்பட்டிருக்கின்றன; (1) மனிதர்களிலும் சாமான்களிலும் இந்தியர் தாமே மேன்மையடைய வேண்டுமென்னும் எண்ணத்தோடு தேசத்தின் கைத்தொழில் விருத்தி



செய்ய அரசாங்கத்தார் தகுந்த முயற்சி செய்யவேண்டும்; (2) இம்முயற்சிகள் செய்வதற்கு கைத்தொழிலிலும் ரசாயனத்திலும் தேர்ந்த நிபுணர்களின் உதவியும், இவர்களுக்கு மேல் பார்க்கத்தகுந்த ஆட்சிமுறையும் அரசாங்கத்தாருக்கு இருக்கவேண்டும். இவ்விரண்டையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அறிக்கையில் கண்ட விஷயங்களைக் கவனிப்போம்.

முதலில் ஆட்சிமுறையைப்பற்றி அறிக்கையில் சொல்லுகிறதாவது:—இம்பீரியல் அல்லது எல்லா இந்தியக் கைத்தொழில் டிபார்ட்மெண்டு, மாகாணக் கைத்தொழில் டிபார்ட்மெண்ட், எல்லா இந்திய கைத்தொழில் சர்விஸ் (Imperial Industrial Service) இவைகள் ஏற்படவேண்டும். எல்லா இந்தியக் கைத்தொழில் வைசிராயின் நிருவாக சபை அங்கத்தினர் ஒருவர் தலைமையாகவும் மூன்று மெம்பர்கள் உதவியாகவும் உள்ள இந்தியக் கைத்தொழில் கூட்ட (Board)த்தின்கீழ் இருக்கும். இது தேசத்தின் கைத்தொழிலை விருத்தி செய்வதற்காகவென்றே ஏற்படும். மற்ற முழு வேலையும் மாகாண அரசாங்கத்தார் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்காக அவர்கள் கைத்தொழில் அல்லது மெக்கானிக்கல் இஞ்சினியரிங்கில் அநுபோகமுள்ள உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டும்.

அத்தகையோரைத் தேர்ந்தெடுப்பதற்காகவும் அநுபோகமற்றவர்களை எடுப்பதால் நேரும் கஷ்டங்களையும் அபாயங்களையும் நீக்கவும் இம்பீரியல் இன்டஸ்டிரியல் சர்விஸ் ஒன்று ஏற்படுவது அவசியமாகிறது. இதில் பல துறைகளிலும் தேர்ச்சி பெற்ற இன்சினீர்கள் இருப்பார்கள். இவர்கள் பெரும்பாலும் மாகாண அரசாங்கத்தாரால் நியமிக்கப்படுவார்கள். இந்தக் கைத்தொழில்போர்டும் இந்திய அரசாங்கத்தாரிடமே யிருக்கும்.

மாகாணப் பிரிவுகள் கைத்தொழில் டைரக்டர்கள் உதவியைக்கொண்டு கைத்தொழிலை விருத்தி செய்யும். அந்த டைரக்டர் உத்தியோகஸ்தர்களல்லாதவர்களடங்கிய மாகாணக் கைத்தொழில் போர்டின் உதவியையும் பெறுவார். அவர் செய்யும் ஏற்பாடுகளும் வேலைகளும் சீக்கிரமே நடைபெறுவதற்காகவேண்டி அவர் அரசாங்கக் காரியதரிசி ஸ்தானத்தையும் வகிப்பார்.

அறிக்கையின் முதல் அத்தியாயங்கள் இந்தியாவின் கைத்தொழிலின் நிலைமையைக் குறிக்கின்றன அதில் இந்தியர்கள் கைத்தொழிலில் முன்னேற்றமடையாதிருப்பதையும் பயிர்த்தொழில் செய்து ஜீவனத்திற்குப் போதுமான ஆகாரங்கூட நிலங்களிலிருந்து அடையாமல் கஷ்டப்பட்டு வருவதையுங் குறிக்கின்றது. சில பாகங்களில் மேல்நாட்டுக்கைத்தொழில் சாதனங்களின் மேன்மை காணப்படுகின்றது. அவைகளிற் சில கூறப்பட்டு அவைகளில் இந்தியக் கூலிகளின் தேர்ச்சியின்மையையும் குறைவையும், அவர்கள் வேலைகளைப் பார்வையிட்டு வேலைவாங்கத் திறமையில்லாத குறைவையுங் காட்டுகிறது. காடுகளையும் மச்சங்களையும் ஆராய்ந்துபார்த்து வேலை செய்யவேண்டும். அதில் சாதாரணமாகக் கைத்தொழிலைவிட வியாபாரத்தில்தான் மிகுதியான பணம் போடப்படுகிறது. பத்திரமாகவும் சுளுவாகவும் இலாபம் வரக்கூடிய கைத்தொழிலாயிருந்தால்தான் எடுத்துக்கொள்ளப்படுகின்றது தற்

காலமனிதர்களுக்கு வேண்டியவைகளுக்கெல்லாம் வேண்டிய கருவிகள் இந்தியாவிலேயே அகப்படுகின்றன. ஆனால், யுத்தத்திற்கு முன்னும் பின்னுங்கூடத் தங்களுக்கு வேண்டியவைகளைத் தாங்களே செய்துகொள்ளவில்லை. உதாரணமாக, நூல் கைத்தொழிலுக்கு வேண்டிய கருவிகளனைத்தும் இங்கிலாந்திலிருந்துதான் வரவேண்டும். எக்காரணத்தாலாவது மெஷின்கள் அல்லது கருவிகள் வராவிட்டால் இக்கைத்தொழிலே போனதுதான். அதை அரசாங்கத்தார் கவனிக்கவேண்டும். விவசாயத்திற்குத் தற்கால முறைகளையும் அதிகச் செலவில்லாத கருவிகளையும் பிரயோகப்படுத்தவேண்டும. இப்படிச் செய்தால் வியாபாரத்திற்கு வேண்டிய நல்ல சாமான்கள் உண்டாவதோடு இதில் உழைக்காத கூலிகளையும் வேறு கைத்தொழிலில் உபயோகப்படுத்தலாம். இந்தியாவில் நிலக்கரி அதிகமில்லை யென்பதும் அதனால் கைத்தொழில் தடைப்படுகிறதும் இந்தியாவில் இன்னும் நிலக்கரி எங்கு அகப்படுமென்பதை ஆராய்ச்சி செய்யவேண்டுமென்றும் அறிக்கை குறிப்பிடுகிறது. பர்மாவில் கிரோசின் எண்ணெய்ச் சுரங்கம் வற்ற ஆரம்பமாய்விட்டது. வேறு எங்கு அகப்படுமென்பதும் தெரியவில்லை. கைத்தொழிலைக் காற்றைக்கொண்டு செலுத்த முடியாது. தண்ணீரைக் கட்டுப்படுத்தி அதன் உதவியால் பலகாரியங்கள் முக்கியமாக மின்சார சாதனங்கள் ஏற்படுத்தலாம். அவைகளை உடனே செய்யவேண்டும்.

இந்தியத் தொழிலாளிகளை நிபுணர்களாக்கவுங் கல்வி யறிவுள்ள இந்தியர்களைக் கைத்தொழிலில் பிரவேசிக்கச்செய்யவும் பல மார்க்கங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இந்தியத் தொழிலாளர் குறைந்த ஊதியம்பெறுவது அவர்களின் திறமையின்மையேயாகும். திறமையற்றவர்களா யிருப்பதற்குக் காரணங்கள் மூன்று. 1. கல்வியின்மை, 2-சுகபலமின்மை, 3-இலேசில் நீங்கக்கூடிய வியாதிகளை அகற்றுதிருத்தல் இவைகளாகும். அனைவருக்கும் மூலாதாரம் படிப்பு அவசியம். கைத்தொழிற் படிப்பும் அவசியம் வீட்டுக் கைத்தொழிற் படிப்பும் அவசியம். வீட்டுக் கைத்தொழில்கள் விருத்திசெய்யப் போதிய கல்வியும் தலைமை உபாத்தியாயர்களைக்கொண்டு அங்கங்கே போதிக்கப்படவேண்டும். கைத்தொழில் சாமான்களும் நன்றாய் விற்கும்படி ஏற்பாடுகள் செய்யவேண்டும.

இந்தியக் கைத்தொழிலாளிகள் சௌக்கியமா யிருப்பதற்கு அவசியமாக குடியிருக்க நல்ல வீடுகள் வேண்டியதவசியம். பொதுஜன சுகாதாரம் நன்கு கவனிக்கப்படல்வேண்டும். மலேரியா முதலான தொத்து வியாதிகளை அகற்றிவிடவேண்டும்.

இந்திய கைத்தொழிலில் இந்தியர்கள் தலையிடாதிருப்பதற்குக் காரணம் தலைமுறை தத்துவமாக உள்ள அசட்டையும் அனுபோகத்தில் கொண்டுவரமுடியாத கல்வியுமாகும. ஒரு தொழிற்சாலையில் போர்மனாகவோ இன்சினியராகவோ இருக்க விரும்புகிறவர்கள் ஒவ்வொருவரும் சிலகாலம் வேலையில் பழகித் தாங்களே அத்தொழிலைச்செய்து அநுபோகப்படவேண்டும். கல்வியறிவும் அநுபோக அறிவும் அவசியமாகும். ஆகவே, கைத்தொழில சம்பந்தமாய்ப் போதிக்க இரண்டு கல்லூரிகள் ஏற்படவேண்டும். ஒன்று இன்சினியரிங்கிலும் மற்றொன்று (மெட்டலர்ஜியில்) உலோகங்



களின் குணம் முதலியவைகள்) தேர்ச்சிபெறவும் செய்யவேண்டியது.

இதுவரையில் அரசாங்கத்தார் கைத்தொழிலில்தலையிடாதிருந்ததும் அதன்காரணமாக எத்தொழிலிலும் சம்பந்தப்படக்கூடாதென்னும் கொள்கையும் அக்கொள்கை மாறி இப்போது அதைக் கையாளவேண்டுமென்று நினைக்கும்போது கைத்தொழிலில் தேர்ச்சியுள்ளவர்கள் அரிதாக இருக்கின்றனரென்றும், அதனால் அவர்கள் ஆரம்பித்துப் பார்த்தும் இந்தியாவின் நிலைமையைப்பார்த்தும் இன்ன கைத்தொழில் ஆரம்பம் செய்யலாமென்று சொன்னாலும் முனவந்து செய்யக்கூடியவர்கள் இல்லை. அதற்குப் பரிகாரமும் காட்டியிருக்கிறார்கள். அனேக விஷயங்களை ஆராய்ச்சி செய்யவும் அவ்வாராய்ச்சிகளை எப்படி உபயோகிக்கலாமென்னும் விஷயங்கள் முதலானவைகளை விசாரிக்க 'ஸ்பெஷல் கமிட்டி யொன்று ஏற்படுத்தவேண்டும்.

---

## தொழிற்குறிப்புகள்.

### 15 காரெட் பொன்.

நாம் வேலைசெய்யக்கூடிய பொன் வகைகளில் இது முக்கியமானதொன்று. இந்தப் பொன்னினால் நல்லவேலைகளைச் செய்யலாம். இதனடியில் கூறும் பொன்னின் நிறம் சவரம் பொன்னுக்குச்சமமாகச்சொல்லக்கூடும். ஆனால், சவரனுக்கு மட்டமேதவிர சவரன் உரைக்குச்சரியாய் இராது. கலர்மட்டும் அதைப்போலவே இருக்கும். இதில் செயின் (Chain), ஸ்டட்ஸ் (Studs), சார்ம் (Charm), புரோச் (Brooch), லிங்க்ஸ் (links) முதலானவை செய்தால் கௌரவம் பெறலாம். மேற்கூறியனபோன்றனவாய்ச் செய்யும். ஆபரணங்களில் பஞ்ச் (Punch) அதாவது ஸ்டாம்பு ஊன்றினால் இந்தப் பொன்னின் உண்மை விளங்கும். ஆதலால், மேற்பார்வையில் தெரியாமல் உள்புறம் ஊன்றுவது உத்தமம். இந்தப் பொன்னை சேர்மானம் சேர்த்து வேலை செய்யும்போது கஷ்டமாக இருந்தால் 9-பாகம் அலாய் சேர்த்துக்கொண்டால் சுலபமாக வேலைசெய்து முடிக்கலாம். அப்படிச்செய்யும் பொன்னை 18 காரெட்டுக்குச்சமமாகச் சொல்லக்கூடும். மாற்று சரிவர இராது. ஆகையினால் ஸ்டாம்பு ஊன்றுவது உத்தமம். நம்பிக்கையும் உண்டு. இந்தப் பொன்னில் வேலை செய்தால் நல்லமதிப்பு பெறலாம். 6-பாகம் செம்பு, 3-பாகம் வெள்ளி, 15-பாகம் அசல் தங்கம் இவைகளை நல்ல சுன்னித்திராசில் வைத்து நிறுத்து உருக்கவேண்டும். சுத்தி செய்த செம்பு கிடைக்காவிடில் சுவிடீஸ்வொயர்கள் சேர்த்தால் பொன்னுக்கு யாதொருபங்கம் சம்பவிக்காமல் வேலைசெய்யலாம். இதனைப் பத்தவைத்தற்கு சவரன்பொன்னில் சமஇடையில் பொடி சேர்த்துக்கொண்டால் உத்தமம். இந்தப் பொன்னில் வேலைசெய்து வர்ணம் போடவேண்டுமானால் நயிற்றிக் ஆப் பொடாஸ் 14 அவுன்சு இடை காமன்சால்டு 7-இடை அவுன்சு, மாராட்டிக்கு ஆஸிட் 5-அவுன்சும் இதுகளைச்சேர்த்து நல்ல சலம் விட்டு சுண்டிப்போகாமல் பாதுகாத்தால் தங்கத்திற்குச் சமானமாக கலர் இதிலெடுக்கலாம். நகைகளை குதிரை மயிரினால் கட்டி அதில்போட்டு அடிக்கடி எடுத்துப் பார்த்துக்கொண்டு இருந்தால் நமக்கு வேண்டிய கலர் வந்தவுடனே எடுக்கலாம். எடுக்கும்போதெல்லாம் பித்தளை பிரஷில் அடித்துப்போடுவது உத்தமம்.

### எலக்ட்ரோ கிலிட் பாட்டரி.

நமக்கு வேண்டிய நாணயங்களைச் செய்து கிலிட்டு போடுவதற்கு இந்தப் பாட்டரி முக்கியமானது. ஆகையால் இதைக்கவனித்துச் செய்யவேண்டும். முன்னதாக நன்றாய்வாசித்து மனப்பாடம் செய்துகொள்ளவேண்டும், ஒரு ஜாடியில் ஒரு செம்புக்கம்பி வரவேண்டியது. இந்த செம்புக் கம்பியின்மேல் பட்டாவது அல்லது ரப்பராவது மூடி இருக்கவேண்டும். இந்தக் கம்பி அடியிலிருக்கும் தகடுமுனையிலிருந்து வெளியில்வரவேண்டும். மேற்கூறிய செம்புத் தகட்டின் அளவைப்போல் பிளாட்டிங் பேப்பர் போடவேண்டும். இதன்பிறகு 6-பவுண்டு மயில்துத்தம் போடவேண்டும். அதன்பிறகு இரண்டு கம்பியின் பேரில் மறுபடி பிளாட்டிங் பேப்பர் போட்டு இதற்குமேல் ஆற்றுமணல் பொடி போடவேணும். ஆற்றுமணல் 4-இஞ்சு உயரம்போட்டு பிறகு ஒரு நாக கட்டி வைத்துக்கொள்ளவேண்டும். இவ்விதமான பாட்டரி இரண்டு இருந்தால் ஆறுமாதக்காலம் உபயோகப்படுத்தலாம். மேற்கூறிய பிரகாரம் சேர்த்த பாட்டரிக்கு தீர்மானத்தில் நல்லஜலம் விட்டு 8 நாள் கழிந்தபிறகு நாகக் கட்டிக்கு பாதரஸம் விட்டு நாகக்கட்டியை அதில் போட்டால் போதுமானது. இல்லாவிடில் இரண்டுமூன்றுமாதத்துக்குள் நாகம் கரைந்துபோகும். ஆகையால், இதைக் கவனித்து செய்தல் முக்கியம்.

S. அப்பாதுரை ஆச்சாரி,
T. மோஹனராம் ஆச்சாரி.

---

பாஷைகள்.

பூலோகத்திலே 860 முக்கிய பாஷைகளும் 5000 கிளைப்பாஷைகளும் பேசப்பட்டுவருகின்றன. இவற்றில் முறையே யூரோப்பில் 89; ஆப்பிரிக்காவில் 114; ஆசியாவில் 123; அமெரிக்காவில் 417; ஓஷியானியில் 117 முக்கிய பாஷைகளுண்டு.

## குலாபிமானக்கொத்து.

### 1. முத்தியடைந்தார்.

எனது ஜேஷ்ட சகோதரரவர்களாகிய ஸ்ரீமத் பிரம்மஸ்ரீ எம். ஆர். சுப்ரமண்ய ஆசாரிய ஸ்வாமி அவர்கள் ஒருவாரம் காந்தலாயிருந்து நாளது புரட்டாசிமீ 19உ மாலை 6-மணிக்கு சிவானந்த முத்திநிலை அடைந்தார்கள்.

M-P- பழநிச்சாமி,
மார்க்கயன்கோட்டை.

### 2. விஸ்வகர்ம ஜாதியாருக்கு ஓர் வேண்டுகோள்.

சகோதரர்களே! நம் ஜாதியில் சென்னை இராஜதானியில் சுமார் 15 லக்ஷ்ய்பேருக்குமேல் இருக்கின்றோம். நம்மில் 1000க்கு ஒருவர்கூட B-A பட்டம் பெற்றவர்கள் இருக்கமாட்டார்களென்று நினைக்கிறேன். நாம் படிப்பில் ஆதி திராவிடரைப்போல் பின் தள்ளப்பட்டிருப்பதால் இந்த 20ம் நூற்றாண்டில் நமக்குப் பிரத்தியேக பிரைமரி பாடசாலையாவது ஒவ்வொரு ஊரிலும் ஒரு திராவிட சங்கமாவது இல்லாமலும், அதை யேற்படுத்த நம்மில் மற்ற ஜாதியாரைவிட நல்ல ஊதியம் கிடைத்தும் அதைப்பற்றிக் கவனம் செலுத்தாமலு மிருந்தால் மேன்மையடைவது எக்காலம்? சகோதரர்களே! இனிமேலும் அலக்ஷியமா யில்லாமல் ஊர் 1க்கு ஒரு திராவிட சங்கம் ஏற்படுத்தி ஜஸ்டிஸ், திராவிடன் பேபபர்களை வரவழைத்து நம் இனத்தவர்கள் படிக்க அந்த சங்க மூலமாகச் சேர்ந்துள்ள அங்கத்தினர்களிடமும் மற்ற அபிமானமுள்ள பிரபுக்களிடமும் வரி வசூலித்து மேற்படி பணத்தைக்கொண்டு ஏழைப்பிள்ளைகளுக்கு உயர்தரப் படிப்புக்கு சம்பளம் கொடுத்துவரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இதை இப்பொழுதே செய்ய முயற்சி செய்வீர்களானால் 10, 12 வருஷத்தில் நம்மில் அனேகப் படிப்பாளிகள் ஏற்படுவார்கள் என்பது திண்ணம்.

சகோதரர்கள்! இன்னொரு விஷயம் நாம் கவனிக்கவேண்டும். அதாவது மாண்டேகு செம்ஸ்போர்டு அவர்களது சீர்திருத்தம் வெளி



வந்திருப்பதால், நமக்கு இன்றியமையாத வகுப்புவாரி பிரதிநிதித்துவமும், நியமிப்போர் சங்கமும் குறிப்பிடாததால் அதைப்பற்றி ஒவ்வொரு ஊரிலுள்ள நம் ஜாதியில் படித்தவர்கள் கான்பரன்ஸ் கூட்டி அதில் தீர்மானிக்கப்பட்டதைக் கனம் அரசப் பிரதிநிதிக்கும், மந்திரிக்கும், நமது தலைவர் டாக்டர் T. M. நாயர் பெருமானுக்கும் தந்தி மூலமாய்த் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த சீர்திருத்தம் பரம்பரையாக மேன்மையுள்ள பிராம்மணருக்கு நன்மை பயக்குமல்லாமல் ராஜ விசுவாசமுள்ள திராவிடருக்கு எள்ளளவும் நன்மை விளைவிக்காது என்று லார்ட் சிடன்ஹாமும் பேசியிருக்கிறார்.

சகோதரர்களே! சமயம் வாய்த்திருக்கும் பொழுது நம் குறையை வெளிப்படுத்தினால் சீக்கிரத்தில் நாம் சுதந்தரத்தை அடையலாம். உடனே பிரயாசைப்படுங்கள்.

ரெ. அப்பாதுரை பத்தர்.
(திராவிடன்)

### 3. ஓர் புதுச்சபை.

1094ளு புரட்டாசிமீ 6உ 1918ளு செப்டம்பர்மீ 22உ ஆதிவாரம் திருவாங்கூர் சமஸ்தானம் நெய்யாற்றங்கரை தாலூக்கா புவார் சூலங்குடி கிராமம் சூலங்குடியில் விஸ்வகர்ம வித்யாபிவிர்த்தி சன்மார்க்க சபை ஸ்தாபிக்கப்பட்டது.

திருநெல்வேலி ஜில்லா நாங்குனேரித் தாலூக்கா சூரங்குடியிலிருந்து சுமார் 200 வருஷத்திற்குமுன் இவ்விடம் வந்து குடியேறினதால் இக்கிராமத்திற்கும் சூரங்குடியென்ற நாமதேயத்தோடும் அழைக்கப்பட்டு சிலகாலமாய் கேரளவாக்கால் சூலங்குடியென்று அழைக்கப்படுகின்றது.

திருவாங்கூர் சமஸ்தானத்தில் உள்ள சில த்வேஷத்தினால் விஸ்வகர்ம வம்சஸ்தர்கள் தாழ்ந்த ஸ்திதியோடுமிருந்து வருகிறதை சர்வஜனங்களும் தெரிந்தும் தற்கால நாகரீக பரிஷ்காரத்துக்கு வராமலும் வித்யாபிவிர்த்தி இல்லாமலும் ஸம்ஸர்க்க தோஷத்தால் பலவாறிருந்து கொண்டிருக்கிற பரதேச விஸ்வகர்ம வம்சஸ்தர்களின் நிலைமையை ஒருவாறு பரிஷ்காரத்துக்கு கொண்டுவந்து கல்வியாபிவிர்த்தி மென்மேலும் உண்டாக்கி இங்கிலீஷ்பாஷை கற்கவும் உயர்தரஉத்தியோகநிலைமைக்குவரவும் ஆசாரசீலர்களாக இருந்து வரவேண்டியதற்காகவும் உலக விவகாரங்களைச் சதா தெரிந்து வரவேண்டியதற்காகவும் திருநெல்வேலியில் வசிக்கும் பிரம்மஸ்ரீ திண்டுக்கல் டி.யன் முத்துசுவாமி உபாத்தியாயரவர்களின் குலாபிமான விருப்பத்தோடு பல விடங்களிலும் சபை ஸ்தாபித்தும் ஸ்தாபிக்கத் தூண்டுகோல் செய்துகொண்டுவந்ததுபோல் இவ்விடம் சூலங்குடியில் விஸ்வகர்மவம்ச சர்வஜன சம்மதத்தின்பேரிலும் சதாபிவிர்த்தியாகும்பொருட்டும் இச்சபை ஸ்தாபிக்கலாயிற்று.

ஷை பிரம்மஸ்ரீ டி. யன். முத்துசுவாமி உபாத்தியாயரவர்கள் மனதோர்ந்து ஏற்படுத்தும் சபை அதிகார மெம்பர்களையும் அன்னவரால் ஏற்படுத்தும் சபை ரூல்களையும் நாங்கள் சம்மதித்தவர்களாகவும் ஷை சபையை அபிவிர்த்திக்குக் கொண்டுவந்து அதிசீக்கிரம் மேன்மைக்கு வரவேண்டுமென்ற நல்லபிப்பிராயத்தோடும் சர்வசம்மதமாய் ஒப்புக்கொண்டிருக்கிறோம் என்பதாய் சம்மதித்திருக்கிறார்கள். சிலர் ஆஜரில்லாததால் சபை அதிகார மெம்பர்கள் நேமகம ஆகவில்லை. 2 வாரத்தில் முடிவுபெறும்.

சுபம். சுபம்.

கு. பத்மநாப ஆச்சாரி.
உபாத்தியார் மா. வேலாயுத ஆச்சாரி.
வே. ராமசாமி ஆச்சாரி, வகையரா.
சூலங்குடி.

### 4. தல நூல்கள் வேண்டும்.

விஸ்வகர்ம குலத்தினர்களின் இருளினை அகற்றி உள்ளொளி விளக்கி மெய்யுணர்வினை வளர்க்கும் செந்தமிழ் 'விஸ்வகர்மன் தொழிலில்' அரியபெரிய விடயங்களை வெளியிட்டுவரும் நண்பர்களுக்கு எமது வந்தனத்தை அளிக்கின்றோம்.

விஸ்வகர்ம புராணத்தை எழுதிய பாரதியாரவர்கள், ஒருவன் உலகத்தில் நடக்கவேண்டிய

வழிகளையும், செய்யவேண்டிய கருமங்களையும் விளக்கி எழுதியுள்ளார். ஆனால், அதன்பெயருக்குத் தகுந்தவிதமாய் நமது ஜாதியின் உற்பவவிஷயங்களைச் சரித்திரபூர்வமாய் எழுதி வெளியிடாது சென்றது விசனிக்கத்தக்கதே. ஸ்ரீ மார்க்கசகாய ஆச்சாரி அவர்கள் தலையிட்ட விவகாரங்களுக்கேற்ற நூல்களை வெளியிட்டுக் காலஞ்சென்றனர். அவர்களிடத்தில் சுஜாதி சம்பந்தமான பூர்வீக நூல்கள் இருந்திருக்கலாம். அவைகள் அன்னவரது நெருங்கிய பந்துவான ஸ்ரீ அத்தியாபக லிங்காச்சாரி அவர்களிடமிருந்திருக்கலாமென்பதற்கு அவரது பாண்டித்தியமும், வியாஸங்களும் போதிய சான்றாகும். இப்போதுள்ள பண்டிதர்கள் சுமார் 200, 300 பக்கங்கள் கொண்ட லெட்டர்கள் ஒருவருக்கொருவர் எழுதிக்கொண்டுவருகிறார்கள். அவர்களும் தங்களுடைய அபிப்பிராயங்களில் ஒற்றுமைப்பட்டிருப்பதாகத் துணிந்து கூறுவதற்கில்லை. ஒருவர் அபிப்பிராயத்திற்கு ஒருவர் முரணாகவே யிருந்துவருகிறார்கள். இது ஊக்கத்துடன் உழைப்போர்க்கு அருசையை உண்டுபண்ணுமென்பதை உணராதவர்கள் அல்லர். ஸ்ரீ சோதிடர் அவர்களால் 'விஶ்வகர்மரே ஆச்சாரிய ஜாதியர்' என்ற நூல் எழுதப்பட்டு சென்னைச்சபையாரால் அச்சிடப்பட்டது. இவர்கள் இதுபோன்ற நூல்களை சரித்திரப்பூர்வமாய் எழுதி வெளியிடுவதில் கவலையும் சிரத்தையுங் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

சிலம்பைப்பற்றிக் கூறும் சிலப்பதிகாரம் பண்டிதர்களும் கவீஸ்வரர்களும் விரும்பக்கூடிய தமிழில் உயரிய நடையில் இலக்கணசுத்தியோடு எழுதப்பட்டிருப்பதால் யாவரும் விரும்புவாராயினர். அவ்வாறே நமது மரபில் தோன்றிய நல்லூர் வீரகவிராயரும் 'விறலிவிடுதூது' என்ற நூலை வெளியிட்டிருக்கிறார், வேதாகமசாஸ்திர இதிகாசங்களில் அதிக பாண்டித்தியமும், கவிபாடுவதில் வன்மையும் பொருந்தி விளங்கும் ஸ்ரீ மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரி அவர்களும் நமது பூர்வசரித்திரங்களை செய்யுள் ரூபமாக வெளியிட்டு புண்ணியத்தையும் புகழுமடைவார்களென்று வேண்டிக்கொள்ளப்படுகிறது.

சென்ற (8-வது) சஞ்சிகையில் பத்திராதிபர் அவர்களாலும், ஸ்ரீ சோதிடர் அவர்களாலும் விரும்பியபடி சுஜாதி அபிமானமும், சகலாகமப் பண்டிதர்களின் நேசத்தையும் பழக்கத்தையும் பெற்று விளங்கும் நண்பர் ஸ்ரீ C.R. சுப்பராய ஆச்சாரி அவர்கள், ஸ்ரீ அத்தியாபக லிங்காச்சாரி, மார்க்கசகாய ஆச்சாரி முதலானவர்களைப்பற்றி நன்கு அறிந்துள்ளதால், தங்களுக்குத் தெரிந்ததை வெளியிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உலகத்தில் ஒவ்வொரு பண்டிதர்களும் தங்களுடைய குலநூல்களை வெளியிட்டு நலம்புரிந்திருப்பதையும் நமது பூர்வீக பண்டிதர்கள் இதுவரை சுஜாதிசம்பந்தமான நூல்களை வெளியிடாதிருந்து சென்றதையும் கண்டு கண்கலங்கும் எம்போலியர்கள் இனி கலங்காவண்ணமும்; யாவரும் மெது சரித்திரங்களை ஆவலுடன் பார்க்கும்வண்ணமும் விரும்பக்கூடியவிதமாயும் உயரிய நடையிலும் பொருள்பட செய்யுள் ரூபமாயும் வசன ரூபமாயும் வெளியிடுவதில் இனிமேல் சிரத்தைகொள்ள வேண்டுமென்பது பண்டிதர்களின் பாரமாதலால் அவர்கள் வெளியிடும் நூல்களை ஆவலுடன் யாவரும் எதிர்பார்க்கின்றார்கள். 50 வருடங்களுக்குள் வெளியிடப்பட்ட நூல்களும் உண்மைவேதங்கள் அழிவடைந்தபிறகு வெளிவந்த நூல்களும் சாஸ்திரங்களும் சுருதிகளும் தற்போது ரிக்கார்டுகளாய் பாவிக்கப்பட்டுவந்ததும் பாவிக்கப்பட்டுவருகிறதும் யாவரும் (நம்மவர்கள்) அறிந்ததும் நூல்களை ஏற்படுத்தினால் பின்னுள்ளவர்களுக்கு ஓர் பேருபகாரமாயிருக்கும் என்பதை இதுவரைக் கவனிக்காவிட்டாலும் கவனித்தவர்கள் சமயங்கிட்டவில்லையென்றிருந்து வந்திருந்தால் இதுதான் சமயமென்று வெளியிடும் வழியைத்தேடுவோர்களாகவும். ராமாயணப் பிரசங்கஞ் செய்துவரும் பண்டிதர்களும் கம்ப



னைப்பற்றி வெளியிட முன்வரும்படியும் வந்தனத்துடன் கேட்டுக்கொள்கின்றோம்.

விஶ்வகர்ம சன்மார்க்க சபையார்,
திருநெல்வேலி.

### 5. திருச்சிராப்பள்ளி ஜில்லா கரூர் விஸ்வகர்ம வகுப்பாரின் பிரதிநிதித்துவ பிரத்தியேக மஹாநாடு.

இம்மகாநாட்டை வந்திருந்து நடத்திக்கொடுக்கும்படி உபசாலைச் சங்கத் தலைவர் பிரம்மஸ்ரீ K. அங்கண்ணாச்சாரியாரவர்களும் ஸ்ரீமான் A. R. சிவானந்தம் அவர்களும் கேட்டுக்கொண்டபடி திருச்சி தென். இந்தியா மஹாஜன சமஉரிமைக் கூட்டுச் சங்கத்ததிபதி ஸ்ரீமான் பாரிஸ்டர் T. C. தங்கவேலு பிள்ளையவர்கள் மேற்படி தேதி பகல் 12-மணி வண்டிக்குக் கரூர் விஜயம் செய்தார்கள். ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் ஸ்ரீமான் A. R. சிவானந்தம், சபைத்தலைவர் பிரம்மஸ்ரீ T. அப்பாவு ஆச்சாரியார், உபதலைவர் பிரம்மஸ்ரீ K. அங்கண்ணாச்சாரியார், பிரம்மஸ்ரீ அங்கமுத்து ஆச்சாரியார் முதலியவர்கள் ஸ்ரீமான் பிள்ளையவர்கட்குப் புஷ்பமாலைசூட்டிட வரவேற்கப்பட்டு ஜாகைக்குச் சென்றார்கள்.

மாலை 4-மணிக்கு மஹாநாடு கூடிற்று. வெளியூர்களிலிருந்தும் அநேக பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தார்கள். அதில் குறிப்பிடத் தக்கவர்கள் ஸ்ரீரங்கம் பிரம்மஸ்ரீ தாயுமானலிங்க ஆச்சாரியாரவர்கள், வேலாயுதபாளையம் பிரம்மஸ்ரீ நாராயணாச்சாரியாரவர்கள், மேற்படியூர் முத்துசாமி ஆச்சாரியாரவர்கள், வாஞ்சஊர் சுப்பிரமண்ணிய ஆச்சாரியாரவர்கள், பாண்டமங்கலம் செங்கோடாச் சாரியாரவர்கள், உப்புலியபுரம் அங்கமுத்துஆச்சாரியாரவர்கள், கோவில்பாளையம் சேஷணாச்சாரியாரவர்கள் மேற்படியூர் குருசாமி ஆச்சாரியாரவர்கள் முதலிய அநேக கனவான்களும் விஜயம் செய்திருந்தார்கள். மகாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டுத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன.



#### தீர்மானங்கள்.

1. இராஜவிஸ்வாசம்—நம் மாட்சிமை பொருந்திய இராஜச் சக்கரவர்த்தியவர்கட்கு இம்மகா நாட்டில் கூடியிருக்கும் திருச்சிராப்பள்ளி ஜில்லா கரூர் தாலூக்கா விஶ்வகர்ம மஹாஜனங்கள் தம் இராஜ விஸ்வாசத்தைச் செலுத்துவதோடு இம் மகா யுத்தத்தில் நம் அரசர் பெருமானுக்கும் நேசக்கட்சியாருக்கும் வெற்றியுண்டாகுமாறு பிரார்த்திக்கின்றனர்.

இத்தீர்மானம் அக்கிராசனாதிபதி யவர்களால் பிரேரேபிக்கப்பட்டு சபையோர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

2. பிரதிநிதித்துவம்:—இப்போது வெளியிட்டிருக்கும் பிரேரேபணைப்படி எல்லா ஆதிக்கமும் தற்காலம் முன்னேற்றமடைந்துள்ள ஒரு சிறு கூட்டத்தினர் ஆளுகையிலேயே செல்லுமாகையால் அந்தந்த வகுப்பினரால் தேர்ந்தெடுக்கப்படும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாத சீர்திருத்தம் அதிகம் அதிருப்தியையுண்டாக்குமென்று இம்மகாநாட்டில் கூடியிருக்கும் விஸ்வகர்ம மஹாஜனங்கள் அபிப்பிராயமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

இத்தீர்மானம் எம். கமலமூர்த்தி ஆச்சாரியாரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு வாஞ்சஊர் சுப்பிரமண்ய ஆச்சாரியாரவர்களாலும் வேலாயுதம் பாளையம் நாராயணாச்சாரியரவர்களாலும் ஆமோதிக்கப்பட்டுச் சபையோர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

3. சீர்திருத்தக்கமிட்டி:—மிஸ்டர் சாஸ்திரியைச் சீர்திருத்தக் கமிட்டியில் அங்கத்தினராகத் தெரிந்தெடுத்ததைப்பற்றி இம்மகாநாட்டார் பலமாகக் கண்டனம் செய்வதோடு ஏழைபங்காளராகிய ஸ்ரீமான் டாக்டர் டி-எம். நாயர் அவர்களை அக்கமிட்டியில் நியமிக்குமாறு ஒரு

தீர்மானம் அங்கண்ணாச்சாரியவர்களால் பிரேரேபிக்கப்பட்டு வெங்கட்டராம ஆச்சாரியவர்களாலும் முத்துசாமி ஆச்சாரியவர்களாலும் ஆமோதிக்கப்பட்டுச் சபையோர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

4. இத்தீர்மானங்களையெல்லாம் ஸ்ரீமான் டாக்டர் டி. எம். நாயர் அவர்கட்கும் மற்ற அதிகாரிகளுக்கும் தந்திமூலமாகத் தெரிவிக்குமாறு அக்கிராசனருக்கு அதிகாரம் கொடுத்திருப்பதாய் இம்மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானம் மருதநாயக ஆச்சாரியவர்களால் பிரேரேபிக்கப்பட்டு வரவேற்புச் சங்கத்தலைவர் அங்கண்ணாச்சாரியவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

அக்கிராசனாதிபதியவர்கள், வரவேற்புச்சங்கத்தலைவரவர்கள், ஸ்ரீமான் பாரிஸ்டர் T-C-தங்கவேலுபிள்ளையவர்கள், ஸ்ரீமான் A-R-சிவானந்தமவர்கள், உடுமலைப்பேட்டை ஸ்ரீமான் டெபோ முத்துச்சாமிபிள்ளையவர்கள், ஸ்ரீமான் வெங்கடேஸ்வர நாயுடுகாரவர்கள் முதலான கனவான்களுக்குப் புஷ்பமாலை சூட்டப்பட்டுச் சபையோர்களுக்குச் சந்தன தாம்பூலம் அளிக்கப்பட்டு 6 மணிக்கு சபை கலைந்தது. உடன் மேற்கண்ட கனவான்கள் சகிதம் புகைப்படம் பிடிக்கப்பட்டது.

மேற்படி மடாலயத்தில் உபந்நியாசகர் ஸ்ரீமான் A·R சிவானந்தமவர்களால் விஸ்வகர்மாக்களுடைய தற்காலநிலைமை அவர்கள் முன்னேற்றமடையப் பிரதிநிதித்துவமே பெரிய ஆலையென்றும், அதற்குப் பிராமணரல்லாதாரோடு ஒத்துழைக்கவேண்டுமென்றும், அப்படி ஒத்துழைக்க முன்வந்த இம்மகா நாட்டிற்கு வந்தன மளிப்பதாயும் நீண்டதோர் உபந்நியாசமும் நடைபெற்றது.

## ஆரோக்கியபோதம்.

### "இன்புளுயன்சா"

சுரநோய் பிணியாளிகள் விஷயத்தில் கவனிக்கவேண்டிய விதிகள்:—

• இந்நோய் ஒருவருக்கு ஏற்பட்டால் அவர்களுக்கு ஜுரம், தலைவலி, முதுகு கைகால்முதலிய இடங்களில் வலி, இரும்பல், சிலவேளைகளில் மூக்கடைப்பு, வாந்தி, சீதபேதி உண்டாகும். இந்நோய் ஒருவருக்கு உண்டானதும், பிணியாளி உடனே அருகாமையிலுள்ள சிகிச்சை சாலைக்குச் செல்லவேண்டும். அல்லது படுக்கையில் படுத்துத் தக்க வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை செய்துகொள்ளவேண்டும். சன்னல்களையும் கதவுகளையும் மூடிக்கொண்டு பிணியாளி ஒரு அறையில் படுத்துக்கொள்ளக்கூடாது வியாதியஸ்தர், தன்னருகில் தன் பந்துமித்திரர்களைச சேர்த்துக்கொள்ளக்கூடாது. அப்படி சேர்த்துக்கொணடால் அவர்களுக்கும் நோய் தொத்திக்கொள்ளும். பிணியாளிக்கும் நோய் அதிகரித்து நிமோனியா சுரநோயாக மாறிவிடும் நல்லகாற்றை சுவாசிப்பதற்குப் பதிலாக பிணியாளி துர்நாற்றத்தையும் தன் சுவாசத்தையும், தன் பந்துமித்திரான் சுவாஸத்தையும் சுவாசித்தால் தனக்கு உடனே உயிருக்கு ஆபத்தான நிமோனியா சுரநோய் ஏற்பட்டுவிடும்.

பிணியாளி, ஒரு தனி அறையில் வைத்திருக்கப்படல்வேண்டும். கூடுமானவரையில் வீட்டிலுள்ள மற்றவர்களிலிருந்து தனியேயும் ஒதுக்கி வைத்திருக்கப்படல் வேண்டும். பிணியாளிக்கு ஏற்படுத்தப்படும் அறை நல்லகாற்று வரக்கூடிய அறையாயின் உத்தமமானது. பிணியாளிகளை தாழ்வாரங்களிலும் இருக்கும்படி செய்யலாம். மழைநீரும் வெய்யிலும் மேலே படாமல்படிக்தச் செய்யக்கூடுமானால் பிணியாளிகளை வெட்டவெளியிலும் இருக்கும்படி செய்யலாம். பிணியாளி இருக்கும் அறைக்குள் நல்லகாற்றுவரும்படி இரவும்பகலும் பிணியாளி அறையின் கதவுகளும் ஜன்னல்களும் திறந்தபடியே இருக்கவேண்டும். ஆனால், பிணியாளியின்மீது மழைநீர் யாதும் படாதபடிக்குப் பார்த்துக்கொள்ளவேண்டும்.



பிணியாளிக்குப் பணிவிடை செய்கிறவர்களைத்தவிர மற்றவர்கள் எல்லோரும் ஒதுங்கியே இருக்கவேண்டும். வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்குதடவை (கான்டீஸ்வுலியிட்) என்னும் மருந்தை வாயில் வார்த்துக்கொண்டு கொப்புளித்து உமிழ்ந்துவிடவேண்டும்.

ஊரில் இந்நோய் பரவியிருக்கும் காலத்தில் ஜனங்கள் நாடகத்திற்கும், பயாஸ்கோப் வேடிக்கைக்கும், மீட்டிங்குகளுக்கும் போகக்கூடாது. இந்நோயினால் வருந்துபவர்கள் சுவாசத்தை மற்றவர்கள் உட்கொள்வதினால் இந்நோய் பரவுகிறபடியால் கூடுமானவரையில் ரயில்வண்டிகளிலும் டிராம்வண்டிகளிலும் பிரயாணஞ் செய்யாதிருப்பது நலம்.

சென்னை பப்ளிசிடி போர்ட் அதிகாரிகள் பொதுஜனங்களுக்குத்தெரிவிக்குமாறு ஒரு வைத்திய நிபுணரால் மேற்கூறிய விதிகள் ஏற்படுத்தப்பட்டன.

---

## விசேஷவர்த்தமானம்.

### சவரன்களை உருக்கினார்கள்.

1300-சவரன்களை உருக்கிய குற்றத்திற்காக இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி கல்கத்தா இரண்டாவது பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் இரண்டு வங்காளிகட்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 150 அபராதம் விதித்தார்.

### யாகக்ஷத்திரியர்.

இத்தென்னிந்தியாவிலுள்ள இருபத்துநான்கு மனையார்களாகிய தெலுங்கு செட்டியார்களென்னும் யாகக்ஷத்திரியர் ஜாதி அபிவிருத்தியின் பொருட்டு கான்பரன்ஸ் நடத்துவதற்காக சப்கமிட்டி மீட்டிங் கோயமுத்தூரில் கூடினார்களென்றறிகிறோம். நமது ஜாதிக் கான்பரன்ஸ் கமிட்டியார்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்களென்பது தெரியவில்லை.

### புதிய ஸ்டேஷன்.

எம். எஸ். எம். ரெயில்வேயில் வில்லிவாக்கத்திற்கும் அம்பத்தூருக்கும் மத்தியில் கொரட்டூர் என்னும் புதிய ஸ்டேஷன் இம்மாதம் 1-ந்தேதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மேற்படி ஊர் 5000 ஜனங்களடங்கிய ஒரு பெரிய கிராமம். பாடி என்னும் ஸ்தலத்திற்கு அருகாமையிலிருக்கிறது

### திரும்ப இந்துவானார்கள்.

மிஸ்டர் ஈஸ்வரதாஸ் வைமுகுந்து என்பவர் கிறிஸ்துமதத்தில் சிலகாலமாகச் சேர்ந்திருந்தார். இப்போது தாம் அம்மதத்தினின்றும் இந்து மதத்தைத் தழுவுவதாக, முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் உறுதிமொழி கொடுத்தார். இதைப்பற்றி ஒரு சடங்கு நடந்தது. பம்பாய் இந்து மத சங்கத்தைச் சேர்ந்த மிஸ்டர் வயித்தியா என்பவர் பூனாவிற்குச் சென்று இச்சடங்கை நடப்பித்தார். மகமதிய மதத்தைச்சார்ந்த கோபால்தாஸ் என்பவரும் இந்து மதத்தில் மறுபடியும் சேர்க்கப்பட்டிருந்தார். இவர் இப்போது இச்சடங்கை நடப்பிப்பதில் அக்கினி வளர்ப்பவராக விருந்தார்.

### கொலைகாரப் பார்ப்பினி.

7 வயதுள்ள ஒரு குழந்தையின் பேரிலிருந்த நகைக்காக ஆசைப்பட்டு ஒரு பார்ப்பினி கொன்றுவிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட கேஸ் திருநெல்வேலியில் முடிவு செய்யப்பட்டது. குற்றம் நடந்த தினத்தில் குழந்தை ரூ. 200 பெறக்கூடியநகைகளையணிந்துகொண்டிருக்கும்போது, குற்றவாளி அவைகளை அபகரித்துக்கொண்டாள். குழந்தை தன் தாயிடம் தெரிவித்து விடுவதாகச் சொன்னதின் பேரில் அதைக் கொன்று ஒரு கோணிப்பை

## அதிமதுரம்.

### சரித்திரக்காரர்களின் ஆராய்ச்சி.

4292 வருஷங்களுக்கு முன் இந்தியாவும் (கொழும்பும்) ஒன்ருக ஒரே பூமியா யிருந்த தென்று சரித்திரக்காரர்கள் தக்க ஆதாவுகளைக் கொண்டு சித்தாந்தப்படுத்துகிருர்கள்.

### நீளமான நகம்,

பூர்வ சீனரும் ஜப்பானியரும் நகத்தால் சித்திரம் எழுதிஞர்களாம். அதற்காக பெருவிரல் நகத்தை 18 அங்குலம் நீளமாக வளரச்செய்து கூர்மையாக்கி வர்ணத்தில் தோய்த்துப் படம் எழுதுகிருர்கள்

### இருப்புப் பாதைகள்.

இருப்புப்பாதை உண்டுபண்ணி இப்பொழுது எண்பது வருஷந்தான் ஆகிறது. ஆனுலும் இந்தச் சொற்பகாலத்திலே நான்குலட்சம் மைல்தூரம் ரெயில்வே உலகத்தில் போய்க்கொண்டிருக்கிறது.

### பன்றியை விழுங்கிய பாம்பு.

ஹாங்காக் கென்னும் நகருக்கடுத்த டெய்ஞேவென்ற ஊரில் பெரும் பாம்பொன்றைச் சுட்டார்களாம். உடனே அப்பாம்பைச் சோதித்துப்பார்க்க அதன் வயிற்றினுள் 64 பவுன் எடையுள்ள பன்றியொன்றிருந்ததாம்.

### இந்தியாவில் ஆடுமாடுகள்.

இந்தியா தேசம் முழுமையுமுள்ள ஆடுமாடுகளின் தொகை சுமார் 40 கோடியே 89 லட்சமாகும். இதில் 4 கோடியே 90 லட்சம் எருதுகள்; 3 கோடியே 76 லட்சம் பசுக்கள்; 29-கோடியே 92 லட்சம் எருமைகள்; 4 கோடியே 29 லட்சம் கன்றுகள்.

### கியாதிபெற்ற புத்தகம்.

இங்கிலாந்தில் பிரசித்திபெற்ற கதாசிரியராகிய ஹென்றிவுட் என்னும் மாது 'ஈஸ்ட்லின்' என்னும் நாவல் ஒன்றை இயற்றியிருக்கிருர். அந்நாவலானது இதுவரையிலும் பத்துலட்சம் பிரதிகள் செலவாயிருக்கின்றனவாம்.

### பெரிய வைரம்.

உலகத்து வைரங்களிலெல்லாம் பெரியது போர்த்துக்கல் அரசனிடத்திலுண்டு. அதன் எடை ஏறக்குறைய 1 பவுண்ட்; பிரமாணம் கோழிமுட்டை அவ்வளவு. கிடைத்த இடம் பிரசில் தேசம். அதன் விலை 60 லட்சம் ரூபா.

### மீனின் எலும்புகள்.

நமது உடலிலே 422 எலும்புகளும் 60 இரத்தக் குழாய்களும் இருக்கின்றனவென்று வைத்திய நிபுணர்கள் கூறுகிருர்கள். ஆனுல் கார்ப் என்னும் மீனுக்கோ 4396 எலும்புகளும் கண்டச்சதைகளும் இருக்கின்றனவாம்.

### ஆச்சர்யமான கோழி.

அமெரிக்காவில் நடந்தேறிய கோழிக் காட்சியில் ஒருவர் ஒரு பெட்டைக்கோழியை 2400 பவுனுக்கு வாங்கிஞராம். மேற்படி கோழி பஞ்சவர்ணமுள்ளதும் இனிய குரலோசையுடையதுமாக விருக்கிறதாம். அதன் ஒரு முட்டையின் விலை 5 பவுன்.

### எத்தனை சுருட்டுகள் பிடித்தான்!

பதினேழு வயது முதல் சுருட்டு பிடித்து வந்த ஒருவன் தினசரி டைரி எழுதிவந்தான். எழுபது பிராயம்வரையும் அவன் பிடித்து வந்த சுருட்டு 3,28,713. இதிலேஇலவசமாய்க்

---

யில் அடக்கம் செய்துவிட்டாள். குழந்தை காணுமற் போனதற்காகப் பெற்ருேர்கள் தேடியபோது குற்றவாளியும் கூடச் சேர்ந்து தேடியபோது குற்றவாளி கோணிப்பையை வைக்கோல் போரில் எறியும்போது கண்டு பிடிக்கப்பட்டு அரெஸ்ட் செய்யப்பட்டாள். கோர்ட்டார் குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்தார்கள்.



கிடைத்தவை 43,639. மற்றவையின் விலை ஏறக்குறைய 60,000 ரூபாய்.

### பெரிய விக்கிரகம்.

உலகத்து விக்கிரகங்களிலெல்லாம் பெரியது 'தியாபுத்தன்' என்னும் ஜப்பானிய விக்கிரகம். அது அறுபது அடி உயரமுள்ளது. செம்பு தகரம் ரஸம் பொன் இந்த லோகங்களினுற் செய்த இவ்விக்ரகம் 1200 வருஷங்களாய் வணங்கப்பட்டு வருகின்றதாம்.

### மரத்தால் வருமானம்.

அமெரிகா காலிபோர்னியாவில் விட்டியரென்னும் நகரத்தில் மிஸ்டர் எச். ஏ. உட்வொர்த் என்பவருக்குச் சொந்தமான 'பேரில்' என்னுமொருமரம் 7000 பவுண்டிற்கு இன்ஷியூர் செய்யப்பட்டிருக்கின்றதாம். அம்மரத்திலிருந்து வருஷந்தோறம் 640 பவுண்டு மதிப்புள்ள காய்கள் கிடைக்கின்றன.

### விநோத வழக்கம்.

ஜப்பானியர்கள் தங்கள் குடும்பத்தில் மரணம் நேர்ந்தால் கூலிக்கு அழுபவர்களைக்கொண்டு சகல உத்திரகிரியைகளையும் செய்வது வழக்கமாம். துக்கத்தில் சம்பந்தப்பட்ட நெருங்கிய பந்துக்களும் இறந்த தினத்திலேயே காப்பிக் கடைகளில் போய்ச் சந்தோஷமாகப் பேசிக்கொண்டு காப்பி யருந்துவார்களாம்

### கடலில் புதையல்.

இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு கப்பல் வழக்கமாய்ப் போய்க்கொண்டிருக்கிற வழியாகிய கடலின் அடிமட்டத்தில் 8,000,000,000 பவுன் மதிப்புள்ள நகைகளும் தங்கங்களும் ஏராளமாய்ப் புதைந்து கிடக்கின்றனவென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

### ராக்ஷஸப் பிறவியோ?

அமெரிக்காவில் பியுடல்யமா என்னும் ஊரிற்பிறந்த குக் என்பவன் உலகத்திலிருக்கும் பிள்ளைகளுக்கெல்லாம் உயரமாயும் கனமாயும் இருக்கின்ருனும். அவனது உயரம் 6 அடி 7 அங்குலம்; எடை 182 ராத்தல். அவனுக்கு வயது 15 தான் ஆகின்றதாம். இந்தச் சிறுவயதில் இவ்வளவு உயரமும் கனமுமிருப்பது ஆச்சரியமே.

### கற்பூர உற்பத்தி.

உலகத்தில் எங்கும் உபயோகப்படும் கற்பூரமானது ஜப்பான், தேசத்தில்தான் உற்பத்தியாகின்றது. அங்கு 1916-17-ம் 20,000 மணங்கு கற்பூரமும், 40,000 மணங்கு கற்பூரத்தைலமும் உற்பத்தியாயினவென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் கற்பூர மரங்கள் ஜப்பானைச்சேர்ந்த பர்மோ தீவில்தான் மிகுதியாக வளர்கின்றன. ஜப்பானைவிட அங்குக் கற்பூரம் அதிகமாக உற்பத்தியாகின்றது.

### மிகப்பெரிய நாய்.

பூலோகத்திலுள்ள நாய்களுக்குள் எடையிலும் நீளத்திலும் மிகப் பெரிதான நாய் ஒன்றை அமெரிக்காவில் ஒருவர் வளர்த்துவருகிருராம். இதன் நீளம் தலையிலிருந்து வால் நுனிவரை 7-அடி யென்றும் 160 பவுன் எடையென்றும் சொல்லப்படுகிறது. இதை ஒரு பெரிய காட்சிப் பொருளாக மதித்து இலட்சக்கணக்கான ஜனங்கள் அங்குப்போய்பார்த்து வருகின்ருர்களாம்.

### வைராக்கிய விசேஷம்.

அலகாபாத்தில் ஜாப்பர் பீபி என்ற முகமதிய ஸ்திரி ஓர் அனந்தா வார்ஸு வியாச்சிய சம்மந்தமாய்த் தனக்கு 14 அணு கிடைக்கவேண்டுமென்று பிரியாது செய்ய அது கீழ்க் கோர்ட்டாரால் தள்ளப்பட்டும் பிரிவிகவுன்சில் வரையிலும்போய்க் கடைசியில் வாதிக்கு அனுகூலமாய் டிக்ரி பிறப்பிக்கப்பட்டது. இந்தக் கேஸில் பிரதிவாதிகள் மொத்தம் 58-பேர்.

### ஒரு அற்புதமான டம்ளர்

ஹோட்டல்களிலும், இன்னும் இவைபோன்ற சாப்பிடுகிற இடங்களிலும் கண்ணுடி டம்ளர்கள் ஜாஸ்தியாய் உபயோகப்படுத்தப்படுகின்றன. இவைகளை அங்கேயே கையினுல்

சுத்தம் செய்வது கஷ்டமல்லவா? இந்த கிளாஸ் டம்ளர்களை சுத்தி செய்வதற்கு அமெரிக்கா தேசத்தில் ஒரு அற்புதமான (வாஷர் டம்ளர்) டம்ளரைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அது மிகச் சிறியதாயும் கெட்டியாயும் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையினால், அதை வைப்பதற்குக் கொஞ்சமிடம் போதும். இதற்குள் ஒரு கிண்ணம்போன்ற பாத்திரம் இருக்கிறது. இதற்கடியில் ஒரு ரோஜா வர்ணக்கல்லும் ஒரு வடிகுழாயு மிருக்கிறது. அதற்குத் தண்ணீரை சப்ளை செய்யும் ஒரு உருண்டை சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்தக்கிண்ணத்தில் ஒரு டம்ளரை வைத்தவுடன் கைமணிக்கட்டின் பலத்தினால் அந்த உருண்டை தள்ளப்பட்டிருக்கிறது. ரோஜாக் கல்லிலிருந்து வரும் தண்ணீர் டம்ளரின் உள்பாகத்தைச் சுத்தம் செய்கிறது. கிண்ணத்திலுள்ள பொத்தல்கள் வழியாய் வரும் தண்ணீரானது டம்ளரின் வெளிப்புறங்களைச் சுத்தி செய்கிறது.

### விவாக வழக்கங்கள்.

மதராஸ் பத்திரிகை ஒன்று முன்னொருதடவை அடியில் வருமாறு எழுதியிருந்தது.

"இந்துக்கள் விவாககாலத்தில் ஏராளமாய்ப் பணம் செலவு செய்கிறதை நிறுத்திவிடவேண்டுமென்று ஆசாரத்திருத்தக்காரர்கள் பலமான பிரயத்தனம் செய்துவரும் இக்காலத்தில் பஞ்சாபில் ஒரு கனவான், கட்டைகற்கள் முதலிய அசேதன வஸ்துக்களுக்கு விவாகஞ் செய்து முடிப்பதில் 1000 ரூபாய் செலவு செய்தார் என்று வங்காளப் பத்திரிகை ஒன்றில் வெளியாயிருக்கின்றதை வாசிக்க வியப்பாயிருக்கிறது. மேற்சொன்ன கனவான் நாராயண விக்ரகத்திற்கும் லட்சுமி விக்ரகத்திற்கும் முதலில் விவாகத்தைச் செய்து முடித்தார். இரண்டாவதாக மரக் கட்டையினால் செய்யப்பட்ட ஆண் பொம்மைக்கும் பெண் பொம்மைக்கும் விவாகத்தைச் செய்துமுடித்தார். மூன்றாவதாக மாமரத்திற்கும் புளியமரத்திற்கும் விவாகத்தைச் செய்துமுடித்தார். இவ்விதமான மூன்று விவாகங்களை முடித்துவைக்க வந்துக்கொண்ட புரோகிதருக்கு 200 ரூபா சம்பாவனை கொடுக்கப்பட்டது. இப்படி வீண்செலவுகள் செய்த தொகையை, யாதாமொரு தர்மத்திற்காவது கொடுக்கக்கூடாதா? அந்தோ பாவம்!"

### இந்தியா செய்திருக்கும் யுத்தச் செலவுகளைப்பற்றி.

யுத்தத்திற்காக இந்தியா ஆரம்பத்தில் நன்கொடையாகக் கொடுத்தது 150 கோடி ரூபா- சமீபமாய்க் கூடிய ராஜப்பிரதிநிதி சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி இந்தியாவின் அதிகப் பணப்பொறுப்பு 450 லட்சம், பவுன், அதாவது 67 கோடி ரூபாய் இது நீங்கலாக இதர ராணுவச்செலவுகள் 35 கோடி ரூபாய்- ஆகமொத்தம் 252½-கோடி ரூபாய்- யுத்தம் காரணமாக இந்தியாவுக்கேற்பட்ட செலவாகிய இந்தத் தொகையைக் கொண்டு இந்தியாவில் 18 ஆயிரம் மைல் தூரம் புதிதாய் ரயில்பாதை போடப்பட்டிருக்கலாம்- அல்லது லட்சத்து 56 ஆயிரம் சொச்சம் மைலுக்கு வாய்க்கால் மராமத்து செய்திருக்கலாம்- அல்லது 3872 தொழிற்சாலைகள் புதிதாய் ஸ்தாபித்திருக்கலாம்- ஏழைகளின் ஆடையில்லாத கஷ்டம்நீங்குமாறு 2,800 நெசவுச்சாலைகள் புதிதாய் ஏற்படுத்தியிருக்கலாம்- அல்லது 7,428 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளை ஏராளமான மூலதனத்துடன் ஒழுங்காய் நடைபெறச் செய்யலாமென்று ஓர் அர்த்த சாஸ்திர நிபுணர் 'பம்பாய் குரானிகல்' பத்திரிகையில் வெகு சாதுரியமாய் எடுத்துக் காட்டியிருப்பதாகச் சொல்லப்படுகிறது-

---

தி-வெ-பர்மசையப்ப ஆச்சாரி,
ஆபரணத்தொழில்
காப்பு செப்புக்கட்டை வியாபாரம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

---

காப்புக்கட்டை, கடையம்நம்பி முதலியவைகளை மொத்தமாக வாங்கி வியாபாரம் செய்பவர்களுக்கு விலை சகாயமாகக் கொடுக்கப்படும்.



### விஸ்வப்பிராம்மணப் பட்டம்.

சேலம் ஜில்லா கடத்தூர் சி-வரதாச்சாரியாரென்பவர் 1911ளு பிப்ரவரிமீ 25உயில் தஞ்சை ஜனனுகூலன் பத்திரிகையில் கம்மாளர்களை விஸ்வப் பிராம்மணர்கள் என்று சொல்வதற்கு சாஸ்திர புராணாதிகளில் ஏதேனும் ஆதாரமிருந்தால் அதுகளைத் தெரிந்துக்கொள்ள மஹாஜனங்கள் விரும்புகிறார்களென்று எழுதியதற்கு, தஞ்சாவூர் தெற்கு இராஜவீதி பிரம்மஸ்ரீ சா சுந்தராச்சாரியாரும், கும்பகோணம் பிரம்மஸ்ரீ த. கு. சுந்தராச்சாரியாரும் தக்க ஆதாரத்துடன் நீதியாக பதிலெழுதி ஷை ஜனனுகூலன் பத்திரிகையிலேயே வெளியிட்ட விஷயங்களை தற்காலம் புத்தகரூபமாக அச்சிட்டிருக்கிறது. இதன் விலை அணா 4

### விஸ்வகர்மானுஷ்டான வேதமஞ்சரி.

இதில் ஸ்நானம், விபூதிதாரணம், சந்தியாவந்தனம், புருஷ ஸூக்தம், ஸ்ரீ ஸூக்தம், மந்திரபுஷ்பம், தீபாராதனை மந்திரம், விக்னேஸ்வரபூஜை, புண்ணியாவாசன மந்திரம், ஆசீர்வசன மந்திரம், அபிவாதன முதலியவை தமிழெழுத்துகளிலெழுதி அச்சிடப்பட்டிருக்கின்றன. கோத்திர சூத்திர பிரவரையாதியவைகளைத் தெளிவாய் விளக்குஞ் சட்டமும் அடங்கியிருக்கிறது. விலை அணா 2,

மேற்படி தெலுங்கு பதிப்பு.

இதில் மேற்கூறியவற்றுடன் தந்திரவிபாகங்களும் விளக்கமாய்க் காட்டப்பட்டிருக்கின்றன. விலை அணா 6.

### சித்தூர் தீர்ப்பு.

இதை இதுபரியந்தம் நாம் அச்சிடவில்லை. கேட்பவர்கட்கு வெளியிலிருந்து வாங்கி அனுப்பிவந்திருந்தோம் அது நல்ல கடிதமாகயிராது இப்பொழுது அதை நமது அச்சுக்கூடத்தில் நல்ல கடிதத்தில் நல்ல சயிசில் அச்சிட்டு தயாராய்விட்டது. இதன் விலை அணா 6.

### விஸ்வகுரு சதகம்.

பெருநகர் பிரம்மஸ்ரீ உபயகவி கந்தப்பாச்சாரியார் புத்திரர் பிரம்மஸ்ரீ ஷண்முகாச்சாரியார் அருளிய செய்யுட்களும் காவாந்தண்டலம் சபாபதி ஆச்சாரி புத்திரர் நடேஸ்வர ஆச்சாரியாரால் இயற்றப்பட்ட உரையும் அனேக இதிகாச புராணங்களிலிருந்து மேற்கோள்களாக எடுத்தாளப்பட்ட செய்யுட்களுங் கொண்டது. விஸ்வகர்ம சிருஷ்டி முதலியவும் இதில் செவ்வனே விளக்கிக்காட்டியிருக்கிறபடியால் இதை ஒவ்வொருவரும் கட்டாயம் வாங்கி வாசிக்கவேண்டுமென்று குறைந்த விலைக்குக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டது. விலை அணா 6.

### வேலூர் தீர்ப்பு

ஸ்ரீமத் விஸ்வப்பிரம்ம குலசிரேஷ்ட மகாபண்டிதப் பிரதாபரென்னும் பிரம்மஸ்ரீ மார்க்கசகாயாச்சாரியா ரவர்களுடைய புத்திரர் புதுக்கோட்டை பிரம்மஸ்ரீ வெங்கடசுப்பாச்சாரியார், சித்தூர் ஜில்லா ஆற்காடு தாலூக்கா திமிரியில் பஞ்சாங்கம்-கிருஷ்ணமாசாரியாரோடு செய்த வாக்குவாதமும், வேலூர் ஜாயிண்ட் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் செய்த தீர்மானமும் இதில் அடங்கி யிருக்கின்றன.

### விஸ்வேஸ்வரர் படம்.

இப்படம் 12—10 இஞ்சி அளவில் புகைப்படத்திற்கு சமானமாகிய விஸ்வேஸ்வரர்(பஞ்சமூர்த்தியின்) படம் வெகு அழகாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. விலை அணா 4.

மேற்படி அளவில் விஸ்வேஸ்வரர் யந்திரம் தேவநாகர அக்ஷரம் அடைத்து சுத்தமாய் செய்திருக்கிறது. விலை அணா 4.

மேற்கண்ட படங்கள் பூஜையில் வைத்து ஆராதிக்கக்கூடியது., ஒவ்வொருவரும் அவஸ்யம் வாங்கலாம்.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்,

விலாசம்:—"விஸ்வகர்மன் தொழில்"
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

## 1918ஞு அக்டோபர்மீ

| | ரூ | அ. |
|---|---|---|
| 2 பி-கலியாணசுந்தராச்சாரியார், புரசை | 1 | 0 |
| 2 பரங்கோட்டாச்சாரியார், தனுஷ்கோடி ... | I | 8 |
| 5 வே-வீரைய்யாச்சாரி, சிந்தாதிரிப்பேட்டை ... | I | 0 |
| 8 பி-சொக்கலிங்காச்சாரியார், முத்தியாலுபேட்டை ... | I | 0 |
| 9 தண்டரை-வேலாயுதாச்சாரி, புரசை | I | 0 |
| 11 கல்பாக்கம்-கன்னியப்ப ஆச்சாரி, சென்னை ... | 0 | .8 |
| 12 கொ-பஞ்சாக்ஷராச்சாரி, சேப்பாக்கம் | 0 | 12 |
| 16 வெங்கடாஜல ஆச்சாரி, சேப்பாக்கம் | 1 | 0 |
| 18 ஆ சுந்தசாமி ஆச்சாரி, சேப்பாக்கம் | I | 0 |
| 19 எம்-வேலாயுதாச்சாரியார், சிந்தாதிரிபேட்டை ... | 3 | 0 |
| 21 எஸ்-ரத்தினசாமி ஆச்சாரி, பட்டுக்கோட்டை ... | 3 | 0 |
| 21 ஆ-சாமு ஆச்சாரியார், சிந்தாதிரிபேட்டை ... | I | o |
| 2I அருணகிரி ஆச்சாரி, சிந்தாதிரிபேட்டை ... | o | 8 |
| 2I பார்த்தசாரதி ஆச்சாரி, சென்னை ... | 1 | 0 |
| 27 டி-எஸ்-கோபால்சாமி பத்தர், கும்பகொணம் ... | 3 | 0 |
| 27 எ-எஸ் எ-நமசிவாயாச்சாரி, கும்பகோணம் ... | 3 | 0 |
| 27 எ-சரவணச்சாரி' செங்கல்பட்டு ... | 3 | 0 |
| 28 கே-ஆர்-ராமசாமி ஆச்சாரி கோவைபூர் ... | 1 | 8 |
| 28 A M.பழனியாச்சாரி, தூத்துகுடி... | 3 | 0 |
| 28 கண்ணுசாமி ஆச்சாரி, ஒதமங்தூர் | 3 | o |
| 29 குன்னத்தூர்-அப்பாதுரை ஆச்சாரி பள்ளிகொண்டா ... | 3 | 0 |
| 29 என்-கந்தசாமி ஆச்சாரி, திருக்கன்னபுரம் ... | 1 | 8 |
| 29 என்-சீனுவாசாச்சாரி, பாளையங்கோட்டை ... | 1 | 8 |
| 29 ராமலிங்க பத்தர், தூத்துக்குடி ... | 1 | 8 |
| 29 பி-முத்தையாச்சாரி, புபாளராஜகோட்டை ... | 3 | 0 |
| 29 ஆ-கேசவாச்சாரி, சென்னை ... | 1 | 0 |
| 3o பி சுப்ரமணியாச்சாரி, புளியாரை | I | 8 |
| 3o சிதம்பரபத்தர், மதுரை ... | 1 | 0 |
| 30 எ-பி-ரங்கைய பத்தர், திருப்பாபுலியூர் ... | 1 | 8 |
| 30 அருணஜலாச்சாரி, பெங்களூர் ... | 3 | 0 |
| 30 சி-ஆர்.சுப்பராயஆச்சாரி,கோயமுத்தூர் | 3 | 0 |
| 3o சுயினுச்சாரி, கொடகனல் ... | 3 | o |
| 30 எம்-ராஜு ஆச்சாரி, புதலூர ... | 1 | 8 |

## நவம்பர்மீ

| | ரூ | அ. |
|---|---|---|
| 1 எம். பெருமாளாச்சாரி, திருநெல்வேலி | 1 | 0 |
| I வேணுகோபாலாச்சாரி, ஆரணி ... | 3 | o |
| 4 அன்னதானமாச்சாரி, பெரியகோட்டை ... | 3 | 0 |
| 4 கே-பி-அருணஜல ஆச்சாரி, திருவண்ணமலை ... | 3 | 0 |
| 4 மா-சுந்தராச்சாரி, சேப்பாக்கம் ... | 1 | 0 |
| 5 பி-உமாபதி ஆச்சாரி, புரசை ... | 1 | 0 |
| 5 ராகுவண்ணச்சாரி, பெரியகோட்டை | 3 | o |
| 5 கே-சுப்ரமணியாச்சாரி, நாங்குநேரி... | 3 | o |
| 5 பழனிச்சாமி ஆச்சாரி, மார்க்கயன்கோட்டை ... | 3 | 0 |
| 6 கே-நாராயணசாமி ஆச்சாரி, கோம்பே ... | 3 | 0 |
| 6 பி. சாமிணதாச்சாரி, மரிதனக்குரிச்சி | 3 | o |
| 8 கல்பாக்கம்-கன்னியப்ப ஆச்சாரி, சென்னை ... | 0 | 4 |
| 8 கே-பி-முத்துசாமி ஆச்சாரி, மரகல்குரிச்சி ... | 3 | o |
| 8 துரைசாமி ஆச்சாரி, பாளையங்கோட்டை ... | 1 | 8 |
| 9 பி-கே-சுங்கராச்சாரி, மைசூர் ... | 3 | 0 |
| 9 அனஞ்சபெருமாளாச்சாரி, நெடுமாங்காடு ... | 1 | 8 |
| 11 முத்துகிருஷ்ணமாச்சாரி, திருக்காட்டுப்பள்ளி ... | 3 | 0 |
| 12 கா-திருவேங்கடாச்சாரி, முத்தியாலுபேட்டை ... | 1 | 0 |
| I2 சாம்பசிவ ஆச்சாரி, அடைக்கம்பட்டி | 3 | 0 |
| 13 எ-பெரமாச்சாரி, இன்டூர் ... | 3 | o |
| I4 எஸ்-சுப்பண்ணச்சாரி, நாசிங்கநல்லூர் | 1 | o |
| I4 ஆர்-உலகனுதாச்சாரி, திருக்காட்டுப்பள்ளி ... | 3 | 0 |
| 15 ஆ-பலவேசமாச்சாரி செம்பம்பூதூர் | 1 | 0 |
| 16 K T. கந்தய்யா சிலோன் | 1 | 8 |

OFFICE OF THE ... 22 NOV 1918 MADRAS.

உ
ஸ்ரீமத் விராட் விஸ்வகர்மணே நம-

# விஸ்வகர்மன்-தொழில்.

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள
சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதப்பத்திரிகை.

சம்-5] காளயுக்திஞு கார்த்திகைமீ 1918ஞு நவம்பர்மீ [சஞ்-11

### சஷ்டிபூர்த்தி.

நமது குலப்பெருமணியாகிய நாகர் கோவில் ஜோஸியர் ஸ்ரீ அ. முத்து ஆச்சாரியா ரவர்களுடைய சஷ்டிபூர்த்திமகோற்சவம் இம்மாதம் கொண்டாடப்பட்டதாயறிந்து மிக மகிழ்கின்றோம். இவருக்கு சர்வேஸ்வரன் தீர்க்காயுளாதி சகல பாக்கியங்களும் சம்பூரணமாய் அருளிச் செய்வாராக. இவர் நமது குலத்திலுற்பவிக்கப்பெற்றதனுற் பெறவேண்டிய சகாய முழுவதும் நமது குலம் இன்னும் பெற்றதில்லையென்பது விசனத்திற்கிடமேயாயினும், இவர் ஏற்கனவே பல நூல்கள் செய்திருக்கின்றாரென்பதும், அவற்றுட் சிலவற்றைச் சபை மூலமாக வெளியிட இசைந்தருளியுள்ளா ரென்பது மறிய நண்பர்கள் உண்மகிழ்ச்சி யடைவது திண்ணமே. இந்நூல்களைச் சமீபகாலத்திலேயே இவர்களிடமிருந்து பெற்று அச்சிடமுடியுமென்று நம்புகிறோம். திருநெல்வேலி விஸ்வகர்ம சன்மார்க்க சபையார் விருப்பத்தின்படி குலநலத்தைப் பாதுகாத்தற்கத்தியாவசியமாய் வேண்டப்படும் நூல்களை இப்பண்டித சிரேஷ்டர் விரைவிலெழுதியளித்து என்றுமழியாப் புகழுடம்படைவரென்பதே எமது பிரார்த்தனை. இதை நிறைவேற்ற இவர்கள் கொஞ்சமும் தாமதியார்களென்று யாம் நன்கறிந்துளோம். ஆயினும், சிலமாதங்களுக்குமுன் இவர்களுக்குத் தொடர்ச்சியாய்ப் பல இன்னல்கள் குடும்ப சம்பந்தமாய் நேரிட்டன. இவை எவருள்ளத்தையும் கலங்கச்செய்யும் விபரீத அளவினவா யிருந்தன. ஜோஸ்ய ஸ்வாமிகள் கலங்காத நெஞ்சுடைய ஞானதீரானபடியால் சிவன் செயலாலே யாதும் வருமெனத்தேர்ந்து சிந்தை கலங்காதிருந்து வருகின்றனர். ஷை சம்பவங்களினாலேதான் இவர்களுடைய அரிய விஷயதானம் சில மாதங்களாக நமக்குக் கிடைக்காதிருந்தது. இனி அதுபெற்று நமது வாசகர்களுக்கு நல்விருந்தளிக்க முடியுமென்று நம்புகிறோம்.

* * *

### பண்டாரச் சாப்பாடு.

“இதுபற்றி” ஒருவிதமாக முன்னொரு சஞ்சிகையில் எழுதப்பட்டிருந்தது. பண்டாரங்களுக்கு நம்மவர் சாப்பாடு போடுவதைப்பார்க்கிலும் நமது குல வித்தியார்த்திகளுக்குப் போடுவது சிலாக்கியமென்று அதில் குறிப்பிட்டிருந்தது. இதை எத்தனை வாசகர்கள் கவனித்தார்களென்று சொல்ல முடியாது. விஷய முக்கியத்தை அவர்கள் நன்றாய் அறியும்படி சில வரிகள் எழுதுகின்றேன். பண்டாரங்களுக்கு நம்மவர்கள் சாப்பாடு போடவே கூடாது. இந்த பழக்கம் மிக இழிவானது. நம்மைச் சூத்திர வர்க்கத்தில் மற்ற ஜாதியார் சேர்த்துப் பேசுவதற்கு இந்தப் பழக்கம் ஒரு

முக்கியகாரணம். பண்டாரங்கள் என்போர் யார்? அவர்களுக்கேன் நாம் சாப்பாடுபோடவேண்டும்?—என்பதைச் சற்று யோசித்துப் பார்த்தால் இந்தப் பழக்கத்தின் தாழ்வு எவருக்கும் விளங்கும். பிராம்மண ஜாதியார் இக்கீழோர்க்கு அன்னமிடுதல் சிலாகிக்கத் தக்கதல்ல. ஏழைகளுக்கென அன்னமிடுதல் வேறுவிஷயமாகும்; அதைப்பற்றி நான் ஒன்றும் இங்கு சொல்லவந்தேனில்லை. பண்டாரங்களென்னும் சாமானியரை யழைத்து விசேஷ நாட்களில் அவர்களுக்கு அன்னமிடும் பழக்கத்தையே பழிக்கவந்தேன். கீழ்ச்சாதியர் இங்ஙனஞ் சொல்வதுபற்றி ஆக்ஷேப மொன்றும் நான் சொல்லவில்லை. அவர்கள் சகவாச தோஷத்தால் நம்மவர்களும் அவர்களைப்போல் கிருத்திகா நக்ஷத்திரத்திலோ சிரார்த்த காலங்களிலோ மற்றும் இது போன்ற காலங்களிலோ பண்டாரங்களுக்குச் சாப்பாடு போடுவது நமது ஜாதிக்கு ஒவ்வாத துர்க்காரியமென்றே சொல்லவந்தேன். இப்படிச் செய்வோரிற் சிலர் இந்நீசப்பண்டாரங்கள் உண்ட சேஷான்னத்தைத் தாங்களுண்டு மகிழ்கிறார்கள். இது மிகவுங் கேவலம். சூத்திர சகவாசத்தால் நேரிட்டு நாளடைவில் விஸ்தாரப்பட்டுவரும் இப்புன்வழக்கத்தையுடையார் உடனே போக்கிக்கொள்ளவேண்டும். பிறர் இவ்வழக்கங் கொள்ளாது தடுக்கவேண்டும். இந்தப் பழக்கங்கொண்டிருப்போரெவராயினும் தாம் பிராம்மண ஜாதியாரென்று சொல்லவே முடியாது. ஜாதிக்கு விலக்கான இந்தக் கேவல பழக்கத்தில் செலவாகும் பொருளை விஸ்வகர்ம வித்தியார்த்திகளுடைய போஜன சௌகரியத்திற்கு விநியோகிக்கலா மென்பது மிகவும் சிலாக்கியமான யோசனை. அந்தப் பழக்கம் எவ்வளவு சிறுமையை யுண்டாக்குகிறதோ அவ்வளவுக் கதிகமான பெருமையை இந்த விநியோகம் தரும். பெருமைமட்டுமா? குலத்திற்கு மிகவும் நன்மையை யுண்டுபண்ணும்; குலவித்தையைப் பெருக்கும். ஏழைகளுக்கு ஊன்றுகோலா யிருக்கும். ஆதரவில்லாது கல்வியை யகற்ற நேரிடுவோர் தைரியமாய்க் கற்றுவரப் பெருந்துணையாகும். ஆதலால், துர்ப்பழக்கத்தை விட்டு நம்மவர்கள் நற்பழக்கங்கொள்வார்களாக. பண்டாரச் சாப்பாட்டுக்கென எடுத்துவைக்கும் பணத்தைச் *சபையார்க்கனுப்பி விஸ்வகர்ம வித்தியார்த்திகளுடைய போஜனத்திற்காக விநியோகிக்கச் செய்வார்களாக—என்றெழுதுகிறார் இங்கிலீஷ்கற்ற நிருபரொருவர்.

* * *

நமது யாழ்ப்பாண நிருபர் எழுதுகிறார்.— இலங்கையில் யாழ்ப்பாணத்தை யல்லாத வேறு பாகங்களில் வசிக்கும் சிங்களரில் சமயம் வேறாயிருந்தாலும் சாதி யபிமானமுள்ள கம்மாளர் அநேகமாயுளர். இவரில் ஆங்கிலங்கற்று உத்தியோகத்திலு மமர்ந்திருக்கிறார்கள். கொழும்பு நகரத்திலுள்ள ஹைகோர்ட்டில்இன்றைக்குஜட்சியாகவொருவர் இருக்கிறார். அவர் கத்தோலிக் கிறிஸ்மதத்தினர். அவருக்கு ஆசியாகண்டத்தில் இதன்முன் னொருவருக்குங் கொடுபடாத ஒரு பாரிஸ்டர் உரோமதேசத்துப் போப்பாண்டவரால் பெருஞ்சிபாரிசின்பேரில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கைற் கம்மாண்டர் அவ் தி ஆடர் அவ் சேன்ற் கிறகறி. என்பதே அந்தப்பட்டம். இந்தப்பட்டம் கொடுபட்ட அன்று கொழும்புப் பட்டணத்தில் அநேகமாயுள்ள அம்மதத்தாரால் பெருங் கொண்டாட்டங் கொண்டாடப்பட்டது.

* * *



## நமது ஜாதிக் குறைகள்.

“குற்றமுங் குறைகளு மற்று, முன்னாளில் விளங்கிய நமது குலத்தில் தற்காலங் காணப்படுங் குற்றங்கள் அனந்தமென்பதை யுரைக்கவுந் துக்கமுண்டாகின்றது. நமது முதற்குறை கல்வியில்லாமை. உலகத்து மிகவும் கொண்டாடப்பட்டிருப்பது கல்வியே. ‘கற்றோர் பெருமை கடலினும் பெரிது’—என்பது சாதாரணமாய் வழங்கப்பட்டுவரும் வசனமா யிருக்கின்றது. ‘கற்கைநன்றே கற்கைநன்றே பிச்சைபுகினும் கற்கைநன்றே’ யென்னும் வாக்கியத்தினால், மனிதராய்ப் பிறந்தவர்கள் எப்பாடுபட்டாயினும் கற்கவேண்டியது அவசியம் என்பது தேற்படுகிறது. கற்றவனுக்குத்தான் உலகத்தில் எல்லா உரிமைகளுமுண்டு. கல்லாதவன் மிருகராசியிற் சேர்க்கப்படுவானேயல்லாமல், மனிதனாக மதிக்கப்படமாட்டான். ஆகையினாலேதான்,

“விலங்கொடுமக்களனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனையவர்”—என்றார்

பொய்யாமொழியார். ‘கல்லாவொருவன் குலநலம் பேசுதல் நெல்லினுட்பிறந்த பதராகும்மே” யென்று சிறுபிள்ளைகள் படிக்கும் பாடத்திலும் சொல்லியிருக்கிறது. என்றால், கல்வியறிவில்லாதவர்கள் ‘என்குலம் இப்படி அப்படி’ யென்று பேசுவது அவலமும் கேவலமும் என்பதை ஒருவர் எடுத்துக்காட்டவும் வேண்டுமா!

‘நாற்பாற் குலத்து மேற்பா லொருவன் கற்றிலனாயின் கீழிருப்பவனே’ யாதலால் கல்லாதவன் எவ்வளவு உயர்ந்த குலத்திற் பிறந்தவனானாலும் அவன் மனிதப்பிராணிகளெல்லோரிலும் கீழ்ப்பட்டவனே யாவான். அப்படிப்பட்ட குலப்பெருமை பேசுவதினா லுண்டாகும் லாபமென்னோ? ‘மேற்பிறந்தாராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங் கற்றாரனைத்திலர்பாடு’. கல்லாதமேற்குலத்தானைவிடக் கற்றுள்ள கீழ்க்குலத்தானே மேலானவன் என்றுஞ் சாஸ்திரங் கூறுகின்றது. ‘குலனுங் குடிமையும் கல்லாமைக்கீழ்ச்சாம்’ என்றார் நான்மணிக்கடிகையாரும். ஆகையால், ‘கற்றவர்கள்’ என்னும் கௌரவ நிலைக்கு வருமளவும் நமது ஜாதிப்பேதையர் குலநலம் பேசாதிருப்பார்களாக. குலநலம் பேசும் யோக்கியதை இவ்விலங்குகளுக்கேது?

‘எண் இல்லாதவன் கண் இல்லாதவன் எழுத்தில்லாதவன் கழுத்தில்லாதவன்’ என்ற பழமொழியேனுங் கேட்டதில்லையா?

‘எண்ணும் எழுத்துங் கண்ணெனத்தகும்’

“கண்ணுடைய ரென்பவர்கற்றோர் முகத்திரண்டு, புண்ணுடையர் கல்லாதவர்”

கல்விகல்லாதவர் குருடர்; அவர்களுக்கு யாதொரு அறிவுஞ் செயலுங்கிடையாது. அவர்கள் உலக காரியங்கள் ஒவ்வொன்றிற்கும் மற்றவர்களை எதிர்பார்க்கவேண்டியவரா யிருக்கின்றனர். குருடனைக் கண்ணுள்ளோ னொருவன் கைப்பற்றி இங்குமங்கும் இழுத்துச்சென்றாலொழிய அவன் இருந்தவிடம் விட்டுப் பெயரமுடியாது. பெயர்ந்தானேல், சுவரில் முட்டிக்கொள்ளுவான்; தூணில்போய் மோதிக்கொள்ளுவான்; சாக்கடையில் தத்திவிழுவான்; கல்லிடறி விழுந்து காலொடியான் விவகார உலகத்தில் கல்லாதவன் கதி யிதுவே. அது அப்படி; இது இப்படி யென்று பேசும் யோக்கியதை அவனுக்குக் கிடையாது; அவன் எது கண்டான்?

யானையைப் பார்க்கவேண்டுமென்று நான்கு குருடர்கள் விரும்பினார்கள்: கண்ணுளான் அவர்களையழைத்துப்போய் ஓர் யானையினண்டையில் விட்டான். அவன் நான்குபேர்களையும் ஓரிடத்தில் விடாமல் ஒருவனைத் தும்பிக்கையிடமும், மற்றொருவனைக் காதினருகிலும் பின்னொருவனைக் காலின் சமீபத்திலும் பிறிதொருவனை வாலண்டையிலும் விட்டான். அந்தக் குருடர்கள் நால்வரும் தங்கள் கைபட்டதைத் தடவிப்பார்த்து தனித்தனியே யானை உலக்கைபோலும், முறம்போலும், உரல்போலும், துடப்பம்போலும் உளதென உளறிவழிந்தார்கள். கண்ணுளான் அவர்களெல்லோருக்கும் ஒருறுப்பையே காட்டியிருப்பானால் அவர்கள் எல்லாம் அதுபோன்றிருந்ததென்றே சொல்லுவார்கள். ஆதலால், காட்டியவன் தயவுக்கேற்றபடிக் குருடர்கள் கண்டார்கள். கல்லாக் குருடன் கதியுமிதுவேயாகும்.

குருடன் குழந்தை யிறந்த கதையையும் இங்கு வருவித்து ஆராய்தல் நன்று. பிறவிக்குருடனொருவனுடைய குழந்தைக்குப் பாலூற்றும்போது, பால் புறக்கேறியதால் அக்குழந்தை மாண்டுபோயிற்று. அதைச் சொல்லக்கேட்ட குருடன் 'பால் ஊற்றும் போதா குழந்தை யிறந்தது? ஐயோ!. பால் என்பது எப்படியிருக்கும்?' என்று கேட்டான். 'கொக்குப்போலிருக்கும்' என்றார்கள். அதை ஞாபகத்திலேயே வைத்துக்கொண்டிருந்து ஒருநாள் தன்னை நெருங்கி வந்தானொருவனைக் 'கொக்கு எதுபோலிருக்கும்?—என்று கேட்டான். 'இதுபோலிருக்கும்' என்று அவன் தன் கையை வளைத்துக்கொண்டுபோய்க் குருடனுக்குக் காட்டினான். அவ்வளைந்த கையைத் தடவிப்பார்த்து, 'அப்பா!' என்று பெருமூச்செறிந்து 'இவ்வளவு பெரியதைக் கைக்குழந்தை எப்படி குடிக்கும்! இதைக் கொடுத்துக்கொல்லலாமா?' என்று வருந்தினனும். இப்படியே கல்லாக் குருடர்களும் மற்றவர்கள் எது சொன்னாலும் எப்படிச் சொன்னாலும் நம்பவேண்டியதாயிருக்கிறது. மற்றவர்களிடம் மேற்சொன்னபடி அறைகுறையாகவும், தப்புத்தாறுமாகவுங் கேட்டறிந்தவற்றைக்கொண்டு கல்விக் கண்ணில்லா அந்தகர் பேசினால் அக்கண்களுடைய அறிஞர் கேட்டு நகைக்கமாட்டார்களா?

இருவிழிகள் வான்முகத்தி லிருந்தாலும்
வானிரவி யெழுந்தா லன்றிக்
கருதுமிலப் பல்பொருளுங் காண்டலரி
தாமுலகிற் கண்போல் யாரும்
பெருகியசெல் வமுமறிவும் பெற்றாலு
நாற்கேள்வி பெறுவார்க் கன்றித்
திருவளர்புண் ணியபாவ மிம்மைமறு
மையும்வீடுந் தெரியா வன்றே

என்ற திருக்குற்றலப் புராண வாக்கியம் பொய்யா? இரண்டு கண்கள் முகத்திலிருந்தாலும், சூரியன் புறப்பட்டாலொழியச் சுற்றிலுமுள்ளவைகள் அக்கண்களுக்குப் புலப்படமாட்டா. அதுபோல் மிக்க செல்வமும் புத்தியும் இருந்தபோதிலும் நாற்கேள்வி பெறுகின்றவர்களுக் கல்லாமல், புண்ணியபாவம் இம்மை மறுமை வீடு என்பன தெரியமாட்டா. இவை தெரிய வழியில்லாவிட்டால் ஒருவன் உலகத்தில் ஏன் ஜீவித்திருக்கவேண்டுமோ! ஆடுகளும், மாடுகளும், கழுதைகளும் உள்ளவரையில் வயிறுவளர்த்துச் சாகின்றன. மனிதர்களும் அப்படியேயாயின் அவைகளுக்கு இவர்கள் மேம்பட்டவாறேது?



இவர்களை மற்று என்னென்றுதான் சொல்லலாம்?

* கணக்கெழுத மாட்டான் கடிதம்
படித்தறியான்
பிணத்துருவ மென்கோ பெருமரந்
தானென்கோ
அந்தகனே யென்கோ அறிஞர்
புறக்கணிக்க
வந்தவனே யென்கோ லவகோசற்
சோதரர்காள்.

கல்லென்கோ மண்ணென்கோ
காசினிக்கொவ்வாத
புல்லென்கோ முள்ளென்கோ
புண்ணென்கோ சோதரர்காள்
இல்லிற் றிருளென்கோ எஞ்ஞான்று
மிந்நிலத்திற்
கல்லல் தரவந்த ஆபத்தே
யென்கோநான்.

கல்லாதவன் முகம் சுடுகாட்டுக்குச் சமானம் என்று உபதேசகாண்டஞ் சொல்லுகின்றது. உதாரணம்:—

சுற்றி லாய்கலை கற்றுணரார்முக
முற்றுநோக்கின் மயானத்தை யொக்குமால்
பெற்று ளார்பெறும் பேறுங் காதலர்
சொற்ற கல்வியிற் றாயதென் றோதலே.

நான்மணிக் கடிகையோவென்றால்,

மனைக்குப் பாழ் வாணுதலின்மை
தான்செல்லுந்
திசைக்குப்பாழ் நட்டோரை
யின்மை யிருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை
தனக்குப்பாழ்
கற்றறிவில்லா வுடம்பு—என்று இடித்துரைக்கின்றது.

தனக்குப்பாழ் கற்றறிவில்லாத உடம்பு. கற்றறிவில்லாத உடம்பு தனக்குப் பாழ். ஐயோ! அந்தப் பாழோடேயே காலந்தள்ளி எத்தனையோபேர் தாங்கள் பாழ்போவது மட்டுமல்லாமல் தங்கள் மனைவி மக்களையுங் குலத்தினரையும் பாழாக்குகின்றனரே! இவர்களுக்கு நல்லுணர்ச்சி உண்டாகும் காலெதுவோ? அந்த நாள் என்று வருமோ அறிகிலம்.

* அறம்பொருள் இன்பம் வீடும் பயக்கும்,
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்க
வலொன், ஞற்றுழியுங் கைகொடுக்குங் கல்
வியினூங்கில்லை, சிற்றுயிர்க் குற்ற துணை
—என்றபடி,

தருமம், அர்த்தம், காமம், மோட்சம் என்னுஞ் சதுர்வித புருஷார்த்தங்களையுந் தருவதாய், நல்ல கீர்த்தி யுண்டாக்குவிப்பதாய்த், துன்பம் வந்தகாலத்து அதைக் கடப்பதற்கோர் ஊன்றுகோலா யிருப்பதாகிய கல்வியினும சின்னாட் பல்பிணியுடைய மானிடர்க்குத் துணையாயிருக்கக்கூடிய மேன்மையுடையது வேறொன்றுமில்லையே! அவ்வளவு அருமை பெருமைகளுடைய கல்வியிலேனோ நம்மவர் கவனஞ் செலுத்துகின்றாரில்லை?

பிள்ளையைப்பெற்ற தகப்பன் ஒவ்வொருவனும் அப்பிள்ளை உலகத்தில் முற்பட்டிருக்கச் செய்யவேண்டியது அவனுடைய கடமையாகும். இதற்குத்

"தந்தை மகற்காற்று முதவி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்".—

என்னுங் குறளே சாட்சி. அப்படிச் செய்வதற்கு ஒவ்வொருவரும் பிரயாசைப்ப

* விஸ்வகர்மோபதேச வீரகண்டாமணி,

* நீதிநெறி விளக்கம்.

டவேண்டும். இதற்காக மற்றவர் உதவி தேடவும் வேண்டும். அப்படித் தேடுவதினால் தாழ்வொன்றுமில்லை. இப்பரமோத்கிருஷ்ட காரியத்திற்கு எல்லோரும் உதவி செய்யவேண்டும். இதற்காக யாதொரு கவலையும் எடுத்துக்கொள்ளாமலே தங்கள்பிள்ளைகளைக் கெடுப்போர் மகாபாபிகளே யாவர். அவர்கள் தமது மக்களுக்குத் துரோகஞ் செய்தவர்கள். இன்னுந் தங்கள் குலப்பெருமையைக் கெடுத்த கோடரிக்காம்புகளென்றுங் கூறலாம். அப்படிப்பட்டவர்கள் புத்திரர்களைப்பெற்றதின்பயனைப் புண்ணியமடைதற்குப் பதிலாக, அப்புத்திரர்களுக்குத் தாங்கள் செய்யுந் துரோகத்தினாலும், கல்விநலம் பெறாத தமது மூடப் புத்திரர்கள் செய்யும் பாபகிருத்தியங்களினாலும், தாம் கொடும்பாவத்தைத் தேடிக்கொண்டவர்களாகின்றனர். இவர்கள் பிள்ளைகளைப் பெறுவதைவிடப் பெறாதிருப்பதே நலம். ஏனெனில், அப்போது இப்பெரும்பாவம் இவர்களைச் சாராமலிருப்பதோடு, அம்மூட மக்களால் குலத்தினர்க்கீனம் நேராமலுமிருக்குமல்லவா?

நம்மவர்களிற் பெரும்பாலார் கல்வியின் சிறப்பை யறியாதவர்களாகவே யிருக்கின்றனர். 'படிப்பதனாற் பயனென்ன? உத்தியோகஞ் செய்வதாயினன்றோ படிக்கவேண்டும்' என்ற அபிப்பிராயமே அனேகருக்கிருக்கிறது. உத்தியோகப் படிப்பு ஒன்று, லௌகிகப்படிப்பு வேறு. உலகமென்னுங் கடலை நீந்துவதற்குக் கல்வியே புணையாகும். உலகமென்னும் வீட்டிலிருக்கும் பொருள்களைக் காண்பதற்குக் கல்வியே விளக்காகும். இவ்விளக்கில்லாதவன் இருட்டறையிற் கிடந்து இடர்ப்படுவோனே யாவான். உலக வாழ்க்கைக்குக் கல்வி இன்றியமையாதது. அடக்கமுடைமை, அருளுடைமை, ஒழுக்கமுடைமை, பண்புடைமை, பொறையுடைமை யாதிய குணங்கள் ஒவ்வொருமனிதனுக்கும் இருக்கவேண்டும். கல்வியே இக்குணங்களை யொருவனிடத்து உண்டாக்குவதாயின் அக்கல்வியைக் கைவிட்டிருக்கலாமா? 'கல்வியைக் கைவிடலாகாது. கல்விகல்லாமையைக்கைவிட்டொழிக்கவேண்டும். இதுவே விநாயக புராணத்து,

உடல்வயத் தாகுஞ்சாதி யுயர்ந்தவர்
    சாதி தாழ்ந்தோர்
திடமுற வுயிரினோடு செல்லுறுங்
    கல்விதம்மா
லடர்தரும் பெருமை யெய்தா ராதலா
    லகக்கண்ணுறுத்
தொடர்புறுங் கல்விகல்லாத் தொழிலினை
    விடவேவேண்டும்

என்னுஞ் செய்யுட் கருத்துமாகும். கல்வி கல்லாத் தொழிலினை விடவேண்டும். அதை விட்டால்தான் நாம் சீர்படுவோம். அதை விடாதிருக்குமளவும் நமக்கு யாதொரு சற்குணமும் அமையாது, பொருள் கிடையாது, புண்ணியம் கூடாது. ஆகலால், 'கல்வியின் பெருமையை யறிந்து நம்மவர்கள் நடப்பாராக. கல்லாரை இகழ்ந்துரைத்து அவர்கள் கல்வியில் நாட்டம் வைத்துப் பாடுபடச் செய்வாராக.

(இன்னும் வரும்)

இராமசுஜர் சரித்திரம் பக்கம் 118-முதல் 128.

---

விஸ்வேஸ்வர பகவான் கீர்த்தனை.

இக்கீர்த்தனை பஜனை செய்பவர்களுக்கும் பாராயணஞ் செய்பவர்களுக்கும் தகுதியானது. விலை அணு 2.

விலாசம்:—"விஸ்வகர்மன் தொழில்"
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.



## விஸ்வகர்ம தொழிற்சாலை.

நமது சகோதரர்களுடைய ஜாதியபிமானம் நாளுக்குநாள் குறைந்துவருவது போல் தோன்றுகிறது. வரவர குலாபிமானச் செயல்கள் நம்முள் குறைவுபட்டுக்கொண்டு வருகின்றன. ஊக்கம் எங்கும் நம்மவருள் குறைவாய் விட்டதென்றே கூறவேண்டும். ஜாதிப்பேச்சும், ஜாதிமுயற்சிகளும் கூட்டங்களும் மிகக் குன்றி விட்டன. அபிமானிகளாக வார்த்தையாடிவரும் வழக்கங்கொண்டிருந்தவர்களும் அவ்வழக்கத்தைக் கைவிடலாயினர். இதற்குக்காரணம் யாதென்று விசாரிக்குங் காலத்து, ஜாதியாரிடத்தில் குலாபிமானம் காணப்படாமையால்தங்களபிமானங்குறைவுறலாயிற்றென்று கூறுகின்றார்கள், பாடுபட்டதுபோதும், பார்ப்போம் இனி நமது காரியம்—என்கிறார்கள். இவர்களைச் சீர்திருத்த ஈசனாலுமாகாதென்று இடிப்புடைந்து ஏங்குகிறார்கள். ஏதேதோ சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்வது உண்மையாயினு மாகட்டும் பொய்யாயினும் போகட்டும். இக்குலப்போக்கைக் கவனித்து வருகிறவர்கள் ஒன்றை ஒப்புக்கொள்வது நிச்சயம். அதாவது, முதலில் நான் தெரிவித்தபடி விஸ்வகர்ம ஜாதியார்க்குள் குலாபிமானம் குறைந்து வருகின்றதென்பது.

இதற்கொரு திருஷ்டாந்தங் காட்டுகிறேன். சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஸ்ரீ கௌத்தூர்- கன்னியப்ப ஆச்சாரியாரவர்களை நமது ஜாதியாரில் தென்னாட்டிலுள்ளவர்களெல்லாம் நன்றாய் அறிந்திருக்கிறார்கள். அவர் சுமார் 10-வருஷகாலமாய்ச் செய்துவரும் குலோபகார காரியங்கள் மற்றஜாதிச் சகோதரர்களுடைய வியப்பையும் அடைந்து வருகின்றன. சுயப்பெருமைக்காகவும் பெயர் விளங்கவேண்டுமென்றும் இதுபோன்ற அநுகூலங்களையெதிர்பார்த்தும் குலாபிமானஜாலங்காட்டுவோர்போலில்லாமல், இவர் தமது சொத்துக்களைப் பெரும்பாலுஞ் செலவிட்டு குலகாரிய முயற்சிகளால் நஷ்டமடைந்து புண்பட்டிருக்கிறார். இப்புண்ணியவானுடைய நோக்காடு எவ்வளவென்பதை இவர் ஜூலை மாதச் சஞ்சிகையில் எழுதிய கடிதத்தின் முடிவில் 119-வது பக்கத்தில் காணப்படும் வாக்கியங்களை வாசித்தால் வெளிப்படையாய்த் தெரிந்துகொள்ளலாம். அவருடைய குல உழைப்பின் அநுபவம் அங்கு தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும், கவனிப்பாரைக் காணோம். அவர் சொல்லுவதும் அதுவேதான். தன் சொத்துக்களையும் தன் குடும்பலக்ஷியத்தையும் தன் தேகவாஞ்சையையும் போக்கடித்துக் கொள்ளுதற்கும் துணிவுதந்த அளவுக்கு அபிமானங்கொண்டுழைத்த இம்மகாபுருஷர்க்கு இவ்வளவு வெறுப்பு காரணமின்றி யுண்டாயிருக்குமா? இராது. இந்த அநுபவமே மற்றஉழைப்பாளிகளுக்கும் நேர்ந்ததாகத் தெரிகிறது.

உதாரணமாக, விஸ்வகர்மத்தொழிற்சாலை விஷயத்தை யெடுத்துக் கொள்வோம். இதை ஸ்தாபிப்பதற்காகப் பல வருஷங்களாக எண்ணங்கொண்டும் அவ்வெண்ணத்தைப் பலருக்குத் தெரிவித்தும் வந்தவர், பிறரெவரும் இவ்விஷயத்தில் சிரத்தை கொள்ளாமலும் முயற்சிக்கமுன்வராமலும் காலதாமதஞ்செய்து கவனக்குறைவா யிருந்ததுபற்றித் தாமாகவே சென்ற 1917ஷ மார்ச்சு மாதத்தில் ஒரு விளம்பரத்தை

வெளியிட்டார். இது எங்கும் பிரசுரிக்கப்பட்டது. இவ்விளம்பரத்தைப் பலருக்குங் காட்டிச் சென்னையிலுழைத்ததின் பேரில் சுமார் ரூ. 1200-கையொப்பமாயிற்று. ஆயினுமென்ன? கையொப்பஞ் செய்தவர்களும் கவனக் குறைவாகவேயிருந்து விட்டனர். அவர்களாவது இத்தொழிற்சாலை விஷயம் என்னாயிற்று, எத்தனைபங்குகள்சேர்ந்தன, இன்னுமெத்தனை சேரவேண்டும், எப்பொழுது வேலையாரம்பிக்கலாம், என்னென்னவேலைகள் செய்யலாம், யாரைத்தலைவராக்கலாம், எவ்விதம் பரிபாலனஞ் செய்யலாம் என்று விசாரித்து, தொழிற்சாலை ஸ்தாபிப்பதற்காக முயன்றார்களோ வென்று விசாரித்தால் இல்லையெனத் தெரிகிறது.

இத்தொழிற்சாலை விஷயம் விஸ்வகர்ம ஜாதியாருக்கெல்லாம் உரியதேயல்லவா? இதில் யாவரேனும் பாடுபடலாமன்றோ? அல்லது, பாடுபடக்கூடியவர்களைத் தூண்டவாவது, உற்சாகமூட்டவாவது கூடாதா? பலபேர் ஒன்றுகூடி உழைத்தாலல்லவா குலப் பொதுக்காரியங்கள்கைகூடும்? இப்படிப்பட்ட காரியங்களிலெல்லாம் நமது குலத்திற்கு மிகவும் முக்கியமானதாயிற்றே தொழிற்சாலை விஷயம்! இது ஒவ்வொருவருடைய ஞாபகத்திலும் சதாகாலம் இருக்கவேண்டியதாயிற்றே. குலத்தாருள் பெருந்தொகையார்க்கு நித்தியப்படி அன்னந்தருவது தொழிலாயிருக்கத் தொழிற்சாலைப் பிரயத்தனம் எப்படி நம்மவர்களுடைய ஞாபகத்திலிருந்து தவறக்கூடும்? என்றாலும், இவ்வளவு முக்கியமான விஷயத்தைப்பற்றி நம்மவர்கள் அசட்டையாகவேயிருக்கின்றார்கள். 20 மாதங்களுக்குமுன் எச்சரிக்கை செய்யப்பட்ட காரியம் இன்னும் ஆரம்பிக்கப்படாமலே கிடக்கிறதென்றால், விஸ்வகர்ம வகுப்பில் பிறந்து உலாவும் ஒவ்வொரு புருஷனும் வெட்கப்படவேண்டாமா? தொழிற்சம்பந்தமே தினையளவுமில்லாத பேர்களெல்லாம் தொழில்களைப்பற்றிய கவனமே பெரிது முடையவர்களாய் இன்று எண்ணி நாளை ஸ்தாபித்துவிடுகிறார்கள். இப்படி ஸ்தாபிதமுற்ற பல சாலைகள் நமது கண்ணெதிரிலிருந்தும் நாமென்றுமொரே அசட்டையாய் இருந்துவருகின்றோம்.

இவ்விஷயத்தை ஜாதியார் மறந்துவிடக்கூடாதென்னும் கருத்தால் நமதுபத்திரிகை இதைப்பற்றி அடிக்கடி ஞாபகமூட்டிக்கொண்டுவருகிறது. இவ்விதமே பல விஷயங்களைப்பற்றி மாதமாதம் தெரிவிக்கிறது. கவனிப்போரைக் காணேம். மற்ற விஷயங்களைக் கவனியாது விட்டாலும் விடட்டும். நான் அவைகளைப்பற்றி அவ்வளவு துக்கப்படவில்லை. ஜீவனாதாரமாயிருக்கும் இந்தவிஷயத்தையுமா அசட்டைசெய்யவேண்டும்? நாம் பிறந்தது தொழிலில், வளர்ந்தது தொழிலில், வாழ்வது தொழிலில். நமது தேகம் தொழிலாலாகியது. தொழிலே நமக்கு ஜீவன், தொழிலே ஜீவனோபாயம். தொழிலை விடுதல் ஜீவனை விடுதலேயாகும். தொழிலன்றி துணையெனப் பூவுலகில் புகலொன்றில்லை. நமக்குமட்டுமல்ல, நமது சந்ததியார்க்கெல்லாம் அப்படியே; நமது புத்திர பௌத்திர பாரம்பரியத்திற்கெல்லாம் அப்படியே. தொழிலாலேதான் நாம் பூர்வத்தில் சிறப்புற்றோம். தொழிலினாலேயே பிற்காலத்திலும் இக்காலத்திலுஞ் சிறப்படையவேண்டும். தொழிற்காகவேதான் பிறர் நம்மைத் தேடுகிறார்கள். தொழிலினாலேயே சிறுமைநமக்குண்டாயிருக்கிறது. தொழிலினால்தான் சிறுமை மாற்றிப் பெருமையடையவேண்டும்.



இப்படி நமதுயிர்க்குயிராயும் உடலுக்குடலாயுமுள்ள தொழில்களைச் செய்தற்கொரு சாலையை ஸ்தாபிக்கவேண்டுமென்று நமக்கொருவர் சொல்லவேண்டுமா? சொல்லுமட்டும் நாம் காத்திருத்தல் தகுதியா? சொன்னபிறகும் சும்மாவிருத்தல் யோக்கியமா? யார் அக்கரை யிது? நம் ஒவ்வொருவருடைய சொந்த அக்கரையாயிற்றே; நமது மக்களை, நமது குடும்பத்தை, நமது சுற்றத்தை, நமது குலத்தை, நமது நாட்டைச்சார்ந்த அக்கரையல்லவோ இது? ஒவ்வொருவரும் தமது சொந்தக் காரியமாகவல்லவோ, இதில் கவனஞ் செலுத்தவேண்டும். இதில் யாரை யார் தூண்டுவதென்று பிரித்துக்காட்ட முடியுமோ? ஒவ்வொருவரும் முயலவேண்டும். ஒருவர் அசட்டைகாட்டினாலும் பராமுகமாயிருந்தாலும் அவர்களைக்காண்போர் அவ்வழிசேராமல் நல்வழியில் நின்று நாளும் முயற்சிசெய்து எடுத்த காரியத்தை ஈடேற்றிவிட்டுத்தான் உட்காருவோம் என்று வைராக்கியம் பூண்டுழைக்கவேண்டும். தங்கள் அபிப்பிராயங்களைப் பத்திரிகைக் கெழுதவேண்டும்; தாமாக எழுதமுடியாவிட்டால் எழுதக்கூடியவர்களிடம் அவற்றைத்தெரிவித்து எழுதுவித்தனுப்பவேண்டும். குறிப்புகள் தந்தால் பத்திரிகாசிரியரே எழுதிவிடக்கூடும். பங்குகள் சேர்க்கவேண்டும். இனியேனும், காலதாமதமில்லாமல் நமது வாசகர்களாவது முயல்வார்களென்று எதிர்பார்க்கிறேன்.

தொழிலறியான்

## சிருஷ்டி.

இவ்வுலகம் ஜலப்பிரளயமாகி மறுபடியும் பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டு இவ்வுலகத்தை ஆளக்கூடிய மன்வாதி 14-பேர்களில் 6 மனுக்கள் ஆண்டு 7-வது மனுவாகிய வைவஸ்வத மனு காலமான சதுர்யுகாதிகளில் நிகழும் கலியுக பிரதம காலம் 5019 சென்று 5020-வது வருஷம் நடக்கிறது. சிருஷ்டியாதிகாலத்திலேயே தேவர்களால் சுருதி யென்னும் வேதங்களைச் சொல்லப்பட்டிருக்கிறதென்று மறைகற்ற பெரியோர்களால் முறையிடப்பட்டிருக்கின்றது. அவைகளில் பலவிடங்களில் பஞ்சபூத சிருஷ்டிகர்த்தாவை பரப்பிரஹ்ம சொரூபியென்றும், துவஷ்டாவென்றும், பரமேஸ்வரனென்றும், நாராயணனென்றும், விஸ்வகர்மாவென்றும் நவின்றுள்ளதைக் கற்றறிந்த பெரியோர்கள் முற்றிலும் அறியலாம். இவ்வாக்கியங்களைத் திராவிட வியாக்கியானிகள் விஸ்வகர்மாவை சில விடங்களில் தேவசிற்பி யென்றும், சில விடங்களில் தேவதச்சனென்றும் வரைந்துள்ளார்.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவான்மாக்களில் ஆன்மலாப உஜ்ஜீவ லோகரக்ஷாகார்த்த சிருஷ்டியாதி கர்மங்களின் பொருட்டு உற்பவித்த அயம், தாரு, தாம்பிர, சிலா, சுவர்ணம் முதலிய பஞ்சலோக சிருஷ்டிகர்த்தவ்யராய் ஜீவித்துவருகிற ஐந்து தொழிலாளிகளும் விஸ்வகர்ம வம்ச பாரம்பரை யென்றும் இவர்களே பூலோக சிருஷ்டிகர்த்தாவென்றும், பிராம்மணரென்றும் முறையிருக்கிறதாய் நமது மூதாதைகளால் அறிகிறோம்.

பஞ்சலோகங்களினால் சிருஷ்டித்துவருகிறவர்களால் உலகத்தில் மானிடர்களுக்கு

ஜீவனார்த்ததின்பொருட்டு நிகழும்ஒவ்வொரு ஜாதியார்களுக்கும் ஒவ்வொரு ஜீவனத்தைக் கற்பித்தும் அவர்களைத் தாம் தாமே ஜீவனஞ் செய்துகொள்ளும்படியும் அவரவர்களுக்கு வேண்டிய ஆயுதங்களையும் கொடுத்து அவ்வாயுதங்களில் செய்யும் தொழில்யாவையோ அவைகளுக்குத் தக்க ஜாதியின் பெயரை வகித்து வந்திருப்பதினால் சர்வஜனங்களும் இவர்களை தங்களுக்கு குருவாகப் பாவித்து யாவத் ஜனங்களின் வாயிலாய் சிறுகுழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ''ஆச்சாரி''யரென்று அழைக்கப்படுகின்ற வழக்கம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

துவஷ்டா வென்பவர் தேவலோகத்தில் தேவர்களுக்கும்ரிஷீஸ்வரர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் பல காரணங்களினல் தேவ குருவாக இருந்திருக்கிறு ரென்றும் சுருதி மூலமாய் அறியலாம்.

இத்தியாதி காரணங்களினல்தான் இவர்கள் நிராக்ஷேபனையான ஆச்சாரியரென்றும், ஜெகத்குருவென்றும் அழைக்கப்படுகின்றனரென்றும் சொல்வதற்கு எட்டுணையும் ஐயப்பாடில்லை.

சில காரணங்களினல் ஆச்சாரியரென்றும், சில காரணங்களினல் கம்மாளர், கன்னளர், பாஞ்சாலர் என்றும் அழைக்கப்படும் இஜ்ஜாதியார்களின் நிலைமை, நடையுடைபாவனை, ஆசார முதலானவைகள், எவ்வாறிருந்து எவ்விதம் நடந்து எங்ஙனம் அநுஷ்டானத்தி லிருந்துகொண்டிருக்கின்றதென்பதை சிலர் தெரிந்தும் பலர் தெரியாது மிருந்துகொண்டு தம் தம் ஜாதியபிமானத்தையும் ஜீவனேபாய முயற்சியையுமே பிராம்மணத்துவ மென்னும் பெரும் பெயரையுடைய பாத்தியதையையும் குன்றச்செய்து பிறரால் தூஷிக்கப்பட்டு மிருந்துகொண்டிருக்கிற இவர்களின் நெறி எவ்வாறுதான் முடிவுபெறுமென்று சொல்ல ஒரு காரணமும் புலப்படவில்லை.

பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நால்வரில் அவரவர்களின் ஜாதிக் குறிகளைக் காட்டும் அடையாளமான ஆடையுடையாபரணாதி நடையாசாராதிகள் தனித்தனியே இருந்துகொண்டிருக்கிறது. விஸ்வகர்ம வம்சமென்கிற இவர்களுக்கு எவ்வித உடை, எவ்வித ஆபரணம், எவ்வித திருமங்கலியம் இருந்தால் இவர்கள் பிராம்மணரென்று அழைக்கப்படுவர்?

தேசாசாரம், தெருவாசாரம், சேர்க்கையாசாரம் இவைகளால் பலஜாதிதேஜஸும் பலவுடையும், பலவித திருமங்கலியமும், பல சேர்க்கையோடுங்கூடிய பாஷியமும் காணப்பெறின் இவர்களை எந்த ஜாதியாராக அழைப்பதென்று பிற ஜாதியார்கள் திகைத்துக்கொண்டிருக்கும் அவர்களுக்கு எவ்வித உத்திரம் மொழிவதோ காணக் கூடவில்லை.

நாமே பிராம்மணர் நாமேஜெகத்சிருஷ்டிசெய்யும் பாத்தியதையுடைய விஸ்வகர்ம வம்சஸ்தர்கள், நாமே ஜெகத்குரு, நம்மாலேயே உலகவாழ்க்கை நடைபெற்று வருகின்றதென்று பல புஸ்தக மூலமாயும் பல உபந்நியாசங்கள் மூலமாயும் பிரஸ்தாபஞ் செய்வதோடு பல பெருங் கூட்டங்களில் ஒருவரோடொருவர் பாஷியஞ் செய்து கொண்டிருக்கும்போதும் உலகத்தில் நம்மைத் தவிர வேறு யார் சிருஷ்டிகர்த்தா இருக்கிறார்கள். நம்முடையபூர்வம் இன்னதாக்கும், அவர்கள்பூர்வம் இன்னதாக்கும் என்று பேசிக்கொண்டிருக்கும் . பாமரஜனங்களுடைய குணநிசயங்களை இங்கெடுத்துரைக்கவும் வேண்டுமோ!

'' ஏட்டுச் சுரைக்காய் கறிக்காகுமோ '' என்பதுபோல விஸ்வகர்மா வென்றும், பிராம்மணனென்றும் வாயினல் சொல்லிவிட்டமாத்திரத்தில் பிராமணத்துவம் வந்துவிட்டதா ?

எக்கர்மத்திற்கும் வேதமேஆதாரபூதம். பஞ்சலோக சிருஷ்டியே முதல்ஆதாரமாகவிருந்தபோதிலும், அப்பஞ்சலோக சிருஷ்டியுங்கூட வேத அர்ப்பணஞ் செய்துகொண்டு சிருஷ்டிக்க வேண்டுமென்று சுருதியும், சிற்ப வாக்கியங்களும் கூறுவதால் வேதமே முக்கிய ஆதாரமாக கூறவேண்டியதிருக்கிறது.

அவ்வேதங்கள் ஒவ்வொன்றிலும் கர்மகாண்டம், பக்திகாண்டம், ஞானகாண்டம் என மூன்று தொகுப்பு காணப்படுகிறது.

ஜர்தகர்மம் முதல் விவாகம், கர்ப்பாதானம், சீமந்தம் வரையிலுள்ள சோடச சர்மங்களும், சோமயாகம் விஸ்வ சித்யாகம் புத்ரகாமேஷ்டியாகம் முதலான பல யாகங்களும், கிரகபரிகார சர்வ சாந்திக் கிரியைகளும் கர்மகாண்டமாகும்.

தேவாலயபிரதிஷ்டை ஆலயம் கூபதடாகாதி பிரதிஷ்டை, தேவாராதனை முதலியவைகள் அடங்கியது பக்திகாண்டமாகும்.

ஆத்ம மோக்ஷார்த்தத்தின் பொருட்டு அனுஷ்டிக்கும் யோகம், ஞானம்முதலான உலக சிருஷ்டியாதிகளைச் சொல்லிவரும் பலகதைகளும் அடங்கியது ஞானகாண்டமாகும்.

வேதத்தில் சொல்லக்கூடிய எல்லா விஷயங்களையும் பொதுவாய் சர்வ ஜனங்களும் அனுஷ்டிக்க வேண்டியவைகளாயிருந்தும் தற்போது பாப்பார்களே கைக்கொண்டு அவைகளை மறைத்து வெளியிடாது வைத்துக்கொண் டிருக்கின்றனராயினும் இங்கிலீஷ்காரர் அரசாக்ஷியில் அவ்வாறில்லாது கொஞ்சம் கொஞ்சம் பலரும் வாசித்து அவைகளின் கருத்துகளை வெளியிடலாயினர். அவைகளில் பல விஷயங்கள் சொல்லியிருந்தாலும் முக்கிய விஷயங்களை மாத்திரம் சிலர் எடுத்து பாஷியஞ்செய்து இங்கிலீஷில் எழுதி புஸ்தகமாக வெளியிட்டிருக்கின்றனர். பல கருத்து பலவிதமாயிருந்தாலும் முக்கிய கருத்து யாதெனில் ''சந்தியாவந்தன''மேயாம். பிராமணகுலத்தில் உற்பவித்ததாய் வாதாடும் ஒவ்வொருவரும் தமது நித்திய கர்மானுஷ்டானங்களைக் கைவிடாது அனுஷ்டித்து வரவேண்டுமென்றும் அப்படிச் செய்யாவிடில் தோஷம் சொல்லப்பட்டிருக்கிறதென்றும் ஆன்றோர் வாக்கு.

1. ஸந்த்யாயே நாநவிக்ஞாதா
ஸந்த்யாயே நானுபாஸிதா
ஜீவமானே பவிவேச்சூத்ரோ
மிருதஸ்வானே பிஜாயதே.

(கோபிலர்)

சந்தி தெரியாதவனும், சந்தி செய்யாதவனும், ஜீவனேடிருக்கும் காலமெல்லாம் சூத்திரனுவானென்றும், செத்து நாயாய்ப் பிறப்பானென்றும் கோபிலர் சொன்னர்.

2. ஸந்த்யாஹீனே சுச்சுந்நித்திய
 மநர்ஹஸ்ஸர்வ கர்மசு
யதன்யத் குருதேகர்ம
 நதஸ்ய பலபாக்பவேத். (தக்ஷர்)

சந்தி ஆசரிக்காதவன் அசுத்தன்; அப்பேர்க்கொத்தவன் எல்லா கர்மங்களுக்கும் அயோக்கியன், அவன் எக்கர்மஞ்செய்தாலும் அக்கர்ம பலனை யடையமாட்டானென்று தக்ஷர் சொன்னார்.

3. அநாகதாந்து யஃபூர்வாம்
 ஸாதித்யாம்ச்சைவபஸ்ச்சிமாம்
நோபாசீததத்விஜஸ்ஸந்தியாம்
 ஸ்ஸர்வோப்ராஹ்மணஸ்ம்ருதஃ
த்வாதசாஹமனக்கினிஸ்து
 ஸந்த்யாகலாவிபர்யம்பஃ
படிதஸ்துசதுர்வேதைச்சூத்ர
 ஏவணஸம்சயஃ (சதாதாபர்)

(தா-ம்) முக்கியகாலத்தில் ஸந்தியாவந்தனம் செய்யாதவன் சம்பூர்ண பிராமணன் அல்லவென்றும் பன்னிரண்டுதினம் கிரமமாய் சந்தியாலோபஞ் செய்தவன் நான்கு வேதம் படித்தவனானாலும் சந்தேகமின்றி சூத்திரனேயென்றும் சதாதாபர் சொன்னார்.

இத்தியாதி வசனங்களினால் பிராமணரென்று அழைக்கப்பட்ட எவ்வகுப்பார்களும் ஸந்தியாவந்தனாதிகளை அநுஷ்டிக்காவிடில் பிராம்மண சப்தம் எங்ஙனமடைவது?

தொழில்தான் முக்யமேயல்லது ஸந்தியாவந்தனம் இவ்வம்சஸ்தர்களுக்கு இல்லையென்றாவது, எல்லாருக்கும் ஆச்சரியமாயிருக்கும் இவர்கள் எவ்வித கர்மமும் அநுஷ்டிக்கவேண்டியது அவசியமேயில்லையென்றாவது இதல்லாமல் வேறு இன்னவிதமான அநுஷ்டானம்தான் இவர்களுக்குண்டென்றாவது வாக்கிய ரீதியாய் தெரிவிக்கும்பக்ஷத்தில் அவ்வாக்கியத்தில் கண்டபடியே பின்பற்றியொழுகலாமென்று சர்வத்ராளும் சம்மதிக்கவேண்டியது அத்தியாவசியமன்றோ?

பல்லாண்டுகளாக இவ்வம்சஸ்தர்கள் பட்டா பத்திரம் வர்த்தமான கடிதம் பிரபந்தம், விளம்பரம், பத்திரிகை முதலானவைகளில் கம்மாளரென்றும், சிற்சில விதிதங்களில் சில ஆண்டுகளாக சுஜாதி வர்த்தமானங்களில் பஞ்ச பிரம்ம வம்சஸ்தர்களென்றும், விஸ்வபிரம்ம சந்ததியார் என்றும் எழுதியும் அவ்வாறு அழைக்கப்பட்டும் வந்திருக்கின்றனர். இதற்குமுன் அனேக அரசர் ஆண்டு இப்பொழுது அரசுபுரியும் நமது ஆங்கில அரசாக்ஷியில் ஒவ்வொரு ஜாதியாரின் வர்ணாஸ்ரம ஒழுங்குகளையும் அவர்களின் பூர்வங்களையும் எழுதவேண்டுமென்று கற்பித்த ராஜ ஆக்ஞை பிரகாரம் அனேக துரைமக்கள் அவ்வாறே எழுதப் புகுந்தனர் அவைகளில் சிலதில் இவர்களை விஸ்வகர்ம ஜாதியாரென்றும், சிலதில் விஸ்வகர்ம கர்மஜாதியென்று சொல்லிக்கொள்ளுகிறார்களென்றும், சிலதில் தொழிலாளிகளென்று அழைக்கக்கூடிய ஒருஜாதியாரென்றும், சிலதில் சூத்திரவர்க்கத்தோடு சேர்க்கப்பட்டிருக்கிறதாய்த் தெரிகிறதென்றும் எழுதி மற்ற ஜாதியார்களை அவரவர்களுக்கு ஏற்ற விதமாயும் நிகழும் பிராம்மணனை விப்ரனென்றும், பிராம்மணனென்றும், அந்தணரென்றும், மறையோரென்றும், துவிஜரென்றும் எழுதப்பட்டிருக்கிறது. சில இங்கிலீஷ் புஸ்தகத்தில் அனேக ஜாதியாருடைய ரூபம், உடை, ஆபரணம் இவைகளைப் படமாகக் காண்பித்தும், இன்னின்னதேசத்தில் இன்னின்ன விதமாக உடை நடையோடிருக்கிறார்களென்றும் ஸ்பஷ்டமாய்த் தெரிவாகிறது. ஒவ்வொருவருடைய ஜாதி விர்த்தாந்தங்களையும் தெளிவு செய்கிறார்கள். இங்கெடுத்துரைக்காது விடுத்த விப்ராள் செய்த அனேக தூஷணைகளையும் மற்ற சூத்திர ஜாதியார்கள் செய்த தூஷணைகளையும் பல புஸ்தக மூலமாயும் ஸ்மிருதி மூலமாயும் கண்டிருக்கலாம்.

இவ்வம்சஸ்தர்கள் எப்புஸ்தகங்களிலாவது நம்மவர்களாலேயோ ஏனையோர்களாலேயோ எழுதியிருக்கும் புகழ்ச்சியைமாத்திரம் ஸ்ரஹித்துக்கொண்டு கெம்பீரங்கொண்டவர்களா யிருப்பதே யல்லாமல் இகழப்பட்டிருக்கும்விஷயங்களை ஆராய்ச்சிசெய்து எதுகாரணங்கொண்டு இவ்வாறிகழப்பட்டிருக்கின்றனரென்று ஆராயாம லிருந்துகொண்டிருக்கும் இவர்களுக்கு எங்ஙனமெடுத்துரைப்பதென்று எனக்குச் சொல்ல சாத்தியப்படவில்லை

ஜனகணிதையில் இந்த ஜாதியாரை விஸ்வபிராம்மணரென்று எழுதவேண்டுமென்று அனேக வருஷங்களாக கவர்ன்மெண்டாரைக் கேட்டும் முடிவுபெறாமல் 1911ம் வருஷத்து ஜனகணிதையில் திருச்சி பிரம்மஸ்ரீ முத்துகிருஷ்ணாச்சாரியாரவர்களாலும் இன்னும் சில குலாபிமானிகளாலும் செய்துவந்த பெருமுயற்சியினாலும் விஸ்வபிராம்மணரென்று சொல்லும் அந்த ஜாதியார் அவர்கள் சொல்வதுபோல் எழுதவேண்டுமென்று ஆர்டர் பிறந்தவண்ணம் எழுதப்பட்டது. அவ்வண்ணமாக இப்பொழுது பிறக்கும் பத்திரம் முதலான பெரிய ரிக்கார்டுகளில் விஸ்வபிராம்மணரென்று எழுதிவருகிறதை அறிகிறோம். ஆனால், கவர்ன்மெண்டு ரிக்கார்டுகளான சென்சஸ் ரிப்போர்ட்டில் அவ்விதம் எழுதப்படவில்லையென்று தெரிகிறது.

(இன்னும் வரும்)

திண்டுக்கல் N முத்துசாமி உபாத்தியாயர்,
திருநெல்வேலி





## இந்தியக் கைத்தொழில் கமிஷன்

### ரிபோர்ட்டின் சுருக்கம்.

(முன் தொடர்ச்சி)

வியாபார சம்பந்தமாகவும் கைத்தொழில் சம்பந்தமாகவும் உபயோகப்படும்படியான முக்கிய விஷயங்கள் அரசாங்கத்தாருக்கும், தனி வியாபாரிகளுக்கும், கைத்தொழிலாளிகளுக்கும் அவசியமாயிருப்பதால் அவ்வித சமாசாரங்களைத் திரட்டிக் கைத்தொழில் டிபார்ட்மெண்டு மூலமாய்ப் பொது ஜனங்களுக்குத் தெரிவிக்கவேண்டும். அரசாங்க ஸ்டோர்களுக்கு வேண்டிய சாமான்கள் இதுவரையில் இந்தியக் கைத்தொழிலாளர்களால் செய்யமுடியாமலிருந்ததால் வேறு இடங்களில் வாங்கப்பட்டன. ஆனால், அறிக்கையில் கண்ட ஏற்பாடுகள் அரசாங்க ஸ்டோர்கள் வாங்கும் வேலை கைத்தொழில் டிபார்ட்மெண்டில் இருக்கவேண்டுமென்றும் அவர்கள் முதலில் இந்தியாவில் செய்யப்படும் சாமான்களை வாங்கியபிறகே வேறு இடங்களில் வாங்கவேண்டு மென்றும் தெரிவிக்கிறது ஒரு அத்தியாயத்தில் கைத்தொழில் விர்த்திக்கு அவசியமான நிலம் முதலியவைகளைக் கட்டாயப்படுத்தி வாங்கச் சட்டம் இடந்தருமென்று காட்டப்பட்டிருக்கிறது. மற்றொரு அத்தியாயத்தில் அரசாங்கத்தார் கைத்தொழிலுக்கு எவ்வகையில் உணவுகளின்உதவி செய்யலாம் என்பது காட்டப்பட்டிருக்கிறது.

பாயிலர் ஆக்ட்டு, சுரங்கரூல்ஸ், மின்சார சக்தி ஆக்ட்டு, ஜெயில் கைதிகளின் வேலை, சாமான்களைக்கலக்காதிருக்கச் செய்தல், பேடண்டுகள், வியாபாரப் பெயர்களின் ரிஜிஸ்டிரேஷன், ட்ரேட் மார்க்குகள்,

வியாபாரத்தில் பாகஸ்தர்கள் இவை முதலான பல விஷயங்களைப்பற்றி விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

வீட்டுக் கைத்தொழில்களுக்குக் கூட்டுறவு அவசியம் என்பதும் ரெயில்வே கட்டணத்தின் பலா பலனும் கூறப்பட்டிருக்கின்றன. ரெயில்வே போர்டில் வியாபார மெம்பர் ஒருவர் இருக்கவேண்டியதின் அவசியமும் அவர் செய்யக்கூடிய வேலையும் கூறப்பட்டுள்ளன.

கைத்தொழிலில் பணம் போடப்படுகிறதில்லை. பணமில்லாததனாலல்ல; இருந்தாலும் தனக்கு வருவதில் அதிக இலாபத்தைக் கொடுத்தாலல்லது தொழிலாளிக்குப் பணம் அதிகப்படுவதில்லை. ஆகவே, கைத்தொழில் பாங்கு அல்லது பாங்குகள் ஏற்படுத்தவேண்டும். இது விஷயமாய் அரசாங்கத்தார் உடனே நன்றாக ஆராய்ச்சி செய்யவேண்டும். அதற்கிடையில் இண்டஸ்டிரியல் டிபார்ட்டுமெண்டால் கொடுக்கலாமென்று சொல்லுகிறவர்களுக்கு அரசாங்கத்தாரின் ஜாமீன்பேரில் கைத்தொழிலாளர்களுக்குப் பணம் கடன்கொடுத்து உதவி செய்யவேண்டும். இன்னும் பண உதவி செய்யும் மார்க்கமும் அமைக்கவேண்டும். வீட்டுக் கைத்தொழிலை விர்த்தி செய்ய மிஷின்கள் சாமான்கள் முதலியவைகளைக் கொடுத்து அதன் கிரயத்தைக் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பெற்றுக்கொள்ளவும் அரசாங்கத்தார் ஏற்பாடு செய்யவேண்டும்.

இந்தியாவில் சாமான்கள் செய்வதற்கும் உபயோகமாகவுமுள்ள சாதனங்களும் பொருள்களும் ஏராளமாக இருக்கின்றனவாயினும் அவைகளைச் செய்யத்தக்க சகாயங்கள் மிகக்குறைவு. இப்படியிருப்பதால் அடல் நாட்டார் இந்தியக் கைத்தொழிலைக் கைப்பற்றிவிடக்கூடும். இந்தியாவில் கைத்தொழிலில் தேர்ச்சிபெற்ற கூலிகளும் நிபுணர்களும் இல்லை. இந்தியாவுக்கு வேண்டிய போர்மன், சூப்பர்வைசர்கள் இவர்களுக்கு வெளிதேசங்களை எதிர்பார்க்கிறது. இந்தியாவின் பண முழுவதும் வீணாகத் தூங்குகிறது. அவைகளைத் தக்க வழியில் உபயோகப்படுத்தி இந்தியாவின் கைத்தொழிலை விர்த்தி செய்யவேண்டும்.

இவ்வித ஏற்பாடுகளெல்லாம் செய்வதற்கு வருடாவருடம் 86 லட்சம் ரூபாயும் முதன் முதலில் கல்வி விஷயமான விஷயங்களில் செலவுசெய்ய உடனே 150 லட்சம் ரூபாயும், மறுபடியும் அவைகளை விருத்தி செய்ய 66 லட்சம் ரூபாயும் வேண்டியிருக்கிறது.

## கரூர் மஹாநாடு.

உபசரணை சங்கத்தலைவர் தணடரை பிரம்மஸ்ரீ சுப்பராய ஆச்சாரிய ஸ்வாமிகளின் சிஷ்யன் பிரம்மஸ்ரீ K-அங்கண்ண ஆச்சாரியாரவர்களின் உபசரணைப் பத்திரம்.

விஸ்வகர்ம குலாபிமானிகளே! கனவான்களே! இன்று இம்மடாலயத்தில் கூடும் திருச்சினப்பள்ளி ஜில்லா கரூர் விஸ்வகர்ம வகுப்பாரின் பிரதிநிதித்வப் பிரத்தியேக மகாநாட்டு உபசரணைச் சங்கத் தலைவனாக, என்னை நியமித்த தங்களுக்கு எனதன்பார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இம்மகா நாட்டுக்குத் தலைமை வகித்து நடத்தும்படியாக இவ்வுபசரணை சங்கத்தார் கேட்டுக்கொண்டதற்கிணங்க இப்பொழுது இந்த வகுப்பாரின் முன்னேற்றத்திற்காக உழைக்க



முன்வந்து அக்கிராசனம் வகித்திருக்கும் பிரம்மஸ்ரீ T- அப்பாவு ஆச்சாரியார் அவர்கட்கு இம்மகா நாட்டின் சார்பாக நான் வந்தனமளிக்கின்றேன்.

இன்று கூட்டத்தை கனப்படுத்தி பல ஊர்களிலிருந்து வந்திருக்கும் பிரதிநிதிகளுக்கும் நம் குலாபிமானிகளுக்கும் வந்தனம் செலுத்துகின்றேன்.

கனவான்களே! இன்று நாம் இங்கு கூடியிருப்பதானது மதசுதந்திரத்தையும் உரிமையையும் காத்துக்கொள்ளும்பொருட்டே! இல்லாவில் நம்மைவிட நமது சந்ததியார்கள் அளவிலா கஷ்டமடைய நேரிடுமென்பதையும் நீங்கள் ஒவ்வொருவரும் உணரவேண்டும். உலகத்தில் நடைபெறவேண்டிய ஒவ்வொரு காரியங்களுக்கும் வேண்டிய சாதனங்களைச் செய்து கொடுக்கக்கூடியவர்களும் பஞ்சகிருத்ய கர்த்தாவின் சந்ததியாருமாகிய நம்மவர்களுக்கு இந்த ஆங்கில அரசாட்சியிலேயே அளவிலா கஷ்டங்களேற்பட்டிருப்பதானது உங்கள் ஒவ்வொருவருடைய மனதையும் புண்படுத்தாதிராது. மனதை மாத்திரம் புண்படுத்திக்கொண்டு கல்வியிலும் ராஜீய விஷயங்களிலும் நாம் முன்னேற்றமடையாததே நமக்கு இத்தனை கஷ்டத்திற்குக் காரணம். இனிமேலாவது நீங்கள் கண்விழித்துக்கொண்டு கைத்தொழிலிருந்தாலும் அதற்குத் துணை கல்வி என்பதையுணர்ந்து நமது சிறுவர்களை முதலில கல்வியிலும் இரண்டாவது கைத்தொழிலும் பழகும்படியான முயற்சி எடுத்துக்கொள்ளும்படி, கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும், அப்படிச் செயவது உங்கள் கடமையுமாகும்.

கனவான்களே! மிருகங்களுக்குக்கூட வெய்யில், காற்று, மழை முதலிய கஷ்டங்களிருக்கின்றனவே அந்தந்தக் காலத்திற்குத் தகுந்த இடங்களில் வைத்து அவைகளைக்காப்பாற்றுகிறோர்களே. அப்படியிருக்க நாம் மிருகத்தினும் கேவலமானவர்களா? காலில் உஷ்ணம் தாக்காமல் இருக்கும்பொருட்டு பாதரக்ஷை அணிந்துகொள்வதில் பிறருக்குண்டாகும் தீங்கென்ன? வெயில் வெப்பம் சகிக்கமுடியாமல் குடைபிடித்துக்கொள்வதால் பிறருக்குண்டாகும் கெடுதலென்ன? மற்ற வகுப்பார்களைப்போல் நாமும் மனிதர்கள் தானே? நம் விவாக காரியங்களில் ஏன் ஊர்வலம்வரக்கூடாது? ஏன் குதிரை ஏறக்கூடாது? இப்படியெல்லாம் நம்மைப் புறக்கணிப்பவர்கள் நம்மால்செய்யப்படும் தாலியைக் கட்டாமலிருக்கிறார்களா, ஆபரணங்களை அணிந்துகொள்ளாமலிருக்கிறார்களா—இல்லையே? நம்மை இழிந்த ஜாதியார்களென்று ஏட்டில் எழுதி எழுதி எடுத்துக்காட்டி ஏமாற்றிவந்த ஜாதியார்களின் இறுமாப்பினால் நாம் அளவில்லாத் கஷ்டமடைந்து ஹைகோர்ட்டு வரையும் சென்று அனுகூலமான அளவுகடந்த தீர்ப்புகள் பெற்ற ரிக்கார்டுகளும் இருக்கின்றனவே! இருந்தும் பிரயோஜனமில்லாமல் போனதின் காரணம் நம்மில் படித்தவர்கள் அதிகமில்லாததும் நம் கஷ்டநஷ்டங்களை ஆங்கிலகவர்ன்மெண்டார் அவர்களுக்கு எடுத்துக்காட்ட நமது பிரதிநிதிகள் சட்ட சபைகளிலில்லாத குறையுமல்லவா? தற்காலம் முன்னேற்றமடைந்துள்ள $13\frac{1}{2}$ லக்ஷம் ஜனத்தொகையுடைய ஜாதியார்களைவிட நம் ஜனத்தொகை பதினைந்து லக்ஷம் என்பது நீங்களெல்லோரும் தெரிந்திருக்கிறீர்கள். இருந்தும் நாம் மேலும் மேலும் தாழ்த்தப்பட்டு வருகிறோம். ஆகையால், இந்த நற்சமயத்தைக் கைவிடாது நம் குறைகளையெல்லாம் இங்கிலாந்தில் பிராமணரல்லாதாருக்காகப் பெரிதும் பாடுபட்டுக்கொண்டிருக்கும், பிராமணரல்லாதார் தலைவர் ஸ்ரீமான் டாக்டர் டி-எம். நாயர் அவர்களுக்குத் தந்திமூலமாய்த் தெரிவித்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் வகுப்புவாரி நியமிப்போர் சங்கமுமே தாழ்ந்த வகுப்பார் முன்னேற்றமடைய இன்றியமையாச் சாதனமென்பதை எடுத்துக்காட்டி நாயர்பெருமான் வெற்றியோடு இந்தியாவுக்குத் திரும்பிவந்து சேருமாறு எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன். இந்திய ஏழைகட்காக இங்கிலாந்தில் பெரிதும் பாடுபடும் பிரபு மகான்களான லார்டு ஸைடன்ஹாம்பிரபு முதலான தர்ம சொரூபிகட்கும் இம்மகாநாட்டின் சார்பாக நான் வந்தனமளிக்கின்றேன்.

கனவான்களே! அக்கிராசனாதிபதி அவர்களின் உபந்நியாசத்தால் அநேக உண்மைகளைத் தெரிந்துகொள்வீர்கள் ஆனதால் இத்துடன் என் பிரசங்கத்தை முடித்துக்கொள்ளுகிறேன்.

* * *

அவைத்தலைவர், பிரம்மஸ்ரீ
T. அப்பாவு ஆச்சாரியா ரவர்கள்
செய்த பிரசங்கம்.

விஸ்வகர்ம கனவான்களே! இக்கூட்டத்திற்கு என்னைத் தலைவனாக நியமித்துப் பெருமைப்படுத்தியதற்காக நான் என்னுடைய மனமார்ந்த வந்தனத்தை உங்களுக்கு அளிக்கின்றேன். நீங்கள் என்மீது சுமத்தியுள்ள பெரும் சுமையை நான் உணராமலிருக்கவில்லை. நான் இதை ஒப்புக்கொள்வதற்கு முன்னமே தியங்கினேன். இது எனக்கு உரியதல்லாத உபசாரமாகவே இருக்கிறது. இது எதிர்பாராமலே வந்திருக்கிறது. ஆயினும், வயதிலும், அனுபவத்திலும், என்னிலும் முதிர்ந்த ஒருவரை இச்சபைக்குத் தலைவராய்த் தெரிந்தெடுத்திருக்கலாமென்று விரும்புகிறேன். குலாபிமானிகளில் என்னையும் ஒருவனென மதித்து இப்பதவியை எனக்களித்துக் கனப்படுத்தியிருப்பதாய் நான் நம்புகிறேன்.

ராஜவிசுவாசம்

கனவான்களே!

2. இப்போது நடைபெற்றுவரும் யுத்தம் எப்பேர்க்கொத்ததென்றால் இதுவரையிலும் இவ்வுலகம் கண்ட யுத்தங்களில் பெரிய யுத்தம். தேசசரித்திரத்திலும் காணப்படாத மகாயுத்தம். இவ்யுத்தத்தின் நிமித்தமான கஷ்டங்களையெல்லாம் மனோதைரியத்துடன் தாங்கிய நமது சக்ரவர்த்தி யவர்கட்கும் அவர் குடிகட்கும் பலத்தைக்கொடுத்து இங்கிலாந்து தேசத்திற்கும் அதனுடன் இவ்யுத்தத்தில் சேர்ந்த மற்ற தேசங்கட்கும் வெற்றியை அளித்து கூடியசீக்கிரத்தில் இம்மஹா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருமாறு கருணாநிதியாகிய கடவுளை யாம் மனதால் பிரார்த்திக்கிறோம்.

3. இச்சென்னை ராஜதானியிலே விஸ்வகர்ம வகுப்பாருக்குப் பிரதிநிதித்துவம் வேண்டிக் கூட்டப்பட்ட மஹா நாடுகளில் இதுவே முதலாவதாகும். இந்திய ராஜாங்க முறையில் தற்சமயம் செய்யவேண்டுமென்று விரும்பத்தக்கதான மாறுதல்கள் இவையென்று இந்தியா மந்திரியாகிய கனம் மாண்டேகு, வைஸ்ராய் கனம் செம்ஸ்போர்ட் அவர்களால் பகிரங்கம் செய்யப்பட்ட இணை அறிக்கைப்பத்திரத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டிருப்பதானது நம்மவர்கள் எல்லோருக்கும் மெத்த பயத்தையும் வியசனத்தையும் உண்டாக்கியிருக்கிறது. கல்வியில் தாழ்ந்த வகுப்பாருக்கும் கொடிய சட்டதிட்டங்களால் சுதந்தரியத்தை இழந்து தவிக்கும் தாழ்ந்த வகுப்பாருக்கும் முன்னேற்றமடைய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமே இன்றியமையாச் சாதனமாகும். இதற்காக பெரிதும் பாடுபட்டுவரும் தென் இந்தியா மகாஜன சங்கத்தினரும் பிராமணரல்லாதார் தலைவருமாகிய ஸ்ரீமான் டாக்டர் டி. எம். நாயர் அவர்கட்கு நாமெல்லோரும் என்றும் நன்றிசெலுத்தக்கடமைப்பட்டிருப்பதோடு எம்பெருமானருளால் இப்பெருந்தகையாளர் நீடூழிவாழ யாம் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நாம் எதற்காக
இங்கு கூடியிருக்கின்றோம்?

4. இச்சென்னை இராஜதானியில் சுமார் 15 லட்சம் ஜனத்தொகையைக்கொண்டுள்ள ஓர் முக்கியமான ஜனசமூகத்தினர்களாகவிருந்தும், நாம் வாழ்க்கை தத்துவத்தில் எவ்வளவோ பின் தள்ளப்பட்டும் ஒடுக்கப்பட்டும் அலட்சியம் செய்யப்பட்டுமிருக்கின்றோம். உலகத்தில் வசிக்கும் ஒவ்வொரு ஜாதியர்களும் தங்கள் தங்கள் முன்னேற்றத்தைக் கோரிப் போராடிற்பதைக்கண்டு நம் தாய்நாடாகிய இந்தியாவும் தன் நிலைமையை உயர்த்துவதற்கு மனவெழுச்சிகொண்டு பற்பல கோரிக்கைகளுள்ள சீர்



திருத்த ஆவாரங்களினால் காருண்யமுள்ள ஆங்கிலேயர்களின் நற்கருணையால் வெளிவந்துள்ள மாண்டேகு, செம்ஸ்போர்டு சீர்திருத்தமானது ஜனங்களின் ஆலோசனைக்கு விடப்பட்டிருக்கின்றது. நாம் நமது நிலைமையை உயர்த்துவதற்கு நல்லசமயம் இப்போது வாய்த்திருக்கின்றது. இச்சமயத்தைத் தவறவிட்டுவிடாது நமது மரபினர்கள் முன்னேற்றத்தைக் கோரிச் செய்யவேண்டுவதென்னவென்பதைப்பற்றி யோசிக்கவே நாம் இங்கு கூடியிருக்கின்றோம்.

நாம் எப்படி தாழ்த்தப்பட்டோம்.

5. நம்நாட்டில் ஒரு சிறுவகுப்பார் வந்து குடியேறியகாலத்தே நம் மரபினர்களே சகல கலாவல்லவராக விருந்தபடியால் ஆரியர்கள் நம்மரபினர்களிடம் துவேஷம் பாராட்டித் தங்கள் தந்திரத்தால் தமிழரசர்களிடம் அமைச்சர்களெனவும் மேலதிகாரப் பிரபுக்களெனவும் அமைந்துகொண்டு சுயநலங்கோரி மனுதர்ம சாஸ்திரம் (மனு அதர்ம சாஸ்திரம்) என்று ஓர் நூல் எழுதி அதில் நம்மவர்களைத் தாழ்ந்தவர்களென எடுத்துக்காட்டி நம் நாட்டிலுள்ள மற்ற ஜாதியார்களுக்கும் நமக்கும் விரோதத்தை ஏற்படுத்தினார்கள். (இதுதான் வலங்கை இடங்கைசண்டைகள் ஆரம்பம்) அதிலும் நாம் வெற்றியடைந்ததுமன்றிப் பிராமணர்களுக்கும் நமக்கும் பிராமணீகத்தைப்பற்றிய கலகங்களிலும் மனு, மய, துவஷ்டா, சில்பி, விஸ்வக்ஞ என்ற நம்மரபினர்களே உயர்வெனத் தீர்ப்புச் செய்யப்பட்ட சுமார் 40, 50 தீர்ப்புகளும் பெற்றிருக்கின்றோம். சுருதி யுக்தி அநுபவங்கட்கிணங்கப் பெருமைவாய்ந்த விஸ்வகர்ம வம்சஸ்தர்களாகிய நம்மவர்கட்கு ஆங்கில அரசாங்கத்திலேயே நம் விரோதிகள் சிற்சில விடங்களில் அநேக கொடிய விதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதாவது குதிரை ஏறுதல், பாதரட்சை தரித்தல், குடைபிடித்துக்கொண்டு நடத்தல், விவாஹாதிய விசேஷங்களில் ஊர்வலம் வருதல் முதலிய கூடாதென்பதே. அப்பேர்ப்பட்ட ஊர்களில் மஹாநாடு கூட்டப்பட்டிருக்கும் இக்கரூரும் ஒன்றாகும். கனவான்களே! இக்கரூரிலேயே சுமார் 30 - 37 வருஷத்துக்கு முன் நம் மரபினர் விவாகத்தில் நடந்த ஒரு ஊர்வலத்தில் கலகம் செய்தார்கள். நம் மரபினரால் காருண்ய கவர்ன்மெண்டாரவர்களிடத்தில் பிரியாது கொடுக்கப்பட்டு எதிரிகளுக்குத் தண்டனையும் ஆகியிருக்கிறது. நாம் இக்கொடிய சட்டதிட்டங்களிலிருந்து நீங்கிக் கல்வியிலும் ராஜீய விஷயத்திலும் முன்னேற்றமடைய நம் பிரதிநிதிகள் சட்டசபைகளில் அமர்ந்தாலொழிய நமது குறை நிவர்த்தியாகாது.



இப்போது நமக்கு வேண்டியது என்ன?

6. சர்க்காரின் சகல சபைகளிலும் உத்தியோகசாலைகளிலும் விஸ்வகர்மாக்களாகிய நம் பிரதிநிதிகள் அமர்ந்தாலொழிய ராஜீய விஷயத்தில் பின்தங்கியுள்ள நம்மவர்கட்கு அதிக தீங்கை விளைவித்து எப்போதும் நாம் வெளிக்கிளம்பாவண்ணம் பாதாளத்தில் அமுத்திவிடுவதல்லாமல், அது படித்த ஒரு சிறுவகுப்பாரின் ஆதிக்கத்திற்குட்பட்டு அவர்களுக்குள்ள அதிகார பலத்தால் நம்மவர்களை நசுக்கிவிடுவார்களென்பது திண்ணம். இச் சமயம் நமது நிலைமையை நாம் காத்துக்கொள்ள நமக்கு வேண்டியது பிரதிநிதித்துவமே.

7. கனவான்களே! நம்து முன்னோர்கள் தங்கள் உரிமையையும் சுதந்தரத்தையும் காத்துக்கொள்ளும்பொருட்டு எவ்வளவோ கஷ்டப்பட்டு பற்பல கோர்ட்டுகளிலும் வியாச்சியங்கள் செய்து பெற்றிருக்கும் தீர்மானங்களே நமது மரபின் உயர்வையும் பெருமையையும் காட்டுகிறதென்பது நீங்களறியாததல்ல. அப்படியிருக்க நம்மரபினர்கள் இந்த நற்சமயத்தைவிடாது ஆங்காங்கே கூட்டங்கூடி பிரதிநிதித்துவத்திற்காகப் பெரிதும் பாடுபடாதவர்களாயிருத்தல் நமக்கு பெரிதும் வியசனத்தையே தருகின்றது. இனியாவது நம்மவர்கள் பிரதிநிதித்துவத்தைக் கோரி கூட்டங்கூடி இங்கிலாந்தில் தாழ்ந்த வகுப்பாருக்காக பெரிதும் பாடுபடும் ஸ்ரீமான் டாக்டர் டி. எம்,

நாயர் அவர்கட்கு தந்திமூலமாய்த் தெரிவித்து தங்கள் குறைகளை நிவர்த்தித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தியாவுக்கு வந்து விசாரித்த இந்தியா மந்திரி முதலியவர்கள் இப்பொழுது வெளியிட்டிருக்கும் சீர்திருத்தப் பிரேரேபணையில் சொல்லுகிறபடி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பெரிதும் வேற்றுமையையும் பிளவையும் உண்டாக்குமென்று சொல்வதானது கொஞ்சமேனும் பொருத்தமானதல்ல. முன்னால் மகம்மதியருக்கு கொடுத்த பிரதிநிதித்துவத்தால் ஒற்றுமையுண்டானதென்பது உலகமறியாததல்லவே. அப்படியிருக்கப் பெரிதும் பின்னடைந்துள்ள வகுப்பாருக்குப் பிரதிநிதித்துவமாகிய அதே சுதந்திரந்தானே கேட்கப்படுகிறது. முன் மகமதியருக்கும் பின் சீக்கியருக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்துவிட்டு அதே சுதந்தரத்தை மற்றவர்கள் கேட்கும்போது கவர்ன்மெண்டார் ஜனங்களைப்பிரித்து ஆள நினைத்தார்களென்ற அபவாதம் உண்டாகுமென்று இந்தியா மந்திரியவர்களும் இராஜப்பிரதிநிதியவர்களும் சொல்வது கொஞ்சமேனும் சரியல்ல.

8. ஆகையால் காருண்ய கவர்ன்மெண்டாரவர்கள் இந்தியா மந்திரியவர்களாலும் இராஜப்பிரதிநிதியவர்களாலும் வெளியிடப்பட்ட இவ்வறிக்கைப் பத்திரத்தைக் கவனித்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், வகுப்புவாரி நியமிப்போர் சங்கமும், அத்தியாவசியமென்பதையுணர்ந்து அவசியம் கொடுக்கும்படி, அநேக வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முடிவுரை.

கனவான்களே!

9 நான் முடிவுரை சொல்லவேண்டியகாலம் வந்துவிட்டது. அநேகதடைகள் இருந்தபோதிலும் அவற்றைக்கவனிக்காது இந்த சபையைக் கூட்டுவதற்கு நீங்கள் முயன்றதற்காக நான் உங்களுக்கு வந்தனம் செலுத்துகின்றேன். நம்முடைய தேச சரித்திரத்தில் குழப்பமான இச்சமயத்தில் நம்முடைய பிற்காலத்திற்கு அநுகூலமான அல்லது பிரதிகூலமான காரியங்களைத், தேடிக்கொள்ளும் திறமை நம் கைகளிலேயே யிருக்கின்றன. பொழுது புலர்ந்தது. நம்மை உழைக்குமாறு வேண்டுகின்றது. ஆதலின் நம்மில் ஒவ்வொருவரும் பிரதிநிதித்துவத்தை கோரிப் பெரிதும் உழைக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன். எல்லாம் வல்ல இறைவனருளால் நமது கோரிக்கை இனிது முடியப் பிரார்த்திக்கின்றேன்.

---

## ஆச்சாரிய ஜாதியார் யார்?

இந்தக் கேள்வி பலரால் கேட்கப்படுகிறது பலவிடங்களிலும் கேட்கப்படுகிறது. பலபேர் இதற்குப் பதில் கூறினார்கள், கூறிக்கொண்டிருக்கிறார்கள். என்றாலும்

**ஆதாரபூர்வமான நிரம்பிய பதில்**

நாகர்கோவில் ஜோஸ்யர் ஸ்ரீ அ. முத்தாச்சாரியார் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கிறது. அதை,

**விஸ்வகர்மரே ஆச்சாரிய ஜாதியார்**

என்னும் நூலில் பார்க்கக் காணலாம். கண்டு, நன்றாய்ப் பாடஞ் செய்துகொள்வோர் இக்கேள்விக்குத்தீரமாய்ப் பதில்கூறலாம்.

பிரதி ஒன்று ஆறே அணா.

கொ. கன்னியப்ப ஆச்சாரி-

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

---

## மர்மங்கள் வெளிப்பட்டு விட்டன.

ஸ்திரீபுருஷ மர்ம தர்மங்கள் அனந்தமிருக்கின்றன. அவற்றை யறிந்து நடப்போரே உலகத்தில் இன்புறுவர். அறியாதவர்கள் துன்பப்படுவார்கள். ஆகலால், அவற்றை ஒவ்வொருவரும் அறிந்துகொள்ளவேண்டும். "மர்மசாஸ்திர தர்மபோதினி" யென்னும் நூலை வாசித்தால் அவை இலேசாய் விளங்கிவிடும். அதிகச் செலவில்லை

பிரதி யொன்றின் கிரயம் ஐந்தே அணா, ஆறணாவுக்கு ஸ்டாம்புகள் அனுப்பினால் கிடைக்கும் வி. பி-யில் அனுப்புவிதென்றால் ஏழணாவாகும்.

எ. டி. ராஜ்.

புரசைவாக்கம் ஹைரோட், சென்னை.

பெரிய கம்பெனி! பெரிய கம்பெனி!

திருப்தியில்லா தவைகள்
திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

நவீன நாகரீகத்திற்கேற்றபடி தயாரிக்கப்பட்ட

| | |
|---|---|
| பட்டு: சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், தாவணிகள், வெண்பட்டு வேஷ்டிகள், துப்பட்டிகள், சாரங்கள், காம்பைகள். | உருத்திராக்ஷங்கள், ஜபமாலைகள், காசிவயிரவர் பிரசாதக்கயறு, கஸ்தூரி முதலியவை. |

விலை விபரங்களடங்கிய
'பட்டு பீதாம்பர' கேட்லாக்
'இனம்'

| | |
|---|---|
| Addres:—<br>Manager,<br>Siik Pitamber Co,<br>Benares City. | விலாசம்:—<br>மானேஜர்,<br>பட்டு பீதாம்பர கம்பெனி,<br>காசி. |

டாக்டர் K. T. ராமஸ்வாமி M. A. Ph. D., அவர்களின்
புதிய யோக நூல்கள்.

ஆத்மயோக மனோவசிய சாஸ்திரம்.

இதிலடங்கிய விஷயங்களாவன:—திடசித்தப்பயிற்சி, மனோவசியம், ஹிப்னாடிஸம் மெஸ்மெரிஸம், மானஸதந்தி, பிரம்மனாராய்ச்சி, ஞானதிருஷ்டி, தூரசிரவணம், தேவதா உபாஸனை, பிதுர் சம்பாஷணை முதலிய அரியபெரிய ஞான ரகசியங்களும், யோகாப்பியாச முறைகளும் 100 பாடல்களில் வெளியிருக்கிறோம். இவ்வரிய நூலைக் கைப்பற்றிய 2 மாதங்களுக்குள் மேற்கண்ட இச்சாசக்திகளைப் பெறலாம் என்பது திண்ணம்.
விலை ரூ. 1—4 தபால் கூலி பிரத்தியேகம்.

குண்டலியோக தந்திரம்.

இப்புதிய தமிழ்யோகநூலில் குண்டலீ என்ற ஆத்ம சக்தியை அபிவிருத்தி செய்ய யோகமுறைகளும் அப்பியாசங்களும் அனுபவசித்தி பெற்ற அரியபெரிய ஞான ரகசியங்களும் வெகு தெளிவாய் எளிய தமிழ் நடையில் காண்பீர்கள்.
விலை ரூ. 1—8 தபால்கூலி பிரத்தியேகம்.

மனோஜால தந்திரம்.

இப்புதிய தமிழ் நூலில், பிறர் மனதைக்கட்டி ஜாக்ரநிலையில் ஏகாக்கிர சித்தத்தினால் அநேக அற்புத மனோஜாலம் என்னும் கண்கட்டு வித்தைகளை செய்ய நவீன மானஸ சாஸ்திர முறைகளை காண்பீர்கள். இதில் சூக்ஷ்ம ஆரூட முறையும் மேல்நாட்டு மாந்திரீக ரகசியங்களும் மர்மங்களும் வெளியிட்டிருக்கிறோம்.
விலை ரூ. 1—0 தபால்கூலி பிரத்தியேகம்.

இந்தியா சாஸ்திர கல்விச்சாலை,
105, ஆர்மீனியன் தெருவு, மதராஸ்.

# நோடீஸ்.

## சாவரன் அண்டு கம்பெனியாருடைய மூன்று ரத்தினங்கள்,

### சாவரன் படை மருந்து.

எப்பேர்ப்பட்ட தீராத மேகரணங்களையும், மேகப் படைகளையும், சிரங்கு பொறுக்கமுடியாத நமச்சல்களையும் 24-மணி நேரத்தில் கண்டிப்பாய் குணப்படுத்தும். குணமில்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

புட்டி 1க்கு அணா—12.

### மேக காரக சஞ்சீவி.

வெண்குஷ்டம், கரிமேகம், மதுமேகம், வெள்ளை, வெட்டை, எரிச்சல், கண்டமாலை, பௌத்திரம் இப்படிப்பட்ட தீராதகொடிய வியாதிகளைக் கண்டிப்பாய்க் குணப்படுத்தும். இது நிகரற்றது.

20-நாள் எண்ணை ரூபா—10.

### இண்டியன் ப்யூடி கூந்தல் தைலம்.

இந்த எண்ணை முதல்தரமான தேங்கா எண்ணையால் குளுமையான வஸ்துக்களுடன் கூந்தல் வளரும்படியான அபூர்வமான வஸ்துக்களுடன் தயார் செய்யப்பட்டது. இது நிகரற்றது. புட்டி ரூபா—1.

**சாவரன் அண்டு கம்பெனி,**
நெ-10, கச்சாலீஸ்வர அக்கிராரம்,
சென்னை.

---

A. E. முஹையத்தீன்
## 'சுகஜீவி'

| ஔஷதங்களின் விபரம். | ரூ. | அ. | ஔஷதங்களின் விபரம். | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| சுகஜீவி மாத்திரை புட்டி 1க்கு | 0 | 8 | ,, சர்வஜுர ஜன்னி மாத்திரை | 0 | 12 |
| ,, கஸ்தூரி, கோரோஜனை மாத்திரை | 0 | 10 | ,, சுகஜீவி தைலம் டப்பி 1க்கு | 0 | 12 |
| ,, ஆத்ம ஆகார பற்பம் | 1 | 0 | ,, சர்வரோக சந்தனாதித்தைலம் 70-ரூபாஎடை டப்பி 1க்கு | 2 | 8 |
| ,, வெள்ளை, வெட்டை, மூலிகை யெண்ணெய் | 1 | 4 | ,, ஷை சந்தனாதித்தைலம் 55 ரூ-எ. | 2 | 9 |
| ,, ஆத்மலாப செந்தூரம் | 1 | 8 | ,, ஷை சந்தனாதித்தைலம் 35 ரூ-எ. | 1 | 4 |
| ,, நவமூல நாக பற்பம் | 3 | 8 | ,, குடும்ப ஆகார சஞ்சீவிலேகியம் | 2 | 0 |
| ,, ஆத்ம இரத்தின மாத்திரை | 2 | 4 | ,, நறுமணைக் கலவை | 0 | 8 |
| ,, சர்வாணக் களிம்பு | 0 | 8 | ,, வீரிய சாலாமிசிரி தாதுபுஷ்டி லேகியம் | 3 | 0 |
| ,, மஹாவிஷபேதி காலராமாத்திரை | 0 | 12 | ,, சந்தான மூலாம் | 1 | 0 |
| ,, சர்வபடைக்களிம்பு | 0 | 6 | ,, சொரிசிரங்கு மூலிகை எண்ணை | 0 | 8 |
| ,, ஆத்ம செந்தூரம் | 0 | 12 | ,, பற்பொடி | 0 | 5 |
| ,, வெட்டுக்காய திராவகம் | 0 | 8 | | | |

☞ மேற்கண்ட சுகஜீவி ஔஷதங்களின் முழுவிபரம் தெரிய விரும்புவோர்கள் தங்கள் விலாஸத்தை தெரிவித்தால் விபரமடங்கிய புத்தகம் இனாமாகவே அனுப்பப்படும்.

விலாசம்:—

ஹக்கீம் S. P. M. அப்துல்கனி ராவுத்தர்,
A. E. முஹையத்தீன் மெடிகல் ஹால், வலங்கிமான், தஞ்சை ஜில்லா.


## மாதம் ஒன்றுக்கு ஒருவேளைசாப்பாடு போடலாகாதா ?

நமது குலப்பத்திரிகைகளாகிய "விஸ்வகர்மன்" "தொழில்" என்ற இரண்டும் வெவ்
வேறென்றே சிலர் 'விஸ்வகர்மன்' சந்தாதாரராகவும், சிலர் 'தொழில்' சந்தாதாரராகவும். இரு
ந்து வந்தனர். ஆனால், இவ்விரண்டும் வெவ்வேறென்று தோற்றப்பட்டாலும் ஒரே காரியத்தை
நிலைநாட்டப் பிறந்த அவதாரங்களா யிருந்தன.

'தொழில்' என்பது விஸ்வகர்ம குலோபகாரியென வெகுநாளாக உலாவிவந்ததின் மறு
பெயரே. இம்மாறுதலினால் விஸ்வகர்ம குலத்தார் (பிறருக்குச் செய்யும்) உபகாரம் தொழிலே
என்று கொள்ளத்தகும்.

விஸ்வகர்மாவாகிய ஜகத்சிருஷ்டிகர்த்தா வேறு, பிரபஞ்சத்தில் நடைபெறும் பிரதம
ஐவகைத் தொழில் வேறு என்ற பொது ஜனங்களின் மனதிற் பதிந்துகிடக்கும் மாசு நீங்க,
"விஸ்வகர்மன்" "தொழில்" என்ற இரண்டு பத்திரிகைகளும் ஏகரூபமாய் 'விஸ்வகர்மன்-தொ
ழில்' என்ற நாமம் புனைந்து புனர் ஜென்மம் பெற்றிருக்கிறது. இதன் தலைப்பக்கத்தில் கா
ணப்படும் படம் சாக்ஷாத் விஸ்வகர்மன் அண்டம் நிறைந்தவனென்றும் அதன்கீழ்க் காணப்படும்
ஐவகைத் தொழிலும் அவருடைய பிரபஞ்சத்தொழில் என்றும் நிதர்சனமாகக் காட்டுகிறது.

இப்பத்திரிகையாகிய குழந்தைபிறந்து இம்மாதத்தோடு ஓராண்டு பூர்த்திபெற்று அநேக
தட்டித் தள்ளாடி நகர்ந்துவரும் பலமே பெற்றிருக்கிறது. இனி, அதற்கு எவ்வளவுக் கெவ்வளவு
போஷணையிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு பலமதிக மேற்படும். ஆகையால், அதைப்போஷி
க்கவேண்டி சந்தாதாரர்கள் அனேகர் வேண்டுவதவசியம். ஒவ்வொரு சந்தாதாரர் பிரதிமாதமும்
கொடுக்கும் நாலணாவும் பத்திரிகையின் கால்களைத் திடமாய் ஊன்றி நிற்கச்செய்து வித்யாபிமா
ன பண்டிதசிகாமணிகளால் கொடுக்கப்படும் வியாசரூபமான அமிழ்தங்களால் மாந்தம்போன்ற
வியாதிகள் வாராவண்ணம் காத்து முற்றிலும்பலப்படுத்தி இப்பத்திரிகை நடந்து ஓடி எங்கும்
பறந்து உலாவிவரச் செய்வார்களென்பது பூரண நம்பிக்கை.

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரணசபையாரால் ஆதரிக்கப்பட்டுவரும் இப்பொதுக் குழந்
தையை ஒவ்வொருவரும் தங்கள் குழந்தையாகப் பாவித்து பிரதிமாதமும் அதற்கு நாலணா கொ
டுத்துவந்தால் அது கொடுத்தவர்கள் கீர்த்தியையும் அவர் பிறந்த விஸ்வகர்ம குலப்பெருமையும்
விளங்கச்செய்யும். தேகபலமும், தெள்ளியஞானமும், பூரண ஆயுசுமுள்ள ஒரே புத்திரனைப்
பெறுவது மௌடீக பலமற்ற பல குழந்தைகளை அடைவதைக் காட்டிலும் பெருமை வாய்ந்ததன்
றோ? தென்னிந்தியா முழுவதும் இவ்வொரு பத்திரிகையைச் சரிவரப் போஷித்தவர முடியா
தென்றால் நம்மவர் வம்சத்திற்கு இது ஓர் அபகீர்த்தியே! பணத்தைப் பாதுகாக்கும் பண்பு
ளோர் இத்தகையகாரியங்கட்கு ஏதாவது மூலதனம் கொடுத்துதவ முன்வரக்கூடாதா ? விஸ்வ
கர்மன் பத்திரிகை தோன்றி இடையில் எத்தனை மாதங்கள் படுத்துறங்கிற்று. காரணம் பலக்
குறைவன்றோ ? பலம் தருவது பணமே ! பணம் பத்துவகை செய்யுமல்லவா ? ஆவலுடன்
ஆதரிக்கும் சபையோர் கவனக்குறைவென்று சொல்வதற்கு மிடமில்லையே ! சபையோர்கள்
'உதவிசெய்யுங்கள்' என்று அடிக்கடி ஓலமிடுவதைத்தவிர நம்மைத் தடிகொண்டடிப்பார்களா?
குலத்திற்பிறந்த ஒவ்வொருவருக்கும் ஊக்கம் இருக்க வேண்டாமா ?

ஆகையால் நம்மவர் ஒவ்வொருவரும் 'விஸ்வகர்மன் - தொழில்' என்ற பொதுக்குழந்
தைக்கு மாதம்ஒன்றுக்கு ஒருவேளை சாப்பாடு போடுவதுபோல் நாலணா கொடுப்பது ஓர் கஷ்ட
மாகுமா ? அன்புடனளிக்கும் ஒருவேளைச் சாப்பாட்டையும் சாப்பிட்டு ஏப்பம்விடாமல் விஸ்வ
கர்மன் - தொழில் பத்திரிகை நமது நன்மையைக் கோரி பிரதிபலனாக ஞானத்தை விளக்குகி
றது. வைத்தியம்போதிக்கிறது, தொழில் கற்பிக்கிறது. சகல தேசவர்த்தமானங்களைத் தெரிவிக்
கிறது. இம்மட்டோ? நம்குலத்தையும் குணத்தையும் மணம்பெறச் செய்கிறது. நாடகத்திற்
கென்று செலவழிக்கும் நவீனச் சிறுவர்கள் இவ்வற்புதக்காட்சியைப்பார்க்க நாலணா பிரதிமாத
மும் செலவழிக்க கூடாதா ? நன்குணர்ந்து நலம் பெறுங்கள் !

சேருங்கள் சகோதரர்காள் ! சேர்ந்து களிப்புறுங்கள் சிநேகர்காள் ! !

விஸ்வகர்மன் - தொழிலினால் விளையுமற்புதக் காட்சிகளை விரைவினில் பாருங்கள்
விஸ்வகர்ம குல சிரேஷ்டர்காள் ! ! !

கு. பு. வே. ஆச்சாரி.
திருச்சிராப்பள்ளி.

தனி நோடீஸ்கள் அச்சிடப்பட் டிருக்கின்றன. நமதுவாசகர்கள் ஒவ்வொருவரும் தங்கள் ஊரில் விநியோகிப்பதற்கு எத்தனைவேண்டுமென்றுதெரிவித்தால், அத்தனை நோடீஸ்கள் அனுப்பப்படும். உடனே எழுதிப் பெற்று யாவருக்கும் வழங்கிப் பணந்தண்டித் தருவாராக.

# சென்னை விஸ்வகர்ம வித்யா நிதி.

சங்கராந்தித் தண்டல். சங்கராந்தித் தண்டல்.

மனு, மய, த்வஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ வென்னும் ஐவகை விஸ்வகர்ம குணசீலர்கள்!

நமது குலமேனோக்கத்தை உத்தேசித்துச் செய்துகொள்ளப்படும் இவ்விசய விண்ணப்பத்தைத் தயவோடு ஏற்றருளித் தங்களாலும் தங்கள் பந்துமித்திரர்களாலும் எவ்வளவு சகாயஞ் செய்யக்கூடுமோ அவ்வளவும் தேடியளிக்கும்படி மிகவும் வந்தனத்துடன் வேண்டிக்கொள்ளுகிறோம்.

பஞ்சமருள்படப் பல ஜாதியாரும் இப்போது தங்கள் ஜாதிக்கெனத் தனியாய் வித்யாநிதி யேற்படுத்தி அதற்குப் பொருளுதவி செய்து, அதன் மூலமாய்த் தங்கள் ஜாதிச்சிறுவர்களுக்கு வித்தியா சகாயஞ்செய்து மேம்படுத்தி வருகிறார்களென்பது யாவரும் அறிந்த உண்மை. நமது ஜாதிக்குமட்டும் வித்யாநிதி யேற்படாதது பெருங்குறைவா யிருக்கிறது. ஆதலால், 1919௵ ஜனவரி௴ 1௳ முதல் சென்னை விஸ்வகர்ம வித்தியாநிதி யென்பதொன்றை ஸ்தாபித்து நடத்துவதாக, சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையார் தீர்மானித்திருக்கிறார்கள். இதற்கு மாதசந்தா, நன்கொடை முதலியன நன்றியறிதலுடன் பெற்றுக்கொள்ளப்பட்டு "விஸ்வகர்மன்-தொழில்" பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

இந்நிதி பிரத்தியேகமாய் நடத்தப்படும். இந்நிதியின் கணக்கில் இப்போது சேவிங்ஸ் பாங்கியில் சட்டப்பட்டிருக்கிற ரூபா. ...... நாளது 1919௵ ஜனவரி௴ 14௳வரும் சங்கராந்தியை யநுசரித்து இவ்வித்யாநிதிக்காகப் பணம் தண்டுவதாகத் தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. போகிபண்டிகையிலிருந்து, சௌகரியம்போல், நான்கு நாட்கள் தண்டல் செய்யப்படலாம். குலாபிமானிகள் முன்னின்று தங்கள் தங்கள் ஊர்களில் தவறுமல் இத்தண்டல் செய்யப்படுவதற்கேற்ற ஏற்பாடுகளை இப்பத்திரிகை கண்டதுமுதலே யோசித்து முடிவுசெய்யும்படி மிகவும் மன்றாடுகிறோம். பலதுளி பெருவெள்ளமாகு மென்பதையும், கேட்டுப் பெறுவோர் முன்வரும் பக்ஷத்தில் கொடுத்துதவுதற்கு நமது குலத்தார் எவரும் பின்வாங்கமாட்டார்களென்பதையும் ஞாபகத்திற் கொண்டு ஒவ்வொரு ஊரிலுமுள்ள குலஜனங்கள் யாவரும் சகாயமாயிருந் துழைக்க வேண்டுகிறோம்.

தண்டல் முடிந்ததும் வசூலானபணம் எங்களில் ஒருவர்க்கு அனுப்பப்பட வேண்டும். அது சேவிங்ஸ் பாங்கியில் மேற்குறிக்கப்பட்ட தொகையோடுசேரும். விபரங்கள் முற்றிலும், உதவிபுரிந்தோர் திருநாமங்களுடன், "விஸ்வகர்மன்-தொழில்" பத்திரிகையில் பரக்க அச்சிடப்படும். இவ்வித்தியாநிதி பொதுப்பட விஸ்வகர்மவம்ஸ வித்தியார்த்திகளுக்கெல்லாம் பயன்பட வேண்டியதா யிருப்பதால், பல்லாயிரம் ரூபாய்கள் மிக அவசரமாக வேண்டியிருக்கின்றன. ஆதலால், யாவரும் கிளர்ச்சியோடும் ஊக்கத்தோடும் இத்தண்டல் செய்தும் பொருள்கொடுத்தும் புண்ணியமும் புகழும் பெறுவார்களென்று அதிவணக்கமாய்ப் பிரார்த்திக்கின்றோம்.

சோமங்கலம் - கந்தசாமி ஆர்சாரி,
(மானேஜர், அபிஷியல் அஸைனி ஆபீஸ், ஹைகோர்ட்,)
301, தங்கசாலை வீதி, சென்னை.

கொளத்தூர் - கன்னியப்ப ஆர்சாரி,
விஸ்வகுலோத்தாரண அச்சுக்கூடத் தலைவர்,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

1918௵
டிசம்பர்௴ 20௳

உ
ஸ்ரீமத் விராட் விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்-தொழில்.

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள
சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதப்பத்திரிகை.

சம்-5] காளயுக்தி௵ மார்கழி௴ 1918௵ டிசம்பர்௴ [சஞ்-12

## ஒளிவளர் விளக்கு.

### எமது கொள்கையின் நிச்சயம்.

குலதூஷணஞ்செய்தலே கொள்கையாக் கொண்டு யாமிப்பத்திரிகை நடத்திவருவதாக நங்குல மேதாவிகளிற் சிலர் எண்ணுகின்றனர். இவ்வபிப்பிராயத்தைப் பலரிடத்து வெளியிட்டு அசூயை யுண்டாக்குகின்றனர். இவர்களுக் கென்சொல்வதென்று எமக்குத் தெரியவில்லை. குலத்தி லுற்பவித்தா ரொருவர் குலதூஷணஞ் செய்யின் அத்தூஷண மவரையுஞ் சாருதல் திண்ணமன்றோ? அங்ஙன மொருவர் தம்மைத் தாமே தூஷித்துக்கொள்ளத் துணிவாரா என்று இவர்கள் ஏன் எண்ணிப் பார்த்திலர்? அங்ஙனந் தூஷிக்கின் பெருமையன்றி சிறுமையேயன்றோ சித்திக்கும்? இதற்கு எவரே உடன்படுவர்! யாம் குலதூஷணஞ்செய்ய எழுந்துளோமென்பது பொய் பொய், முழுப்பொய், விழுப்பொய், கெட்டபொய், கேடுதரும்பொய். யாமேன் குலதூஷணஞ் செய்யவேண்டும் ? எதற்காகச் செய்ய வேண்டும்; செய்து என்பெறுவோம்? சிந்தித்துரைசெப்புங்கள் சீரியரே!

குல ஈடேற்றக் கொள்கையொன்றேபற்றி இப்பத்திரிகையை எத்தனையோ இடர்களுக்கிடையில் யாம் நடத்தி வருகின்றோமென்பதை இனியேனும் எம்மவர் நம்புவாராக. எம்முறை யொன்றுகொண்டே இவ்வித நம்பிக்கைவைக்க வேண்டுகின்றோமில்லை. யாமெழுதி வருவனவற்றை யெல்லாம் ஒருங்கே அவர்கள் ஆராய்ந்து பார்ப்பார்களாக. அவ்வெழுத்துகள் எந்நோக்கத்தா லெழுந்தனவென்பதை ஆழ்ந்து சிந்திப்பார்களாக. அப்புறம், எக்கொள்கை கொண்டு இப்பத்திரிகை நடத்திவருகின்றோமென்பது தெளிவாராக.

எவரேயாயினும், தமதபிப்பிராயத்தை எமக்கெழுதி யறிவித்தல்நன்று; இதுவே எவருஞ் செய்யத்தக்கது. அவ்வபிப்பிராயஞ் சரியெனக் காணுமிடத்து அதற்கிணங்கி யாம் நடத்தல் ஒருதலை. பேதமேற்படுமிடங்களில் அதன் காரணங்களைவிளக்கி அபிப்பிராய மாற்றஞ்செய்யச் சித்தமா யிருக்கிறோம். ஆதலால், எவ்விஷயத்திலேனும் எமதபிப்பிராயத்தோ டிணங்காதார் யாமெங்ஙனம் வழுவினோமென்பதை யெடுத்துக் காட்ட வேண்டுகிறோம். இங்ஙனஞ் செய்தல் தங்கள் கடமையென்றும், செய்யாதொழிவது கடமையிற்றவறென்றும் யாவரும் நன்குணர்ந்தொழுக வேண்டுகிறோம். நம்மவர் இவ்வொழுக்க மேற்கொள்ளுவரேல், குலகாரியங்கள் சுலபமாய் நடைபெறும்; மேற்கொள்ளாமையினாலேயேதான் நாம் இந்நிலைப்பட்டிருக்கிறோமென்பது சற்று யோசனையிலேயே சாலப்புலப்படும். முக்கியமாய் எவரும் தம்மபிப்பிராயத்தை வெளிப்படுத்தப் பின்னிடலாகாது.

குலபூஷணமான வியாசங்களை அதிகமாய் வெளியிடுதற்கில்லையே யென்றும் எழுதித்தருவாரைக் காண்கிலமே யென்றும் யாம் வருந்தி யிருக்கின்றோமே யொழிய வேறில்லை. இவ்வருத்தத்தைத் தீர்க்கப் பண்டிதர்கள் பட்சங்கொள்ளலாகாதா? அப்பட்சம் கிடைக்கும் பக்ஷத்தில், அன்புகொண்டிருக்க வேண்டியவரெல்லாம் அருவெறுப்புக் கொண்டிருத்தல் அகலுதலும் ஆனந்தந் திகழுதலும் அரிதல்லவே!

* * *

### என்னென்ன எண்ணினோம்!

இம்மாதத்தோடு நமது பத்திரிகையின் ஐந்தாவதாண்டு நிறைவுறுகிறது. இவ்வைந்தாண்டுகளாக இப்பத்திரிகை யடைந்திருக்கக்கூடிய விருத்தி யெய்தவில்லையே யென்றிரங்குவதினும், இம்மட்டும் உயிர்பெற்றிருக்கின்றதே யென்றெண்ணி மகிழ்வதிலே சிலாக்யமெனத் தோன்றுகிறது. பத்திரிகை யாரம்பித்தகாலத்துக்கொண்டிருந்த எண்ணங்களெல்லாம் இருந்த விடந்தெரியா தகன்றொழிந்தன.

ஆயிரஞ் சந்தாதாரர்களுக்குக் குறையாமல் அரையாண்டிற் கிடைக்கலாமென்றெண்ணினோம். அப்போது, பத்திரிகைச் சந்தாவை மிகக்குறைந்ததொகைக் கிறக்கி மிக்க ஏழையரும் பெற்று வாசிக்கச் செய்தலாகுமென்றெண்ணினோம். அல்லது பத்திரிகைப்பக்கங்களைப் பெருக்கிப் பலவிஷயங்களைப் பிரசுரிக்க லியலுமென் றெண்ணினோம். மாதமொருமுறை வெளியிடுதற்குப் பதிலாக, கிரமக்கிரமமாக, மாதமிருமுறை, வாரத்தொருமுறை, வாரமிருமுறை வெளியிட வாய்க்குமென்றெண்ணினோம். அங்ஙனஞ் செய்தலால், நம்மினத்தவரேயன்றி பல ஜாதிச் சகோதரர்களும் நமது பத்திரிகையைப் படிக்கவும், நாளடைவில் நமது முயற்சிகளைப் பாராட்டவும் அன்புசெய்யவும் ஆதரவுதரவும் சாதனமேற்படுமென்றெண்ணினோம். குலத்தாரெல்லாம் கூட்டங் கூட்டமாய்ச் சந்தாதாரராய்ச் சேர்ந்து, பத்திரிகையைப் பட்டணங்களிலும், கிராமங்களிலும், கிராமாந்தரங்களிலும் பரப்பி, ஆங்காங்குள்ளார் ஆவலோடு வாசிக்கச்செய்து, அவ்வழி நம்மவர் தமது குறைகளைக்கண்டு போக்கிக்கொள்ளவும் நெறியறிந்தொழுகவும், சுதந்திரங்களைச் செலுத்தவும் முற்படுவார்களென்றெண்ணினோம். ஜில்லாக்கள்தோறும், தாலுக்காக்கள்தோறும், பிர்காக்கள்தோறும் சபைகளேற்பட்டு, குல விஷயங்களைக் கவனித்து வேண்டிய நடவடிக்கைகள் செய்யப் போதிய தூண்டுதலுண்டாகுமென்றெண்ணினோம். குலபண்டிதர்களாகவும் குலாபிமானிகளாகவுமுள்ளாரெல்லாம் குலசம்பந்தமான விஷயங்களைப்பற்றிக்கூசாது தமதபிப்பிராயங்களை வெளியிட்டுதவுவார்களென்றெண்ணினோம். பத்திரிகையில் வெளிவரும் பற்பல வியாசக்கருத்துகளையும் ஊரூர்கள்தோறுமுள்ளார் ஆராய்ந்து அவற்றிற்கிணங்க நம்மவர் நடக்கச்செய்வரென்றெண்ணினோம். நாட்டாண்மைக்காரர், காரியஸ்தர், குலத்தலைவர், குலபௌரோகிதர் முதலாயினோர் பத்திரிகையைப் பாராட்டி அதனபிவிருத்திக் கநுகூலங்கள் செய்வரென்றெண்ணினோம். பத்திரிகைச் சந்தாவருமானம் பெருமிச்சந்தந்து, விஸ்வகர்ம வித்தியார்த்திகளுக்குச் சகாயம், விஸ்வகர்மாலயச் சீர்திருத்தம், " விஸ்வகர்ம சத்திரஜீரணோத்தாரணம், விஸ்வகர்மத்தொழிலபிவிருத்தியாதிய குலோபகாரக் காரியங்கள் பலவற்றிற் கொருவாறேனு முதவுதற் கிசையுமென்



றெண்ணினோம். இதுகொண்டு, சுற்றுப்பிரயாணிகளை நியமித்துக் குலத்தார்க்கெல்லாம் அவர்கள் கடமைகளை விளக்கி அவர்கள் குலப்பொதுமுயற்சிகளில் கூடியுழைக்க இணக்கலாமென்றெண்ணினோம். இன்னுமிவ்வாறாக எத்தனையோ எண்ணங்கள் சித்தத்திற்கொண்டிருந்தோம்.

எவ்வெண்ணம் எவர் கொண்டபோதினும்குலக்காரியங்களில் குல சகாயமின்றிக் கூடிவிடுதலாகாதன்றோ? இவ்வெண்ணங்களில் எவ்வெவை எவ்வளவு மட்டில் ஈடேறினவென்பதை யாமெடுத்துக்கூறுதலனாவஸ்யம். வாசகர்களேஎண்ணிப்பார்த்து அவரவர்கள் சுபாவத்திற்கும்பக்குவத்திற்கும் அபிமானத்திற்கு மேற்றவாறு துக்கமோ, வெட்கமோ, சந்தோஷமோ மற்றெதுவோ கொள்ளட்டும். யாமதைப் பாராட்டிப் பயனில்லை யென்பதைக் கண்டுகொண்டோம். —மேற்கூறியவை போன்ற எண்ணங்களை ஈடேற்றுவிப்பதில் இனியேனும் எங்குலத்தார் இஷ்டங் காட்டுவார்களா வென்றே எதிர்பார்த்திருக்கின்றோம்.

* * *

நமது யாழ்ப்பாண நிருபர் எழுதுகிறார்— தென்னிந்திய குலங்களுஞ் சாதிகளும் என்ற ஏழு பெரிய புத்தகங்களாக ஆங்கிலத்தில் படங்களுடன் சென்னை நூதன சாலைத் தலைவராகிய எட்கார் தர்ஸ்டன் துரையாலும்,பிராமணராகிய அரங்காச்சாரி என்பவராலும் எழுதிவெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் கம்மாளரைப்பற்றியும் பிராமணரைப்பற்றியும் அதிகம் வரையப்பட்டிருக்கிறது. கம்மாளரது உயர்வையும், இழிவையும், பிந்தியதில் அதிகமாயும் பலமாயும் எழுதப்பட்டிருக்கிறதுந் தவிர பிராமணரது உயர்வையே அதிகமாகவும் பலமாகவுங் காட்டியிருக்கிறது. வேளாளரையும் பற்றி நன்றாய்க் கூறியிருக்கிறது. ஆயின், சில விஷயத்தில் மாத்திரம் வெளிப்படையாய்ப் பட்சபாதங் காட்டி யிருப்பதாகத் தெரியவருகிறது. ஒரு குரூபியான கம்மாளப்பெண்ணைப் படம்பிடித்துக் கம்மாளப்பெண்களின் பிரதிநிதிபோல அமைத்ததல்லாமல் ஒரு பார்ப்பாரப்பெண்ணின் படமும் போடவில்லை. மேலும், கம்மாளரைப் பற்றிய பழமொழிகளென தாய்ப்பொன்னுக்குள் மாப்பொன் னெடுக்கிறது என்றற் றொடக்கத்துச் சில போடப்பட்டிருக்கிறதேயல்லாமல், பார்ப்பாரைப்பற்றிய பழமொழிகளாகிய காப்படியரிசிக்குக் காதவழி நடப்போர் உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பாத்தி, வெள்ளான் கிரந்தமும் பார்ப்பான் தமிழும் விழல்விழலே, பிராமணன் பேராசைக்காரன் என்றற் றொடக்கத்துப் பழமொழிகள் பலவற்றில் ஒன்றேனும்போடவில்லை. அரங்காச்சாரியைத் தற்கால வியாசரென்னலாம். ஹே! விஸ்வகர்மாக்களே! இன்னும்தூக்கமா? நும் சிறுவர்களுக்கு நாகரம் தமிழ் சமஸ்கிருதம் ஆங்கிலங் கற்பிக்கமாட்டீர்களா?

---

## செயற்கை விநோதம்.

### பசுக்களுக்கு மூக்குக்கண்ணாடி.

பர்மிங்ஹாம் என்றவூரில் ஒருவர்த்தகர் மூக்குக்கண்ணாடித் தொழிலையே செய்து அதிக திரவியத்தைச் சம்பாதித்தனராம். அநேகமாய் இக்கண்ணாடிகள் ஸைபீரியாவிலுள்ள ஏனங்களே வாங்குகிறார்களாம். இப்படி இவர்கள் வாங்குவதற்குக் காரணம் அத்தேசத்தில் பனிக்கட்டி மிகுதியென்றும் அப்பனிக்கட்டிகள் நிறைந்த புற்களை மாடுகள் மேயும்போது அப்புற்களின்மேல் சூரியவெப்பம் பட்டதும் பசுக்களுக்கு கண்தெரியாமல் போய்விடுகிறதென்றும், அதனால் மேற்படி மூக்குக் கண்ணாடியை தோலில்மாட்டி மாடுகளுக்கு கட்டி விட்டால் அவைகளுக்கு கண் நன்றாய்த் தெரிகின்றதென்றும் சொல்லப்படுகிறது.

## நமது ஜாதிக்குறைகள்.

(194-வது பக்கத் தொடர்ச்சி)

*குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு.

கல்வி யழகே யழகு! ஒவ்வொரு ஸ்திரீ புருஷருக்கும் இந்த அழகிருக்கவேண்டும். அஃதிலார் அவலக்ஷணராகையால்அவர்கள் தங்கள் கேவலத்தைக்கண்டு வெட்கச்செய்யவேண்டும். அப்போதுதான் பெற்றவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் கல்வி கற்பிக்கவேண்டுமென்றும், கற்கவேண்டு மென்றும் புத்திவரும்: நிர்ப்பந்தமும் ஏற்படும். அவ்வித நிர்ப்பந்தம் ஏற்படுமளவும் பெற்றவர்கள் கல்வி கற்பிக்கமாட்டார்கள். பிள்ளைகளுங் கற்கமாட்டார்கள்.

'நம்மவர்கள் படிக்கவேண்டும்' . 'நம்மவர்கள் படிக்கவேண்டும்' என்று நாவசைத்துக்கொண்டு நாள் கழிப்பதிற் பயனில்லை. 'சாபக்கட்டு' 'சாபக்கட்டு' என்று சலிப்பதிலுங் குணமில்லை. தெய்வத்தை நோவதிலும் பிரயோசனங் கிடையாது.

கடவுளீ குவனென் றெண்ணித் தியமுங்
கருதுறு முயற்சிசெய் யானே
லடவுறு செல்வ மடைகுவ னேகொ
லருங்கலத் திட்டபா லடிசின்
மிடலுடைக் காத்தா லெடுத்துணு தெங்ஙன்
வீங்குவெம் பசிப்பிணி யொழிப்ப
னுடல்பவர் தனக்கோ ராசர மாகு
முடனனி வாட்டுமெய்த் தவத்தோய் —

என்னுங் குசேலோ பாக்கியான வாக்கியப்படி, கடவுள் கொடுப்பானென்று யாதொரு முயற்சியுஞ் செய்யாதவன் செல்வமடைவனு? பாற்சாதத்தை ஓர்பாத்திரத்திலிட்டு அதனெதிரில் உட்கார்ந்துகொண்டால் பசிதீருமா? கையினலெடுத்துண்டாலன்றிஅவ்வன்னம் வாய்வழிச்சென்று வயிற்றை நிரப்பிப் பசியை யடக்கமாட்டாது. ஆதலால்,அததற்கேற்ற பாடுபட்டால்தான் அதது கைகூடும்.

நம்மவர்கள் ஏன் படிப்பதில்லை யென்று நாம் உள்ளபடி ஆராயவேண்டும். அவர்களை எந்தவிதத்தாற் படிக்கச்செய்யலாமென்று பலருங்கூடி ஆலோசிக்கவேண்டும். அவர்கள் படிப்பதற்கான வழிகளும் சௌகரியங்களும் தேடி யமைக்கவேண்டும். தந்தையர் தொழிலாளிகளா யிருப்பதினுல் தமது மக்கள் தமக்கு உதவியா யிருக்கக்கூடிய பருவமடைந்ததும் அவர்களை வேலைகளில் விட்டுவிடுகிறார்கள். பின்னர், அவர்கள் சம்பாதித்து வரவேண்டு மென்னும் ஆசை கொள்கின்றனர். 'பத்து வயதில் அவன் ஐந்து ரூபாய் சம்பாதிக்கச் செய்வதைவிட்டு, அவனுக்காக ஐந்து ரூபாய் செலவிடுவதா?' —என்று வாதாடுகின்றனர். இவர்கள் செலவுகளும் அதிகம். விதரணையாய் வாழ இவர்களறியார். கொஞ்ச கஷ்டத்துடன் விசேஷப்பொருள் சம்பாதிக்க் வேண்டுமென்னும் உணர்ச்சியும், அப்படிச் செய்வதற்கான அறிவும் பொறுமையும் இவர்களுக்குக் கிடையாது.

தாய்தந்தையர் கல்விநல மில்லாதவர்களாகவும், அதன் பெருமை யறியாதவர்களாகவு மிருப்பதால், படிக்கும் பிள்ளைகளை நடத்தும் வழி தெரியாது அவர்களைக் கெடுப்பது முண்டு. படிக்குஞ் சிறுவர்களுக் கேற்படுந் துணைவரோ படியாமூடர்களே யாதலால் அவர்கள் படிப்போன் வழியைப் பலவிதத்திலும் பங்கப்படுத்தவுஞ் செய்கின்றனர். அப்பன் கல்லாதவன்; அம்மா நிரட்சரகுட்சி; ஆயா 'இவன் படித்துப் பாஸ்பண்ணி வாழ்ந்தான்—இழுத்து ஒருவேலைகற்பி' யென்பாள்; அம்மானும் அதுவே சொல்லுவான்; அண்ணன் நிர்மூடன்; கூட்டாளி குந்தனவேலைக்காரன்; சிநேகன் செம்புக்கன்னன். இவர்களிடையில் ஒருவன் எப்படிப்படித்து ஈடேறுவான்? எத்தனைநாள் படிப்பான்? மூன்று நாட்களில் மோகம் மாறுகிறது! நாலாநாள் நாயனுவிடத்திலோ, நாகப்பாச்சாரியிடத்திலோ, நல்லமுத்து படையாச்சி யிடத்திலோ வேலைக்குப்போகிறான். இதிலும் பிசகில்லை.





வேலைசெய்யும் வேளை யொழிய மற்ற நேரத்தில் தன் தாய்ப்பாஷையைப் படிக்க எழுதக் கற்றுக்கொள்ளுகிறனு? அதற்காவது அவன் தாய் தந்தையராதியோர் அவனைத் தூண்டுகிறார்களோ வென்றால் அதுவுமில்லை. பெரியவேலை செய்வோரும், பெருஞ் சம்பாதனைக் காரரா யுள்ளவர்களிலும் பலர் கையெழுத்துப் போடவும் அறியாம லிருக்கின்றனர். கையெழுத்தே தெரியாதபோது கணக்கு வழக்குகளைப் பற்றி இவர்களுக்கென்ன தெரியப்போகிறது? அவற்றையும் இவர்கள் சரியாய் நடத்திவருவதாய் வைத்துக்கொண்டாலும், லௌகிக விவகாரங்களில் இவர்கள் யாதொன்றும் பேசத் தெரியாதவர்களாய்ப் பின்னிடவே நேரிடுகின்றது. இவர்கள் புகழெல்லாம் இவர்கள் சம்பாதனையே. மற்றப்படி இவர்களை மதிப்பாரில்லை.

அச்சம்பாதனையிலாவது இவர்களுக்கென்றொரு மதிப்புண்டா? அதுவுமில்லை. ஏனெனிற் கூலிப்பிழைப்பே யல்லவா! 'அடே' யென்பானும், சடிந்து பேசுவானும், நிஷ்டூரப்படுத்திக்கொள்வானும், இங்குவா அங்குவா வென்பானும், காவல் காப்பானும், காசுகொடாதுஅலக்கழிப்பானும் ஆகிய இத்தியாதி எஜமானர்களுக்கு ஆட்பட்டு நடுங்கிப் பதைத்து வாழ்வோனுடைய தொரு சம்பாதனையா? இவனுடைய வாழ்வும் ஒரு வாழ்வா? அன்றியும், ஒருவனுடைய பெருமை அவன் சம்பாதனையினுல் நிச்சயிக்கப்படாமல் அந்த சம்பாதனை செலவழிக்கப்படும் வழிகளினுல் நிச்சயிக்கப்படவேண்டுமென்று அறிவாளிகள் கூறியிருக்கின்றனர்.

நிற்க, எந்தக்காரியத்திலும் கற்றவன் முன்னிற்பான். அவனையே எல்லோருங் கௌரவப்படுத்துவர். கல்லாதவன் எவ்வளவு பொருளுடையவனுயினும், எவ்வளவு மூத்திருந்த போதிலும பின்னுக்குத் தள்ளப்பட்டுத் தலைகவிழ்வான்.

*திரியழற் காணிற் றொழுப விறகி
னெரியழற் காணி னிகழ்ப-வொருகுடியிற்
கல்லாது மூத்தோனைக் கைவிட்டுக் கற்ற
னிளமை பாராட்டு முலகு.

விளக்கழலைக்கண்டு கைகூப்புவோர் விறகினழலை யிகழுகின்றனரன்றோ? அன்றியும் 'ஊமைக்குஉளறுவாயன் உற்பாதபிண்டம்' என மூடசமூகத்தில் கற்றறியான் வார்த்தை சொன்னலும்,

† காணுமல் வேணதெல்லாங் கத்தலாங் கற்றோர்முன், கோணுமல் வாய்திறக்கக் கூடாதே—நாணுது, பேச்சுப் பேச்சென்னும் பெரும்பூனை வந்தக்கால், கீச்சுக் கீச்சென்னுங் கிளி—என்றவாறு,

* நான்மணிக்கடிகை. † நல்வழி.

கற்றறிந்தவர் முன்னிலையில் அவன் வாய் பொத்தி யிருக்கவேண்டிய அவஸ்தை யுறுவான். அவனுடைய வாக்கு அங்கு செல்லாது. "எழுத்தறியார் கல்விப் பெருக்கமனைத்தும் எழுத்தறிவார்க் காணினிலை" யாகும் அன்றோ!

இனி, ஒவ்வொரு மனிதனுக்கும் கல்வியின் பெருமையும், அஃதில்லாமையினால் வருங் கஷ்டங்களும் எப்போதேனும் தோன்றமே யொழியத் தோன்றாமற்போகா. அப்போது வருந்துவதினால் குணமுண்டாகாது. பருவத்திலேயே படிக்கவேண்டும். சண்செட்ட பிறகு சூரிய நமஸ்காரஞ் செய்வதெப்படி? அப்படிப்பட்ட சமயத்தில் நினைந்துதான் ஒருவன்,

அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னு மா
டையு மாதரவால், கொள்ளிக்கும்பட்ட கடனுக்
குமே யெனைக் குறித்ததல்லால், துள்ளித்திரி
கின்ற காலத்திலே யென் றுடுக்கடக்கிப், பள்
ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே.

என்று கதறியழுதான். அப்படியே கல்லாதவ னெவ்வொருவனுங் கதறுவானென்பதில் சந்தேகமில்லை. ஆதலால், 'தந்தையாகிய பாதகன்' என்னும் பட்டம் தங்களுக்கு வாராதபடித் தகப்பன்மார் தப்பித்துக்கொள்வார்களாக!

தங்கள் புத்திரர்களைப் படிப்பிக்கக்கூடிய நிலைமையில் பலரிருக்கின்றனர். ஆயினும் இவர்கள் படிப்பிக்கிறதில்லை. மற்ற ஜாதியார், முக்கியமாய் 'ஆருஷேயர்' எவ்வளவு ஏழைகளாயினும் எப்பாடு பட்டாயினும் தங்கள் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்கின்றனர். அப்படியே நம்மவர்களுஞ் செய்யவேண்டும். பொருளுடையவர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக் கனுப்பும்படி அவர்களை நிர்ப்பந்திக்கவேண்டும். இல்லாதவர்களுக்கு உதவி செய்யவேண்டும். இதற்காகவே, ஊர்கள்தோறும் சபைகள் சேரவேண்டும். பலரிடத்தி லிருந்தும் பொருள் வசூல்செய்து அதை நமது குலச் சிறுவர்களுடைய பள்ளிக்கூட சம்பளத்திற்காகவும் அவர்கள் உடையுண்டிகளுக்காகவுஞ் செலவிடவேண்டும்.

தனிப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்கவேண்டுமென்பது தப்பெண்ணம். அங்கங்கிருக்கும் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று படித்தாற் போதும். இதற்கு வசதிகள் ஏற்படுத்துவதில் நம்மவர்கள் கவனம் வைப்பாராக. ஆருஷேயச்சிறுவர் ஊர்விட்டு ஊர் படிக்க வருதலும், தினமொரு வீட்டாய்ப் பலர் வீடுகளினு முண்பதும், சம்பளமின்றி வாசிக்கச் சிபார்ஸ் பெற்றுக்கொள்வதும், யாருதவியாலேனும் புஸ்தகங்கள் பெறுவதும், நன்றாய் வாசித்து 'ஸ்காலர்ஷிப்' என்னும் உபகாரச் சம்பளம் பெற்று மேன்மேலும் வாசிப்பதும் நம்மவர் அறியாரா? அதுபோன்ற மாதிரிகளை இவர்களேன் அநுசரிக்கலாகாது? அவர்கள் தமது குலச்சிறுவரைத் தழுவி யாதரிப்பதுபோல் நாமேன் நமது குலச் சிறுவர்களுக்கு நன்மைசெய்யக்கூடாது? அவர்கள் கற்றறிந்த விவேகிகளாதலால் அப்படி நடக்கிறார்கள்; நாம் கல்வியறிவில்லாதவ ராதலால் இப்படி யிருக்கின்றோம் போலும்!

தேனொழுகப்பேசித் தெருவழியே விடுவதினாலும், வாய் வாழைப்பழமாகவும் கை கருணைக்கிழங்காகவு மிருப்பதினாலும் என்னபலன்? இந்த வகுப்பினரை நம்மவர்கள் சாராமல், உள்ளபடியே ஜாதியினேற்றத்



தை மனதிற் கொண்டவர்களாய்த் தங்கள் உடல் பொருள் ஆவிமூன்றையும் தமது குலோத்தாரணத்திற்காக விநியோகிக்கக்கூடிய உத்தமரை அடைந்துய்வாராக. அன்றியும், ஒவ்வொரு ஊராரும் 'எங்களூரில் வாசித்தோர் குடும்பங்கள் சென்ற வருஷத்தில் இத்தனை யிருந்தன. இவ்வருஷம் இத்தனையாயின. இத்தனைபேர் இந்த அந்தஸ்திலிருந்தார்கள். இப்போது இவ்வளவு அந்தஸ்திற்கு ஏறியிருக்கின்றனர். சென்ற வருஷம் இத்தனைபேருடைய கல்விக்கு உதவினோம். இவ்வருஷம் இவ்வளவு செய்வோம்' என்று பலரும் மெச்ச அவர்களுக்கு எடுத்துக் காட்டக்கூடியபடி வருஷத்திற்கு வருஷம் கல்வி பெருக்கிக் கனம்பெறுவார்களாக. இல்லாவிடில்,என்றும் ஒரேபடியிலிருப்போம்.

இனி, ஒன்று அவஸ்யமா யிருக்கிறது. பணம் அவஸ்யமில்லை; அதிகாரம் அவஸ்யமில்லை; சாமர்த்தியம் அவஸ்யமில்லை; புகழ் அவஸ்யமில்லை; சுதந்திரம் அவஸ்யமில்லை; தேகாரோக்கியமும் அவஸ்யமானதல்ல: ஆனால் குணமொன்றே, பூரணமாய் வசப்பட்ட மனோவிர்த்தி வாஸ்வதமாய் நம்மை யிரட்சிக்கக்கூடியது. இக்கருத்தின்படி நாம் கடைத்தேறுவிடில், அட்டியில்லாமல் அழிவடைவோம்.

கீழ்ப்படிதலென்னுங் குணம் நம்மவர்களிடங்கிடைப்பதரிது. இக்குணத்தை யனுசரித்து ஒருவனை எண்ணிறந்த சற்குணங்கள் சாருகின்றன. இக்குணமில்லாதவன் எக்காரியத்திற்கும் இசைந்தவனாகாமல் எவராலும் இகழப்படுவான்.

(இன்னும் வரும்.)

இராமனுஜர் சரித்திரம் பக்கம் 126 — 133.

## சிக்கனமே சீர்தரும்.

[திருநெல்வேலி விஸ்வகர்ம சன்மார்க்கசபையில் 7—11—18உ யன்று ஸ்ரீ T. தங்கவேலு ஆச்சாரியாரவர்கள் செய்த உபந்நியாசச் சுருக்கம்.]

அளவுகடந்த முகஸ்துதியை விரும்புவதே இந்துக்களின் குறைவிற்குக்காரணம் என்று ஒருபெரியவர் கூறியிருக்கிறார். முகஸ்துதிகளில் தேர்ந்தவர்கள் ஒருவன் சொத்துக்களைப் பல வழியாலும் சூறையாட வழிதேடி ஓட்டாண்டியாக்கி விடுவார்கள்; வேலையின்றி, சோம்பித்திரியும் புத்திசிகாமணிகள் தனவந்தர்களைவிசேடகாலங்களில் தங்கள் மனம்போல் ஆடவைத்து அவர்கள் வாழ்நாளைக்கழித்து வருகிறார்கள். அவர்கள் சமயம்பார்த்து உள்நுழைந்து மந்திரம் ஜெபிக்கும்போது ஸ்திரீகளும் சாம்பிராணி தூபம் காட்டுகின்றார்கள். ஆடவர்களும் தலைசுற்றி ஆடுகிறார்கள். இந்த ஆட்டம் அலங்கோலத்திற்குஆளாக்கி ஆற்றொணாத் துன்பத்தை விளைவிக்கின்றது.

விவாஹகாலத்தில் விமரிசையாய்ச் செலவிடும் கூட்டத்தாருக்கும் (சமுதாயத்தாருக்கும்) குழந்தைகளுக்கும் யாதொரு பேதமில்லை. குழந்தைகள் ஆடம்பரத்தையும் நிகழ்காலத்தையும் மாத்திரம் சிந்திப்பார்கள்; வருங்காலத்தைக் கனவிலும் கருதார்கள்; ஆராதூரியாகச் செலவிடும் சீமான்களும் வருங்காலத்தைப்பற்றிச்சிந்திப்பதில்லை. இக்குணந்தான்கலியாணக்கடனுக்காக் கண்ணீர்விட்ச்செய்வது. கடன் வாங்கின சொத்திற்கு ஏராளமாய்க் கொடுக்கப்படும் வட்டி சுமக்கமுடியாத சுமையைக்கடனாளிகள் தலையில் ஏற்றிச் சீவன்பரியந்தம் சிந்தனைக்கு இடமாக்குகின்றது.

* பம்பாய் மாகாணத்தின் கரையோரத்தில் கொங்கன் என்ற ஓர் கிராமம் உண்டு அவ்வூரிலுள்ளவர்களுக்கு ஒரு அடி நிலமாவது ஒரு சிறிய வீடாவது கிடையாது; காரணம், கலியாணத்திற்கு அவைகளை அடமானஞ்செய்து ஆராதூரியாய்ச் செலவிடுவதுதான்.

கலியாணத்திற்குப் பின் நேரும் செலவிற்கு 100, 200, ரூபாய் வேண்டும்போது, தனவந்தர்களுக்கு சிலகாலமாவது ஜீவகால பரியந்தமாவது அடிமைகளாயிருந்து பெறுகிறார்கள். அவர்கள் கலியாணத்திற்கும் தரித்திரத்திற்குமுள்ள சம்பந்தம் விவரமாய்த் தெரிகிறது. ஒரு ஏழைமனிதன் எங்களிடம் கூறினதாவது—தனது தந்தையார் 6 ஏகரா நிலத்தை வைத்திருந்ததாகவும், அன்னவரின் மூன்றுகுமாரரும் விவாஹவயதை யடைந்ததும் "வந்தது வாட்டும் என்னுடைய நிலம் போனாலுஞ்சரி எனது மக்கள் சரியானவிதமாக விவாஹஞ் செய்யப்பட வேண்டும்" என்று கூறி நிலங்களை விற்று நாற்றுக்கணக்காய்ச்செலவிட்டார்: நாங்கள் 2-நாள் சந்தோஷசாகரத்தில் சார்ந்திருந்தோம்: அவர் வைத்திருந்ததெல்லாம் இழந்துவிட்டார்-என்றுபம்பாய்(Bombay Dyanödaya) ஞானோதயா பத்திரிகை கூறுகிறது.

இந்த நான் உங்களுக்குக் குறிப்பிட்டதெல்லாம், தனது ஆடம்பரத்தைக் கருதி 6 ஏகரா நிலத்தை விற்றுக் கலியாணஞ் செய்ததால் தன்மக்கள் கஷ்டப்பட நேர்ந்ததோடு நில்லாது தனது மக்களைக் காதலராய்க்கொண்ட கன்னிகைகளும் (பெண்களும்) கஷ்டப்படச் செய்த பாபத்திற்கு யார் ஜவாப்புதாரி என்பதை நீங்கள் சிறிது யோசித்து உணருவதற்குத்தான்.

ஒரு மனிதன் தன் ஐசுவரியத்திற் குட்பட்ட செலவைச் செய்வதுதான் தக்கது என்று (Mr. Bacon) மிஸ்டர் பேக்கன் துரை சொல்லுகிறார்.

ஆதலால் சகோதரர்களே! நான் வந்தனத்துடன் கூறுவதாவது:—

(1) இந்த ஆராதூரியான செலவைநீக்க வழிகள் தேடவேண்டும்.

(2) தகுந்த சமயங்களில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மனைவிகளிடத்தில் இதைப்பற்றி நன்றாய்ப் பேசிவரவேண்டும். கலியாணகாலம் வரட்டும் என்று இருக்கக் கூடாது. முன் ஜாக்கிரதை வேண்டும்.

(3) அறிவாளிகள் கூடும்போது இதைப்பற்றிப்பேசவேண்டும்; அரிய உபந்நியாசங்கள் அதிகப் பலன்தரும். துண்டுப் பத்திரிகைகளைக் கலியாணக் கூட்டங்களில் செலவிடும் வகையைச் சீக்கிரத்தில் சிந்திக்கவேண்டும்.

(4) சம்பந்தஞ் செய்வோர், நிச்சயார்த்தஞ்செய்கையில், விவாஹதினம் ஒருநாள் என்று திட்டஞ் செய்து கொள்ளுங்கள், (முன்சொன்ன கொங்கன்தேசத்துக் கதை உங்களுக்கு ஞாபகமிருக்கலாம்) கலியாண காலத்தில் களிப்படைய வேண்டாம் என்று கூறவில்லை. அந்தக் களிப்பு கலியாணத்தோடு கழிந்துபோகாமல் அதற்குப்பின்னும் நீடித்திருக்கக்கூடிய வழிகளைத் தேடவே நயந்துரைக்கிறேன்; இரண்டு நாள் இன்பமடைந்து மூன்றாம்நாள் முதல் கலியாணக்கடனைத் தீர்க்க வகையின்றி தியங்கித் தியங்கி தீராத வியாகூலத்திலாழ்ந்து வீட்டையும் நகைகளையும் அடகுவைத்து அயல்வீடுசென்று அன்னியர்

* *Indian Clerk*-Page 81.



அட்டகாசத்திற்கும் அடாதசெய்கைக்கும் அடங்கி அவமானப்பட்டு ஆற்றொணாத் துன்பக்கடலில் ஆழ்வதற்குக் காரணமான 5-நாள் விவாஹமும் ஆராதூரிச் செலவும் நமது கொள்கையினின்றும் அகற்றவேண்டிய அவசியத்தை அவசரமின்றி நிதானமாய்யோசித்தால் 5-நாள்விவாஹத்தை அகற்றி ஒருநாள் விவாஹத்தை ஒருமிக்க ஒப்புக்கொள்ளுவீர்கள்.

ஆராதூரிச் செலவை ஆகாதென்று கூறுகிறவர்களைக் குறை கூறுதல் தாய்க்கொலை செய்தோரை நேயரெனக்கொண்டதற்கொப்பாகும்.

நான் ஒரு ஆங்கில புத்தகத்தில் படித்தது ஞாபக மிருக்கிறது. அதாவது,— இராஜபுதனத்தில் விவாஹச் செலவைக் குறைக்கும் வழிகளைத்தேட ஒரு கூட்டங் கூட்டப்பட்டு அத்தேயத்தின் அநேக விடங்களிலுள்ள பல மதஸ்தர்களும் அவ்வழிகளை அமுலுக்குக் கொண்டுவரக் கேட்டுக் கொள்ளப்பட்டார்களாம். குடும்பத்தலைவர்கள் கூடிக்கலந்து தங்கள் தங்கள் குடும்பங்களில் அவ்வழிகளை அனுஷ்டானத்தில் கொண்டுவந்து குதூகலத்துடன்கூடி வாழ்கிறார்களென்று ஒருவர் எழுதி யிருக்கிறார். ஆகையால், அதிகநாள் விவாஹத்தால் அடிமைகளாய் அகதி அடைவதைவிட குறைந்தநாள் விவாஹத்தால் குதூகலங்கொள்ளலாம்.

பேதமைக் குணமுள்ளப் பெண்கள் இக்கெடுதிக்குக் காரணகர்த்தரா யிருப்பதால், பெண்கல்வியைப் பரவச் செய்யவேண்டும். இத்துர்வழக்கத்தைத்தொலைக்க அவர்கள் அறிவை விசாலப்படுத்துவதுதான் சரியான வழி; ஸ்திரீகள் ஆடவர்வார்த்தைக்கு அடங்கினவர்கள் என்று ஏட்டில் எழுதி எடுத்துக்காட்டி யிருந்தாலும் இதுபோன்ற காலங்களில் ஸ்திரீகள் வார்த்தைகளுக்கு ஆடவர்கள் அடங்கியே அநேகவிடங்களில் ஆடுகிறார்கள். ஆகையால், பெண் கல்வியின்றி எவ்விதப் பிரயத்தனமும் ஸ்திரமும் சாஸ்வதமுமான பலனைத்தருமென்று எதிர்பார்ப்பது துர்லபம். இதற்காகபெண்கள் படித்த பிறகு பார்த்துக்கொள்ளலாமென்று பழயவழக்கத்தைப் பலமாய்ப் பிடிக்கவேண்டாம்.

பத்து, பன்னிரண்டு விவாஹங்களை பாளையங்கோட்டைப் பட்டுநூல்காரர்கள் (சௌராஷ்ட்ரப் பிராமணர்கள்) ஒரே வீட்டில் நடத்திக்கொள்ளுவதை நம்மினத்தினர் காணவில்லையா? அவர்கள்செலவைக்குறைக்கச் சிறந்தவழி அதுவென்று அகத்தில் கொண்டுள்ளதினா லல்லவா அவ்வழியில் ஆனந்தமுறுகிறார்கள் ?

காரைக்கட்டுப் பிள்ளைமார்கள் வீடுகளில் நடைபெறும் கலியாணங்கள் ஓரேநாளில் நடைபெறவில்லையா? அவர்கள் செலவும், அவர்கள் கட்டுதிட்டங்களும் அவர்களை நல்வழிப் படுத்தவில்லையா? இவை யாவும் நீங்கள் இருந்து கவனிக்க வில்லையா? மற்ற விசேடங்களையும், எவ்வித வகையில் எவ்வளவு சுருக்கிச் செய்யலாமோ அவ்வளவு அடக்கிச் செய்வதினால் ஆறு ஏழு வருடத்தில் ஆயிரக்கணக்கான லேவாதேவியைச் செய்யக்கூடிய நிலையில் வருகிறார்கள். அவர்கள் துணிகளும் நகைகளும் எவ்வளவோ சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். நம்மினத்தினர் இதை எல்லாம் கவனிக்கவேண்டாமா ?

ஏன்! நமது வருமானம் மாதம் 1-க்கு மொத்தத்தொகையாய் பெறக்கூடியதன்று. மொத்தமாய் வந்தால், இன்னின்ன வகைக்கு இவ்வளவு என்ற (Budget) பட்ஜட் போட்டுக்கொள்ளலாம். அப்படி நாம் மொத்த வரும்படியைப் பாராதவர்களாதலினால் நமது செலவுகளில் நாம் அதிகஜாக்கிரதையா யிருக்கவேண்டும். ஒருவர் தனது பரியத்தைஉத்தேசித்து தனது ஜேஷ்டபுத்திரனுக்கு விவாஹத்தை விமரிசையாய்நடத்தியிருக்கலாம். அதுபோலவே மற்ற குமாரர்களும் செய்யப்பட வேண்டுமென்று வாதாடுவது அழகல்ல. ஸ்திரீகளும் இதில் பிடிவாதஞ்செய்தல்பேதமையாகும். இவர்களுக்கு இணங்கினால் இன்பத்திற்குப் பதில் துன்பமே பின்வந்து நேரும் (Happiness appears before a man. wearing the crown of sorrow on its head) சந்தோஷம், துக்கம் என்கிற கிரீடத்தைத் தலையில் தரித்துக்கொண்டு ஒருவன்முன் தென்படுகிறது—என்று ஸ்ரீமத் இராமகிருஷ்ணனந்த சுவாமிகள் ஓரிடத்தில் கூறியிருக்கிறார்கள்.

கலியாணகாலத்தில் சதுர்கச்சேரி, பாட்டுக் கச்சேரி முதலானவைகளை வைத்தல் முகஸ்துதியையும் பிறர் தன்னைப் புகழ்ந்துகூற வேண்டு மென்பதையும் விரும்புவதல்லால் வேறன்று. ஒருவன் தன் ஜீவியகாலத்தில், உறவினர்க்கும் சிநேகிதர்க்கும் சந்தோஷமுண்டாகக்கூடிய விருந்திலும், ஆடம்பரத்திலும் செலவிட்டு தனது புகழ்ச்சியை நிலைநாட்டச் சாட்சியாயிருக்கக்கூடியவைகளில் தனது சொத்துகள் எவ்வளவு நாசமானாலும் பெரிதல்ல வென்று கருதுகிறான். கீழ்மக்கள் கூட்டத்தையும், அவர்கள் துதிகளையும் வாழ்த்துக்களையும் விரும்பி தனது பொருளை விரயஞ் செய்வதில் விஸ்வகர்மாக்கள் முதல்பந்தயம் பெறுகிறார்கள். இவர்கள் விதரணையாய்ச் செலவிடாததுவே விபரீதமாகும்.

### போஜன ஏற்பாடு

முகூர்த்தத்திற்குப் பின் இவ்வளவு நேரத்திற்குத்தான் போஜனம் நடைபெறும் என்ற நிர்ணயமில்லை. அநேகமாய் 3-மணிக்கும் 4-மணிக்கும் நடைபெறும் முதல் பந்தி. வெளியில் வேலைக்குச் சென்று, 6, 7, மணிக்குத் தாம்பூலம்மாத்திரம் கொடுப்பதைத் தவிர்த்துப் போஜனஞ்செய்யும்படி நாடியைத்தாங்கிநல்லவார்த்தைகளின்று போஜனஞ் செய்துவைக்கையில் "கம்மாளனுக்கு இதுதான் வழக்கம், சரியானநேரத்தில் வருகிறதில்லை; நினைத்தபோது வருகிறது, ஊர்அழைக்கும்போதே வந்துதொலைந்தால் என்ன! அதுதான்வழக்கமில்லையே" -என்றுவருந்தப்படுவது நல்லகுணமாகாது. இச்செய்கை இரு திறத்தினருக்கும் இன்னலை விளைவிக்கின்றது. முகூர்த்ததினத்தில் இவ்வளவு வருத்தமிருந்தால் 5-நாளும் எவ்வளவு வருத்தம் ஏற்படுமென்பதை எட்டியோசியுங்கள்.

முகூர்த்தப்பத்திரிகையின் கீழ், போஜனம் நடைபெறும் காலத்தைக் குறிப்பிடவேண்டும். அந்தநேரத்தில் போஜனஞ் செய்துவைக்கத் தயாரா யிருக்கவேண்டும். அரை அல்லது முக்கால்மணி நேரம் முன்பின் இருக்கலாம். அப்போது வந்தவர்களுக்குப் போஜனஞ் செய்துவைக்கவேண்டும். பிறகு, தொலைதூரத்திலிருந்துவந்தவர்களுக்கு அடுத்த போஜனகாலத்தில் விருந்து செய்யவேண்டும். உள்ளூரி விருப்பவர்கள் நேரந்தப்பி வந்தால் தாம்பூலம் மாத்திரம் கொடுக்கவேண்டும். இதில் சமயோஜிதம் போல் நடந்துகொள்ளவேண்டும். இதைத் தைரியமாய் நடத்தக் கங்கணங்கட்டிக் கொண்டாலன்றி முதல் பந்தியிலிருந்து இரவு 11-மணி, 12-மணிவரை ஓயாது நடைபெறும் விருந்தும் நீங்காது; அதனாலுண்டாகும் சலிப்பும் சங்கடமும் சாராமலிராது.



சிலர் விவாஹத்திற்கு வருவதற்குச் சந்தர்ப்பமில்லாம லிருக்கக்கூடியவர்களுக்கு அன்னங் கொண்டுபோகப்படும் வழக்கத்தைப் *பின்பற்றி வருவதனால், சந்தர்ப்பமிருக்கக்கூடியவர்களும் சாக்குகள் பல சங்கோசமின்றி சாமர்த்தியமாய்க்கூறி சாதங் கொண்டுபோகும் பாத்திரங்களைத் தவரவிடுவதுபற்றி நீங்காத நிஷ்டூரமும், பலமான பகையும் பலவிதமாய் ஏற்படுவதை நீங்கள் கவனித்தால் ஒருநாள் விவாஹம் ஒழுங்காய் நடைபெற்று ஒருவருக்கும் சங்கடத்தையும், சலிப்பையும், சஞ்சலத்தையும் உண்டுபண்ணாமல் உத்தமவழிக்கிடமாகி ஓங்குபுகழை உண்டாக்குமென்பதை உத்தமர்களே உணர்வீர்கள்.

* [A recent Governor of Madras justly said in his Convocation address "He who could persuade his countrymen to give up their-to us astounding expenditure on marriage would do more for South India than any Government could do in a decade."]

சமீபத்தில், கனம் சென்னைக் கவர்னர் அவர்கள் சர்வகலாசாலைப் பட்டதாரிகள் சபையில் கூறினதாவது—"கலியாண காலத்தில் நடைபெறும் பிரம்மிக்கத் தக்கச் செலவை விடும்படி எவன் தனது தேசத்தார்களைச் சம்மதிக்கச் செய்கிறானோ அவன், பத்துவருஷத்தில் ஒரு கவர்ன்மெண்டார் தென்னிந்தியாவிற்குச்செய்வதைவிட அதிகஞ் செய்தவனாவான்."

சாஸ்திரத்தில் 5-நாள்விவாஹஞ் செய்யவேண்டுமென்று கூறி யிருந்தாலும் அது ஏற்பட்டகாலத்தில் சாமான்களின் விலைவாசி இவ்வளவு ஏற்றமுள்ளதல்ல வென்பதை நன்றாய் யோசியுங்கள். ஆகையால், சகோதரர்களே! நமது பத்திரிகையில் கூறி யிருப்பதையும் காலப்போக்கையும் கருதி ஒருநாள் விவாஹத்தை ஒவ்வொரு குடும்பத்திலும் நடத்த முன்வரவேண்டுமென்றும், மற்றவர்களையும் அவ்விதஞ் செய்யத் தூண்டவேண்டுமென்றும் வந்தனத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

### சிரார்த்தம்.

சென்ற சஞ்சிகையில் "அபரகிரியைச் சடங்குகளை யெல்லாம் சரிவரசெய்து முடிக்கவேண்டு"மென்று குலாபிமானப் பெருந்தகையாளர் ஸ்ரீ கன்னியப்பாச்சாரியார் அவர்கள் எழுதியுள்ளது யாவருடைய கவனத்திற்கு முரியதே. 13-நாள் சடங்கைச் சரிவரச்செய்வதில் சிலரே முன்வந்திருக்கிறார்கள். பெரும்பாலோர் ஆமசிரார்த்தஞ் செய்கிறார்கள்; சிலர் மாத்திரம் அன்னசிரார்த்தஞ் செய்கிறார்கள். ஏன் எல்லோரும் அன்னசிரார்த்தஞ் செய்யக்கூடாது? இவர்கள் இவ்விதஞ் செய்யாமைக்குக் காரணம் தெரியவில்லை. அதிகச்செலவு என்று கருதுகிறார்களா? செலவைச்சுருக்கிச் சிரார்த்தத்திற்கு வரிக்கக்கூடியவைகளை வைத்துக்கொண்டு வீட்டின்மட்டில்சுருக்கமாய்ச் செய்துகொள்ளலாமே! ரூபா 100, 200 என்று செலவிடவேண்டாம்; ஆருஷேயர்கள் எவ்வளவு ஏழைகளானாலும் விதிகளை

---

* *Indian Clerk*-Page 82.

அவர்கள் கைவிடுவதில்லை; சுருக்கமாய்ச் செய்துகொள்ளுகிறார்கள்.

13-நாளும், ஒவ்வோரிடங்களில், விருந்துகள் நடக்கின்றன. குறைந்தது 10 வீட்டுக்காரர்களுக்காவது விருந்து நடைபெறுகிறது; துஷ்டிகேட்க வருகிறவர்கள் காலை 6-மணிமுதல் மாலை 6-மணிவரை சிலவிடங்களில் வந்துகொண்டிருக்கிறார்கள். 10-மணிக்குமேல் வரக்கூடாதென்ற நிர்ணயமாவது, ஸ்நானஞ்செய்து போஜனஞ்செய்தபிறகு துஷ்டிகேட்கவரும் வழக்கத்தை விடவேண்டும் என்ற நிர்ணயமாவது வேண்டும்.

சாஸ்திரத்திற்கு விரோதமின்றி செலவை வீட்டின்மட்டில் எவ்வளவு சுருக்கிச் செய்து கொள்ளலாமோ அவ்விதஞ்செய்து கொள்ளுவது நலம்.

ஒரு மனிதன் மறு ஜென்மத்திலாவது மறு உலகிலாவது சந்தோஷத்தை அனுபவிக்கவேண்டியது அவன் கருமத்தைப் பொறுத்தது என்று இந்து சாஸ்திரிகள் கூறுகிறார்கள். அவனுக்குப் பின் (இறந்தவனுக்குப் பின்) செய்யும் கொடையாலும் சிரார்த்தத்தைக் (Gya) கயாவில் அபரிமிதமாய்ச்செய்வதாலும் "பாபம்" தொலையாது. தன் செய்கைக்குத் தக்க தண்டனையையாவது வெகுமதியையாவது கடவுளால் அவன் அடைவான்.

இவையாவும் சுய நலங்கருதி எளிதில் நம்பக்கூடிய பேதை ஜனங்களை மயக்கவே ஒரு வகுப்பினரால் ஏற்பட்டதாகுமென்று சிலர் கருதுகிறார்கள்.

நமது முன்னோர்கள் விஷயமாய் நாம் அன்பு செலுத்தக் கடமைப்பட் டிருப்பதால், சிரார்த்தச் செலவைச் சுருக்கிச்செய்வதோடு நமது வாழ்நாட்களை நல்லவழியில் கழிப்பதுதான் அவர்களுக்கு நாம் செய்யத்தகுந்த அன்பும் உண்மையுமான மரியாதையாகும்.

ஊரார்புகழ ரூபா 50—100 செலவிட்டு விமரிசையாய்ச் சிரார்த்தஞ்செய்துவிட்டு, பொய்ச் சத்தியம், களவு, பொறாமை, கள்குடி, காமம், அன்னியர்மேல் காதல், நம்பிக்கைத்துரோகம், அடுத்துக் கெடுத்தல், நயவஞ்சகம் இத்தியாதி தீயகுணங்களைக் கைக்கொண்டிருப்பதில் பிரயோசனம் எள்ளளவாகிலுமுண்டோ? இல்லை.

தமது குடும்பத்திற்கும், குலத்திற்கும், தனக்கும் இம்மையிலும் மறுமையிலும் எவ்விதப் பழிச்சொல்லிற்கும் தீமைக்கும் கூடிய வரையில் இடமில்லாமல் நடந்து சிரார்த்தக் கிரியைகளைச் சாஸ்திர யுக்தமாய்ச் சுருவாய் (சொற்பத் தொகையில்) நடத்திக்கொண்டு வுந்தால் குலம் விருத்தியடையுமென்பது நிச்சயம்.

ஒருவனுடைய ஐசுவரியம் அதிகமாயிருந்தால் சிரார்த்தத்திற்கு ரூபாய் 100, 200 என்று தடபுடலாய்ச் செய்யவேண்டுமென்ற அவசியம் ஏற்படவில்லை. மேலே குறிப்பிட்டபடி செய்துகொண்டு மிகுந்த பொருளை கல்வி சபை முதலிய விஷயத்தில் செலவிடலாம்; பணத்தின் வட்டியை படிக்குஞ் சிறுவர்களின் சம்பளம் புத்தகம் முதலியவைகளுக்கு உபயோகப்படும்படிச் செய்யலாம். இதனால், புண்ணியமும் கீர்த்தியுமுண்டாகும். முதலுமழியாது நீடூழிகாலம் நிலைநிற்கும். "பச்சையப்பன்" பரந்தபுகழை எவரேனும் எடுத்துரை செய்யவேண்டுமா? ஆகையால், விஸ்வகர்மர் தமது பெயர் நிலைநின்று தமது குடும்பம் நன்னிலையடைய ஆராதரிச்செலவை அகற்றிச் சாஸ்திர விரோதமின்றிச் சொற்பமாய்ச் செய்து கல்வியில் ஏராளமாய்ச் செலவிட வழிதேடி புண்ணியத்தைப் பெறுவதில் விஸ்வேசுரன் அருள்புரிவாராக.



## சிருஷ்டி.

(201-வது பக்கத் தொடர்ச்சி.)

### தலைப்பெயர்.

திருவாங்கூர்ராஜ்யத்தில் என்னுடைய பிரம்மஸ்ரீ மீனாக்ஷிபுரம்முந்தஜோஸ்யரவர்களாலும் செய்யப்பட்ட பெருமுயற்சியினால் சென்ஸஸ்ரிபோர்ட்டில்விஸ்வப்பிராம்மணரென்றும் பிராம்மணரைப்போலவே எல்லாவித கிரியைகளும் இவர்களுக்குண்டென்றும் சென்ஸஸ் கமிஷனர் ம-ா-ா-ஸ்ரீ N. சுப்பிரமணிய ஐயரவர்களால் எழுதப்பட்டிருக்கிறது. மதிராஸ் கவர்ன்மெண்டில் யாருடைய மித்திரபேதத்தினாலேயோ எழுதாமல் விட்டுவிட்டார்கள். இவ்விதப்பிரயாசையால் நாமடைந்த லாபமென்ன? ஆதிமுதலிதுபரியந்தம் ஒரேவிதமாக ஏதோ ஒரு சரியான பேரை ஸ்திரப்படுத்தி இது தான் ஜாதிப் பெயரென்று எழுதிவந்திருந்தால் இவ்விதக்கஷ்டத்திற்கு ஆளாகவேண்டாம்; இவ்வித மில்லாமல் ஒரோர் தேசத்தில் ஒருபெயரை வகித்து ஒருவர்க்கொருவர் தெரியாதிருந்துகொண்ட காரணத்தினால் இவ்விதப் பெரு முயற்சிக் காளானோம்; இந்த ஜாதிக்கு இன்னபெயர்தான் ஏற்பட்டுள்ளதென்பதை யறியாமல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் வாதாடிக்கொண் டிருக்கின்றனர். எந்தப்பெயரை வகித்தோமோ அந்தப்பெயருக்குச்சரியான காரணம் வேண்டும். அல்லாமல் விஸ்வப்பிராமணரென்று எழுதினால்மட்டும் போதாது. இதன்மூலமாய் எல்லா நண்பர்களும் இதைக் கவனித்து, தொழிலைக்கொண்டு ஜாதியா ஜென்ம தேசத்தினால் ஜாதியா வேறு எவ்விதத்தினால் ஜாதிபிரிக்கலாம் என்பதை நன்குணர்ந்து அவரவர் அபிப்பிராயங்கள் எழுதினால் ஒருவர்க்கொருவர் உள்ள பேதாபேதங்களைக் கலந்து அதினின்று காரணமூலமாய்ப் பாஷியஞ்செய்து ஸ்திரப்படுத்தி வெளியாக்கலாமென்றஅபிப்பிராயத்தோடிருக்கும். எனக்கு நேரிலோ அல்லது பேபரின் வாயிலாகவோ தெரிவிப்பார்களென்று நம்புகிறேன்.

இந்தியாவில் ஆந்திரநாட்டிலும் அத்தேசங்களுக்குச் சமீபமாயுள்ள திராவிடநாட்டிலும், ஆச்சாரியரென்று எல்லோரும் அழைக்கப்படுகின்றனர். அவ்விடத்திலுள்ளவர்களும், உம்முடைய பெயரென்னவென்று கேட்டால் "விஸ்வநாத ஆச்சாரி" என்றே தெளிவாய்ச் சொல்லுகின்ற மூலமாய் அந்நாட்டில் அப்பெயர் குன்றவில்லை: தென்னாட்டிலோ உம்முடைய பெயரென்னவென்று கேட்டால் கிருஷ்ணசாமி ஆஸாரி என்ற இலேசான ஸ வோடுகூடிய சப்தத்தோடும்சொல்லுகிறார்கள். சில இடத்தில் "ஆஸாரி" யென்றும் சிலவிடத்தில் ஆச்சாரி யென்றும் சொல்லிக்கொண்டு ஒருவரையும் எதிர்பார்க்காமலும் இதை இருவரும் கவனியாமலும் பிறஜாதியார் இவ்விதக்காரணத்தைப்பற்றிக் கிஞ்சித்தும் துவேஷங்கொள்ளாமலும் அவரவர் இஷ்டம்போல் எழுதியும் வந்ததை இவ்வித விவகாரத்துக்குத்தலைப்பட்டு ஆஸாரி, ஆச்சாரி யென்றதர்க்கம் கவர்ன்மெண்ட் வரையில் எட்டி அவ்விடத்தில் சேவகர்முதல் ஐகோர்ட்டு ஜட்ஜ்வரையில் பார்ப்பாராக உத்தியோகம் நடத்திவரும் பெருங்கூட்டத்தில் இவ்விதவிவகாரம் கொண்டுபோனால் வெள்ளைக்காரரல்லாத மற்ற எந்த ஜாதியாராலும் பார்ப்பார்கள் ஏற்படுத்திய பேதத்தினால் நமக்கு ஏதேனும் சாபல்யம் கிட்டுமா? நாமே நமது அனுபவவார்த்தை அதாவது நாம் இவ்விதமாகத்தான் சொல்

லவேண்டுமென் றுள்ளதை அறியாமல்
தவர விட்டுவிட்டால் மற்றவர்கள் என்செ
ய்வார்கள். நம்மை நாமே தெரிந்துகொள்
ளாதவர்களாக இருக்கும் நாம் இவ்விதவிவ
காரத்துக்கு ஆளாகாமல் முதலாவது நமது
வாக்கிலிருந்தே ஆச்சாரி யென்று மொழி
யச் செய்யத் தென்னாட்டாருக்கு கண்டிப்
பான ஆக்ஞைசெய்தாலே கவர்ன்மெண்டி
லும் அவ்வண்ணமே எழுதப்படுவோமெ
ன்று சொல்வதற்கு எட்டுணையும் ஐயப்பா
டில்லை.

### தொழில்.

மேனாட்டிலுள்ள தொழிலாளர் இன்ன
வித காரணத்தினால் தனவந்தர்களாகவும்
மஹா மேதாவிகளாகவும் உலகம் புகழப்ப
டத்தக்கவாறு இருக்கிறார்களென்பதை இந்
தியர்கள் அல்லது திராவிட தேசத்தா
ராகிய நாம் கிஞ்சித்தாவது கவனிக்கிருப்
போமானால் இவ்வாறு தாழ்ந்த ஸ்திதியை
அடைந்திருக்கமாட்டோம். ஜாதி மாத்
திரம் தற்புகழ்ச்சி செய்துகொண்டிருப்ப
தால் யாது பயனுளது?

*தற்புகழ்ச்சி கொண்டு தரணி யிருப்போரை*
*நற்புகழ்ச்சி நாட நவில்.*

மனிதராய்ப்பிறந்த எவர்களுக்கும் தற்
புகழ்ச்சி யிருந்தால் எவர்களும் புகழமாட்
டார்கள்; அவர்களுக்குப்பலவாறும் இடை
ஞ்சலே யல்லாது வேறல்ல.

ஆசாரம், ஒழுக்கம், தொழில் அபிவிர்
த்தி முதலியவை சரியாய் நடந்தேறுவதா
யிருந்தால் அதற்கு ஆதாரபூதம் கல்வி
யல்லவா? அக்கல்விகற்றலும் எவ்விதமிரு
க்கவேண்டும்.

*ஒற்றுமையும் கல்வியும்உண்டென்னி லன்னவ*
*நற்றுணையுஞ் செல்வம் நவில்.* [ர்க்கு

எத்தொழிலையும் எவ்விஷயத்தையும் ஒற்
றுமையோடும் செய்து வருவதே பெரு
நன்மையோடு கூடிய செல்வத்தைத் தரு
மென்று சொல்லப்பட்டிருக்கிறது.

நமது ஆங்கில ராஜபாஷையான இங்கி
லீஷைப் பார்ப்பார்கள் கைப்பற்றிய
தற்கு என்னகாரணம்? அவர்களுக்குள்
உள்ள ஒற்றுமையும் வித்யாபிவிர்த்தி மெ
ன்மேலும் பெருகி உத்யோகத்தில் உள்ள
அன்பின்பேரிலும் ராஜவிசுவாசத்தை ஒரு
வழியாகக்காட்டியதினாலும் ஸ்திரீபுருஷாள்
ஒவ்வொருவரும் சதா தெய்வபக்தியும் நல்
லொழுக்கமும் வகித்து வந்ததினால் இங்கி
லீஷ் பாஷையைமுழுவதும் கவர்ந்துகொ
ண்டு மேலான உத்தியோகத்தில் அமரக்
காரணம் ஏற்பட்டது.

கல்வியினால் தான் இகபரசாதனம் கிட்
டும். அதை விடாமல் கைப்பற்றுவதே
குணம். அல்லாமல், சோம்பேறிகளாய்த்
திரிந்துகொண்டும் யாதாமொரு காரியத்
தை ஆரம்பிக்கும் குலாபிமானிகளின் உத்
ஸாகத்தைக் கெடுக்கத் தலைப்பட்டுக்கொ
ண்டும் இருக்கிறவர்களைச் சத்புருஷாள்
எங்ஙனம் ஆதரிப்பது? அவர்களுக்கு நல்
லொழுக்கம் வருமா? எவ்விதம் போதித்
தாலும் முழுவதும் வீணாய்விடும்.

திண்டுக்கல் S. முத்துசாமி ஆச்சாரி,
திருநெல்வேலி.

---

### காகித மண்டபம்.

கிரீனிச் என்னு மூரிலுள்ள நட்சத்திர ஆபீ
ஸின் மண்டபம் வெகு அலங்காரமாக காகிதத்
தினால் செய்யப்பட்டிருக்கிறதாம். அம்மண்ட
பத்தின் நிறையோ 20-டன் என்று தெரிய
வருகிறது.



## நாம் க்ஷேமமடைவதெப்படி?

இப்பொழுது உலகத்தில் பெரும் பஞ்
சம் கிளம்பி ஜனங்களை வருத்துகின்றது.
ஜனங்கள் படும் கஷ்டமோ சொல்லமுடி
யாது. இதனால், சம்பாதனை இல்லாது நம்
மவர்கள் படும் கஷ்டமும் துயரமும் மிக
அதிகம். மிக்க பரிதாபம்; இதரஜாதியார்
கள் இந்தக்கஷ்டகாலத்திலும் ஒரு தொழி
ல் இல்லாவிடில் மற்றொரு தொழில் செய்
தாவது பணம் சம்பாதித்து தங்களையும்
தங்கள் குடும்பங்களையும் காப்பாற்றுகிறார்
கள், நம்மவர்களோ பெரும்பாலும் தாங்
கள் செய்யும் தொழிலைவிட்டால் வேறு
தொழில் செய்ய இயலார்கள், மனமும்
துணியார்கள். அல்லது நாலைந்து பேர்
சேர்ந்து ஒரு தொழிலையோ அல்லது
ஏதாவது ஒரு காரியத்தையோ செய்ய
ஒற்றுமைப்படார்கள்.

ஒரு குடும்பத்தில் ஒரு கனவானுக்கு
நாலைந்து குமாரர்கள் இருந்தால் அவர்கள்
ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான தொ
ழிலைச் செய்துகொண்டுவந்தால்ஏதோ ஒரு
காலத்தில் ஒரு தொழிலில் நஷ்டம் ஏற்பட்
டுப் பங்கம் நேரிட்டபோதிலும் மற்றதொ
ழில்களில் வரக்கூடிய ஊதியத்தினால் அந்
த நஷ்டத்தைப் பெரிதாகக் கருதாது
மனோதிடம்கொண்டு அத்தொழிலையோ
அல்லது வேறு தொழிலையோ ஆரம்பிப்
பதற்கு இலகுவாயிருக்கும். மேலும், பல
தொழில்கள் செய்வதின் வருவாயைவிட
எப்பொழுதும் அதிகமாகவே இருக்கும்.
அந்த நாலைந்துபேர்களும் ஒரே தொழில்
செய்துகொண்டு வந்திருந்தால் அத்தொழி
லுக்குப் பங்கம் நேரிட்டபோது அவர்கள்
யாவரும் ஒருங்கே கஷ்டப்படும்படி நேரி
டும். நம் ஜாதியரின் விஷயம் அப்படித்
தானிருக்கிறது. தகப்பனார் பொன்வேலை
செய்தால் பிள்ளைகளெல்லாம் பொன்வேலை
யே செய்கிறார்கள்; வெள்ளிவேலை செய்
தால் வெள்ளி வேலையே செய்கிறார்கள்.
உத்தியோகம் செய்தால் உத்தியோகமே
செய்கிறார்கள். அதனால்தான் ஒரு வேலை
க்கு இடையூறு நேரிட்டால் அவ்வேலை
யைக் கையாளுகின்றவர்களுடைய குடும்
பங்களெல்லாம் வருந்துகின்றன. அதுவே
நம்ஜாதிக்கு இழிவையும் அகௌரவத்தை
யும் வருவித்துக் கொள்ளுகிறது.

பண்டைக்காலத்தில் பயிர்த்தொழில்
முதலிய சில தொழில்கள் கொஞ்சம் தாழ்
ந்த ஜாதியார்களால்கையாளப்பட்டுவந்தால்
நாகரீகம் அடைந்த இக்காலத்திலும் அத்
தொழில்கள்செய்பவர்களைக் கொஞ்சம் தா
ழ்மையாகவே மதிக்கிறார்கள். நம்மவர்க
ளில் யாராவது அத்தகைய தொழில் செய்
யத் தலைப்பட்டால் அவர்களை ஏளனம்செய்
வதோடுகூட நம்மினத்தைச் சேர்ந்தவர்
கள் அல்லவென்றும் மறுத்துவிடுகிறார்கள்.
இது என்ன கொடுமை! அவர்களுக்குக்
கல்வியறிவு இல்லாமையே இப்பெரிய மதி
யீனத்துக்கு காரணமாகும். இனிமேலா
வது குலாபிமானிகள் நம் ஜாதியார் ஒவ்
வொருவருக்கும் தற்கால நாகரீகத்துக்
கேற்றவாறு நல்லறிவு புகட்டிச் சன்மார்க்க
வழிகளில் நடக்கும்படித்தூண்டுகோல் செ
ய்வது அவர்களின் முக்கிய கடமைகளில்
ஒன்றாகும்.

இப்பொழுது நம்மவர்கள் படும் கஷ்டத்
தை ஒருவாறு நீக்க ஒவ்வொரு குலாபிமா
னியும்முயற்சிப்பது அவர்கள் முக்கிய கட
மைகளில் மற்றொன்றாகும். அந்தந்த ஜில்
லாவிலுள்ள தனவந்தர்களெல்லாம் ஒன்று

ய்ச் சேர்ந்து ஒவ்வொருவரும் கொஞ்சம்
முதல் போட்டு ஒரு தொழிற்சாலையாவது
ஷாப்பாவது ஏற்படுத்தி வேலைகிடைக்காது
திரியும் நம்மவர்களை வேலைசெய்யச்சொல்
லி அவர்களை ஒருவாறு போஷிப்பார்களே
யானல் அவர்களுக்குப்பெரும்புண்ணியம்
கிடைப்பதோடு நம் ஜாதியின் குலாபிமா
னத்தையும் நன்கு விளங்கும்.

இப்பொழுது அநேகர் ஒரு விஸ்வகர்மா
வினிடத்தில் நகை முதலியவைகள் செய்வ
தற்கு வேண்டிய பொருள்களைக் கொடுக்க
நம்பாது கம்பெனி முதலிய ஷாப்புகளுக்
குப்போய் ஒருபங்கிற்கு இரண்டுபங்காய்ப்
பணம்கொடுத்து நகைமுதலியவைகளைச்சந்
தோஷமாய் வாங்கிக்கொண்டு போகிறார்
கள். நம்மவர்களுக்கோ மேன்மேலும்
பிழைப்புக்குப்பங்கம்நேரிடுகின்றது. மேற்
படி தொழிற்சாலையொன்று ஏற்படுத்தித்
தனவந்தர்களால் நடத்தப்பெற்றுவந்தால்
நம்மவர்கள் வரவர நல்ல பதவியை அடை
யவழிகாட்டுவதுமன்றி நெடுநாளாய் நம்ஜா
தியார்களின்மேல் சுமத்தப்பட்டிருக்கின்ற
கெட்ட அபிப்பிராயங்களும் சீக்கிரமே
நீங்கிச் சாபவிமோசனமும் ஆகுமென்பது
திண்ணம். இச் சென்னைமாநகரிலும் நெ
டுநாளாய்ச் சிலகுலாபிமானிகள் ஒரு தொ
ழிற்சாலைஏற்படுத்தி நம்மவர்களை கைதூ
க்கிவிட வேண்டுமென்று எண்ணிச்செய்த
முயற்சிகளுக்குச் சீக்கிரமே பலன்கிடைக்
கும் என்பது சொல்லாமலே விளங்கும்.

விஸ்வேஸ்வரன் ஒவ்வொருவர்மேலும்
கருணைகூர்ந்து அவரவர்கள் செய்யும் முய
ற்சிகளுக்குத் தப்பாமல் பலனடையும்படி
ஆசீர்வதிப்பாராக.

S. G. கிருஷ்ணன்,
சிந்தாதிரிப்பேட்டை

## தொழிற்குறிப்புகள்.

### வச்சிரத்தின் உத்தமஸ்திதியை எப்படி பரீக்ஷிக்கிறது?

அநுபோகப்பட்ட கண்ணுக்கு இது
நல்ல வச்சிரமென்றும், இதுநல்லதன்றென்
றும் கண்டுபிடிப்பது கஷ்டமல்ல. ஏனெ
ன்றால், உத்தமமான வச்சிரத்தின் மேல்ப
ட்டைகள் சிரேஷ்டமாகாத வச்சிரத்தின்
மேல்பட்டைகளைப்போல கணக்கான அள
வையுடையனவல்ல. சிரேஷ்ட மாகாத
வச்சிரத்தின் விஷயத்தில் பட்டைகள் கண
க்காக இருக்கும்படி வச்சிரப் பட்டை
போடுகிறவர்கள் அதிக சாக்கிரதை எடுத்
துக்கொள்ளுகிறார்கள். தேய்ப்பதிலேயும்
சாணை பிடிப்பதிலேயும் சுத்தப்படுத்துவதி
லேயும் மெருகுசாலை பிடிப்பதிலேயும் அதி
க கவனத்தைச் செலுத்துகிறார்கள். ஆகை
யினால் டால் அடிப்பதிலேயும் ஜொலிப்பதி
லேயும் ஓர் குற்றமும் குறைபாடுமிருக்கிற
தில்லை. பரீக்ஷிப்பதற்கு அவசியமான கரு
வி அரந்தான். சிரேஷ்டமான வச்சிரத்தில்
கீரல் விழாது. சிரேஷ்டமாகாத வச்சிரத்
தில் அல்லது கைப்பாடாகச் சேர்மானமா
ன உருக்கு வச்சிரத்தில் கீரல் அதிக சுலப
மாயுண்டாகும். அரக்கைக்காட்டிலும் பரீ
க்ஷிப்பதற்கு நீலம் அதிக மேன்மையான
து. கடினத்தில் வச்சிரத்திற்குப்பின் நீல
ம் வருகிறது. ஒரு பளபளப்பான வச்சி
ரத்தின் மேற்பாகத்தில் ஒரு துளி நீரை
விட்டு அந்தத்துளி ஒரு பென்சிலினுடைய
முனையைத் தொடுவதா யிருந்தாலும்கூட
அந்த நீர்த்துளி உருண்டையான வடிவத்
தையே உடையதாகும். ஆனால், வச்சிரம்
மாத்திரம் சுத்தமாயும் உலர்ந்ததாயுமிருக்கு
ம். இமிடேஷன் வச்சிரமாயிருந்தால் அ



ந்த நீர்த்துளி சீக்கிரமாய்ப்பரவுகிறது. ஒரு
வச்சிரத்தை நீரில் அமிழ்த்தினால் அது சா
தாரணமாய்க் காணப்படும் நீரில் ஜொலிக்
கும். இமிடேஷன் வச்சிரம் நீரில் போட்
டால் தோற்றமாகிறதில்லை. கண்ணாடியில்
பார்ப்பதுபோல் ஒரு வெள்ளைக் காகிதத்தி
லுள்ள புள்ளியை வச்சிரத்தின் மூலமாய்ப்
பார்த்தால் ஒரே புள்ளி சுத்தமாய்த் தெரி
யும். பல புள்ளிகள் காணப்பட்டாலும்
கருப்பு காணப்பட்டாலும் அது இமிடே
ஷன் வச்சிரம். வெண்மையான நீலத்தை
யும் வெள்ளை டோபாஸையும் வச்சிர
மென்று அடிக்கடி கடைத்தெருவில் விற்று
விடுகிறார்கள். இமிடேஷன் வச்சிரமெல்
லாம் கண்ணாடியினால்தான் சாதாரணமாய்
செய்கிறார்கள்.

சத்தியவசனன்.

* * *

### 18 காரட் பொன்.

இது இங்கிலீஷ்காரருக்கு இரண்டாவது
பொன். இந்த சேர்மானப்பொன் எம்மா
திரியான ஆபரணங்களையும் செய்ய முக்கி
யமானது. இதன் கலர் எல்லா பொன்னை
விட மிகவும் அழகாகவும் வேலை செய்வத
ற்கு அநுகூலமாகவும் இருக்கும். இந்தப்
பொன்னில் இங்கிலீஷ்காரர் கெடியாரக்
கேஸ் முக்கியமாகச் செய்து வருகிறார்கள்.
18 காரெட் என்று ஓர் சிறியஸ்டாம்பு செ
ய்து ஊன்றினால் நம்பிக்கையாகச் சொல்ல
க்கூடாது; ஆராய்ந்துபார்த்துச் சொல்ல
வேண்டியதாய் வரும். கவனிக்கவும்.

தொழில்களுக்கு மிகவும் அநுகூலமா
யிருக்கிறபடியால் இதைக் கவனித்துச்செ
ய்வது முக்கியம். மேற்கூறிய பொன்னின்
சேர்மானம் அசல் தங்கம் 18 பாகம் செம்



புகம்பி 3 பாகம் வெள்ளி 3 பாகம் சுத்
மானதிராசினல் நிறுத்துச் சேர்த்துக்கொ
ள்ளவும். செம்பு சுத்திசெய்ததாக இருக்க
வேண்டும்; அப்படி செம்பு அகப்படாவிட்
டால் சுவிடீஸ் என்னும் செம்புக் கம்பியை
சேர்ப்பது உத்தமம். இவ்விதம் சரியாய்ச்
சேர்த்து வேலைசெய்து கொடுத்தால் இந்த
பொன்னுக்கு கியாரண்டி கொடுக்கலாம்.
மேற்கூறிய பொன்னில் வேலைகளைச் செய்
தால் இதற்கு வர்ணம்போடுவது நயிற்றிக்
ஆப் படாஸ் 21 அவுன்சு காமன் சால்டு
7 அவுன்சு மராடிக் ஆஸிட் அலச்கும்
அவுன்சு5 சேர்த்து நல்லஜலம்விட்டுச் சேர்
த்துக்கொண்டால் உத்தமம். தவிர 15 கா
ரெட்டுக்குச் சொல்லிய விதம்போல் உப
யோகித்துக்கொள்ளவும். பொடி சவரம்
பொன்னில் சமனிடையாய்ச் சேர்த்துக்
கொள்வது உத்தமம்.

S. அப்பாதுரை ஆச்சாரி,
T. மோஷனராம் ஆச்சாரி,

---

### நெருப்பில்லாமல் ஜலத்தைச் சூடாக்குதல்.

ஜலமுள்ள ஒரு பாலையை நெருப்பின்மேல்
வைக்காமலும் வேறு எவ்வித உஷ்ணமும்
அதன்மேல் தாக்கவிடாமலும் அதிலுள்ள ஜல
த்தைக் கொதிக்கவைக்கலாமாம். ஒரு மர அகப்
பையைக்கொண்டு ஜலத்தை இடைவிடாமல்
துழாவிக்கொண்டு வந்தால் ஜலம் சிறிதுநேரத்
துக்கெல்லாம் சூடடைந்துவிடுமாம். சுமார் 5
மணிநேரம் விடாமல் துழாவினால் ஜலம் முத
லில் நிரம்ப சூடாகிப் பிறகு கொதிக்கிறதாம்.
இதை அமெரிக்காவில் ஒருவர் செய்து
காட்டினராம்.

## குலாபிமானக்கொத்து

### ஆரணி-செல்லதட்டி ஆச்சாரி.

புராணப்பிரசங்கஞ்செய்வதில் மிகவல்லவரெனக் கீர்த்திபடைத்த ஷை பண்டிதர் சென்ற 1918ளு அக்டோபர்மீ 23உ புதன்கிழமை சிவசாயுஜ்யமடைந்தனரென்பதறிய நமது வாசகர்கள் வருந்துவரென்பது நிச்சயம். இவர் புராணிகர் திலகமாய் விளங்கிப் பல ஜாதியாரிடத்தும் நன்மதிப்பு பெற்றுவாழ்ந்தது யாவருமறிந்ததே. இவர்போன்றவர்களால் பொதுஜன அன்பு ஒருவாறு இக்குலத்தின்பாற் படுதலும், இக்குலத்தின்மீது அவர்கள் கொண்டிருக்கக்கூடிய துவேஷமாதியவை குறைதலுங் காணப்படுதலால், இவர் தேகவியோகம் குலநஷ்டமாகக் கொள்ளப்படத்தக்கதாயிருக்கிறது. சுஜாதியைச் சீர்திருத்தவேண்டுமென்றேயது, சுஜாதிப் பூர்வமேன்மையையும் சரித்திரத்தையும் பிரகாசிக்கச்செய்யவேண்டுமென்றுவது இவர் கவலைகொண்டதாகத் தெரியவேயில்லை. ஆதலால், சுஜாதியார் இவர் பிரிவை அதிகம் பாராட்டுதற்கிடமில்லை புராணப் பிரசங்கத்தை ஜீவனோபாயமாய்க்கொண்டு வாழ்ந்தவராதலால், அதற்கநுகுணமான சிந்தனையிலும் மொழிகளிலும், நடக்கையிலுமே சிறந்திருக்கப் பிரயாசைப்பட்டுக்கொண்டுவந்தார். எனவே, இவர் காரியமெல்லாம் ஸ்வயகாரியமாகவே யிருந்ததெனவேண்டும். இவர்போன்ற பண்டிதர்கள் இன்னும் பலர் இக்நாளும் நம்முளிருக்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் குலகாரிய கவனஞ் சற்றுமில்லாதவர்களாகவும், குல அசட்டை செய்பவர்களாகவும், பண்டிதர் கூட்டத்திற் கலந்திருக்க விரும்பிக் குலகூட்டத்தை விலக்குவாராகவுங் காணப்படுவது குலத்தெளர்ப்பாக்கியமெனலாமோ, அன்றி அவர்கள் தெளர்ப்பாக்கியமெனலாமோ தெரியவில்லை. குலக்கூட்டஞ்சேர்வதால் பண்டிதர்கூட்டமிவரைச் சேர்க்காதெனப் பயந்து இவர்களிவ்வாறொழுகிறார்களோ என்னமோ அறியேன். ஆயினும், குலத்திலுற்பவித்துக் கல்விகற்றதனால், அக்கல்வி குலத்திற்குப் பயன்படச் செய்தலே சிறப்பென்பதை இப்பண்டிதர்கள் கவனிக்கவேண்டுகிறேன். கல்விக்கெனவும் பொதுஜன மேனுக்கத்திற்கெனவும் தாங்கள் உழைப்பதாக, உண்மையாகவோ பாவனைகாட்டியோ இவர்கள் சாக்குத்தொடுக்கிறார்கள். அவற்றிற்காக உழைக்க வல்லவரும் உழைப்போரும் பலர் பலஜாதியாருள்ளுமிருக்கிறார்களென்பதையும் சுஜாதிக் காரியங்களுக்காக உழைக்க இவர்களையன்றித் தக்கவர் வேறிலரென்பதையும், சுஜாதியார்க்காக உழைப்பதில் இவர்கள் ஷை காரியங்களைக் கைவிடுத லனுவஸ்யமென்பதையும் இவர்கள் கல்வி அவ்விடத்திற்கதிகமாக இவ்விடத்திற் பயனும் பெருமையுந்தருதல் கூடுமென்பதையும் இப்பண்டிதர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்

ஆரணிவாசி.

### 2. மதுரையின் மயக்கம்.

உலகின்கண் பல மரபினரும் பல சங்கங்களினுதாவைக்கொண்டு முன்னேறிவரு மிக்காலத்தும் நம் மரபினர் கும்பகர்ண ஆக்கு நடத்துகிறார்கள் இசனிடையே சென்னை விஸ்வகர்மனென்ற மதயானை பிளிறித்தழங்கியும் தூக்கம் தெளிவாரில்லை என்பதுவும் சென்னை வி. யானையின் கன்றுகளாகப் பல விடங்களிற் பல சபைகள் உற்பத்தியாகா திருப்பதுவும் பரிதபிக்கத்தக்கவே. எனினும், மதுரை நகரின்கண் சில அபிமானிகளி னங்கீகாரத்தால் 27-8-17ல் இராஜ விஸ்வாச விஸ்வப்ரம்மசாதுசங்கம் என்றபெயர்வகித்த சபையொன்று உற்பவித்து ஆகித்தவாரந்தோறும் நடைபெற்று 25-8 18ல் முதல்வருஷ உத்ஸவமும் கண்டதாறுலும் சென்னை வி. யானையின் கன்றுகளிலொன்றாகிய மதுரை R V. யானையின் ஆர்ப்பிடத்திற்கும் அநுகுமந்து செல்லும் விஸ்வகர்மோபதேசவீரகண்டாமணி யோசைக்கும் சற்றுந் துயிலெழாது கிடக்கும் நமது மதுரை ஆச்சார்ய கூட்டங்களின் ஆச்சார்யத்வத்தை எவ்வாறு வியப்பது.



நமது பத்திரிகை பிர்ம்மஸ்ரீ M. K-சிதம்பராச்சார்ய ரவர்கள்பெயரால் கிடைக்கப்பெற்று வாரந்தோறும் நடைபெறும் உபந்யாசங்களில் இதுவுமொன்றாக வாசிக்கப்பட்டு வருகிறது.

கே. முத்துசாமி ஆச்சாரியார்
ஜோதிடம்-கி. பாலுசாமி ஆச்சாரி
சொக்கலிங்க ஆச்சாரி
உபாத்தியாயர் S. நாகலிங்க ஆச்சாரி
சதாசிவ ஆச்சாரி
N. மதுரமுத்து ஆச்சாரி
அ. மு. சுந்தரமாச்சாரி
சு. ராமசாமி ஆச்சாரி
ந. ஆண்டி ஆச்சாரி
S. பொன்னைய ஆச்சாரி
T. S. பொன்னைய ஆச்சாரி
முத்தய்யா ஆச்சாரி
தி குருசாமி ஆச்சாரி
கா. சொக்கலிங்க ஆச்சாரி
பிரசிடெண்டு.

S. ராமாநுஜ ஆச்சாரி
வைஸ் பிரசிடெண்டு.

சின்னதம்பி ஆச்சாரி
செக்ரெடரி.

### 3, வெற்றிக்கொண்டாட்டம்.

14-11-18ல் மாலை 5-மணிக்கு திருநெல்வேலியிலும் விஸ்வகர்ம சன்மார்க்க சபையார் நமது மாட்சிமைதங்கிய அரசர் இந்த மகா யுத்தத்தில் வெற்றியடைந்ததை முன்னிட்டு விஸ்வேஸ்வர புகவானுக்கு அலங்கார ஆராதனை செய்வித்து நமது அரசர் நீடூழிகாலம் வாழவேண்டுமென்று பிரார்த்திக்கப்பட்டது. ஷை சபைக் காரியதரிசியால் இராஜவிசுவாசத்தைப் பற்றி ஓர் உபந்யாசம் செய்யப்பட்டது. விஜயம் செய்த கனவான்களுக்கு கற்கண்டு வினியோகஞ் செய்யப்பட்டு, பிரசிடெண்டு ஸ்ரீ எஸ். சங்கர ஆச்சாரி அவர்கள் பிரேரேபித்த வண்ணம் கீழ்க்கண்ட தந்தி கனம் சென்னைக் கவர்னர் துரை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது:

To
The Governor of Madras
Madras.

The Visvakarma Sanmarka Sabah Tinnevelly expresses its unbounded joy towards the victory of the allies.

S. SANKARACHARI.
President,

***

Govt - House, Madras.
16—11—18.

Dear Sir.

I am to acknowledge with thanks receipt of your telegram dated the15th November 1918.

Yours truly,
(Sd) × × ×

To
The President
Visvakarma Sanmarka Sabah,
Tinnevelly.

விஸ்வகர்ம சன்மார்க்க சபையார்.

### 4. விஸ்வகர்ம இராப்பாடசாலை.

சென்னை வட மதராஸ் இந்துசெகிண்டரி ஸ்கூலில் வண்ணாரப்பேட்டையிலுள்ள விஸ்வகர்மவம்ஸ கிராமாதிகார கமிட்டியாரின் ஆதரவின்கீழ் நடைபெற்றுவரும் விஸ்வகர்மச் சிறுவர் இராப்பாடசாலையின் 2-வது வருஷோற்சவம் 24-11-18 கொண்டாடப்பட்டது. முதலில் பாடசாலைச் சிறுவர்களின் பந்தயங்கள் நடந்தன. பிறகு மிஸ்டர் என். துரைவேலாச்சாரியார் பி. ஏ. அக்கிராசனத்தின் கீழ் சபைகூடிற்று கடவுள் வாழ்த்து பாடப்பட்டபின், ஸ்ரீ எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார் இராஜ விஸ்வாசத்தைப்பற்றியும், யுத்த வெற்றியைப்பற்றியும் பிரசங்கித்தார். பிறகு, பாடசாலைச் சிறுவர்கள் இங்கிலீஷ் தமிழ்ச் செய்யுட்கள் ஒப்புவித்தல் சம்பாஷணை முதலிய செய்தனர். மிஸ்டர் சீதாராமய்யரால் ஆஸ்யமும்,

மிஸ்டர் ஆர். நடேச ஆச்சாரியார் புல்லாங்குழல், கச்சேரியும்பிரபசர் அங்கப்பாச்சாரியால் ஜாலவித்தைகளும் செய்யப்பட்டன. ஸ்கூல் வருஷாந்திர ரிபோர்ட்வாசிக்கப்பட்டது. பரிசுகள் அளிக்கப்பட்டன. அக்கிராசனாதிபதி கல்வியின் அவசியத்தைப்பற்றிப்பேசி பிள்ளைகள் சிக்கனமாயும், நாணயமாகவும் வாழவேண்டுமானால் பெற்றோர்கள் அதிக சிரத்தையுடன் அவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்புவதே தங்கள் விரதமாய்க் கொள்ளவேணுமென்று வற்புறுத்தினார். இந்தியா தேசம் முன்போல மிக உன்னத பதவி அடையவேண்டுமானால் நம் தேசக் கைத்தொழில்கள் சிறந்து ஓங்கவேண்டுவது அவசியமென்றும், கைத்தொழில் ஜாதியாராக விஸ்வகர்ம ஜாதியார் இருப்பதால் நம்வம்ச முன்னேற்றத்திற்கு நாமே முனைந்து பாடுபட வேண்டுமென்றும்கூறி, நமது சக்கரவர்த்தியார் மஹா யுத்தத்தில் ஜெயமடைந்ததற்கு நற்குறியாக பாடசாலைச் சிறுவர்களுக்கு சிற்றுண்டி அளிக்கும்படி நன்கொடையாக ரூபா 5 கொடுத்தார்கள். வந்தனங்கள் கூறியபின் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

### 5. தலைவர் யாவரோ?

செ. அப்பாத்துரை பத்தரவர்கள் மாண்டேகு, செம்ஸ்போர்டு அவர்கள் சீர்திருத்தத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைக் குறிப்பிடாததால் நமது மரபினில் படித்தவர்கள் மகாநாடு கூடி அதில் தீர்மானிக்கும் விஷயத்தை அரசப்பிரதிநிதி அவர்களுக்கும், இந்தியா மந்திரி அவர்களுக்கும், நமது தலைவர் டாக்டர் டி. எம். நாயர் அவர்களுக்கும் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிற விஷயம் நமது 'குலாபிமான பத்திரிகையாகிய 'விஸ்வகர்மன்-தொழில்' 10, 11 சஞ்சிகை மூலமாய் உணர்ந்திருப்பீர்கள்.

டாக்டர் நாயர் நமது ஜாதியாருக்குத் தலைவராவாரா?

சென்னை ராஜதானியில் 15 லட்சம் ஜனங்கள் நமது மரபினிலிருந்தும் எங்ஙனம் மகாநாடு கூட்டிநாயரைத் தலைவராக தேர்ந்தெடுத்தனர்? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப்பற்றி மறுப்பவரில்லை. சென்னை மாகாண சங்கத்திலும் மற்றும் பொதுவிடங்களிலும் பிரம்மஸ்ரீ முக்கண்ணாச்சாரி அவர்கள் பிரதிநிதித்துவத்தை அவசியம் வேண்டுமென்று வற்புறுத்திப் பேசியிருக்கிற விஷயம் அனைவருக்கும் தெரிந்த விஷயமே.

பத்தரவர்கள் நமது தாய்நாடாகிய இந்தியா முன்னேற்றமடைவதில் சிறிதும் விருப்பமில்லாதவர்களுடைய கூட்டத்துடன் சேர்ந்ததாகத் தெரிகிறதுடன், அக்கூட்டத்தின் தலைவரை நமது மரபினர்களுக்கும் தலைவராகக் கொள்ளும்படி செய்தல் ஒவ்வாத விஷயமென்பதைப் பற்றிக் கண்டிப்பதுடனும் — — வருந்தவும் வேண்டியதாகிறது.

எஸ். எம் ராஜன்,

தூத்துக்குடி.

### 6. சஷ்டியப்தபூர்த்தி.

லோகசிருஷ்டகராகிய ஸ்ரீ விராட் விஸ்வகர்மாவின் திருவருள் பிரசாதத்தால் மீனாக்ஷிபுரம் ஜோசியர் கனம் ஸ்ரீ மூத்து ஆச்சாரியாரவர்கள் ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம் அதிசுபகரத்துடன் நிறைவேறிய சிறப்பையும், வைதீக கர்மங்கள் விதிப்படி ஒழுங்குபெற நடந்த மேன்மையையும் கண்டானந்தித்த சில கனவான்கள் ஷஷ்டியப்த பூர்த்தியில் வைதீக விதிகளை இந்தப்பிரகாரம் நம் குலத்தார் யாவர்களும் ஆசரித்து நடத்திவரவேண்டும். அதற்காக இங்கு நடைபெற்ற கிரமத்தைப் பத்திரிகைகளில் பிரசித்தப்படுத்த வேணுமென என்னை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதினால் இவ்விஷயத்தை இங்கு வெளிப்படுத்தியுள்ளேன்.

2. இந்தஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவமானது அற்பசி மாசம் 16உ சோமவாரமும் விசாக நக்ஷத்திரமுங்கூடிய சுபதினத்தில் ஷஷ்டி ஜோஸ்யரவர்கள் கிருகத்தில் நடைபெற்றது. ஷஷ்டி கிருகத்தின் உள் பட்டகசாலையில் பட்டுவிதானமாகவும், அனேகவித புஷ்பங்களால் புஷ்பசவிமானமாக அலங்கரிக்கப்பட்டும், இதன் கிழக்கே முற்ற வெளியில் அபிஷேக மண்டபம் வெகு விமரிசையாகப் பட்டுக்கொட்டகை அமைத்து அதில் புஷ்ப தோரணங்களாலும், கதலிக் குலைகளாலும், விசித்திரமாக விதானிக்கப்பட்டும், பின்பக்கம் முற்ற வெளியில் பாகசாலையும் போஜனசாலையும் அமைக்கப்பட்டிருந்தன.



3. சஷ்டியப்தபூர்த்தி தினத்தின் தலை நாளிலேயே ஹோமத்துக்கு வேண்டிய சமித்துவகைகளும், கும்பஸ்தாபனங்களுக்கு வேண்டிய கடங்களும் மற்றும் சாமக்கிரியைகளும் [illegible]க்கப்பட்டிருந்தன. சஷ்டியப்தபூர்த்தி [illegible]பத்திலிருக்கும் திவ்விய க்ஷே[illegible]ம் ஸ்வாமி வடிவிநாதர், [illegible] இவர் இருவர்க்கும் [illegible] இரண்டு கடங்கள் [illegible]டு சங்கல்பபூர்வம் [illegible] பிராணப் பிரதிஷ்[illegible]ரமாக ருத்திர விதா[illegible] பூஜ[illegible]றா நியாஸ பூர்வம் பதி[illegible]வர்த்தி ருத்திர சமக முதலான ஜப[illegible]பிராமணர்களைக்கொண்டு ஜபிக்[illegible]க்கும் அம்பாளுக்கும் [illegible]த்தியம் கற்பூரம் நீராஜ[illegible]ன முதலியவைகளும் செய்து ஜப ரித்விக்களான பிராமணர்களுக்கு தக்ஷிணையும் போஜனமும் மற்றும் பிராமணர்களுக்குப் போஜனமும் செய்விக்கப்பட்டன.

[illegible] போலவே சமீபத்தில் வைகுண்ட பதி[illegible]ருளியிருக்கும் ஸ்ரீ ஆபதோத்தார[illegible] ஸ்ரீ இடர்தவிர்த்த நாராயணருக்[illegible]புத்திரரென்ற கிராமசாஸ்தாவுக்[illegible]ஷேக நைவேத்திய அர்ச்சனைகளும் [illegible]தன. ஜோஸ்யரவர்களின் பிதா அவர்கள் [illegible]டுங்காலம் மகவில்லாமையால் வருந்தி அத[illegible]யனு யிப்பெரியாரை அளித்தவரும் இக்கு[illegible]தவர்கள் வழிபடுங் கடவுளுமாகிய தென் கைலாசமென்னும் சுசிந்தைமாநகரில் மும்மூர்த்திசளு மோருருவா யெழுந்தருளியிருக்கும் [illegible]ணுமாலயப்பெருமானுக்கு ஒரு நூடம் பா[illegible]ற்ற சாதனங்களும் கொடுத்து அபிஷே[illegible]வேத்தியம் அர்ச்சனை முதலிய வழிபா[illegible] நடத்தப்பட்டு எல்லாதேவர்களின் தீர்[illegible]சாதங்களும் தருவிக்கப்பட்டிருந்தன.

[illegible]ஷ்டியப்த பூர்த்தி தினத்தின் விடிய[illegible]காலம் 4-மணிக்கு கர்த்தாவும், பத்னி அவர்களும் பந்துஜனங்களும் ஆசாரியர் ரித்விக்கள் முதலானவர்களும் ஸ்நாநஞ் செய்து மடிதரித்து நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு ஷஷ்டியப்த கர்மத்தை ஆரம்பித்துவிட்டனர். முதலாவது பவித்திரதாரணம், யக்ஞோபவீததாரணம், ஔபாஸக முதலியவைகளும், விசுவகர்ம பெரியோர்கள் முன்னிலையில் அனுக்ஞையும், பூஜாசங்கல்பம், விக்கினேசுவரபூஜை, பஞ்சபிர்மபூஜை, பிரதான சங்கல்பம், நாந்தி, புண்ணியாஹம், கிருச்சிராசரணம், பிராச்சியாங்க கோதானம், வைஷ்ணவ சிராத்தம், பூர்வாங்க தெசதான முதலியவைகளும் வேதபாரங்கதர்களான ருத்விக்கள் வரணமும் விதிப்படி செய்யப்பட்டன.

5. ஷஷ்டி ஜோஸ்யர் முதலியோரால் கொண்டுவரப்பட்ட கங்காதீர்த்த முதலானவைகளையும் இன்னும் சில புண்ணிய தீர்த்தங்களையும் தற்சமயம் தருவிக்கப்பட்டும், கர்த்தா இருப்பிற்குக் கிழக்காக கும்பபிரதிஷ்டாபனவேதிகையில் விதிப்படி அடிப்பரப்புகள் போடப்பட்டும், அதின்மேல் கங்காதீர்த்த முதலிய புண்ணிய தீர்த்தங்களாலும் ஓஷதி திரவியங்களாலும் கடங்களைப் பூரித்து கும்பரத்னங்களைப் போட்டுவைத்தும், நடுவே பிரதான பெரிய கடத்தில் சாம்பசதாசிவ முகூர்த்தமான ஸ்ரீ மிருத்துஞ்சயரையும், இதன் தெற்கில் மிருத்யு தேவரையும், வடக்கே கர்த்தாவின் ஜன்ம நக்ஷத்திரம் விசாகத்துக்கு அதிதேவதையாகின்ற இந்திராக்னி தேவரையும், அதது பிரதிமைகளுடன் விதிப்படி ஸ்தாபித்து அலங்கரித்துவைத்து இக்கடங்களைச்சூழ இந்திராதி அஷ்டதிக்குப்பாலகரை கிழக்கு முதலான எட்டுத் திக்கிலும் கடங்களில் விதிப்படி பிரதிமைகளுடன் அமைத்து அலங்கரித்துவைத்தும் இக்கடங்களில் அதாது தேவர்களை வேதோக்தமான ருக்குகளுடன் தியான ஆவாஹநாதி ப்ராண ப்ரதிஷ்டைகளுடன் ஸ்தாபித்து ஒவ்வொரு தேவர்களையும் வேதமந்திரங்களினால் சோடசோபசாரமாக பூஜைசெய்து ஆசாரியரும் ருத்விக்களும் ஜபமசெய்ய ஆரம்பித்தனர்.

(இன்னும்வரும்)

ஜோஸ்யர். அ. அனந்தப்பெருமாள் ஆச்சாரி.

## செயற்கை விநோதங்கள்.

### நீளமான ரயில்வே இஞ்சின்

அமெரிக்காவானது மிகுந்த செல்வமுள்ள தேசம். அங்கு அவ்வப்போது பல நூதன விஷயங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. சமீபத்தில், 100 அடி நீளமுள்ள ரெயில்வே இஞ்சின் ஒன்று செய்யப்பட்டதாம். அது 250 ரெயில் வண்டிகளை இழுத்துச்செல்கின்றதாம்.

### அச்சு கண்டுபிடித்தவர்.

இவர் ஒரு ஜெர்மன். இவர் பேர் கூட்டன்பர்க். ஒருநாள் விளையாட்டுப்போல ஒரு மரத்திலே சில எழுத்துக்கள் வெட்டி, தன் சட்டையோடு அதிற் சாய்ந்தபொழுது ஈரத்தினால், அவற்றின் உருவம் சட்டையில் பதிந்துகொண்டதைக் கவனித்து, முதலாவது மர அச்சுகளும், பிறகு இரும்பு அச்சுகளும் உண்டுபண்ணினார். அவர் இறந்து இப்போது 500 வருஷங்களாகின்றன.

### காகிதத் தட்டுமுட்டுகள்.

கிழித்தெறியப்படும் காகிதத்துண்டுகளை வெந்நீரில் ஊறவைத்து வெந்தயம் சேர்த்து அரைத்து கூழாக்கிக்கொண்டு லிங்க குலோரைடு சேர்த்தால் பசைபோலாகும். அதனோடு கொஞ்சம் உப்பும்சேர்க்கவும். பிறகு, ஸ்பிரிட் விட்டு கழுவி வேண்டியமாதிரி சாமான்களைச் செய்யவும். உலர்ந்ததும் அரக்கு வார்னிஷ் பூசிவிடின் தண்ணீரிலும் புழங்கலாம்.

### நதியில் நகரம்.

சிங்கப்பூருக்குக் கிழக்கே போர்னியோ என்னொரு தீவு இருக்கிறது. இந்தத் தீவில் ப்ருனி என்னொரு சிறு ராஜ்யமிருக்கிறது. அந்த ராஜ்யத்தின் முக்ய பட்டணமாகிய ப்ருனியென்பது 'லிம்பாங்' என்னும் நதியின் மேல் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டணத்தில் தெருக்களெல்லாம் வாய்க்கால்களே. அதோடு கூட கட்டிடங்கள் எல்லாம், ஜலத்தில் கெடாத ஒருவகைப் பனையின் அடிமரங்களை பூமியில் நிறுத்தி அவைகளில் கட்டப்பட்டவைகளாம்.

### நாணயம் எண்ணும் இயந்திரம்.

அமெரிக்காவிலுள்ள சிற்சில இடங்களி[l] தெருத்தெருவாய் ரயில்வே போக்குவரத்து நடப்பதால், ஆங்காங்கு குவிந்துக்கொண்டிரு[க்]கும் நாணயங்களைக் கணக்கிட மின்சார[...] யை வெகு சாதுர்யமாய் உப[...] ளாம். ஒரே ஒரு இயந்தி[...] 2 லட்சம் நாணயங்[...] சுருள் சுருளாகக்[...]

[...]

மைசூர் சமஸ்[...] காடுகளில் மனுவி[...] பழத்தை நசுக்கி[...]ரு ன்ற ஒருவகை வஸ்து வடிகின்ற[...] சிறிது நீரோடு வைத்திருந்தால், [...] வின்மீ[...] மிதக்கும் பாலே[...] செய்யாகின்றது. இது[...] லிருக்கின்றது. மைசூர் சம[...]ர்களில் இந்த செய் விற்க[...]டவருகின்றது.

### எஃகின் பலத்தை அதிகப்படுத்தல்.

அமெரிக்காவிலுள்ள சிகாகோ பட்டணத்திலுள்ள ஒரு வித்வான் எஃகுக்கு இப்போதுள்ள பலத்தைவிட மூன்று பங்கு பலம[...] படும்படிச்செய்ய ஒரு நூதன மு[...] பிடித்திருக்கிறார். இந்தப்[...] தயார்செய்த உருக்கைக்கொண்டு, [...]ரிய பீரங்கிகளும் நாசம்செய்ய முடி[...]ட்டைகளும் கட்டலாமாம். மேலும் உருக்கால் இதுவரையில் சாத்தியமில்[...]ன்று எண்ணிவந்த உயரத்துக்குக் கட்டி[...] கட்டுவதும் முடியுமாம்.

### நீர்ச் சக்தி

நிலக்கரி கிடைப்பது அரிதாய்விட்டால்[...] தத்திற்குப்பின் இந்தியாவின் கைத்[...] களை நடத்த நீர்ச்சக்தியைப் பிரயோகப்[...] கவர்ன்மெண்டார் உத்தேசித்திருக்கி[...] யுத்த அசந்தர்ப்பத்தால் அதைப்பற்றி[...] ன பரிசோதனைகளை ஆரம்பிக்க மு[...] ஆனபோதிலும் ஆரம்பப் பரீட்சை[...] பார்க்க ஐக்கிய மாகாணங்களின்[...] னியாகிய மிஸ்டர் பார்லோவ[...] அட்வைசராகிய மிஸ்டர் மீர்[...] பட்டிருக்கின்றார்கள்.



குணம் இல்லாவிட்டால் பணம் வாபீஸ்.

## பெயினோலீன் [ரிஜிஸ்டர்ட்.]

இடுப்புவலி தலைநோய் கழுத்திழுப்பு தொண்டைநோய் மார்புநோய் மார்புசளி பல்நோய் காதுநோவ் முகஜன்னி கை கால்பிடிப்பு திமிர்வாய்வு கப இருமல் ஜலதோஷம் [...]ரிவலி பார்ஸ்வாய்வு முதுகுநோய் சைத்தியம் ஜன்னி வீக்கங்கள் இருமல் என்னும்சகலவலிகட்கும்திவ்யாமிருதம். விலைபெரியபுட்டிஅணா 10 சிறிது 6.

### [...]தீ பூஷணம்.

[...]பற்றினவும், சிரசைப்பற்றி[...] ஒப்புயர்வற்ற மருந்து. [...]ர்களுக்கும் புஷ்டிக் குறைவுக்கும் எடுத்த[...] துர்நடத்தைகளாலும் இன்னும் பலவிதமான செயல்களாலும் இழந்துபோன தேகவலிமையை மறுபடியும் உண்டாக்கும். விலைபுட்டி 1க்கு ரூபாய் 1 0 0.

### டென்டால்.

இது மூலிகைகளைக்கொண்டு செய்த பற்பொடி. பல்லிலுண்டாகும் வேர்ப்புழுக்களைக் கொன்று பற்களைச் சுத்தப்படுத்தி ஈறுகரைதல், பல்தேய்தல், ரத்தம் சீழ்வருதல், அசைதல், துர்நாற்றம் முதலான எவ்வித நோய்களையும் போக்கி பல்லிற்கும், ஈறுக்கும் பலத்தைக் கொடுப்பதில் முதன்மையான மருந்து. விலை டப்பி 1க்கு அணா 4.

### ரோனல் சர்வபடை சம்ஹாரன்.

இடுப்பு தொடையின் இடுக்கு முதலிய இடங்களில் உண்டாகி ஓயாத நமச்சலைத் தந்து வெகு சீக்கிரத்தில் மற்ற இடங்களில் படரும் மேகப்படை, சொறி, சிரங்கு, தடிப்புப்படை, தேமல், வண்டுகடி முதலியவைகளை அடியோடு குணப்படுத்தும். விலை புட்டி 1க்கு அணா 6

தீராத வெள்ளை வெட்டைக்கு மருந்து புட்டி 1க்கு ரூபா 1 0 0

எங்கள் மருந்துகளை ரூபா 3க்கு ஒரேதடவையில் வாங்குபவர்களுக்கு 5 கலர் படம்உள்ள ஒரு கியாலண்டர் இனாம்.

தனியாக கியாலண்டர் 1-க்கு வி. பி. யோடு 0 6 0

மொத்தமாய் வேண்டுமானால் விலை சரசமாய்க் கொடுக்கப்படும்.

இத்துடன் டைரி 1919 வருஷத்தியதை வெளியிடுகிறோம். இதில் சகல குறிப்புகள் அடங்கியவை. அதுவுமன்றி, இச்சென்னை இராஜதானியில் இருக்கும் வியாபாரிகளினுடைய விலாசத்தை வெகு தெளிவில் வரைந்துள்ளன. வேண்டுபவர்கள் அணா 8. போஸ்டேஜ் ஸ்டாம்பாக அனுப்பினால் ஒரு புஸ்தகத்தை அனுப்பப்படும்.

ரநாட்ஸ் பார்மெஸி,
டிஸ்பென்ஸிங் கெமிஸ்ட்ஸ், 9 & 10, ரிச்சர்ட்ஸ்கொயர்பாக்,
பெங்களூர் தண்டு.

## மர்மசாஸ்திர தர்மபோதினி.

மூன்றாவது பதிப்பு.

விலை அணா ஐந்து; வி. பி. சார்ஜ் உள்பட அணா ஏழு—அணா ஆறுக்கு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[...]ரீ புருஷ சுகபோக மர்மதர்மங்களைச் சாங்கோபாங்கமாய் யாவரும் அறியும்படித் தெரிவிக்கும் அருமையான நூல். இதை வாசிப்போர் தேகசம்பந்தமாகவும், ஆரோக்கிய சம்பந்தமாகவும் ஆனந்தாநுபவ சம்பந்தமாகவும் பல ரகசியங்களை அறிந்து இன்புறுதல் நிச்சயம்.

எ. டி. ராஜ்,
புரசைவாக்கம் ஹைரோட்
வேப்பேரி, சென்னை.

## விஸ்வகர்ம பக்தோபாக்யானம்.

இதுகாறும் தமிழில் வெளிவராதது-

இது மகாராஷ்டிர பாஷையிலிருந்து தமிழில் செவ்விய வசன வடிவமா செய்யுள் வடிவமாகவும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. டிம்மி 8-பேஜ் 22-பாரமுடையது. நல்ல பளபளப்புள்ள உயர்ந்த கிளேஸ் கடிதத்தி ன்ற எழுத்தினுல் அச்சிடப்பட்டிருக்கின்றது. இதில் சிவபக் தேவிபக்தர் முதலிய பெருந்தகையர் பன்னிருவர் சரித்திரங்கள் அ இதிலுள்ள ஒவ்வொரு சரித்திரமும் படிக்கப்படிக்கப் பரமாநந்த பான்மையுடையது.

இதனைச் செய்யுள் வடிவமாக்கச் செய்தவர் வித்வான் பிள்ளை யவர்கள். இச்செய்யுள்கள் ஒவ்வொன்றும் தேனினும், னனும், கற்கண்டினும் இனிய சுவையுடைத்தாய்ச் சொன்னயம் பொருணயமுடையதா யமைந்திருக்கின்றது. இந்நூல் காவியலக்ஷணம் நிரம்பப்பெற்று யாவரும் சுலபமாய் அறிந்துகொள்ளும் செவ் வியநடையுடையதா யிருக்கின்றது.

புராணப் பிரசங்கம் செய்வோர்க்கு இஃதோ ரரியபெரிய பக்திநூலாகும். இச் சரித்திரங்களில் அனேக நீதிகளும், மேற்கோள்களும் காட்டப்பட்டிருக்கின்றன

× × ×

பிக்கபாடி - கல்யாணசுந்தர ஆச்சாரியரால் இயற்றப்பட்ட

### விமவகர்மோபதேச வீரகண்டாமணி.

பாட்டும், உரையும்.

உரையானது, மார்க்கயன்கோட்டை மகாவித்வான் ஸ்ரீ M-P. பழநிச்சாமி ஆச் சாரியாருடைய மருகரும் மாணுக்கருமா கிய ஸ்ரீ M. S. சுந்தரம் ஆச்சாரியாரால் எழுதப்பட்டது.

சென்னை செந்தமிழ் ஆராய்ச்சிக் கழகக் காரியதரிசி ஸ்ரீ M. ஜீவரத்தின ஆச்சாரி யார் B-A. அவர்களுடைய முகவுரைகொ ண்டது.

விலை, அணா பத்து.

### இராமசுனர் சரித்திரம்.

நவரஸம்பொருந்திய

நாவல்

விஸ்வகர்மகுல பக்தசிகாமணிகளில் ஒ ருவராகிய இராமசுனரின் சரித்திர விபரங் கள் நாவல் ரூபமாக இனிய செந்தமிழ் நடையில் இன்பம் பயக்குமாறு எழுதப் பட்டுள்ளன.

படிக்கப்படிக்கப் பரமானந்தந்தரும். மு டிக்குமட்டும் தொடுத்து வாசிக்கச்செய்யும் நடைத்திறமுடையது.

விலை அணா ஆறு.

இவ்விரண்டு நூல்களும் விஸ்வகர்ம ஸ்திரீ புருஷர்கள் ஒவ்வொருவரும் கட்டாய மாக வாசிக்கத்தக்கவை. வாசிக்கக்கூடியவர்கள் நேரே வாசிக்கவேண்டும். மற்றவர் கள் பிறரை வாசிக்கச்சொல்லி முற்றிலும் கேட்கவேண்டும்.

நொ. கன்னியப்ப ஆச்சாரி,

நெ-5/10, வேதகிரிமேஸ்திரி வீதி, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

162057